# குருபரம்பரா சர்வார்த்த சாரபூஷணம்

## பூர்வார்த்தம்

## சாரசங்கிரக விளக்கம்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090.

1990

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

வெளியீடு எண். 105

முதற்பதிப்பு 1990—1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
பெசன்ட் நகர், சென்னை - 90.

விலை ரூ. 20-00

Published with the financial assistance of
National Archives, Government of India,
New Delhi.

Printed at : Maruthi Press, Madras-14.

# உள்ளடக்கம்


பதிப்பாளர் குறிப்பு iv

முகவுரை vi

நூல் 1-254

காப்பு 1-3

அட்டவணை 4-9

பொருள் அட்டவணை 10-28

(i) பூர்வார்த்தம் 10-12

(ii) உத்தரார்த்தம் 12-28

1. பரத்துவ நிருபண மகத்துவம் 28-29
2. அஷ்டாங்கயோகம் 29-38

(i) கிரமம் 29-35

(ii) தேகதத்துவம் 35-37

(iii) பிரணவம் 37-38

3 க்ஷீராப்தி மர்த்தனம் 39-42

4. ஸ்ரீ மகாலட்சுமி அவதாரம் 43-47
5. ஏகாதசி மகாத்துமியம் 48-49
6. துவாதசி மகாத்துமியம் 49-51
7. பாஷாண்ட கண்டனம் 52-56
8. மாயாவாத கண்டனம் 56-59
9. சாத்துவிக ராஜஸ தாமஸ விவரணம் 59-66
10. பிருகுமகரிஷியினாலே பரதத்துவ சோதனை மகாத்மியம் 66-75
11. அவதாரக்கிரமம் 75-109
12. ஸ்ரீ பகவத் கீதார்த்தம் 109-172
13. பாரத யுத்தம் 173-183
14. பரமபத மகத்துவம் 183-217

(i) திரிபாத் விபூதி மகத்துவம் 189-202

(ii) மகதாதிபூத சிருஷ்டி மகாத்மியம் 202-203

(iii) வியூகபேதவர்ண மகத்துவம் 203-217

15. சுதரிசன மகாத்மியம் 217-222
16. ஊர்த்வ புண்டர மகாத்மியம் 222-227
17. விஷ்ணு ஆராதனம் 227-240
18. துவயரத்தின உபதேசம் 241-254

## பதிப்பாளர் குறிப்பு

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

என்ற பொது மறைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் ஐயரவர்கள். அவர் தம் வாழ்நாள் முழுவதும் உதவி செய்தவர்களை மறக்கவில்லை.

இளமையில் ஐயரவர்களுக்குத் தமிழ் விதை விதைத்தவர் அரியிலூர்ச் சடகோப ஐயங்கார் அவர்கள். முதன் முதலில் திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடமாலை முதலிய நூல்களைக் கற்பித்தார். இசையையும் கூடவே சொல்லிக் கொடுத்து வந்தார். சடகோப ஐயங்கார் ஐயரவர்களுடைய தகப்பனாரின் சிறந்த நண்பர்.

ஐயரவர்கள் சடகோப ஐயங்காருடைய மனைவி செங்கமலத்தம்மாள் அவர்களுக்குத் தம் வாழ்நாள் முழுவதும் தம்மால் இயன்ற அளவு பொருளுதவி செய்து வந்தார்கள். இவ்வாறே பிள்ளையவர்கள் குடும்பத்தாருக்கும் பொருளுதவி செய்து வந்தார்கள். என்னே அவரது நன்றி மறவாமை!

ஐயரவர்களுடைய உறவினர் ஒருவர் அவர் தகப்பனாரிடம் தங்கள் குமாரனை ஆங்கிலம் படிக்கவையுங்கள். சீக்கிரம் வேலை கிடைக்கும் என்றார். உடனிருந்த ஐயரவர்கள் தமிழ் மொழியைத் தவிர வேறு எம் மொழியையும் கற்க எனக்கு ஆர்வமில்லை என்று கூறினார். என்னே அவரது தமிழ்ப்பற்று.

ஐயரவர்கள் சேகரித்து வைத்துள்ள வைணவ சம்பந்தமான சுவடிகள் 34. ஐயரவர்கள், மகர நெடுங்குழைக் காதர் பாமாலை என்னும் நூலைப் பதிப்பித்துள்ளார்கள்.

நூல் நிலையம், மகர நெடுங்குழைக்காதர் பிள்ளைத் தமிழ், நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி என்ற நூல்களைப் பதிப்பித்துள்ளது.

நூல் நிலையத்திலுள்ள வைணவ சம்பந்தமான சுவடிகளில் குரு பரம்பரை - சர்வார்த்த சாரபூஷணம் என்றநூல் உள்ளது. சுவடி எண் 99. இந் நூலின் ஆசிரியர் ஸ்ரீ பராங்குச தாசர். இந் நூலில் இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய

நூல்களிலிருந்து பல விஷயங்களைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். இந் நூலைப் பற்றிய சிறப்பான விஷயங்களை திரு C. ஜகந்நாதாசாரியார் அவர்கள் எழுதியுள்ள முகவுரையின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

திரு C. ஜகந்நாதா சாரியார் அவர்கள் இந் நூலிற்கு சிறந்த முகவுரையும் பொருட்சுருக்கமும் எழுதியுள்ளார்கள். அன்னார்க்கு நூல்நிலையத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலை அச்சிடுவதற்கு மானியம் அளித்த மத்திய அரசுக்கு நன்றி.

இந் நூலை நன்கு அச்சிட்டுக் கொடுத்த மாருதி அச்சகத்தாருக்கு நன்றி.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறை
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்

பெசன்ட்நகர்
22-1-1990

# முகவுரை

குருபரம்பரா சர்வார்த்தசாரபூஷணம் என்ற இவ்விழுமிய நூலின் ஆசிரியர் பராங்குசதாச பாகவதர் என்பவர். இவரது இயற் பெயர் பரசுராமன். இவர் தற்போது அம்பெட்கர் மாவட்டம் எனப் படும் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காவேரிப்பாக்கத் திற்கு அண்மையிலுள்ள சிறுகரும்பூர் என்ற ஊரினர். இந்த நூலைப் பதினெட்டாயிரப்படியளவாகவாக்கினர். "படி" என்பது ஒற்றெழுத்து உயிரும் மெய்யுமாகக் கொள்ளப்படும் 32 எழுத்துக் களைக்கொண்டது. வடமொழியில் ஒரு அனுஷ்டுப் ஸ்லோகம் 32 எழுத்துக்களைக் கொண்டது. எனவே, அந்த அடிப்படையில் நோக்கப் பதினெட்டாயிரப்படி யென்பது ஏறக்குறைய 18,000 அனுஷ்டுப் ஸ்லோகங்களின் அளவினது எனலாம். இந்த நூல் பனையேட்டில் எழுத்தாணிகொண்டு எழுதப்பட்டுள்ளது. இஃது இரண்டு பாகமாகச் செய்யப்பட்டுள்ளது, எனத் தெரிகிறது. எப்படி யெனில், "பூர்வார்த்தம் முற்றும்" என்ற தொடருடனே இந்த ஒரு ஏட்டுச் சுவடி முடிகின்றது. எனவே உத்தரார்த்தம் கொண்ட மற்றொரு பனையோலைச் சுவடி இருத்தல் வேண்டும். டாக்டர் மகாமகோபாத்யாய ஐயரவர்களுக்குப் பூர்வார்த்தச் சுவடி மட்டும் கிடைத்துள்ளது. உத்தரார்த்தச் சுவடி கண்டெடுத் தற்கு அவரொத்தவரில்லையே! ஆனால் அந்த உத்தரார்த்தச் சுவடியும் இருத்தல் வேண்டும் என்பதைச் இந்த நூலாசிரியராகிய பரசுராம பராங்குச தாசர் அட்டவணையில் "வானமாமலை யெதித்தலைவர் பூரணமதாக நோக்கி" என்று கூறியிருப்பதால் அறியலாம். மற்றும், உத்தரார்த்தத்தில் நுதலியிருக்கும் விஷயங் களைச் சுருக்கமாக இந்தப் பூர்வார்த்த ஏட்டில் எழுதியிருப்பதால் நன்கு தெளியலாம்.

நூல் எழுதிய காலம்: அட்டவணையில் "பார்த்தசாரதிப் பதியிலே வானமாமலை யெதித்தலைவர் பூரணமதாக நோக்கி, மகிமையுறு சர்வார்த்த சாரபூஷணமென்று, மகிழ்ந்து திருவாய் மலர்ந்தே, வளமுடன், திருநாமமது சாத்தினார் இந்த மண்டலத் தோருய்யவே" என்று சாத்துக்கவி பாடியிருத்தலால், இந்த நூல் வானமாமலை ஜீயரால் நாமகரணஞ் செய்யப்பட்ட பெருமை யுடைத்தெனத் தேறுகிறது. திருவல்லிக்கேணியில் பூரணமாகக் கடாக்ஷித்ததாகக் கூறப்பட்டிருத்தலால், திருவல்லிக்கேணியில்

வானமாமலை மடத்தைக் கட்டுவித்தருளிய பெரிய பட்டர் பிரான்ஸ்வாமியாலோ, அன்றி, அவருக்குமுன் பீடத்தையலங்கரித் திருந்த பெரிய சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியாலோ இந் நூல் கடாக்ஷிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஜீயர் ஸ்வாமி பலதிவ்ய தேசங்களையும் மங்களாசாசனஞ் செய்ய விருப்ப முற்று வந்த போது திருவல்லிக்கேணிக்கு விஜயம் செய்திருத்தல் வேண்டுமெனத் தேறலாம். பெரியபட்டர்பிரான் ஸ்வாமி ஆசார்ய பீடத்தைப் பத்தொன்பதாவது குருவாக அலங்கரித்து எழுந்தருளி யிருந்தார் அவருக்கு முன் ஆசார்ய பீடத்தைப் பதினெட்டாவது குருவாக அலங்கரித்தவர் பெரிய சடகோப ராமாநுஜ ஸ்வாமி. இவர் களில் ஒருவராயிருக்கலாம் என ஆய்ந்து கூறியதற்கு ஏதுவென் னென்னில் இந் நூலில் உத்தரார்த்தச் சுருக்கத்தில் "அகோபில மடத்து முடிவர்க்கம்" சொல்லப்பட்டுள்ளது; அதனில், 27ஆவது ஸ்வாமியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரராகவ வேதாந்தயதீந்த்ர மஹாதேசிகன் ஸ்வாமியோடு முடிந்து விடுகின்றது.

[குறிப்பு : ப்ரக்ருதம் அழகிய சிங்கர் 44ஆவது பட்டம்] இந்த இருபத்தேழாவது பட்டத்து ஜீயர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளின காலம் கி.பி. 10-1-1829 என்றும், அவர் திருநாட்டிற்கு எழுந் தருளின காலம் கி.பி. 17-8-1831 என்றும் குறிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அழகிய சிங்கர் கால முடிவு கி.பி. 1831 என்பதா கும். இந்த ஆண்டிற்குச் சேர ஏந்த வானமாமலை ஜீயர் ஆசார்ய பீடத்தை யலங்கரித்திருப்பார் என்று கணக்கிட்டபோது இவ்விரு வருள் ஒருவராயிருக்கலாம் எனத் துணியப்பட்டது. ஆக, இந்த பரசுராம பராங்குசதாச பாகவதர் காலம் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியெனத் தெளியலாம்.

### குரு பரம்பரை விவரணமான நூல்கள்

யஜ்ஞேச சௌரியென்கிற பின்பழகிய பெருமாள் ஜீயர் நம் பிள்ளையின் சீடராவர். துறவறம் மேற்கொண்டவர். கச்சிக்கடுத்த திருப்புட்குழி ஊரினர். இவர் மணிப்பிரவாள நடையில் எழுதியுள்ள குருபரம்பரை நூல் ஆறாயிரப்படி குருபரம்பராப் பிரபாவம் எனப் படும். இது ஆழ்வார்கள் ஆசார்யர்கள் வரலாற்றை நம்பிள்ளை யீறாகக்கொண்டு உரைநடையில் கூறுவது. இவருக்குப் பின் வந்த பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் அருளிச் செய்த யதீந்த்ரப் பிரவணப் பிரபாவம் என்ற நூல் நம்பிள்ளையின் சீடர்களான வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரிய வாச்சான்பிள்ளை தொடங்கி ஆசார்யர்களின் வைபவங்களைப் பேசி வந்து யதிவரபுநரவதார மான மணவாளமாமுனிகளின் வைபவங்களைப் பரக்க நிருபித்தது.

இனி, இந்த நூல்களை முன் மாதிரியாகக்கொண்டு வேறுபல குருபரம்பரை நூல்கள் பிற்காலத்தில் தோன்றின. எடுத்துக் காட்டாக - மணவாள மாமுனிகளின் சீடர்களாகிய அஷ்டதிக்கஜங் களில் பிரதம சிஷ்யராய் இலங்கியவர் "பொன்னடிக்கால் ஜீயர்" என்று போற்றப்பெறும் முதலாவது [ஒன்றான] ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியாவர். மாமுனிகளால் வானமாமலை பீடத்தில் தமக்குப் பிரதிநிதியாய் ஸ்தாபிக்கப்பெற்று எம்பெருமானார் தரிசனத்தைத் தழைத்தோங்கச் செய்ய நியமிக்கப் பெற்றார். அவர் தொடங்கி அந்தப் பீடத்தை யலங்கரித்து வந்த ஸ்வாமிகளின் வைபவங் களைக் கூறுகின்ற "ககநகுரிமுநி குருபரம்பரா பிரபாவம்" என்ற உரைநடை நூல் உளது. இந் நூல் அந்த மடத்தில் 27-ஆவது பட்டம் வகித்த சின்ன ராமாநுஜ ஸ்வாமியின் நியமனத்தால் பண்டித ரத்னம் திருக்கண்ணபுரம் செள. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியவர்களால் பரிசோதிக்கப்பட்டது.

இனி பூர்வார்த்த சார சங்கிரகம் என்ற இந்த நூல் குருபரம்பரா பூர்வார்த்த சாரபூஷணம் என்ற பெருநூலின் முதற்பகுதியாக அமைந்துள்ளது. அதாவது இந்த நூலின் அட்டவணையிற் குறித் துள்ள 13-ஆம் பாடல் இதனைத் தெரிவிக்கும். அதன்படி, லக்ஷ்மீ நாதனாகிய ஸ்ரீமந் நாராயணன் பெரிய பிராட்டியாரென்னும் மகா லக்ஷ்மிக்கு—அதாவது தமது பத்தினிக்கு—திருமந்திரம், துவயம், சரமஸ்லோகம் என்கிற ரகசியத்திரயத்தையும் அவள் விருப்பப்படி உபதேசித்தருளினார்.

**ரகசியத்திரயமாவன**

1. திருமந்திரம் : ஓம் நமோ நாராயணாய என்கிற அஷ்டாக்ஷர மகா மந்திரம். இதன் ஆழ் பொருளினை முமுக்ஷுப் படியில் மணவாள மாமுனிகளின் வியாக்கியானங்கொண்டு தெளிய லாம். (இந்நூலில் பக்கம் 242-246 கண்டுணர்க) மனைவியான வளுக்கு மங்கலிய சூத்திரதாரணம் அவள் பர்த்தாவுக்கே உரியவள் அந்நியர்க்கன்று என்று காட்டுமாபோலே சேதனர்க்குத் திருமந்திர தாரணம் அவர் பகவானுக்கே உரிய சேஷப் பொருள் என்பதைச் சூசிப்பிக்கிறது. அதாவது - பதினாறு இழையாய் இரண்டு சரடாயிருக்கும் லக்ஷ்மீகரமான மங்கல சூத்திரம்போல அன்றிக்கே எட்டிழையாய் மூன்று சரடாய் இருப்பதொரு மங்கல சூத்திரம் போலே எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கிறது இத் திருமந்திரம் என்கை.

2. துவயம் : துவயம் என்றால் இரண்டு என்று பொருள். இந்தத் துவய மந்திரம்- மந்திர ரத்தினம் எனப்படும். இது இரண்டு

வாக்கியமாய் ஆறுபதமாய் பத்து அர்த்தமாய் இருபத்தைந்து திருவக்ஷரமாயிருக்கும். மந்திரம் வருமாறு :

"ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம :" என்பது.

இதனால் அறிய வேண்டியது - பெரிய பிராட்டியாரை முன்னிட்டுக்கொண்டு பகவானுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றி, அவ்விருவர் சேர்த்தியினும் கைங்கரியத்தை அர்த்தித்து, அந்தக் கைங்கரியத்திற்கு இடைச்சுவராயிருக்கும் அகங்கார மமகாரமாகிய விரோதி நிவிருத்தியைச் சொல்லுகிறது. இந்தத் துவயரத்தினமானது சேதனனுக்குப் பரமபதத்தைக் கொடுக்கிறது.

3. சரமஸ்லோகம் : இது பகவத் கீதையிற் ஸ்ரீ கிருஷ்ணனால் அர்ச்சுனனுக்குச் சரமஉபாயமாக (கடைசி உபாயமாக)ப் பற்றச் சொன்னதாகும். குறிப்பு : இந்த ஸ்லோகம் பகவத் கீதையில் கடைசி ஸ்லோகமன்று. இது பதினெட்டாம் அத்தியாயத்தில் 66-ஆவது ஸ்லோகமாகும். இதற்குப் பின்னும் 12 ஸ்லோகங்கள் உண்டு. கர்ம ஞான பக்தியோகங்களை உபாயமாகச் சொல்ல அவற்றைக் கேட்ட அர்ச்சுனன் கிருஷ்ண பகவானிடம் தன் அசக்தியைத் தெரிவிக்க அவர் கடைசி உபாயமாக இந்தப் பிரபத்தி உபாயத்தை (அதாவது சரணாகதியை)ச் சொல்லிச் சகலபாப நிவிருத்தியால் விடுதலை பெற்று மோக்ஷமடையலாம் என உபதேசித்தார். அந்தச் சரமஸ்லோகம் வருமாறு:-

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச :"

என்பது. இந்த ஸ்லோகம் பூர்வார்த்தம் உத்தரார்த்தம் என்று இரண்டு விதமாயிருக்கும். முதல் வரி - பூர்வார்த்தம்; இரண்டாம் வரி உத்தரார்த்தம். ஆக, இந்தச் சரமஸ்லோகம் இரண்டர்த்தமாய் பதினொருபதமாய் இருபத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும்.

இப்படி, மேற்கூறிய இந்த ரகசியத் திரயமத்தனையும் வைஷ்ணவனென்றிருப்பானொரு அதிகாரிக்கு அவசியமுண்டாக வேணும்.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற ரகசிய திரயத்தினைப் பகவானிடமிருந்து திருச்செவிசாத்திய பெரிய பிராட்டியார் தன் ஆசாரியனாகிய ஸ்ரீமந். நாராயணரின் கட்டளைப்படியே விஷ்வக்ஸேநர் எனப்படும் சேனை முதலியாருக்கு உபதேசித்து

அவர் மூலம் பூவுலகத்தில் ஆதிசேடனாம்சமாய்த் தோன்றிய திந்திரிணி மரத்தின் கீழே (புளிய மரத்தின் கீழே) நாராயணாம் சமாய் பத்மாசனமிட்டு யோகத்திலே எழுந்தயிருளியிருக்கிற நம்மாழ்வாராகிய சடகோபர்க்கு உபதேசிக்கும்படி ஆணையிட்டனர்.

(குறிப்பு : இந்த நம்மாழ்வாரென்னும் சடகோபர் கலியுகத்திலே ஸ்ரீமந் நாராயணனே பரமகுருவாய் சேதன ரட்சணார்த்தத்தின் பொருட்டுப் பூவைசியர் குலத்தில் அவதரித்தார் என அறிக)

பெரிய பிராட்டியாரின் ஆணைப்படியே சேனை முதலியார் வந்து உபதேசிக்க இந்தப் பிரகாரம் பரமபதமாகிய நித்திய பூதியிலிருந்து லீலாவிபூதியாகிய இந்தப் பூமிக்குக் குருபரம்பரை வந்து அவதரித்தது.

நித்திய விபூதிவாக்ய குருபரம்பரையானது

ஸ்ரீ தராய நம

ஸ்ரீயை நம :

ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம :

என நித்திய விபூதியில் நிலவிப் பின் லீலாவிபூதியில்,

ஸ்ரீமதே சடகோபாய நம : என்று தொடங்கி "அஸ்மத் குருப்யோ நம :" என்ற வரையில் நீடிக்கலாயிற்று.

ஸ்ரீமதே சடகோபாய நம :
ஸ்ரீமந் நாதமுநயே நம :
ஸ்ரீ புண்டரீகாக்ஷாய நம :
ஸ்ரீ ராமமிச்ராய நம :
ஸ்ரீமத் யாமுநமுநயே நம :
ஸ்ரீ பராங்குசதாஸாய நம :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :
அஸ்மத் ஸர்வகுருப்யோ நம :
அஸ்மத் பரமகுருப்யோ நம :
அஸ்மத் குருப்யோ நம :

இந்தக் குருபரம்பரை வரலாற்றினை விசதமாக அனைவரும் அறியும்படி ஒரு ஸ்லோகத்தில் அமைத்துக் காட்டினார் பெரும் புகழானாகிய நம் கூரத்தாழ்வான். அந்த ஸ்லோகம் வருமாறு :

"லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்"

என்பது. இது நித்யாநுசந்தானம்.

ஆக, 'பூர்வார்த்த சாரசங்கிரகம்' என்ற இந் நூலில் பயின்று பரக்கப் பேசப்படுவது "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்ற பூர்வத் தொடரின் ஆழ்பொருளின் விவரணமாகும்.

(குறிப்பு: இந் நூலில் உத்தரார்த்தத்தையும் குறிப்பிட்டு உள்ளீடாகக் காட்டியிருப்பது நூல் முழுவதும் பரிபூரணமாய்ப் பனையேட்டில் எழுதப்பட்டிருப்பதைக் காட்டும். இதனை அட்டவணையில் குறித்துள்ள 14, 15 சாத்துக்கவிகளாலும் தெளியலாம்.)

இனி, பூர்வார்த்த சாரசங்கிரக நூல் நுவலும் விழுமிய பொருள்களின விவரம் சுருங்கக் காணலாம்.

## பொருட் சுருக்கம்

1. பரத்துவ நிருபண மகத்துவம்: ஸ்ரீய: பதியாகிய ஸ்ரீமந் "அகமேவ பரத்வம்" என்பது பேரருளாளன் திருக்கச்சி நம்பிகளுக்குக் கூறிய முதல் வார்த்தை ஸ்ரீமந் நாராயணன் சுவயம் பரப்பிரம்மம்: ஆதிமத்தியம் அந்தம் இல்லாதவர். சர்வ சீவதயாபரர்: சகல கலியாண குணங்களுக்கு ஆதாரமானவர்: சித்து அசித்து வஸ்துக்களுக்கு ஸ்வாமி: அவர் அவற்றுள் உடல் மிசை வுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்: "அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித:" நித்திய சூரிகளால் இடைவிடாமல் போற்றப்படுபவர்: கமலம் போன்ற திருவடிகளையும் திருக்கண்களையும் உடையவர் வைகுண்டமாகிய திவ்விய நகரத்தில் நிலையாக நிற்பவர்: சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்ற முத்தொழில்களையும் லீலைகளாகத் திருவுளம் பற்றியவர். வாசுதேவனென்றும் சங்கர்ஷணனென்றும் பிரத்யும்நன் என்றும் அநிருத்தன் என்றும் சொல்லப்படுகிற நாலு விதமாகிய திவ்யமங்கள விக்கிரகங்களாய் அங்கீகரித்திருப்பவர்.

2. அஷ்டாங்க யோகம்

a) கிரமம்—பிராணாயாமம், தியானம், சமாதி போன்றவை.

b) தேகதத்துவம்—24 என்றும் 28 என்றும் கூறுப.

c) பிரணவம்—பரமாத்மாவுக்குச் சாக்ஷாத் வாசகமாக நிற்கிறது.

3. க்ஷீராப்தி மர்த்தனம்: (திருப்பாற் கடலைக் கடைதல்): திருப்பாற் கடலைக் கடைதற்குக் காரணம் - துருவாசமுனி இந்திரனுக்கு இட்ட சாபம்.

4. கூர்மாவதார மகத்துவம் : ஸ்ரீ மகாலக்ஷ்மி (பெரிய பிராட்டியார்) அவதரித்தல். அவளுக்கு முன் சேஷ்டா தேவி (மூதேவி), வாருணீ தேவி, தந்திரா தேவி, அப்சரஸ்திரீகள், கந்தர்வர்கள், தன்வந்திரி இவர்களோடு அயிராவதம், உச்சைச் சிரவசு, பாரிஜாதம், காமதேனு இவைகள் தோன்றின. மகாலக்ஷ்மியை ஸ்ரீமந் நாராயணர் தமது தர்மபத்தினியாக அங்கீகரித்தார்.

| | |
|---|---|
| 5. ஏகாதசி மகாத்மியம்<br>6. துவாதசி மகாத்மியம் | இரண்டும் ஒருசேரப் பயில, இரண்டு திதிகளின் மகிமையும் நன்கு விளங்கும். |

7. பாஷாண்ட கண்டனம் : வைணவ மதத்துக்குப் புறம்பானவன் பாஷாண்டி எனப்படுவன் (heretic). அதாவது, ஸ்ரீமந் நாராயணனைக் காட்டிலும் அந்நிய தேவதையைப் பரமென்று சொல்லுபவர் பாஷாண்டிகள். 'பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும், நாயகன் அவனே கபாலநன் மோக்கத்துக் கண்டு கொண்மின்'' (திருவாய்மொழி : 4-10-4) என்றதன் ஆழ்பொருளை யுணராதவன் பாஷாண்டி. அஷ்டாக்ஷர மகாமந்திரமானது உத்தாரகப் பிரமம் என்று அறியாதவன் பாஷாண்டி. அவன் மதம் பல ஏதுக்களாலே கண்டிக்கப் பட்டது.

8. மாயாவாத கண்டனம் : மாயாவாதம் என்பது பிரபஞ்சம் யாவும் மாயையேயென்று பௌத்தம் அத்வைத மதங்களிற் கூறப் படுங் கொள்கை. இந்தமாயாவாதிகள் ஜீவாத்மாவையும் பரமாத்மாவாகிய பிரம்மமென்று சொல்லுவார்கள். இந்தப் பக்ஷத்தை ஆறு காரணங் காட்டி மறுத்ததோடு நில்லாது "உயிர்கள் மெய்விட்டு, ஆதிப்பரனோடு ஒன்றாம்'' என்று சொல்லும் இந்த ஆரவார கோஷத்தையெல்லாம் கண்டித்து, தத்துவ ஞான சாகரமாகிய எம்பெருமானார் லோக சம்ரட்சணார்த்தமாக வாதம்பண்ணி வென்றருளினார். இதனைப் பாராட்டித் திருவரங்கத்தமுதனார் பிரபந்த காயத்ரி என்று உச்சிமேல் வைத்துக் கொண்டாடப்படும் தமது பிரபந்தமாகிய இராமாநுச நூற்றந்தாதியில் :

"தர்க்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்புசெய்நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே
பொற்கற்பகம் எம் இராமாநுசமுனி போந்த பின்னே'' (99)

என்று சாதித்தருளினார். எம்பெருமானார் தாம் அருளிய ஸ்ரீபாஷ்ய முகேன சுதர்சன மதங்களைப் பங்கப்படுத்தி அசத்கல்பமாக்கியருளினார் என்பது நினைக.

9. சாத்துவிக ராஜஸ தாமஸ விவரணம்: சத்துவம், ராஜஸம், தாமஸம் என்ற முக்குணங்களை விவரிப்பது.

சத்துவ குணம்: சிறந்ததாய் நற்காரியங்களிலேயே நோக்கம் உண்டாக்குவது. அதற்கான புராணங்கள் ஆறு: அவையாவன: வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பாத்மம், வராகம். அதற்கான ஸ்மிருதிகள் ஆறு: அவையாவன: வாசிட்டம், ஆரிதம், வியாசம், பராசரம், பரத்துவாசம், காசியபம். இந்தப் புராணங்களும் ஸ்மிருதிகளும் மோட்சப் பிரதமாகச் சொல்லப்படுகின்றன.

ராஜஸ குணம்: இச்சை, பேராசை, செருக்கு, உன்மத்தம் போன்ற குணங்கள். அதற்கான புராணங்கள் ஆறு. அவையாவன: பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், பவுடியம், வாமனம், பிரமம். அதற்கான ஸ்மிருதிகள் ஆறு; அவையாவன: மானவம், யாக்கியவல்கியம், ஆத்திரேயம், தாக்ஷியம், காத்யாயனம், வஷிஷ்ணவம். இந்தப் புராணங்களும் ஸ்மிருதிகளும் சுவர்க்கப் பிரதமாகச் சொல்லப்படுகின்றன.

தாமஸ குணம்: காமம் வெகுளி மயக்கம் முதலிய தீங்குகளுக்குக் காரணமாக்கிடும் குணம். அதற்கான புராணங்கள் ஆறு: அவையாவன: மச்சியம், கூர்மம், லிங்கம், சைவம், ஸ்காந்தம், ஆக்கினேயம். அதற்கான ஸ்மிருதிகள் ஆறு: அவையாவன: கௌத்தமம், பாருபத்தியம், சாமவந்தம், எமஸ்மிருதி, சங்கமம், அவசன்மம். இந்தப் புராணங்களும் ஸ்மிருதிகளும் நரகப் பிரதமாகச் சொல்லப்படுகின்றன. எனவே, விவேகியானவன் தாமஸ புராணங்களையும் ஸ்மிருதிகளையும் விலக்கக்கடவன்.

இந்தப் பிரகரணத்தில் பார்வதியானவள் ருத்திரனை நோக்கி, சாத்வீக தெய்வமாகிய விஷ்ணுவினுடைய மகிமையைப் பற்றி வினவ, ருத்திரன் விஷ்ணுவின் சகஸ்ரநாமத்திற் சிறந்த ராமநாம மகிமையைச் சொல்லி, மேலும் ஸ்ரீராம அஷ்டோத்தர சதநாமங்களைச் சொல்லி, இவற்றைத் தினமும் பாராயணம் செய்பவர் சகல பாபங்களினின்று விடுபட்டுத் திவ்யமான ஞானத்தைப் பெறுவர். எவர்

"ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய சீதாயா: பதயே நம:"

என்ற மந்திரத்தைத் தினமும் அநுசந்திக்கிறாரோ அவர் பாபங்கள் நீங்கி ஸ்ரீ விஷ்ணுலோகத்தையடைவர் என்றார்.

10. பரதத்துவ சோதனை மகாத்மியம்: பிரமவிஷ்ணு ருத்திரர் மூவருள்ளே பரதத்துவ இறைவன் யார் என அறிய வேண்டி ரிஷிகள் பிருகுமுனிவரை யழைத்துப் பரதத்துவ சோதனையில் ஏவினார்கள். அவர்கள் ஏவினபடியே பிருகு முனிவர் சென்று அவர்களுடைய திவ்யமங்கள விக்கிரகங்களைச் சாட்சாத்கரித்து, சுத்தசத்துவமாயும், பரப்பிரம்மமாயும் இருக்கிறவர் விஷ்ணுவே எனச் சோதனைக்குப்பின் நிச்சயித்து. அவரே சர்வ வியாபகராயும் சர்வாந்தர்யாமியாயும் ஸ்ர்வ பரிபூர்ண ராயும் இருப்பவர் என ஸ்ரீமந் நாராயணனின் மகிமையையும் பரத்துவத்தையும் நிலை நாட்டினார்.

11. அவதாரக் கிரமம்: ஷாட்குண்ய பரிபூர்ணனான பரமாத்துமாவாய் விளங்கும் ஸ்ரீமந் நாராயணனாகிய பரமபுருஷன் பல சந்தர்ப்பங்களுக்கேற்பப் பல அவதாரங்களைச் செய்து உலகத்தாரை வாழவைத்துள்ளார். அங்ஙனெடுத்த அவதாரங் களுள் இருபது அவதாரங்கள் இங்குக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பதினெட்டாவது—இராமாவதாரம்; பத்தொன்பதாவது—பலராம அவதாரம்; இருபதாவது—கிருஷ்ணாவதாரம். கிருஷ்ணாவதாரத் தின் பெருமை மட்டும் பரக்க விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஏனெனில், 'ஸர்வம் ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து" என்று அவருக்கே சர்வமும் அர்ப்பணிக்கப்படுகிறது.

"கிருஷ்ணாய வாசுதேவாய ஹரயே பரமாத்மனே
பிரணதார்த்திஹராய ஸ்ரீ கோவிந்தாய நமோநம:"

என்றது மங்களமாகிய மந்திரம். இதனை ஜபிக்கக்கடவர்.

கிருஷ்ணாவதாரக் கிரமத்தில், முக்கியமாக, பாகவதத்தில் வந்துள்ள வரலாறுகளும், மகாபாரதத்தில் வந்துள்ள சம்பவங்களும் குறிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பாகவதத்தில் பூதனையின் உயிர் குடித்தது, சகடாசுரனை வதைத்தது, மருதமரம் சாய்த்தது, புள்ளின் வாய் கீண்டது, கன்று குணிலா வெறிந்தது, பாம்பின் வாய் பிளந்தது, பிரமனின் கருவத்தைப் பங்கப்படுத்தியது, தேனு கனைக் கொன்றது, ஆநிரை மேய்த்தது, காளியன் தலைமேல் நடனம் புரிந்தது, காட்டுத் தீயை விழுங்கியது, கோவர்த்தனகிரி யைக் குடையாக வெடுத்து ஆநிரையையும் கோபர்களையும் ஏழு நாள் பலத்த மழையினின்று காப்பாற்றியது, குவலயா பீடத்தின் தந்தங்களைப் பிடுங்கி வதைத்தது, மல்லர்களை மாட்டியது, கம்சனைவதைத்தது,உக்கிரசேனனை வடமதுரைக்குமன்னனாக் கியது, சாந்தீபினி முனிவரின் மரித்த பிள்ளையை யழைப்பித்துக் கொடுத்தது, ருக்குமிணி சத்தியபாமை முதலாக ஏழு ஸ்தீரிகளை மணந்து கொண்டது, பதினாறாயிரம் கன்னிப் பெண்களாகிய

கோபியரை ஏக காலத்திலே விவாகஞ் செய்துகொண்டது முதலியன. இனி, பாரதத்தில்—சராசந்த வதம், சிசுபாலன் வதம், தருமனின் ராஜசூயம் நிறைவேற்றல், திரௌபதிக்கு ஆபத்தில் ஆடை சுரக்கும்படி அருள் புரிந்தது, திரௌபதியிடத்தில் அக்ஷய பாத்திரம் கொடுத்தது, துரியோதனனிடம் தூது போனது, ஆங்கு அவன் சபையில் விசுவரூபம் எடுத்தது, கர்ணனிடம் அவனது பிறப்பு வளர்ப்பு தெரிவித்தது, இந்திரனை யனுப்பிக் கர்ணனிட மிருந்து கவசகுண்டலங்களை யாசித்து வாங்கிவரச் செய்தது, குந்தியையனுப்பிக் கர்ணனிடம் நாகாஸ்திரத்தைப்பற்றி வரம் வாங்கிவரச் செய்தது முதலியன கூறப்பட்டுள்ளன. மற்றும் அருச்சுனனுக்குக் கீதையை யுபதேசித்தது பிரசித்தம்.

12. ஸ்ரீ பகவத் கீதார்த்தம்: பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. அவையாவன பின்வருமாறு:

1) அர்ச்சுனன் வியாகுல யோக அத்தியாயம்
2) சாங்கிய யோக அத்தியாயம்
3) கர்மயோக அத்தியாயம்
4) ஞானயோக அத்தியாயம்
5) கர்மசந்நியாச யோக அத்தியாயம்
6) அப்யாச யோக அத்தியாயம்
7) பரம அங்கிஷவிஞ்ஞான யோக அத்தியாயம்
8) அக்ஷர பிரம யோக அத்தியாயம்
9) ராஜகுஹ்ய யோக அத்தியாயம்
10) விபூதி விஸ்தார யோக அத்தியாயம்
11) விசுவரூப யோக அத்தியாயம்
12) பக்தி யோக அத்தியாயம்
13) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகயோக அத்தியாயம்
14) குணத்திரய விபாக யோக அத்தியாயம்
15) புருஷோத்தம யோக அத்தியாயம்
16) தேவாசுர சம்பத்து விபாக யோக அத்தியாயம்
17) சிரத்தாத்ரய விபாக யோக அத்தியாயம்
18) சகல உபநிஷதார்த்த பிரதிபாதக மோக்ஷயோக அத்தியாயம்

மேற்குறித்த பதினெட்டு அத்தியாயங்களின் சாரார்த்தம் முற்றும் வெகு ஸ்பஷ்டமாகவும் அனைவரும் படித்துப் பயன்பெறுமாறும், ஆற்றொழுக்காகச் சிறப்புற்று யானை கோலஞ்செய்து புறப் பட்டாற் போன்ற அழகிய இனிய நடையில் படிக்கப்படிக்கத் தெவிட்டாத இன்பம் பயப்பதாய் அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது (பக்கங்கள் 109 முதல் 172 வரை ஸ்ரீ பகவத்

கீதார்த்தம் கூறுவது) சுருங்கக் கூறின் இந்த ஸ்ரீ பகவத் கீதார்த்தம் என்ற பகுதி இந்நூலுக்கு மணிமுடி வைத்தது போலே அமைந்துள்ளது.

13. பாரத யுத்தம்; பதினெட்டு நாள் பாரத யுத்தம் நிகழ்ந்ததன் விளைவு, கண்ணுவ மகரிஷி சாபத்தால் யாதவ குலமே அடியோடு நசித்துப் போயினமை, துவாரகை கடலாற் கொள்ளப்பட்டமை, ஸ்ரீ கிருஷ்ணன் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியமை முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

14. விஷ்ணு ஸ்ரீ மகாலக்ஷ்மிக்கு திரிபாத்விபூதி மகாத்மியமும் மற்ற வியூகங்களும் சொல்லுதல்.

திரிபாத் விபூதியென்பது பரமபதம் அதாவது நித்திய விபூதி யெனப்படுவது. இது விஷ்ணுவுக்குப் போகார்த்தமானது. போகார்த்தமான இந்தப் பரமபதமே லீலார்த்தமான சமஸ்த ஜகத்துக்கும் போகரூபமாயும் லீலாரூபமாயும் இரண்டு பிரகாரமாக இருக்கிறது. போகரூபமான விபூதி நித்தியமாய் இருக்கும்: எனவே நித்திய விபூதி. லீலாவிபூதியானது ஒருகால் சங்கரிக்கப்படும்: எனவே அநித்தியமானது. இரண்டு விபூதிகளும் விஷ்ணுவின் சக்தியினால் தரிக்கப்படுகின்றவை. இங்ஙனம் பரமபத மகத்துவத்தைச் சொல்லி, பின் மகதாதிபூத சிருஷ்டி மகாத்மியம் சொல்லப்படுகிறது.

பகவான் பிரகிருதி புருஷன் என்று சொல்லப்படுவர். அவர் மூலப் பிரகிருதியிலே பிரவேசித்து அதனினின்றும் மகத்துவத்தை சிருஷ்டித்தார். (குறிப்பு: இந்த மஹத் என்னும் வடமொழி 'மஹாந்' என நின்று அது தமிழில் "மான்" எனத்தற்பவமாயிற்று. "மானாங்காரமனம்கெட" என்றார் நம்மாழ்வாரும் (திருவாய். 10.7.10) மகத்தத்துவத்தினின்றும் அகங்காரம் என்ற தத்துவம் தோன்றிற்று. அந்த அகங்காரத்தினின்றும் சத்துவாதி மூன்று குணங்களின்படியாக சப்த ஸ்பரிச ரசரூபகந்தம் (சுவையொளி யூறோசை நாற்றம்) என்ற தன் மாத்திரைகள் ஐந்தும் சிருஷ்டிக்கப்பட்டன. அந்த தன் மாத்திரைகளினின்றும் பஞ்சபூதங்களாகிய பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் (நிலம், நீர், தீ, காற்று, வானம்) உண்டாயின. பகவானிடமிருந்து (அதாவது பிரம்மத்தினிடமிருந்து) முதலில் ஆகாசம் உண்டாயிற்று. ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று ஜலமும், ஜலத்தினின்று பிருதுவியும் (பூமி) உண்டாயின. ஆக, ஆகாசம் முதலாகப் பிருதுவி வரை சிருஷ்டிக்கப்

பட்ட பூதங்கள் முந்தின பூதசம்பந்தத்தையுடையனவாகச் சிருஷ்டிக்கப்பட்டன. தன் மாத்திரைகள் ஐந்தும் அந்தப் பூதங்களுடைய குணங்கள். தன் மாத்திரைகளை அந்தப் பஞ்சபூதங்களின் சூக்ஷ்மாவஸ்தை என்பர். சிருஷ்டிக் கப்பட்ட பஞ்சபூதங்களையும் ஏகமாகச் சேர்த்துப் பிரம் மாண்டத்தைச் சிருஷ்டிபண்ணி, அந்தப் பிரம்மாண்டத்திலே பதினான்கு லோகங்களையும் சிருஷ்டித்தார். அவைகளில் தேவர்கள், மனுஷ்யர்கள், திர்யக்குகள், தாவரங்கள் என்று நான்கு வித சாதியும் சிருஷ்டிக்கப்பட்டன. பூர்வத்திலே பிரகிருதியிலே அடங்கியிருந்த சேதனங்கள் பகவானுடைய சிருஷ்டி காலத்திலே அதனதன் கர்மானுரூபமாகத் தேவாதி சன்மங்களிலே உண்டா யின என்பர்.

இனி, வியூக பேதவர்ண மகத்துவம் கூறப்படுகிறது. அதாவது - வாசுதேவ பிரத்யும்ந சங்கர்ஷண அநிருத்தர் என்ற நான்கு நிலைகள். (குறிப்பு : வாசுதேவனுக்குப் பரவாசு தேவன் என்ற ஐந்தாவது நிலையும் உண்டு. பரவாசுதேவனாய்ப் பரமபதத்திலும் வாசுதேவனாய் ஸ்ரீ வைகுண்டத்திலும் பகவான் எழுந்தருளியிருப்பர் என்பர். இரண்டும் ஒரு நிகராய் ஒப்பனவே என்க.) இவற்றுள் வாசுதேவ மூர்த்தியாக ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கின்ற பகவான் தமது ரூபத்தை மூன்று விதமாகப் பண்ணினார்: பிரத்யும்நமூர்த்தி, சங்கர்ஷணமூர்த்தி, அநிருத்தமூர்த்தியென்று. இவர்களுள் பிரத்யும்நமூர்த்தி யினுடைய அம்சமாய்த் தமது நாபிகமலத்தினின்று பிரம்மாவைச் சிருஷ்டி நிமித்தமாக (as creator) உண்டாக்கினார். பின்பு தமது நெற்றி வேர்வைத்துளியினின்று சங்கர்ஷண மூர்த்தியினுடைய அம்சமாய் ருத்திரரைச் சங்கார நிமித்தமாக (as destroyer) உண்டாக்கினார். இனி ஸ்திதி நிமித்தமாக (as preserver) ரட்சணார்த்தத்தின் பொருட்டு அநிருத்த மூர்த்தியாகவாயினார்.

இனி இந்த நான்கு வியூகங்களின் இருப்பிடம் நான்கு பிரகாரமாகச் சொல்லப்படும். அவையாவன. 1. ஸ்ரீ வைகுண்டம் 2. விஷ்ணுலோகம் 3. சுவேதத்தீபம் 4. க்ஷீரசமுத்திரம். இவற்றைச் சற்று விரிவாக நோக்குவோம்.

1. ஸ்ரீ வைகுண்டம் ; இது பிரதம வியூகம். சப்த ஆவரணங் களையுடையது: அயோத்தியென்ற பட்டணத்தையுடையது. இந்த ஸ்ரீ வைகுண்டத்திலே நவரத்னமயமான அநேகமாயிரம் தூண்களையுடையதாயும் — கோடி சூரியப் பிரகாசமாயும், திவ்வியமாயும் இருக்கிற விமானத்திலே வாசுதேவன் எழுந்தருளி யிருக்கிறார். அங்கு திவ்வியமான ஆசனத்திலே தமது வலது

பாரிசத்தில் சுபகரமான லக்ஷ்மியோடுகூட ஸ்ரீய:பதியாய் பத்மாசனத்திலே எழுந்தருளியிருக்கிறார். இடது பாரிசத்திலே அநேக வித ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும், திவ்வியங்களான வஸ்திரபுஷ்பாதிகளாலே அலங்கரிக்கப்பட்டும், இருகரங்களிலே ரத்தினமயமான இரண்டு கருநெய்தல் புஷ்பங்களைத் தரித்துக் கொண்டும், மற்ற இருகரங்களிலே தர்சனீய பாத்திரத்தையும் கிளியையும் தரித்துக் கொண்டும் பூதேவி எழுந்தருளியிருக்கிறாள். இவர்களுடைய மத்தியிலே பகவானான வாசுதேவன் எழுந்தருளியிருக்கிறார். நித்ய சூரிகளாலும் நித்தர் முக்தர்களாலும் சேவிக்கப்பட்டுத் திகழ்கிறார். அஷ்டாக்ஷரசித்தியையுடையவர்களான மகாநுபாவர்களுக்கு இந்த ஸ்ரீ வைகுண்டமானது அடையத்தக்கது. மற்ற பேருக்கு ஒரு காலத்திலேயும் அடையத்தக்கதன்று.

2. விஷ்ணுலோகம்: இது இரண்டாவது வியூகம். இதனைச் சத்தியலோகம் என்பர். ஏனெனில் இது கற்பாந்த காலத்திலேயும் லயிக்கிறதில்லை. இதனில் துவாரகை யென்ற பட்டணம் சிறப்புற்று விளங்குகிறது இந்த நகரில் சர்வலக்ஷண சம்பன்னாளாயும் திவ்யபூஷண பூஷிதாளாயும் இருக்கிற ஸ்தீரி புருஷர்கள் கிரீடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கு ஸ்தீரி புருஷர்களுக்கு ஒருவர்க்கொருவர் ஸ்பர்சத்தினாலே ஸ்ரீ ஹரியிடத்தில் சுகரசமான பக்தி விருத்தியாகிறது. அங்கு நாலுபக்கமும் அலங்கரிக்கப்பட்டுள்ள மண்டபத்தின் மத்தியிலே மனோக்கியமான பஞ்சணை மெத்தையிலே சேஷபரியங்கமாகிற பரமாசனத்திலே வாசுதேவனானவர் தமது மார்பிலே யிராநின்ற மகாலக்ஷ்மியை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு ஸதாசர்வகாலமும் கிரீடித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

3. சுவேதத்தீபம்: இது மூன்றாவது வியூகம். இது சுத்தோதக சமுத்திரத்திற்கு (நன்னீர்க் கடலுக்கு) வடக்குக் கரையிலுள்ளது. இங்கு சனகாதியோகீச்வரர்களுக்குத் தரிசனார்த்தமாக எழுந்தருளியிருக்கிறார். இந்தத்தீவின் மத்தியிலே அயிராவதி என்னப்பட்ட ரம்மியமான பட்டணம் இருக்கிறது. திவ்விய ஸ்தீரிபுருஷர்களாலே வாசம் பண்ணப்பட்டது. அங்குள்ள அந்தப்புர மத்தியிலே சுவர்ணமயமான நவரத்தின கசிதமான திவ்விய மண்டபமிருக்கிறது. அந்த மண்டபத்தில் மிக்க காந்தியையுடைய சிம்மாசனம் இருக்கிறது. இதன் மத்தியில் ஹரி பத்மாசனத்திலே எழுந்தருளியிருக்கிறார். அவரது இடது தொடையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி எழுந்தருளியிருக்கிறார். நான்கு வகைகளிலும் வசுபாத்திரத்தையும், மாதுலங்கத்தையும், கண்ணாடியையும், சுவர்ணபத்மத்தையும் தரித்திருக்கின்றாள்.

சக்தி தேவதைகள் சமஸ்த கைங்கரியமும் சகலகாலமும் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப்புரத்துக்கு வெளியே கருடாழ்வார் முதலான நித்யசூரிகள் நித்ய கிங்கிரர்களாயிருக்கிறார்கள். திருமந்திரத்தை ஜெபிப்பவர்கள், துவாதசி விரதத்தை யநுஷ்டிப்பவர்கள் இந்த லோகத்தையடைவார்கள். ஏகாந்த பக்தியினாலே சகஸ்ரநாமத்தைச் சிந்திக்கிறவர்கள், ஸ்ரீ ஹரியைக் குறித்து ஓமம் பண்ணுகிறவர்கள் இந்த லோகத்தையடைவார்கள்.

4. க்ஷீரசாகரம் : இது நாலாவது வியூகம்: திருப்பாற்கடல். இதனில் சேஷதல்பத்திலே (ஆதிசேஷனாகிய மெத்தையிலே) தேவர்களுக்குத் தரிசனார்த்தமாக மகாலக்ஷ்மியோடு கூட எழுந்தருளியிருக்கிறார். அங்கு சித்தர்கள், சாரணர்கள், கின்னரர்கள் முதலான சமஸ்ததேவர்களும் தத்தம் விமானத்தில் வந்து சர்வகாலமும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்துகொண்டே ஸ்ரீ ஹரியைக் கானம் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். இது கூப்பீடு கேட்கும் இடம். அதாவது, தேவர்களுக்கு அபயப் பிரதானம் பண்ணி அரக்கர்களைச் சங்கரிக்கும் பொருட்டும் ஜகத்தை ரக்ஷிக்கும் பொருட்டும் பிரசன்னராய் எழுந்தருளியிருக்கிறார். இதனை அவதாரங்களுக்கு நாற்றங்கால் என்பர்.

15. சுதரிசன மகாத்மியம் : இதில் பிராமணனுக்குத் தப்தமாயிருக்கிற (அக்னியிலே சுடப்பட்ட) சங்கு சக்கரங்களினாலே அவனது ஆசாரியன் சாஸ்திரப்படி அங்கனத்தைப் பண்ணக் கடவன் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனைச் "சமாச்ரயணம்" என்பர். அதாவது, ஆசாரியன் சிஷ்யனுக்குச் சங்குசக்கர முத்திராதானஞ் செய்து வைணவத்துவம் அளிக்கும் சடங்கு. "தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின், கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்" என்ற பெரியாழ்வார் வாக்கு நினைக. வைஷ்ணவமானது பரசியம் என்றும், ஆப்பியந்தரம் என்றும் இரண்டு விதமாகச் சொல்லப்படும். இதிலே சங்கு சக்கரங்களாலே அங்கனம் பண்ணிக்கொள்வது பரசியம் என்றும் காமகுரோதாதிகளில்லாமல் இருக்கை ஆப்பியந்தரம் என்றும் அறியத்தக்கது. (குறிப்பு : பரசியம் - எல்லோரும் அறிந்த விஷயம். that which is publicly Known, ஆப்பியந்தரம் - உள்ளானது: that which is Internal mental) ஆப்பியந்தர வைணவத்தில் -பரமாத்மா தரிசனமும், சமஸ்த பிராணிகளிடத்திலே இதத்தைக் கோருகையும், சாந்தனாயிருக்கையும், விஷயங்களிலே ஆசையில்லாமலிருக்கையும், இவை கூறப்பட்டுள்ளன. ஆக, சங்குசக்கரம் முதலான பகவத் சின்னங்களுடைய அங்கனமானது (சமாச்ரயணம் செய்துகொள்வது) பிரதம வைணவமாகச் சொல்லப்படுகிறது. சக்கராதி சின்னங்

களில்லாமற் போனால் அதனாலே வைஷ்ணவத்துவம் சித்திக்க மாட்டாது. இந்தச் சக்கரம் பவித்திரமென்றும், சரணமென்றும், சகஸ்ராரமென்றும், சுதரிசனமென்றும், எதிராசன் என்றும் திருநாமங்களையுடையன.

16. ஊர்த்வ புண்டர மகாத்மியம்: உத்தம பிராமணன் ஊர்த்துவ புண்டரம் (நேராக நெற்றியில் மேனோக்கியிடும் திரு நாமம் - Vertical) தரித்தல்வேண்டும். ஏனெனில், ஊர்த்துவ புண்டரம் தரித்தவனுடைய தேகமானது பகவானுக்கு விமலமாயும் மங்களகரமாயும் இருக்கிறது. ஊர்த்துவ புண்டரம் இல்லாத சரீரம் பார்க்கத்தக்கதன்று. அது மசானத்துக்குச் சமானமாயிருக்கிறது. (நீறில்லா நெற்றிபாழ் என்றாள் ஔவையும்) பிராமணர்களுக்கு ஊர்த்துவ புண்டரமும், க்ஷத்திரியர்களுக்குத் திலகமும், வைசியர் களுக்குப் பட்டவர்த்தனமும், வேளாளர்க்குத் திரிபுண்டரமும் தரிக்கத்தக்கது. பிராமணன் பஸ்மதாரியாயிருந்தானானால் அவன் வர்ஜிக்கக்கடவன் (விலக்கக்கடவன்.) மிருத்துவினாலே (திருமண்ணினாலே) ஊர்த்துவ புண்டரமும், கஸ்தூரியினாலே திலகமும், சந்தனத்தினாலே பட்டவர்த்தனமும், சுவேதமிருத்து வினாலே (வெண்ணீறு) திரிபுண்டரமும் தரிக்கத்தக்கது. ஊர்த்துவ புண்டரம் இடைவெளியோடே கூடிக்கொண்டிருக்கிற தண்டாகாரமாயும் மிகவும் மனோக்கியமாயும் இருத்தல்வேண்டும். அங்கு ஸ்ரீ ஹரியாகிய விஷ்ணு ஸ்ரீ மகாலட்சுமியோடு கூட நித்திய வாசம் பண்ணுகிறார் என்பது துணிபு. ஊர்த்துவ புண்டரத்தை நித்தியமாய் தரிக்கிறவன் சாலோக்கிய பதவியை யடைகிறான். (குறிப்பு: சாலோக்கியம் - பகவானுடன் ஓரிடத்தில் உறைதல் the blissful conditon of being in God's world). ஊர்த்துவ புண்டரம் அங்குலியினால் (விரலினால்) இடப்படல் வேண்டும். பாதமில்லாமல் இடக்கூடாது. நாசிகர மூலத்தில் ஆரம்பித்து நெற்றிநுனி பரியந்தம் புருவங்களுடைய மத்தியத்தைப்பற்றி மிருத்திகையினாலே (திருமண்ணினாலே) ஊர்த்வ புண்டரத் தைத் தரிக்கக்கடவன்.

"நாசாதி கேசாந்தம் ஊர்த்வபுண்டரம் தாரயேத்
உத்ருதாஸிவராஹேண க்ருஷ்ணேன சதபாகுநா
பூமிர்தேனு தரணிலோக தாரிணி
மிருத்திகே ஹநமேபாபம் யந்ம யாதுஷ்கிருதம் க்ருதம்
த்வயாஹதேந் பாபேந ஜீவாமிஸ் சரதம்சதம்
ம்ருத்திகே தேஹிமே புஷ்டிம்த்வயீஸர்வம் பிரதிஷ்டிதம்
தஸ்மாத் த்விரேகம் பவதி தேவகிபுத்ரம் சமாச்ரித:
ப்ரம்மண: சாயுஜ்யம் ஸலோகதாம் ஆப்னோதி."

இனி பிரபந்நர்களும் பிராம்மணர்களும் துவாதச (பன்னிரண்டு) ஊர்த்துவ புண்டரங்களைத் தரிக்கக்கடவர். அப்போது அந்தந்தப் பகவன் மூர்த்திகளைத் தியானம் பண்ணி (கேசவன் நாராயணன் மாதவன் கோவிந்தன் விஷ்ணு மதுசூதனன் திரிவிக்ரமன் வாமனன் ஸ்ரீதரன் ரிஷீகேசன் பத்மநாபன் தாமோதரன் என்பன) திருமந்திரத்தினாலே தண்டஞ் சமர்ப்பித்துத் தரிக்கக்கடவர். சமஸ்த மத்திய பிரதேசங்களிலேயும் ஸ்ரீ சூர்ணங்களைத் தரிக்கக்கடவர்.

பன்னிரண்டு திருமண் அணியும் மந்திரம்

ஓம் கேசவாய நம: என்று நெற்றியிலும்
ஓம் நாராயணாய நம: என்று நடுவயிற்றிலும்
ஓம் மாதவாய நம: என்று மார்பிலும்
ஓம் கோவிந்தாய நம: என்று கழுத்து நடுவிலும்
ஓம் விஷ்ணுவே நம: என்று வயிற்றின் வலது பக்கத்திலும்
ஓம் மதுஸூதனாய நம: என்று வலது பாகுவிலும்
ஓம் த்ரிவிக்ரமாய நம: என்று கழுத்தில் வலது பக்கத்திலும்
ஓம் வாமனாய நம: என்று வயிற்றின் இடது பக்கத்திலும்
ஓம் ச்ரீதராய நம: என்று இடது பாகுவிலும்
ஓம் ஹ்ருஷிகேசாய நம: என்று கழுத்தில் இடது பக்கத்திலும்
ஓம் பத்மநாபாய நம: என்று முதுகின் அடியிலும்
ஓம் தாமோதராய நம: என்று பிடரியிலும்

துவாதசநாம உச்சாரணம் செய்து அணியவேண்டும்.

பின்பு ஸ்ரீ சூர்ணம் அணியும்போது அநுசந்திக்க வேண்டிய பன்னிரண்டு மந்திரங்கள் பின்வருமாறு:

ஸ்ரீ சூர்ணம் அணியும் மந்திரம்

ச்ரியை நம: என்று நெற்றியிலும்
அம்ருதோத்பவாய நம: என்று நடுவயிற்றிலும்
கமலாயை நம: என்று மார்பிலும்
சந்த்ரஸோதர்யை நம: என்று கழுத்து நடுவிலும்
விஷ்ணுபத்ன்யை நம: என்று வயிற்றின் வலது பக்கத்திலும்
வைஷ்ணவ்யை நம: என்று வலது பாகுவிலும்
வராரோஹாயை நம: என்று கழுத்தின் வலது பக்கத்திலும்
ஹரிவல்லபாயை நம: என்று வயிற்றின் இடது பக்கத்திலும்
சாரங்கிண்யை நம: என்று இடது பாகுவிலும்
தேவதேவ்யை நம: என்று கழுத்தில் இடது பக்கத்திலும்

வஸுந்தராயை நம: என்று முதுகின் அடியிலும்
மஹா லக்ஷ்ம்யை நம: என்று பிடரியிலும்
துவாதசநாம உச்சாரணஞ்செய்து அணியவேண்டும்.

நம்மாழ்வார் தமது திருவாய்மொழி "கேசவன் தமர்" என்று தொடங்குவதில் இந்தப் பன்னிரண்டு திருநாமங்களின் பெருமையை யுணர வைக்கிறார். (திருவாய். 2-7) மற்றும் இதற்குப் "பன்னிருநாமப்பாட்டு" என்று பெயர் சூட்டி "இவை பன்னிரண்டும் அண்ணல்தாள் அணைவிக்குமே" என்று பலனும் கூறியுள்ளார். பெரியாழ்வாரும் கண்ணனைக் காதுகுத்து தற்கு அழைக்கும்போது இந்தத் துவாதச நாமங்களையிட்டே அழைக்கின்றார். (பெரியாழ்வார் திருமொழி 2ஆம் பத்து 3ஆம் திருமொழி) மேலும் ஈற்றுப் பாசுரத்தில் "புதுவை மன்னன் பன்னிருநாமத்தாற் சொன்ன ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார் அச்சுதனுக்கு அடியாரே" என்று பலன் கூறித் தலைக் கட்டுகிறார். வில்லிபுத்தூராரும்,

"ஓராறுபேத சமயங்களுக்கும் உருவாகி நின்றவொருவன்
ஈராறு நாமம் உரைசெய்து மண்கொடிடுவார்கள் காணும்
இமையோர்"

என்று துவாதசநாமம் தரித்தலின் பெருமையை உணர வைக் கிறார். திவ்வியகவி அழகிய மணவாளதாசரும் தமது திருவேங் கடத்தந்தாதியில் "நேரவிரும் புண்டரர்க்கு அருள்வான் நெடுவேங் கடத்தான்" என்று ஊர்த்வ புண்டரந் தரித்தலின் அவசியத்தைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

17. விஷ்ணு ஆராதனம்: இது ஸ்தாபனம் என்றும் ஸ்வயம் வியக்தம் என்றும் இரண்டு விதமாயிக்கும். ஸ்வயம் வியக்தம் என்பது எந்த க்ஷேத்திரத்திலே பகவானானவர் பாஷாணம் (கல்), தாரு (மரத்துண்டு - wood) முதலான பிம்பங் களிலே தானாகவே ஆவிர்ப்பவிப்பானோ அந்த க்ஷேத்திரம் ஸ்வயம் வியக்தம் எனப்படும். உதாரணமாக ஸ்ரீ கூர்மம், பதரிவனம், காசி, பிரயாகை, சாளக்கிராமம், துவாரகை, நைமிசாரண்யம், பதரிகாசிரமம், தோதாத்ரி, சிம்மாத்ரி, வேங்கடாத்ரி, புஷ்கரம், ஸ்ரீ முஷ்ணம், யாதவகிரி, திருவஹீந்திர புரம், சோளசிங்கபுரம், அனந்தசயனம், ஸ்ரீ ரங்கம் முதலான க்ஷேத்திரங்களில் பகவான் ஸ்வயம் வியக்தராய் எழுந்தருளியிருக் கிறார். இனி எந்த க்ஷேத்திரத்திலே பரமபாகவத சிரேஷ்டனான வன் வேதோக்தவிதியினாலே திவ்ய மங்கள விக்ரஹமாகிய பகவானை ஏறியருளப்பண்ணி ஆராதிப்பனோ அது ஸ்தாபனம் என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, வீடுகள் தோறும்

திவ்யமங்கள விக்ரஹத்திலே பகவானை ஆராதிப்பது ஸ்தாபனமாகும். சாளக்கிராம சிலையிலே ஆராதிக்கிறது மகாமுக்கியமான ஆராதனமாகும். பகவதாராதனக்கிரமம் பின்வரும் ஒன்பது கர்மங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன :- 1. வேதாத்யனம் பண்ணுகிறது, 2. யாகாதி கிருதுகள் பண்ணுகிறது 3. யோகாப்பியாசம் பண்ணுகிறது 4. பகவத் குணாநுபவங்களைத் தியானம் பண்ணுகிறது 5. கீர்த்தனம் பண்ணுகிறது 6. பகவானுக்குப் பிரணாமம் பண்ணுகிறது 7. சங்கு சக்கரங்களாகிய சின்னங்களைத் தரிப்பது 8. பாகவதர்களை ஆராதனம் பண்ணுகிறது 9. பகவானையே உபாயமாகப் பற்றுகிறது. இந்த ஒன்பது கர்மமும் பிராம்மணனுக்குச் சர்வகாலமும் அவசியம் செய்யத்தக்கது. அஃதே போல் க்ஷத்திரியனுக்கு ஏழு கர்மமும், வைசியனுக்கு ஆறு கர்மமும், வேளாளனுக்கு ஐந்து கர்மமும் ஆராதன ரூபமாக விதிக்கப்பட்டுள்ளது. அவையாவன :- க்ஷத்திரியனுக்கு 1. பகவானை ஆராதனம் பண்ணுகை 2. திருமந்திர ஜபம் பண்ணுகை 3. வேதாத்யயனம் பண்ணுகை 4. பாகவதாராதனம் பண்ணுகை 5. சங்கு சக்கர முத்திரையைத் தரிக்கை 6. வந்தனம் செய்கை 7. நாமகீர்த்தனம் பண்ணுகை. வைசியனுக்கு 1. சங்கு சக்கர முத்திரையைத் தரிக்கை 2. பகவத் சந்நிதிகளிலே கைங்கரியம் முதலானவைகளைச் செய்கை 3. பாகவத ஆராதனம் பண்ணுகை 4. திருமந்திரத்தை ஜெபிக்கை 5. நாமகீர்த்தனம் பண்ணுகை 6. பகவானைச் சேவிக்கை. வேளாளனுக்கு 1. சங்கு சக்கரமுத்திரையைத் தரிக்கை, 2. பகவத் கைங்கரியம் முதலானவைகளைச் செய்கை 3. பகவானுக்கு வந்தனம் செய்கை 4. பகவத் ஆராதனம் பண்ணுகை 5. நாமகீர்த்தனம் பண்ணுகை.

இவை தவிர அனைவர்க்கும் மானசீக ஆராதனமானது சாதாரணமாக அவரவர் வர்ணாச்ரம தர்மானு குணமாகச் செய்யத்தக்கது. பூ பரிமள திரவியங்கள் அக்ஷதை இவைகளாலே திருவாராதனம் பண்ணக்கடவது. ஆராதனம் முடிந்தபின் யாராவது அதிதி வந்தால் அவரை அன்னபலாதிகளாலே திருப்தி பண்ணக்கடவது. பிறகுதான் சாப்பிடக் கடவன். அவன் சாப்பிட்ட பிறகுதான் அவன் பத்தினி சாப்பிடக்கடவள். பிராம்மணனானவன் அவைதீகங்களான தாமஸ தேவதா பூஜைகளை விட்டுவிடக் கடவன். இப்படிப்பட்ட பிராம்மணோத்தமர்கள் விஷ்ணுபக்தன் என்றும், ஏகாந்தியென்றும், பரமைகாந்தியென்றும் மூவகையினராவர். விஷ்ணு பக்தனானவன் செய்யத் தகாத பாபகாரியங்களைப் புத்தியினாலே நன்றாக அடியோடு விட்டுவிடக்கடவன். ஏகாந்தியானவன் மனதினாலேயும்

சாஸ்திர தூஷணத்தை விட்டுவிடக்கடவன். அப்படியே பரமை காந்தியானவன் சாஸ்திர தூஷணத்தை விட்டுவிடக்கடவன்.

இனி கர்மம் என்பது நித்தியம், நைமித்திகம், காமியம் என மூவகையாகச் சொல்லப்படுகிறது. பகவத் பக்தியோ ஒன்பது விதமாகச் சொல்லப்படுகிறது. அவையாவன :-

1. திருவாழி திருச்சங்கு ஊர்த்துவ புண்டரம் முதலான பகவத் சின்னங்களினாலே அடையாளமாக இருக்கிறது.
2. சதாசாரியனாலே உபதேசம் பண்ணப்பட்ட திரு மந்திரத்தை ஜெபிக்கிறது.
3. யதாவிதியாக ஸ்ரீ ஹரியை ஆராதனம் பண்ணுகிறது.
4. ஸ்ரீ விஷ்ணுவைத் தியானிக்கிறது.
5. பகவந்நாமகீர்த்தனம் பண்ணுகிறது.
6. பகவானுக்கு சிச்ருஷை பண்ணுகிறது.
7. பகவானைச் சேவிக்கிறது.
8. பாகவதர்களை ஆராதனம் பண்ணுகிறது.
9. பகவானுடைய தீர்த்தத்தை ஸ்வீகரிக்கிறது-என்பன.

இனி, மாதந்தோறும் ஒரு வருடத்திற்கு இன்னின்ன நைமித்திக கர்மாக்கள் செய்யவேண்டும் எனக்கூறப்பட்டுள்ளது. அவற்றுள், தனிச்சிறப்புடைய தாய்—ஸ்ரீய:பதியாகிய விஷ்ணுவின் ஆராதனம் விசேடிக்கப்பட்டுள்ளது. ஆக, ஸ்ரீ விஷ்ணுவினுடைய ஆராதனமே முக்கியம்: அதனைக் காட்டிலும் பாகவதாராதன மானது மிகவும் முக்கியம் என்பது உணரவேண்டுவது.

18. துவயரத்தின உபதேசம் :- பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்கு மந்திர ரத்தினமாகிய துவயத்தை உபதேசித் தார். அதனோடு திருமந்திரம் சரமஸ்லோகம் இரண்டினையும் ஒருசேரக் தொண்டு ரகசியத் திரயத்தையும் உபதேசித்தார். அப்போது திருமந்திரார்த்தத்துக்குத் தாற்பரியார்த்தமும் அருளிச் செய்தார் (பக்கம் 241-246 காண்க)
பிறகு துவய மந்திர ரத்தினத்தை விளங்கச் சொல்லி, அது சேதன னுக்குப் பரமபதத்தைக் கொடுக்கிறது என்று அதன் தனிப் பெருமையையும் குறித்தார். (பக்கம் 247 - 249 காண்க) இதற்குப் பின் சரமஸ்லோகத்தின் பூர்வார்த்தம் உத்தரார்த்தம் இரண்டினை யும் பரக்க விளக்கங் காட்டிப் பிராட்டிக்கு உபதேசித்தார். (பக்கம் 249-250) பிறகு எம்பெருமான் நியமனப்படி பிராட்டி சேனை

முதலியாருக்கு ரகசியத்திரயத்தையும் உபதேசிக்க, அந்தச் சேனைமுதலியார் இந்த ரகசியத்திரயத்தையும் அவற்றின் ஆழ்ந்த தத்துவப் பொருள்களையும் லீலா விபூதியில் நம்மாழ்வாரென்னும் சடகோபர்க்குப் பஞ்ச சம்ஸ்காரஞ்செய்து பின் உபதேசித்தார். அந்த நம்மாழ்வார் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு உபதேசிக்க அந்த ஸ்ரீமந் நாதமுனிகளின்மூலம் குருபரம்பரை இந்த லீலா விபூதியில் தொடரலாயிற்று.

பூர்வார்த்த நூல் நுவன்ற பொருட் சுருக்கம் முற்றிற்று.

குறிப்பு: இந்த லீலா விபூதியில் ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான ஆசார்யர்களின் குருபரம்பரா பிரபாவம் மற்றொரு உத்தரார்த்த பனையேட்டுச் சுவடியில் இருத்தல் வேண்டும். அந்தப் பனையேட்டுச் சுவடி கிடைத்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குப் பெருத்த இலாபமாகும். யார் சிரமப்பட்டுத் தேடிக் கண்டெடுப்பது: ஐயாவர்களில்லையே! ஒருகால் பகவானருளால் கிடைத்தால் பெரிதும் நலன் பயக்கும்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பூர்வார்த்த சார சங்கிரகம் என்ற இந் நூலால் ஸ்ரீ வைணவர்கள் அறிய வேண்டிய சில முக்கிய கருத்துக்கள்:

1) நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம் 100-உம் ருக்வேத சாரார்த்தம்: பெரிய திருவந்தாதி 87-உம் எசுர் வேத சாரார்த்தம்: திருவாசிரியம் 7-உம் அதர்வணவேத சாரார்த்தம். திருவாய்மொழி 102-உம் சாமவேத சாரார்த்தம்.

சாமவேதத்துக்கு அதிஷ்டான தேவதை—ஸ்ரீமந் நாராயணன்
எசுர்வேதத்துக்கு அதிஷ்டான தேவதை—ருத்திரன்
ருக் வேதத்துக்கு அதிஷ்டான தேவதை—பிரமன்
அதர்வண வேதத்துக்கு அதிஷ்டான தேவதை—இந்திரன்

2) கண்ணி நுண் சிறுத்தாம்பு பிரபத்தி நிஷ்டையை உளக் கொண்டிருக்கிறது.

3) மணவாள மாமுனிகள் தமக்குத் திருவாராதன மூர்த்தியாய் வைத்துக் கொண்டிருந்த அரங்கநகரப்பனை வானமாமலை மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஜீயர்கள், ஓரான் வழியாகத் திருவாராதனம் பண்ணும்படி சாதித்தார். அந்தப்படியே நாளது வரைக்கும் நடந்து வருகிறது.

4) ஓம் அச்சுதாய நம :
ஓம் அனந்தாய நம :
ஓம் கோவிந்தாய நம : —என்ற இந்த நாமாத்திரயத்தையும், பரிசுத்தனாய் யாரொருவன் ஜபிக்கிறானோ அவனுக்கு எவ்வித பயமும் இல்லை.

5) எந்த மனுஷ்ய அதமர்கள் எள்ளுப் புண்ணாக்கு, கஞ்சா, முள்ளங்கி, பீர்க்கு, கோவைக்காய், சுரைக்காய், பில்வக்காய் இவைகளை உண்கிறார்களோ அவர்கள் மனையில் மூதேவி குடிபுகுவள்; தரித்திரம் நிலவும்.

6) ஏகாதசி உபவாசத்தினாலே சமஸ்த பாபமும் நசித்துப் போம்.

7) எந்தப் பிராமணர்கள் விஷ்ணு பக்தியில்லாமல் இருக்கிறார்களோ அவர்கள் சண்டாளனைக் காட்டிலும் அதமனென்று சொல்லப்படுவார்கள். அவர்களுடைய சம்பாஷண ஹஸ்த பரிசங்களைத் தொடக்கத்திலேயே விலக்கக்கடவது.

8) அஷ்டாக்ஷர மகா மந்திரமானது உத்தாரகப்பிரமம் என்று சொல்லப்படும்.

9) ராமா வென்கிற திருநாமமானது சகஸ்ர நாமங்களுக்குச் சமானமாகச் சொல்லப்படும்.

“ராமாய ராம பத்ராய ராம சந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய சீதாயா: பதயே நம:

—என்ற இந்த மந்திரத்தைப் பாராயணம் பண்ணினவன் சகல பாபங்களினின்று விடுபட்டு ஸ்ரீ விஷ்ணு லோகத்தையடைவன்.

10) பிருகுமுனிவர் சாபத்தினாலே சிவனுக்குச் சம்பவியாநின்ற லிங்க ரூபமானது ஸ்ரீ ராமனுடைய கராரவிந்த ஸ்பரிசத்தினாலே மகா மனோக்கிய ரூபமாகவாயிற்று.

11) சமஸ்த தேவதைகளுக்கும் மாதா பிதா ஸ்ரீ ஜனார்த்தனர்.

12) வியாசர் வேதமாகிய மகா விருக்ஷத்தினுடைய சாகைகளைக் கண்டு அவைகளுடைய சிக்கைப் பற்றறப் பரிகரித்தார்.

13) வேதியர்கள் வேதத்திலே புருஷ சூக்தம் சொல்ல பிராமண ஸ்திரீகள் மங்களம் பாட, பூவைசியராகிய வேளாளர் மகுடமேந்தி நிற்க, அதனை வாங்கி வசிஷ்டர் ராமருக்கு மகுடஞ் சூட்டி அபிஷேகஞ் செய்தார்.

14. பாண்டவர் ஐந்துபேரும் கிருஷ்ணனுடைய பஞ்சப் பிராணன்கள்.

15. மனதினில் தோன்றுகின்ற எல்லா இச்சைகளையும் அறவிடுத்து ஆத்ம ஞானத்தினாலே சந்தோஷித்துக் கொண் டிருப்பவன் ஸ்திதப்ரஜ்ஞன்.

16. ஞானயோகிகள் அர்ச்சிராதி மார்க்கத்திற் சென்று மோக்ஷமடைவார்கள். கர்மயோகி தூமாதி மார்க்கத்திற்சென்று திரும்பி வருவன்.

17. தர்ம அதர்மங்களை யறிதற்குச் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களே பிரமாணங்கள்.

18. சர்வ தர்மங்களையும் அனுஷ்டித்துக்கொண்டு அவற்றிலே கர்த்ருத்வம் விட்டுச் சகலத்துக்கும் பகவானே கர்த்தா என்று கொண்டு அந்தப் பகவான் ஒருத்தனையே சரணமாகப் பற்றினால் அவன் நம்மைச் சகலபாவங்களினின்றும் விடுவித்து மோக்ஷமளிப்பன்.

19. எம்பெருமான் பிராட்டிக்கு நித்திய விபூதியில் திருமந்திரம் துவயம் சரமசுலோகம் வராகசுலோகம் இவைகளைச் சாதிக்க, அவற்றைப் பிராட்டி சேனைமுதலியாரைச் சீடனாக்கிக் கொண்டு உபதேசிக்க, அந்தச் சேனைமுதலியார் லீலா விபூதிக்கு வந்து, தென் திசையில் திருவழுதி வளநாட்டில் குருகாபுரியில் திந்திரிணி விருக்ஷத்தின் கீழ் (புளியமரத்தின் கீழ்) எழுந்தருளி யிருந்த விஷ்ணுவின் அம்சமான சடகோபனென்னும் நம்மாழ்வாருக்கு அவற்றையுபதேசித்தார். அவராலே மதுரகவி ஆழ்வார் முதலாகத் தொடங்கி ஸ்ரீமந் நாதமுனிகளாலே ஓரான் வழியாக ஆசாரியர்கள் மூலம் இந்த மந்திர விசேடங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

20. திரிபாத் விபூதியானது நித்தியமாயிருக்கும். லீலாவிபூதி யானது அநித்தியமாயிருக்கும்.

21. ஸ்ரீ மகாலக்ஷ்மியானவள் பூதேவியாயும் நீளாதேவியாயும் சொல்லப்படுவதுண்டு.

22. விஷ்ணுவினுடைய மார்பிலே ஸ்ரீமகாலக்ஷ்மியானவள் அக்கினியிலே பிரபையானது போலே நித்தியமாயிருக்கிறாள்.

23. ஜகத்தினுடைய சிருஷ்டி ஸ்திதிலயங்களுக்குக் காரண மான லீலையானது யோக நித்திரையெனப்படும்.

24. பரமபதத்தைபடைந்து திரும்பாமலிருக்கின்ற படியி னாலே மோக்ஷமென்று சொல்லப்படுகிறது.

25. ஆத்மானுபவத்தினாலே உண்டாகின்ற ஆனந்தம் கைவல்ய மோக்ஷம் எனப்படும். அதனில் அற்ப புத்தியுடைய பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் மகாத்துமாக்களாயிருப்பவரோ பரமாத்மானுபவ ஞானப் பிரதமான பரமபதத்தையடைகிறார்கள்.

26. நித்தியமான பரமபதத்தைத் துவயமந்திர நிஷ்டர் களான பாகவதர்கள் அடைவார்கள்.

27. ஆகாசத்தினின்று வாயுவும் வாயுவினின்று அக்னியும் அக்கினியினின்று ஜலமும் ஜலத்தினின்று பிருதுவியும் உண்டாயின.

28. தேவர் மனிதர் திர்யக் தாவரம் என்று நாலுவித சாதியும் பகவானாலே சிருஷ்டிக்கப்பட்டன.

29. வியூகம்: வாசுதேவ பிரத்யும்ந சங்கர்ஷண அநிருத்தர் என்ற நான்கு நிலைகளாகும். இந்த நான்கு வியூகமூர்த்திகளின் இருப்பிடம் - ஸ்ரீவைகுண்டம், விஷ்ணுலோகம், சுவேதத்தீபம், க்ஷீரசமுத்திரம்.

ஸ்ரீவைகுண்டத்திலேயிருக்கும் பட்டணம் - அயோத்தி, விஷ்ணு லோகத்திலேயிருக்கும் பட்டணம் - துவாரகை, சுவேதத் தீபத்திலேயிருக்கும் பட்டணம் - அயிராவதி. க்ஷீரசமுத்திரம் - கூப்பீடு கேட்கும் இடம். அதாவது, தேவர்களுக்கு அபயப்பிர தானம் பண்ணி, ராக்ஷஸர்களைச் சங்கரிக்கும் பொருட்டும் ஜகத்தை ரக்ஷிக்கிறதின் பொருட்டும் பிரசன்னராய் எழுந்தருளி யிருக்கும் இடம்.

"பிரத்யும்நமூர்த்தியின் அம்சம் - பிரமன். சிருஷ்டி. சங்கர்ஷண மூர்த்தியின் அம்சம் - ருத்திரன் - சங்காரம். அநிருத்த மூர்த்தி - ஸ்திதி.

30. பகவானுடைய நாமோச்சாரண மாத்திரத்தினாலே பரமபதத்தையடையலாம்.

31. பிராமணனானவன் வலது தோளிலே சுதரிசனத்தையும். இடது தோளிலே சங்கத்தையும் தரிக்கக்கடவன். இது சமாச்ரயணம் எனப்படும். சுதரிசன சக்கரமானது பிராம்மண்ய சித்தியின் பொருட்டும், திருமந்திர சித்தியின் பொருட்டும், ஞானசித்தியின் பொருட்டும், மோக்ஷத்தின் பொருட்டும் தரிக்கத் தக்கது.

32. வைஷ்ணவமானது பரசியம் என்றும் (explicit) ஆப்பியந்தரம் என்றும் (internal) இரண்டு விதமாகச் சொல்லப்படும்.

33. சமாச்ரயணம் செய்துகொள்வது பிரதம வைணவமாகச் சொல்லப்படுகிறது.

34. ஊர்த்வ புண்டரம் இல்லாத சரீரம் பார்க்கத்தக்கதன்று: அது மசானத்துக்குச் சமானமாயிருக்கிறது. (மசானம் - சுடுகாடு.)

35. விஷ்ணுவினுடைய சாலோக்கியம் சாயுஜ்யம் என்கிற பதவிகளின் சித்தியின் பொருட்டு ஸ்ரீசூர்ணத்தோடே கூடிய ஊர்த்வ புண்டரத்தைத் தரிக்கக்கடவன்.

36. நாசிகர மூலத்தில் ஆரம்பித்து நெற்றிநுனி பரியந்தம் புருவங்களுடைய மத்தியத்தைப் பற்றி மிருத்திகையினாலே (திருமண்ணினாலே) ஊர்த்வ புண்டரத்தைத் தரிக்கக்கடவன். ஊர்த்வ புண்டரம் பாதமில்லாமல் இடக்கூடாது; அங்குலியினால் (விரலினால்) இடப்படல் வேண்டும்.

37. பிராம்மணர்களும் பிரபந்நர்களும் துவாதச (பன்னிரண்டு) ஊர்த்வ புண்டரங்களைத் தரிக்கக் கடவர். தரிக்கும்போது அந்தந்த ஊர்த்வ புண்டரத்திற்கேற்பட்ட பகவன் மூர்த்தியைத் தியானம் பண்ணித் திருமந்திரத்தினாலே தண்டஞ் சமர்ப்பித்துத் தரிக்கக்கடவர்.

38. விஷ்ணுவினுடைய ஆராதன யோக்கியமான ஸ்தானங்கள் - ஸ்தாபனமென்றும் ஸ்வயம் வியக்தம் என்றும் இரண்டு விதமாயிருக்கும்.

39. சாளக்கிராம சிலையிலே ஆராதிக்கிறதானது மகா முக்கியமான ஆராதனம் என்னப்படும்.

40. சகலமானவர்களுக்கும் மானசீக ஆராதனம் செய்தற்கெளிது.

41. புஷ்ப கந்த அக்ஷதைகளாலே திருவாராதனம் பண்ணக் கடவன்.

42. கணவன் சாப்பிட்ட பின்புதான் அவன் பத்தினி சாப்பிடக்கடவள்.

43. பகவதாராதனத்தைக் காட்டிலும் பாகவதாராதனமானது மிகவும் முக்கியம்.

44. எந்த வைஷ்ணவன் திருமந்திரத்தை நன்றாக உபதேசம் பண்ணுகிறானோ அவனே ஆசார்யனாகத் தக்கவன். ஆசார்யன் திருமந்திரத்தையுபதேசித்து, தாஸ்ய நாமமும் சாதிக்கக் கடவன்.

45. திருமந்திரமானது - அஷ்டாக்ஷரம்: அதாவது - ஓம் நமோ நாராயணாய.

46. நாராயணனே பரப்பிரம்மம், நாராயணனே பரதத்துவம் என்று வேதங்கள் ஸ்தோத்திரம் செய்கின்றன.

47. துவயமந்திரமாவது: ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே - ஸ்ரீமதே நாராயணாய நம: - என்பது. இது மந்திர ரத்தினம் எனப்படும்:

48. சரமஸ்லோகமாவது: ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

49. திருமந்திரம், துவயம், சரமஸ்லோகம் இந்த மூன்றும் ஒருசேர ரகசியத்திரயம் எனப்படும். பிராம்மணனுக்கு ரகசியத் திரயமே அநுசந்தானமாக வேணும்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

உரைநடைப் போக்கு: யானைகோலஞ் செய்து புறப் பட்டாற்போல இந்த நூலின் நடைப்போக்கு. இதிற் பெரும்பாலும் வடசொற்றொடர்கள் இனிய தமிழ்ச் சொற்றொடர்களோடு சேர இணைந்து வைணவ தத்துவக்கருத்துக்களை எளிதில் யாவர்க்கும் புரியும்படி யமைத்து மிளிர்கின்றது இந் நூலிற் பயில வருவோர் ஒருவர்க்கொருவர் சம்பாஷிக்கும்போது அடிக்கடி விளித்து விளித்துப் பேசுகின்ற நடைத்திறன் நல்லுபதேசஞ் செய்யவெழுந்த இந்நூலுக்கேற்ப அமைந்திருத்தல் பாராட்டத் தக்கது. உதாரணமாக பிராட்டி! சுபகரையே! இஷ்டையான கமலாசனி! என்று இவ்வாறாக ஸ்ரீ மகாலக்ஷ்மியை விளிக்கின்ற விளிகளும் பகவானே! பிராணநாயகரே! புருஷோத்தமரே! என்று இவ்வாறாக விஷ்ணுவை விளிக்கின்ற விளிகளும் அவரவர் களுடைய சிரேயஸைக் காட்டுவனவாகும். கூறியது கூறல் என்ற குற்றம் கலசாது. ஏனெனில் விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும். மற்றும், வாக்கியங்கள் மிகவும் நீளப்போகும்படி யமைத்து வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் விரவி வரும்படி செய்திருக்கும் பான்மை— "குருபரம்பரா பிரபாவம்" கூறவந்த இந் நூலுக்கேற்ப அதன் பெருமையை

ஒளிவிடச் செய்யவேயாகும். மற்றும், படிப்போருடைய உள்ளத்தைக் கவர்ந்து, சொற்போக்கை அனுபவிக்கச் செய்வ தோடு ஒருபுடை மணிப்பிரவாள நடையின் சீர்மையையுணர வைக்கிறது. [குறிப்பு: ஈண்டு ஒரு விடயம் கவனிக்கத்தக்கது. குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில் "வாலவிருத்த குமார னெனச் சில வடிவுகொண்டு நின்றாய்" என்று தொடங்கும் பாடலில் பின்னிரண்டடிகளில்:

பாலலோசன! பாநுவிலோசன!
பரமலோசன! பக்தசகாய!
மாகாலகால! திரிசூல! கபால!
ஏகம்ப! சாம்ப! கடம்பவனேசனே!

என்று பாடியுள்ளார். இதனால் மேன்மையுயர்வு ஏற்படுமேயன்றி தாழ்வு ஏற்படாது. குலசேகரரும் தமது பெருமாள் திருமொழியில் ஸ்ரீ ரங்கநாதனது ஸேவையை ஆஸம்ஸித்தபோது "அந் தமிழினின்பப்பாவினை அவ்வடமொழியை" என்று அரங்க நகரப்பனை உருவகிக்கின்றார். ஈண்டு அகரச்சுட்டு பிரசித்தியைக் காட்டுகிறது. "செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி" (திருநெடுந்தாண்டகம், 4) "தென் சொற்கடந்தான் வடசொற் கலைக் கெல்லைதேர்ந்தான்" (கம்பராமாயணம்), "வடகலை தென்கலை பலகலையும்பொலி மதுரை வளம்பதியே" (மதுரைக் கலம்பகம்) இந்த மகான்களின் வாக்குகள் இந்த மணிப்பிரவாள நடைக்கு அரணாகுவது காண்க.] இது வைணவ சமய நூல் களின் செவ்விய தத்துவங்களை நன்கு விளங்கச் செய்வதற்கென ஏற்பட்ட நடையாகும் என்பதும் தெரிய வருகிறது.

இந் நூலைப் பனையேட்டில் எழுதிய ஆசிரியரைப் பற்றிய குறிப்பு.

இந் நூலாசிரியர் பரசுராம பராங்கு சதாசர் என்பவர். வடகலை தென்கலை இரண்டிலும் ஈடுபாடுடையவர் எனத் தெரிகிறது; அகோபில மடத்தாருடைய திருமுடிவர்க்கம் செய்பல் காஞ்சிப் பேரருளாளன் ஸந்நிதி வருணனை, வேதாந்த தேசிகரைப் பற்றிய குறிப்புக்கள் இவற்றைக் கொண்டு நோக்குவோமானால் இவருடைய வடகலை யீடுபாடு புலனாகும். மற்றும் இவரது ஆசார்யர் கச்சகி கடாம்பி வேதாந்த தேசிகன் என்பவர் (அட்டவணை செய்யுள் - 1) ஆனால், இவர் தாம் பனையேட்டில் எழுதிய குரும்பரை நுவலும் இந் நூலை ஸ்ரீ வான மாமலை ஜீயரிடம் காட்டி ஆசீர்வதிக்க வேண்ட, அவர் இதற்குக் "குருபரம்பரா—சர்வார்த்த சார பூஷணம்" என்று நாமகரணஞ் சூட்டிப் பணிக்கப்பட்டமை, ஊர்த்துவபுண்டர தாரணத்தில்,

"பாதமில்லாது திருமண் இடக்கூடாது" என்று குறித்துள்ளமை, பராங்குசதாஸன் என்று தாஸ்யநாமம் கொண்டுள்ளமை "உலகினையளந்தவருடைய பாதமே கதி" (பக்கம் : 203) என்று காஞ்சியிலுள்ள உலகளந்த பெருமாள் திருவடிகளிலே சரண் புகுந்தமை - இவற்றினைக் கொண்டு நோக்கின் இவரது தென் கலையீடுபாடு விளங்கும். ஆக, இவர் தென்கலை பாகவத சிகாமணியாக இருக்கவேணும். எங்ஙனாயிலும் இருகலையாரா லும் போற்றப்படும் தகுதியுடையர்.

## நன்றியுரை

பல திறப்பட்ட வைணவ தத்துவங்களையும் தன்னகத்துக் கொண்டுள்ள இவ் விழுமிய நூலைப் பனையேட்டிலிருந்து ஏடுபடுத்திப் பரிசீலனை செய்து பதிப்பிக்கும்படி உள்ளங் கொண்டு அப் பணியில் அடியேனைப் பணித்த மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தார்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஐயரவர்களின் ஆசியின் பலமும், அடியேனுக்குஞானாசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீவைஷ்ணவத்தின் பூஷணம் ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அவர்களின் அருளாசியின் பலமும் துணைபுரிய இந் நூலைப் பரிசோதித்து எழுதிப் பதிப்பிக்கத் துணிந்தேன். சுருங்கக் கூறின், இந் நூல் வைணவத்தின் கருவூலம். வைணவர்களுக்கு வைத்த மாநிதி.

முடிவாக, வைணவனாகிய அடியனை இந்நற்பணியிற் கூவியேவல்கொண்ட பிரம்மஸ்ரீ. க. சுப்பிரமணிய ஐயர் அவர் களுக்குத் தலையல்லால் கைம்மாறிலேன்.

திருமகள் கொழுநனான திருமால் தனது வைணவங் கூறும் இந் நூலில் அடியேனுக்கு மனம் பதியுமாறு செய்து பதிப்பித்து வெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத் தோன்றாத் துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்திலீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

வாழி பதின்மருட னாண்டாள் மதுரகவி
வாழிய நாதன்முத லாமறையோர்—வாழி
ஒருக்கோல ரைநெருக்கி யோட்டுமெதி ராசன்
திருத்தாள் வணங்கினார் சீர்.

சுக்ல ஹு
தை மீ, 8-உ
21-1-1990

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசார்யர்
பதிப்பாசிரியர்

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 50 | 33 | பிராமனாணனவன் | பிராமணனானவன் |
| 75 | 36 | அகங்காரமென்றும் | அகங்காரமொன்றும் |
| 75 | 36 | சூட்சும | தூலசூட்சும |
| 76 | 4 | சதுர்முகனாவன் | சதுர்முகனானவன் |
| 77 | 6 | அமிந்து | அமிழ்ந்து |
| 80 | 26 | வாருமென்று | வாங்கிவாருமென்று |
| 82 | 3 | கற்பிக்கலாது | கற்பிக்கலாகாது |
| 85 | 14 | சோமதமா | சோபிதமா |
| 95 | 27 | இறங்கிய | இறங்கிப் |
| 107 | 7 | கியேன் | கிறேன் |
| 110 | 18 | சிந்நித்துக் | சிந்தித்துக் |
| 111 | 32 | போதிக்கிற | பேதிக்கிற |
| 113 | 2 | முடி | மூடி |
| 115 | 33 | சிவனைக் | சீவனைக் |
| 120 | 24 | ஞானோந் | ஞானேந் |
| 121 | 28 | மாகவானாகிலும் | மாகவாகிலும் |
| 123 | 28 | கர்மோயகம் | கர்மயோகம் |
| 124 | 22 | ஐன்மங்களும் | ஜன்மங்களும் |
| 124 | 24 | யடையவன் | யடைவன் |
| 124 | 26 | ஞானபசு | ஞானதபசு |
| 127 | 26 | பேர்கன் | பேர்கள் |
| 132 | 36 | நிக்கரகஞ் | நிக்கிரகஞ் |
| 134 | 28 | திரிகுணடியமான | திரிகுணமடியான |
| 136 | 4 | யஜ்ஞாத்தோடு | யஜ்ஞத்தோடு |
| 138 | 12 | உத்ராயண | உத்தராயண |
| 138 | 14 | துமாபிமான | தூமாபிமான |
| 140 | 4 | அச்ரயித்துப் | ஆச்ரயித்துப் |
| 140 | 26 | ஆயவும் | ஆயுவும் |
| 144 | 9 | பிறஹஸ்பதி | பிரஹஸ்பதி |
| 147 | 3 | பரிதபீக்கப் | பரிதபிக்கப் |
| 153 | 40 | கர்வ | சர்வ |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 158 | 24 | தேசி | தேகி |
| 159 | 27 | தேவாசிர | தேவாசுர |
| 160 | 37 | சுத்துரு | சத்துரு |
| 160 | 39 | அருபவி | அனுபவி |
| 161 | 31 | சுருதியிஸ்மிருதி | சுருதிஸ்மிருதி |
| 161 | 34 | பாரத்தில் | பாரதத்தில் |
| 167 | 8 | ஈசுவரின் | ஈச்வரன் |
| 167 | 13 | பஹ | பஹு |
| 168 | 12 | மானமால் | மானமாய் |
| 169 | 4 | ஆசரிக்கிரத்தினும் | ஆசரிக்கிறதினும் |
| 169 | 4 | சுவத | சுவ |
| 176 | 24 | ஸ்ரீ கிருஷ்ணனைக் | ஸ்ரீ கிருஷ்ணனைப் |
| 186 | 21 | மனிரத்தின | மணிரத்தின |
| 186 | 32 | கேதனர் | சேதனர் |
| 187 | 16 | கேதன | சேதன |
| 187 | 22 | வளியாய் | வழியாய் |
| 195 | 31 | தைவல்யம் | கைவல்யம் |
| 202 | 11 | மகதாநி | மகதாதி |
| 202 | 19 | அதந்ப் | அந்தப் |
| 205 | 16 | நான | னான |
| 206 | 2 | ஜனார்த்தன | ஜனார்த்தன |
| 208 | 13 | சுக்கர | சுககர |
| 215 | 2 | யுடையவளாய் | யுடையவாளாய் |
| 227 | 26 | வியக்கத்திலே | வியக்தத்திலே |
| 230 | 19 | பிரபத்தி | பிரதிபத்தி |
| 234 | 38 | வருவிட்டு | வழிவிட்டு |
| 235 | 39 | பளவார | பரிவார |
| 242 | 37 | ரூபமாயுனம் | ரூபமாயும் |
| 242 | 39 | சேஷமன்று | சேஷம் |
| 244 | 34 | சேதனானவன் | சேதனனானவன் |
| 251 | 15 | சமபூர்ணம் | சம்பூர்ணம் |

ஹரி: ஓம்

# குருபரம்பரா சர்வார்த்தசார பூஷணம்

## கா ப் பு

## பொதுத் தனியன்கள்

### மணவாள மாமுனிகள் தனியன்.

ஸ்ரீ சைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணர்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

### குருபரம்பரையின் தனியன்.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்

### எம்பெருமானர் தனியன்.

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணயமேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்யசரணௌ சரணம் ப்ரபத்யே.

### நம்மாழ்வார் தனியன்.

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்யந;குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

### ஆழ்வார்கள் உடையவர் தனியன்.

பூதம்ஸரஸ்யமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

## பெரியாழ்வார் தனியன்.

குருமுகமநதீத்ய ப்ராஹவேதாநசேஷாந்
நரபதிபரிக்ல்ப்தம் சுல்கமாதாதுகாம:
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

## திருப்பல்லாண்டு.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா! உன்
செவ்வடிசெவ்வி திருக்காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

## திருவாய்மொழித் தனியன்.

(நாதமுனிகள் அருளிச்செய்தது)

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோபவாங்மயம்
ஸஹஸ்ரசா கோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

## திருமாலை.

பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிரயான்போய் இந்திரலோகம்ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே!.

(பாசுரம்-2)

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

## இராமானுச நூற்றந்தாதி.

பொருந்தியதேசும் பொறையும்திறலும் புகழும் நல்ல
திருந்தியஞானமும் செல்வமும் சேரும் செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினல் வந்தெடுத்தளித்த
அருந்தவன் எங்களிராமானுசனை யடைபவர்க்கே

(பாசுரம்-32)

எம்பெருமானர் திருவடிகளே சரணம்.

## சாத்துமறை.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ்நூல் வாழ—கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ மணவாள மாமுனியே!
இன்னுமொரு நூற்ருண் டிரும்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

## பூர்வார்த்தம்:
## குருபரம்பரை நூல் அட்டவணை.

### நூலாசிரியர் ஊரும் பேரும் கூறல்.

பூமாது வாழ்மார்பன் அடியார் குழாங்களிப்
புவிதனி லுகந்து காணப்
புனிதமா மிக்குரு பரம்பரையை யனைவரும்
போதவே யெளிதிலறியத்
தேமாலை சூழ்நின்ற சிறுகரும்பூரெனும்
திருப்பதியின் மேவி வாழ்வோன்
சீர்பெறு மயோத்தியினி ராமகோத் திரமதிற்
றிங்களென வந்துதித்தோன்.
காமாதி யரிவர்க்க முக்குறும் பவைகளைக்
கடந்த கல்யாண நிதியாம்
கச்சிக்கடாம்பி வேதாந்த தேசிகனினிய
கருணைக் குகந்த பாத்திரன்
பாமாலை பண்ணியே திருவாசகப் பதினெண்
ணுயிரப் படியதாகப்
பகர்வித்தனன் **பரசுராம** ணுகிய
**பராங்குசதாச** பாகவதனே. (1)

### நூற்பெயரும் அளவும் கூறல்.

சகலவித கிரந்தங்க ளுட்பொருள்க ளியாவையுஞ்
சான்ருேர்க ளீட்ட முடனே
தானு முகந்துகொண் டாராய்ந்து நோக்கியே
தத்துவார்த்த சார மெல்லாம்
பகலவ ஞெளிக்கு நிகரான மெய்ஞ்ஞானமும்
பத்தியு மிசைந்து கொண்டே
பகருமீ ரொன்பதா யிரக்கிரந்த மாக்கினன்
பார்த்தசா ரதிப் பதியிலே
புகலவே சகலவினை யகலுமிப் பொருளையே
புனிதரா ரியருரைக்கப்
பூமகள்பணி வானமாமலை யெதித்தலைவர்
பூரணம தாக நோக்கி
மகிமையுறு **சர்வார்த்த சாரபூஷண** மென்று
மகிழ்ந்து திருவாய் மலர்ந்தே
வளமுடன் திருநாம மதுசாத்தி ஞரிந்த
மண்டலத் தோருய்யவே. (2)

## இருகவிகள்-நூற்பயன்கூறல்.

### வெண்பா.

கருவுடலை நாடுங் கலக்கமெலாந் தீரப்
பரிவுடனே வைகுந்தம் பார்க்கத்—திருவுடனே
ஆரமொன்று மார்ப னடிகாணச் சர்வார்த்த
சாரமொன்று போதாதோ தான். (3)

### கலித்துறை.

ஞானந் தருங்கல்வி தானுந் தரும்நல் லடியவர்தம்
தானந் தருந்தவ முந்தரும் தாரணி தன்னிலென்றும்
ஆனந்த முந்தரு மார்த்தநற் காம மணுகவைக்கும்
வானந் தருமிந்த சர்வார்த்த சாரவண் பூஷணமே. (4)

## நூலின் அளவு-பதினெட்டாயிரப்படி எனல்.

### அளவடி விருத்தம்.

தேனு லாவுஞ் சிறுகரும் பூரில்வாழ்
பான லங்கொள் பராங்குச தாசனே
ஞான சற்குண நற்பெரி யோர்களால்
ஆன பத்துமெட் டாயிர மாக்கினன். (5)

## நூற்சிறப்பு கூறல்.

### நெடிலடி விருத்தம்.

இன்ப மேதரு மிக்குரு பரம்பரை யதனை
அன்ப ரியாவரு மாரியர் தம்முட ஞேக்கித்
துன்ப மேயணு காதிதி லொருசொலைக் கேட்கில்
என்ப ராதலின் மொழிந்தவர் படித்தவர்க் கென்னே. (6)

## நூல் இரண்டு பாகமுடைத்தெனல்.

### சந்த விருத்தம்.

தொண்டர் பண்டு விண்டு சொன்ன சொற்பொருள்க
[ளியாவையும்
கண்டு கண்டி ரைந்தின் மேலெண் ணுயிரக் கணக்குடன்
அண்டர் கண்டெ னத்தி ரண்ட தானசார பூஷணங்
கொண்டி ரண்டு பாகமாய் வகுத்தனர் குணத்தரே. (7)

## நூலின் பூர்வபாகம் நுவலும் பொருள்.

### கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இப்படி வகுத்த பூர்வ பாகமே யின்ப மெல்லாம்
ஒப்பவே கரும யோக மொளிபெறு ஞான யோகந்
தப்பிலாப் பத்தியோகந் தரும்பொரு ளெல்லாஞ் சொல்லி
அப்பனெம் பெருமான் சீர்மை யடங்கலு முரைப்ப தாமே.
(8)

## பத்துக்கவிகள்-உத்தரபாகம் நுவலும் பொருள்.

### இதுவுமது.

உத்தர பாக மான துயர்பிர பத்தி யோகம்
சத்துவ நிஷ்ட ரான தத்தமா சார்யர் செய்யும்
சுத்தமா மபிமானங்கள் துலங்கிய சரம நிஷ்டை
இத்தனை பெருமை காட்டி யின்னமு மியம்பு மன்னே.
(9)

### வேறு.

ஆழ்வார்கள் முன்புள்ள வாரியர்க ளெதிராசன்
அணிவேத முடிதேசிகன்
வாழ்வான பதவியைத் தருகின்ற மணவாள
மாமுனிவ னிவர்க ளெல்லாம்
ஏழ்வான முய்யப் பிரபந்தங்க ளீன்றதும்
இப்புவியின் வாழ்க்கை யெல்லாம்
தாழ்வாக வெண்ணுமிவர் பகவத் குணநுபவ
சாரமு முரைப்ப தாமே. (10)

### வேறு.

மட்டிலா வளர்வான் பொருளது தனையும்
வானவர் தங்களுக் கரிதாம்
எட்டெழுத் திரண்டின் பொருளையுந் தேரினி
லிருந்து நல் விசயனுக் கருளுஞ்
சிட்டர்க ளோதுஞ் சரம சுலோகச்
சீருறு பொருளையும் தெரிய
வட்டமா கடல்சூழ் பூதல மதனில்
வளமுட னுரைக்குமா தவர்க்கே.
(11)

## வேறு.

இன்னமு முத்தர பாகம தோதிய
தென்சொலுவேன் அடியனேன்
மன்னிய பேரிருள் மாண்டவ ராகிய
வளர்தரு மாரியர்கள்
துன்னிய பேரறி வாலுல கோர்களைச்
சூரியரோ டுறவே
உன்னிய கருணையும் அருள்வழி தன்னையும்
ஓதும தோதுமதே.

(12)

## வேறு.

தரணியி லுகங்க டோறும் தயங்கிய வுயிர்கட் கெல்லாம்
அரணெது வென்று நோக்கி யரிமல ரடியின் மீதே
சரணெனத் திருவு மோதத் தருந்திரு மந்தி ரத்தை
இரணிய பிரமபிங் கையார்க் கீந்தவா றுரைக்கு மாதோ.

(13)

## வேறு.

சேனையர் கோனு மாற னிடத்திற் சிந்தை மகிழ்ந்துதவ
ஞானியர் கோனு நாத முனிக்கு நயந்துதரக் குருவாய்
ஆனவர் பின்பு வளர்த்தா ரிப்படி யம்புவி யுய்ய வெனத்
தானது கண்டெதி ராசர் விளைத்திடு தத்துவ மோதுமிதே.

(14)

## வேறு.

திருமால் முதலோ ரான்வழியாய்வரு திருமந்திரமதனை
இருமா நிலமா தவமோ வறியேன் எதிசே கரகுருவே
வருமா தவனென வேழ்பதி னுலவர் வசந்தர வவருலகை
ஒருமா லடியேந் தியவா றுகந்தும் புகழ்ந்துங்
கொண்டோதுமிதே.

(15)

பரசம யங்கள் பறந்திட விட்டுப் பரத்துவ மோங்கியிட
வருசம ணகல நான்மறைச் சிகர நனிதிர மாகவுற
வரிசையொ டுந்திரு மால்பதி யெங்கும் வளர்ந்திட எதிராசன்
அரசுசெ லுத்திய பெருமை நடந்த தடங்கலு மோதுமிதே.

(16)

## வேறு.

பின்புள்ள வாரியர்கள் பெருமையும் மறைமுடித்
தேசிகன் பெருமை தானும்
மன்பிள்ளை லோகா சாரியன் மகிமையும் மணவாள
மாமுனிவர் தம்
அன்புள்ள மகிமையுடன் அவரவர் கிரந்தங்க
ளருளிய பெருமை தானும்
இன்பமுற சர்வார்த்த சாரபூ ஷணமென்னு
மிதுவோது மிதுபோ துமே. (17)

ஆழ்வார்க ளாரியர்கள் அவதார மகிமையுடன்
அவரவர்க ளாண்டு நாளும்
ஏழ்வா னிலும்புவியி லுந்தமர்கள் கொண்டாட
வீன்ற பாமாலை யாவும்
தாழ்வான வெம்போ லியர்க்குமிப் புவியிலவர்
தந்தமெய்ஞ் ஞான நிலையும்
வாழ்வான வைகுந்த நாட்டுக் கெழுந்தருளும்
மகிமையு முரைப்ப தாமே. (18)

## வேறு.

## நூலின் மகிமை கூறல்.

மன்னுபுகழ் ஆழ்வார்கள் ஆரியர்க ளிவர்கள்பெரு
மகிமை யெல்லாம்
முன்னவர்க ளருளியநூல் பெருங்கடல்போல் எளியவர்க்கு
முடிவிலா தால்
பன்னவரு மப்பொருளைத் திரட்டியெவ ருங்காணப்
பார்மீ தோங்கிடத்
துன்னுபுகழ் சர்வார்த்த சாரமதி லெல்லோர்க்குந்
தோன்று மாதோ. (19)

## வேறு.

அனந்தங்கள் வேதங்க ளாகிலும் சாத்திரம்
அனந்தங்க ளான போதும்
மனந்தந்த மந்தப் பொருட் கவலையா
லொன்ற வாராது கண்டலறியே
தனந்தந்த தில்லொன்றைப் பிடித்தொன்றை நாடித்
தவிக்கின்ற பேர்க் கெளிதிலே
கனந்தந்த மெய்ஞ்ஞான யோகிக்கு மெட்டாத
கதியின்வழி யிதுகாட் டுமே. (20)

பலகலையி னுட்பொருளை யாராய்ந்து பார்த்திடினும்
பார்மீ தெல்லாம்
சலமதியைத் தருமெனவே முன்னோர்கள் சாதித்த
தன்மை யாலே
நிலைமையுட ஞரியர்கள் அருளியநற் பொருள்வழியின்
நெஞ்ச முள்ளோர்
உலகுபுகழ் வைகுந்த நாடதனி லொளிபெற வாழ்ந்
துறைவர் தாமே.

(21)

## வேறு.

ஆரா வமுதென மூவா ருயிர மாமாலை
பேரா யிரமுள நாரா யணனடி பேராதே
சீரா ராரிய ராரா ரோவவர் சீராலே
ஓரா தவர்பா ராதவர் பரகதி யுளதாமே.

(22)

## வேறு.

வேதந் தெரிந்தென்ன வேதாந்த மோதி விளங்கிலென்ன
போதந் தெரிந்தென்ன பூவலஞ் செய்தென்ன புண்ணியத்தின்
பேதந் தெரிந்தென்ன கல்விகள் யாவையும் பேசிலென்ன
வேதந் தெரிந்திந்த சர்வார்த்த சாரமில ரிலரேயாவார்.

(23)

## வேறு.

சாதியும் மேன்மையும் தனமும் பூமியும்
மாதரும் மைந்தரும் மனையும் வாழ்க்கையும்
சீதரன் சேவடி சேரக் காட்டுமே
ஓதுமித் தமிழையெப் போது மோதுமே.

(24)

## வேறு.

நீடிய தரும முண்டாம் நீதிநன் னெறியுங் காணும்
தேடிய பொருளுங் கூடும் திருமக ளருளுஞ் சேரும்
ஆடிய பிறவி யோயும் ஆறுமூ வாயி ரத்துட்
கூடிய பொருளி லொன்றைக் குணமுடன் கூறு வோர்க்கே.

(25)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# பூர்வார்த்த சாரசங்கிரகப் பொருள் அட்டவணை

முதலாவது பரத்துவ நிரூபண மகத்துவமும், இரண்டாவது அஷ்டாங்க யோகக்கிரமமும், மூன்றுவது க்ஷீராப்தி மதனம்பொருட்டுக்கமட மாவதான மகாத்துமியமும், நாலாவது க்ஷீராப்தி மதனத்தில் ஸ்ரீ மகாலக்ஷ்மி அவதாரமும், ஐந்தாவது ஏகாதசி மகாத்துமியமும், ஆறுவது துவாதசி மகாத்துமியமும், ஏழாவது பாஷாண்டகண்டனமும், எட்டாவது மாயாவாதி கண்டனமும், ஒன்பதாவது சாத்துவீக ராசத தாமசவிவரணமும், பத்தாவது பிருகு மகரிஷியினுலே பரத்துவசோதனையும் பதினேராவது ஷாட்குண்ணிய பரிபூரணரான பகவானுடைய அவதாரக்கிரமங்களும், பன்னிரண்டாவது சீராமாவதார மகாத்துமியமும், பதின்மூன்றுவது ராமகிருஷ்ணுவதார மகாத்துமியமும், பதினுலாவது பாண்டவர்கள் பிறந்து ராஜசூயயாகம் பண்ணினபெருமையும், பதினைந்தாவது பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் அன்னியோன்னிய கலகங்களாய் சூதாடிப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அக்கியாத வாசமும் பண்ணினதும், பதினுறுவது பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரைத் துரியோதனன் பக்கலில் தவுத்தியத்துக்கு அனுப்பினதும், பதினேழாவது பாரத யுத்தத்தில் உபைய சேனைக்கு நடுவே தேர்த்தட்டில் யுத்தம் பண்ணமாட்டோமென்று சோகித்து விழுந்த அர்ச்சுனனை ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்து மார்போடே அணைத்துக் **கீதா சாஸ்திரம்** பதினேழு அத்தியாயம் தம் வாக்கினுலே சாதிக்கும் போது அதையும் அனுஷ்டித்துக் கடைத் தேறவல்லனல்லோமென்று மறுபடியும் தேர்த்தட்டில் சோகித்துவிழுந்த அர்ச்சுனனுக்கு மோக்ஷார்த்தமான பதினெட்டாமத்தியாயத்தில் சரமசுலோகத்தைப் பூர்வார்த்தம் உத்தரார்த்தமாகச் சாதித்து அவன் சோகத்தைத் தீர்த்துப் பின்பு அர்ச்சுனனை யுத்தத்துக்கு ஆயத்தப் படுத்தினதும், பதினெட்டாவது பாரதயுத்தம் பண்ணிப் பாண்டவர்கள் கவுரவர்களைச் செயித்தபெருமையும்

பத்தொன்பதாவது அஸ்தினுபுரத்தைத் தர்மராசாவுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் பட்டாபிஷேகம் செய்வித்த பெருமையும், இருபதாவது கண்ணுவ மகரிஷி சாபத்தால் வந்த ஏதுவினுலே துவாரகையில் அன்னியோன்னிய கலகம் தங்களுக்குள் தானே உண்டாகத் துவாரகையிலுள்ளவர்களுடனே ஸ்ரீ கிருஷ்ணர் பரந்தாம யாத்திரையாய் ஸ்ரீ வைகுண்டத்துக்கு எழுந்தருளினதும், இருபத்தோராவது ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ வைகுண்டத்துக்கெழுந்தருளினபின்பு, வியோகமாகிய விஷ்ணுலோகத்தில் சுவேதத்தீவில் பெரிய பெருமாளுடன் எழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியார் சேதனவர்க்க ரக்ஷணர்த்தத்தின் பொருட்டுத்தன்னுடைய திவ்விய திருஷ்டியினுலே சொர்க்க மத்தியபாதாள மூன்று லோகங்களையும் பாரதத்தில் சைத்திர வைசாக மாசத்தில் காயப்பட்ட சூரிய கிரணத்தில் மணலிலகப்

பட்ட கிருமி கீடாதிகள் வெய்யில் பொறுக்கமாட்டாமல் எப்படிப் பதைத்துத் தபிக்குமோ அப்படிப் போலொத்ததன் புத்திரர்களாகிய சீவாத்துமாக்களைக்கண்டு தேசாந்தரகதனு யிருக்கப்பட்ட புத்திரன் பக்கலில் மாதா பிதாக்களுடைய இருதயம் கிடக்குமாபோலே தன் புத்திரர்களாகிய சேதனர்கள் தன்னடிச்சோதியை அடையும்படி பெரியபெருமாளைப் பெரிய பிராட்டியார் யாசித்த பெருமையும், இருபத்திரண்டாவது பெரிய பெருமாளுக்குப் பெரிய பிராட்டியாரிடத்தில் கிருபை பிறந்து சேதனர்களைக் கடைத்தேற்றும் பொருட்டு விஷ்ணு லோகத்தில் உபதேச பரம்பரையாய் ஏதுவும் சாதித்து அதற்கு மேலும் திரிபாத் விபூதியாகிய பரமபத மகிமை ஓரான் வழியாகச் சாதித்த பெருமையும், இருபத்து மூன்றுவது பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த மகதாதி பூதசிருஷ்டிமகாத்மியமும், இருபத்து நாலாவது பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த வியூகபேத வர்ணமகாத்துமியமும், இருபத்தைந்தாவது பெரிய பெருமாள் பிராட்டியாருக்குச் சாதித்த சுதரிசன மகாத்துமியமும், இருபத்தாறுவது பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த ஊர்த்துவ புண்டர விதியும், இருபத்தேழாவது பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த விஷ்ணு ஆராதனக் கிரமமும், இருபத்தெட்டாவது பெரிய பெருமாள் திருவடிகளைப் பெரிய பிராட்டியார் ஆச்ரயிக்க துவயரத்தினத்தையும் (த்வயம்), மேலும் ஆதி காலத்திலேதானே பதரிகாசிரமத்தில் நர நாராயண அவதாரஞ் செய்து நரனுக்கு ஸ்ரீமத் அஷ்டாக்ஷரியாகிய திருமந்திரத்தை யுபதேசிக்க நரன் நாரதாதி மகரிஷிகளுக்கு உபதேசித்த திருமந்திரத்தையும், அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் சாதித்த சரம சுலோகத்தையும் பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த மகாத்துமியமும், இருபத்தொன்பதாவது பெரிய பெருமாள் நியமனப்படிக்குப் பெரிய பிராட்டியார் திருவடிகளிலே சேனைமுதலியார் ஆச்ரயிக்க அவருக்குத் துவயரத்தினத்தை யுபதேசித்த மகாத்துமியமும், முப்பதாவது பெரிய பெருமாள் நியமனப்படி திருவனந்தாழ்வான் திருக்குருகூரில் திந்த்ரிணி விருக்ஷமாய் அவதரித்ததும், அதற்குமேல் முதல்வனுகிய சர்வேச்வரன்தானே திருக்குருகூரில் பூவைசியகுலத்தில் காரியாராகிய ராசாவுக்கும் அவருடைய தேவியாகிய உடைய நங்கைக்கும் புத்திரராக அவதரித்துச் சடமென்ற மாயையைக் கோபித்தபடியால் சடகோபனென்று திருநாமம் பெற்று அன்னையின் முலைப்பாலருந்தாமல் திருந்த்ரிணி விக்ஷத்தைத் தமதிருப்பிடமாகக் கொண்டு பழமையாயிராநின்ற யாதொரு தமிழானது பிராமணருக்கு உதவாமல் போகும்படிக்கு விசுவகர்மாவினுடைய சாபம் ஒரு காலத்திலே நேரிட்டிருந்தபடியினுலே அந்தச் சாபவிமோசனத்தின் பொருட்டு அகஸ்தியர் ஸ்ரீமன் நாராயணரைத் துதித்துத் தபசு செய்ததில் ஸ்ரீமன்-நாராயணர் பிரத்தியக்ஷமாய் நாமே வந்து அவதரித்துத் தமிழ்ப்பாஷையை நான்கு வர்ணத்தாருக்கும் அனுசந்திக்க யோக்கியமாம்படி செய்கி

ரோம் என்று வரங்கொடுத்திருந்தபடியாலே நாலுவேதத்தையும் ஆறு சாஸ்திரத்தையும், ஸ்மிருதியையும், உபநிடதத்தையும், பதினெண் புராணங்களையும், இதிகாசத்தையும் திராவிடமாகிய ஈரத்தமிழால் சுவை யமிர்தமாகக்கடைந்து ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்ருறு பாசுர மாக்கி மண்பாண்டமாயிருந்த வேதத்தை ஸ்த்ரீ சூத்திராளுக்கு வுதவும்படி யாகச் சொர்ண பாண்டமாக்கிப் பின்னையும் அந்த வேதத்தின் தாற்பரிய மாகிய விசிஷ்டாத்துவைதத்தைச் சகல சேதனர்களும் அறிந்து உஜ்ஜீ விக்கும்படி நாமே செய்கிரோம் என்றும், பின்னையும் லோகமெல்லாம் பிரபத்தி நிஷ்டையை அறிந்து வாழும்படி நாமே அனுஷ்டித்துப் பிரபத்தி நிஷ்டையை ஸ்தாபிக்கிரோமென்றும் பெரிய பெருமாள் பெரிய பிராட்டி யாருக்குச் சாதித்த மகாத்துமியமும் இதுவரைக்கும்

## பூர்வார்த்தம்:

மேலெழுதிய பூர்வார்த்தத்துக்குப் பிரமாணம் மகாநாராயண வுபநிஷத்திலேயும் லக்ஷ்மி தந்த்ர வுபநிஷத்திலேயும், பாகவதத்திலேயும் வராகபுராணத்திலேயும் ஸ்ரீ பாஞ்சராத்திரத்திலேயும் பாத்மோத்தரத்தி லேயும், விஷ்ணுபுராணத்திலேயும், மகாபாரதத்திலேயும், யாக்கிய வல்கியத்திலேயும் இன்னம் அனேகம் பிரமாணங்களிலேயும் காணலாம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானுர் திருவடிகளே சரணம்.

# உத்தரார்த்தம்:

## நுவலும் விஷயங்கள்

## ஆழ்வார்கள் வைபவம்.

(சுருக்கமாக)

### முதலாவது பொய்கையாழ்வார்

பாஞ்சசன்னியாம்சம். இவர் அவதாரஸ்தலம் காஞ்சிபுரத்தில். பொய்கையில் பொற்ருமரையில் அவதரித்தது. காலம் துவாபர யுகத்திலே எட்டு லக்ஷத்து அறுபத்தி ரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்தொன்று சித்தார்த்தி வருஷத்தில் ஐப்பசி மாசத்தில் திருவோண நக்ஷத்திரத்தில். இவர் செய்த கிரந்தம் வையந்தகளி-100.

**இரண்டாவது பூதத்தாழ்வார்.** கதாம்சம். இவர் அவதாரஸ்தலம் திருக்கடல்மல்லை. மாதவிப்பூவில் அவதரித்தது. காலம் துவாபரயுகத்தில் முன்சொன்ன வருஷம் மாசத்தில் நவமி புதன்கிழமை கூடின அவிட்ட நக்ஷத்திரத்தில். இவர் செய்த பிரபந்தம் அன்பேதகளி-100.

**மூன்றுவது பேயாழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் கிணற்றில். கைரவிணி சங்கிரகமான ஜலத்தில் செவ்வல்லி புஷ்பத்தில் அவதரித்தது. காலம் துவாபரயுகத்தில் முன்சொன்ன வருஷம் மாசத்தில் தசமி வியாழக்கிழமை கூடின சதய நக்ஷத்திரத்தில். இவர் நந்தகாம்சம், இவர் செய்த பிரபந்தம் திருக்கண்டேன்-100. இவர்கள் மூவர்களும் யோனிஜரல்லர்.

**நான்காவது திருமழிசையாழ்வார்.** இவருக்கு யுகம் வருஷம் முன் சொன்னதேயாம். தைமாசம் கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமை பானுவாரங் கூடின மகநக்ஷத்திரத்தில் அவதாரம். இவர் அவதரித்தது மஹீஸார க்ஷேத்திரமாகிய திருமழிசையில். இவர் தகப்பனராகிய பார்க்கவரிஷி என்பவர் தீர்க்க சத்திர யாகத்திலே சர்வாந்தர்யாமியான ஸ்ரீமன் நாராயணனையே சத்கிரமமாகப் பஜித்துக் கொண்டிருக்கிற காலத்திலே பார்க்கவருடைய பத்தினி கனகாங்கியம்மாள் கர்ப்பவதியாய், பன்னிரண்டு மாசத்துக்குப்பின்பு அவயவங்களின்றியே பிண்டாக்ருதியாயிருக்கிற அந்தப் பிண்டத்தை அநாதரித்துப் பிரப்பம் புதரின் கீழே வைத்துப் போட்டுப் போய்விட்டார்கள். பின்பு அதே பிண்டாக்ருதியானதை அகில செகன்மாதாவான பெரிய பிராட்டியார் அனுக்கிரகத்தாலே ஸ்ரீ பூமிபிராட்டியார் ரக்ஷிதமாகக் கொண்டிருக்கையில் சர்வேச்வரனுடைய அனுக்கிரகத்தினலே அவயவங்களின்றியே யிருந்த பிண்டம் சர்வாவயவங்களும் பரிபூரணமாய் உண்டாய் அதிலே சீவனுண்டாய்த் தோற்றும்படியாயிற்று, அதன்பின்பு அந்தக்குழந்தையை மற்றவர்களெடுத்து வளர்த்தது. இவர் சக்கராமிசம். இவர்சமணத்திலும் புகுந்தாராய்ந்து விஷ்ணுபரமென்றறிந்தவர். இவர் செய்த பிரபந்தம்—திருச்சந்த விருத்தம் 120. நான்முகன் திருவந்தாதி-96.

**ஐந்தாவது நம்மாழ்வார்.** இவரவதாரஸ்தலம்-திருவழுதி நாட்டில் தாமிரபரணி தீரத்தருகில் திருக்குருகூரென்னும் திருநகரியில். இவர் கவுஸ்துபாம்சம், சேனேசராம்சம், பகவதாம்சம், இவருக்குத் தகப்பனர் பூவைசியராகியகாரியார். தாயார்உடைய நங்கை காலம்-கலியுகம்பிறந்த நாற்பத்து மூன்றும் நாள். பிரமாதி வருஷம் (பஹுதாந்ய என்பதுமுண்டு) வைகாசி மாசம் பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாக நக்ஷத்திரம் கடக லக்நத்தில் அவதரித்தது. திருவனந்தாழ்வான் தானே வந்தவதரித்திருந்த திந்த்ரிணி விருக்ஷத்தைத் தமக்கிருப்பிடமாய்க் கொண்டு, அதில்பத்மாசனத்

துடனே யெழுந்தருளியிருந்த இவ்வாழ்வாரைப் பெருமாளும், பிராட்டி யாரும்கிருபை செய்தருளி, சேனை முதலியாரைக்கொண்டு தாபபுண்ட்ர பஞ்ச சம்ஸ்காராதிகளையும் செய்வித்து மயர்வற மதிநலமருளினதில் இவ் வாழ்வார் மகிமானமடைந்து தயில தாராவத் அவிச்சின்ன ஸ்மிருதி அனு சந்தானத்துடனே இருக்கும்போது இவரை மதுரகவியாழ்வார் வந்தாச் ரயிக்க இவ்வாழ்வாருக்கு அவர்பேரில் கிருபைபிறந்து அவரைக்குளிர நோக்கி, பின்னையும் முன்னுளிலே துவாபரயுகத்தில் சிக்குப்பட்டிருந்த வேதத்தை வியாசரானவர் சிக்கறுத்துப் பிராமணாகளுக்கு அந்த வேதத்தை அப்பியசிக்கவும் ஒருவருக்கு உபதேசிக்கவும் கூடுமென்றும், க்ஷத்திரியர்களுக்கு அதனை அப்பியசிக்கலாமேயல்லாமல் ஒருவருக்கு உப தேசிக்கக் கூடாதென்றும், வைசியாள் அதைச்சிரவணம் பண்ணலாமே யல்லாமல் அப்பியசிக்கவும், உபதேசிக்கவும் கூடாதென்றும், சூத்திராள் அதைச்சிரவணம் பண்ணக்கூடாதென்றும் கட்டளைப்பட்டிருந்த வேதத் தை லோகத்திலுள்ள சீவாத்துமாக்களெல்லாம் அப்பியசித்து உச்சீ விக்கும்படி, வேதமாகிய பாற்கடலைப் பிரணவத்தால் கடைந்து சுவை யமிர்தமாக்கி அந்த வேத தாற்பரியங்களைத் தமிழ்ப் பாசுரங்களாகத் தம்திருவாக்கினுலே அருளிச்செய்தது — திருவாய் மொழி-1102 திருவிருத்தம்-100 திருவாசிரியம்-7 பெரியதிருவந்தாதி-87 இந்தத்திராவிடவேத மென்று சொல்லப்பட்ட திவ்விய பிரபந்தங்களை மதுரகவியாழ்வாருக்கு அருளிச்செய்தார். இதில் திருவிருத்தம்-100-உம் ருக்குவேத ஸாரார்த்தம். பெரிய திருவந்தாதி - 87-உம் எசுர்வேத ஸாரார்த்தம், திருவாசிரியம் - 7-உம் அதர்வணவேத ஸாரார்த்தம், அவாவிலந்தாதி - 1102-உம் சாமவேத ஸாரார்த்தம், சாமவேதத்துக்கு அதிஷ்டான தேவதை ஸ்ரீமந் நாராயணன். எசுர்வேதத்துக்கு அதிஷ்டான தேவதை ருத்திரன்-ருக்கு வேதத்துக்கு அதிஷ்டான தேவதை பிரமா. அதர்வணவேதத்துக்கு அதிஷ்டான தேவதை இந்திரன்.

## நம்மாழ்வார் தனியன்கள்

மையற்ற பூர்வாசாரியர்களால் சாதிக்கப்பட்டன. பின்வருமாறு.

### சுலோகம்

(நாதமுனிகள் அருளிச்செய்தது)

பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோபவாங்மயம்
ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம்.

(ஈசுவர முனிகள் அருளிச்செய்தது)

திருவழுதி நாடென்றும் தென்குரு கூரென்றும்
மருவினிய வண்பொருந லென்றும் - அருமறைகள்
அந்தாதி செய்தா னடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

(சொட்டைநம்பிகள் அருளிச்செய்தது)

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

(அனந்தாழ்வான் அருளிச்செய்தது)

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுச முனிதன்
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற.

(பட்டர் அருளிச்செய்தது.)

வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமநுசன்.

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

(ஆளவந்தார் அருளிச்செய்தது)

மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா.

இவ்வாழ்வார் அவதாரத்துக்குப் பிரமாணம்
அஷ்டாதச புராணங்களிலேயும் காணலாம்.

**ஆருவது குலசேகராழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் மலேயாள தேசத்தில் கொல்லி நகரமென்கிற வஞ்சைக்களம். காலம் கலியுகம் பிறந்த 28 ஆம் வருஷத்தில் மாசி மாசத்தில் சுக்கிலபக்ஷம் துவாதசி வெள்ளிக்கிழமை கூடின புனர்பூச நக்ஷத்திரத்திலவதாரம். இவர் கௌஸ்துபாம்சம். இவர்செய்த பிரபந்தம் - பெருமாள் திருமொழி-*105*; கிர்வாணத்தில் முகுந்தமாலே யென்கிற ஸ்தோத்திரப் பாடல். இவர் க்ஷத்திரியர்.

**ஏழாவது பெரியாழ்வார்.** இவர் அவதாரஸ்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர். இவர் திருநாமம் விஷ்ணுசித்தர். இவர் குலம் ஸ்ரீ வைணவர். முன்குடுமி பிராமணர். காலம் கலியுகம் பிறந்த *47* ஆவதான குரோதன வருஷத்தில் ஆனி மாசத்தில் சுக்கிலபக்ஷத்து ஏகாதசி பானுவாரங் கூடின சுவாதி நக்ஷத்திரத்தில் அவதாரம். இவர் கருடாமிசம். இவர் செய்த பிரபந்தம் திருப்பல்லாண்டு - 12. பெரியாழ்வார் திருமொழி *461*.

**எட்டாவது தொண்டரடிப் பொடியாழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் திருமண்டங்குடி. இவர் வனமாலாம்சம். காலம் கலியுகம் பிறந்த *298*. ஆவதான பிரபவ வருஷம் மார்கழி மாசம் கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசி மங்கள வாரம் கூடின கேட்டை நக்ஷத்திரத்தில் அவதாரம். இவர்செய்த பிரபந்தம் - திருப்பள்ளியெழுச்சி - 10. திருமாலே 45, இவர் திருநாமம் விப்ர நாராயணர்.

**ஒன்பதாவது திருப்பாணுழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் நிசுளாபுரி யென்கிற உறையூர். இங்கு உறையூர் நாச்சியார் நீளாதேவியுடைய அம்சமாய் சூரியவமிசத்துச் சோழராசாவினுடைய குமாரத்தியாய் அவதரித்து அழகிய அரங்கரை விவாகம் செய்த பெருமையுடையள். இந்த ஆழ்வார் ஸ்ரீ வத்ஸாம்சம். காலம் கலியுகத்தில் *342*க்கு மேல் செல்லாநின்ற துன்மதி வருஷம் கார்த்திகை மாசம் கிருஷ்ணபக்ஷம் த்வீதீயை புதன் கிழமை கூடின ரோகிணி நக்ஷத்திரத்தில் அவதாரம். இவர் செய்த பிரபந்தம் - அமலனுதிபிரான் - *10*. இவர் திருநாமம் பாண்பெருமாள், முனிவாகனர். இவர் நெற்கதிரில் அவதரித்தது. அந்திம குலத்தில் வளர்ந்தது.

**பத்தாவது திருமங்கையாழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் திருவாலி திருநகரியில் திருக்குறையலூர். இவர் பூவைசியரில் அகமுடையார். இவர் வமிசத்தார் மிலேச்சகிருத்யாள், காலம் கலியுகம் பிறந்த 397க்கு மேல் செல்லா நின்ற நள வருஷம் கார்த்திகை மாசம் குரு வாரம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் அவதாரம் இவர் சார்ங்காம்சம். இவருக்குத்

தேவியார் **குமுதவல்லி நாச்சியார்** என்னுந் தெய்வப்பெண். இவர் செய்த பிரபந்தம்—பெரிய திருமொழி-*1084*. திருக்குறுந்தாண்டகம்-*20*. திருநெடுந்தாண்டகம்-*30*. திருவெழுகூற்றிருக்கை (ஏகவாக்கியம்) பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆக மூன்றினில் பாசுரம் 227.

**பதினோராவது ஆண்டாள்.** இவர் அவதார ஸ்தலம் ஸ்ரீ வில்லி புத்தூரில் துளசிவனத்தில் அவதாரம். காலம் கலியுகம் பிறந்த 97க்கு மேல் செல்லாநின்ற நள வருஷம் ஆடி மாசம் சுக்கிலபக்ஷம் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை கூடின பூர நக்ஷத்திரத்தில் அவதாரம். இவள் பூமி பிராட்டியாருடைய அம்சம். இவள் திருநாமம் சூடிக்கொடுத்த நாச்சியார். பெரியாழ்வார் இவரைத் தம்முடைய பெண்ணாகை எடுத்துவளர்த்து அரங்கருக்குப் பாணிக்கிரஹணம் பண்ணிக்கொடுத்தார். இவர் சாதித்த பிரபந்தம்-திருப்பாவை முப்பது, நாச்சியார் திருமொழி 143 இவர் ஸ்ரீமந் நாராயணருடைய மகிமையைக் கரைகண்டு அவருடைய கலியாண குணங்களாகிய அமுதக்கடலிலே மூழ்கி மூழ்கிக் கீழே கீழே ஆழ்ந்து போகும் ஆண்டாளென்று வகையால் இவருக்கு திருநாமம்.

(குறிப்பு:- பெரியாழ்வார் கனவிலே பெருமானால் தம் மகள் பெருமையறிந்து ''பின்னைகொல் நிலமா மகள்கொள் திருமகள் கொல் பிறந்திட்டாள்'' என்று விசேஷ பிரதிபத்தி பண்ணி, தன்னை ஆண்டாள் இவள் என்று பேசியதாலே இவளுக்கு **ஆண்டாள்** என்று திருநாமம் என்ப.'')
ஆண்களை ஆழ்வார்களென்று சொல்லுவர், ஆண்டாளென்று பெண்களைச் சொல்லுவர். இவர்களில் ஆழ்வார்கள் பதின்மர்கள்; ஆண்டாளொருத்தி.

**பன்னிரண்டாவது மதுரகவியாழ்வார்.** இவர் அவதார ஸ்தலம் பாண்டிய தேசத்தில் திருக்கோளூர் திருப்பதி. இவர் குமுதாம்சம், கருடாம்சம், காலம் துவாபர யுகத்தில் எட்டு லக்ஷத்து அறுபத்து மூவாயிரத்து எண்ணூற்று எழுபத்தெட்டுக்குமேல் செல்லாநின்ற ஈசுவர வருஷம் சித்திரை மாசம் சுக்கிலபக்ஷம் சதுர்த்தசி வெள்ளிக்கிழமை கூடின சித்திரை நக்ஷத்திரத்தில் அவதாரம் இவர் முன்குடுமி பிராமணர். ஆதித்த உதயத்துக்கு அருண உதயம் முற்பட்டாப்போலே மகாஞானதிகராய்க்கிளர்ந்து வளர்ந்து வரும்போது எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தால் ஞானமுண்டாகி, பதரிகாசிரமத்துக்கு யாத்திரையாய்ப் போய் அவ்விடத்தில் தபசு பண்ணிக்கொண்டிருக்குபோது பிரமா பிரத்தியக்ஷமாய் உனக்கு வேண்டுவ தென்னவென்று கேட்க, இவரும் தமக்கு மோக்ஷம் வேணுமென்று சொல்ல, பிரமாவும் மோக்ஷத்துக் கருகன் நானுமல்ல ருத்திரனுமல்ல, ஸ்ரீமந் நாராயணனொருவனே கொடுக்க வேணுமேயல்லாமல் வேறில்லை. இப்போது அவருடைய அங்கிசமாய், பாஸ்கர கோடி உதயமாய் தென்திசையில் திருவழுதி நாட்டில் திருக்குருகூரில்

தாமிரபரணி தீர்த்தத்தருகில் பூவைசியராகிய காரியாருக்கும், அவர் தேவியார் உடையநங்கைக்கும் புத்திரனுய் அதரித்து அன்னேயின் முலேப்பால் அருந்தாமல் திந்த்ரிணி விருக்ஷத்தின் அடியை இருப்பிடமாக் கொண்டு யோகாப்பியாசத்தி லெழுந்தருளியிருக்கிருர். அவ்விடத்துக்குப் போனல் உமக்கு மோக்ஷங் கொடுப்பாரென்று பிரமா சொன்னதைக் கேட்டு அவ்விடத்திலிருந்தும் புறப்பட்டுக் கங்கைக்கரைக்குவந்து பிராம முகூர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஆசமனியம் செய்து தென்திசையை நோக்கிப்பார்க்கும்போது கோடி சூரியப்பிரகாசத்துக்குச் சமதையான பாஸ்கரோதயத்தைக்கண்டு, பிரமாகொடுத்த வரமிதுதானென்று திக்கு நோக்கிப்புறப்பட்டுவந்து, இகத்தில் கலிக்கு வைகுண்டமாகிய சேஷாத் திரியைக்கண்டு களித்துத் திருவேங்கடமுடையானேச் சேவித்து, அலமேலு மங்காபுரத்தில் தாயாரையும் சேவித்து, அங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோவிலுக் கெழுந்தருளும்போது மார்க்க மத்தியில், புண்ணிய கோடி விமானத்தைக்கண்டு வேரற்ற மரம்போல விழுந்து தெண்டன் சமர்ப்பித்துப் பின்பு உள்ளே பிரவேசித்து, திருவனந்த சரசிலே நீராடித் துவாதசோர்த்துவ புண்டரத்தராய் ஸ்ரீ பலிபீடத்தையும் துவஜஸ்தம்பத் தையும் சேவித்துப் பிரதக்ஷிணமாக உள்ளேபுகுந்து திருவபிஷேக மண்ட பத்தைத் தெண்டனிட்டுத் திருப்புற்று வலமாக வந்து, பிரதக்ஷிண கிரமத்திலே பெருந்தேவித் தாயாரை ''ஆகாரத்ரய சம்பந்நாம்,'' என்கிற சுலோகத்தின்படியே திருவடி தொழுது, பின்பு திரியாவரணத்தி லே பிரவேசித்து, அத்தியூரார் என்கிற அழகியசிங்கரை யடிபணிந்து, அனந்தரம் வையமாளிகையேறி, கச்சிக்கு வாய்த்தானென்கிற திருமண்ட பத்தைத் தெண்டன் சமர்ப்பித்துப் பின்பு பேரருளாளரைத் திருவடி தொழுது அவ்விடத்தினின்றும் புறப்பட்டு வழியிலுள்ள திவ்விய தேசங் களேச் சேவித்துக்கொண்டு, ''காவேரி வ்ரஜா தோயம் வைகுண்டம் ரங்கமந்திரம் பரவாசு தேவோ ரங்கேசம் பிரத்தியக்ஷம் பரமம்பதம்'' என்கிறபடி பரமபதமாக எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ரங்கத்துத் திருக்காவேரி யில் தீர்த்தமாடி, நல்லார்கள் வாழும் நளிரரங்கத்தில் ''மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருளேக்'' கோஷித்துக் கொண்டிருக்கிற பூசுரர்களாகிய மகாபாகவதாளேச் சேவித்துச் சந்நிதிக்குட் புகுந்து, ''அரவத் தமளி யோடும் அழகியபாற்கடலோடும் அரவிந்தப் பாவையுந்தானுமாய்' பள்ளிகொண்டிருக்கிற ஸ்ரீ ரங்கநாயகர் முன்பாக ஸ்ரீ ரங்க நாயகியைத் தெண்டன் சமர்ப்பித்து அவளேமுன்னிட்டுக்கொண்டு திருவடி தொழுது அங்கு நின்றும் புறப்பட்டுத் தென்திருவேங்கடம் என்னும்படி பிரசித்தி வைபவமுடைய திருமாலிருஞ்சோலேக் கெழுந்தருளி அழகரைத் தெண்டஞ் சமர்ப்பித்து, திருமாலிருஞ்சோலே அழகைக் கண்டுகளித்து அங்கு நின்றும் புறப்பட்டு மதுரைக் கெழுந்தருளி, மல்லாண்ட திண்டோள் மணிவண்ணப் பெருமாளேயும் சேவித்து, அங்கு நின்றும் புறப்பட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரே சென்று வடபத்திரசாயியையும் திருவடி தொழுது

அங்கு நின்றும் புறப்பட்டுத் திருத்தாம்பிரபரணியருகிற்சென்று ஸ்ரீ வைகுண்டநாதனாகிய கள்ளபிரானைச் சேவித்து, திருவனந்தாழ்வான் தானே வந்தவதரித்திராநின்ற திந்த்ரிணி விருக்ஷத்தை வலமாய் வந்து அதன் அடியில் சக்கரவர்த்தியான ராஜா அஷ்டதிக்குப் பாலகர்களின் எட்டம்சங்களும் ஒன்றுய்க்கூடி அவதரித்தாப்போல விளங்காநின்ற சடகோபருடைய திவ்விய மங்களவிக்கிரக சொரூபத்தைக்கண்டு பிரமித்து நின்று அவரைத் தெண்டன் சமர்ப்பித்து, ஒரு பெரிய குண்டுப் பாறுங் கல்லையெடுத்து அவர்முன்பாகப் போட்ட சத்தத்தில் திருக்கண் முழித்தார். அப்போது ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்'' என்று விண்ணப்பம் செய்ய, ஆழ்வாருக்குக் கிருபை பிறந்து திருவாய் மலர்ந்து ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று அருளிச்செய்தார். அப்படி ஒருநாளும் வார்த்தை சொல்லாத குழந்தை இப்போது வார்த்தை சொன்னதைத் தாயுந் தகப்பனுங் கேட்டு மிகவும் ஆனந்தத்தை யடைந்திருந்தார்கள். இப்பால் இந்த ஸ்ரீ வைஷ்ணவராகிய மகாப் பிராமணர் அத்தியாச்சரியத்துடனே இந்தக் குழந்தை வடிவாக எழுந்தருளியிருக்கிற இவரைச் சாக்ஷாத் ஸ்ரீய: பதியினுடைய அவதார மென்று அறிந்து, இவருக்குச் சேஷ விருத்தி செய்து கொண்டும் இவரை யே உபாய உபேயமாக எண்ணிக்கொண்டும், பின்னையும் இவ்வாழ்வார் விஷயத்தில் ''ஆழ்வாரை யன்றி மற்றில்லை'' என்கிற அர்த்தத்தை உளக்கொண்டும் பிரபத்தி நிஷ்டையை உளக்கொண்டுமிருக்கிற **'கண்ணிநுண் சிறுத்தாம்பு'** என்கிற பிரபந்தத்தை அருளிச்செய்து திருக்குருகூர் நகர் நம்பியோ வென்று தெண்டன் சமர்ப்பிக்க, ஆழ்வாரும் இவரைப் பூரணகடாக்ஷம் செய்து ''என்மதுரகவியோ'' வென்று மிகவும் உகந்தருளினர். அனந்தரம் இம் மதுரகவிகளும் ஆழ்வார் திருவடிகளிலே அதிப்பிரவணராய் சேஷவிர்த்தி செய்து கொண்டிருக்கும்போது ஆழ்வாரும் இவரை ஏடும் எழுத்தாணியும் கொண்டுவரச் சொல்லி திராவிட வேதமாகிய திருவிருத்தம் - 100, திருவாசிரியம் - 7, பெரிய திருவந்தாதி - 87, திருவாய்மொழி - 1102, இந்த திவ்வியப் பிரபந்தங்களை அருளிச்செய்து ஏறியருளப்பண்ணும்படி செய்து பின்னையும் மதுரகவிகளுக்குத் திருவாய்மொழி சாதித்த விவரணம்.

## திருவாய்மொழி விவரணம்.

அகிலசகத்திதத்துக்காய் சாசனபரமான வேதத்திலும் வேதார்த்தோபப்பிரவர்த்தகங்களான ஸ்மிருதி இதிகாச, புராணசமஸ்தசாஸ்திரங்களிலும், அவிச்சின்னமான பிரசித்தமாய், சர்வேச்வர சுவயமாசாரியர்களுக்கு ஆபத்தனமாயிருந்துள்ள அர்த்தத் துவயத்தைப் பிரதிபாதிக்கையாலே துவய மென்று திருநாமத்தை யுடைத்தாயிருந்துள்ளவாக்கியத்துவயத்தின் பதத்தார்த்தத்தைப் பிரதிபாதிக்கிறது **முதல் மூன்று பத்துக்கள்;** அவை யாவன-ஸ்ரீய:பதித்துவமும், நாராயணத்துவமும், நாராயணனுடைய சர்வலோக சரண்யமான சரணாரவிந்த யுகளமும் பிரதிபாதகமாயிற்று.

**நாலாம் பத்தால்** இலங்கை நகரம் எரியுய்த்தவனென்றும், வல்வினை தீர்க்கும் கண்ணனென்றும், தொல்வினை தீரவென்றும், வெய்ய நோய்கள் முழுதும் வியன்ஞாலத்து வீயவேயென்றும், மேவிநின்று தொழுவார்வினை போகவென்றும், பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேனென்றும், நோயேமூப்பிறப்பிறப்புப் பிணியே யென்றிவை யொழியவென்றும், வேட்கையெல்லாம் விடுத்துக் கூட்டறிய திருவடிகள் கூட்டினை என்றும், அஃதேயுய்யப் புகுமாறென்றும், உய்ய வுபாயம் மற்றின்மை தேறியென்றும் அநிஷ்டநிவர்த்தி, இஷ்டப்பிராப்தி கர்த்ருத்வ லக்ஷணமான பிராபகத்துவம் பிரதிபாதிக்கமாயிற்று.

**அஞ்சாம் பத்தால்.** தமியேனுக்கருளாயென்றும், ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாயென்றும், உன்னாலல்லாலென்றும், கழல்களவையே சரணாகக் கொண்ட வென்றும், நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபனென்றும், நாடொறு மேக சிந்தையனாயென்றும், தத்கோசரமாய் சேதன கதமாயிருந்துள்ள பிரார்த்தனா கர்ப்பமான விசிராமம் பிரதிபாதிதமாயிற்று.

**ஆறும் பத்தால்** திருமாமகளிரும்தாம் மலிந்திருந்தென்றும், அடிமை செய்வார் திருமாலுக்கென்றும், ஓசிந்த வொண்மலராள் கொழுநனென் றும், என் திருமார்வற்கு வென்றும், கோலத்திருமா மகளோடுன்னை யென்றும் பிரதிபாதிதமாயிற்று.

**ஏழாம் பத்தால்.** கன்னலே யமுதேயென்றும், கொடியேன் பருகுஇன் அமுதேயென்றும், திருமாலின் சீர்பருகிலுமார்வனோ வென்றும், இவ் வேழுலகை இன்பம் பயக்க வென்றும், கைங்கரிய பிரீதி சம்பந்தியான ஈசுவரருடைய நீதிசெய் போக்கியதை பிரதிபாதிதமாயிற்று.

**எட்டாம் பத்தால்** அடியனேன் பெரிய வம்மானென்றும், விண்ண வர் கோன்நங்கள் கோனையென்றும், அமர்ந்த நாதனை யென்றும், மூவுலகாளி யென்றும், மூவுலகுக்கும் நாயக னென்றும், ஈசுவர சுவாமித் துவம் பிரதிபாதிதமாயிற்று.

**ஒன்பதாம் பத்தால்.** பண்டை நாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின்கோயில் சீய்த்தென்றும், நின் தீர்த்தவடிமை குற்றேவல் செய்தென்றும், தொடர்ந்து குற்றேவல் செய்தென்றும், கொடுவினையேனும் பிடிக்கவென்றும்

உறுவதிதுவென்றும், ஆருயிர் பட்டதென்றும், ஆட்கொள்வானொத்து வென்றும், மீளாவடிமை பணிசெய்யப் புகுந்தேனென்றும் நித்திய கைங்கரியம் பிரதிபாதிதமாயிற்று.

**பத்தாம் பத்தால்.** துயர்கெடுங் கடிதென்றும், கெடுமிடராய வென்றும், எழுமையு மேதஞ் சாரா வென்றும், இப்பிறப் பறுக்குமென் றும், உந்தன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுது மென்றும், பெண்மையாற்றேமென்றும், பிணியொன்றும் சாரா பிறவி கெடுத்தாளுமென்றும், பிறவித்துயர் கடிந்தோமென்றும், விண்டே யொழிந்த வினையாயின வெல்லாமென்றும், அமராவினைகளென்றும், கடுநரகம் புகலொழித்த வென்றும், பிறவிகெடுத்தேனென்றும், தடு மாற்ற வினைகள் தவிர்த்தானென்றும், அந்தி தொழும் சொல்லென்றும், அவாவற்று வீடுபெற்ற வென்றும், கைங்கரிய பிரதிபாதக ரக்ஷணம் பிரதிபாதிதமாயிற்று. இப்படி ஸ்ரீய: பதித்துவப் பிரமுகங் களாய், கைங்கரிய பிரதிபாதக நிச்சேஷ நிருபண பரியந்தங்களாயிருந் துள்ள உபாதேயார்த்தங்களைப் பிரதிபாதிக்கக் கடவதாயிருந்துள்ள வாக்கியத்துவமும் அதனுடைய அர்த்தத்தையும் உட்கொண்டிருக்கிறது திருவாய்மொழி யென்று அருளிச்செய்து, இந்தத் திருவாய்மொழி பகவத் சரணாகதர்களாய் அநந்தியப் பிரயோஜனராயிருக்கும் அதிகாரி களுக்குக் காலக்ஷேபமேற்கவாகவும் போக வேதுவாகவு மிருக்கும்.

''மத் பக்த சடகோபாக்யோ பவிஷ்யாமி மதிச்சயா''
என்கிற பிரம்ம புராணமும்;

''கச்சித்து மனுஷ்யரூபஸ்சன்னூஷிவான் அத்ரைவமுனி:
ப்ராப்யசித்தி புனஸ்சோபி சாயுஜ்யம் பரமாத்மன:''
என்கிற பிரம்ம புராணமும்

''கௌஸ்துபாந் துதிதம் தேஜ: கிஞ்சித் பூமா உத்பதத்
தத்ரூபம் பாதுகா ஜாதம் சடகோப இதிஸ்மிருத:
என்கிற மார்க்கண்டேய புராணமும்
நோக்க

இவ்வாழ்வார் மூவருடைய அமிசமென்கிறதில் சந்தேகமில்லை. சக்கரவர்த்தியான ராசா அஷ்டதிக்குப் பாலகர்களுடைய எட்டம்சங்களும் கூடிப்பிறந்தவனென்றும், பலராமர் சேஷாம்சம் பகவதாம்சமென்றும் சொல்லுமாப் போலே இவ்வாழ்வாரும் பகவதாம்சம் பிராட்டியம்சம்

சேனேசரம்சம் கௌஸ்துபாம்சமென்று புராணங்களிலே சொல்லும். **உத்தரார்த்தத்துக்குப் பிரமாணம்** சங்கருஷண உபநிஷத்திலும் மார்க்கண்டேய புராணத்திலும் பார்க்கவ புராணத்திலும், விருத்த பாத்மத்திலும், பாத்மபுராணத்திலும், பிரம்மாண்ட புராணத்திலும், விச்வக்ஸேந சங்கிதையிலும், யாதவாசல மகாத்துமியத்திலும், ஆதித்த புராணத்திலும், ஸ்ரீ பாஞ்சராத்திரத்தில் அநிருத்த சங்கிதையிலும், பிரம்மாண்ட புராணத்தில் சனற்குமார திலீபசம்வாதத்திலும், பிரம சங்கிதையிலும் ஈசுவர சங்கிதையிலும் பவிஷ்ய புராணத்திலும் விஷ்ணு தர்மோத்தரத்திலும், வயினதேவ சங்கிதையிலும், பிரம்மாண்ட புராணத்திலே பதரிகாசிரம மகாத்துமியத்திலும், வராகபுராணத்திலும் பரமேசுர சங்கிதையிலும் பழநடை விளக்கத்திலும் இன்னம் அநேகப் பிரமாணங்களிலும் ஆழ்வாராதிகள் அவதாரமும், எம்பெருமானுர் பூர்வாசாரியர்கள் மணவாள மாமுனிகள் பரியந்தம் அவதாரங்களும் சொல்லப்படுகின்றன. சந்தேகப்பட்டவர்கள் அந்தந்தப் புராணங்களைப் பார்த்தால் காணலாம். இது அந்தப் பிரமாணப்படிக்குத் தமிழில் எழுதினபடியினுலே சமஸ்கிருத சுலோகங்களின் பலுக்குகள் தமிழில் எழுத சக்கியப்படவில்லை.

இனித் **திருமுடிவர்க்கம்:** பெரியபெருமாள் திருவடிகளிலே ஆச்ரயித்தவர் பெரிய பிராட்டியார். பெரிய பிராட்டியார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர் சேனைமுதலியார். சேனைமுதலியார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர் நம்மாழ்வார். அவர் திருவடிகளிலே விபவ அவதாரத்தில் ஆச்ரயித்தவர் மதுரகவிகள். நம்மாழ்வார் திருவடிகளில் அர்ச்சாவதாரத்தில் ஆச்ரயித்தவர் நாதமுனிகள். இவர் குமாரர் ஈசுவர முனி. ஈசுவர முனி குமாரர் ஆளவந்தார். ஆளவந்தார் குமாரர் சொட்டை நம்பி. சொட்டை நம்பி குமாரர் என்னுச்சான். என்னுச்சான் குமாரர் பிள்ளையப்பர். நாதமுனிகள் அருளிச்செய்த பிரபந்தம் ஞானதத்துவமும், யோகரகசியமும், மதுரகவி முதலான சம்பிரதாய பரம்பரைகளாலும் திருவாய்மொழிக்கு முதல்தாயாய் யோகதசையில் சாக்ஷாத்கரிக்கையாலே இவர்களுக்கு நம்மாழ்வார் ஆசாரியரானுர். நாதமுனிகள் திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள்—உய்யக்கொண்டார் குருகைக்காவலப்பன், ஏறுதிருவுடையார், கருணுகர தாசர், திருமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டு நாச்சான், சுந்தராழ்வான் ஆகத்திருநாமங்கள் எண்மர். உய்யக்கொண்டர் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்கள்-மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணி பாண்பெருமாள், சேட்டலூர் செண்டலங்கார தாசர், கோமடத்துத் திருவிண்ணகரப்பன், உலகுபெருமாள் நங்கை ஆகத்திருநாமங்கள் ஐவர். மணக்கால் நம்பி திருவடிகளில் ஆசரயித்தவர்கள்-ஆளவந்தார், தெய்வத்துக்கரசு, சிறு பிள்ளை, உடையார் பிள்ளை, திரு

மாலிருஞ்சோலை தாசர், வங்கிபுரத்தாச்சி ஆகத் திருநாமம் ஆறு. ஆளவந்தார் திருவடிகளில் ஆசரயித்தவர்கள்:— திருக்கோட்டியூர் நம்பி, திருக்கச்சிநம்பி, மாறநேர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாழ்வான், பெரிய நம்பி, திருமலை நம்பி, தெய்வ வாரியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்ருன், தெய்வப்பெருமான், திருக்குருகூர் தாசன், வகுளாபரணன், சோமயாஜியர் வடமதுரைப் பிறந்தார், அம்மங்கி, ஆட்கொண்டார், ஆகத்திருநாமங்கள் 16. பெரிய நம்பி திருவடிகளில் ஆச்ரயித்தவர் – எம்பெருமானுர், மலைகுனிய நின்ருர், சடகோப தாதர், அணியரங்கத் தமுதனுர்.

**எம்பெருமானுர்**, ஸ்ரீ பெரும்பூதூரில் ஆசூரி கேசவ சோமயாஜி தீக்ஷிதருக்கும் அவர் பத்தினிபூமிப்பிராட்டியாருக்கும் கலியுகம் 4118 க்கு மேல் செல்லாநின்ற பிங்கள வருஷம் சித்திரை மாசம் சுக்கிலபக்ஷம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் கடக லக்கினத்தில் அவதாரம். இவர் பகவதாம்சம், பிராட்டியாரம்சம், ஆதிசேஷாம்சம். இதற்குச் சுலோகம்:-

''அனந்தம் பிரதம ரூபம் லக்ஷ்ம்யாஸ்ச த்வீதீயகம்

த்ரீதீயாம் பலபத்ரஸ்ய கலௌ ஸித்திர்பவிஷ்யதி.

என்று விஷ்ணு புராணத்தில் சொல்லிற்று.

இவர் லோகத்துக்குப் பிரதமாதரவாய் அவதரித்த நம்மாழ்வாருக்குப் பின்பு ஸ்ரீ வைஷ்ணவ தரிசனுத் தாரணத்துக்காக இதத்தாயாய் நிரூபணம் பண்ண அவதரித்தார். இவர் திருவடிகளிலே ஆச்ரயித்த முதலிகள் – தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி, திருக்குருகூர் நம்பி, குருவ நம்பி, முடும்பை நம்பி, ஸ்ரீ பராங்குச நம்பி, வடுக நம்பி, சொட்ட நம்பி, வங்கிபுரத்து நம்பி, பிள்ளை திருமலை நம்பி, கூரத்தாழ்வான், பிள்ளைப் பிள்ளையாழ்வான், சேட்டலூர் சிறியாழ்வான், நடாதூராழ்வான் மிளகாழ்வான், நடுவிலாழ்வான், திருமலையில் ஸ்ரீகாரியம் செய்யும் அம்மை, ஆண்டாள், நாயகத் தேவியார், துய்யபெருந்தேவியார், பெரும்பூதூர், திருவரங்கம், திருக்குடந்தை துய்யவாயிரம், கொங்கில் பிராட்டியார், அத்துழாய், அம்மங்கி, கூரத்தாண்டாள், பொன்னுச்சியார், திருப்பாவை பாடினுள், சூடிக்கொடுத்தாள், இன்னிள வஞ்சியார், கிடாம்பியாச்சான், அருளாளப் பெருமா ளெம்பெருமானுர், முதலியாண்டான், மாறனேர் றில்லா மாருதியாண்டான், கந்தாடையாண்டான், ஈசுவராண்டான், ஜீயராண்டான், பரசாசரபட்டர், சிறுப்பள்ளி தேவராச பட்டர், உக்கலம்மாள் பருத்திக் கொல்லையம்மாள், வைத்த மாநிதி, சிறியய்யா, பெரியய்யா காரஞ்சி சோமயாஜீயர், உக்கலாழ்வான், கிடாம்பிப் பெருமாள், கொங்கிலாச்சான், ஈச்சம்பாடியாச்சான். ஆட்கொண்டவல்லி சீயர்,

திருவெள்ளறை சீயர், பிள்ளை ராச மகேந்திரப் பெருமாள், பிள்ளை திரு நறையூர் அரையர், திருக்குறுங்குடி யரையர், வண்டர், சுண்டர், பிள்ளை விழுப்புத்தூரரரையர், செகந்நாதப் பெருமாளரையர். உள்ளூரில் பெரிய பெருமாள், பிள்ளையுறங்காவில்லி தாசர், *நத்தத்து முதலிகளில் மூவர்—அவர்கள் திருநாமம் எதிவரதாசர், எதிராச தாசர், ராமாநுச தாசர்; பாண்டிய நாட்டு முதலிகள் மூவர்-அவர்கள் திருநாமம் மகிழலழங் காரதாசர், பேரருளாள தாசர், திருமாலை தாசர், பெரியகோயில் வள்ளலார். திருமஞ்சன மெடுக்கும் துய்யமுனி வேழம், ஸ்ரீ பண்டாரங் காவல், திருவரங்க மாளிகையார், திருவனந்தபுரத்தம்மை, திருவரங் கத்தம்மை, திருவண்பரிசாரத்தம்மை, திருவாட்டாத்தம்மை, திரு நறையூரம்மை, மன்னனூர் கோவில் போரேத்தம்மை ஆகத் திருநாமங் கள் 74. எம்பெருமானூர் திருவடிகளில் ஆச்ரயித்த எழுபத்து நாலு சிம்மாசனத்தாரில் கிடாம்பியாச்சான் திருவடிகளில் ஆச்ரயித்தவர் கிடாம்பிக் குலபதி அப்புளார்,அவர் திருவடிகளிலே ஆச்ரயித்த **வேதாந்த தேசிகர்,** அவர் அவதார காலம் கலியுகத்தில் 4370. சாலிவாகன சகாப்தம், 1191, விபவ வருஷம், புரட்டாசி மாசம் திருவோண நக்ஷத்திரம். இவர் கண்டாம்சம். தலம்—காஞ்சிபுரத்தில் தீபப்பிரகாச சந்நிதிக்கருகில். இவர் மகா வல்லபர். இவர் செய்த கிரந்தம்-120. இவர் ஸ்ரீரங்கத்தில் ஒரு அவாந்தர காலத்தில் ஸ்ரீ பாஷியகாரர் அருளிச்செய்த ஸ்ரீ பாஷியத்தை எடுத்துப் பத்திரமாக ஆதரித்துக் காப்பாற்றி வைத்திருந்தவராகையால் அந்த உபகார ஸ்மிருதிக்காக ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் மற்றும் திவ்விய தேசங்களிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஸ்ரீ பாஷ்யம் தொடங்கும்போது இந்த வேதாந்த தேசிகர் தனியனை முன்னதாய் அநுசதித்துப் பின்பு ஸ்ரீ பாஷியம். சேவிக்கும்படி திவ்வியாக்கினை யிட்டருளினார்கள். இவர் ஹயக்கிரீவ உபாசகர். இவருக்குத் திருவாராதனம்-திருப்பாணாழ்வார். இவர் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்- நயினாராசாரியர், பிரமதந்த்ர ஜீயர், இன்னம் சிலர்களுண்டு. இப்பால் எம்பெருமானூர் திருவடிகளில் ஆச்ரயித்தவர் எம்பார். எம்பார் திருவடி களில் ஆச்ரயித்தவர் பட்டர். பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்தவர் நஞ்சீயர். நஞ்சீயர் திருவடிகளில் ஆச்ரயித்தவர் நம்பிள்ளை. நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை. வடக்குத் திருவீதி பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவர் பிள்ளை லோகாசாரியர். பிள்ளை லோகாசாரியர் திருவடிகளில் ஆச்ரயித்தவர் திருவாய்மொழிப் பிள்ளை. திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவர் **மணவாள மாமுனிகள்.** இவர் அவதார காலம் கலியுகம் பிறந்து 4371 வருஷத்துக்குப் பின்பு சாதாரண வருஷம் ஐப்பசி மாசம் சுக்கில பக்ஷம் சதுர்த்தி குருவாரம் மூல

(*நத்தத்து முதலிகள் - திருவரங்க தாஸர், திருமாலிருஞ்சோலை தாஸர், வானமாமலை தாஸர் என்பர்.)

நக்ஷத்திரத்திலே அவதரித்தது. பூர்வம் எம்பெருமானார் இந்த லீலா விபூதியிலே அவதரிக்கும்போது 200 வருஷம் இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கும்படி எம்பெருமானாலே அருளிச்செய்யப் பெற்று அவதரித்தவர். 120 வருஷம் எழுந்தருளியிருந்து அதனமாயிருந்தால் சித்தரோடொக்கும் படியாக இருக்குமென்று லோகோபாவதத்துக்கஞ்சி பரமபதத்துக் கெழுந் தருளி ''ஏராரும் எதிராசனென உதித்தான்'' என்கிறபடி, தாமே மணவாள மாமுனிகளாக அவதரித்து மற்ற 80 வருஷமும் இந்த லீலா விபூதியில் எழுந்தருளியிருந்து தர்சனேத்தாரணம் பண்ணின கிரமம் சொல்லப்படுகிறது. இம்மணவாள மாமுனிகள் திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் கோமடம் தாதரண்ணர்க்கும் அவர் பத்தினி பொன்னுச்சியாரம்மாளுக்கும் குமாரராக அவதரித்தவர். ஆதிசேஷாம்சம் இவர் அவதாரஸ்தலம் ஆழ்வார் திருநகரி. வளர்ந்தது- மாதுலர் கிருஹமாகிய சிக்கில் கிடாரம். இவருடைய திருவவதார மகாத்துமியம் பெரியதாயிருக்கும். இந்த மணவாள மாமுனிகள் சகஸ்ர சாகோபநிஷத் ஸ்ரீ சடகோப வாங்மயமான திருவாய்மொழிக்கு வியாக் கியானமாகிய பகவத் விஷயமென்றும் ஈடு என்றும் திருநாமம் பெற்ற முப்பத்தாருயிரப்படியில் மிகவும் பிரவணராயும் அதி வல்லபராயுமிருக் கிறதை சர்வலோகேசுவரரான நம்பெருமாள் திருவுள்ளம் பற்றி, இந்த முப்பத்தாருயிரப்படியினுடைய பெருமையை லோகத்தாருக்கு வெளியிடும் பொருட்டும் மணவாள மாமுனிகளுடைய திருவாக்கினாலே தாம் திருச் செவி சாத்த வேணுமென்றும் மிகுந்த திருவுள்ளத்தை யுடையராய் ஸ்ரீ கிருஷ்ணர் சாந்திபனிடத்தில் வேதாத்தியயனம் பண்ணினுப் போலே நம்பெருமாளும் இம்மணவாள மாமுனிகளை வக்தாவாக வரித்து அவரை யுயர்ந்த ஆசனத்தி லெழுந்தருளியிருக்கும்படி செய்து தாம் சுரோதாவாக ரத்தினக் கம்பளியில் எழுந்தருளியிருந்து ஒரு வருஷம் தம்முடைய உற்சவாதிகளையெல்லாம் நிறுத்தி திருவாய்மொழி வியாக்கியானமாகிய ஈடு முப்பத்தாருயிரமும் மணவாள மாமுனிகளைச் சாதிக்கும்படி செய்து தாமும் தம்முடைய அனந்த கொத்துப்பரிசெனங்களும் கேட்டருளி, சாத்துமுறையானவுடனே நம்பெருமாள் இம்மணவாள மாமுனிகளிடத் தில் ஈடு முப்பதாருயிரமும் கேட்டருளின உபகார ஸ்மிருதிக்காக இவர் விஷயத்தில் தனியன் சாதித்தருளும்படி திருவுள்ளமாய் தாமே ஒரு பால்ய குமாரனுய் திவ்ய மங்கள சொருபனுய் கர்ப்பக்கிருஹத்தில் நின்றும்வந்து சகலமான ஸ்ரீ வைஷ்ணவர்களும் புடைசூழ்ந்திராநின்ற கருடமுக வாசல் மண்டபத்தில் நின்று ஆசாரிய தக்ஷிணையாக

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம்
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

என்கிற சுலோகத்தை அருளிச்செய்து பின்னும் அந்தச் சிறுபிள்ளை யாக வேஷங்கொண்டெழுந்தருளியிருக்கிற நம்பெருமாள் ஆஞ்ஞாபித்த

விபரம் என்னவென்றால்—இந்தத் திராவிட வேதமாகிய திவ்விய பிரபந்தங்களையும் அதன் வியாக்கியானங்களையும் ரகஸ்யார்த்தங்களையும் அநுசந்திக்க ஆரம்பிக்கும்போது இந்தத் தனியனை முன்னே தொடங்கிச் சேவித்துப் பின்பு அவைகளை அநுசந்திக்கக் கடவர்களென்று தம்முடைய திவ்வியாக்கினையிட்டு, பின்னையும் சேனைமுதலியாரைக் கொண்டு தாம் செய்தருளிய கட்டளைப்பாடு திவ்வியதேசங்கள் தோறும் நடக்கும்படிக்கு ஸ்ரீமுகமிட்டருளும்படி நியமித்தருளினார். மணவாள மாமுனிகள் திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள்—வானமாமலை ராமாநுஜ சீயர், திருவேங்கட சீயர், பட்டர்பிரான் சீயர், கோயில் கந்தாடையண்ணன், எறும்பியப்பா, பிரதிவாதி பயங்கரம் அண்ணன், அப்பிள்ளை, அப்பிள்ளார்—ஆக இந்த எட்டுத்திருநாமங்களுக்கும் அஷ்டதிக்கஜங்களென்றும் பேர்.

அனந்தரம் இதில் ஏறியருளப் பண்ணியிருக்கப்பட்ட கிரந்தங்களுடைய திருநாமங்கள் சொல்லப்படுகிறது. ஸ்ரீமந் நாராயண பரப்பிரம்ம தத்துவமும், அர்த்தபஞ்சக ரகசியமும், தத்துவத்ரயார்த்தம் ஞான ரசாயனமும், சதுர்விம்சதி தத்துவங்களும், ஈசுவரப்பிரகரணமும், ஜீவேசுவர தத்துவமும், பாகவத நிரூபணத்தால் வரப்பட்ட அபசாரங்கள் பண்ணுமையும், ஈசுவரனுக்கும் சீவாத்துமாவுக்கும் உண்டான நவவித சம்பந்தமும், அந்நிய தேவதாந்தரங்கள் ரக்ஷிக்கமாட்டவென்கிற பிரகாரமும், திருமந்திரம், த்வயம் சரம சுலோகார்த்தங்களுடைய சாரார்த்தமும், குருபரம்பரையில் எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்த எழுபத்துநாலு சிம்மாசனாதிபதிகளுடைய வரிசைக்கிரமங்களும், எம்பெருமானார் அருளிச்செய்த பன்னிரண்டு வார்த்தையும், பிள்ளையுறங்காவில்லிதாசருடைய ஞான பக்தி வைராக்கியங்களாலுண்டான ஆத்தும குணமும், உடையவர் முதலியாண்டானுக்கும் கூரத்தாழ்வானுக்கும் அருளிச்செய்த பத்துவார்த்தையும், குருபரம்பரையில் வெளியிட்டிருக்கிற எம்பெருமானாருடைய ஏற்றமும், சோழராசாவை ஜயித்த கூரேச விஜயமும், பிரபத்தி சாரமும், தாந்தி (மனவடக்கம்) வார்த்தையும், சொரூப நவரத்தினமாலையும், பஞ்சோபநிஷண்மயமும், த்வயாதிகாரி குணமும், திருமந்திரத்தைப் பிரசாதித்தருளிய ஆசாரியனிடத்தில் சிஷ்யனுக்கு இருக்கவேண்டிய நினைவும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீ பாததீர்த்தவைபவமும், திருமந்திரத்தை மறந்தவர்களுடைய குறைபாடும் மறவாதவர்களுடைய ஏற்றமும், பிரபன்னனால் அடையப்பட்ட மோக்ஷ அனுஷ்டான சாஸ்திரக் கிரமமும், அர்ச்சிராதி மார்க்கத்தினுடைய வைபவமும், முக்தாத்மா அந்த அர்ச்சிராதி மார்க்கங்கடந்து சோபானமேறிப் பரமபதத்தில் வழுவிலா அடிமைசெய்து கொண்டிருக்கப்பட்ட வைபவங்களும், பூர்வபாகத்திலும் உத்தரபாகத்திலும் கிரமங்களாய்ப் பிரமாணப்படி யேறியருளப் பண்ணியிருக்கிறது.

இனி அகோபில மடத்தாருடைய திருமுடிவர்க்கமும் சொல்லப்படுகிறது பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, இப்பால் ஸ்ரீ ரங்காசாரியார், கேசவாசாரியார், ஸ்ரீநிவாஸாசாரியார், கேசவாசாரியார், ஆக இந்த நாலு திருநாமங்களும் கிரகஸ்தாசிரமமாக எழுந்தருளியிருந்தார்கள். இவர்கள் பெரியவாச்சான் பிள்ளை சந்நிதியிலே பஞ்ச சம்ஸ்காரம் முதலான சம்பிரதாயங்களைப் பெற்றிருப்பார்கள். இதுக்குமேல் சொல்லப்படுகிற சுவாமிகள் — சந்நியாசாசிரமம், கேசவாசாரியார் சிஷ்யர் (1) ஆதிவண்சடகோப சுவாமி: அவர் நாளில் அகோபிலத்திலிருந்த பஞ்ச பேரத்தில் ஒருவரைத்தாம் யாத்திரைபோகும்போது எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனுர். (2) ஸ்ரீமந் நாராயணஸ்வாமி. (3) ஸ்ரீமந்பராங்குச ஸ்வாமி. (4) ஸ்ரீ ஸ்ரீநிவாசஸ்வாமி (5) ஸ்ரீவண்சடாரி ஸ்வாமி (6) ஸ்ரீ பராங்குச ஸ்வாமி. (7) ஸ்ரீ சடகோப ஸ்வாமி. (8) ஸ்ரீபராங்குச ஸ்வாமி (9) ஸ்ரீ நாராயணஸ்வாமி. (10) ஸ்ரீவண்சடாரிஸ்வாமி. (11) ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்வாமி. (12) ஸ்ரீமந் நாராயணஸ்வாமி. (13) ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி (14) ஸ்ரீ வரதராச ஸ்வாமி (15) ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்வாமி. (16) ஸ்ரீமந் நாராயணஸ்வாமி (17) கல்யாண வீரராகவ ஸ்வாமி. (18) ஸ்ரீகாரிஸ்வாமி. (19) ஸ்ரீஸ்ரீநிவாஸஸ்வாமி. (20) ஸ்ரீ ஸ்ரீவீரராகவ ஸ்வாமி (21) ஸ்ரீ பராங்குசஸ்வாமி. (22) ஸ்ரீமந் நாராயணஸ்வாமி. (23) ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி. (24) ஸ்ரீ பராங்குச ஸ்வாமி. (25) ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்வாமி. (26) ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி (27) ஸ்ரீ வீரராகவஸ்வாமி. இனி பட்டர் செய்தருளிய அஷ்டசுலோகி என்கிற கிரந்த வியாக்கியானத்தையும், அதையே முன்னூலாக வைத்துக்கொண்டு பெரியவாச்சான் பிள்ளை செய்தருளின பரந்த ரகசியமென்கிற மந்திர வியாக்கியானத்தையும், முப்பத்தாறுயிரப்படியையும் அதிகரித்துக்கொண்டு ஸ்ரீ ஜயந்தியாதிகளிலே பாரணை முதலான ஆசாரங்களைத் தென்னுசாரியாள் சம்பிரதாயப்படிக்கு ஆசரித்துக்கொண்டு, மடத்திலே நாள்தோறும் ''ஸ்ரீசைலேச தயாபாத்ரம்'' என்கிற தனியனை அனுசந்தித்துக் கொண்டும் ஆழ்வார் ஆசாரியாளுடைய திருநக்ஷத்திரோற்சவங்களை மடத்தில் பரிபாலித்துக் கொண்டும் வந்தனர்.

மேலும் இதே பிரகாரம் நாங்குனேரி என்றும் வானமாமலை என்றும் தோதாத்திரி சைலமென்றும் திருநாமங்களை யுடைத்தாகிய வானமாமலையில் மடமும் உண்டாகி இப்போதும் இருக்கிறது.

---

*எண்கள் 14 முதல் 18 வரையிலுள்ள ஜீயர்களின் திருநாமங்கள் அகோபிலமடத்து வெளியீட்டில்சிறிது மாறுபட்டுக் காண்கின்றன. அவை (14) ஸ்ரீ நாராயணயதீந்த்ரர். (15) ஸ்ரீ கல்யாண வீரராகவயதீந்த்ரர். (16) ஸ்ரீ சடகோபயதீந்த்ரர். (17) ஸ்ரீ வீரராகவவேதாந்தயதீந்த்ரர். (18) ஸ்ரீ நாராயணயதீந்த்ரர்.

அந்த மடத்தில் பூர்வம் மணவாள மாமுநிகள் தமக்குத் திருவாராதனமாக ஏள்ளப்பண்ணி வைத்துக்கொண்டிருந்த அரங்கநகரப்பனை வானமாமலைமடத்தில் எழுந்தருளியிருக்கும் ஜீயர்கள் ஓரான் வழியாகத் திருவாராதனம் பண்ணும்படி சாதித்தார். அந்தப்படியே நாளது வரைக்கும் நடந்து வருகிறது.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம;

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராமஜயம்.

# பூர்வார்த்தம்.

## சர்வார்த்த சாரசங்கிரக விளக்கம்.

### 1. பரத்துவ நிரூபண மகத்துவம்.

ஸ்ரீய: பதியான ஸ்ரீமந் நாராயணன் சுவயம் பரப்பிரம்மமாயும், ஆதி மத்தியாந்த ரகிதனாயும், சர்வசீவதயாபரனாயும், கலியாண சொரூபனாயும், கலியாண குணங்களுக்கு ஆதாரமாயும், தம்மைப் பார்க்கிலும் இதரமாகிய அறிவுள்ள வஸ்துக்களுக்கும் அறிவில்லாத வஸ்துக்களுக்கும் சுவாமியாயும், ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி முதலான திவ்விய மகிஷிகளுடனே எப்போதும் பிரகாசித்துக்கொண்டு அனந்தகருட விஷ்வக்சேனாதி முதலான நித்திய சூரிகளால் இடைவிடாமல் சுருதிசொல்லப் படுகிற கமலங்கள் போல விளங்குகிற திருவடிகளை யுடையவராயும், பிராகிருத சம்பந்தமில்லாமல் ஆகாசம் போல விஸ்தாரமாகிய திவ்விய நகரத்தில் நிலையாகி நின்று சிருஷ்டி, ஸ்திதி, சங்காரமென்று சொல்லப்படுகிற லீலைகளைத் திருவுளம்பற்றிப் பரமதயாளுவாகையால் வாசுதேவனென்றும் சங்கர்ஷணனென்றும் பிரத்யும்நன் என்றும் அநிருத்தனென்றும் சொல்லப்படுகிற நாலு விதமாகிய திவ்விய மங்கள விக்கிரகங்களாய் அங்கீகரித்திருப்பன்.

வாசுதேவன் பிரம்மாவைச் சிருஷ்டித்துப் பிரம்மாவுக்கு நாலுவித வேதமும் ஆறு சாஸ்திரமும் உபநிடதமும் உபதேசித்து, அதைப் பிரம்மாவின் குமாரர்களாகிய சனக சனந்தன சனுதன சனத்குமாரர்களாகிய மகாநுபவர்களுக்கும், நாரத வால்மீகி சூத சவுனகாதி வியாசர் சுகப் பிரம்மரிஷி முதலானவர்களுக்கும், ஓரான் வழியாக மகரிஷிகளுக்கும் வேதார்த்தங்களையும் அஷ்டாதச புராணங்களையும் வெளியிட்டு, யுகங்கள் தோறும் கடைத்தேறும்படி அனேக அவதாரங்கள் செய்தும், ஆடியும் பாடியும் தர்ம அர்த்த காமமோட்ச மார்க்கமும் தானே அனுஷ்டித்துக் காட்டினதில், அறிவுள்ள பெரியோர்கள் கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகங்களில் கடைத்தேறினர்கள். அறிவீனுளாயிருக்கப் பட்டவர்கள் பஞ்ச இந்திரியத்தில் அகப்பட்டுத் தம்மையின்னவ ரென்று அறியாமல் தேகமே நித்தியமென்று இருக்கையில் தம்மையும் அறியாமல் ஊழ்வினையாகிய சுழற்பிறப்பில் அகப்பட்டுச் சொர்க்கநரகங்களை அனுபவிக்கிருர்களென்று பாகவத இதிகாசங்களில் இருக்கப்பட்ட அர்த்தங்களை அறிவுள்ளவர்கள் கிரகிக்கும்படி பெரியோர்கள் வெளியிட்டதில் காணப்படுகிறதாவது—பெரியோர்களாகிய மகானுபாவாள் ஜிதேந்த்ரியாளாய்ப் புத்தியால் பரமாத்துமாவான ஈசுவரனை அறிந்து ஞானத்தினுலே விளங்காநின்ற **அஷ்டாங்க யோகத்தைச் சங்கல்பித்துக்** கொண்டு திடசித்தத் துடனே பரமாத்துமாவாகிய ஸ்ரீமந் நாராயணனுடைய கலியாண குணங்களை அனுபவித்தல் என்பது.

## 2. அஷ்டாங்க யோகம்.

### (i) கிரமம்.

அவர்கள் அனுபவிக்கிற விதம் எப்படியென்ருல்—பகவானுடைய வாக்கியம்—யரதொரு யோகாப்பியாசவிதியினுலே மனசானது பிரசன்னமாக நின்றுகொண்டு சன்மார்க்கத்தையே அடையுமோ, பகவானுடைய மூர்த்திகரத்தியானத்துடனே கூடிக்கொண்டிருக்குமோ அந்த **யோகாப்பியாசத்தினுடைய லட்சணத்தைச்** சொல்லுகிரேம்.

தன்னுடைய சக்தியுள்ளமட்டும் சுதர்மானுஷ்டானமும், நிஷித்த தர்மத்தினின்றும் நிவர்த்தியும், அதிர்ஷ்டானுரூபமாகக் கிடைத்தனதைக் கொண்டு சந்தோஷப்படுகையும், ஆத்தும வித்துக்களான பாகவதாளுடைய திருவடிகளை அர்ச்சிக்கையும், தர்மார்த்த காமங்களினின்று நிவர்த்தியும், மோட்சசாதன தர்மத்திலே வாஞ்சையும், பரிசுத்தமாயிருக்கிற அன்னத்தினுடைய போசனமும், சர்வகாலமும் சலனமில்லாமல் சுகமாயிருக்கிற ஸ்தானத்திலே யிருக்கையும், அகிம்சையும், சத்தியவசன

மும், திருடாமலிருக்கையும், எவ்வளவினுலே தனக்குப் பிரயோசனம் நடக்குமோ அவ்வளவு மட்டும் திருப்தி அடைந்திருக்கையும், மவுனமும், சர்வகாலமும் ஆசனசயமும், பகவானிடத்திலேயே மனசைச் சஞ்சலப் படாமல் நிறுத்தியிருக்கையும், மெள்ள மெள்ளப் பிராணசயமும், மனசினுலே விஷயங்களின்றும் விடுபடுகையும், இந்திரியங்களுடைய நிக்கிரகமும், பிராணனுடைய ஸ்தானங்களான மூலாதாரம் முதலானவைகளுக்குள்ளே ஒரு பிரதேசத்திலே இதயத்திலே மனசுடனே கூடப் பிராணனுடைய தாரணைகளும் ஸ்ரீ வைகுண்டருடைய லீலைகளின் தியானமும், மனசுக்குப் பரமாத்துமாவினுடைய சொரூபத்தைச் சம்பாதிக்கையும், இவற்றிலேயும், இதரங்களான உபாயங்களினுலே அசத்து விஷயங்களை உடையதாய் அதிருஷ்டமாய் இருக்கிறவற்றைத் தள்ளி, மனத்தினுல் பிராணசயத்தை யுடையவனுயும் மிகவும் சமர்த்தனுயும் இருக்கிற புருஷனுனவன் புத்தியை மெள்ள மெள்ள ஆத்மாவினிடத்திலே நிறுத்தக் கடவன். பரிசுத்தமான இடத்திலே தர்ப்பாசனம், கிருஷ்ணுஜினம், வஸ்திரம் இவற்றின் மேலே உடையதான ஆசனத்தைப் போட்டுக்கொண்டு அந்த ஆசனத்திலே சொஸ்தாசனத்தையுடையவனுயும் இருந்துகொண்டு காட்சிக்கிடமான சரீரத்தையுடையவனுய், பிராணனை நிரோதனம் பண்ணக் கடவன், சொஸ்தாசனமானது-தொடைகளைக் காலுக்குள்ளாக்கிக்கொண்டு பாதாக்கிரங்களை முழங்காலுக்கு மத்தியிலே வைத்துக்கொண்டு இருக்கிற யோகியினுடைய ஆசனமுண்டே அந்த ஆசனத்தைச் சொஸ்தாசன மென்று வித்துவாம்சாள் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட ஆசனத்தி லிருந்துகொண்டு பிராணனுடைய மார்க்கத்தைப் பூரக கும்பக ரேசகங்க ளாலே சோதிக்கக்கடவன். இதிற் பூரகமாவது.—வாயுவை உள்ளே இழுக்கிறது. கும்பகமாவது—இழுத்த வாயுவை நிறுத்தித் தரிக்கிறது. ரேசகமாவது—தரிக்கப்பட்ட வாயுவை வெளியிலே விடுகிறது. இவைகளினுலே யாவது இடையென்கிற நாடியினுலே பூரித்து பிங்கலை யென்கிற நாடியினுலே விடுகிறது, பிங்கலை யென்கிற நாடியினுலே பூரித்து இடைநாடியினுலே விடுகிறதுமான பிரதிகூல அனுகூலமாயாகிலுஞ் சோதிக்கக்கடவன். சித்தமானது ஸ்திரமாகாநின்றுகொண்டு திரும்பவுஞ் சஞ்சலப்படாம லிருக்குமோ அந்தப்பிரகாரஞ் சோதிக்கக்கடவன். எப்படியென்ருல் வாயுவினுலேயும் அக்கினியினுலேயும், ஊதி உருக்கப்பட்ட சொர்ணமானது மலத்தைவிட்டு விடுகிறதோ அப்படிபோல சுவாஸ சயத்தை உடையவனுன யோகிக்கு மனதானது சீக்கிரமாய் நிர்மலமாய்விடும். பிற்பாடு ஸ்திரமாய்விடும். பிராணநிரோதனத்தினுலே வாத பித்த சிலேஷ்மம் முதலான தோஷங்களையும், தாரணைகளாலே பாபத்தையும், இந்திரிய நிக்கிரகத்தினுலே விஷய சங்கங்களையும், பரமாத்தும தியானத்தினுலே ராகத்துவேஷாதி குணங்களையும் நீக்கக் கடவன். எப்போது தன்னுடைய மனமானது யோகாப்பியாசத்தினுலே நிர்மலமாயும் மிகவும் ஸ்திரமாயும்

விடுகிறதோ அப்போது தன்னுடைய நாசிகாக்கிரத்திலே (மூக்குநுனி) வைக்கப்பட்ட திருவடியையுடையவனுய்க்கொண்டு பகவானுடைய மூர்த்தீ கரத்தைத் **தியானம்** பண்ணக்கடவன். பிரசன்னமான பத்மம் போலே திருமுக மண்டலத்தை யுடையவராயும், பத்மகர்ப்பம்போலே சிவந்த நேத்திரங்களை யுடையவராயும், மார்பிலே ஸ்ரீ வத்ஸத்தை யுடையவரா யும், மிகவும் விளங்காநின்ற கவுஸ்துபாபரணத்துடனே கூடிக்கொண் டிருக்கிற கண்டத்தை யுடையவராயும், மதுரமான தொனியையுடைய தான மதித்த வண்டுகளையுடைய துளசி மாலையினுலே சூழப்பட்டவராயும், விலையில்லாத ஆரம் வலையம் கிரீடம் தோள்வளை நூபுரம் இவைகளையுடை யவராயும், அரைஞாண் மாலையினுலே மிகவும் விளங்காநின்ற கடிப்பிர தேசத்தையுடையவராயும், பக்தர்களுடைய இருதய கமலத்தை ஆசனமாக உடையவராயும், மனேக்கியமான ரூபத்தை உடையவராயும், சாந்தரா யும், பக்தர்களுடைய மனசையும், நேத்திரங்களையும் சந்தோஷிப்பியா நின்றும், அடிக்கடி அதிக சுந்தரமான தரிசனத்தை யுடையவராயும், சமஸ்த லோகங்களாலேயும் நமஸ்கரிக்கப்படா நின்றும், யௌவன வயசிலே யிராநின்றும், பக்தர்களை அனுக்கிரகிக்கத் துரிதப்பட்டுக்கொண்டும், கீர்த்திக்கத்தக்கதாயும் பவித்திரமாயும் இருக்கிற யசசையுடையவராயும், புண்ணிய லோகாளான பலி, பீஷ்மர் முதலான பேர்களுக்கு யசசைப் பண்ணுநின்றும், சம்பூரணங்களான அவயவங்களை யுடையவராயும் இருக்கிற ஸ்ரீ ஹரியை மனதானது எந்த மட்டும் விட்டுப்பிரியாமல் இருக் கிறதோ அந்த மட்டும் இந்தப் பிரகாரம் தியானம் பண்ணக் கடவன். நிச்சலமாக நில்லாநின்றும் சஞ்சரியாதுநின்றும் ஆசனத்திலே யிராநின்றும் சயனித்துக்கொண்டிராநின்றும் இருதய கமலத்தை ஸ்தானமாக உடைய வராயும் பார்க்கத்தக்கதான லீலைகளையுடையவராயும் இருக்கிற அந்தப் பகவானை மிகவும் பரிசுத்தமான பக்தியையுடையதான மனதினுலே தியானம் பண்ணக்கடவன். அந்த முனியானவன் பகவா னிடத்திலே நிச்சலமாக இராநின்றும் சமஸ்த அவயங்களிலேயும் இராநின்றும் இருக்கிற மனதைச்சமஸ்த அவயவங்களையும் பார்த்துப் பிற்பாடு பகவானுடைய ஒரு அவயவத்திலே ஸ்திரமாக வைக்கக் கடவன். தேகாரூபங்களாயிருக்கிற வச்சிரம் அங்குசம் துவசம் பத்மம் இவைகளாகிற சின்னங்களுடனே கூடிக்கொண்டும், மிகவும் உன்னதங் களாயும் சிவந்தும் பிரகாசியாநின்றும் இருக்கிற நகங்களின் கூட்டத்தி னுடைய நிலவைப்போலே கோத்தகாந்திகளாலே தியானம் பண்ணுகிற பேர்களுடைய இருதயத்திலே யிராநின்ற அந்தகாரத்தை நாசம்பண்ணு நின்றுமிருக்கிற பகவானுடைய சரணுரவிந்தத்தை நன்ருகச் சிந்திக்கக் கடவன். எந்தத் திருவடிகளை அலம்புகிறதினுலே உண்டாகா நின்றும் சகல, நதிகளுக்குஞ் சிரேஷ்டமாயிருக்கிற கங்கையினுடைய உற்பத்தி ஸ்தான மாயும், சமஸ்த தேவதாளுடைய பாபங்களை அரிப்பியா நின்றுமாயும் இருக்கிற திருவடிகளைத் தியானம் பண்ணுகிருனே அவனுடைய மனதிலே யிராநின்ற மலமாகிய பர்வதத்தின்மேலே விடப்பட்ட வச்சிராயுதம்

போன்ற பகவானுடைய சரணாரவிந்தத்தைத் தியானம் பண்ணக்கடவன். சன்மரகிதராயும் பரிபூரணராயும் இருக்கிற ஸ்ரீ பகவானுடைய இரண்டு முழங்காலானவை ।சமஸ்தலோககர்த்தாவான பிரம்மாவுக்கு மார்பாயும், சமஸ்ததேவர்களாலே சேவிக்கப்படாநின்று, பத்மம் போலே கோத்த நேத்திரங்களையுடையவளாய் இருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியினாலே தன் தொடைகள் பேரிலே வைத்துக்கொண்டு துளிர்போன்ற தன் கைகளுடைய காந்தியினாலே பிடிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டும் இருக்கிறதோ அந்த இரண்டு முழங்காலையும் இருதயத்திலே தியானம் பண்ணக்கடவன். கருத்மானுடைய தோள்கள் பேரிலே விளங்காநின்றும், பலத்துக்கு நிதியாயும், காசாம்புஷ்பம்போலே கோத்தகாந்தியுடையவைகளாயும் இருக்கிற பகவானுடைய தொடைகளைத் தியானம் பண்ணக்கடவன். பாதாக்கிர பரியந்தம் தொங்காநின்ற உத்தமமான பீதாம்பரத்திலே யிராநின்ற அரைஞாணினாலே சூழப்பட்டிருக்கிற கடிப்பச்சிமபாகத்தைத் தியானம் பண்ணக்கடவன். யாதொரு நாபியாகிற மடுவிலே பிரமாவுக்கு ஸ்தானமாயும் சமஸ்தலோக சொரூபமாயும் இருக்கிற பத்மமானது உண்டாயிற்றோ, சமஸ்த லோகங்களுடைய சமுகத்துக்கு இருப்பிடமான உதரத்திலே யிராநின்ற அந்த நாபியைத் தியானம் பண்ணக்கடவன். ஸ்ரீ ஹரியினுடைய இந்திர நீலமணி போலவும், நிர்மலமான ஆரங்களுடைய காந்தியினாலே வெளுத்திராநின்றும் இருக்கிற மார்பின் பக்கமிரண்டையும் தியானம் பண்ணக்கடவன். வனசிரேஷ்டனாக இராநின்ற பகவானுடைய ஸ்ரீ மகாலட்சுமிக்கு இருப்பிடமாயும், ஸ்மரியாநின்றும் தரிசனம் பண்ணாநின்றும் இருக்கிற புருஷாளுடைய மனதுக்கும் நேத்திரங்களுக்கும் மிகவும் ஆனந்தத்தைப் பண்ணாநின்றும் இருக்கிற மார்பை இருதயத்திலே தியானம் பண்ணக்கடவன். சகல லோகங்களாலே நமஸ்கரிக்கப்படாநின்ற ஸ்ரீ ஹரியினுடைய பூஷணமாகத் தரிக்கப்படாநின்ற கவுஸ்துவ மணிக்கும் பூஷணமாக இராநின்ற கண்டத்தை மனதிலே தியானம் பண்ணக்கடவன். க்ஷீராப்தி மதனசமயத்திலே தம்மாலே தரிக்கப்பட்ட மந்தர பருவதத்தினுடைய சுழலினாலே மிகவும் பிரகாசமாகப் பண்ணப்பட்ட தோள்வளைகளையுடையவைகளாயும், லோகபாலகர்களாலே ஆச்ரயிக்கப்பட்டவைகளாயும் இருக்கிற பகவானுடைய வாகுகளையும், சகிக்கக்கூடாத தேஜோமயத்தை யுடையதான சுதரிசனத்தையும், பகவானுடைய தாமரை புஷ்பம் போலே கோத்த கையிலே ராஜஹம்சம் போலிராநின்ற சங்கத்தையும் நன்றாகத் தியானம் பண்ணக்கடவன். சத்துருபடாளுடைய ரத்தமாகிய சேற்றினாலே பூசப்பட்டும் மிகவும் இஷ்டமாயும் இருக்கிற பகவானுடைய கதையைத் தியானம் பண்ணக்கடவன் வண்டுகளுடைய கூட்டத்தினாலே சப்திக்கப்படாநின்று இருக்கிற வனமாலையையும், சீவ தத்துவமாயும் நிர்மலமாயுமிருக்கிற கவுஸ்துவ மணியையும், திருமார்பிலே பூணூலினுடைய தேஜஸையும் பகவானுடைய கண்டத்திலே இருக்கிறதாகத் தியானம் பண்ணக்கடவன். பக்தர்களுடைய இருதயங்களிலே

கிருபையோடே கூடிக்கொண்டு அவர்கள் புத்தியினுலே கிரகிக்கப்பட்ட திவ்விய மங்கள மூர்த்தத்தையுடையவரான பகவானுடைய யாதொரு திருமுக மண்டலமானது மிகவும் விளங்கா நின்ற மகரகுண்டலங்களுடைய சோதியினுலே பிரகாசிக்கப்பட்டதாயும், நிர்மலங்களாயிருக்கிற கபோலங் களையுடையதாயும், உன்னதமான நாசிகையை யுடையதாயும் விளங்க நிற்கிறதோ அந்த முகாரவிந்த மண்டலத்தைச் சிந்திக்கக்கடவன். பகவா னுடைய விக்கிரகங்களான முன்னெற்றி மயிர்களுடைய சமுகத்தினுலே சூழப்பட்டுப் பத்மம்போல கோத்த நேத்திரங்களையுடையதாய் இருக்கிற யாதொரு திருமுக மண்டலமானது—தன்னுடைய காந்தியினுலே வண்டு களினுலே சூழப்பட்டு, மீன்களுக்கு ஆச்ரியமாயும் ஸ்ரீ மகாலட்சுமிக்கு ஸ்தானமாயும் இருக்கிற பத்மத்தைத் திரஸ்கரிக்கிறதோ, மற்றும் மிகவும் விளங்கா நின்ற புருவங்களையுடையதாய் மனதிலே ஆவிர்ப்பியாநின்றிருக் கிறதோ அந்தத்திருமுக மண்டலத்தை ஆலசியம்இல்லாதவனுய்த் தியானம் பண்ணக்கடவன். மிகவும் கிருபையினுலே அதிகோரமான தாபத்திரயத்தை நாசம் பண்ணுகிறதன் பொருட்டு விடப்பட்டும் மனேக்கியமான மந்தகாசத் துடனே கூடிக்கொண்டு மகத்தான பிரகாசத்தை யுடையதாயும் இருக்கிற அந்தப் பகவானுடைய நேத்திரங்களுடைய கடாட்சத்தை இருதயத்திலே ஒழியாத பாவனையினுலே சர்வகாலமும் தியானம் பண்ணக்கடவன். பிரபன்னுளான சமஸ்தபக்தர்களுடைய தீவிரமான சோகத்தினுலே உண்டாகாநின்ற கண்ணீராகிற சமுத்திரத்தை உலர்த்திப் போடா நின்றும், மிகவும் கம்பீரமாயும் இருக்கிற ஸ்ரீ ஹரியினுடைய மந்தகாசத் தையும்; முனீசுவரர்களுக்கு உபகாரத்தின் பொருட்டும், தன்னுடைய மாயையினுலே அவர்களை மோகிப்பிக்கிறதிலே பிரவர்த்தியா நின்ற மன்மதனை மோகிப்பிக்கிறதன்பொருட்டும் பண்ணப்படாநின்ற புருவ மண்டலத்தையும் தியானம் பண்ணக்கடவன். தன்னுடைய இருதயா காசத்திலே பார்க்கப்படாநின்ற புருவ மண்டலத்தையும் தியானம் பண்ணக்கடவன். அதரோஷ்டங்களுடைய அதிகமான காந்தியினுலே சிவந்தவையாயும், சூக்ஷ்மங்களாயும் இருக்கிற தந்தங்களாகிற குருக்கத்தி மொக்குகளுடைய பந்தியையுடையதாயும் மிகவும் சுந்தரமாயு மிருக்கை யினுலே பிரயத்தனமன்றியே தியானத்துக்கு விஷயமாயும் இருக்கிற பகவானுடையபுன்சிரிப்பைப்பிரேமாதிசயத்துடனே கூடிக்கொண்டிருக்கிற பக்தியினுலே அதிலே சமர்ப்பிக்கப்பட்ட மனதையுடையவனுய்க்கொண்டு தியானம் பண்ணக்கடவன். அதனை விட்டு வேறே ஒன்றைப்பார்க்க இச்சியாமல் இருக்கக்கடவன். இந்தப் பிரகாரம் பகவானுன ஸ்ரீ ஹரி யினிடத்திலே அடையப்பட்ட பிரேமாதிசயத்தை உடையவனுய் பக்தி யினுலே உருகாநின்ற இருதயத்தை உடையவனுயும், சந்தோஷத்தினுலே உண்டாகாநின்ற ரோமாஞ்சிதத்தை யுடையவனுயும், மிகவும் ஆசை யினுலே உண்டாகாநின்ற ஆனந்த பாஷ்பத் திவலைகளாலே வியாபிக்கப் படாநின்றும், ஆனந்தப்பிரவாகத்திலே முழுகினவனுய்

இருக்கக்கடவன். கீர்த்திக்க இயலாத பகவானுடைய கீர்த்தனத்திலே உபாயமாயிருந்த சித்தமானது மெள்ள மெள்ளத் தியான விஷயரான பகவானிடத்தில் பிரியாமல் நிற்கும் பிரேமபரவசனாய் அந்த ரூப **தாரணை யிலே** பிரயத்தனமில்லாதவனாய் விடுவன். எப்போது மனதானது விஷய சூனியமாயும் ஆசிரயத்தை விட்டிடாமலும் விரக்தியை யுடையதாயும் இருக்கிறதோ அப்போது ஆசிரயமான கடாட்சத்தை விட்டிடாநின்று— அக்னி சுவாலையானது சாந்தியை யடைகிறாப்போல சாந்தியையடையா நிற்கும். அப்போது புருஷனானவன் தேக முதலான உபாதி சூனியனாய்க் கொண்டு, தியானம் பண்ணுகிறவன் என்கிற வியாபகமும் சூனியனாகி, பரிபூரணராயும் சர்வ வியாபியாயும் இருக்கிற பரமாத்மாவைப் பார்ப்பன், அந்தப் புருஷனும் யோகாப்பியாசத்தினாலே பண்ணப்படுகிற பரமாத்மா வைப்பார்ப்பன். ஆசிரயத்தை விடாநின்றும் சூனியனாயும் இருக்கிற மனதி னுடைய நிவர்த்தியினாலே, சுகதுக்கங்களுக்குட்படாது அப்பாற்பட்ட வரான அந்தப் பரமாத்மாவினிடத்திலே நிஷ்டையை அடைந்தவனாய் பூருவ சுகதுக்கங்களை அனுபவிக்கிறான் என்கிறது. அசத்தாயும் அஞ்ஞா னத்தினாலே பண்ணப்படா நின்று அகர்த்தாவாயும் இருக்கிற அகங் காரத்திலே, யாதொன்றிருந்ததோ அந்த யோகதிரவத்தைப், போட்டுப்பின் பரமாத்தும சாட்சாத்காரத்தை யுடையவனாய் இருப்பன். இந்தப்படிக்கு யோகசித்தியையுடைய புருஷனானவன் யாதொரு தேகத்தில் நின்று பரமாத்தும சொரூபத்தையடைந்தானோ அந்தத்தேகம் ஆசனத்தை விட்டு எழுந்திருந்தாலும், திரும்ப அங்கேயேயிருந்தாலும், தெய்வகதியாய் அந்த இடத்தை விட்டு அப்பாலே யிருந்தாலும், திரும்பவும் தெய்வகதி யாய் அங்கேயே வந்திருந்தாலும், அந்தத்தேகத்தையும் பாரான். எப்படி யானால் மயக்க வஸ்துவாகிய மத்திய பானத்தினாலே உண்டான மதத்தி னாலே ஒன்றுந்தெரியாமல் இருக்கிற புருஷனானவன் வஸ்திரத்தைத் தன் சரீரத்திலே சுற்றப்பட்டிருக்கிறதையும், நழுவி விழுந்து போனதையும் அறியானோ அப்படிப்போல தேகத்தையும் அறியான். பூர்வீகமான புண்ணியபாவ வாசனையினாலே சஞ்சரித்துக்கொண்டிராநின்ற அந்தத் தேகமும் தன்னை அவலம்பித்த பிராப்த கர்மம் எந்த மட்டும் இருக்கிறதோ அந்த மட்டுக்கும் இந்திரியங்களுடனே கூடினதாய் நிச்சயமாக சீவித்துக் கொண்டிருக்கும். அடையப்பட்ட **சமாதி** யோகத்தை யுடையவனாயும் அதனாலே அறியப்பட்ட ஆத்துமதத்துவனாயும் இருக்கிற அந்தப் புருஷ னானவன் புத்திரமித்திராதிகளோடே கூடிக்கொண்டும் சொப்பனத்துக்குச் சமானமாய் இருக்கிற அந்த தேகத்தைத் திரும்பவும் ‘நான்’ ’எனது’ என்று அபிமானப்படான். எப்படியென்றால் புருஷனானவன் மிகவும் ஆஸ்திகத்தி னாலே ஆத்துமாவாக,- அபிமான விஷயமான புத்திராதிகளைக் காட்டிலும் தனத்தைக்காட்டிலும் வேறாக- அறியப்படுகிறானோ, அப்படிப்போல அபிமானத்துக்கு விஷயமான தேகாதிகளைக் காட்டிலும் ஆத்துமா என்கிற

புருஷனானவன் வேறென்றே அறியத்தக்கவன். எப்படியென்றால் அக்கினியானது சொலியாநின்ற காஷ்டத்தைக் காட்டிலும் தன்னிடத்தினின்றும் பிறவாநின்ற பொறிகளைக் காட்டிலும் புகையைக்காட்டிலும் வேறாகச் சொல்லப்படுகிறதோ அப்படிப்போல அபிமானத்துக்கு விஷயமான தேக இந்திரியங்கள் மனது இவைகளைக் காட்டிலும் ஆத்துமா வென்கிற புருஷனானவன் வேறாகச் சொல்லப்படுகிறான். சீவனென்று பெயரையுடையவனான அந்தப் புருஷனைக் காட்டிலும் பரப்பிரம்மமென்று சொல்லப்பட்ட பகவானானவர் வேறாக நிற்கிறார். அப்படியே பிரகிருதியைக்காட்டிலும் அதற்குப் பிரவர்த்தகரான பகவானானவர் வேறாக நிற்கிறார். சராசராத்துமாக்களான சதுர்விதப் பிராணிகளிலேயும் அந்தப் பரமாத்துமாவையும், அந்தப் பரமாத்துமாவினிடத்திலே நாலுவிதப் பிராணிகளையும், அந்த நாலுவிதப் பிராணிகளிலே பஞ்சபூத சுவரூபமென்கையையும் பகவானிடத்திலே அசஞ்சலமாக இராநின்ற புத்தியினாலே பார்க்கக்கடவன், எப்படியென்றால்—ஒரு அக்கினியானது காஷ்டங்களிலே, அந்தக் காஷ்டங்களுக்குப் பெருமை சிறுமை முதலான பேதத்தினாலே நானாவிதமாகக் காணப்படுகிறதோ அப்படிப்போல தேகத்திலே இராநின்ற புருஷனும் நானாவிதமாக அறியப்படுகிறான். ஆகையினாலே பரமாத்துமாவினுடைய அங்கியான சீவனுக்குப் பந்த ஏதுவாயும் ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய சக்தியாயும், காரிய காரண சுவரூபமாயும், இப்படிப்பட்டதென்று சிந்திக்கக்கூடாமலும் இருக்கிற பிரகிருதியை அந்தப் பகவத் பிரசாதத்தினாலேயே ஜயித்துப்போட்டுப் பரமாத்தும சுவரூபானுபவத்துடனேகூட இருக்கக்கடவன். இது, பாகவத புராணத்திலேயும் யோக யாக்யவல்கியத்திலேயும் **அஷ்டாங்க யோகக்கிரமம்** சாதித்த அர்த்தத்தை விசிதமாகச் சுலோகார்த்தப் பிரகாரம் எழுதியிருக்கிறது. அப்பால்தேக தத்துவத்தைக் குறித்து எழுதப்படுகிறது.

## (ii) தேகதத்துவம்

தேகதத்துவம் என்னவென்றால் முன்கடந்த மூன்று யுகத்திலும் பிரம்ம க்ஷத்திரிய வைசியாள் முதலான பெரியோர்களும் அரோக திடகாத்திர மிகுந்த பலசாலிகளாய் பூர்ணாயுசும் பெற்றிருந்தும் சமுசார தாரபுத்திராதிகளிலே நோவுபட்டு மோட்ச வீட்டைத் தேடும்படியான ஞானம் வந்த போதும் காயபுஷ்டி திடசித்தம் பூரணமாய் இருக்கிறபடியால் அரோகிகளாய் ஜிதேந்திரியாளாய் சித்து அசித்து ஈசுவரனென்ற மூவகைத் தத்துவத்தையும் உணர்ந்து, இந்தத் திரேகக் கூரையை அறிந்து, பிரகிருதி-ஆத்தும விவேகம் பண்ணித் தன்னைத்தான் அறிந்து, யோகாப்பியாசத்தால்

தனக்குள் இருக்கிற ஈசுவரனைக் கண்டு ஆனந்தித்துக்கொண்டே யிருப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் தாரா புத்திராதிகளிடத்திலும் மோகம் வையாமல் பிரதிகிருதி-ஆத்தும விவேகத்தால் தத்துவ நிருபணம் பண்ண, பெரியோர்களுடைய இருபத்து நாலென்கிற பட்சத்திலேயும், இருபத்தெட்டென்கிற பட்சத்திலேயும் வேறே இதற்குமேல் தத்துவமில்லையென்றும் அறிந்து புருஷன், சத்துவம், ரசோ, தமோகுணங்கள், பிரகிருதி, மகத்துவம், அகங்காரம், ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பிருதிவி, சுரோத்திரம், துவக்கு, நேத்திரம், நாசி, சிங்ஙுவை, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம், மனசு, சப்தம், ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம் ஆக இருபத்தெட்டு தத்துவமென்று பெரியோர்கள் அபிப்பிராயத்தால் சொல்லுவார்கள். இந்தத் தத்துவங்களுக்கு விஷயமான தத்துவங்கள்-இவையுடனே தொண்ணூற்ருறு தத்துவங்கள் உண்டென்று கொண்டு இவைகளால் தன்னைத்தான் அறிந்து, திரேகத்தில் ருசியை வையாமல் சகலத்தையும் உதறிப் போட்டு, காடு, மலை, குகைகளில் வாசம் பண்ணி யோகாப்பியாசத்தை யடைந்து எம்பெருமானைக் கலந்தார்கள். அவர்கள் லீலா விபூதியிலிருந்தும் இராதவர்களாய், பிரகிருதி—ஆத்துமவிவேகம் பண்ணினது எப்படியென்ருல்-திரேகமானது பரமாத்துமா வல்லவென்று; அப்படியே இந்திரியங்களும் பரமாத்துமாவல்ல; இந்திரியங்களுக்கு அபிமான தேவர்களும் பரமாத்துமாவல்ல; இந்தப் பிரகாரம் விவேக ஞானத்தை உடையவனுய் பிராணன், புத்தி, மனசு, சித்தம், அகங்காரம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், ரூபம், ரசம், கந்தம், ஸ்பரிசம், சப்தம், பிரகிருதி இவைகளும் ஜடங்களான படியினுலே இவைகளும் பரமாத்துமாவல்ல; அன்ன விகாரங்களான விஷய இந்திரியங்களாலே குணமோ தோஷமோ ஒன்றும் உண்டாகமாட்டாது. அது எப்படியென்ருல் நாலு பக்கமும் வியாபிப்பியாநின்றும், மறைவாக இராநின்றும், விட்டுப் போகா நின்றும் இருக்கிற மேகங்களாலே சூரியனுக்கு ஒரு குணதோஷமில்லையோ அப்படிப் போல, உண்டாகா நின்றும் நசியாநின்றும் இருக்கிற வாயு, அக்கினி, ஜலம் இவைகளுடைய குணங்களான சீதோஷ்ணுதிகளாலேயும் ஸ்பரிசிக்கப்படாமலிருக்கிறதோ அப்படிப்போல, சமுசார ஏதுவான சத்துவ, ரஜஸ், தமோ குணங்களாலே பரமாத்துமாவானவன் ஸ்பரிசிக்கப் படாமலிருக்கிருர். ஆனுலும் திடமான பக்தி யோகத்தினுலே மனதுக்கு விகார ஏதுவான விஷயங்களிலே பிரீதியானது எப்போது தள்ளப்படு கிறதோ அந்த மட்டுக்கும், மாய்கையினுலே (மாயையினுலே) பண்ணப் படாநின்ற அந்த விஷயங்களிலே ஆஸ்தியானது வர்ஜிக்கத்தக்கது. நன்ருகச் சிகிச்சை பண்ணப்படாமலிருக்கிற வியாதியுடைத்தான மனுஷ்யாளுக்கு அடிக்கடி உண்டாகாநின்ற வியாதி பீடியா நிற்கிறதோ அப்படிப்போல வர்ஜிக்கப்படாமல் இருக்கிற ராகத்துவேஷாதிகளையும் அதற்கு முதலான கர்மங்களையும் உடையதான மனதானது, தாராபுத்தி ராதிகளிடத்திலே வாஞ்சையை உடையவனுயும் அஞ்ஞானனுயும்

இருக்கிற புருஷனைக் கெடுத்துப்போடா நிற்கும். மிகவும் பிரயாசையான யோகமார்க்கத்தை யுடைய புருஷன், தேவர்களாலே ஏவப்பட்டுப் புத்திராதி ரூபமான விக்கினங்களாலே பீடிக்கப்பட்டவனானாலும், அவன் சென்மாந்தரத்திலேயும் இந்த சென்மத்திலேயும் பண்ணப்பட்ட அப்பியாச யோக பலத்தாலே யோக மார்க்கத்தையே ஆச்ரயிப்பான், கர்ம மார்க்கத் தையும் ஆச்ரயிப்பான். ஆகையால் புருஷனானவன் பரமாத்துமாவினுடைய சொரூப சுபாவங்களை நன்றாக அறிந்தானாகில், அந்தப் பரமாத்தும ஞானத்தினாலே காமக்குரோத லோப முதலான மனோதோஷங்களைச் சேதித்தவனாய், எதற்காக எதனையும் இச்சியாமல் நின்றுகொண்டு திரேகத்தைப் போஷிப்பான், அவன் சரீரத்தை ரதமாகவும், சுரோத்திரியம் முதலான இந்திரியங்களை தேர்க் குதிரைகளாகவும், இந்திரிய ராசனான மனசே குதிரைக் கடிவாளமாகவும், சப்தாதி விஷயங்களே தேரோடும் வீதிகளாகவும், புத்தியே சாரதியாகவும், சத்துவ முதலான குணத்தை ஈச்வரனாலே சிருஷ்டிக்கப்பட்ட பந்தனமாகவும், தசவித வாயுவே இருசாக வும், தர்மார்த்தங்களே சக்கரங்களாகவும், அபிமானியான சீவனே ரதிக னாகவும், அந்த ரதிகனான சீவனுக்குப் பிரணவத்தைத் தனுசாகவும், அபிமானமான சீவனே பாணமாகவும், பரமாத்துமாவே குறியாகவும் பெரியோர்கள் சொல்லுவார்கள். மேலும் அப்படிப்பட்ட பரமாத்துமாவி னுடைய நாபிகமலத்தினின்றும் அவதரித்த சதுர்முகப்பிரம்மாவி னுடைய இருதயத்திலே யிராநின்ற அந்தகாரத்தினின்றும் நாதமானது உண்டாயிற்று.

## (iii) பிரணவம்

யாதொரு நாதமானது காதுகளுடைய ரந்திரத்தை மூடினால் நம்மி டத்திலேயும் அறியப்படுகிறதோ, யாதொரு நாதப் பிரம்மத்தினுடைய வாசனையினாலே, யோகீச்வரராளான பெரியோர்கள் ஆத்யாத்மிகமென்றும், ஆதிபௌதிகமென்றும், ஆதிதைவிகமென்றும் சொல்லப்படுகிற தாபத்திர யத்தையும் ஆணவம், கன்மம், மாயை, எனப்பட்ட மூன்று விதமான அந்தகாரத்தினுடைய மலத்தையும் உதறிப்போட்டு மோட்சத்தை அடை கிறார்களோ அந்த நாதத்தினின்று மும்மாத்திரையுடையதாகவும் சூட்சும ரூபமாகவும் இருதயத்திலே சுயம்பிரகாசமாகவுமிருக்கிற **பிரணவ மானது** உண்டாயிற்று. யாதொரு பிரணவமானது, பகவானாயும் பரப் பிரம்மமாயும் இருக்கிற பரமாத்துமாவுக்கு வாசகமாக நிற்கிறதோ, காதானது மூடப்பட்டிருந்தாலும் இந்திரிய வாசங்களில்லாமலே ஞான ரூபனான பரமாத்துமாவானவர் இந்தப் பிரணவத்தைக் கேட்டுக் கொண்டி ருக்கிறாரோ, அந்தப் பரமாத்துமாவினுடைய வாசக மாகா நிற்கிறது;

யாதொரு பிரணவத்தினுலே சமஸ்தவாக்கும் பிரகாசிக்கப்படுகிறதோ, யாதொரு பிரணவமானது இருதய ஆகாசத்தில் இராநின்ற பரமாத்துமாவினின்றும் உண்டாகா நிற்கிறதோ, யாதொரு பிரணவமானது தனக்குக் காரணமாயும் பரப்பிரம்மமாயும் இருக்கிற பரமாத்துமாவுக்குச் சாட்சாத் வாசகமாக நிற்கிறதோ, அந்தப் பிரணவமானது-அகார உகார மகாரமானவை பீஜமாய் சமஸ்த மந்திரங்களுக்கும் சூட்சும ரூபமாயும் சமஸ்த வேதங்களுக்கும் காரணமாயும், சர்வதா யோகரூபமாகா நிற்கிறது. அந்தப் பிரணவத்துக்கு அகாரம், முதலான மூன்று வாசகங்களானவை-யாதொரு வர்ணங்களாலே சத்துவ ரசோ, தமோ குணங்களும், ருக்குவேதம், எசுர்வேதம் சாம வேதங்களும், பூலோக புவர்லோக சுவர்லோகங்களும், சாக்கிர சொப்பன சுக்ஷுப்திகளும் தரிக்கப்படுகின்னறனவோ அந்தப்பரப்பிரம்ம சுவரூபியான பகவானைக் குறிக்கும். அந்தப் பகவானுனவர் பிரம்மாவைச் சிருஷ்டித்தார். நாலு முகங்களாலேயும் சப்த வியாகிருதி, பிரணவம் இவைகளோடு கூடிக் கொண்டு இருக்கிற நாலு வேதங்களையும் எக்கியங்களையும் சொல்லவேணுமென்று இச்சையினுலே சிருஷ்டித்து, ஓர்த்த தாரணத்திலே மிகவும் மிகவும் சமர்த்தர்களாய் இருக்கிற தம்முடைய புத்திரர்களான சனக சனந்தன சனத்குமார சனத்சுஜாதர் பொருட்டு அந்த வேதங்களை உபதேசித்தார். அந்த வேதங்களானவை மகாநியமனத்தை உடையவர்களாயும் அவர்களுடைய சிஷ்யர்களாயும் திகழ்ந்த மகாரிஷிகளாலே நாலு யுகங்களிலேயும் பரம்பரையாக வந்தது. அந்த வேதங்களானவைகள் துவாபரயுகாந்தத்திலே வியாசராலே விபாகம் பண்ணப்பட்டது. கலியுகத்திலே ஸ்ரீமந் நாராயணனே பரமகுருவாய், சேதன ரட்சணுர்த்தம் பொருட்டு மாறன் சடகோபனென்றும், **நம்மாழ்வாரென்னும்** ஞானதேசிகனென்றும் வகுளாபரணனென்றும் பூவைசிய குலத்தில் அவதரித்து நாலு வேதமும் ஆறுசாஸ்திரமும் சுருதி ஸ்மிருதியும் உபநிடதமும் எடுத்துக் கடைந்து சுவையமிர்தமாகிய திராவிட வேதமென்னும் திவ்விய பிரபந்தமாய்,—பெண்களும் பேதையும் கடைத்தேறும் பொருட்டு மண் பாண்டமாய் இராநின்ற வேதத்தைச் சொர்ண பாண்டமாக்கிச் சகலரும் உச்சீவிக்கும்படி தமிழ்வேதமாய்—விபாகம் பண்ணப் போகிருரென்று மார்க்கண்டேய புராணத்திலும் பாகவதத்திலும் பாத்மத்திலும் பிரமாண்ட புராணத்திலும் பிரம்ம புராணத்திலுஞ் சொல்லப்படும்.

———

## 3. க்ஷீராப்தி மர்த்தனம்.

### தேவஸ்துதி.

அத்திரி மகரிஷியினுடைய புத்திரராயும், பிரசித்தராயும் மிகவுங் கோபிஷ்டராயும் சமஸ்த லோகங்களுக்கும் பயங்கரராயும் ருத்திரனுடைய அம்சத்தினலே உண்டானவராயும் பிரும்ம ரிஷியாயும் இருக்கிற துருவாச மகரிஷியானவர் ஒருகால் கின்னரர்களாலே வாசம் பண்ணப்படாநின்ற மகா மேருவினுடைய பாரிசத்தையடைந்து அவ்விடத்திலே நித்தியமாகத் தேவதைகளை ஆராதித்துக்கொண்டிருந்தார். அந்த மகரிஷியானவர் அவ்விடத்திலே கின்னரர்களாலே பூசிக்கப்பட்டவராய் ஒரு வருஷம் வாசம் பண்ணிக் கொண்டிருந்து பிற்பாடு மகேந்திரனைப்பார்க்க இச்சையுடைய வராய்க் கொண்டு சுவர்க்கலோகத்துக்குப் போனர். மகாதேஜசுவியான மகரிஷியானவர் அந்தச் சமயத்திலே அயிராவத புருடனும் சமஸ்த தேவர்களாலேயும் பூசிக்கப்படாநின்றும் தேவேசனும் இருக்கிற தேவேந்திரனைப் பார்த்தார். அந்தத் துருவாச மகரிஷியானவர் இந்திரனைப் பார்க்க, அவன் சந்துஷ்டமான மனதையுடையவனய் ஸ்தோத்திரம் பண்ணி வணக்கத்தை யுடையவனய் இருப்ப, அவனுக்கு ஒரு பாரிசாத புஷ்பமாலையைக் கொடுத்தார். தேவராஜனை தேவேந்திரனும் அந்த மாலையை வாங்கி அயிராவதத்தினுடைய சிரசிலே வைத்துக்கொண்டு நந்தவனத்தைக்குறித்துப் போனன். பிறகு மகாமதத்தையுடையதான அந்த அயிராவதமும் அந்த மாலையைத் தும்பிக்கையினலே எடுத்துக் கசக்கிச் சின்னமாயிருக்கிற அந்த மாலையைப் பூமியிலே எறிந்து போட்டது. பிறகு மகாதபசுவியான துருவாச மகரிஷியானவர் அதைப்பார்த்துக் கோபத்தையடைந்தவராய் சிவந்த நேத்திரங்களை யுடையவராய் கோபாக்கினியினலே தபிக்கப்பட்டவராய்க் கொண்டு இந்திரனைப் பார்த்து இப்படிச் சொன்னர்:— வாராய் இந்திரனே! யாதொரு காரணத்தினலே மூன்றுலோக சம்பந்தத் தோடே கூடினவனய்க் கொண்டு நம்மாலே கொடுக்கப்பட்ட மாலையை அனுதரவு பண்ணினயோ, ஆகையினலே இந்தத் திரைலோக்கிய சம்பத்தானது நசித்துப்போகக் கடவது. இதிலே சந்தேக மில்லையென்று இப்படித் துருவாச மகரிஷியினலே சபிக்கப்பட்டவனய் தேவேந்திரனனவன் தன்னுடைய பட்டணத்தை யடைந்தான். பிறகு மூன்று லோகத்துக்கு மாதாவான ஸ்ரீ மகாலட்சுமியானவள் க்ஷணத்திலே சுவயமாக அந்தர்த்தானத்தையடைந்தாள். ஸ்ரீ மகாலட்சுமியினுடைய அந்தர்த்தானத்தை யுடையதான மூன்று லோகமும் அந்த க்ஷணத்திலே நஷ்டமாயிற்று. ஸ்தாவரசங்கம சுவரூபமான சமஸ்த செகத்தும் யாதொரு மகாலட்சுமியினுடைய கடைக்கண்ணை ஆச்ரயித்துக் கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட ஸ்ரீ மகாலட்சுமியானவள் அந்தர்த்தானத்தை யடைந்திருக் கையில் சமஸ்த செகத்தும் மிகவும் நஷ்டமாயிற்று. பிரம்மா முதலான சமஸ்த தேவர்கள், கந்தருவர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், தைத்தியர்கள்,

தானவர்கள், நாகங்கள், மனுஷ்யர்கள், ராக்ஷசர்கள், பசுக்கள், பட்சிகள், கிடங்கள், தாவர சங்கம ரூபங்களான சமஸ்தபிராணிகளும் செகந்மாதாவான ஸ்ரீ மகாலட்சுமியினுலே பார்க்கப் படாதவர்களாய்க் கொண்டு மகத்தாகிய தாரித்திரியத்திஞலே மிகவும் துக்கத்தையுடையவர் களாயும் பசிதாகங்களாலே மிகவும் பீடிக்கப்பட்டவர்களாயும் சருவகால மும் முறையிட்டுக்கொண்டிருந்தன. மேகங்கள் வருஷியாமற் போயின. சமஸ்தமான தடாகங்களும் உலர்ந்துபோயின. சமஸ்த விருட்சங்களும் புஷ்பங்களிஞலே வர்ஜிக்கப்பட்டவைகளாய் உலர்ந்துபோய்விட்டன. ஸ்ரீ மகாலட்சுமியினுடைய கடாட்சத்திஞலே வர்ஜிக்கப்பட்ட சமஸ்த செகத்தும் சூனியமாய்விட்டன. எக்கியபாக சூனியாளான தேவர்களும் துர்ப்பலர்களாய் ஆகிவிட்டார்கள். பிறகு தேவர்கள், கந்தருவர்கள், தைத்தியர்கள், தானவர்கள், சமஸ்தமான பேர்களும் பசிதாகங்களிஞலே பீடிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு மிகவும் தேஜசையுடையவரான பிரம்மா வையடைந்து தேவேசராயும் பகவானுடைய நாபிகமலத்திலே உண்டாகா நின்றும் இருக்கிற பிரம்மாவைப் பார்த்து இப்படிச் சொன்ஞர்கள்:—

**தேவர்கள் வாக்கியம்:** வாரீர் பகவானே! பசி தாகங்களாலே பீடிக்கப்படாநின்ற இந்த மூன்று லோகமும் எக்கியாதி கர்மவர்ஜிதமாயும் சமஸ்த வர்ணுச்ரம தர்மங்களாலே வர்ஜிக்கப்பட்டும் மிகவும் துக்கத்தை யுடையதாய் இருக்கின்றன. ஷதத்தியர்கள், கந்தருவர்கள், மனுஷ்யர்கள் சமஸ்தமான பேர்களும் பசிதாகங்களாலே பீடிக்கப்பட்டவர்களாய்க் கொண்டு சருவலோகேசுவரராயும் ரட்சகராயும் இருக்கிற உம்மைச் சரணமாக அடைந்தார்கள். வாரீர் தேவேசனே! பசிதாகங்களாலே பீடிக்கப்படாநின்ற இந்த செனங்களை ரட்சிக்கக் கடவீரென்று சொல்லா நின்ற அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுச் சதுர்முகன் இப்படிச் சொன்ஞர்:- வாருங்கோள் சமஸ்த தேவர்களே! தயித்தியர்களே! கந்தரு வர்களே! மனுஷ்யர்களே! என்னுடைய வசனத்தைக் கேட்கக் கடவீர்கள், ஜகத்து நாசகரமாயும் பயங்கரமாயும் இருக்கிற இந்த உபத்திரவ மெல்லாம் தேவேந்திரனுடைய அபசாரத்திஞலே உண்டாயிற்று. யாதொரு காரணத்திஞலே தேவேந்திரஞனவன் மஹானுபாவரான துருவாச மகரிஷியை அவமதி பண்ணிஞனே, ஆகையிஞலே வாருங்கோள் தேவர்களே.! மிகவும் கோபத்தை யடையாநின்ற அந்த மகரிஷியிஞலே மூன்று லோகமுஞ் சபிக்கப்பட்டது. சதாகோபத்தையுடையவரான அந்தத் துருவாச மகரிஷியானவரின் கோபத்திஞலே கலங்காநின்ற இருதயத்தை யுடையவளாய்க் கொண்டு, அன்னையாயும் ஸ்ரீமந் நாராயணப்பிரியை யாயும் இருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியானவள் அந்தர்த்தானத்தையடைந் தாள். சமஸ்தலோகங்களும் யாதொரு மகாலட்சுமியினுடைய கடாட்சத்தி ஞலே பார்க்கப்பட்டனவாய்க் கொண்டு சருவகாலமும் சுகத்தையுடையன வாய் இருக்கின்றனவோ அவை இப்போது துக்கமடையா நின்றன.

ஜகன்மாதாவான ஸ்ரீ மகாலட்சுமியினாலே பார்க்கப்படாதவர்கள் துக்கங்களுக்கு இருப்பிடமன்றோ! ஆகையினாலே நாமெல்லாம் க்ஷீரசமுத்திரத்தினுடைய உத்தமமான தீர்த்தத்தையடைந்து அவ்விடத்திலே சகல லோக நாயகராயும் தேவ தேவராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரை ஆராதிப்போம். ஸ்ரீமந் நாராயணர் பிரசன்னமானால் சமஸ்த ஜகத்தும் மிகவும் மங்களத்தை உடையதாய்விடும். அந்தப் பிரமாவானவராலே இப்படி நிச்சயம் பண்ணி, சமஸ்த தேவ கணங்களாலே சூழப்பட்டவராய்க் கொண்டு பிருகுவாதி மகரிஷிகளோடே க்ஷீரசமுத்திரத்தை யடைந்தார்கள். பிரமருத்திரர்களும் சமஸ்த தேவர்களும், அந்த க்ஷீரசமுத்திரத்தினுடைய உத்தரதடத்திலே புருஷ சூக்தத்தினாலே கிரமமாக ஸ்ரீமந் நாராயணரை ஆராதித்தார்கள். ஸ்ரீமத் அஷ்டாட்சர மந்திரத்தையும் புருஷ சூக்தத்தையும் ஜபித்துக்கொண்டு மனதினாலே பரமேசுவரரான ஸ்ரீமந் நாராயணரைத் தியானம் பண்ணிப் புருஷோத்தமரான ஸ்ரீமந் நாராயணரைக் குறித்து ஓமம் பண்ணினார்கள். அந்தச் சமயத்திலே பகவானானவர் சகலவேத சுவரூபியான கருடாழ்வாருடைய புஜத்திலே எழுந்தருளியிரா நின்றுகொண்டு அவ்விடத்திலே ஆவிர்ப்பவித்தார். ஜகதீசுவரனாயும் சங்கு சக்கர கதா தரனாயும் பீதாம்பரதாரியாயும் செந்தாமரை புஷ்பம்போல நேத்திரங்களை யுடையவராயும் ஸ்ரீ வத்ஸ கவுஸ்துபங்களாலே விளங்கா நின்ற திருமார்பையுடையவராயும் வனமாலையினாலே அலங்கரிக்கப்பட்டவராயும் கிரீடம், ஆரம், கேயூரம், கடகம், நூபுரம் முதலான ஆபரணங்களாலே மிகவும் விளங்காநின்றும் இருக்கிற ஜகதீசனை பகவானைப் பார்த்து சமஸ்த தேவர்களும் ஆனந்த பாஷ்பங்களினாலே பூரிக்கப் பட்டவர்களாய்க்கொண்டு சாஷ்டாங்கமாகத் தெண்டாகாரமாகப் பிரணாமம் பண்ணி, வேதமந்திரங்களினாலே ஸ்தோத்திரம் பண்ணினார்கள். பிறகு சமஸ்த தேவர்களுக்கும் பிரசன்னராய் பகவானானவர் சமஸ்தமான பேர்களுக்கும் தரிசன விஷயராய் மகரிஷிகளாலே ஸ்தோத்திரம் பண்ணப் பட்டவராய்க்கொண்டிருந்தார். பிரம்மா முதலான சமஸ்த தேவர்களும் ஒழியாமல் அனேகம் பிரணாமங்களைப்பண்ணி, ஜய சப்தத்தினாலே ஸ்தோத்திரம் பண்ணினார்கள். பிறகு பகவானானவர் சமஸ்த தேவர்களுக்கும் பிரசன்னராய் உங்களுடைய அபீஷ்டத்தைக் கேட்கக் கடவீர்களென்று தேவர்களைக் குறித்துச் சொன்னார். பிறகு, சந்துஷ்டர்களான பிரம்மா முதலான சமஸ்த தேவர்களும் அஞ்சலிபந்தத்தை யுடையவர்களாய் ஈசுவரனான பகவானைக் குறித்து இப்படிச் சொன்னார்கள்:-

**தேவர்கள் வாக்கியம்:** வாரீர் பகவானே! துருவாச மகரிஷி சாபத்தினாலே மூன்று லோகமும் சம்பத்தினாலே வர்ஜிக்கப்பட்டு, தேவாசுர மனுஷ்யர்களோடே கூடிக்கொண்டிருக்கிற சமஸ்த ஜகத்தும் பசிதாகங்களாலே மிகவும் பீடிக்கப்படாநின்று மிருக்கின்றன. ஆகையினாலே, வாரீர்

புருஷோத்தமரே! தேவரீரைச் சரணமாக அடைந்தோம். சமஸ்த லோகத்தையும் ரட்சிக்கக் கடவீர். தேவரீரை அன்றிக்கே ரட்சிக்கிறவன், ஒரு இடத்திலேயும் ஒரு காலத்திலேயும் இல்லை. இப்படி, சமஸ்த தேவர்களாலேயும் சொல்லப்பட்டவராய் பகவானுன பரமேச்வரரானவர் இப்படி சிந்தித்து பிரமா முதலான சமஸ்த தேவர்களைக் குறித்து ஒரு வார்த்தை சொன்னுர்:- **பகவான் வாக்கியம்:-** வாருங்கோள் தேவர்களே! துருவாச மகரிஷி இந்திரனுக்கிட்ட சாபத்தினுலே ஸ்ரீ மகாலட்சுமியானவள் அந்தர்த்தானத்தை அடைந்திருக்கிருள். ஸ்ரீ மகாலட்சுமியினுடைய கடாட்சத்தினுலே ஜகத்தானது ஐசுவரியத்தோடே கூடினதாயிருக்கிறது. ஆகையால் பிரும்மா ருத்திரன் முதலான சமஸ்த தேவர்களான நீங்கள் மந்தர பருவதத்தை அடியோடே பிடுங்கி, க்ஷீரசமுத்திரத்திலே போட்டு, சர்ப்பராசனுன வாசுகியினுலே சூழப்பட்ட அந்த மந்தர பருவதத்தை மத்தாகப் பண்ணி, தைத்திய கந்தருவ தானவர்களோடே கூட க்ஷீராப்தியை மதனம் பண்ணக் கடவீர்கள். அந்த க்ஷீராப்தியிலே ஸ்ரீ மகாலட்சுமியானவள் ஜகத்தினுடைய சர்வரக்ஷணத்தின் பொருட்டு உண்டாகப் போகிருள். அது சந்தேகமில்லை. நானே கூர்ம ரூபத்தினுலே அந்த மந்தர பருவதத்தைச் சர்வப் பிரகாரத்தினுலேயும் தரிக்கிறேன். என்னுடைய சக்தியினுலே மிகவும் பலத்தையுடையவர்களாய் சமஸ்த தேவர்களும் மர்த்தனம் பண்ணக்கடவீர்கள். இப்படி ஸ்ரீ ஹரியினுலே சொல்லப்பட்டவர்களாய் பிரமா, ருத்திரன், இந்திரன் முதலான சமஸ்த தேவர்களும் சிலாகித்துக்கொண்டு ''அப்படியே செய்கிருேம்'' என்று பகவானைக் குறித்துச் சொன்னுர்கள். பிறகு ஸ்ரீய: பதியான அச்சுதரானவர் சமஸ்த தேவர்களாலேயும் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டவராய் அந்தர்த்தானத்தை யடைந்தார். இவை இப்படிக் கென்று ருத்திரன் பார்வதிக்குச் சொன்னுர்.

இப்பால் ஸ்ரீ கூர்மாவதாரமும், ஸ்ரீ மகாலட்சுமி அவதாரமும் சொல்லப்படும்.

———

## 4. ஸ்ரீ மகாலட்சுமி அவதாரம்.

ஒருநாள் சமஸ்த தேவ கணங்களும் மகாபலசாலிகளான தானவர்களும் மந்தர பருவதத்தைப் பிடுங்கி க்ஷீரசமுத்திரத்திலே போட்டார்கள். பிறகு சகலலோக பூஜ்யராயும் பகவானுயும் ஸ்ரீய: பதியாயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரானவர் கூர்ம ரூபத்தினுலே அந்தப் பருவதத்தைத் தரித்தார். ஆதி மத்தியாந்தம் இல்லாமல் இருக்கிற பகவானுனவர் ஒரு புஜத்திலே பருவதத்தினுடைய சிகரத்தையுந்தரித்தார். சமஸ்த தேவர்களும் சர்ப்பராஜனை வாசுகியினுலே சூழப்பட்ட மந்தர பருவதத்தை மத்தாகப் பண்ணிக்கொண்டு க்ஷீரசமுத்திரத்தைக் கடைந்தார்கள். மகா பலசாலிகளான தேவதைகளாலே ஸ்ரீ மகாலட்சுமியினுடைய உற்பத்தி நிமித்தமாக க்ஷீரசமுத்திரமானது கடையப் படுகையில் சமஸ்தரிஷிகளும் நியமத்தோடே கூட உபவாசமிருந்து உத்தமமான சூக்த மந்திரத்தைச் செபித்தார்கள். தேவர்களும் பிராமணோத்தமர்களும் சகஸ்ரநாம பாராயணத்தைப் பண்ணிஞர்கள். சுத்தமான ஏகாதசியிலே க்ஷீரசமுத்திரமானது கடையப்படுகையில் சமஸ்தமான ரிஷீச்வரர்களும் பிராமணர்களும் உபவாசமிருந்து உத்தமமான சூக்த மந்திரத்தைச் செபித்துக் கொண்டு ஸ்ரீ மகாலட்சுமியினுடைய ஜென்மத்தைக் கோரினவர்களாய் ஸ்ரீமந் நாராயணரைத் தியானம் பண்ணி ஆராதித்தார்கள். அப்போது அந்தச் சமயத்திலே அந்தச்சமுத்திரத்திலே முன்னே காளகூட விஷமானது உண்டாயிற்று. மகாபயங்கரமாயும் பிரளய காலாக்கினி போலேயும் இருக்கிற அந்தக் காளகூட விஷத்தைப்பார்த்துச் சமஸ்தமான தேவாசுரர்களும் பயத்திஞலே பீடிக்கப்பட்டவர்களாய் ஓடிப்போனுர்கள். பிறகு ஓடிப்போகா நின்றும் பயத்தினுலே மிகவும் துக்கிதர்களுமாய் இருக்கிற அந்தத் தேவசிரேஷ்டர்களைப் பார்த்து அவர்களுடனே ருத்திரன் ஒரு வார்த்தை சொல்லுகிருன்:- ''வாருங்கோள் சமஸ்த தேவ கணங்களே! நீங்கள் காளகூட விஷத்தைக் குறித்துப் பயப்படவேண்டாம்; நான் இந்தக் காளகூட விஷத்தைப் பக்ஷித்துப் போடுகிறேன்'' என்று இப்படி ருத்திரன் சொல்ல, இந்திரன் முதலான தேவர்களும் மிகவும் வணங்கினவர்களாய், சாதுவாக்கியங்களாலே ருத்திரனைத் தோத்திரம் பண்ணினுர்கள். மிகவும் பயங்கரமாக உண்டாகாநின்ற அந்தக் காளகூட விஷத்தைப் பார்த்து, ருத்திரனுகிய நான் எனது இருதயத்திலே கருடத்துவசராயும் பாலசூரியனுக்குச் சமானராயும் சங்கு சக்கர கதாதரராயும் ஸ்ரீதேவி பூதேவி சமேதராயும் சர்வாபரண பூஷிதராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரை ஏகாக்கிரமான மனதிலே தியானம் பண்ணி சருவ துக்க ஹரமான நாமத்திரயமகாமந்திரத்தைச் செபித்துக்கொண்டு பக்தியோடே

கூடினவனுய் மிகவுங் கோரமாயும் சருவலோக பயங்கரமாயும் இருக்கிற அந்தக் காளகூட மகாவிஷத்தைப் பக்ஷித்தேன். சருவ பரிபூரணரான ஸ்ரீமந் நாராயணருடைய நாமத்திரயப் பிரபாவத்தினுலே சருவலோக சங்காரமான அந்த மகாவிஷமானது ஜரித்துப் போயிற்று. **அச்சுதா, அனந்தா, கோவிந்தா** என்று பிரணவாதியாயும் நமோ அந்தமாயும் இருக்கிற ஸ்ரீ அரியினுடைய இந்த நாமத்திரயத்தைப் பரிசுத்தனுய்க் கொண்டு யாரொருவன் பக்தியினுலே ஜபிக்கிருனே அவனுக்கு மிருத்யு பயமும் விஷரோகமும் அக்கினி இவைகளாலே உண்டாகிற பயமும் இல்லை. பரிசுத்தனுன யாரொருவன் நாமத்திரய மகாமந்திரத்தை ஜபிக்கிருனே அவர்களுக்கு அகாலமிருத்யு பயமும் இல்லை, மற்று ஒரு பயமுமில்லை. இனி வேண்டியதென்ன! நாமத்திரய பிரபாவத்தினுலே காளகூட மகா விஷமானது சீரணமாகப் பண்ணப்பட்டது. பிறகு சமஸ்த தேவர்களும் மிகவும் சந்துஷ்டர்களாய் ருத்திரனைக் குறித்து பிரணுமம் பண்ணி ஸ்தோத்திரம் பண்ணி மிகவும் ஆச்சரியத்தை யுடையவர்களாய் திரும்பவும் க்ஷீரசமுத்திரத்தைக் கடைந்தார்கள். இப்படிக் கடையப்படா நின்ற அந்தச் சமுத்திரத்திலே மாயா அங்குசத்தினுடைய அங்குசத்தி னின்றும் சிவந்த வஸ்திரம் புஷ்பமாலை இவைகளாளே சூழப்பட்டவளாய்ச் சேஷ்டாதேவி உண்டாளுள். உண்டாகாநின்ற அந்தச் சேஷ்டாதேவி யானவள் ''என்னுலே என்ன செய்யத் தக்க'' தென்று சமஸ்த தேவர்களை யும் பார்த்துச் சொன்னுள். அப்போது சமஸ்த தேவர்களும் அந்தச் சேஷ்டா தேவியைப் பார்த்து, இப்படிச் சொன்னுர்கள்:— எந்த பேர்களு டைய கிரகத்திலே நித்தியமாய்க் கலக முண்டாகிக் கொண்டிருக்கிறதோ அந்தக் கிரகத்திலே உனக்கு இடங்கொடுத்தோம். அசுபத்தோடே கூடின வளாய்க் கொண்டு அந்தக் கிரகத்திலே வாசம் பண்ணக் கடவாயாக. எந்தப் பேர்கள் குரூர வார்த்தையைச் சொல்லுகிருர்களோ, அபத்தத்தைச் சொல்லுகிருர்களோ, எந்தப் பாபிகள் மதித்த மனதை யுடையவர்களாய், சந்தியா காலத்திலே நித்திரை பண்ணுகிருர்களோ— வாராய், துக்க தாரித்திரங்களை நேத்திரங்களாக உடையவளே!— அவர்களுடைய கிரகத்திலே நித்தியமாய் வாசம் பண்ணக் கடவாய். தலையோடு, கேசங்கள், பஸ்மம், அஸ்தி, உமித்தணல் இவைகள் எவ்விடத்தில் இருக்கின்றனவோ அவ்விடத்திலே உனக்கு நித்தியமாய் ஸ்தானம் உண்டாகப் போகிறது: சந்தேகமில்லை. யாதொருவனுடைய தேகத்திலே எலும்பு, பஸ்மம் கேசங்கள் இவைகளுடைய சின்னங்கள் இருக்கின்றனவோ அந்தப் புருஷனை நித்தியமாகக் கலகத்தோடே கூடினவனென்று அடையக் கடவாய். வாராய் தேவி! புத்திஹீனனுனவன் யாரொருவன் பாதசுத்தி யைப் பண்ணிக் கொள்ளாமல் ஆசமனம் பண்ணுகிருனே அந்தப் புருஷனை பாபத்தோடே கூடினவனுய்க் கொண்டு நித்தியமாக அடையக் கடவாய், எந்த மனுஷியாதமர்கள் புல், ஓடு, கல், மணல், இரும்பு, தோல் இவை களாலே தந்ததாவனம் பண்ணுகிருர்களோ அவர்களுடைய கிரகங்களிலே

கலியோடே கூட நித்தியமாக வாசம் பண்ணக் கடவாய். எந்த மனுஷியர்தமர்கள் எள்ளு புண்ணுக்கு, கஞ்சா, முள்ளங்கி, பீர்க்கு, சித்திரகம், விட்டுவராகம், கோவைக்காய், கோதாதகி, சுரைக்காய், பில்வக்காய் இவைகளைப் பக்ஷிக்கிறார்களோ—வாராய், தரித்திரப் பிரியையே! அவர்களுடைய கிரகத்திலே உனக்கு நித்தியமாக ஸ்தானம் உண்டாகக் கடவது. இப்படி சமஸ்த தேவர்களும் கலிக்கு இஷ்டையானவளை ஆஞ்ஞாபித்துவிட்டுத் திரும்பவும் எத்தனம் உடையவர்களாய் க்ஷீர சமுத்திரத்தைக் கடைந்தார்கள். பிறகு மனோக்கியமான முகத்தை உடையவளாய் வாருணிதேவி யுண்டானாள். மனோக்கியமான நேத்திரத்தை யுடையவளான அவளை நாகராஜனான அனந்தன் கிரகித்தார். பின்பு சருவாபரண பூஷிதையாய் தந்திரா தேவியுண்டானாள். சருவ லட்சண சம்பன்னையானவள் கருடாழ்வாருடைய பாரியையானாள். பிறகு மிகவும் தேஜசையுடையவர்களாயும் திவ்வியமான ரூபத்தையுடையவர்களாயும், சந்திர சூரியாக்கினி போலேயொத்த பொலிவையுடையவர்களாயும் திவ்வியாளாயும் இருக்கிற அப்ஸரஸ்திரீ கணங்களும் கந்தர்வர்களும் உண்டானார்கள். பிறகு அந்த அயிராவதம் எனப்பட்ட கஜசிரேஷ்டமும், உச்சைசிரவசு எனப்பட்ட அசுவமும், தன்வந்திரியும், பாரிஜாதமும், சர்வாபீஷ்ட பிரதான காமதேனுவும் உண்டாயின. இவையெல்லாம் தேவேந்திரனானவன் சந்துஷ்டமான மனதை யுடையவனாய் கிரகித்தான். பிறகு ருத்திரன் முதலான சமஸ்த தேவர்களாலேயுங் கடையப்படாநின்ற அந்த க்ஷீரசமுத்திரத்திலே துவாதசியிலே சூரிய உதய சமயத்திலே சந்துஷ்டமான முகத்தை யுடையவளாய் தேவரிஷிகளாலே ஸ்தோத்திரம் பண்ணப்படாநின்றும் சர்வ லோகேசுவரியாயும் இருக்கிற **ஸ்ரீ மகாலட்சுமி** யுண்டானாள். கோடி பால சூரியர்களுக்குச் சமமான தேஜசை யுடையவளாயும் சுவர்ணமயமான வஸ்திராபரணங்களை யுடையவளாயும் சுவர்ண கமலத்திலே யிராநின்றும் சருவ லட்சண சம்பன்னையாயும் பத்மதளம் போலே தீர்க்கமான லோசனங்களை யுடையவளாயும் நீளங்களான கேசங்களை யுடையவளாயும் திவ்விய சந்தனத்தினாலே பூசப்பட்ட சரீரத்தை யுடையவளாயும் திவ்விய புஷ்பங்களினாலே அலங்கரிக்கப்பட்டும் நவரத்தினமயமான சருவாபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் சூக்ஷ்மமான இடையை யுடையவளாயும் ஜகத் ரக்ஷகையாயும் பருத்தும் உன்னதமாயும் இருக்கிற ஸ்தனங்களையுடையவளாயும் நாலு புஜங்களையுடையவ்ளாயும் பூரண சந்திரனுக்குச் சமமான திருமுக மண்டலத்தை யுடையவளாயும் வசுபாத்திரம் மாதுலங்கம் இரண்டு சுவர்ண பத்மங்கள் இவைகளைச் சர்வா பூஷிதமான நாலு அஸ்தங்களினாலே தரியாநின்றும், ஒருகாலத்திலும் வாடாததாய் இருக்கிற பத்மமாலையைத் தன் மார்பிலே தரியாநின்றும், சகல லோகங்களுக்குஞ் சுபகரையாயும் சமஸ்த பிராணிகளுக்கு ஈசுவரியாயும் மாதாவாயும் ஸ்ரீமந் நாராயணப் பிரியையாயும் சகத்ரக்ஷகையாயும் உண்டாகாநின்றும்,

ஸ்ரீமந் நாராயணருடைய வக்ஷ ஸ்தலத்தை அடையாநின்றும் இருக்கிற மகாலட்சுமியைப்பார்த்து சமஸ்த தேவர்களும் சந்துஷ்டர்களாய் சுவர்க்கத்திலே படக முதலான வாத்தியங்களைச் சப்தித்தனர். புஷ்ப வர்ஷங்களை வர்ஷித்தார்கள். ஸ்ரீ மகாலட்சுமியை மிகவும் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். கந்தருவர்கள் கானம் பண்ணினார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் பண்ணினார்கள். புண்ணியகரங்களாயும், மனோக்கியகரங்களாயும் இருக்கிறவாயுக்கள் வீசின. சூரியனும் மகாதேஜஸை யுடையவனாய்ப் பிரகாசித்தான். அக்கினி சுபகரமாகச் சொலித்தது. திக்குகள் நன்றாய்ப் பிரகாசித்தன. சமஸ்தமான பேர்களும் ஸ்ரீ மகாலட்சுமியைப் பார்த்து, திவ்வியமான ஸ்தோத்திரங்களினாலே ஸ்துதி பண்ணிச் சாஷ்டாங்கமாகப் பிரணாமங்கள் பண்ணினார்கள். பிறகு அந்தச் சமுத்திரத்திலே அமிர்த மயமான கிரணங்களை யுடையவனாயும் லோகமாதாவான ஸ்ரீமகாலட்சுமிக்குப் பிராதாவாயும் சுபகரமாயும் நட்சத்திரங்களுக்கு ராஜாவாயும் சகல லோகங்களுக்கும் அம்மானாயும் இருக்கிற சந்திரனானவன் உண்டானான். பிறகு பூமியிலே ஸ்ரீ ஹரிக்கு மிகவும் இஷ்டையாயும், லோகபாவனியாயும் புண்ணிய ரூபியாயும் ஜெகத் ரக்ஷகையாயும் இருக்கிற துளசி தேவி யானவள் ஸ்ரீ ஹரிக்குப் பூஜார்த்தமாக உண்டானாள். பிறகு பிரம்மா, ருத்திரன் முதலான சகல தேவர்களும் சந்துஷ்டமான மனதை யுடையவர்களாய் பரிபூரண மனோரதாளாய், அந்த மந்தர பருவதத்தை முன்போலே இருந்த இடத்திலே வைத்துவிட்டு, லோகமாதாவான ஸ்ரீ மகாலட்சுமியை வந்தடைந்து, லட்சுமியைச் சகஸ்ரநாமத்தினாலே ஸ்தோத்திரஞ்செய்து, ஸ்ரீசூக்த மஹா மந்திரத்தை ஜபித்தார்கள், பிறகு ஸ்ரீமகாலட்சுமியானவள் பிரசன்னையாய் சமஸ்த தேவர்களையுங் குறித்து ஒரு வார்த்தை சொன்னாள்:- வாருங்கள், தேவர்களே! உங்களுக்கு மங்களம் உண்டாகக் கடவது. அபீஷ்டத்தைக் கேட்கக் கடவீர்கள் நான் உங்களுடைய இஷ்டத்தைக் கொடுக்கிறேன் என்று சொல்லாநின்ற ஸ்ரீ மகாலட்சுமியினுடைய வார்த்தையைக் கேட்டுச் சமஸ்த தேவர்களும் சந்துஷ்டர்களாய்ச் சாஷ்டாங்கப் பிரணாமம் பண்ணி அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ மகாலட்சுமியைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார்கள்:- வாராய், ஸ்ரீமகாலட்சுமி! சகல லோகேசுவரரான ஸ்ரீமந் நாராயணப் பிரியையே! எங்களுக்குப் பிரசன்னையாகக் கடவாய்: ஸ்ரீ ஹரியினுடைய மார்பிலே ஒருகாலும் இடைவிடாமல் இருக்கக்கடவாய். வாராய், தேவி! மூன்று லோகமும் உன்னாலே விடத்தக்கதன்று. இது எங்களுக்கு இஷ்டமான வரம். ஸ்தாவர சங்கம ரூபமான சமஸ்த ஜன்மங்களும் உன்னுடைய கடாக்ஷத்தை ஆசிரயித்திருக்கின்றன. சமஸ்த தேவர்களும் பூர்வத்திலே உன்னாலே கடாக்ஷிக்கப்பட்டார்கள். பிரமா, ருத்திரன் முதலான சமஸ்த தேவர்களுக்கும் உன்னுடைய கடாக்ஷத்தினாலே ஐசுவரியம் உண்டாயிற்று. வாராய், ஜகன் மாதாவே! அந்த ஐசுவரியமானது எங்களுக்கு நித்தியமாக இருக்கக் கடவது. உமக்கு

அனேகம் பிரணாமம் பண்ணுகிறோம்—என்று இப்படி சமஸ்த தேவர்களாலேயும் பிரார்த்திக்கப்பட்டவளாய், லோகமாதாவாயும் லோகேசுவரியாயும் ஸ்ரீமந் நாராயணப் பிரியையாயும் இருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியானவள் சமஸ்த தேவர்களைக் குறித்து, அப்படியே ஆகக்கடவதென்று வரங் கொடுத்தாள். பிறகு ஸ்ரீய: பதியாயும் சங்கு சக்கர கதாதரராயும் இருக்கிற பகவானும் பரமாத்துமாவாயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரானவர் அந்த க்ஷீரசமுத்திரத்திலே முன்பு போலே ஆவிர்ப்பவித்தார். அப்போது சமஸ்த தேவர்களும் ஜனார்த்தனரைப் பிரணாமம் பண்ணி, ஸ்தோத்திரம் பண்ணிச் சந்துஷ்டர்களாய் அஞ்சலி பந்தம் பண்ணிக் கொண்டு பகவானைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார்கள். வாரீர் பகவானே! சர்வேசுவரரே! தேவரீருடைய இஷ்ட மகிஷியாயும் தேவரீரை விட்டுப் பிரியாமலும் இருக்கிற ஸ்ரீ மகாலட்சுமியை ஜகத்தை ரக்ஷிக்கும் பொருட்டாகக் கிரஹிக்கக் கடவீரென்று சொல்லி பிரம்மா முதலான சமஸ்த தேவர்களும் ரிஷீச்வரர்களும் கூடி நவரத்தின மயமாயும், கோடி சூரியப் பிரகாசமாயும் இருக்கிற திவ்விய சிம்மாசனத்திலே ஸ்ரீ ஹரியையும் ஸ்ரீ மகாலட்சுமியையும் எழுந்தருளப் பண்ணி, ஆனந்த பாஷ்பத்தினாலே நனைக்கப்பட்டவர்களாய், திவ்விய வஸ்திரங்கள், திவ்விய நவரத்தின ஆபரணங்கள் இவைகளாலே ஸ்ரீமகாலட்சுமியுடனே எழுந்தருளியிராநின்ற பகவானை அர்ச்சித்தார்கள். திவ்வியமான கந்த தூபங்களாலேயும் அமிர்த மயமான நிவேதனங்களாலேயும் திவ்வியமான பலங்களாலேயும் பகவானை அர்ச்சித்தார்கள். இப்படி ஆராதித்து அடிக்கடி அனேகம் பிரதக்ஷிணப் பிரணாமங்கள் பண்ணி ஆனந்த பாஷ்பபரிபூரணர்களாய் திவ்விய ஸ்துதிகளாலே ஸ்தோத்திரம் பண்ணினார்கள். பிறகு பிரசன்னராயும் சர்வேசுவரராயும் சகலலோக நாயகராயும் இருக்கிற ஸ்ரீ ஹரியானவர் ஸ்ரீ மகாலக்ஷ்மியோடே கூட தேவர்களுக்கு அபீஷ்டங்களைக் கொடுத்தார். பிறகு தேவர்கள், மனுஷ்யர்கள், முதலான சமஸ்த பேர்களும் ஸ்ரீ மகாலக்ஷ்மியினாலே கடாக்ஷிக்கப்பட்டவர்களாய் சந்துஷ்டர்களாய் மிகவும் உண்டாகாநின்ற தன தானியம் முதலான சம்பத்தையுடையவர்களாய் ஆரோக்கியம் உடையவர்களாய், பரமமான சுகத்தையடைந்தார்கள்.

———

## 5. ஏகாதசி மகாத்துமியம்

பிறகு ஸ்ரீ மகாலட்சுமியுடனே கூட சந்துஷ்டமான இருதயத்தை யுடைய பகவானனவர் சமஸ்த லோகங்களுக்கும் இதத்தின் பொருட்டுச் சகலமான தேவர்களையும் ரிஷிகளையும் குறித்து ஒரு வார்த்தை சொன்னார்:-

**பகவானுடைய வாக்கியம்:** வாருங்கோள் பலசாலியான தேவர்களே! சமஸ்தரிஷிகளே! மிகவும் புண்ணியகரமாயும் சகல உபத்திரவங்களை நசியாநின்றும் இருக்கிற ஏகாதசியானது உங்களாலே ஸ்ரீ மகாலட்சுமியினுடைய சந்தர்சனார்த்தமாக உபவாசமாக இருக்கப்பட்டது. இன்று முதல் சமஸ்த லோகங்களுக்கும் அந்த ஏகாதசியானது உபவாசம் இருக்கத் தக்கதாக ஆகப்போகிறது. வாருங்கோள், ரிஷிசிரேஷ்டர்களே! உங்களாலே நான் ஸ்ரீ மகாலட்சுமியோடே கூட மிகவும் பூசிக்கப்பட்டேன். துவாதசியிலே விசேஷமாகத் திருத்துழாயுடனேயும், ஸ்ரீ மகாலட்சுமியுடனேயும் கூட நான் உங்களாலே நன்ருகப் பூசிக்கப் பட்டேன். ஆகையால் புண்ணியகரமான துவாதசியானது சர்வ காலத்திலேயும் எனக்கு மிகவும் இஷ்டமாகாநிற்கிறது. இன்று முதல் யாவர்கள் ஏகாதசியிலே உபவாசமிருந்து துவாதசியிலே சூரிய உதயத்திலே பரமமான சிரத்தையுடனே கூடினவர்களாய் என்னைத் துளசியுடனேயும் ஸ்ரீ மகாலட்சுமியுடனேயுங் கூட மிகவும் பக்தியினலே ஆராதிக்கிருர்களோ, அவர்கள் சகல கர்ம பந்தங்களினின்று விடுபட்டவர்களாய் என்னுடைய ஸ்தானமான பரமபதத்தை அடைவார்கள். வாருங்கோள் தேவசிரேஷ்டர்களே! பாபிகள், எந்த பேர்கள் துவாதசியிலே என்னை ஆராதிக்கவில்லையோ அவர்களுக்கு நரகத்திலே வாசமுண்டாகும். அதற்குச் சந்தேகமில்லை, வாருங்கோள், தேவோத்தமர்களே! இன்று முதல் எந்த பேர்கள் ஏகாதசியிலே புசிக்கிருர்களோ அவர்கள் நரகத்தை அடைவார்கள். சந்தேகமில்லை. தேவ தேவரான ஜனர்த்தனரானவர் இப்படித் தேவகணங்களைப் பார்த்துச் சொல்லி, தம்முடைய ஸ்தானத்தை அடைந்து, க்ஷீராப்தியிலே நாக சயனத்திலே கோடி சூரியப் பிரகாசமான விமானத்திலே ஸ்ரீ மகாலட்சுமியுடனே கூட ரமித்துக் கொண்டிருந்தார். தேவர்களுக்குத் தரிசனார்த்தமாக அந்த க்ஷீராப்தியிலே பகவான் பிரசன்னராய் எழுந்தருளியிருக்கிருர். பிறகு சமஸ்த தேவர்களும் கூர்மரூபியான பகவானை மிகவும் பக்தியினலே பூசித்து வணக்கத்தையுடையவர்களாய் ஸ்தோத்திரம் பண்ணினர்கள். பிறகு கூர்ம ரூபியான பகவானனவர் பிரசன்னராய் தேவர்களைக் குறித்து, வாருங்கோள், தேவர்களே! உங்கள் மனதிலே யாதொரு அபீஷ்டமிருக்கிறதோ அதைக் கேட்கக் கடவீர்கள் என்று சொல்லாநின்ற பகவானைக் குறித்து, சமஸ்தமான தேவர்களும் சந்துஷ்டமான மனதையுடையவர்களாய் அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு விஞ்ஞாபனம் பண்ணினர்கள்.

தேவர்களுடைய வாக்கியம்:— வாரீர் தேவேசனே! ஆதிசேஷனுக்கும் திக்குக் கஜங்களுக்கும் சகாயார்த்தமாக மகாபலசாலியான கூர்மரூபியான தேவரீர் சப்ததிவீபங்களுடனே கூடிக்கொண்டிருக்கும் பூமியைப் பரிக்கக் கடவீர் என்று பிரார்த்தியாநின்ற தேவர்களைப்பார்த்து, சகலலோக சரணியரான பகவானுனவர் 'அப்படியே ஆகட்டும்' என்று வரங்கொடுத்துச் சந்துஷ்டமான மனதையுடையவராய் சப்த திவீபங்களுடனே கூடிக் கொண்டிருக்கிற பூமியைத் தரித்தார். பிறகு தேவர்கள், கந்தருவர்கள், தைத்தியர்கள், தானவர்கள், மனுஷ்யர்கள் சமஸ்த பேர்களும் மகரிஷி களாலே அறிக்கை பண்ணப்பட்டவர்களாய்த் தங்கள் தங்கள் லோகங்களை யடைந்தார்கள் அன்று முதல் பிரும்மா முதலான சமஸ்த தேவர்களும் ரிஷிகளும் மனுஷ்யர்களும் யோகீசுவரர்களும் ரிஷிசிரேஷ்டர்களும் பகவானுடைய ஆக்ஞையை முன்னிட்டுக்கொண்டு பரமமான பக்தியோடே கூடினவர்களாய், சுத்தமான ஏகாதசியிலே உபவாசமிருந்து துவாதசியிலே ஜனார்த்தனரை யதாசாஸ்திரமாக ஆராதித்தார்கள். பகவானுடைய திவ்வியமான கூர்மாவதாரமும் வைபவமும் சமஸ்தமும் சொல்லப்பட்டது. இன்னம் எந்த மகிமையைக் கேட்க இச்சிக்கிருய். துவாதசி மகாத்துமியம் இனிமேல் சொல்லப்படும்.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

## 6. துவாதசி மகாத்துமியம்

துவாதசியினுடைய பிரபாவ மாத்திரத்தினலே பகவான் மிகவும் சந்துஷ்டமாகா நிற்கிருர், மனுஷ்யாளான பேர்கள் ஏகாதசியிலே உபவாச மிருந்த மாத்திரத்தினலே சகல பாபங்களாலேயும் விடுபட்டவர்களாய் ஸ்ரீ ஹரியினுடைய பரமபதத்தை அடைவார்கள். ஏழு ஜென்மங்களாலே பண்ணப்பட்டும்—ஞானத்தினலேயோ அஞ்ஞானத்தினலேயோ பண்ணப் பட்டுமிருக்கிற பாபங்களும் துவாதசியிலே ஸ்ரீ ஹரியினுடைய ஆராதனத் தினலே க்ஷணமாத்திரத்திலே நசித்துப்போகின்றன. அனேகமாயிரம் அச்வமேத யாகங்களும் அனேகமாயிரம் வாஜபேயங்களும் ஏகாதசி உப வாசத்துக்குப் பதினறில் ஒரு அம்சத்துக்குச் சரியாக மாட்டா, துவாதசி யானது மனுஷ்யாளுக்குத் தர்மப் பிரதமாயும், அர்த்தப் பிரதமாயும், காமப்பிரதமாயும், மோட்சப்பிரதமாயும், சர்வாபீஷ்டப் பிரதமாயு மாகா நிற்கிறது. ஏகாதசிக்குச் சரியாய் வேருெரு விரதமில்லை. யாதொருவன் ஏகாதசியை விட்டுவிட்டு மற்ருெரு விரதத்தை ஆச்ரயிக்கி

ரூனே, அவன் தன் கையிலே இராநின்ற உத்தமமான போஜனத்தை விட்டு விட்டுப் பிச்சையெடுக்கிறவனுக்குச் சமானம், பதினேரு இந்திரியங் களினாலேயும் யாதொரு பாபம் பண்ணப்படுகிறதோ ஏகாதசி உபவாசத் தினாலே சமஸ்த பாவமும் நசித்துப்போம். சமஸ்த புராணங்களும் ''ஏகாதசியானது அடிக்கடி வந்து கொண்டிருக்கையில் பாபத்தினின்றும் பயப்படவேண்டாம்; பயப்படவேண்டாம்'' என்று மிகவும் சொல்லு கின்றன. யாதொரு மூடாத்துமாவானவன் சுக்கில கிருஷ்ண ஏகாதசிகளை உபவாசமிராமல் விட்டு விடுகிருனோ அவன் பரமபதத்தைப் பார்க்க மாட்டான். யாதொருவன் ஏகாதசியிலே போஜனம் பண்ணுகிருனோ, போஜனம் பண்ணும் என்று சொல்லுகிருனோ, யாதொருவன் பிராமணனை யும், ஸ்திரீயையும் கோவையும் வதம் பண்ணென்று சொல்லுகிருனோ இவர் களுக்கு நரககதி உண்டாகும் ஏகாதசி வந்திருக்கையில் யக்ஞத்தின் புரோடாசமானாலும் ஒரு காலத்திலேயும் புசிக்கத்தக்கதன்று என்று சொல் லப்பட்டிருக்கிறது. ஆகவே அன்னத்தைப் புசிக்கலாகாதென்கிறதுக்குச் சொல்லவேண்டியதென்ன விருக்கிறது, பிராமணாதி வர்ணங்களுக்கும் பிரமசரியாதி ஆசிரமங்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஏகாதசி உபவாசம் பண்ணத்தக்கது. அதிலே சந்தேகமில்லை. ஏகாதசியிலே மாதா பிதாக்களு டைய சிரார்த்தம் வந்தால் அந்த சிரார்த்தமானது துவாதசியிலே கொடுக்கத்தக்கது. ஒரு காலத்திலேயும் உபவாச தினமான ஏகாதசியிலே கொடுக்கத் தக்கதன்று, பிதுர்த்தேவர்களும் தேவர்களும் ஏகாதசியிலே நிந்தனமான அன்னத்தைப் புசியார்கள். ஒருகாலத்திலும் ஏகாதசியிலே புசியாமல் இருக்கக்கடவன்; மத்திய பானம் பண்ணுமல் இருக்கக்கடவன். பிராமணவதை செய்யாமல் இருக்கக்கடவன் என்று இப்படி வேதமானது சொல்லுகிறது. ஆகையினாலே சுத்தமான ஏகாதசியிலே உபவாசத்தை ஆச்ரயிக்கக்கடவன். தசமி வேதையுடன் கூடின ஏகாதசியைப் பிரயத்தன பூர்வமாய் விட்டுவிடக்கடவன். சூரிய உதய சமயத்திலே திரயோதசியிலே துவாதசி கலா மாத்திரமிருந்தாலும் அப்போது சுத்தமான துவாதசியிலே உபவாசமிருக்கக்கடவன். அருணோதய சமயத்திலே சமஸ்த கர்மத்தையும் ஆச்ரயிக்கக் கடவன். கலாமாத்திரமிருந்தாலும் அந்தத் துவாதசியிலே பாரணை பண்ணக் கடவன். சுத்தமான ஏகாதசியையாகிலும் விட்டுவிடக் கடவன், துவாதசி விரதத்தை ஆச்ரயிக்கக்கடவன் இதிலே சந்தேகமில்லை. யாதொரு துவாதசியிலே சூரிய உதய சமயத்திலே ஏகாதசியானது கலாமாத்திர மிருக்கிறதோ பிராமணனானவன் முந்தின ஏகாதசியை விட்டுவிட்டுத் துவாதசியிலே உபவாச மிருக்கக்கடவன். இப்படி சாஸ்திர நியதியை நிச்சயித்து ஏகாதசியிலே உபவாசமிருக்கக் கடவன். தசமியி னன்று சாயங்காலத்திலேயும் போஜனம் பண்ணுமல் ஏகாதசியிலே அகோ ராத்திரத்திலேயும் போசனம் பண்ணுமல் துவாதசியிலே சாயந்தரம் போஜனத்தையும் பண்ணுமல் நாலுகாலம் போஜனத்தையும் பண்ணுமல் வர்ஜித்து இப்படி உபவாசமிருக்கக் கடவன். தசமியிலே ஒரு வேளை

போஜனம் பண்ணி ஸ்திரி சங்கத்தையும் விட்டுவிட்டுப் பூமியிலே சயனித்த வனுய் சுசியாய் ஏகாதசியிலே உபவாசமிருக்கக் கடவன். நெல்லிப் பருப்பி னுலே பூசப்பட்ட சரீரத்தை யுடையவனுய் ஒரு நதியிலே ஸ்நானம் பண்ணி உபவாசமிருந்து ராத்திரியிலே ஸ்ரீ ஹரியை ஆராதிக்கக்கடவன். ஸ்ரீ வைஷ்ணவனுனவன் தசமி, ஏகாதசி, துவாதசி இந்த மூன்று தினத்தி லேயும் பாஷாண்டியையும் கர்ம ஈனனேயும் பதிதனேயும் சண்டாளனேயும் பாராமல் இருக்கக் கடவன். சம்பாஷணமும் பண்ணுமல் இருக்கக் கடவன். யாதொரு பிராமணன் விஷ்ணு பக்தியில்லாமல் இருக்கிருனே அவன் பாஷாண்டனென்று சொல்லப்படுவன் சோர புத்திரன், சண்டாளனென்று சொல்லப்படுவன். இதிலே இப்படி நிச்சயம்; ராத்திரியிலே ஸ்ரீ ஹரியை ஆராதித்துத் தியானம் பண்ணக் கடவன். சுந்த புஷ்ப தூப தீபம் திவ்வியங் களான வஸ்திராபரணங்கள், ஜபம் ஸ்தோத்திரம் நமஸ்காரம் இவை களாலே மிகவும் பக்தியோடே ஸ்ரீ ஹரியை ஆராதித்துத் தியானம் பண்ணக் கடவன். பிறகு அருணுேதய காலத்திலே திருத்துழாயுடனே கூடிக்கொண்டிருக்கிற ஜலங்களாலே ஸ்நானம் பண்ணி, யதா சாஸ்திர மாகப் பிதுர் தேவர்களுக்குத் தர்ப்பணத்தையும் பண்ணி. ஜெகதீசுவரரான ஸ்ரீ ஹரியை ஸ்ரீ மகாலட்சுமியுடனே கூட கோமளங்களான திருத்துழாய் தளங்களாலேயும் புஷ்பங்களாலேயும் தூபதீபங்களாலேயும் ஆராதிக்கக் கடவன். ஆராதனத்திலே நூற்றெட்டுத் தீபங்களாலே பகவானே ஆராதிக் கக் கடவன். ஸ்ரீ ஹரிக்கும் ஸ்ரீ மகாலட்சுமிக்கும் பத்மமாலேயைச் சமர்ப் பிக்கக் கடவன். தூபதீபம் நைவேத்தியம் தாம்பூலம் முதலானவற்றைச் சமர்ப்பிக்கக் கடவன். சர்க்கரை ஆஜ்யம் இவைகளோடே கூடிக்கொண் டிருக்கிற தாம்பூலத்தைச் சமர்ப்பிக்கக் கடவன், மிகவும் பக்தியை யுடை யவனுய் பிரதக்ஷண நமஸ்காரங்களேச் செய்து அக்கினியிலே ஆஜ்யத்தி னுலே நூற்றெட்டு ஓமம் பண்ணக் கடவன். புருஷ சூக்தத்தினுலே ஆஜ்யத் தையும் ஸ்ரீ சூக்தத்தினுலே பாயசத்தையும் ஓமம் பண்ணி, பிராமணர் களுக்குத் ததியாராதனத்தையும் பண்ணக் கடவன். பிற்பாடு வாக்கு நியமத்தை யுடையவனுய் தானும் புசிக்கக் கடவன். புராண முதலான பாராயணத்தினுலே அந்தத் தினத்தைப் போக்கக் கடவன்; அந்த ராத்திரி யிலே பூமியிலே சயனித்துக் கொண்டவனுய் ஸ்திரீஸங்கமத்தை விட்ட வனுய் நித்திரை பண்ணக்கடவன், துவாதசியிலே இப்படி ஆராதிக்கப்படா நின்ற லக்ஷ்மீபதியான பகவானுனவர் சீக்கிரமாகப் பிரசன்னராய் சர்வா பீஷ்டங்களேயும் மிகவும் கொடுப்பார். வாராய் பார்வதி! இப்படி உத்தம மான துவாதசி விரதமானது நம்மாலே சொல்லப்பட்டது. இன்னம் எதைக் கேட்க இச்சிக்கிருயோ அதையுஞ் சொல்லக் கடவேன்.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

இனி பாஷாண்ட கண்டனம் சொல்லப்படும்.

# 7. பாஷாண்ட கண்டனம்

பார்வதியினுடைய வாக்கியம்:— வாரீர், பகவானே! நிந்திதத்தைக் காட்டிலும் மிகவும் நிந்திதமாயிருக்கிற பாஷாண்டிகளுடைய சம்பாஷணத்தை வர்ஜிக்கக் கடவனென்று யாதொன்று உம்மாலே சொல்லப் பட்டதோ, அந்தப் பாஷாண்டிகளுடைய சுவரூபத்தை எனக்குச் சொல்லக் கடவீரென்று கேளாநின்ற பார்வதியைப் பார்த்து ருத்திரன் வாக்கியம்:- வாராய் பார்வதி! எந்த பேர்கள் அஞ்ஞான மோகிதர்களாய்க் கொண்டு செகந்நாதரான ஸ்ரீமந் நாராயணரைக் காட்டிலும் அந்நிய தேவதையைப் பரமென்று சொல்லுகிறார்களோ, அவர்கள் பாஷாண்டிகளென்று சொல்லப் படுவார்கள். எந்த பேர்கள் விஷ்ணு பக்தர்களுக்குத் துவேஷிகளாய் இருப்பார்களோ, ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தை ஆசரியாமல் இருப்பார் களோ, பாஷாண்டிகளுடனே சங்கதி பண்ணிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் பாஷாண்டிகளென்று சொல்லப்படுவார்கள். எந்த பிராமணர்கள் ஸ்ரீ ஹரிக்கு மிகவும் இஷ்டமான சங்கு சக்கரம் ஊர்த்துவ புண்டரம் முதலான சின்னங்களாலே வர்ஜிக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்கள் பாஷாண்டிகளென்று சொல்லப் படுவார்கள். யாதொருவன் ஸ்ரீ ஹரியைச் சமஸ்த யக்ஞ போக்தாவாய் அறியாமல் பிற தேவதையின் பொருட்டு உத்தேசித்து ஓமம் பண்ணுகிறானோ தானம் பண்ணுகிறானோ கர்மங்களிலே சுதந்தரனாய் இருக்கிறானோ அவன் பாஷாண்டியென்று அறியத் தக்கவன். யாதொருவன் தேவ தேவரான ஸ்ரீமந் நாராயணரைப் பிரம்மா, ருத்திராதி தேவர்களுடனே சமமாகப் பார்க்கிறானோ அவன் பாஷாண்டியாய் விடுவன். யாதொருவன் சாக்கிரத, சொப்பன, சுக்ஷுப்தி அவஸ்தைகளிலே மனோ வாக்காய கர்மங்களாலே வாசுதேவரை அறியாமலிருக்கிறானோ அந்தப் பிரா மணனானவன் பாஷாண்டியாய் விடுவன். சுருங்கக்கூறின், எந்த பிராமணர் கள் விஷ்ணு பக்தியில்லாமல் இருக்கிறார்களோ அவர்கள் சண்டாளனைக் காட்டிலும் அதர்மனென்று சொல்லப்படுவார்கள். அவர்களுடைய சம்பாஷணஹஸ்த பரிசங்களைப் பிரதமத்திலேயே வர்ஜிக்கக் கடவன்.

வசிஷ்டர் வாக்கியம்:— வாராய்! திலீப மகாராசனே! இந்தப் பிரகாரம் ஈசுவரனாலே சொல்லப்பட்ட வார்த்தையைக்கேட்டுப் பார்வதி யானவள் பரமமான ஆச்சரியத்தை யடைந்தவளாய் பின்னையும் ஒரு வார்த்தை சொன்னாள். பார்வதியினுடைய வாக்கியம்:- வாரீர் பகவானே! பரமமான ரகசியத்தைக் கேட்கிறேன். என்னிடத்திலே பிரீதியினாலே சொல்லக் கடவீர். எனக்கு மிகவும் சம்சயம் உண்டாயிருக்கிறது, கபாலம், பஸ்மம், சர்மம், அஸ்தி இவைகளுடைய தாரணமானது வேதத்தினாலே நிந்திக்கப்பட்டிருக்கிறதன்றோ. வாரீர் தேவனே! இவைகளானவை உம்மாலே எந்த ஏதுவினாலே தரிக்கப்படுகின்றன. வாரீர் தேவேசனே!

ஸ்திரீ சாபல்யத்தினுலே உம்மைக் கேட்கிறேன். வாரீர் மகானுபாவரே! சொல்லுகைக்குச் சந்தேகப்பட வேண்டாம். வாரீர் பிரபுவே! உம்மாலே ஆச்ரயிக்கப்பட்டதென்று அகாரியமான இவையானவை ஒரு இடத்திலே யும், ஒரு காலத்திலேயும் செய்யத் தக்கதன்று. இந்தப் பிரச்னத்திற்கு உத்தரம் எனக்குச் சொல்லக் கடவீர் என்று பார்வதியினுலே ரகசியத்திலே கேட்கப்பட்டவராய் ருத்திரரானவர் மிகவும் ரகசியமான தம்முடைய ஆசாரத்தைச் சொன்னுர், ருத்திரன் வாக்கியம்:— வாராய் பார்வதி! மிகவும் ஆச்சரியகரமாயும், ரகசியமாயும் இருக்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறேன் கேட்கக் கடவாய்; என்னுலே சொல்லப்படுகின்ற இந்த அர்த்தமானது உன்னுலே சனங்களிடையே கொஞ்சமுஞ் சொல்லத் தக்க தன்று. என் சரீரத்தைக் காட்டிலும் வேறல்லாதவளான படியினுலே உனக்குச் சொல்லுகிறேன். பூர்வத்திலே சுவயம்புவ மனுவந்தரத்திலே நமுசி முதலான அசுரர்கள் மகாபராக்கிரம சாலிகளாயும் வெகு பலத்தை யுடையவர்களாயும் சமஸ்த தர்மங்களிலேயும் ஆசத்தியை யுடையவர் களாயும் பரிசுத்தர்களாயும், சகலபாப வர்ஜிதர்களாயும் வேத தர்மா னுஷ்டான பரர்களாயும் ஆக இருந்தார்கள். அவர்களாலே பங்கப்பட்டவர் களாய்ச் சகல தேவர்களும் பூர்வத்திலே மிகவும் பயத்தை யுடையவர் களாய் ஸ்ரீ ஹரியைச் சரணமாக அடைந்து அநேகம் பிரணமம் பண்ணி தேவ தேவேசரான ஸ்ரீ ஹரியைக் குறித்து வார்த்தை சொன்னுர்கள்:— தேவர்களுடைய வாக்கியம்:— வாரீர் தேவ தேவனே! சம்ரா சூரன் முதலான மகா தைத்தியர்களாலே மிகவும் பக்ஷுளாய் எமது ஸ்தானங்களே விட்டு விட்டுத் தேவரீரையே சரணமாக அடைந்தோம். தபசினுலே பாப சூனியர்களாயிருக்கிற அந்த அசுரர்கள் சமஸ்த தேவர்களுக்கும் ஜயிக்கக் கூடாதவர்களாக இருக்கிருர்கள். வாரீர் பகவானே! தேவரீர் தானே அந்த மகா அசுரர்களே ஜயிக்கக் கடவீர் என்று சொல்லாநின்ற தேவர் களுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்ரீ ஹரியானவர் அந்த அசுரர்கள் ஜயிக்கக் கூடாதவர்களாய் இருப்பதை அறிந்து என்னேப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னுர். பகவானுடைய வாக்கியம்:— வாராய் ருத்திரனே! நீ அசுரர்களுக்கு மோகனுர்த்தமாகப் பாஷாண்டர்களாலே ஆச்ரயிக்கப்பட்ட தர்மத்தை ஆச்ரயிக்கக் கடவாய். அந்த அசுரர்களேக் குறித்து தாமச புராணங்களேச் சொல்லக் கடவாய். மோகன சாஸ்திரங்களேயும் பண்ணக் கடவாய். எந்தப் பிராமணர்கள் ரிஷிகள் என்னிடத்தில் பக்தியில்லாமல் இருக்கிருர்களோ அவர்களிடத்திலே உன்னுடைய சக்தியினுலே பிரவேசித்துத் தாமச சாஸ்திரங்களேச் சொல்லக்கடவாய். கணுதர், கௌதமர், உபமன்யு, ஜெமினி, கபிலர், துருவாசர், மிருகண்டு, பிருகஸ்பதி, பார்க்கவர், பரசுராமர்—இந்தப் பத்து ரிஷிகளிலேயும் உன்னுடைய சக்தியினுலே பிரவேசித்து ஜகத்துக்கு அயிதமான ஆசாரத் தைப் பண்ணக் கடவாய், தாமச குணத்தை உடையதான உன்னுடைய சக்தியினுலே பிரவேசிக்கப்பட்ட அந்த ரிஷிகள் க்ஷணத்திலே மிகவும்

தாமசர்களாய் விடுவார்கள். இதிலே சந்தேகமில்லை. அந்த ரிஷிகள் மூன்று லோகத்திலேயும் உம்மைப் பரப்பிரம்மமாகச் சொல்லாநின்று கொண்டு தாமசமான புராணங்களையும் சாஸ்திரங்களையும் பண்ணப் போகிறார்கள். வாராய் தேவபூஜிதனே! நீயும் கபாலம், சர்மம், பஸ்மம் அஸ்தி யிந்தச் சின்னங்களைத் தரித்துக் கொண்டு மூன்று லோகத்திலேயும் சமஸ்த ஜனங்களையும் மோகிப்பிக்க நீ சுயமாகத் தானே பாசுபத சாஸ்திரத் தையும் பண்ணக் கடவாய். கங்காளம், சவ்வியம், பாஷாணம், மகாசவ்வியம் முதலான பேதங்களாலே மதங்களைப் பிடித்துக் கொண்டு பிராமணர்கள் வேத பாகியர்களாய்க்கொண்டு சமஸ்தமான பேர்களும் பஸ்மம் அஸ்தி களைத் தரிக்கிறவர்களாக ஆய்விடுவார்கள். அதிலே சந்தேகமில்லை. வாராய் பார்வதி! தேவ தேவரான பகவானாலே சொல்லப்பட்ட இந்த வார்த்தை யைக் கேட்டு மிகவும் சின்னமான மனசையுடையவனாயும் தீனனாயுமானேன். பின்பு தேவ தேவரான பகவானைப் பிரணாமம் பண்ணி ஒரு வார்த்தை சொன்னேன்;—வாரீர், தேவ தேவனே! உம்மாலே ஆஞ்ஞாபிக்கப்பட்ட இந்த மதத்தை நான் பூமியிலே பண்ணினேனேயானால் எனக்கு ஆத்ம நாசமே உண்டாகும்: அதிலே சந்தேகமில்லை. இப்போது இந்த மதமானது என்னாலே பண்ணுவதற்குச் சக்கியமன்று. தேவரீருடைய ஆஞ்ஞையும் உல்லங்கனம் பண்ணத்தக்கதன்று. இது எனக்கு மிகவும் துக்ககரமாய் இருக்கிறதென்று இந்தப் பிரகாரம் என்னாலே சொல்லப்பட்டவராய், தேவதேவரான பகவானானவர் என்னை மிகவும் சமாதானம் பண்ணி ஒரு வார்த்தை சொன்னார்:—வாராய், குழந்தாய்! உனக்கு இது ஆத்தும நாசத்தின் பொருட்டு உண்டாகிறதில்லை. தேவதைகளுக்கு இதத்தின் பொருட்டு என்னுடைய வசனத்தைச் செய்யக்கடவாய். ருத்திரனே! உனக்கும் தரிக்கிற உபாயத்தைச் சொல்லுகிறேன். நித்தியமாக என்னு டைய சகஸ்ரநாமத்தை ஜபியாநின்றுகொண்டும் இருதயத்திலே என்னைச் சர்வகாலமும் தியானம் பண்ணா நின்றுகொண்டும், என்னுடைய மந்திரத் தை ஜபிக்கக் கடவாய். அஷ்டாக்ஷர மகாமந்திரமானது உத்தாரகப் பிரம்மமென்று சொல்லப்படும். எந்த பேர்கள் பக்தியினாலே என்னைப் பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு முக்தியுண்டாகும்; சந்தேகமில்லை. கருநெய் தற் புஷ்பதளம் போலே சியாமளராயும் பத்மதளம் போலே யொத்த நேத்திரங்களை யுடையவராயும் சங்கம், சக்கரம், சார்ங்கம், பத்மம் இவைகளைத் தரியாநின்றும் சர்வாபரண பூஷிதராயும் பீதாம்பர தாரியாயும், சதுர்புஜராயும் சானகிப்பிரியகரராயும் இருக்கிற ஸ்ரீராமரைத் தியானம் பண்ணிக் கொண்டு ''ஸ்ரீ ராமாய நம:'' என்று இந்த மந்திர மானது உச்சரிக்கத் தக்கது. சமஸ்தே துக்கங்களையும் போக்கடிப்பதும், பாபிகளுக்கு முக்தியைக் கொடுப்பதுமாய் இருக்கிற இந்த மந்திரத்தை ஜபித்துக்கொண்டு நீ என்னுடைய அம்சமாக ஆகப் போகிறாய். பஸ்மம் முதலானவற்றினுடைய தாரணத்தினாலே உன்னிடத்திலே அசுசியானது உண்டாயிருக்கிறதோ, அது சுபகரமான இந்த மந்திரோச்சாரணத்தாலே

மங்களமாகவே யிருக்கும்; வாராய் சுரோத்தமனே! நான் உன்னுடைய சித்தத்தினின்றும் ஒருக்காலும் அப்பாலே போகாமலே யிருக்கிறேன். உனக்கு என்னைக்காட்டிலும் அந்நிய தேவதா பக்தியானது ஒருக்காலும் உண்டாகிறதில்லை. ஜகன்னாதனையும் புருஷோத்தமனையுமிருக்கிற என்னை இதயமதிலே, மனசினாலேதானே அர்ச்சிக்கக்கடவாய். என்னுடைய ஆக்கினையைச் செய்யக்கடவாய். என்னுடைய பிரீதியினாலே இதுவெல்லாம் உனக்குச் சுகமாகவே யிருக்கப்போகிறது என்று இந்தப் பிரகாரம் என்னைப் பார்த்து ஆஞ்ஞாபித்து, தேவதேவனான பகவானானவர் தேவகணங்களை விட்டுவிட்டார். பகவானாலே விடப்பட்ட அந்த இந்திரன் முதலான தேவாளும் என்னை வந்தடைந்து என்னைக் குறித்துப் பிரார்த்தித்தார்கள்: வாரீர், தேவதேவனே! ஸ்ரீ ஹரியினாலே இப்போது எந்தப்பிரகாரம் சொல்லப்பட்டதோ அந்த ஆஞ்ஞையைச் சீக்கிரமாகச் செய்யக்கடவீர் என்று. வாராய் பார்வதி! இந்தப் பிரகாரம் பிரார்த்தியாநின்ற தேவர்களுக்கு இதத்தின் பொருட்டுப் பாஷாண்டிகளுடைய விருத்தியை ஆச்ரயித்து, கபாலம், சர்மம், பஸ்மம், அஸ்தி இவைகள் என்னாலே தரிக்கப்பட்டன. பகவானாலே எனக்கு எப்படிச் சொல்லப்பட்டதோ அந்தப் பிரகாரம் நான் தாமசபுராணங்களையும் பாஷாண்ட சைவசாஸ்திரங்களையும் என்னுடைய சக்தியினாலே பிரவேசிக்கப்பட்ட கௌதமரிஷி முதலான பிராமணர்களைக் குறித்தும் என்னாலே வேதவிரோதங்களான சாஸ்திரங்களானவை நன்றாகச் சொல்லப்பட்டன. சமஸ்த ராக்ஷஸர்களும் என்னைப்பார்த்து இந்தமதத்தைப் பற்றித் தாமசகுணத்தையுடையவர்களாய் பகவானிடத்திலே துவேஷத்தை யுடையவர்களானார்கள். சமஸ்தமான தைத்தியர்களும் பஸ்மம் முதலானவற்றைத் தரித்துக்கொண்டு மிகவும் உக்கிரமான தபசை யுடையவர்களாய் மாமிசம், ரத்தம், புஷ்பம், கந்தம் முதலானவைகளாலே என்னையே ஆராதித்தார்கள். என்னிடத்தினின்றும் அபீஷ்டகாமிய வரங்களையடைந்து மிகவும் ஐசுவரியமதபலத்தினாலே கர்வத்தையுடையவர்களாயும் மிகவும் விஷயங்களிலே ஆசத்தியுடையவர்களாயும் காம குரோதங்களை யுடையவர்களாயும், சத்கர்மவீனர்களாயும் இருக்கிற அந்த அசுரர்கள் அப்போது தேவகணங்களாலே ஜயிக்கப்பட்டார்கள். சமஸ்த கர்மங்களைவிட்ட பேர்கள் காலக்கிரமத்திலே அதோகதியை யடைவார்கள். எந்தப் பேர்கள் என்னுடைய இந்த மதத்தைப் பற்றிப் பூமியிலே சஞ்சரிக்கிறார்களோ சகலமான அதர்மபராளான அவர்கள் நரகத்தை அடைவார்கள் வாராய் பார்வதி! இந்தப்பிரகாரம் தேவர்களுக்கு இதத்தின் பொருட்டு வேதத்தினாலே தூஷிக்கப்படாநின்ற பாஷாண்ட விருத்தியை ஆசிரயித்து, பகவானுடைய ஆக்கினையை முன்னிட்டுக் கொண்டு பஸ்மம் அஸ்திகளானவை என்னாலே தரிக்கப்பட்டன. தேவத் துவேஷிகளான அசுரர்களுக்கு மோகனார்த்தமாக இவைகள் பாஹ்ய சின்னங்களாகத் தரிக்கப்படுகின்றன. இதயத்துக்குள்ளே நித்தியமாக தேவதேவரான ஜகன்னாதரைத் தியானம் பண்ணிக்கொண்டு, தாரகப் பிரமம் என்ற மந்திரத்தைச் சர்வகாலமும்

ஜபித்துக் கொண்டிருக்கிறேன். ஸ்ரீமந் நாராயணருடைய சகஸ்ரநாமங்களுக்குச் சமானமான **ஸ்ரீ ராம அஷ்டோத்தர மந்திரத்தை** ஜெபிக்கிறவன் சர்வகாலமும் ஆனந்த சமுத்திரத்திலே முழுகினவனுய்க்கொண்டு பரமபுருஷார்த்தமான பரம்பிரம்ம சுகத்தைச் சர்வகாலமும் அனுபவிக்கிருன். வாராய்! பார்வதி: யாதொன்று உன்னுலே கேட்கப்பட்டதோ அந்தப் பிரச்னமானது சமஸ்தமும் என்னுலே நன்ருகச் சொல்லப்பட்டது. பிரீதியினுலே இன்னம் எந்த அர்த்தத்தைக் கேட்கவேணுமென்று இச்சிக்கிருயோ என்னைக்குறித்து அந்த அர்த்தத்தைக் கேட்கக்கடவாய்.

பின்னுலே மாயாவாத கண்டனம் சொல்லப்படுகிறது.

## 8. மாயாவாத கண்டனம்.

ஆத்மாவையும் பிரம்மமென்று மாயாவாதிகள் சொல்லுவார்கள். **முதலாவது** சகலமதஸ்தருக்கும் சகல சமயத்தாருக்கும் அந்தந்த மதங்களுக்குத் துதியாக ரிஷிகள் செய்த ஆகமங்களும் சாஸ்திரங்களும் உண்டாயிருக்கும். இந்த மாயாவாதிகளுக்கு ஒரு மாயாவாத சாஸ்திரமென்ருகிலும், மாயாவாத ஆகமமென்ருகிலும், சம்ஹிதையென்ருகிலும், ஒரு இதிகாசமென்ருகிலும் உண்டென்று எங்கும் சொல்லப்படவில்லை. யுக்திகளால் சாஸ்திரமென்று கட்டிச் சொன்னுல், எல்லாரும் பிரம்மமாச்சுதே, எந்தப் பிரம்மத்துக்கு எந்தப்பிரம்மம் சாஸ்திரம் சொல்லுகிறது! ஒரு பிரம்மம் சாஸ்திரம் சொன்னுல் கேட்கும் பிரம்மம் அஞ்ஞானமாக வேண்டும். சொல்லும் சுஞ்ஞானபிரம்மமும் கேட்கும் அஞ்ஞான பிரம்ம மாயலவோ காண்கின்றது! ஆகையால் சாஸ்திரமுண்டென்று சொன்ன போதும் மாயாவாதி சொன்ன பட்சம் தோற்றது. பிரம்மத்தை 'சர்வக்ஞன்' என்று சொன்ன சுருதிக்கு விரோதமாம். **இரண்டாவது** இப்போது ஞானவானுன ஆசாரியன் உபதேசிக்கவும் அஞ்ஞானனுகிய சிஷ்யன் உபதேசம் கேட்கவும் கண்டு வருகிறபடியால் பரமாத்மாவோடு ஆத்மகோடிகளையும் ஒன்றென்று மாயாவாதிகள் சொன்ன பக்ஷம் சேராது. **மூன்ருவது** பிரமம் மாய்கை (மாயை) யுடைத்தாய் லோகமாய் தோற்றுகிறது என்று சொல்லுவார்கள். அந்தப் பிரமத்தை அமலனென்றும் சர்வக்ஞனென்றும் வேதத்தில் சொல்லப்படுகையால், சூரியனை இருள் மூடாது போல அந்தப் பிரம்மத்தை மாய்கை அணுகமாட்டாது.

மலமில்லாதவனென்று சொன்ன வேதத்துக்கு விரோதமாகையாலும் பிரம்மம் ஒன்றேயுள்ளதென்று சொன்னவர்கள் மாயையென்று ஒன்று உண்டென்றுசொன்னபோது பிரம்மம் ஒன்றேயுள்ளதென்றுசொன்னதற்கு விரோதமாகையாலும் மாயாவாதி கட்சிக்குச்சேராது. **நாலாவது** அனேககோடி மனுஷ்யாளிலே ஒருவன் சுகிக்கும்போது ஒருவன் துக்கிக்கக் காண்கையாலே ஆத்மகோடிகளேயும் பிரம்மமும் ஒன்றென்று சொல்ல வொண்ணுது தேகபேதத்தாலே சுகிக்கிறதும் துக்கிக்கிறதும் என்றுல் அது சவுபரி சரீரத்தில் காணலாம். சவுபரியென்கிற ரிஷி ஒரே ஆத்மாவான தான அனேக தேகங்களேக்கொண்ட போதைக்கும் எல்லாதேகத்தாலும் சுகத்தையே அநுபவித்தாரேயொழிய ஒருதேகத்தில் சுகமும் ஒரு தேகத்தில் துக்கமும் அநுபவிக்கவில்லே. அப்படியே மாயாவாதிகட்சிப்படிக்கு ஒரே பிரம்மமாகிய எல்லோரும் சுகத்தையே அனுபவிக்கவேண்டுமேயொழிய ஒருத்தன் சுகமும் ஒருத்தன் துக்கமும் அனுபவிக்கக்கூடாது **ஐந்தாவது** பிரமம் ஒன்ருகில் ஒருத்தன் சமுசாரத்தில் இருப்பானேன், ஒருவன் மோட்சத்தை அடைவானேன். பின்னும் தேவர்கள் மனுஷியாள் திரியக்கு தாவரமாகிய வேறுபாடு சிருஷ்டியும் கூடாது. **ஆருவது** நித்தியமா யிருக்கும் வேதத்தில் ஒருவன் யாகஞ்செய்வதும் ஈச்வரன் யாகபலன் கொடுப்பதும் பாவமாகச் சொல்லுகையாலும் பிரம்மம் ஒன்றென்று சொல்லக்கூடாது. இப்படி அநேக யுக்திகளுக்குச் சேராமையாலும் இரு சமய விளக்கத்தில் ஆரணவல்லிக்குப் பூரணவல்லி சொல்லுவது:— தேகத்தை ஒரு மரமாகவும், சீவனேடே கூட பரமாத்மாவையும் இரண்டு பக்ஷியாகவும், அந்த இரண்டு பக்ஷியில், சீவனுகிய பக்ஷி கருமபயனே எந்நாளும் புசித்திருக்குமென்றும், விசாலமான அறிவினையுடைய பரமாத்மாவான பக்ஷி கிட்டே சாக்ஷியாகவிருந்து பார்த்துக்கொண்டிருக்கு மென்றும் சொல்லுகிறது. மேலும், இந்த உலகம் துதிக்கும் ருக்கு வேதத்தில் இரண்டாம் அஷ்டகத்தில் பத்து பொருந்திய மூன்றும் அத்தியாயத்தில் பதினெட்டாவதான வர்க்கத்தில் பரிசுத்தமான சீவனேயும் பிரம்ம சொரூப மேன்மையினேயும் எல்லாருக்கும் தெரியவிளங்க விசதமாகச் சொல்லும் இந்தப் பொருள்களேயெல்லாம் பரமாத்மா உபநிடதம் தன்னில் பயில அனுவாக நானுன்கிலும் சீரியவாகச் செப்புமிதெல்லாம் அறிக. வைதீக உபநிஷத்தில் நாலாமனுவாகத்தில் சிறப்பாக இவைகளேயெல்லாம் சொல்லும், இதுவுமன்றியே பிரசித்தமாகிய எசுர்வேதத்தில் முக்தாளான பேர்கள் பரத்தோடு கூட பொருந்திய ஆனந்தத்தைப் புசிக்குமென்று, இந்த வேறுபாடுகளேயெல்லாம் கவனித்துக் கிரமமாகப் பேசுகின்றது இப்படியே பேதமே மறையெலாம் பேசும் என்பது. இன்னமும் இதுவல்லாமல் வளர் யசுர்வேதத்தில் [சுக்லயசுர்வேதம்] முதற்காண்டத்தில் மூன்றும் பரிச்சேதத்தில் ஐந்தாம் அனுவாகத்தில் நித்யசூரியர்கள் நிலேயாக விஷ்ணுவினுடைய பெரிய உலகத்தில் நித்தியானந்தங்களேயெல்லாம் நேத்திரத்தால் தாம்

வேருகவேயிருந்து பார்த்துப் பகவாஞேடுகூட தாங்களும் இருந்து வாழ்வார்களென்று சொல்லும். இந்தப்படிக்கு அனந்தவேதங்களும் சொல்லுகின்றது. ஓதியவிந்த மறைப்பொருட்கெல்லாம் ஒப்பாக பெரிய உலகம் புகழும் பகவத்கீதையும் பத்தர் முத்தர் நித்தர் என்று மூன்று வித மாகப் பிரிந்து விளங்கும் சீவகோடிகளுக்கெல்லாம் வேருக விருந்து சுவாமி யானவர் உறைந்தமையும் வாசஞ்செய்தமையும் சொல்லும். இந்தப்படிக்கு திருஷ்டாந்தம் அநேகம் உண்டு. அதனுலே சீவஞேடு பிரமமுமொன்றல்ல, அதனுலே உயிருடன் பிரம்மம் ஒன்றேயென்பது வேதத்துக்கு விரோத மாகையாலும் சேராது. ஆனுல் இந்த அத்துவைத மதத்துக்குக் கதியென் என்றல்:— துஷ்டாளான ராக்ஷஸாள் தேவர்களையடித்துச் சொர்க்கத்தைப் பிடுங்கிக் கொண்டமையால் அவர்களுக்குப் பலங்களும் மகிமைகளும் தொலையும்படி விஷ்ணுவானவர் சிவனை இந்த அத்துவைதத்தைப் பரிபாலிக்க உண்டாக்கிப் பிரமிக்கும்படி செய்தார். அமுதனுர் தமது நூற்றந்தாதிப் பாசுரத்தில் மாயாவாதி கண்டனம்:—

''பேதையர் வேதப் பொருளிதென்றுன்னி பிரமம் நன்றென்று
ஓதிமற்றெல்லாவுயிரும் அஃதென்று உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரஞேடொன்ருமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்ருன் எம் இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே''

வதாப்பிராமாண்ணிய வாதிகளான பாஹியரைப் போலன்றிக்கே வேதத் தைப் பிரமாணமாக அங்கீகரித்துவைத்து அர்த்த தர்சனத்தில் குத்ருஷ்டி களாயிருக்கிறவர்க்கு வேதத்தினுடைய அர்த்தமதுவென்று நிரூபித்து பிரம்மமேவிலட்சணமென்று வேதவேதாந்த வாக்கியங்களாலே பிரதி பாதித்து, மற்ற வியத்ரிக்த சமஸ்த ஜீவர்களும் அந்தப் பிரம்மம்தானே யென்று இப்படி தத்துவ நிர்ணயத்தைப்பண்ணி மோட்சநிர்ணயம் பண்ணுகிறவளவிலும் ஜீவவர்க்கம் தேஹாதியுபாதி விநிர்முக்தமானவாறே காரணபூதனை சர்வஸ்மாத்பரஞேடே ஏகிபவிக்குமென்று இப்படி சொல்லுகிற அந்த தோஷத்தையெல்லாம் தத்துவஞான சாகரமாகிய நம்முடைய நாதராயிருக்கும் **எம்பெருமானுர்** லோகரட்சணுர்த்தமாக வாதம் பண்ணி ஜயித்தருளினுர். இப்படி செய்தருளுவதே! என்று கருத்து. ஆதிப்பரனென்றது, சுவபட்சத்தாலே: அல்லாதவர்கள் இப்படிச்சொல்லார் களிறே. பிரமமாம்சமான சீவவர்க்கம் தேஹாதியுபாதி விநிர்முக்தமான வாறே பிரமைக்கியத்தை பிறப்பிக்குமென்று அவர்கள் சொல்லுவதானது அல்லல், ஆரவாரம்—அதாவது கோஷம்.

''தர்க்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்புசெய்நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே
பொற்கற்பகம் எம் இராமாநுச முனிபோந்தபின்னே.''

''தருக்கினுல் சமண்செய்து'' என்கிறபடியே தக்க சாமர்த்தியத்தாலே சுவமத பரிபாலனம் பண்ணுகிற ஆருஹதரும் சமணரும் சாக்கியரும் என்றவர்களை யெண்ணினுல் இரண்டாம் விரலுக்கு விஷயமாம்படி அவர்களோடு தோள்தீண்டியாய் பேய்போலே விடுதலை பற்றுதலையறியாதே பிடித்ததையே பிடித்தது கொண்டு இருக்கிற பவுத்தரும், என்னை ஈசுவரனென்று லோகம் ஆராதிக்க வேணுமென்று அதுக்கீடாக தீர்க்கசடாதரனுய்க்கொண்டு சாதனமனுஷ்டித்துப் பகவதனுமதியாலே மோஹ சாஸ்திரங்களைப் பிரவர்த்திப்பித்து ருத்திரனுடைய வசனமான ஆகமத்தை அங்கீகரித்து இருக்கிற தாமஸரான சைவரும், பிரமாண பிரமேய பிரமாதாக்களான இவைமூன்றும் இல்லையென்று சர்வ சூனியவாதம் பண்ணுகிற மாத்யமீகரும், இவர்களைப் போலன்றிக்கே ருக்காதிபேதத்தாலே நாலு வகைப்பட்டிருந்துள்ள வேதத்தைப் பிரமாணமாக அங்கிகரித்து வைத்து, திஷ்டத்ஸ்சு ஏதேஷு என்கிறபடியே அது நிற்கச்செய்தே அத்தோடு ஒரு சம்பந்தமில்லாத அபார்த்தங்களைச் சொல்லி மூலையடியே நடத்துகிற பிரவீணரான குத்ருஷ்டிகளும், ஸம்பிரஹணீயமான கற்பகம்போலே பரமோத்தாரராய்அதுதன்னை நமக்குப்பிரகாசிப்பித்தருளின **எம்பெருமானுர்** மஹாப்ருதிவியிலே எழுந்தருளின பின்பு முடிந்துபோனுர்கள். ஸ்ரீ பாஷ்ய முகேன அதர்சனமதங்களைப் பங்கித்து அசத்கல்பமாக்குகையாலே அவர்கள் நஷ்டரானுர்கள் என்று கருத்து. சாக்கியர் என்றது-சாங்கியரென்றபடி. மாத்தியமீகரும் சாக்கிய வர்க்கத்திலேயாயிருக்கப் பிரித்தெடுத்தது—தன்மதத்திற்குரிய விசேஷத்தைப் பற்ற.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## 9. சாத்துவிக ராஜஸ தாமஸ விவரணம்

ருத்திரனைப் பார்த்துப் பார்வதி கேட்கிருள். வாரீர் பகவானே! பகவத் பக்தியீனுளான பிராமணர்களாலே சொல்லப்பட்ட தாமஸ சாஸ்திரங்களை எனக்குச் சொல்லக்கடவீர். வாரீர், தேவோத்தமனே! அந்தத் தாமஸ சாஸ்திரங்களுடைய நாமங்களைக் கிரமமாக எனக்குச் சொல்லக் கடவீரென்று சொல்லாநின்ற பார்வதியைப்பார்த்து ருத்திரன் வாக்கியம்:— வாராய், தேவி! தாமஸ சாஸ்திரங்களைக் கிரமமாகச் சொல்லுகிறேன். கேட்கக்கடவாய்: அந்தத் தாமஸ சாஸ்திரத்தைக் கேட்டமாத்திரத்திலே ஞானிகளுக்குப் பஸ்மமானது உண்டாகும். முந்தி என்னுலேதானே சைவம் பாசுபதம் முதலான தாமஸ சாஸ்திரமானது சொல்லப்பட்டது. பிற்பாடு என்னுடைய சக்தியினுலே பிரவேசிக்கப்பட்ட சப்தரிஷிகளாலேயும் தாமஸசாஸ்திரமானவை சொல்லப்பட்டன. கணுத ரிஷியினுலே வைசேஷிகமென்னப்பட்ட சாஸ்திரமானது சொல்லப்பட்டது.

கௌதமராலே நியாய சாஸ்திரமானது சொல்லப்பட்டது. கபிலரிஷியினுலே சாங்கிய சாஸ்திரமானது சொல்லப்பட்டது. பிரஹஸ்பதியினுலே மிகவும் நிந்திதமான சாருவாக சாஸ்திரமானது சொல்லப்பட்டது. தயித்தியாளுடைய நாசத்தின் பொருட்டாகப் புத்தாவதாரம் பண்ணுநின்ற பகவானுலே— ககனம்நீலம்படம் முதலாயும் அசத்தாயுமிருக்கிற பவுத்த சாஸ்திரமானது சொல்லப்பட்டது. மாயாவாதமென்னப்பட்ட அசத்தான சாஸ்திரமானது அப்பிரகாசமான பவுத்தசாஸ்திரமென்றே சொல்லப்படும். அதுவானது கலியுகத்திலே பிராமணரூபமாயிருக்கிற என்னுலேயே சொல்லப்பட்டது. வேத வாக்கியங்களுக்கு லோகநிந்திதமான அபார்த்தத்தைக் காண்பியாநின்றுகொண்டு அந்த மாயாவாத சாஸ்திரத்திலேயே யாதொரு கர்மசுவரூபமுண்டோ அது விட்டுவிடத் தக்கதாகச் சொல்லப்படுகிறது. சமஸ்த கர்மங்களையும் விட்டுவிட்டதினுலே விகர்மஹதமென்று அந்தச் சாஸ்திரமானது சொல்லப்படுகிறது. அந்தச் சாஸ்திரத்திலே நிர்க்குணமாக என்னுலே சொல்லப்பட்டது. அந்தச் சாஸ்திரத்திலே கலியுகத்திலே சமஸ்த ஜகத்துக்கும் மோகனர்த்தமாக வேதவிருத்தமான மாயா வாதமானது என்னுலேதானே ஜகத்துக்களுக்கு நாசத்தின்பொருட்டு வேதார்த்தம் போலச் சொல்லப்பட்டது. ஜெமினிமுனி மகரிஷியினுலே பூர்வத்திலே வேதங்களுக்கு அபார்த்தத்தைச் சொல்லி ஈச்வரனேயில்லை— நிரீச்வர வாதத்தினுலே மகத்தான சாஸ்திரமானது பண்ணப்பட்டது. இந்தச் சாஸ்திரங்களைத் தாமஸ சாஸ்திரங்களாக அறியக்கடவாய். தாமஸமாயிருக்கிற புராணங்களையும் கிரமமாகச் சொல்லுகிறேன். பிரமம், பாத்மம், வைணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பவித்தியம் (பவுடியம்), பிரமகைவத்தம் (பிரமவைவர்த்தம்), இலிங்கம், வாமனம், வராகம், மச்சியம், கூர்மம், காருடம், ஸ்காந்தம், பிரமாண்டம் என்று கிரமமாகப் பதினெட்டுப் புராணங்கள். இதில் மச்சியம், கூர்மம், லிங்கம், சைவம், ஸ்காந்தம், ஆக்கினேயம், இந்த ஆறு புராணங்களையும் தாமசங்களாக அறியக்கடவாய். வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பாத்மம், வராகம் இந்த ஆறு புராணங்களும் சாத்துவிகங்களாகச் சொல்லப்படுகின்றன. பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம், பவுடியம், வாமனம், பிரமம்—இந்த ஆறு புராணங்களையும் ராஜஸங்களாக அறியக்கடவாய். சாத்துவிக புராணங்கள் மோட்சப்பிரதமாகவும், ராஜஸ புராணங்கள் சுவர்க்கப்பிரதமாகவும் சொல்லப்படுகின்றன. வாராய் பார்வதி! தாமசங்களும் நரகப்பிராப்திக்கு ஏதுக்களாகச் சொல்லப்படுகின்றன. சமஸ்த ஸ்மிருதிகளும் சாத்துவிக ராஜஸதாமசங்களாகச் சொல்லப்படுகின்றன, வாசிஷ்ட்டம் (வாசிட்டம்) ஆரிதம், வியாசம், பராசரம், பராத்துவாசம். காசியபம்—இந்த ஆறு ஸ்மிருதிகளும் சாத்துவீகங்களாகவும், முக்திப் பிரதங்களாகவும் சொல்லப்படுகின்றன. மானவம் - யாக்கியவல்கியம் - ஆத்திரேயம் - தாக்ஷியம் - காத்யாயனம் - வயிஷ்ணவம் இந்த ஆறு

ஸ்மிருதிகளும் ராஜஸங்களாகவும் சுவர்க்கப் பிரதங்களாகவும் சொல்லப் படுகிறதுகள். கௌத்தமம், பாருபத்தியம், சாமவந்தம், எமஸ்மிருதி, சங்கமம், அவசன்மம் இந்த ஆறு ஸ்மிருதிகளும் தாமசங்களாகவும் நரகப்பிரதங்களாகவும் சொல்லப்படுகின்றன. இவ்விடத்திலே இப்படி சொல்லப்படுகிறதினுலேயென்று புராணங்களிலேயும் ஸ்மிருதிகளிலேயும் தாமசங்கள் நரகத்தின்பொருட்டே ஆகியன. விவேகியானவன் அவைகளை வர்ஜிக்கக்கடவன். பார்வதி! பிரசக்தியினுலே இதுவெல்லாம் உனக்குச் சொல்லப்படுகிறது.

———

## ஸ்ரீராம அஷ்டோத்தர சதநாம மகாத்மியம்.

பார்வதி வாக்கியம்:- வாரீர் பிராணநாயகரே! உத்தமமான ஸ்ரீ விஷ்ணுவினுடைய மகிமை உம்மாலே சொல்லப்பட்டது. நான் தன்யையாயும், ஜன்மசாபல்லியத்தையுடையளாயும் ஆகாநிற்கிறேன், உம்முடைய பிரசாதத்தினுலே சமஸ்த தேவதைகளினுலே சேவிக்கப்பட்டும் அநாதியாயுமிருக்கிற தேவாதிபதியான ஸ்ரீ பகவானை ஆராதிக்கிறேனென்று சொல்லாநின்ற பார்வதியினுடைய வார்த்தையைக்கேட்டு, திரிபுராந்தகனுன சிவன் சந்துஷ்டமான மனதையுடையவராய் தேவியான பார்வதியை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு ஒருவார்த்தை சொன்னுர்; ருத்திரன் வாக்கியம்—வாராய் பார்வதி! மகா உத்தமமான வார்த்தையை மகா நன்ருகச் சொன்னுய். ஸ்ரீ மகாலக்ஷ்மி ஸமேதனுயும், அநாசாரரஹிதனுயும் இருக்கிற ரிஷிகேசனுன ஸ்ரீ பகவானையே ஆராதிக்கக்கடவாய். வாராய் மங்களகரையே! ஸ்ரீ விஷ்ணுபக்தையாகிய உன்னுலே உன் நாயகனுன நானும் கிருதார்த்தனுகிவிட்டேன். வாராய் பார்வதி! மகாபுத்திமானுயும், உனக்கு ஆசாரியனுயும் இராநின்ற வாமதேவராலே அனுக்ஞை பண்ணப் பட்டவளாய் புருஷோத்தமனுகியும் சகல ஜகத்பதியாயும் இராநின்ற ஸ்ரீபகவானை ஆராதனஞ்செய்யக்கடவாய். வாராய் பர்வதராசன்புத்திரியே! சமஸ்தமான பேர்களும் ஆசாரியனுடைய உபதேச மார்க்கத்தினுலே ஸ்ரீ கேசவனுன பிரமருத்திர ஜனகராகிய ஸ்ரீ பகவானை ஆராதித்துச் சகல மனோரதத்தையும் அடைகிருர்கள். இதுதவிர வேறே ஒன்றே உபாயமும் இலது என்று இந்தப் பிரகாரம் சொல்லப்பட்டவளாயும் ஸ்ரீ விஷ்ணு

வினுடைய ஆராதனத்திலே மிகவும் இச்சையையுடையவளாயும் சந்துஷ்ட மான மனதையுடையவளாயும், வாமதேவருடைய சமீபத்துக்குப்போய் ஆசாரியராகிய வாமதேவரைச்சேவித்துப் பூசித்தவளாய்ப் பயபக்தியோடே அஞ்சலிஹஸ்தையாய் ரிஷிசிரேஷ்டராகிய வாமதேவரைப் பார்த்து, ஒருவார்த்தை சொன்னுள். பார்வதி வாக்கியம்:- வாரீர், ஷாட்குண்ணிய பரிபூர்ணராகிய பிராம்மண சிரேஷ்டரே! உம்முடைய பிரசாதத்தினுலே பகவானுகிய ஸ்ரீ ஹரியினுடைய ஆராதனத்தைச் செய்கிறேன். எனக்கு அனுக்ஞை தரவேணுமென்று இந்தப் பிரகாரம் பார்வதியினுலே சொல்லப் பட்ட ஆசாரியனுன வாமதேவரானவர் அந்தப் பார்வதியின் பொருட்டு எதா விதியாய் சிரேட்டமாகிய திருமந்திரத்தை உபதேசஞ்செய்தார்; உத்தமமான ஸ்ரீ விஷ்ணுவினுடைய சகஸ்ரநாமத்தை உருச்சொன்னுர். எதா விதியாக ஆராதனக்கிரமமும், பரிசுத்தமாகிய விரதாசாரங்களுமுடைய பார்வதியைப் பார்த்து அதிக சந்தோஷத்தினுலே சொன்னுர்: வாராய் பார்வதி! பக்தியினுலே ரிஷிகேசனுகிய பகவானைப் பிரதிதினமும் ஆராதனஞ்செய்து பின்பு சகஸ்ரநாமங்களையும் பாராயணஞ்செய்யக் கடவாய் என்று ஆசாரியனுகிய வாமதேவனுலே சொல்லப்பட்டவளாய் அவரைச் சேவித்து ஆராதித்து, அத்யந்த சந்துஷ்டமான மனதையுடை யவளாய் தன்னுடைய கிரஹத்துக்கு வந்து நித்தியமும் பக்தியினுல் சனுதனனுகிய ஸ்ரீ ஹரியை ஆராதித்து சகஸ்ரநாம பாராயணஞ்செய்து அசஞ்சலமான சித்தத்தையுடையவளாய் பர்த்தாவான ருத்திரனுலே சொல்லப்பட்ட பார்வதியானவள் இந்தப் பிரகாரம் பகவதாராதனம் பண்ணிக்கொண்டிருந்தாள். பிற்பாடு சிலநாள் கழித்தபின்பு மகாமனுேக் கியமாகிய கயிலாசபர்வதத்திலே சங்கரரானவர் துவாதசி தினத்திலே ஸ்ரீ விஷ்ணுவை ஆராதனம் பண்ணி பிற்பாடு போஜனம் பண்ணுகைக்குப் பார்வதியைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னுர்:—

வாராய் பார்வதி! என்னுடனேகூட போஜனம் பண்ணக்கடவாய் என்று அழையாநின்ற ருத்திரனைப் பார்த்துப் பார்வதி வாக்கியம்:—வாரீர் மகாதேவரே! சகஸ்ரநாம பாராயணத்தைப் பண்ணியபின்பு நான் பூஜிக்கிறேன். நீங்கள் முன்னே போஜனம் பண்ணலாம்: பின்பு, நான் போஜனம் பண்ணுகிறேனென்று சொன்ன பார்வதியைப் பார்த்து ருத்திரரானவர் மந்தகாசத்தோடே கூடினவராய் ஒரு வார்த்தை சொன்னுர்; வாராய் பார்வதி! மகாபாக்கியங்களைச் செய்யாமல் துர்லப மான விஷ்ணுபக்தியானது வரமாட்டாது.

''ஸ்ரீ ராம ராம ராமேதி ரமேராமே மனுேரமே
சகஸ்ரநாம தஸ்துல்யம் ராமநாம வரானனே!''

ரகாராதினி நாமானி ச்ருண்வதே மமபார்வதி
மனப்ப்ரஸன்ன தாம்யாதி ராமநாமாஹ்ய சங்கையா
ராமேத்யுக்த்வா மகாதேவி புங்க்ஷ்வச சாரத ரமமயாவனு''

இந்த சுலோகார்த்தம் அதிமனோக்கியராயும், சுபாஷ்ட பலப்பிரத ராயும் இராநின்ற ஸ்ரீ ராமரிடத்திலே பக்தியோடேகூட ஸ்ரீ ராம ராம ராமா வென்று மூன்று தரஞ்சொல்லி சர்வாபீஷ்டத்தையும் அடையக்கடவாய். ராமா என்கிற திருநாமமானது சகஸ்ரநாமத்துக்குச் சமானம். ஸ்ரீராமா வென்கிற திருநாமத்தை இப்போது ஒருதரம் பாராயணம் பண்ணி என்னுடன் போஜனம் பண்ணக்கடவாய் என்று சொல்லாநின்ற ருத்திரன் வார்த்தையைக்கேட்டு ஸ்ரீ ராமாவென்று ஒருதரம் ஜபித்துத் தன் பிராண நாதனோடேகூட புஜித்துப் பார்த்தாவுடனே கூடி ஆசனத்திலேயிருந்து கொண்டு ருத்திரனைப்பார்த்துப் பிரசினே பண்ணினாள்:—வாரீர், பிராண நாயகரே! உம்மாலே ஸ்ரீ ராமாவென்கிற திருநாமமானது சகஸ்ரநாமங் களுக்குச் சமானமாகச் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட சகல பாப நிவர்த்தகமான ஸ்ரீ ராமனுடைய இதரமான திருநாமங்களை எனக்குச் சொல்லவேணுமென்று கேளாநின்ற பார்வதியைப் பார்த்து ருத்திரன் வாக்கியம்:—வாராய் பார்வதி! அந்த ஸ்ரீ ராமனுடைய திருநாமங்கள் ஆயிரம். அந்த ஆயிரம் திருநாமங்களுக்குள்ளே சர்வசிலாக்கியங்களாகிய திருநாமங்கள் நூற்றெட்டு. அப்படிப்பட்ட திருநாமங்களிலே ஆயிரம் திருநாமங்களுக்குச் சமானமானது. **“ஸ்ரீ ராமா”** என்கிற திருநாமம். சகலமான வேதங்களையும் பாராயணம் பண்ணினதினாலேயும், சகலமான மந்திரங்களையும் ஜபித்தால் எந்தப் பலனானது சித்தியாநிற்குமோ அந்தப் பலனுக்குக் கோடிகுணம் அதிகமான புண்ணியமானது ஸ்ரீ ராமாவென்கிற திருநாமத்தினாலே அடையப்படாநிற்கிறது. வாராய், சுபகரையே! அப்படிப்பட்ட ஸ்ரீ ராமனுடைய சிரேஷ்டங்களாயும், ரிஷிகளாலே கானம் பண்ணப்படாநின்றும் இருக்கிற திருநாமங்களைச் சொல்லுகிறேன்: கேள்:-

| | |
|---|---|
| * ஸ்ரீராமாய நம:; | சத்யவாசே நம:; |
| ஸ்ரீராமபத்ராய நம:; | சத்யவிக்ரமாய நம:; |
| ஸ்ரீராமசந்த்ராய நம:; | சத்யவ்ரதாய நம:; |
| சாச்வதாய நம:; | வ்ரதபலாய நம:; |
| ராஜீவலோசனாய நம:; | கௌசலேயாய நம:; |
| ஸ்ரீமதே நம:; | கரத்த்வம்ஸினே நம:; |
| ராஜேந்த்ராய நம:; | விராதவதபண்டிதாய நம:; |
| ரகுபுங்கவாய நம:; | விபீஷண பரித்திராத்திரே நம:; |
| ஜானகி வல்லபாய நம:; | தசக்கிரீவசிரோஹராய நம:; |
| சீதாமித்ராய நம:; | சதாஅனுமதாஸ்யாய நம:; |
| ஜனார்த்தனாய நம:; | சப்த சாலபிரபேத்திரே நம:; |
| விச்வாமித்ரப் ப்ரியாய நம:; | ஹர்ஷகோதண்ட கண்டனாய நம:; |
| தாந்தாய நம:; | ஜாமதக்னிமகாதர்ப்பதளனாய நம:; |
| சரணாகத வத்சலாய நம:; | தாடகாந்தகாய நம:; |
| வாலிபிரமர்த்தனாய நம:; | வேதாந்தசாராய நம; |

வேதவேதாத்மனே நம:;
பவபேதபேஷஜே நம:;
கர தூஷண திரிசிரோஹந்த்திரே
திரிமூர்த்தியே நம:; [நம:;
திரிகுணுய நம:;
த்ரையீ நம:;
திரிவிக்ரமாய நம:;
திரிலோகாத்மனே நம:;
புண்ணியசாரித்ரி கீர்த்தனுய நம:;
திரிலோகரக்ஷகாய நம:;
தன்வினே நம:;
தண்டகாரண்யபுண்ய கீர்த்தயே
நம:;
அகலியாபாவனுய நம:;
பிதுர்பக்தாய நம:;
வரப்ரதாய நம:;
ஜிதேந்த்ரியாய நம:;
ஜிதக்ரோதாய நம:;
ஜிதாமித்ராய நம:;
ஜகத்குரவே நம:;
சுரக்ஷவானரசங்காதகாய நம:;
சித்ரகூடசமாச்ரயாய நம:;
ஜயந்தத்ராணவரதாய நம:;
சுமித்ராபுத்ர சேவிதாய நம:;
சர்வதேவாதிதேவாய நம:;
மிருத்வானரஜீவனுய நம:;
மாயாமாரீசஅந்தகனே நம:;
மகாபோகாய நம:;
மகாபுஜாய நம:;
சர்வதேவஸ்துதாய நம:;
சௌம்யாய நம:;
பிரம்மண்யாய நம:;
முனிசத்தமாய நம:;
மகாயோகினே நம:;
மகாதேவாய நம:;
சுக்கிரீவேபாலித ராஜ்யதாய நம:;
சர்வபுண்யாதிகபலமிருதவே நம:;
ஆதிபுருஷாய நம:;
மகாபுருஷாய நம:;
பரமபுருஷாய நம:;
புண்ணியோதயாய நம:;
தயாதரராய நம:;
புராணபுருஷோத்தமராய நம:;
ம்ருதுஸ்மிதவக்த்ராய நம:;
மிதபாஷணி நம:;
பூர்வபாஷணி நம:;
ராகவாய நம:;
அனந்தகுண கம்பீராய நம:;
தீரோதாத்த குணேத்தமாய நம:;
மாயாமானுஷசாரித்ரே நம:;
சாரித்ராய நம:;
மகாதேவாபிபூஜிதாய நம:;
சேதுக்ருதே நம:;
ஜிதமாரீசாய நம:;
சர்வதீர்த்தமயாய நம:;
ஹரையே நம:;
சியாமாங்காய நம:;
சுத்ராய நம:;
சூராய நம:;
பீதவாசஸே நம:;
தனுர்தராய நம:;
சர்வயக்ஞாதிபாய நம:;
யஜ்வனே நம:;
கோரமரணவர்ஜிதாய நம:;
சிவநாதாய நம:;
ரகுவம்சப்ரதிஷ்டாத்ரே நம:;
சர்வாவகுண வர்ஜிதாய நம:;
பரமாத்மனே நம:;
பரப்பிரம்மணே நம:
சச்சிதாநந்த கோவிந்த
விக்ரஹாய நம:;
பரஞ்ஜோதிஷே நம:;
பரந்தாமனே நம:;
ப்ராகாசாய நம:;
ப்ராதபராய நம:;
பரேசாய நம:;
பாரகாய நம:;
பாராய நம:;
சர்வபூதார்த்தகாய நம:;
சிவாய நம:;

என்று இந்தப் பிரகாரம் ரகசியத்திக்கு ரகசியமாகவும் சிரேஷ்டமாயும் இராநின்ற ஸ்ரீராமசந்திரனுடைய திருநாமமான நூற்றெட்டுத் திருநாமமும் என்னாலே அத்தியந்தம் பிரீதியினாலே உனக்குச் சொல்லப்பட்டது. வாராய் பார்வதி! இந்தத் திருநாமத்தைப் பக்தியுடனே கூடின சித்தத்தினாலே யாதொருவன் பாரயணம் பண்ணினாலும் கேட்டாலும் அவனுக்குக் கோடி கற்ப காலங்களிலே செய்யப்பட்ட சகல பாபமும் விட்டுவிடும். திவ்வியமான ஞானத்தை அடையப் பண்ணும் சத்துருக்கள் மித்துருக்கள் ஆகிவிடுவர். ராஜாக்களும் வணக்கத்துடனே பிரதிபத்தி பண்ணுவார்கள். அக்கினியினாலே உண்டாகா நின்ற உபத்திரவமானது சாந்தமாய்விடும். சகல பிராணிகளுடைய அனுகூலமுண்டாம். அத்தியந்த தைரியமுண்டாம். அசஞ்சலமான ஸ்ரீமகாலக்ஷ்மி கடாக்ஷமுண்டாம். வாராய் பார்வதி! இந்தத் திருநாமத்தைப் பாராயணம் பண்ணினதனாலே மாத்ரு வம்சத்திலே பத்து வம்சம் பித்ரு வம்சத்திலே பத்து வம்சம் தன்னுடனே இருபத்தொரு வம்சத்துடனே கூட நூறாயிரம் கோடி கற்பகால பரியந்தம் ஸ்ரீ வைகுண்டத்திலே வாசம் பண்ணுவான். வாராய் பார்வதி! "ராமாயராம பத்ராய ராமசந்த்ராய வேதஸே ரகுநாதாய நாதாய சீதாயா: பதயே நம:" இந்த மந்திரத்தை அஹோராத்திரம் பாராயணம் பண்ணினானேயாகில் சகல பாபத்தினின்றும் விடுபட்டு ஸ்ரீ விஷ்ணு லோகத்தை அடைவான் என்று சொல்லா நின்ற ருத்திரனைச் சேவித்துப் பார்வதியானவள் ஒரு வார்த்தை சொன்னாள்.

வாரீர், பிராணநாயகரே மிகவும் ஆச்சரியகரமாயும் உபமானம் வேறே ஒன்றும் சொல்ல முடியாததாயும் இருக்கிற பரமாத்மாவான ஸ்ரீ ராமசந்திரனுடைய மகாத்மியத்தைக் கேளா நின்ற என்னுடைய காதுகளுக்குக் கற்ப கோடி கால பரியந்தம் கேள்விப்பட்டாலும் திருப்தியடைகிறதில்லை. சமஸ்தமான ரகசியங்களும் உம்மிடத்தினின்றும் கேள்விப்படா நின்ற நான் தன்யையாயும் கிருதார்த்தையாயும் ஆகி விட்டேன். உம்முடைய அனுக்கிரகத்தினாலே ஸ்ரீஹரி பக்தியானது எனக்கு ஜன்ம ஜன்மத்திலேயும் உண்டாகக் கடவது என்று இந்தப் பிரகாரம் பாகவதோத்தமையான பார்வதியானவள் தன்னுடைய பர்த்தாவாகிய ருத்திரனைப் பார்த்துச் சொல்லிய, "ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே ரகுநாதாய நாதாய சீதாயா:பதயே நம:" என்கிற இந்த மந்திரத்தைத்தானே சர்வ காலங்களிலேயும் ஜபம் பண்ணா நின்று கொண்டு பிராணநாதனோடே கூட கயிலாய பர்வதத்திலே சுகமாயிருந்தாள்.

வசிட்டர் வாக்கியம்—வாராய் திலீப மகாராசனே! ருத்திரனாலே சொல்லப்பட்ட சாஸ்திரங்கள் தாமஸ சாஸ்திரங்கள்தான். ரிஷபத்துவசனான ருத்திரனானவர் சகல ஜகத்துக்களையும் மோகனம் பண்ணி வைக்கிறதின் பொருட்டாகத் தாமஸ சாஸ்திரங்கள் சொன்னார். வாராய் ராசனே! திவ்வியமாயும் சிவரகசியமாயும் ஆய இதுதான் யதார்த்தமென்று சொன்னார்.

ஸ்ரீராமஜயம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இப்பால் பிருகு மகரிஷியினாலே பரதத்துவ சோதனை மகாத்மியம்.

## 10. பிருகு மகரிஷியினாலே பரதத்துவ சோதனை மகாத்மியம்

திலீப மகாராசாவினுடைய வாக்கியம்:- தேவரீரிடத்திலே இன்னமொரு பிரசினை பண்ணுகிறேன். என்னிடத்தில் வாற்சலியத்தினாலே யதார்த்தமாக அத்தைச் சொல்லக் கடவீர். மகா பாகவத சிரேட்டரான திரிபுர சங்காரகனாகிய ருத்திரரானவர் ஏது காரணத்தினாலே நிந்தர போக்கியமான ரூபத்தைப் பாரியையோடே கூட அடைந்தார். மகாத்மாவான ருத்திரர்க்கு யோனி லிங்க சுவரூபமாகிய ரூபமானது எப்படியாகி விட்டது? வாரீர் பிராம்மண சிரேஷ்டரே! அஞ்சு முகத்தையுடையவராயும் சூலபாணியாயும் மூன்று நேத்திரங்களையுடையவராகியும் ஆகியிரா நின்ற ருத்திரரானவர் அதிநிந்திதமாகிய ரூபத்தை எப்படி அடைந்தார். வாரீர் சூரிய வருணபுத்திரரே! இந்த சமஸ்த கதைகளையும் எனக்குச் சொல்லக் கடவீரென்று பிரார்த்தியா நின்ற ராசாவைப் பார்த்து வசிட்டர் வாக்கியம்—வாரீர் திலீப மகாராசனே! மிகவும் அபேட்சையினாலே யாதொன்று உன்னாலே கேட்கப்பட்டதோ அத்தைச் சொல்லுகிறேன். கேட்கக் கடவாய். பரிசுத்தமான இருதயத்துடனே கூடின புருஷாளுக்கு சிரேயசான விருத்தியாகாகிறதும் பூர்வத்திலே சிரேஷ்டமான மந்தர பர்வதத்திலே சுவாயம்பு மனுவானவர் அநேகமான ரிஷிகளோடே கூட உத்தமமாகிய தீர்க்கசத்திர யாகம் பண்ணினார். அந்த யாக காலத்திலே சுரோத்திரியாளாயும் நானா சாஸ்திர பண்டிதாளாயும் அதி சிரேஷ்டாளாயும் பால சூரியன் அக்கினி பகவானுக்குச் சமமான தேஜஸையுடையவாளாயுமாய் இருக்கிற சகலமான ரிஷிகளும்

வந்தார்கள். மகத்தானயாகமானது செய்து கொண்டு வருகிற சமயத்திலே பாபஹிதாளாயும் தபஸையே தனமாக உடைத்தான வாளாயுமிருக்கிற அந்த ரிஷிகளான பேர்கள் சாத்வீக குண பிரதானராயும் தத்துவத்திலே சொல்லா நின்று மிருக்கிற பகவானை அறிக்கைக்கு ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். வேதாந்தபரர்களாகிய பிராமணர் பூஜா யோக்கியராகிய தேவதைகளுக்கெல்லாம் சிரேஷ்டராயும் பூஜா யோக்கியமாயும் இருக்கிறவரார்? பிரம விஷ்ணு ருத்திரன் இவர்களுக்குள்ளே மனுஷ்யாளுக்கு மோட்சப் பிரதராய் எவருடைய ஸ்ரீபாததீர்த்தம் பானம் பண்ணத்தக்கது. எவருடைய பிரசாத சேஷம் பரிசுத்தமானதும் அங்கீகரிக்கத்தக்கதும், எவர் நாசரஹிதர்? எவர் சிரேஷ்டமான ஸ்தானத்தையுடைத்தானவர்? எவர் அநாதி? எவர் பரமாத்துமா? எவருடைய பிரசாத தீர்த்தத் தினாலே பித்ருக்களெல்லாம் நற்கதி அடைவர்கள் என்று இந்தப் பிரகாரம் அந்த யாகத்தின் பொருட்டு வந்திரா நின்ற ரிஷிகளுக் கெல்லாம் மகத்தான சம்வாதமானது உண்டாயிற்று. இந்தப் பிரகாரம் வாதியா நின்ற அந்தச் சபையிலே சில ரிஷிகள் சகல பிராணிகளுக்கும் ருத்திரனே பூஜ்யனென்று சொன்னார்கள். சில ரிஷிகள் பிரம்மாவே பூஜ்யரென்று சொன்னார்கள். சில ரிஷிகள் சூரியனே மோட்ச பலப் பிரதனென்று சொன்னார்கள். பின்னும் சில சிரேஷ்டாளான மகாரிஷிகள் யாரொருவர் சர்வாந்தர்யாமியோ யாரொருவர் ஸ்ரீலக்ஷ்மீபதியோ யாரொருவர் சர்வபரிபூரணரென்றும் சர்வ வியாபகரென்றும் சொல்லப்பட்ட வாசுதேவரோ யாரொருவர் பராபவஸ்துவோ யாரொருவர் ஆதியந்தமில்லாதவராயும் இருக்கிற ஸ்ரீவிஷ்ணுவோ அந்த ஸ்ரீவிஷ்ணுவே பூஜ்யர் என்று சொன்னார்கள். இந்தப் பிரகாரம் சொல்லிக் கொள்ளா நின்ற ரிஷிகளைப் பார்த்து சுவாயம்பு மனுவானவர் ஒரு வார்த்தை சொன்னார். சுத்த சத்துவமயராயும் அனந்த கல்யாணகுண பரிபூர்ணராயும், சகல ஐசுவரிய சம்பன்னராயும், ஸ்ரீய: பதியாயும் புருஷோத்தமராயும் இராநின்ற ஸ்ரீவிஷ்ணுவானவர் வேதாந்த பாராயண சீலர்களான பிராமணாளுக்கு இவரொருவரே பூசிக்கத்தக்கவர்; ஆகிலும், தாமச ராஜச சாத்துவிக குணங்களினாலே பிராமணாளுக்குப் பூசிக்கத்தக்கவராரென்று இந்தப் பிரகாரம் சொல்லா நின்ற சுவாயம்பு மனுவினுடைய வார்த்தையைக் கேட்டு சகலமான மகரிஷிகளும் அஞ்சலி ஹஸ்தராய் மகா தபஸ்வியான பிருகு மகரிஷியைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார்கள். ரிஷிகள் வாக்கியம்: வாரீர் மகாநுபவரான பிருகு மகரிஷியே! எங்களுடைய சமுசயத்தை நிவிருத்தி பண்ணி வைத்து நிச்சயம் பண்ணுகிறதுக்கு நீரே யோக்கியராக இருக்கிறீர்.

உம்மாலேயே நாங்கள் நிச்சயத்தை அடையக் கடவோம். ஆகையால் தேவரீர் பிரமா, விஷ்ணு, ருத்திரரான மூவருடைய சமீபத்துக்குப் போய் அவாளுடைய திவ்விய மங்கள விக்கிரங் களைச் சாட்சாத்காரமாகப் பார்த்து, சுத்த சத்துவமயமாயும் பரப்பிரம்மமாயும் இருக்கிறவர் எவரோ அந்தச் சாத்துவிக குணபரிபூர்ணமானவர் பிரபஞ்சத்திலே பிராமணாளுக்குத் தீர்த்த பிரசாதங்களை அங்கீகரிக்கிறதற்கு யோக்கியராக நிற்கிறார். அவருடைய நிவேதன பிரசாதமானது தேவதை களுக்கும், பிதுருக்களுக்கும் பரிசுத்தமாக அங்கீகரிக்கத்தக்கது. வாரீர் முனிசிரேஷ்டரான பிருகு மகரிஷியே! சகல லோக ரக்ஷணார்த்தத்தின் பொருட்டுத் தேவரீர் எழுந்தருள வேணு மென்று இந்தப் பிரகாரம் பிரார்த்திக்கப்பட்ட முனி சிரேஷ்டரான பிருகு மகரிஷியானவர் வாயு மண்டல மார்க்கத்தினாலே ரிஷபத்து வசராகிய ஈசுவரனானவர் எவ்விடத்திலேயிருக்கிறாரோ அந்தக் கைலாச பர்வதத்துக்குப் போய் மகாத்துமாவாகிய ருத்திர னுடைய கிருஹத்துவாரத்துக்குப் போய் அதிபயங்கராளாயும் சூலபாணிகளாயும் இருக்கிற சிவபடாளைப் பார்த்துச் சிவனைக் காண்கிறதற்குப் பிருகுவென்னப் பட்டவன் வந்திருக்கிறேன் என்று சிவனிடம் சீக்கிரமாகச் சொல்லுங்கோள் என்று சொன்னார். இந்தப் பிரகாரம் சொல்லா நின்ற பிருகு மகரிஷி யினுடைய வார்த்தையைக் கேட்டுச் சிவகணங்களுக்குள் சிரேஷ்டரான நந்தியானவர் அதிக தேஜஸோடே கூடின மகரிஷியைப் பார்த்துக் குரூரமாக ஒரு வார்த்தை சொன்னார். சங்கரனானவர் தேவியோடே கூட அந்தப்புரத்திலே கிரீடா லீலையைச் செய்து கொண்டிருக்கிறார். பிரபுவாகிய ருத்திர ருடைய தரிசனம் இப்போது கிடையாது. உமக்குப் பிராண அபேட்சையானது உண்டாகியிருக்குமேயாகில் திரும்பும் திரும்பும் என்று சொல்லா நின்ற நந்தியினுடைய வார்த்தையினாலே தகையப்பட்டவராய் அந்த மகரிஷியான பிருகுவானவர் சிவனுடைய கிருகத்துவாரத்திலே வெகு நாளிருந்தார். பின்பு அவரிடத்திலே பிருகு மகரிஷியானவர் அத்தியந்தம் கோபத்தை யுடையவராய் சங்கமத்தினாலே உன்மத்தனான இந்தச் சங்கர னானவன் யாதொரு காரணத்தினாலே என்னை அவமானம் பண்ணினானோ யோனிலிங்க ஸ்வரூபமானது இந்தச் சங்கரனுக்கு உண்டாகக்கடவது என்று சபித்தார். தாமச குணத்தையுடையவனுடைய கிருக துவாரத்திலே பிராமணனான நான் வந்திருக்கிறது தெரியாமல் இரா நின்ற இந்த ருத்திரனான வன் பிரமம் என்கிற சாத்துவிக குணத்தை அடையாதவனாய் பிராமணாளுக்குப் பூஜா யோக்கியமில்லாமல் போகக்கடவன்.

இந்த ருத்திரனுடைய அபிஷேக ஜலமானது ஸ்பரிச யோக்கிய மில்லாமல் போகக்கடவது. இந்தச் சிவனுக்கு ஆகுதி பண்ணின அவிசானது தொடுகைக்கு யோக்கியமில்லாமல் போகக்கடவது. இவனுக்கு நிவேதனம் பண்ணின அன்னம் முதலானது தீண்டுகைக்கு யோக்கியமில்லாமல் போகக் கடவது. சமுசயமில்லாமல் இந்த ருத்திரனுக்கு அர்ச்சித்த புஷ்ப முதலான நிருமாலிய முதலானவைகளும் தொடுகிறதுக்கு யோக்கியமில்லாமல் போகக்கடவது என்று இந்தப் பிரகாரம் அத்தியந்தம் தபஸ்வியான பிருகு மகரிஷியானவர் சகலலோக பூஜிதனான சங்கரனைச் சபித்தும்; மிகவும் குரூரனாயும் சூல பாணியாயுமாய் இருக்கிற நந்தியைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னார். லோகத்திலே சிவபக்தாளானவர்கள் பஸ்மம் லிங்கம், எலும்பு இவைகளைத் தரியா நின்றவாளாயும் பாஷாண்டி களாயும் வேதங்களுக்கு அயோக்கியாளாயும் ஆகக்கடவர்கள் என்று இந்தப் பிரகாரம் பிருகு மகரிஷியானவர் திரிபுராந்தகனான ருத்திரனைச் சபித்து, சமஸ்த தேவதைகளினாலேயும் சேவிக்கப் பட்டிருக்கும் பிரமலோகத்துக்கு எழுந்தருளினார்.

அந்தப் பிரமலோகத்திலே தேவதைகளோடுங் கூடியிரா நின்ற பிரமதேவரைப் பார்த்து மகாபுத்திமானான பிருகுவானவர் அஞ்சலி ஹஸ்தராய் சேவித்தார். தபஸ்வியானவர் பின்னும் சாஷ்டாங்கமாகச் சேவித்து மவுனியாயிருந்தார். இந்தப் பிரகாரம் இராநின்ற பிருகு மகரிஷியைப் பார்த்துப் பிரமா வானவர் ரஜோ குணத்தோடே கூடினவராய் எதிரே வந்திரா நின்ற மகரிஷியை ஆராதியாமல் போனார். பிரம்மாவினாலே அந்த மகரிஷிக்குத் தம்மைக் கண்டவுடன் எழுந்திருக்கை குசலப் பிரச்னம் பண்ணுகை இவைகளானவை செய்யப்படாமல் போயிற்று. மகத் ஐசுவரியத்தினாலே பத்மாசனனாகிய பிரம்மாவானவர் சும்மாவிருந்தார். இந்தப் பிரகாரம் ரஜோ குணத்தோடே கூடினவராயும், பத்மாசனத்தையுடையவராயும் லோகபிதா மகனுமான அந்தப் பிரம்மாவைப் பார்த்து மிகவும் தேஜஸ்வியான பிருகு மகரிஷியானவர் ஒரு வார்த்தை சொன்னார். யாதொரு காரணத்தினாலே மகத்தான ரஜோ குணத்தினாலே உன்மத்தராய்க் கொண்டு எதிரே வந்திரா நின்ற என்னை அவமானம் பண்ணினாயோ அதனாலே நீயானவன் சமஸ்த லோகங்களுக்கும் பூஜா யோக்கியமில்லாமல் போகக் கடவாய் என்று இந்தப் பிரகாரம் சர்வ லோகங்களிலேயும் பூஜிக்கப்பட்டவரான பிரம்மாவைச் சபித்து பிராமணனாகிய பிருகு மகரிஷியானவர் அதிதுவரிதமாய் ஸ்ரீ வைகுண்டத்துக்கு எழுந்தருளினார்.

சுத்த ஜலசமுத்திரத்துக்கு வடவண்டைக் கரையிலே இராநின்ற ஸ்ரீ விஷ்ணுலோகத்தைப் படைத்துப் அவ்விடத்திலே எழுத்தருளியிரா நின்ற ஷாட்குண்ய பரிபூர்ணனாகிய பாரிஷாதாளான ஸ்ரீ விஷ்ணு பக்தாளாலே எதாயோக்கியமாகப் பூஜிக்கப்பட்டவனாயும் அவாளாலே தகையப்படாதவனாயும் பிராமணரான பிருகு மகரிஷியானவர் அந்தப்புரத்திலே பிரவேசித்து அந்த அந்தப்புரத்திலே நிமலமாயும் அநேக சூரிய காந்தியுடனே கூடினதாயுமுள்ள விமானத்திலே சேஷதல்பத்திலே திருக்கண் வளர்ந்தருளா நின்றும் ஸ்ரீமகாலக்ஷ்மி தேவியினுடைய கரார விந்தங்களாலே ஸ்பர்சிக்கப் படாநின்ற திருவடிகளோடே கூடியிரா நின்றும் இருக்கும் ஸ்ரீய: பதியாகிய அந்தப் பகவானைப் பார்த்து முனிசிரேஷ்டரான பிருகுவானவர் மிகவும் கோபத்தை யுடையவராய் ஸ்ரீ விஷ்ணுவினுடைய பிரகாசம் பொருந்திய திருமார்பிலே தம்முடைய வலது காலாலே உதைத்தார். இந்தப் பிரகாரம் உதைபடாநின்ற பகவானானவர் அதிதுவரிதமாய் எழுந்திருந்து மிகுந்த சந்தோஷத்தினாலே கிருதார்த்தனானேன்; தன்யனானேன் என்று சொல்லித் தம்முடைய இரண்டு திருக் கரங்களினாலேயும் அந்தப் பிருகு மகரிஷியினுடைய பாதத்தை மிகவும் சந்தோஷத்தினாலே பிடித்தார். அந்த மகரிஷியினுடைய பாதத்தை தம்முடைய இரண்டு திருக்கைகளினாலேயும் பிடியா நின்றுகொண்டு மகா மனோக்கியமான வார்த்தையைச் சொன்னார்: வாரீர் பிராமண சிரேஷ்டரே மகரிஷியே இப்போது உம்முடைய திருவடி ஸ்பர்சத்தினாலே என்னுடைய தேகமானது சர்வதா மங்களகரமாக நிற்கிறது. சமஸ்த அகிலைசுவரிய சம்பத்துக்களுக்கு ஏதுவாகா நின்றும் சகல ஆபத்துக்களையும் போக்கடியா நின்றும் அபரிமிதமான சம்சார சாகரத்தைத் தாண்டுகிறதற்கு அணைகளாயுமிரா நின்ற பிராமணனாகிய உம்முடைய திருவடித் தாமரைகள் என்னை ரட்சிக்கக் கடவது. யாதொருவனுடைய தேகத்திலே பிராமணனுடைய பாத தூளிகளானவை சர்வதா நிறைந்திருக்கிறதோ அவனுடைய தேகத்திலே சமுசயமில்லாமல் கங்காதி சகல தீர்த்தங்களும் இராநிற்கின்றன. என்று இந்தப் பிரகாரம் சொல்லிச் சீக்கிரமாக எழுந்திருந்து தேவியாகிய ஸ்ரீ மகாலக்ஷ்மியோடே கூட ஜனார்த்தனனாகிய ஸ்ரீ பகவானானவர் திவ்வியமாகிய கந்த புஷ்பங்களினாலே பக்தியோடே அந்தப் பிருகு மகரிஷியை ஆராதித்தார், முனிசிரேஷ்டரான அந்தப் பிருகு மகரிஷியானவர் ஆனந்த பாஷ்ப பூர்ணமான கண்களோடே கூடினவராய் மகானுபாவனாயும் ஆராதியா நின்றும் இருக்கிற அந்த ஸ்ரீ பகவானைப் பார்த்துச் சிரேஷ்டமான தம்முடைய

ஆசனத்தினின்றும் அதிதுவரிதமாய் எழுந்திருந்து தயாநிதியாகிய அந்தப் பகவானுக்குச் சாஷ்டாங்கமாய்ப் பிரணாமம் பண்ணி மகா தபஸ்வியாகிய அந்தப் பிருகு ரிஷியானவர் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தனாய் ஸ்ரீ பகவானைப் பார்த்து மிகவும் சந்தோஷத்தினாலே ஒரு வார்த்தை சொன்னார். பிருகு வாக்கியம்: அத்தியந்தம் அற்புதம்! அற்புதம்! இந்த ஸ்ரீ ஹரியினுடைய ரூபமானது மிகவும் ஆச்சர்ய ஹரமாக நிற்கிறது. சீலமானது அத்தியந்தம் அற்புதமாக நிற்கிறது. சாந்தியானது மிகவும் ஆச்சர்ய ஹரமாக நிற்கிறது. தயையானது அற்புதமாக நிற்கிறது. நிர்மலமாகிய காந்தியானது மகா ஆச்சர்யம் பொருந்திபிரா நிற்கிறது. அத்தியந்தம் பரிசுத்தமான சத்துவ குணமானது மிகவும் அற்புதம் பொருந்தியிராநிற்கிறது. சமஸ்தகலியாண குண பரிபூர்ண சாகரமாகிய இந்த ஸ்ரீ பகவானுடைய சுபாவமானது மிகவும் மங்கள குணமாகா நிற்கிறது. சாத்துவிக குணமும் அப்படியே மங்களகரமாக நிற்கிறது. அந்நியாளான சமஸ்த தேவதைகளுக்கும் ஸ்ரீ பகவானுடைய இந்தக் கலியாண குணங்களுக்குச் சமமான குணமானது ஈஷத்தும் இல்லவேயில்லை. வாரீர் புருஷோத்தமரே பிரம்மண்யராயும் சரணீயராயும் இராநிற்கிறவர் தேவரீரே. பிராமணாளுக்குப் பூஜா யோக்யரான பகவான் தேவரீரேயல்லாமல் வேறு தேவதைகள் பூஜா யோக்யரன்று. புருஷோத்தமராகித் தேவரீரை ஆராதியாமல் இதர தேவதாராதனம் எவர்கள் செய்கிறார்களோ அவர்கள் சமஸ்த ஜனங்களாலேயும் நிந்திதாளாயும், பாஷாண்டிகளாயும் ஆகக் கடவர்கள். வேதாந்த பராங்கதாளான பிராமணாளுக்கு ஜனார்த்தனனான தேவரீரே ஆராதனத்துக்கு யோக்கியராக நிற்கிறீர். தேவதைகளுக்கும் தேவரீரைவிட ஆராதனஞ் செய்கிறதற்கு ஒருக்காலும் வேறொருவரும் இல்லை. நீர் அசுவத்த விருட்சம். பிரம்மா, ருத்திரன் இவர்கள் முதலான தேவதைகள் ரஜோகுண தமோகுணத்தோடே கூடினவாளென்று சொல்லப்படுகிறார்கள். சுத்த சத்துவகுண பரிபூர்ணராகிய தேவரீரே பிராமணாளாலே பூஜிக்கத்தக்கவர். தேவரீருடைய ஸ்ரீ பாத தீர்த்தமே பிராமணாளுக்குப் பானம் பண்ணத்தக்கது. சமஸ்த பாபங்களையும் போக்கடிக்கத்தக்கதாயும் மோட்ச பலப் பிரதமாகியும் இராநின்றது. தேவரீருக்கு நிவேதனம் பண்ணின பிரசாத சேஷமானது பிதுருக்களுக்கும் தேவதைகளுக்கும் பிராமணாளுக்கும் புசிக்கிறதற்கு யோக்கியமாகத் தக்கது. இதர தேவதைகளுடைய தீர்த்தப் பிரசாதம் ஒருக்காலும் அங்கீகரிக்கத் தக்கதன்று. இதராளன தேவதைகளுடைய நிவேதன சேஷ பிரசாதம் தீர்த்தம் புஷ்பம் மற்றும் சமஸ்தமாகிய பதார்த்தமும்

தொடுகிறதற்கு யோக்கியமில்லாமலாகிவிடும். நிருமாலிய முதலான அந்த சமஸ்தமும் அமேத்யத்துக்குச் சமானமான படியினாலே சனாதனரான தேவரீரைத்தானே பிராமணாள் ஆராதிக்கக்கடவர். வித்துவானான பிராமணனானவன் தேவரீருடைய ஸ்ரீபாத தீர்த்தம் தேவரீருடைய பிரசாதசேஷம் இவைகளைத்தானே சர்வகாலமும் அங்கீகரிக்கக்கடவன். பிராமணானானவன் தேவரீரைத் தவிர இதர தேவதைகளைப் பார்க்கக் கடவனன்று. அந்நிய தேவதாலயங்களிலே பிரவேசிக்கக் கடவனன்று. யாதொரு பிராமணனானவன் சிரார்த்த வேளையிலே தேவரீருக்கு நிவேதனம் பண்ணாத பிரசாதம் பித்ருக்களுக்கும் ஆகுதி பண்ணுகிறானோ பிதுருக்களை உத்தேசம் பண்ணிப் புசுப்பிக்கிறானோ அந்த ஆகுதி சிரார்த்தத்திலே புசுப்பித்த அன்னம் தீர்த்தம் சமஸ்தமும் வியர்த்தமாய்விடும். அந்தப் பிராமணனுடைய பித்ரு தேவதைகளும் ரத்த மாமிசங்களினாலே நிறையப்பட்ட நரகத்திலே நூறாயிரங்கற்ப கோடி கால பரியந்தம் விழுந்திருப்பார்கள். வாரீர் மகானுபாவரே! தேவரீர் ஸ்ரீய: பதியாயும் சனாதனராயும் ஸ்ரீ வாசுதேவராயும் இராநின்ற ஸ்ரீமந் நாராயணனன்றோ தேவரீரே சர்வவியாபகராயும் சர்வாந்தர்யாமியாயும் விருத்தியாயும் நாச ரஹிதராயும் பரமாத்துமாவாயும் சுத்த சத்துவகுண பரிபூர்ணராயும் இருக்கிறதனாலே தேவரீரே பிராமணாளுக்குப் பூஜா யோக்கியர். வாரீர், பிரபுவே! அனந்தராயும், ஜகத்பதியாயும் சர்வ பூதாத்ம சுவரூபராயும் இராநின்ற தேவரீர் பொருட்டுச் சேவிக்கிறேன். பிரம்மணிய தேவராயும் புருஷோத்தமராயும் இராநின்று ஸ்ரீஹரியாயும் நின்ற தேவரீர் பொருட்டுச் சேவிக்கிறேன். நரசிங்கராயும் சர்வாந்தர்யாமியாயும் இராநின்றவர் பொருட்டுச் சேவிக்கிறேன். வராக மூர்த்தியாயும் வேதாந்த நாதனாயும் இராநின்றவர் பொருட்டு நித்தியமுஞ் சேவிக்கிறேன். பிரம்மண்ய தேவனாயும் சேஷசயனராயும் தாமரைப் புஷ்ப தளம்போலேயொத்த திருக்கண்களை யுடையவராயும் இராநின்ற ஸ்ரீராகவன் பொருட்டு அடிக்கடி சேவிக்கிறேன். வாரீர் சர்வலோக நாயகரே! தேவதைகள் ரிஷிகள் இவாள் முதலான சமஸ்தமான பேர்களும் உம்முடைய மாயையினாலே மோகித்தாளாய் தேவரீருடைய பிரபாவத்தை அறியவில்லை. வாரீர், ஜகதீச்வரராகிய ஸ்ரீ பகவானே!

வேத வேதாந்த ஜ்ஞான சீலர்களாயும் தர்மசாஸ்திரப் பிரவர்த்தர்களாயும் இராநின்ற மகரிஷிகள் நாமரூப குணங்களினாலேயும் துஷ்கரமான வருந்தி முடித்தற்குரிய நடத்தைகளினாலேயும் தேவரீருடைய பரத்துவ சோதி சூசகமென்னப்பட்ட

பரப்பிரம்ம நிருபணமான சத்துவ குணத்தையறிகைக்கு என்னை ஆக்ஞாபித்தார்கள். அப்படி ரிஷிகளாலே ஆக்ஞாபிக்கப்பட்டவனாய்த் தேவரீருடைய சந்நிதானத்துக்கு வந்தவனாகா நிற்கிறேன். வாரீர் பிரம ருத்திர ஜனகராகிய கேசவரே! தேவரீருடைய சீல குணங்களை அறிவதற்கு அடியேன் காலினாலே அபசாரப் பட்டேன். அடியேனாலே செய்யப்பட்ட மகத் அபராதத்தையும் க்ஷமித்தருள வேணுமென்று பிரார்த்தித்து பின்பு அத்தியந்தம் மங்களகரமான யக்ஞ சாலைக்குச் சந்துஷ்டி யுடனே கூடினவராய் புறப்பட்டுப் போனார். அந்த யக்ஞ சாலை யிலே யிரா நின்ற மகரிஷிகளானபேர்கள் வரா நின்ற மகாத்மா வான பிருகு மகரிஷியைக் கண்டு அதிதுவரிதமாய் எழுந்திருந்து எதிர் கொண்டு சாஷ்டாங்கமாகச் சேவித்து எதாவிதியாகப் பூஜித்தார்கள். இப்படி ஆராதியா நின்ற மகரிஷிகளுக்கு முனி சிரேஷ்டரான அந்தப் பிருகு மகரிஷியானவர் சமஸ்த விருத் தாந்தமுஞ் சொன்னார்.

தேவதா சிரேஷ்டாளாகிய ரஜோகுண தமோகுண பரிபூர்ணா ளாகிய பிரமருத்திராள் என்னாலே சபிக்கப்பட்டார்கள். வாருங் கோள், ரிஷி சிரேஷ்டாளே! பிரம ருத்திராள் பிராமணாளுக்கு பூஜா யோக்கியரன்றென்று என்னாலே சபிக்கப்பட்டார்கள். கயிலாச பர்வதத்திலே தமோகுணத்தினாலே சூழப்பட்ட ருத்திர ரானவர் பிரம்மணிய சூன்யத்துவத்தை அடைந்தவராயும் நிகிருஷ்ட ரூபத்தை யடைந்தவராயும் ஆக என்னாலே சபிக்கப் பட்டார். சுத்த சத்துவ மயராயும், ஸ்ரீ விஷ்ணுவாயும், கல்யாண குணசாகரராயும் பரப்பிரம்மமாயும், ஸ்ரீமந் நாராயணராயும் இரா நின்ற ஸ்ரீ ஹரியே பிராமணாளுக்குத் தெய்வமாகா நிற்கிறார். ஸ்ரீய : பதியாயும், ஸ்ரீ விஷ்ணுவாயும், ஸ்ரீ வாசுதேவராயும் இரா நின்ற ஜனார்த்தனரே பிரம்மண்யராக நிற்கிறார். புண்டரீ காட்சனாயும் கோவிந்தனாயும், ஸ்ரீ ஹரியாயும், அச்சுதராயும், பிரம்மண்யராயும், புருஷோத்தமராயும் இரா நின்ற அந்த ஸ்ரீ பகவானே பிராமணாளுக்குப் பூஜா யோக்கியமாக நிற்கிறார். இதரமான தேவதைகள் பிராமணாளுக்கு யோக்கியரன்று. மோகத்தினாலே யாரொருவன் ஸ்ரீ ஹரியைத் தவிர இதரமான அந்நிய தேவதையைப் பூஜித்தானேயாகில் அவனானவன் பாஷாண்டத்தை யடைகுவன். யாரொரு பிராமணனானவன் சிரார்த்த கர்மத்திலே பகவந் நிவேதனமான பிரசாதத்தைப் பிதுருக்களுக்குப் புசிப்பிக்கவில்லையோ அந்தப் பிராமணனுடைய பிதுரு தேவதைகள் அமேத்திய மூத்திரமாகிய நரகத்திலே அமேத்திய மூத்திரத்தையே புசித்துக்கொண்டு சர்வகாலமும் அதிலேயே விழுந்திருப்பார்கள். ஆகையினாலே பிராமணாளுக்கு

ஸ்ரீ விஷ்ணுவினுடைய பிரசாதமானது சர்வகாலமும் புசிக்கத் தக்க தாகவாக நிற்கிறது. இதர தேவதைகளினுடைய நிருமால்ய மானது நிந்திக்கத் தக்கதாக நிற்கிறது. யாரொரு ஞானவீனனான பிராமணனானவன் சங்கரன் முதலானவர் களுடைய நிவேதனத்தை மோகத்தினாலே புசித்தானே யாகில் அவனானவன் நிச்சயமாய் சண்டாளனாகி விடுவான். ருத்திரன் முதலான தேவதைகளுடைய நிருமால்ய பட்சணத்திலே பிராமணனானவன் ஆயிரங்கோடி கற்பகால பரியந்தம் நரகாக்கினியிலே தகிக்கப்படுவன். யக்ஷாள், ராக்ஷசாள், பிசாசாள் இவர்களுடைய நிவேதனமான மச்சியமாம் சத்தைப் பிராமணனானவன் புசிக்கத் தக்கதன்று. ஆகையால் பிராமணனானவன் அந்நிய தேவதையை விட்டுவிட்டு ஜிதேந்திரி யனாய்த் தன் பிராணனுள்ள பரியந்தம் ஜனார்த்தனனாகிய விஷ்ணுவையே ஆராதிக்கக் கடவன். ஸ்ரீ பகவத் ஆராதனம் பண்ணின பேர்கள் அந்த ஸ்ரீ விஷ்ணுவினுடைய சிரேஷ்டமான ஸ்ரீ வைகுண்டத்தையே சமுசயமில்லாமல் நிச்சயமாய் அடைகு வர்கள். தாபாதி பஞ்ச சமஸ்காரர்களுடனே கூடினவளாயும், நிர்மல சித்தாளாயும் அப் பிராகிருதாளாயும் இரா நின்ற பேர்கள் எதாவிதியாக பகவானை நன்றாக ஆராதிக்கக் கடவர்கள். சக்கராங்கித பூஜாளாயிருக்கிற பிராமணாள் மங்களகராளாகி அப் பிராக்ருதாளாக நிற்கிறார்கள். சக்கராங்கிதாள் ஆகாத பேர்கள் தாமசகுணத்தோடே கூடினபிராகிருதாளாக நிற்கிறார்கள். ஆனபடியினாலே பிராமணனானவன் பிராகிருத சம்பந்தத் தினாலே வந்திரா நின்ற சகல பாப சமூகங்களைப் போக்கடிக்கத்தக்கதாகிய ஸ்ரீ விஷ்ணுவினுடைய திருவாழிச் சங்கினாலே புஜ மூலத்திலே திருவாழி, திருச்சங்கு ஆகிய தாபத்த முத்திரையைத் தரிக்கக்கடவன். அவயவங் களிலே சாஸ்திரங்களினாலே சொல்லப்பட்ட ஊர்த்வ புண்டரங்களைத் தரித்து மந்திரத்தினாலே எதாவதியாகப் புருஷோத்தமனாகிய ஸ்ரீ பகவானை ஆராதிக்கக் கடவன். சாவதான சித்தனாய் ஸ்ரீ பகவந் நிவேதன பிரசாதத்தையே புசிக்கக் கடவன். ஸ்ரீ பகவானுடைய ஆவரண தேவதா பூஜை யிலேயும் அந்த ஸ்ரீ பகவானையே ஆராதிக்கக் கடவன். சமஸ்த எக்ஞங்களுக்கும் போக்தாவாயும் பரமேசுவரராயும் இரா நின்ற அந்தப் பகவானையே ஆராதிக்கக் கடவன். வசிட்டர் வாக்கியம்: வாராய் திலீப மகாராசனே! இந்தப் பிரகாரம் பிருகு மகரிஷியி னாலே சொல்லப்பட்ட பாபரகிதாளாகிய சமஸ்தமான மகரிஷி களும் அந்தப் பிருகு மகரிஷியைச் சாஷ்டாங்கமாகத் தண்டப் பிரணாமம் பண்ணி அஞ்சலி ஹஸ்தாளாய் ஸ்தோத்திரம் பண்ணினார்கள் ரிஷிகள் வாக்கியம் - வாரீர் ஷாட் குண்யபரி

பூர்ணராயும் பிராமண சிரேஷ்டருமாகிய பிருகு மகரிஷியே! எங்களுடைய சமுசயத்தைப் போக்கடித்தவர் தேவரீரே. தமோ குணத்தினாலே சூழப்பட்டவளாயும், அந்தகாரமான தமோ குணத்தினாலே முழுகா நின்றவாளாயும் நின்ற பிராமணாளான நாங்கள் தேவரீருடைய பிரசாதத்திலே புருஷோத்தமனாகிய ஸ்ரீ விஷ்ணுவை நாங்கள் அறிந்தோம். வாரீர் பிராமண சிரேஷ்ட ராகிய மகரிஷியே! தேவரீராலே நாங்கள் ஜனார்த்தனனான ஸ்ரீ விஷ்ணுவே பரமாகத் தெரிந்து சுகத்தை அடைந்தவர்களாக ஆகிவிடுகிறோம். வாரீர், பிரமஞான பரிபூரண மகரிஷியே! தேவரீரே அடியேங்களுக்குப் பரமமான கதி; தேவரீரே பரமமான தர்மம்; தேவரீரே பரமமாகிய தபத பிரசாதத்தினாலே பிராமணாளாகிய நாங்கள் அந்நியதா ஞானங் களை அடையாதவாளாய் பகவத் பக்தி பரிபூர்ணாளாய் ஆகா நிற்கிறோமென்று இந்தப் பிரகாரம் பிராமணராகிய பிருகு மகரிஷி யைச் சமஸ்தமான மகரிஷிகளும் ஸ்தோத்திரம் பண்ணி, அந்தப் பிருகு மகரிஷியினிடத்தினின்றும் அடையப்பட்ட ஸ்ரீ பகவான் மந்திரத்தை யுடைத்தானவாளாய் அச்சுதனாகிய ஸ்ரீ பகவானை ஆராதித்தார்கள். வாராய், ராஜ ஸ்ரேஷ்டனே! பிருகு சாபத் தினாலே சிவனுக்குச் சம்பவியா நின்ற யோனிலிங்க ரூபமானது ஸ்ரீ ராமனுடைய கராரவிந்த ஸ்பரிசத்தினாலே லோக நிந்தித மாகிய அந்த யோனிலிங்க ரூபமானது மகா மனோக்கிய ரூபமாகிய ரூபமாக ஆகப் போகா நிற்கிறது. சமஸ்த தேவதைகளுக்கும் பரிசுத்தராயும் புருஷோத்தமராயும் இரா நின்ற ஸ்ரீராமனானவர் அந்த லிங்கத்தைத் தொடப்பட்டவராய் கடாக்ஷிக்கப் போனார். அப்படிக் கடாக்ஷியா நின்ற ஸ்ரீ ராமராலே சங்கராதிகள் பரிசுத் தாளாகப் போனார்கள். சமஸ்த தேவதைகளுக்கும் மாதா பிதா ஸ்ரீ ஜனார்த்தனர். அவரே வாற்சல்ய குணசாகரமாகிய ஸ்ரீ பகவா னானவர். சமஸ்த லோகத்துக்கும் ரக்ஷகர். உமக்குப் பரம பதத்தை யடைய வேணுமென்று இச்சை யுண்டாயிருந்ததானால் அந்த ஸ்ரீ பகவானையே சரணமாக அடையக் கடவாய்.

இனி பரமபத நாட்டுப் புருஷனுடைய அவதாரக் கிரமங் களைச் சொல்லுகிறது.

## 11. அவதாரக்கிரமம்

ஷாட்குண்ய பரிபூர்ணனான பரமாத்துமா ஆதிகாலத்தில் உலகங்களைச் சிருஷ்டிக்க வேணுமென்று இச்சையினாலே அகங்காரமென்றும், சூட்சும பூதங்களைந்தும், இந்திரியங் களைந் தும் ஆகப் பதினாறுகளுடனே கூடிய மகத்துவமாகிய சரீரத்தைச் சங்கற்பித்துப் புருஷாகாரமாகிய உருவையெடுத்தான். அந்தருபம்

எப்படிப்பட்டதென்றால் பரிபூர்ணமான ஜலத்துக்குள்ளே யோக நித்திரை செய்கிற வியாஜத்தாலே யோகத்தைச் செய்ய, அந்த மூர்த்தி விசிஷ்டமான சுவாமியினுடைய நாபியாகிய மடுவிலுண்டான கமலத்தில் பிறந்த சதுர்முகனாவன் மற்ற பிரஜாபதிகளுக்கெல்லாம் சிரேஷ்டனாக விளங்கிப் பரமாத்மாவினுடைய சரீர அவயவங்களாகிற ஸ்தான விசேஷத்தால் பதினாலு லோகங்களுடைய விஸ்தாரத்தைக் கற்பித்தான். அந்த ரூபம் சத்துவமதிகமாகி அதிக பலமானது; இந்த ரூபத்தைப் பிரம்மாவானவன் அநேகங் கண்களுடனேயும், அநேகம் பாதங்களுடனேயும் அநேகஞ் சிரசுகளுடனேயும், அநேகம் காதுகளுடனேயும் அநேகம் மூக்குகளுடனேயும், அநேகம் கிரீடங்களுடனேயும், அநேகம் குண்டலங்களுடனேயும், அநேகம் பீதாம்பரங்களுடனேயும் கூடி விளங்கி ஆச்சரியகரமாகியிருக்கிற இந்த ரூபத்தைக் கண்டான். சுவாமியினுடைய அவதாரங்களில் இதுவே முதலாவது அவதாரம். இந்த அவதாரத்திலிருந்து மற்ற அவதாரங்களெல்லாம் உண்டாயிற்று. இரண்டாவது பகவான் இந்த உலகங்களுடைய க்ஷேமத்தைக் குறித்துப் பாதாளத்திலே முழுகியிருந்த பூமியை உத்தரிக்க வேண்டி எக்ஞ சொருபமான வராக ரூபத்தைத் தரித்தார். மூன்றாவது. நாரத ரூபமாக அவதாரஞ் செய்து பலத்தை இச்சியாத கர்மானுஷ்டானமே முக்கியமென்று கர்மஞ் செய்தவனை அந்தக் கர்ம பலன் தொடராது என்பதையும் வெளியிட வேண்டி சாத்துவித சங்கிதையான பாஞ்சராத்ர சாஸ்திரத்தை அருளிச் செய்தார். நாலாவது பதரிகாசிரமத்திலே நர நாராயணரென்கிற ரிஷி ரூபங்களைத் தரித்து சகல இந்திரிய நிக்கிரகங்களைச் செய்து மற்றொருவராலே சொல்ல அசக்கியமான தவ மகிமைகளைச் சொன்னார். அஞ்சாவது கபிலாவதர்ரத்தைச் செய்து யோகசித்த சிரேஷ்டனாகி வெகு காலமாய் கிலமாயிருந்த சாங்கிய சாஸ்திரத்தைத் தனக்கு மாதாவான தேவாகுதிக்கு உபதேசித்து தத்துவ சமூகங்களை நிச்சயஞ் செய்தார். ஆறாவது. அநுசூயா தேவியாலே பிரார்த்திக்கப்பட்டு அத்திரி மகரிஷிக்குப் புத்திரனாகச் சனித்து தத்தாத்திரேயரென்று பெயரையுடைத்தாகி, பிரகலாதன் முதலான பேர்களுக்குத் தத்துவ உபதேசஞ் செய்தார் ஏழாவது. வசுப்பிரஜாபதிக்கு ஆகுதி தேவியிடத்து அவதாரஞ் செய்து ஸ்ரீ எக்ஜமூர்த்தியென்று திருநாமந் தரித்து சுவாயம்புவ மன்வந்தரத்தை ரட்சித்தார். எட்டாவது நாபி பிரஜாபதிக்கு மேருதேவியிடத்தில் அவதரித்து விக்ரமன் என்கிற திவ்ய நாமத்தாலே பிரகாசித்து, சகலமான ஆசிரமங்களும் வந்தனஞ் செய்யும்படியான ஞானிகளுடைய மார்க்கத்தைப் பிரகாசஞ் செய்தார். ஒன்பதாவது முனிவர்களாலே பிரார்த்திக்கப்பட்டுப் பிருது சக்கரவர்த்தியென்கிற திருநாமத்தாலே அவதரித்துப் பூமியைக்

கறந்து தானிய வர்க்கங்களை யுண்டாக்கினார். பத்தாவது ஏகார்ணவமான ஜலத்தில் மத்ஸ்ய ரூபத்தைத் தரித்து ஓடத்தைக் கற்பித்து வைவச்வத மனுவைப் பாலனஞ் செய்து பூமியை உத்தரித்தார். பதினோராவது: தேவர்களும், அசுரர்களும் மந்தர கிரியை மத்தாக நாட்டிப் பாற்கடலில் அமுதங் கடையுஞ் சமயத்தில் பாதாளத்தில் அமிந்து அமுந்தின மந்த்ரகிரியைக் கூர்மரூபந் தரித்து முதுகிலே தரித்தார். பன்னிரண்டாவது. அந்தக் கடலிலே தன்வந்தரி பகவானாக அமுதக் கடத்துடனே அவதாரஞ் செய்தார். பதின்மூன்றாவது: மோகினி ரூபந்தரித்து அசுரர்களை மோகிப்பித்துத் தேவர்களுக்கு அமுத பானஞ் செய்வித்தார். பதினாலாவது: நரசிங்க அவதாரமெடுத்து அதிபலாட்யனான இரணிய கசிபுவை வச்சிரமான நகங்களினாலே கோரையைப் பிளந்தாற்போல அவன் மார்பைப் பிளந்தார்; பிரகலாதனை ரட்சித்துச்சகலவைபோகங்களையும் அளித்தார். பதினைந்தாவது: வாமனாவதாரத்தைச்செய்துமாவலியினுடைய எக்ஞபூமியில்வந்து மூவடி நிலத்தை யாசித்துத் தானம்வாங்கி விசுவரூபந் தரித்துப் பதினாலுலோகங்களையும் ஈரடியால் அளந்து மற்றொரு அடியால் அவனையுங் கைக்கொண்டு தேவர்களுக்குச் சகாயஞ் செய்தார். பதினாறுவது: பரசுராமனாக அவதரித்துப் பிராமணத் துரோகிகளான ராஜாக்களைப் பார்த்து இருபத்தொரு தலைமுறை சூரியவம்சத்து ராஜாக்களையும் சங்கரித்துப் பூமியில் க்ஷத்திரியர்களைக் கருவறுத்தார். பதினேழாவது: சத்தியவதியிடத்தில் பராசர முனிவருக்குச் செனித்துத் தம்முடைய நடத்தையாலே வியாசரென்று திருநாமந்தரித்து வேதமாகிய மகா விருக்ஷத்தினுடைய சாகைகளைக் கண்டு அவைகளுடைய சிக்கைப் பற்றறப் பரிகரித்தார்.

அவதாரக் கிரமத்தொடர்ச்சி: பதினெட்டாவது ஸ்ரீராமாவதார மகாத்மியம் தசரத மகாராஜாவுக்கும் கௌசல்யா தேவிக்கும் கைகேசிக்கும் சுமித்திரா தேவிக்கும் ராமலக்ஷ்மண பரத சத்ருக்நராகவும் அவதரித்து வளர்ந்து வராநின்ற காலங்களில், சவள உபநயனமாய் சகல சாஸ்திர நிபுண தனுர்வேத வல்லபராயும் வாலிபர்களாயு மிருக்குங் காலங்களில் விசுவாமித்திரர் தசரத மகாராஜா விடத்திலெழுந்தருளி, ஸ்ரீராம லக்ஷ்மணரை அவரனுமதியில் அனுப்பிவித்துக் கொண்டு தம்முடைய வேள்விக்கு வந்து ஸ்ரீராமரனுமதியினால் வேள்வி வளர்த்து வரும்போது, மகாகோரமாயும் பயங்கரமாயும் அவருக்கு விரோதியாயும் வராநின்ற தாடகையை விசுவாமித்திரரனுமதியினாலே சம்ஹரித்து விசுவாமித்திரரைச் சந்தோஷிக்கும் படியாகச் செய்வித்து இராநின்ற ராமலக்ஷ்மணர்களைக் கூட்டிக்

கொண்டு அங்கங்கேயிருக்கிற அதிசயங்களைக் காண்பித்துக் கொண்டு வருகிறபோது அநேக மகரிஷி ஆசிரமங்களைக் காட்டிக்கொண்டு வருகையில் ஸ்ரீ ராமருடைய பாதஸ்பர்சம் ஒரு கல்லுக்குப் பட்டு மகாரூபலாவண்யஸ்தீரியாய் எதிரே நின்று தண்டஞ் சமர்ப்பித்தவளைப்பார்த்து அகலிகையென்று விசுவாமித்திரராலே அறிந்து யதாப்ரகாரம் கௌதமர் ஆச்ரமத்துக்கு அகலிகையை அனுப்பிவித்து அவ்விடத்தினீன்று மிதிலாபுரிக்கு எழுந்தருளி, சனகமகாராசா வாலே உபசரிக்கப் பட்டவராய் அவர் வைத்திருந்த சாபமாகிய வில்லை வளைத்து முறித்து, பூதேவியமிசமாய் எழுந்தருளியிரா நின்ற சீதா பிராட்டியை மகா அலங்கிருதத்துடனே பாணிக்கிரகணம் பண்ணத் தசரத மகாராஜாவையும் தாய்மாரையும் அழைப்பிவித்து சுபமங்களகரமான முகூர்த்தத்தில் பாணிக் கிரகணம் பண்ணிக்கொண்டு மற்ற பரத லட்சுமண சத்ருக் நருக்கும் அவ்விடத்திலேயே பாணிக்கிரகணஞ் செய்வித்துக் கொண்டு, ஸ்ரீராமசீதா சமேதராய் திருவயோத்திக்கு எழுந்தருளி வருகிறபோது வழியிலே நேரிட்ட மகாகர்வத்தையுடைத்தாகிய பரசுராமர் வில்லையொடித்துப் பங்கப்படுத்தி அனுப்பிவிட்டு, திருவயோத்திக்குச் சகல சம்பிரமத்துடனே எழுந்தருளிச் சீதாப் பிராட்டியுடனே மனோக்கிய நிரம்பிய சந்துஷ்டராயும் மாதா பிதாக்களுடைய மனோரம்மியமாயும் இராநின்ற காலங்களில் தசரத மகாஜாராவுக்குப் புத்திரராகிய ஸ்ரீ ராமரிடத்தில் அதிக வாற்சலியமுண்டாய் ஸ்ரீ ராமருக்கு மகுடாபிஷேகஞ் செய்ய வேணுமென்று வசிட்டரை யோசித்துச் சந்துஷ்டராயிருக்கையில் பூர்வாகிருதமாய் வரப்பட்ட வினையைப்போலே ஒரு கூனி முன்னிலையாய் கைகேசிக்கே கொடுத்த வரத்தால் பதினாலு வருஷம் ஸ்ரீ ராமர் வனவாசம் போகவும், பரதன் ராச்சியமாளவும் பூர்வங் கொடுத்திரா நின்ற வரத்தைப் பற்றினவளாய்க் கொண்டு தசரத மகாராஜாவைக் கேட்டுக்கொண்டு ராமலட்சுமண சீதா பிராட்டியையும் காட்டுக்குப் போகும்படி செய்த உத்தரவைத் "தன்யோஸ்மி" என்று மாதா பிதாவை வணங்கிக்கொண்டு கௌசல்யா தேவி சுமித்திரா தேவிகளிடத்தில் செலவு வாங்கிக் கொண்டு பித்ருவாக்கிய பரிபாலனம் பண்ண எழுந்தருளும்போது சீதாபிராட்டியும் லட்சுமணருங்கூடத் தொடர்ந்தவராய்க் கொண்டு ரதமேறி, நடந்து சிறிது தூரம்போய் ராத்திரியானவுடனே ரதத்தைவிட்டுத் தாங்கள் தப்பித்துக்கொண்டு மரவுரி சடை யணிந்தவராய்க்கொண்டு, கங்கைக் கரை வந்து குகனைக் கண்டு அவன் வணக்கத்தையும் கைங்கரியத்தையும் கண்டு அவனையும் ஒரு தம்பியாய் எண்ணி ஆதரித்து ஓடமேறி அக்கரையில் இறங்கி,

பாரத்துவாசர் ஆசிரமத்திற்கு வந்து அவ்விடத்திலிருந்து சித்திர கூட பர்வதம் வந்து சேர்ந்திருக்கையில்;

இப்பால் இங்கே திருவயோத்தியில் புத்திரசோகத்தால் தசரதர் சுவர்க்கத்தையடைந்த செய்தியைக் கேகய ராஜா வண்டையிலே போயிருந்த பரதன்கேட்டு அதிவேகத்துடனே திருவயோத்தி வந்து கனக்கச் சித்தாக்ருதனாய், துக்கத்தை யடைந்தவராய் தசரதருக்குச் சம்ஸ்காரகிரியையெல்லாம் செய்து ஸ்ரீராமருக்கு வனவாசமும் தமக்குப் பட்டமுமாக வரங்கேட்டுக் கொண்டதாயாரை வெகுவாய்த் தூஷித்து, தாயாகிய கௌசலைக்கு இந்த ராமத் துரோகத்துக்குத் தான் ஏதுவல்லன் என்கிற அநந்தஞ் சத்திய வசனங்களைச் சொல்லி, ராமரைப்போலே பரத சத்ருக்நரும் மரவுரி உடுத்திக்கொண்டு அதிவேகத்துடனே சித்திர கூடத்துக்கு வந்து ஸ்ரீராமருடைய பாத பதுமங்களில் விழுந்து பிதாவினுடைய சுவர்க்க யாத்திரையைச் சொல்லி ஒருவர்க் கொருவர் துக்க கோஷத்துடனே கங்காதீர்த்தத்தில் தசரதருக்கு வாசோதகம், திலோதகம், பிண்டப் பிரதானம் ஆகிய உத்தரக் கிரியைகளைச் செய்து, பரதரை அழைத்துப் பதினாலு வருஷமும் பதினாலு நாளாயிரு தம்பி! என்று சொன்ன ராமர் பாதத்தில் பரதர் விழுந்து தண்டன் சமர்ப்பித்து, தேவரீரே வந்து ராச்சிய பரிபாலனம் பண்ணவேணுமென்று பிராயோபவேசம் பண்ணிக் கிடக்கா நின்ற பரதரை ஸ்ரீராமர் எடுத்தணைத்து ஆலிங்கனஞ் செய்து தேறுதல்களாய சிறிது புத்திகளைச் சொல்ல, பதினாலு வருஷத்திலே வராமற் போனால் அக்னிப் பிரவேசமாவேன் என்றும் பாஷை வைத்துக்கொண்டு, திருவடியிலுடைய பாதுகை களை வாங்கிக்கொண்டவராய் நந்திக் கிராமத்துக்கு வந்து, சிம்மாசனத்தில் திருவடி நிலைகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு அந்தத் திருவடி நிலைகளிடம் ராச்சிய பரிபாலனத்தை யொப்புவித்துக்கொண்டு வரப்பட்டவராய் பரத சத்ருக்நர் இருவரும் அந்தத் திருவடி நிலைகளைச் சேவித்துக்கொண்டே இருந்தார்கள்.

இப்பால், இங்கே ஸ்ரீராமலட்சுமணர் சீதா பிராட்டியுடனே நித்தியமாய் ஆரணியஞ்சேர்ந்து அநேக மகரிஷிகளின் ஆச்ரமந் தோறும் இருந்து, அப்புறம் போம்போது விராதனைச் சம்ஹாரம் பண்ணி, சரபங்காச்ரமத்துக்கு வந்து, அத்திரி ரிஷி ஆசிரமஞ் சேர்ந்து அவர் தேவியாகிய அநுசூயா தேவியினாலே சீதா பிராட்டியார் அலங்கிருதப்பட்டு அவர்களிடத்தில் விடைபெற்று, அப்புறம் தண்டகாரணிய வனத்திற் செல்லும்போது, அவ்விடத் திலிருந்த மகரிஷிகள் ஸ்ரீராமரை எதிர்கொண்டு அழைத்து வந்து உபசாரஞ் செய்து ராவணனுடைய துஷ்டத்தனத்தினால் வரா

நின்ற உபத்திரவங்களைச் சொல்லக்கேட்டு, ஸ்ரீ ராமர் அந்த உபத்திரவங்களை தீர்த்துக் கொடுக்கிறோம் என்று அபயஹஸ்தம் கொடுத்தருளி அவ்விடத்தில் அவர்களிடத்தில் அனுப்பிவித்துக் கொண்டு அகத்தியர் ஆசிரமத்துக்கு வந்து, அவரைப் பூஜித்து அவரிடத்தில் சகல அஸ்திரங்களையும் அஸ்திர மந்திரங்களையும் அநேக சிலம்பங்களையும், தனுர்வேத விதிகளையும் வெகு உன்னிதங்களாய்த் தெரிந்தவராய் சமஸ்த அஸ்திரங்களையும் பெற்றுக்கொண்டவராய், அப்புறம் சம்புகுமாரனை லட்சுமணன் வதைத்து, சூர்ப்பணகை நாசியைப் பங்கப்படுத்தின துவேஷத் தால் வந்தெதிர்த்த அந்தக் கரதூஷணாதிகளை ஸ்ரீராமர் வதைத்து மாயா மாரீசனைக் கொன்று சீதா பிராட்டியை ராவணன் சிறையெடுத்த விவரம் சடாயுவினாலே தெரிந்து, ராவணனாலே இறந்து விழுந்து கிடந்த சடாயுவுக்குப் பிதாவுக்குச் செய்யும் படியான சம்ஸ்கார பிரமமேதமுஞ் செய்து மோக்ஷம் கொடுத்து, அவ்விடத்திலிருந்து புறப்பட்டுக் கவந்தனைச் சம்ஹரித்து, சபரிக்கு மோட்சங் கொடுத்து, பம்பையாற்றங் கரையில் எழுந்தருளியிருக்கும்போது, ஆஞ்ச நேயர் வந்து, ஸ்ரீ ராமசந்திர சுவாமியைத் தெண்டன் சமர்ப்பித்து, சுக்கிரீவனை ரட்சிக்கும் பொருட்டுச் சுக்கிரீவனைக் கூட்டிவந்து சரணாகதி பண்ணுவித்து நிற்கையில், சுக்கிரீவனுக்கு வாலியை ஜயித்துக்கொடுக்கிறோம் என்று அபயஹஸ்தம் கொடுத்து, மராமரமெய்து. வாலியை மர்த்தனஞ் செய்து சுக்கிரீவனுக்குக் கிட்கிந்தையைப் பட்டங்கட்டி அங்கதனுக்கு யுவராச்சிய பட்டங் கட்டி, மதங்கபர்வதத்தில் வீற்றிருந்த ஆஞ்சநேயரை அழைத்து ரகசியஞ் சொல்லி திருவாழியைக் கொடுத்துத் தேறுதல் சொல்லிப் பதில் அடையாளம் வாருமென்று ஸ்ரீ ராமர் ஆஞ்சநேயரை அனுப்ப ஆஞ்சநேயரும் தென்திசைக்குப் போய்த்தேடும்போது சம்பாதியைக் கண்டு அவராலே சீதையிருப்பிடம் தெரிந்து கொண்டு மகேந்திரமேறிச் சமுத்திரத்தைத் தாண்டி, இலங்கணியைக் கொன்று அசோகவனத்தில் இராநின்ற சீதா பிராட்டியார் ராட்சசர் செய்குற்ற துர்மார்க்க வசனங்களுக்குச் சினங்கொண்டவளாய் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ள உத்தி (யுக்தி) யோசியா நின்றவேளையில் ஆஞ்சநேயர் திருவாழியைச் சீதாபிராட்டியார் கையிற்கொடுத்து சொன்ன ரகசியங்களையும் சொல்லி, தெண்டன் சமர்ப்பித்து நிற்கையில் சீதாபிராட்டியாரும் சந்தோஷகரமாய் சூளாமணியை ஆஞ்சநேயர் கையில் கொடுத்து பதில் உத்தரவு சொல்லியனுப்பின மாத்திரத்தில் அசோக வனத்தை அழித்து அனந்த ராட்சசாளுடனே வந்த பஞ்ச சேனாபதிகளையும் கொன்று ராவணன் புத்திரன் அட்சய குமாரனையும் கொன்று, இந்திரசித்தினுடைய பிரமாஸ்

திரத்தில் அகப்பட்டவனாய் அவனுடனே ராவணனிடத்துக்குச் சென்று சில வார்த்தைகளை மதியாமல் பேசி, அவன் வாலில் வஸ்திரத்தைச் சுற்றிக் கொளுத்திவிட்ட தணலாலே இலங்காபுரியைத் தகனம் பண்ணி, சீதாபிராட்டியாரிடத்தில் விடைபெற்றுக் கொண்டவராய், ஸ்ரீராமபத்திர சுவாமியினிடத்துக்கு வந்து, சீதாபிராட்டியார் தந்த சூளாமணியைக் கொடுத்து, சொன்ன வசனங்களையும் சொல்லிச் சந்தோஷிப்பித்த ஆஞ்சநேயருக்கு ஸ்ரீராமசந்திரர் சிரஞ்சீவியாய் இருமென்று ஆசீர்வாதஞ் செய்து சுக்கிரீவன்முதலான வானர சமூகங்களுடனே தட்சின சமுத்திரக் கரை வந்திருக்கையில்; மகா பக்தனான விபீடணன் தன் தமையனாகிய ராவணனுக்குச் சீதாபிராட்டியாரை ஸ்ரீராமரிடத்தில் விட்டுச் சரணாகதியடைவோமென்று வெகுவித புத்திகளைச் சொல்லியும் கேளாமல் நிராதரணை பண்ண, கொடிய பாவியாகிய ராவணனைவிட்டு அவ்விடத்தினின்றும் நாலு மந்திரிகளுடனே ஆகாசமார்க்கமாய் வந்து ஸ்ரீராமசந்திர சுவாமியைச் சரணாகதியடைந்து விபீஷணனுக்குச் சிரஞ்சீவியாய் இருக்கக்கடவாய் என்று இலங்கைக்கும் அப்போதே பட்டங்கட்டிச் சமுத்திரராசாவைப் பணியவைத்து வானரசேனாபதிகளாலேயும் நளனாலேயும் திருவணையைக் கட்டி ராமலட்சுமண சுக்கிரீவன் அனுமான் அங்கதன் முதலாகிய எழுபது வெள்ளம் வானர சேனைகளுடனேயும் இலங்காபுரிக்கு அருகில் இராநின்ற சுவேலகிரியில் வீற்றிருந்து சுக்கிரீவன் அங்கதனைத் தூதனுப்பியும் கேளாமல் எதிர்த்து வந்த ராவணன், கும்பகர்ணன், அதிகாயன், கும்பன், நிகும்பன், அறுபதினாயிரங்கோடி ராவண புத்திரர்கள், இந்திரசித்து மகோதரன் முதலாகிய பதினெட்டு மந்திரிகள் இரண்டாயிரம் வெள்ளம் மூலபலங்களையும் ஸ்ரீராமலட்சுமணர் பாணங்களுக்கு இரைகொடுத்து நிர்த்தூளி படலம் பண்ணி, ஆஞ்சநேயரைக் கொண்டு சீதாபிராட்டியாரை அழைத்துவரச் சொல்லி அனுப்ப, அப்படியே ஆஞ்சநேயரும் சீதாபிராட்டியாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து, ஸ்ரீராமர் முன்பாகச் சீதாபிராட்டியார் வந்து நிற்கையில், ஸ்ரீராமர் வெறுப்புண்டவரைப் போலே முகம் பாராமலிருக்கிறதைச் சீதாபிராட்டியார் தெரிந்து கொண்டு அக்னி வளர்த்து அதிலே மூழ்கினவுடனே அந்த அக்னிதேவனும் அந்த மகாலக்ஷ்மியை மகா குளிர்ச்சியுடனே கையிலேந்திக் கொண்டு ஸ்ரீராமர் திருவடிவாரத்தில் கொண்டு வந்து சர்வத்ராளும் அவள் மகிமையை அறியும்படி அகில ஜகன்மாதாவென்று சொல்லிக் கொண்டிருக்கையில், இந்திராதி தேவர்களுடன் தசரத மகாராஜா வந்து தன்னுடைய குமாரராகிய ராமபத்திரரைக் கண்டு ஆனந்த பாஷ்பத்தால் ஸ்ரீராமரைப் பார்த்து ஆனந்தித்து அன்று புத்திர சோகத்தால் இறந்தவிடாய்

இன்று தீர்ந்ததென்று, சீதாபிராட்டியாரைப் பார்த்து 'இவள் மகா பதிவ்ரதை: அரக்கனும் இவளிடத்தில் ஒரு குற்றத்தையும் கற்பிக்கலாது, ஸ்ரீராமபுத்திரா! என்று வாழ்த்திப் புறப்பட்டுச் சொர்க்கத்துக்குப் போனார். தேவேந்திரன் முதலாகிய தேவதைகளும் ககனவீதியில் நின்றும் புஷ்பவர்ஷத்தைப் பொழிந்து ஆனந்தித்துப் போனவுடனே ஸ்ரீ ராமரும் சீதாபிராட்டியாரை அருகே அழைத்து திருக்கண் மலர்ந்தருளிக் கைகளினாலே தழுவுதல் போல இடது தொடையிலே உட்கார வைத்துக் கொண்டிருக்கையில் லட்சுமணர் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து நிற்க, ஆஞ்சநேயர் விபீஷணன், சுக்கிரீவன், அங்கதன் முதலாகிய வானர சேனாதிபதிகளும் வணங்கி நிற்கையில் விபீஷணனுக்கு இலங்கையை லட்சுமணனாலே பட்டங்கட்டி வைத்து, விபீஷணனாலே புஷ்பக விமானத்தை அழைப்புவித்து அலங்கிருதஞ் செய்து ஸ்ரீராமர் சீதாசமேதராய் விமான மத்தியத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்க, அருகே லட்சுமணரும் வீற்றிருக்க விபீஷணன், சுக்கிரீவன், அங்கதன், சாம்புவந்தன் (சாம்பவான்) முதலான வானரப் படைத்தலைவருடனே வானர சேனைகளையும் ஏற்றிக்கொண்டு புஷ்பக விமானத்தைத் திருவயோத்தியை நோக்கி நடத்தி வருகையில் கிட்கிந்தைக்கு வந்து, சுக்கிரீவன் முதலாகிய பேர்களுடைய ஸ்திரீகளையும் ஏற்றிக்கொண்டு திருவயோத்தியை நோக்கி வரும்போது சீதாபிராட்டிக்குச் சேதுவினுடைய அதிசயத்தைச் சொல்லிவந்து பாரத்துவாசருடைய ஆசிரமத்துக்கு நேரே விமானம் வருகுற்ற போது அந்தப் பாரத்துவாச மகரிஷீச்வரரானவர் சில மகரிஷிகளுடனே ஸ்ரீ ராமபத்திரருக்கு எதிராக வந்து "ஜெயவிஜயா" வென்று ஆசீர்வதித்து, ஸ்ரீராமர், லட்சுமணர், சீதாபிராட்டி மற்ற சகல சேனைகளுடனே ஸ்ரீராமரைத் தன்னுடைய ஆச்ரமத்தில் புஷ்பக விமானத்தைவிட்டு இறங்கவைத்துப் போஜனத்துக்குச் சொல்லி, வருணனை மந்த்ரகவசம் போடச் சொல்லி, சந்திரனைக் குடையாகவும், வசந்த காலத்ததாய் வாயுவை வீசச் சொல்லி. காமதேனுவை யழைப்பித்துப் போஜன மிடும்படி நியமித்து, ராமலட்சுமணர் மற்றவரையும் எழுந்தருளி யாவத்தான ஸ்நானங்களையும், கால நியமானுஷ்டானங்களையும் முடித்துக் கொள்ளச் சொல்லி, ரிஷீச்வரர் ராமருக்கு விக்ஞாபனஞ் செய்தவுடனே பரதருடைய பத்தி வந்து சிந்திக்கா நின்ற ஸ்ரீராமரை ஆஞ்சநேயர் பார்த்து அடியேனிடத்தில் ஒரு அடையாளம் கொடுத்தால் நான்போய் அக்னிப் பிரவேசத்தைத் தடுத்துப் பரதருடைய செய்திகொண்டு வருகிறேன் என்று சொல்லா நின்ற ஆஞ்சநேயரைப் பார்த்து ஆனந்தித்துத் தம்முடைய திருவாழி மோதிரத்தைக் கழற்றி ஆஞ்சநேயர் கையிற்கொடுத்து,

எப்படியாவது பரத சத்ருக்நரையும் குகனையும் காப்பாற்றக் கடவாய் என்று வாழ்த்தி அனுப்பினவுடனே அனுமாரும் அதிவேகத்துடனே கேசரிமார்க்கமாய் எழும்ப, ராமபாணத்துக்கும் அதிவேகமாய்க் கங்கைக்கரைக்கு வந்து, "ஸ்ரீராமா ராமா" என்று கங்கையிலே எழும்பி விழுகின்ற குகனைக் கருத்மான் மாமிசத்தை அணைத்துக்கொண்டு போவது போலே குகனை அக்கரையிலே கொண்டுபோய் நிறுத்தித் திருவாழியைக் காட்டி ஸ்ரீராமர் விசயங்களைச் சொல்ல, திருவயோத்திக்குப் போய்ப் பரத சத்ருக்நரையும் அக்னிப் பிரவேசமாக வொட்டாமல் தயவு செய்யுமென்று ஆஞ்சநேயரை அனுப்பினவுடனே அனுமான் அதி சீக்கிரமாய்க் கேசரிமார்க்கமாய் வந்து அருகுறும்போது பரத சத்ருக்நரும் "இன்றையுடனே பதினாலு வருஷம் சரியாய்ப் போயிற்று; இன்னம் ஸ்ரீராமர் வரவைக் காணோம்; இனிமேல் நாமும் இருக்க வேண்டியதில்லை" என்று நிச்சயித்துத் தாய்மாருக்குச் சொல்லிவிட்டு, சமஸ்தமான பேர்களும் கோஷத் துடனே துக்கித்துக் கொண்டிரா நிற்கையில். அக்கினி குண்டத்தில் வடவாமுகாக்கினி போலே ஜொலியா நின்ற தீயை வளர்த்து "ஸ்ரீராமா ராமா"வென்று குண்டத்தைப் பிரதட்சணம் பண்ணி ஆகாசத்திலே யெழும்பி அக்கினியிலே விழப் போகின்ற பரத சத்ருக்நரை அனுமார் கண்டு 'ஸ்ரீ ராமர் வந்தார் வந்தார் என்று சொல்லிக் கொண்டு அதிவேகமாய் வந்து பரதரை ஒரு கரத்திலேயும் சத்ருக்நரை ஒரு கரத்திலேயும் இடுக்கிக் கொண்டு அக்னி குண்டத்துக்கு அப்புறம் கொண்டு போய்விட்டு ஸ்ரீராமர் கொடுத்த திருவாழியைப் பரதர் கையிலே கொடுத்து, தேவரீர் தமையனாராகிய ஸ்ரீராமர் பாரத்துவாச மகரிஷி ஆச்ரமத்தில் வந்திருக்கிறாரென்றும் அடியேன் ராம தூதனென் றும் பரதரைப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து நிற்கையில், பரதர் "நீர் எவ்விதத்தில் ஸ்ரீராமரை அறிவீர்" என்று கேட்க, பம்பா நதிமுதல் ஆதியந்தம் நடந்து வந்த சரித்திரங்களை யெல்லாம் பரதருக்குச் சொல்ல. பரத சத்ருக்நரும் ஆனந்த மென்னப்பட்ட சமுத்திரத்திலே மூழ்கினவர்களாய் சிரசின்மேல் கையைக் கூப்பிக் கொண்டு ஆனந்தித்து அனுமாரைச் செலவு கொடுத்து அனுப்புவிக்க, அனுமாரும் அவ்விடத்தினின்றும் எழும்பி அதிவேகமாய்ப் பாரத்துவாச ஆசிரமத்திலிரா நின்ற ஸ்ரீராமபத்திரர் பாதத்தில் தெண்டன் சமர்ப்பித்து, பரத சத்ருக் நரை அக்னிப் பிரவேசமாக வொட்டாமல் தடுத்து, அடையாளந் தந்து, தேவரீர் விசயங்களையுஞ் சொல்லி வந்தேனென்று சொல்லிய ஆஞ்சநேயரைக் கட்டித் தழுவிக் கொண்டு, அனுமாரைப் பார்த்து ஸ்ரீராமர் சொல்லுகிறார். வாராய், ஆஞ்சநேயனே! அன்று இலங்கைக்குத் தூது போய் பிராணத்

தியாகமாகப் போகா நின்ற சீதாங்கனைக்குத் திருவாழியைக் கொடுத்துப் பிராணனை ரக்ஷித்தாய். பின்பு இந்திரசித்தினுடைய பாணாஸ்திரத்தினாலே லட்சுமணர் முதலாகிய சமஸ்த சேனாதிபதிகளும் சேனைகளும் மரித்துக் கிடந்தபோது சஞ்சீவியைக் கொண்டு வந்து ரட்சித்தாய். இன்று அக்னிப் பிரவேசமாகப் போகாநின்ற என் தம்பிமார்களாகிய பரத சத்ருக் நரைத் தடுத்துப் பிராணனை ரட்சித்தாய். ஆகையினாலே வாராய் ஆஞ்சநேயனே! இப்போது என் பிராணனையும் ரட்சித்தாய். உமக்கு மிஞ்சின ஆத்மபந்துக்கள் ஆரிருக்கிறார்கள். ஆகையால் நீர் கூடே உட்கார்ந்து சாப்பிடுமென்று தம்முடைய அன்னத்திலே பாதி பங்கிட்டுக் கொடுத்து, அந்த சேஷத்தைச் சகலருக்கும் விநியோகஞ் செய்து தானும் சாப்பிட்டு எழுந்திருந்து கை கால் சுத்தி செய்து கொண்டு திவ்விய சந்தனம் திவ்விய பாரிசாத புஷ்பங்களையணிந்து, கற்பூர தாம்பூலங்களைத் தரித்துக் கொண்டு பரத்துவாச மகரிஷீச்வரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு ஸ்ரீராமர் லட்சுமணர் சீதாங்கனையும் சமஸ்தவானரப் படைத்தலைவர் சேனைகளும் புஷ்பக விமானமேறிக் கங்கைக் கரைக்கு வந்து. குகனையும் ஏற்றிக்கொண்டு திருவயோத்திக்கு வந்து பரத சத்ருக்நரைக் கண்டு எடுத்து அணைத்து ஆனந்த பாஷ்பத் தாலே அவர்களுடைய தேகத்தை நனைத்து அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டு தாய்மார்களுக்கும் சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித்து, இளைய பெருமாளும் தாய்மார்களுக்குத் தெண்டன் சமர்ப்பித்து, பரதருக்கும் தெண்டன் சமர்ப்பித்து இருக்க பரதர் அவனை எடுத்தணைத்து முத்தமிட்டு நிற்கையில் சீதாபிராட்டியும் தன்னுடைய மாமிமார்களைத் தெண்டன் சமர்ப்பித்தவுடனே அவர்கள் எடுத்தணைத்து ஆனந்த பாஷ்பத் தால் பிராட்டியாருடைய திருமேனியை நீராட்டி, முகத்தோடே முகம் வைத்து, "உன்னுடைய பாதிவிரத்ய பிரதாபத்தினாலே என் பிள்ளைகள் வந்து, எம்மையடைந்தார்கள்" என்று சீதா பிராட்டியைக் கொண்டாடி வாழ்த்தி ஆனந்தித்துக் கொண்டிருக்க, ஸ்ரீராமபிரான் வசிஷ்ட மகரிஷியைத் தெண்டன் சமர்ப்பித்து, எதா சாஸ்திரப் பிரகாரம் பூஜித்து அர்க்கிய பாத்தியம் ஆசமனீயங் கொடுத்து, தான் வனவாசம் போய்வந்த விஷயங்களையெல்லாம் சொல்லி, மந்திரிமார்களையும் திருவயோத்தியிலிருக்கும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களையும் ஆதரித்துச் சர்வ தேசத்து ராஜாக்களும் புடைசூழ வசிஷ்டர் முதலாகிய ரிஷி சிரேஷ்டர்கள் வாக்கியப் பிரகாரம் சகலவைபவங்களுடனே, பரதர், லட்சுமணர், சத்ருக்நர், அனுமார் சுக்கிரீவன் அங்கதன்

விபீஷணன் முதலாகியவரும் பதினெட்டுப் படைத்தலைவர்களும் வானரப் பிரகிருதிகள் புடைசூழ, தேவதுந்துபி முழங்க, நாரதர் வீணை வாசிக்க, மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி நாட்டியமாட, அநேக முப்பத்திரண்டு மேளவாத்தியங்களுடனே சகல அலங்கிருத சோபிதமாயிரா நின்ற திருவயோத்தி பட்டணத்து வீதியில் பிரதட்சணமாய் வருகையில், வீதிகள் தோறும் தெய்வ ஸ்திரீகளுக்குச் சமானமாயிரா நின்ற ஸ்திரீகள் சர்வாபரண பூஷிதர்களாய் ஆலத்தியேந்திக் கொண்டு இருபுறமும் நிற்க, இந்தப் பிரகாரம் வாரா நின்ற ஸ்ரீராமர், இக்ஷ்வாகு முதல் பரம்பரையாய் ஆராதனஞ்செய்து வாராநின்ற அழகிய ஸ்ரீரங்க நாயகரைச் சேவித்து, அவ்விடத்தினின்றும் எழுந்தருளி கோடி சூரியப் பிரகாசமாய் அலங்கிருதம் பண்ணிபிரா நின்ற ரத்தின சபா மண்டபமே புகுந்து நவரத்தின கசித அலங்கிருத சோமதமாயிரா நின்ற மாணிக்க சிம்மாசனத்தில் வீற்றிருந்து கொண்டு, யதா சாஸ்திரப் பிரகாரம் திருமஞ்சனமாடி, திவ்யமான பீதாம்பரங்களைத் தரித்து நவரத்தின ஆபரண அலங்கிருதராய் வீற்றிருக்கும் போது, ஆஞ்சநேயர் திருவடிகளையேந்திக் கொண்டிருக்க அங்கதன் மந்திரவாளையேந்திக் கொண்டு நிற்க, பரதர் பூஜிக்கிற குடை பிடிக்க, லட்சுமண சத்ருக்நர் சாமரை பரிமாற வேதியர்கள் வேதத்திலே புருஷ சூக்தஞ் சொல்ல, மங்கல ஸ்திரீகள் பூர்ண கும்பம் ஏந்தி நிற்க, எச்சரிக்கையுடனே கட்டியங் கூற, வித்துவாமிசர்கள் மங்கள சுப வாழி பாடிக்கொண்டு நிற்க, பிராமண ஸ்திரீகள் மங்களம் பாட பூவைசியராகிய வேளாளர் மகுடமேந்தி நிற்க, அதை வாங்கி வசிஷ்டர் ஸ்ரீ ராமசந்திர சுவாமிக்கு மகுடஞ் சூட்ட, சகலசாகர க்ஷிர நதி தீர்த்தங்களாலே அபிஷேகஞ் செய்தார்கள்.

இந்திராதி தேவர்கள் புஷ்ப மாரி பொழிய, தேவதுந்துபி முழங்க, கின்னரர், கிம்புருடர், கந்தருவர்கள் வீணை வாசித்துப் பாட, தேவரிஷிகள், பிரமரிஷிகள், ராஜரிஷிகள் பல்லாண்டு கூற, ஸ்ரீ மகா லக்ஷ்மியாகிய சீதா சமேதராய் பட்டாபிஷேகபரராய் எழுந்தருளி விளங்காநின்று கொண்டு சமஸ்த பரிசனங்களும் மனோக்கியராய் அவரவர்களுக்கான அபீஷ்டங்களைக் கொடுத் தருளினார். திருவயோத்தியும் உலகங்களும் புஷ்கலமாய் - துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனமாய், தர்மம் நான்கு பாதங்களுடனே நடந்து விளங்கியிருந்தது. சர்வத்தினரும் வருணாசிரம தர்மம் தப்பாமல் அவரவர்களுடைய ஆசாரத்துடனே நித்ய கர்மங்களை யநுஷ்டித்துக்கொண்டு, ஸ்ரீ ராம சந்திரனை வாழ்த்துதலைச் செய்து, போற்றிக்கொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்,

ராமாய ராம பத்ராய ராமசந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய சீதாயா : பதயே நம :
ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழியான வரக்கரை யாருயிர்
சூழி யானை தொலைத்தது சோபனம்

ஸ்ரீ ராமஜயம்

இப்பால் ராமக்ருஷ்ண அவதாரம் சொல்லப்படும்.

அவதாரக் கிரமம் - தொடர்ச்சி

## பத்தொன்பதாவது இருபதாவது பலராமகிருஷ்ண அவதாரங்கள்

தவ தேவகீ தேவி கர்ப்ப ஜனனம்
கோபீக் கிருஹ வர்த்தனம்
மாயா மதுரா சிவசாப ஹரணம்
கோவர்த்த னோத்தாரணம்
கம்ச சைத்ய கவுரவாதி ஹரணம்
குந்நீசுதா பாலனம்
யேஷ : பாகவத புராண கதிதம்
ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருதம்

என்கிறபடியே பத்தொன்பதும் இருபதுமான அவதாரம் ரோகிணியிடத்திலே சுவேத நிறமான பலராமராகவும் தேவகியிடத்திலே நீலமேக சுவருபமான ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அவதாரஞ் செய்து ஸ்ரீ கிருஷ்ணன் கம்சனுக்குப் பயந்தவன் போலக் கோகுலத்திலே சேர்ந்து வளர்ந்து பூதனையுடைய உயிரை வாங்கிக் கிருபை செய்தருளித் தம்முடைய பாதார விந்தத்தினாலே சகடாசுரனை யுதைத்து வதை செய்து, உரலை மருதமரமுறிய வுருட்டிக் கொண்டு போய் நள கூபராளுடைய சாபந் தீர்த்து, கன்றுகளை மேய்க்கும் போது, கன்று விபவமாக வந்த அசுரனாலே விளாங்கனி யுதிர்த்து, கோபாலர்களைச் சந்தோஷிப்பித்து, பக்ஷியினுடைய வாயைக் கிழித்து, பர்வதம் போலே வுயர்ந்த பாம்பினுடைய கழுத்தைப் பிளந்து, பிரம தேவன் கன்றுகளையும் இடப்பிள்ளைகளையும் ஒரு வருஷம் மாய்கையினாலே ஒளிக்க, அதையறிந்து அந்த இடப்பிள்ளைகளும் கன்றுகளுமாய்த் தாம் தானே நிறைந்து நின்றதைப் பரமதேவன் அறிந்து, கருவபங்கமாய் ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரமதேவன் தோத்திரஞ் செய்ய அவனையும் கிருபை

செய்தருளி கழுதை சொருபமாக வந்த தேனுகாசுரனாலே பனங் கனிகள் வீழவெறிந்து, பசும்புற்களைத் தின்னும்படியாயிரா நின்ற பசுக்களை மேய்த்தருளினார். விஷப்பாம்பு மேலேறி அதன் தலையிலே நாட்டியஞ் செய்தருளினார். பயங்கர ரூபமாக வந்த காட்டுத் தீயை வெண்ணெய் உண்டது போல உண்டருளி, கோபிகா ஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்தருளினார். வேள்வி செய்கிற பிராமணருடைய ஸ்திரீகள் போனகங் கொண்டு வர, அதை அன்புடனே தோழன்மார்களுடனே சாப்பிட்டருளியும் தாமரைப் புஷ்பம் போலவொத்திருக்கிற தம்முடைய ஒரு கையி னாலே மலையைக் குடையாகப் பிடித்து நின்றார். வேணுகான இசையைக்காட்டி அதனாலே மனமுருகி வந்த கோப ஸ்திரீ களைச் சேர்ந்து வர்த்தித்தருளினார். நாரதராலே ஸ்ரீ கிருஷ்ண னுடைய விருத்தாந்தத்தைக் கம்சன் அறிந்து கோகுலத்துக்கு அக்ரூரரையனுப்ப அந்த அக்ரூரருடன் தாமும் மதுரைக்குப் போய், யாகசாலையில் பர்வதம் போலிருந்த வில்லை முறித்து' குவலயா பீடமென்கிற யானையினுடைய தந்தங்களை அடியோடே பிடுங்கி வதைத்து, பின்பு மேக கர்சிதம் போலே அதிர்ந்து எதிர்த்து வந்த மல்லரைப் பூமியிலே விழுந்து மடியும்படி யாய்ச் செய்தருளினார். அனந்த ரூப ராசரீகாபிஷேகனாயிருந்த கம்சனைக்கொன்று தம்முடைய தாய் தகப்பனைச் சேவித்து, "என்னாலே உங்களுக்கு இத்தனை துயரம் வந்து நொந்ததை நீங்கள் பொறுத்தருள வேணு"மென்று உபசாரஞ் செய்து, அந்த ராசரீகத்தை உக்கிரசேனனுக்குக் கொடுத்து, கர்க்கரிஷியினாலே உபநயனஞ் செய்யப் பெற்று, சாந்தீபினி யிடத்திலே போய் வித்தைகளை அப்பியசித்து, அவருக்குச் சந்தோஷமாகவும் குருதக்ஷிணையாகவும் வெகு நாளைக்கு முன்னே மரித்த பிள்ளையை அழைப்பித்துக் கொடுத்து அனந்தரம் கோகுலத் துக்கு அக்ரூரனையனுப்பித் தம்முடைய தாய்தகப்பனான யசோதை, நந்தன் மனசு தேறச் சொல்லி, கோபிகாஸ்திரீகளுக்கு தேறச் சொல்லி மீண்டு வரச்சொல்ல, அந்தப் பிரகாரமே அக் ரூரனும் கோகுலத்துக்குப் போய் மீண்டு வர, அதன் பின்பு திருதராட்டிரன் பாண்டவர்களைத் தன் பிள்ளைகளைப் போலப் பார்க்கிறானோ அல்லது வேறாகப் பார்க்கிறானோ அதைப் பார்த்து வரும்படி அத்தினாபுரத்துக்கு அக்ரூரனை யனுப்பி, அனேகமாய் வந்த பகையாளிகளுக்குப் பயந்தவர் போல மதுரை யிலே வாசமாயிருந்த தம்முடைய பந்து சனங்களையெல்லாம் துவாரகைக்கு அனுப்பி விட்டு, ஈஷணாத்திரயங்களை (மூவாசை களை) விட்ட முசுகுந்தனுக்குத் திருவடி கொடுத்தருளி, மார்பை விட்டு அகலகில்லேனென்று உடன்பட்டிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மி

யான ருக்குமிணிதேவியை யெடுத்து வந்து விவாகஞ் செய்தருளி மன்மதனைப் பெற்றுச் சத்யபாமை முதலாக ஏழு ஸ்திரீகளை விவாகஞ் செய்தருளி, மகா கோபக் கடூரனான நரகாசுரனைக் கொன்று, பாரிசாதத்தைப் பூமியிலே கொண்டுவந்து நட்டு, ஒருநாள் பதினாறாயிரம் சொரூபமெடுத்துப் பதினாறாயிரங் கன்னிப் பெண்களை ஏக காலத்திலே விவாகஞ் செய்து, அந்த ஸ்திரீகளுடனே கிரீடித்து, ஒவ்வொரு ஸ்திரீக்கும் உற்பவத்தில் ஒருபிள்ளையும் ஒவ்வொரு பெண்ணும் அவதரிக்கும்படி செய்தருளி, பின்பு பிள்ளைகளுக்கு விவாகஞ்செய்து,பாணாசுரனுடைய தோள்களைச் சம்ஹரித்தருளி, நிருதனுக்கு அருள் புரிந்து, பவுண்ட்ரகனைக் கொன்று, நாரத மகாமுனி வந்து பார்க்கப் பதினாறாயிரம் ஸ்திரீகளுடைய வீடு தோறும் இருந்த மகிமையை அவருக்குப் பிரத்யட்சமாய்த் தம்முடைய மாயையெல்லாம் தோற்றும்படி செய்தருளினார். பின்பு, சகல ஜகத்துக்களாலேயும் சேவிக்கப்படா நின்ற வாசு தேவரானவர், பீமார்ச்சுனருடனே கூடிக்கொண்டு சராசந்தனுடைய பட்டணத்தைக் குறித்துப் போய்ப் பிராமண வேடத்தினாலே அவனுடைய அந்தப்புரத்திலே பிரவேசிக்கலானார். அந்தச் சராசந்தனும் மகா சூரர்களான க்ஷத்திரியர்களை யுத்தத்திலே ஜெயித்து, பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டு வந்து, தன் கிருஹத்திலே வைத்துக்கொண்டு, மாதந்தோறும் கிருஷ்ண சதுர்த்தியிலே ஒவ்வொரு ராஜாவைக் கொன்று, அவனுடைய ரத்தத்தினாலே கால பயிரவனுக்குப் பலியைப் பண்ணிச் கொண்டிருந்தான். இப்படி, சகல ராஜ்யத்திலே இராநின்ற க்ஷத்திரியர்களுடைய வதமாகிற தீக்ஷையைப் பண்ணா நின்ற அந்தச் சராசந்தனுடைய வதத்தை யுத்தே சித்தவராய் ஸ்ரீ ஹரியானவர் பீமார்ச்சுனருடனே கூடிக்கொண்டு பிராமண வேஷத்தினாலே அவனுடைய அந்தப் புரத்திலே பிரவேசித்தார். அந்தச் சராசந்தனும் அவர்களைப் பார்த்துத் தண்டாகாரமாகப் பிரணாமம் பண்ணி, யோக்கியங்களான ஆசனங்களிலே ஏள்ளப்பண்ணி (எழுந்தருளப்பண்ணி) மதுவர்க்க விதியினாலே பூஜித்து, 'தன்யனானேன், கிருதார்த்தனானேன்' என்று சொல்லி, 'நீங்கள் என்ன நிமித்தமாக என்னுடைய சமீபத்துக்கு வந்தீர்கள். அதைச் சொல்லுங்கள், நான் அதைச் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னான். பின்பு அவர்களுக்குள்ளே வாசுதேவரானவர் சிரித்துக்கொண்டு, அந்தச் சராசந்தனைக் குறித்து ஒரு வார்த்தை சொன்னார். நாங்கள் ஸ்ரீ கிருஷ்ண பீமார்ச்சுனர் யுத்த நிமித்தமாக வந்தோம். எங்களுக்குள்ளே ஒருவனைத் தெரிந்த யுத்தத்தின் பொருட்டு வரிக்கக் கடவாய் என்று சொன்னார். அந்தச் சராசந்தனானவன்

தொந்தயுத்தத்தின் பொருட்டுப் பீமசேனனை வரித்தான். சராசந்தனுக்கும் பீமசேனனுக்கும் மிகவும் பயங்கரமான தொந்தயுத்தமானது இருபத்தைந்து நாள் அகோராத்திரியும் ஒழிவில்லாமல் உண்டாயிற்று. பின்பு ஸ்ரீ கிருஷ்ண ராலே சூசனை பண்ணப்பட்ட பீமசேனனானவன் சரா சந்தனுடைய சரீரத்தை இரண்டாய்க் கிழித்து எறிந்து மாறாகப் போட்டான். ஸ்ரீஹரியானவர் பீமசேனனாலே சராசந்தனைச் சங்காரம் பண்ணி வைத்து, அவனுடைய கிருஹத்திலே தகையப்பட்டிருந்த சமஸ்த ராஜாக்களையும் விடுவித்தார். அந்தச் சமஸ்தராஜாக்களும் ஸ்ரீ கிருஷ்ணராலே ரட்சிக்கப்பட்டவராய், ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரணாமம் பண்ணி, ஸ்தோத்திரம் பண்ணித் தத்தம் ராச்சியங் களை அடைந்தார்கள். பின்பு ஸ்ரீவாசுதேவரானவர் பீமார்ச்சுன ருடனே இந்திரப் பிரத்தத்தை வந்தடைந்து, தர்ம புத்திரருக்கு ராஜசூயயாகத்தைப் பண்ணி வைத்தார்.

## ராஜசூய யாகத்தின் பெருமை

அந்த யாக சாலைபத்தியிலே தர்மபுத்திரரானவர் பீஷ்மருடைய அனுமதியினாலே ஸ்ரீ கிருஷ்ணரின் பொருட்டு, அக்கிர பூஜையைக் கொடுத்தார். அதிலே சிசுபாலனானவன் ஸ்ரீ கிருஷ்ணரைக் குறித்து வெருவர பாஷைகளைச் சொன்னான். ஸ்ரீ கிருஷ்ணரும் சுதரிசனத்தினாலே அவனுடைய சிரசைச் சேதித்துப் போட்டார். அந்தச் சிசுபாலனும் மூன்று சன்மத்தினு டைய முடிவிலே ஸ்ரீ ஹரியினுடைய சாலோக்கியத்தையடைந் தான். பின்பு தந்தவக்கிரனானவன் சிசுபாலன் அடிபட்டுப் போனானென்கிறதைக் கேட்டு, ஸ்ரீ கிருஷ்ணருடனே யுத்தம் பண்ணுகைக்கு மதுரா பட்டணத்துவாரத்திலே வர யமுனாநதி தீரத்திலே யுத்தமானது அகோராத்திரியும் உண்டா யிற்று. அந்த யுத்தத்திலே ஸ்ரீ கிருஷ்ணனானவர் கதையினாலே அவனையடித்தார். அந்தத் தந்தவக்கிரனானவன் சூர்ணமாகப் பண்ணப்பட்ட சர்வ அவயவங்களையும் உடையவனாய் வச்சிரா யுதத்தினாலே பிளக்கப்பட்ட பர்வதம்போலப் பூமியிலே விழுந்து மரித்தவனாய் ஸ்ரீ ஹரியினுடைய சாரூப்யத்தினாலே யோகீச்வரர் களால் அடையத்தக்கதாயும், நித்யானந்த சுகப்பிரதமாயும் இருக்கிற பரமபதத்தையடைந்தான். இப்படி ஜயவிஜயாளிருவரும் ஜனகாதியோகிகளுடைய சாபத்தினாலே பகவானுக்கு லீலார்த்த மாகப் பூமியிலே அவதரித்து, மூன்று ஜன்மத்திலேயும் அந்தப் பகவானாலே தாமே சங்கரிக்கப் பட்டவர்களாய் மூன்று ஜன்ம

முடிவிலே முக்தியை அடைந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணரும் அந்தத் தந்தவக்கிரனைச் சங்கரித்து, யமுனையைத் தாண்டி, நந்த கோகுலத்துக்கு வந்து, மாதா பிதாக்களைச் சேவித்து, மங்களங்களைச் சொல்லி, அவர்களாலே ஆலிங்கனம் பண்ணப்பட்டவராய் சகல கோபவிருத்தர்களையும் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு, திவ்யங்களான வஸ்திராபரணங்களை அவர்களுக்குக் கொடுத்தார். மனோக்கியங்களாயும் புண்ணிய கரங்களாயும் இருக்கிற விருக்ஷங்களுடனே கூடின யமுனா நதியினுடைய மணற்றிடரிலே சாயங்காலம் கோபஸ்திரீகளுடனே கிரீடியா நின்றுகொண்டு சுகமாக இரண்டு மாசம் அவ்விடத்திலே யிருந்தார். அவ்விடத்திலேயிரா நின்ற நந்தகோபன் முதலான சமஸ்த ஜனங்களும் புத்திர களத்ராதிகளோடே கூடினவர்களாய்க்கொண்டு பசுபக்ஷிமிருக முதலானவைகளும் வாசுதேவருடைய பிரசாதத்தினாலே திவ்யரூபதரர்களாய் விமானாரூடர்களாய் வைகுண்டத்தை யடைந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணரும் நந்த கோகுலத்திலேயிருக்கிற பேருக்குச் சாசுவதமான பரமபதத்தைக் கொடுத்து ஆகாசத்திலே தேவகணங்களாலே ஸ்துதி பண்ணப்பட்டவராய், ஸ்ரீமத்ஆன துவாரகா பட்டணத்தை வந்தடைந்து. அவ்விடத்திலே வாசுதேவரானவர், உக்கிரசேனன் பிரத்யும்நன் அநிருத்தன் முதலான பேர்களாலே நாள்தோறும் நன்றாகப் பூஜிக்கப் பட்டவராய் பதினாறாயிரம் ஸ்திரீகளோடேயும் அஷ்டமகிஷிகளோடேயும் அநேக ரூபங்களைத் தரியா நின்று கொண்டு, திவ்விய ரத்தினமயங்களான கிருஹங்களிலே கற்பக விருக்ஷ புஷ்பங்களாலே பரப்பப்பட்ட மனோக்கியங்களான மஞ்சங்களிலேறிக்கொண்டு சந்தோஷமாக விருந்தார். பின்பு ஸ்ரீராம கிருஷ்ணர்களுக்கு மிகவும் சகாவாயும் ஒரு குருவினிடத்திலே படித்த வராயுமிருக்கிற குசேலமுனியானவர் தாரித்திரத்தினாலே பீடிக்கப்பட்டவராய் மூன்று பிடிச்சோளமாவைச் சீரண வஸ்திரத்திலே முடிந்துகொண்டு ஸ்ரீ வாசுதேவரைப் பார்க்கைக்குத் துவாரகையைக் குறித்து வந்து, ஸ்ரீ ருக்குமிணி தேவியினுடைய அந்தப்புர வாசலிலே க்ஷணகாலமிருந்தார். ஸ்ரீகிருஷ்ணரும் வந்திரா நின்ற பிராமணரையறிந்து எதிர் கொண்டு போய் பிரணமம் பண்ணி அந்தப்புரத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து திவ்யமான ஆசனத்திலே எள்ளப் பண்ணி, பயத்தினாலொடுங்கா நின்று கொண்டு, ஸ்ரீ ருக்குமிணி தேவியினுடைய அகத்திலே யிரா நின்ற சுவர்ண கலச உதகத்தினாலே அவருடைய திருவடிகளைத் துலக்கி, மந்திர விதியினாலே பூஜித்து, அமிருதத்துக்குச் சமானங்களான பிரசாதங்களாலே திருப்தி பண்ணுவித்து, அவருடைய சீரண வஸ்திரத்திலே யிராநின்ற சோளமாவை வசீகரித்துக்கொண்டு தாம் தம் கையினாலே எடுத்துப் புசித்தார்,

ஸ்ரீ கிருஷ்ணராலே அந்த மாவானது பக்ஷிக்கப்படுகையில் அந்த க்ஷணத்திலேதானே அந்தப் பிராமணருக்கு வெகு தனதானிய வஸ்திராபரணங்களோடே கூடின மகத் ஐசுவரியமானது உண்டா யிற்று. ஸ்ரீ கிருஷ்ணராலே அனுப்பி வைக்கப் பட்டவராய் அந்தப் பிராமணரானவர் வஸ்திரமாவது தனமாவது ஒன்றும் ஸ்ரீ கிருஷ்ண ராலே கொடுக்கப்படாமல் போயிற்றென்று தம்முடைய பட்டணத் திலே பிரவேசித்தாராய், பின்பு வெகு தனதானியங்களோடே கூடின தம்முடைய கிருஹத்தைப் பார்த்துப் பகவானுடைய பிரசாதத்தினாலே உண்டாகாநின்ற ஞானத்தையுடையவராய் "இது எல்லாம் பகவானுடைய பிரசாதத்தினாலே அடையப் பட்டது" என்று சொல்லிக்கொண்டு சந்துஷ்டமான மனத்தை யுடையவராய் வஸ்திராபரணம் முதலானவைகளோடு பாரியா ளோடவும் கூட சர்வ கர்மங்களையும் அநுபவித்து, பகவத்பிரீதி யின் பொருட்டு வெகு விதமான யக்ஞ அநுஷ்டானத்தினாலே சந்துஷ்டராய் பகவத் பிரசாதத்தினாலே மிகவும் நித்தியமாய் சுவர்க்க சௌக்யத்தை யடைந்திருந்தார்.

பின்பு கம்சனால் இறந்த பிள்ளைகளைத் தம்முடைய தாயாராகிய தேவகிதேவி அழைப்பித்துக் கொடுக்கச் சொல்ல, சுதலலோகத்துக்கும்போய் ஆறு பிள்ளைகளையும் கொண்டுவந்து கொடுத்தார். சுபத்திரையென்கிற தங்கையை அர்ச்சுனனுக்கு மணஞ் செய்து கொடுத்தார்.

## சூதாட்டமும் பாண்டவர் வனவாசமும்

அனந்தரம் ஸ்ரீ கிருஷ்ணன் பூபாரந்தீர்க்க வேண்டி, அவதரித் தவராய் இந்திரப்பிரஸ்தத்துக்கு வந்து பாண்டவர்களுக்கும் கௌர வர்களுக்கும் அன்னியத்தையுன்னி ராஜசூய யாக முடிவில் துரியோதனன் வமிசத்தால் தருமனைத் தோற்றவனாய்ச் செய்து, துரியோதனனாலே துச்சாதனனை யேவவிட்டுத் திரௌபதியைச் சபையில் கொண்டு வந்து அவமானப்படுத்தித் துகிலையுரிவிக்கும் போது, சபையிலுள்ளவர்களையும் பாண்டவர்களையும் பார்த்து "ரட்சியுங்கோள்" என்று முறையிடும்போது, துரியோதனன் சபை யிலுள்ள விகர்ணன் தவிர மற்ற பீஷ்மர் துரோணர் விதுரர் அசுவத்தாமா முதலான பெரியோர்களுக்கு மகா விசனமா யிருந்தும், ஒன்றுஞ் சொல்லாமல் திகைத்தாராகி, துரியோதன னுடைய துர்புத்தியை நினைத்துக்கொண்டு உபேட்சையாய்ச் சும்மாயிருந்தார்கள். பாண்டவர்கள் சூதாடித் தோற்றோம் என்று சத்தியமென்னும் பாசத்தால் கட்டுப்பட்டவர்களாய் இருந்தார்கள். அப்போது திரௌபதி யாவரையும் பார்த்து, ஒருவரும் ரட்சிப் பாரில்லையென்று, அவாப்தசமஸ்த காமனாயும் சர்வாந்தர்

யாமியாயும், ஜகதீச்வரனாயும் சமஸ்த அண்டங்களையும் தன் ரோமங்களில் தரிக்கப்பட்டவனாயும் (விராட் ஸ்வராட், பரமஸ்வ ராட்டாகிய, பரப்ரஹ்ம வஸ்துவாயும்) ஜகன் மோஹனராயும் விளங்கியிருக்கப்படாநின்ற ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து அநாதி யாயிருக்கப்பட்ட பேதையாகிய அடியேன் இப்படிப்பட்ட மகா ஆபத்தினின்றும் சம்பவித்திருக்கப்பட்ட அவமானத்திற் குள்ளாயிருக்கிற 'அடியேனை, ரட்சியாமல் உபேட்சிக்கிறது உமக்குத் தருமமாவென்று தன் இரண்டு கையும் வஸ்திரத் தின் மேலிருந்தவற்றைவிட்டு சிரசின் மேலே கையைக் கூப்பிக் கொண்டு, அன்று "ஆதி மூலமே" என்று அழைத்த கஜேந்தி ராழ்வான் எப்படி முறையிட்டாரோ அப்படியே திரௌபதியும், ஸ்ரீ கிருஷ்ணனையே சரணோபாயத்துடனே பிரார்த்தனையை அவர் திருவடிகளில் வைத்து "ஹா க்ருஷ்ணா த்வாரகா வாசா சகல ஸ்வாதீன யாதவ! தேவகீ நந்தனா! இமாம் அவஸ்த்தாம், சம்ப்ராப்தம் அனாதம் கிம் உபேக்ஷவிட்டுலை."

"சங்கு சக்ர கதாபாணே! த்வாரகா நிலையாச்யுதா!
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம்
நிபாத ரட்சாம் சாவதானாம் பூபரணாணாம் ப்ராக்ருதிம்
பாதகத்ரிபஞ்சன ஸ்ரீமான், ஸ்ரீமான், ஸ்ரீ கிருஷ்ணே
ஏவகதிர்மம
அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம
தஸ்மாத் காருண்ய பாவேந ரட்ச, ரட்ச ஜனார்த்தனா"

என்று சரணாகதி பண்ணினதை "அகலகில்லேன் இறையு மென்று அலர்மேல் மங்கையுறைமார்பா" என்கிறபடி ருக்மிணி தேவியுடனே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகிருஷ்ணன் கேட்டு "அக்ஷயம்" என்றருளிச் செய்தார். பின்பு துச்சாசனனால் உரி யப்பட்ட வஸ்திரமானது மாளாமல் சம்பூர்ணமாய் விளங்கி வரு வதைத் துரியோதனன் முதலான துவேஷிகள் பார்த்து மிகவும் துக்கத்தையுடையவர்களாயிருந்தார்கள். பீஷ்மர் துரோணர் முதலான பெரியவர்கள்திரௌபதியினுடைய பதிவ்ரதா தர்மத்தை யும், பாண்டவர்களுடைய சத்தியத்தின் ஸ்திரமான நிலையை யும் பார்த்துக் கொண்டாடினார்கள். பின்பு பாண்டவர்களும் துரியோதனனும் மறுபடியும் சூதாடிப்பாண்டவர்கள் அடிமையைத் தீர்த்துக் கொண்டார்கள். அதற்குமேல் துரியோதனன் பாண்ட வர்களைப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் செய்துவரும்படி யனுப்ப, அப்படியே பாண்டவர்களும் பன்னிரண்டு வருஷம் வனவாசத்தில் வெகு சிரமங்களையெல்லாம் அநுபவித்துக் கொண்டிருக்கும்போது, சூரியன் திரௌபதியிடத்தில் அக்ஷயபாத்திரம் கொடுத்ததினாலே, சகல வேதியரையும் போஷித்துக் கொண்டு, யதீச்வரர்களைப்

பூஜை பண்ணிக் கொண்டு, இந்தப் பிரகாரம் பன்னிரண்டு வருஷமும் கழித்து, பின்பு ஒரு வருஷ அஞ்ஞாதவாசமும் கழித்து, அதற்குப் பிற்பாடு வெளிப்பட்டு ஊபலாவியம் என்கிற பட்டணத்திலிறங்கி, அதற்குமேல் துவாரகையிலெழுந்தருளி யிருக்கிற ஸ்ரீகிருஷ்ணனுக்குத் திருமுகம் எழுதியனுப்ப, ஸ்ரீ கிருஷ்ணனும் துவாரகையினின்றும் புறப்பட்டுப் பாண்டவர் களிடத்துக்கு வரும்போது பாண்டவர்களும் எதிர் கொண்டு போய் அழைத்துவந்து சகல உபசாரங்களும் செய்து பின்பு தங்களுடைய விசனங்களையெல்லாம் சொல்லி சரணாகதி யடைய, ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவர்களை ஆலிங்கனம் பண்ணிக் கொண்டு "இதற்கு முன் பதின்மூன்று வருஷ காலமாய் மகா ஆபத்தினின்றும் வெளிப்பட்டீர்கள் என் செய்யலாம், எவர் களையும் பூர்வாகம் விடமாட்டாது, முன் நடந்ததுபோக; இனிமேல் துரியோதனன் முதலான துஷ்டசதுஷ்டர்கள் சகவாசம் விட்டுப் பெரியோர்களுடைய சகவாசம் பிரதானமாய்க் கொண்டு இருங்கோள் என்று அபயஹஸ்தங் கொடுத்து, இனி க்ஷேமத்தை அநுபவிப்பீர்கள்" என்று பாண்டவர்களுடனே உபலாவியத்தி லிருக்கும்போது சஞ்சயனைக் கொண்டு பாண்டவர்களிடத்தில் அனுப்பி எப்போதும் போலே காட்டிற்குப் போய் வாசம் பண்ணு கிறதே சரியென்றும் அநேகம் வார்த்தைப் பாடுகளுடனே துரியோதனனாலே அனுப்பப்பட்ட சஞ்சயன் சொல்லக் கேட்டுப் பாண்டவர்கள் மகா கோபத்துடனே நீர் திரிகால ஞானியாயிருந் தும் அவர்களாலே அனுப்பப்பட்ட தூதனாய் இவ்விடம் வந்தீர். ஆனால், எங்களுடைய பாதிராச்சியத்தையும் அவர்கள் ஞாயப் பிரகாரம் கொடுத்தாலாயிற்று. இல்லையாகில், மனோக்கியான நூல் பிரகாரம் யுத்தத்தில் ஜயித்து, ராச்சியத்தைக் கைக்கொள்ளு கிறோம் என்று சொல்லும்படி சஞ்சயனைத் துரியோதன னிடத்துக்கு அனுப்பிவிட்டு, ஸ்ரீ கிருஷ்ணனிடத்துக்கு வந்து துரியோதனனாலே அனுப்பப்பட்ட சஞ்சயன் சொன்ன சமாசாரத்தைச் சொல்லிப் பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனைச் சரணாகதியடைந்து கூறலாயினர்.

## கிருஷ்ணன் தூது போதல்

அன்று துரியோதனன் சபையில் துச்சாதனன் திரௌபதியைக் கொண்டு வந்து சபையில் நிறுத்தித் துகிலையுரியும்போது அவள் மானத்தைக் காத்து ரட்சித்து, அஞ்ஞாத வாசத்தினின்றும் விடுவித்தீர். நாங்களும் அதனின்றும் சௌக்கியப்பட்டு இந்த உபலாவியத்தில் வந்து சேர்ந்து, அபிமன்யுவுக்கும் விவாகத்தை முடிப்பித்தீர். இனி, நாங்கள் எங்கள் ராச்சியத்தையடைந்து, சௌக்யமடைய வேண்டியதற்காக, திரௌபதி முதலாக் கொண்டு நாங்களனைவரும் உம்முடைய திருவடியை அடைந்தோம்

என்று சொன்ன பாண்டவர்களைப் பார்த்து ஐந்து பேரையும், திரௌபதியையும் அவர்களையழைத்துத் தனியே பேசிக் கொண்டு அவர்களாலே மனுவுபண்ணிக் கொண்டவராய், பாபியான துரியோதனன் பக்கல் அஸ்தினாபுரத்துக்குத் தூதனாக எழுந்தருளும்போது, ஸ்ரீகிருஷ்ணன் தூதாக வருகிறாரென்று அஸ்தினாபுரத்திலிருக்கப்பட்ட தன் தம்பிமார்களையும் மற்றுமுள்ள பந்துவர்க்கங்களையும் எதிராகச் சந்திக்க அனுப்பிவிட்டு, தங்களரண்மனையில், விடுதியொழித்து விருந்துகளும் சமைத்து இருக்கையில், ஸ்ரீ கிருஷ்ணசுவாமி வெகு சம்பிரத்துடனே அஸ்தினாபுரத்துக்குள்ளே விதுரன் மாளிகையிலே இறங்கி நாளைக் காலை துரியோதனன் சபைக்கு வருகிறேனென்று சொல்லி அனுப்பிவிட்டார். விதுரனும் ஸ்ரீகிருஷ்ணன் வரவைக் கண்டு "கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்", என்று தேகபரவசம் தெரியாமல் ஆனந்தபாஷ்பம் பொழிய எதிர் கொண்டுபோய் சுவாமியைச் சிம்மாசனத்தில் எழுந்தருளப் பண்ணி, "தன்யனானேன், கிருதார்த்தனானேன்" என்றும்' 'இந்தச் சிறு குடிலாயிருக்கப்பட்ட விடுதி என்ன பாக்கியத்தைப் பண்ணிற்றோ என்றும் ஆனந்தக் கூத்தாடி அர்க்கியபாத்தியம், ஆசமனீயம் சகலதூப தீபங்களெல்லாம் எடுத்து, சகல உபசாரங் களும் செய்து நிற்கையில், விதுரரைப் பார்த்து, "உம்முடனே விருந்து கலந்து சாப்பிடவேணுமென்று அபேட்சையாய் வந்தேன்" என்று சொன்ன ஸ்ரீ கிருஷ்ணனைத்தெண்டம் சமர்ப்பித்து, "இந்த உலகங்களிலே பிரம்மருத்ராதிகள் தேவர்கள், ரிஷிகள், ராஜாக்கள் இவர்களுக்கும் கிடைக்காத பாக்கியம் நிர்ஹேதுகமாய் அடியேன் குடிசையில் வந்து அமுது செய்கிறோம் என்று நீர் ஒப்புக்கொண்ட என் பாக்கியமே பாக்கியம்" என்று விருந்து சமைத்து, ஸ்ரீ கிருஷ்ணனுக்கு விண்ணப்பஞ் செய்ய, அப்போது சுவாமி நித்திய நைமித்தியாதிகளை முடித்துக் கொண்டு விருந்திற்கு நிற்கும்போது நாரதாதி சனக சனந்தன சனத்குமார மார்க்கண்டேயர் வசிஷ்டர் வாமதேவர் மகரிஷிகளாதியனைவரும் விதுரன் திருமாளிகைக் கெழுந்தருளி "நசூத்ரா. பகவத் பக்தா; விப்ரா பாகவ தாஸ்மிருதா" என்கிறபடியே ஆதித்யமாகிய சம போசனம் பந்தியில் ஸ்ரீ கிருஷ்ணருடனே ஷட்ரஸோ பேதமாய் பஞ்சபக்ஷபரமான்னியத்துடனே அநேகமாகிய பழவர்க்கங் களுடனே அமுதுசெய்து, சந்தன குசும தாம்பூலாதிகளுடனே ஆனந்தித்துக் கொண்டு சுவாமிக்கு மங்களாசாசனம் பண்ணி விதுரனுடைய பக்திக்கு மெச்சிக்கொண்டு அவரவர்களுடைய ஆசிரமங்களுக்கு எழுந்தருளினார்கள். அநந்தரம், ஸ்ரீ கிருஷ்ண சுவாமி துரியோதனன் சபைக்கு எழுந்தருள யத்தனமாயிருக்கச் செய்தே அந்தச் சமாசாரம் துரியோதனன் அறிந்து, சபையி

லுள்ள பீஷ்மர், துரோணர் முதலான ராஜவர்க்கங்களைப் பார்த்து, "ஸ்ரீ கிருஷ்ணன் அஸ்தினாபுரத்துக்கு வந்து நம்முடைய விடுதிகளிருக்கையில், தாசிபுத்திரனான விதுரன் வீட்டில் இறங்கி' சமபோஜனம் பண்ணி, நம்மையெல்லாம் அவமானப் படுத்தி, இப்போது நம்முடைய சபைக்கு வருகிறபடியினாலே, அந்தக் கிருஷ்ணன் இந்தச் சபைக்கு வரும்போது ஒருவரும் எழுந்து அஞ்சலி பண்ணாமலிருக்கும் படியாய் ஆக்ஞாபித்தான். அப்படியே ஆகட்டுமென்று இருக்கையில், ஸ்ரீ கிருஷ்ணன் தன்னுடைய சேனை பரிவாரங்களுடனே துரியோதனன் சபைக்கு எழுந்தருளும்போது, அவ்விடத்தில் இருக்கப்படாநின்ற பீஷ்மர் துரோணர் மற்ற ராஜாக்களெல்லாம் திடுக்கென்றெழுந்து கைகளைக் கூப்பிக்கொண்டு தங்களுடைய தேகபரவசம் தெரியாமல் அஞ்சலி பண்ணி வரவழைத்தார்கள், துரியோதனனும் அவனுடனே கூடிய (அவனுள்ளிட்ட என்றபடி) துஷ்ட சதுஷ்டர் களும் மாத்திரம் அஞ்சலி பண்ணாமல் சும்மா விருந்து விட்டார்கள். அதை ஸ்ரீ கிருஷ்ணன் அனுசரியாமல் எழுந்தருளும் போது சுவாமிக்கு அங்குள்ள பீஷ்மத்துரோணாதியர் சிம்மாசனம் விடுவித்து எழுந்தருளியிருக்கும் போது ஸ்ரீ கிருஷ்ணனைத் துரியோதனன் பார்த்து "நாங்களெல்லாம்" இருக்கையில் விதுரன் வீட்டில் இறங்கி விருந்து சாப்பிடலாமோ" என்று கேட்கும்போது கிருஷ்ணசுவாமி துரியோதனனைப் பார்த்தவராய் "துரியோதனா! பாண்டவர்களுக்கும் உங்களுக்கும் சத்துருத்துவமாய் இருக்கிற படியாலும், அவர்களுக்குத் தூதாக் நான் வந்தபடியாலும் அவர்கள் ஐந்துபேரும் என்னுடைய பஞ்சப்பிராணனான படியாலும், அவர்களுக்கு நீ சத்துருவானபடியாலும் அவர்களுக் காகத் தூதனாய் நான் வந்தப்படியினாலே உங்கள் விடுதியில் வந்து இறங்கிய போஜனம் பண்ணினால் விஷ அன்னமான படியினாலே உங்களுடைய போஜனம் கூடாது என்று தள்ளி, விதுரன் விடுதியில் இறங்கினேன். இப்போதும் நான் உங்கள் சபையில் வந்த காரியம் என்னவென்றால் பாண்டவர்களை அழைப்பித்து வஞ்சகத்தால் அரக்கு மாளிகையில் அனுப்பிக் கொளுத்திவிட்டீர்கள். சூதாட அழைப்பித்து யாவற்றையும் வஞ்சனையால் தோற்கச் செய்தீர்கள். துச்சாதனனாலே திரௌபதியைப் பிடித்துக்கொண்டு வந்து, துகிலையுரிவித்தீர்கள் பாண்டவர்களைக் காட்டுக்குப் பன்னிரண்டு வருஷம் வன வாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் பண்ண அனுப்புவித் தீர்கள். அதையெல்லாம் வெகு கஷ்டத்துடனே முடித்துக் கொண்டு இப்போது உபலாவியம் என்கிற பட்டணத்தில் வந்து சேர்ந்து என்னை அழைப்பித்துத் தருமராசன் உனக்குப் புத்தியைச் சொல்லி தங்களுடைய பாதிராச்சியத்தையும் நல்ல

மனதுடனே கொடுக்கும்படி புத்தி சொல்லச் சொல்லி அனுப்பி வைத்தார், என்று சொன்ன ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்துத் துரியோதனன் மதியாமல் "பாண்டவர்கள் அன்றே காடடைந்து போனவர்களுக்கு இன்னம் ராச்சியம் வேணுமென்று என்னிடத்தில் அத்தில்லாமல் கெஞ்சும் மனுஷனான நீ தூதாக வந்தாய் நீயோ வென்றால் ஆயர்பாடியில் மாடு மேய்த்து இடைப் பெண்களுடனே கலந்து பரிமாறி அவர்களுடனே சகவாசம் பண்ணியிருந்தவரானபடியினாலேயும் உம்முடைய புத்திப் பிரகாரம் வேசி புத்திரனான விதுரன் வீட்டில் விருந்திக்கிசைந்தாய்; அல்லாமலும், நீ வந்து தூது ஆருக்கென்றால் எங்கள் குலத்துக்கு எள்ளளவும் சம்பந்தப்படாமல் இருப்பவர்களுக்காக, காட்டில் பாண்டு மகாராஜா போயிருக்கும்போது, பாண்டு மகாராசாவுக்கு வந்த சாபத்தால், ஸ்திரீகளைச் சேரக் கூடாதானபடியால் குந்திதேவியும், மாத்திரியும், புத்திரர்களில்லாமல், குந்திதேவி ஐந்து தேவதைகளை நினைந்தடைந்து அவர்களால் தமக்குப் பிறந்த பிள்ளைகளுக்காகப் பாதிராச்சியங் கொடுவென்று என்னிடத்தில் அத்தில்லாமல் என் சபையில் வந்து கேட்க வந்தாய் அவர்களுக்கும் இந்த ராச்சியத்துக்கும் எள்ளளவும் சம்பந்தமில்லை. விருதாவாய் நீர் ஏன் வந்து பாண்டவர்களுக்காக ராச்சியத்தைக் கேட்க வந்தீர் என்று சொன்ன மாத்திரத்தில் சுவாமியெழுந்திருந்து, பாண்டவர்களுடைய ராச்சியம், பாதியும் கொடாமற் போனால் அன்று சபையில் துச்சாதனனால் திரௌபதியைத் துகிலுரிவிக்கும்போது மேடான மேடியாயும், உயரமும் பெருமையும் உடையவனாயும் மூன்று லோகத்தையும் ஜயித்தவனாயும் வீராதி வீரனாயும் இருக்கப்படாநின்ற பீமன் உங்கள் நூறுபேரையும் படுகளத்தில் தன் தண்டாயுதத்தினாலே கொன்று துச்சாதனனுடைய ரத்தத்தைப் பானம் பண்ணுகிறேனென்று பண்ணின சபதம் வீணாய்ப் போகுமேயென்று என்னுடனேயே வீமன் கடைசியாய் வார்த்தை சொன்னதைக் கேட்டதனால் நீ கூறியதைப் பொறுத்தேன் என்று சொல்லிவிட்டு, மகா கோபத்துடனே விதுரன் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அதற்கு மேல் துரியோதனன் தன் சபையிலிருக்கிற மகா ராஜாக்களை யெல்லாரையும் பார்த்து - கெட்ட மகளொருத்தியீன்ற விதுரன் எப்பேர்ப்பட்டவனோவென்றால், எங்கள் பெரியோர்களாலே போஷித்துவளர்ந்து வந்தவன் என்றும், எங்கள் ஐசுவரியத்தைத் தன் சொத்தாய் அநுபவித்தவன் என்றும், இத்யாதி பெருமையெல்லாம் பெற்றும் நாங்கள் இன்னவர்களென்று தெரியாமல் தன்னையும் மறந்து, நான்காம் வருணத்தில் பிறந்த இந்த விதுரன் தனது வீட்டில் ஸ்ரீகிருஷ்ணன் இறங்கி விருந்து சாப்பிட்டதும் அவனுக்கு இவன் இடங்கொடுத்தும்

பார்க்குமளவில், எனக்குச் சத்துருவாயிருக்கப்பட்ட பாண்டவர்களிடத்தில் பாரபட்சமாயிருக்கிறது. இப்படிப்படாநின்ற விதுரனே என்னுடைய சிறிய தகப்பனென்று என்னமாய்ச் சொல்லுகிறது என்று மகாஇகழ்ச்சியாய்ச் சொன்னபோது உடனே விதுரன் எழுந்திருந்து, வில்லையெடுத்துக் குணத்தொனி பண்ணி, தன்னுடைய பாணத்தையும் துரியோதனனுடைய சிரசையும் குறியாகப் பார்த்துத் துண்டிக்கிறேன் என்று டங்காரம் பண்ணும்போது சபையிலுள்ளவர்கள் அனைவரும் கடல் குழம்பினாற்போலே குழம்பித் துரியோதனனைக் கொல்லாமல் விடமாட்டானென்று தேங்கி (சினந்து)யிருக்கையில் அப்போது விதுரனும் தனக்குள் தானே நினைத்து, "அடா! துரியோதனா! வீராதி வீரனான வீமன் பாரதயுத்தத்தில் உன்னைக் கொல்லுகிறேனென்று சொன்ன சபதம் வியர்த்தமாகும். ஆனபடியினாலே நீ சொன்ன சொல்லுக்கு உன் நாக்கையும் அறுப்பேன், சிரசையும் துண்டிப்பேன், ஆனால் இந்த குருகுலத்துக்குப் புத்திரனைக் கொன்றானென்று ஒரு பழிப்பாயிருக்கும் ஆனபடியினாலே உங்கள் இருதிறத்தவரிடத்திலும் நான் வில்லையெடுத்து யுத்தம் பண்ணுகிறதில்லை என்று வில்லை முறித்துப் போகட்டு உங்கள் முகத்தைப் பாராமல் நான் தீர்த்தயாத்திரை போகிறேன் என்று புறப்பட்டுப் போனார். அப்பால் அவ்விடத்திலுள்ள பீஷ்மர் துரோணர் மற்றுமுள்ள ராஜாக்களெல்லாம் நடுங்கிப் போய் "எப்போது விதுரன் வில்லையொடித்தானோ அப்போதே தருமராசர் துரியோதனாதியரைக் கொன்று கடல் சூழ்ந்த உலகத்தை அவர்களே ஆளுவார்கள்" என்று உறுதியிட்டுக் கொண்டிருக்கும் போது, கர்ணன் எழுந்திருந்து துரியோதன மகாராசாவைப் பார்த்து, "என் கை வில்லும் அம்பும் இருக்க நீ யோசனை பண்ண வேண்டியதென்ன? நானே அர்ச்சுனனைக் கொன்று, இந்தக் கடல் சூழ்ந்த புவனத்தை தனக்கே ஆளும்படி வைக்கிறேன்" என்று சொன்ன வரர்த்தைப் பாடைப் பீஷ்மரும் துரோணரும் கேட்டு, "அடா! கர்ண! என நகைத்து இந்தக் கௌரவ குலத்துக்கு நீயொரு கூற்றுவனாய்ப் பிறந்தாய். உன்னாலே நாங்களெல்லாம் நாசமாம்படி ஆயிற்று. இந்தத் துரியோதனன் உன்னுடைய சொல்லை நிரம்பவும் விசுவாசித்து நம்பியிருக்கிறான். நாளை யுத்தமென்று வரும்போது, இவன் என்ன சமர்த்தனாயிருந்தாலும், அருச்சுனனாலே படுகளத்தில் விழுவான், என்று சொல்லி, ஸ்ரீமந் நாராயணனே பாண்டவர்களுக்குத் தூதாய் வந்தபிற்பாடு நல்ல மனதுடனே அவர்களது பாதிராச்சியத்தையும் அவர்களுக்குக் கொடுத்து, க்ஷீரோதகமாயிருந்தால் ஆயிற்று; இல்லாவிட்டால், உன் தகப்பன் திருதராட்டிரன் தவிர மற்ற குருகுலத்தாரெல்லாரும் நாளை

யுத்தத்தில் மாண்டு போகப் போகிறார்கள்'' என்று பீஷ்மரும் துரோணாசாரியரும் கிருபாசாரியாரும் மற்ற பெரியோர்களும் சொல்லி, "எங்களுடைய சொல்லை நம்புங்கோள்'' என்று சபை கலைந்து எழுந்து விட்டார்கள். இப்படியிருக்க, மறுபடியும் விதுரன் ஏகாந்தமாய்த் திருதராட்டிரனிடத்தில் போய்த் தெண்டன் சமர்ப்பித்து, "உங்களுடனே கூடப் பிறந்தவனா யிருந்து சகல சம்பத்தையும் அனுபவித்தேன். "இப்போது என்னுடைய புத்திரனான துரியோதனனுக்குப் புத்தியைச் சொல்லிப் பாதிராச்சியத்தையும் கொடுத்துவிட்டால் ஆயிற்று. இல்லாவிட்டால் நாளை யுத்தமென்று நேரிடும்போது பாண்டவர் களாலே உன் பிள்ளைகள் ஆத்தியந்தமானபேரும் நாசத்தை யடையப் போகிறார்கள், நானும் தீர்த்தயாத்திரை போகிறேன்'' என்று தமையனாகிய திருதராட்டிர மகாராசாவுக்குச் சொல்லி விட்டு விதுரன் தன் திருமாளிகைக்கு வந்து ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தெண்டன் சமர்ப்பித்து நடந்த விருத்தாந்தத்தை விண்ணப்பம் பண்ணிவிட்டு, பலராமர் தீர்த்தயாத்திரையாய்ப் போகிறபடி யினால் அவருடனே கலந்துபோக வெளிப்பட்டார். இப்பால், மறுநாள் துஷ்டசதுஷ்டர்கள் உடன்கூடி, மந்திராலோசனை பண்ணி, சபை நிருமித்துப் படுகுழிவெட்டி வேல்கள் சூலங்கள் அநேகமான ஆயுதங்களெல்லாம் நட்டு வைத்து அநேகம் மல்லர்களையும் ராட்சதர்களையும், பதிவு வைத்து, அதன்மேல் தட்டுப்பாயிட்டுச் சூஸ்திரம் வைத்து, பீதாம்பரத்தைப் பரப்பிச் சிம்மாசனம் ஜோடித்து, ஸ்ரீ கிருஷ்ணனைச் சபைக்கு வரும்படி சொல்லியனுப்பி வைத்தான். அப்படியே ஸ்ரீ கிருஷ்ணன் நித்திய நைமித்திகங்களை முடித்துக்கொண்டு ரதமேறிக் கொண்டு துரியோதனன் சபைக்குப் புறப்பட்டார். அவ்விடத் திலிருக்கப்பட்ட தம்பிமார்களையும், ராஜாக்களையும் எதிராக அனுப்பி, ஸ்ரீ கிருஷ்ணனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சபையில் வரும்போது துரியோதனனும், துச்சாதனனும் அதிவாற் சலியத்தையேறிடப் பண்ணிக்கொண்டு மகா வஞ்சக வினயத் துடனே வரவழைத்துக் கபடமாய் ஜோடித்திருக்கப் படா நின்ற சிம்மாசனத்தில் எழுந்தருளும்படி சொன்னார்கள். "சர்வக்ஞன் நினைவறியானோ'' என்கிறபடியே சர்வலோக நாயகனாகிய ஸ்ரீமந் நாராயணன் சேதனாசேதனம் பிபீலாதி கிருமி கீடிகள் முதல் அந்தர்யாமியாய் அந்தந்த ஆத்மாவின் சிரசின்மேலிருந்துகொண்டு சேதனர்களுக்குத் திருமுகங் கொடுத்து அறிவையுங்கூடக் கொடுத்திருக்கச் செய்தே அந்த அறிவினால் நல்லது, பொல்லாதது, இது அதுவென்று தெரிந் திருந்தும் தனக்குள்ளேயிருக்கிற ஈசுவரன் தன்னை நகைப்பா னென்று எண்ணாமல் "எங்குமுளன் கண்ணனாய் எழுந்தருளி

யிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் படுகுழியென்று ஒன்றுண்டா வென்றும் இந்தத் துரியோதனன் வஞ்சகத்தாலே மகரிஷிகளாதி யந்தமான பெருந்தேவர்கள், பிரம்மருத்ராதிமுதல சகல சமஸ்த மான பெரியோர்களும் யோகத்தால் தெரிந்துகொண்டு எப்பேர்ப் பட்ட தவங்கள் செய்தாலும் காணப்படாமலிராநின்ற விசுவ ரூபத்தை யெடுக்கப்போகிறாரென்று காத்துக் கொண்டிருக்கையில் படுகுழியினின்றும் விசுவரூபத்தையெடுத்தார். அந்தவிசுவரூபமோ வென்றால் - சொர்க்க மத்திய பாதாள லோகங்களை யளாவிக் கொண்டு அநேகங் கோடி திருமுக மண்டலமும் அநேகங்கோடி கைகளும் கால்களும் அனேகவிதமான ஆயுதங்களும் மகாதே ஜோமயமாய் லோகங்களாதி யந்தமும் பிரமித்து நடுங்கும்படியாய், பார்க்க விரோதிகளுக்குப் பயங்கரமாயும் ஞானிகளாயிருக்கப்பட்ட மகரிஷிகளுக்கு ஆனந்தமாயும் சகலமான பேரானந்தத்துடனே சர்வலோக நாயகனாயும் சர்வ சீவாத்துமாக்களுடைய மனதில் அந்தர்யாமியாயும் ஆதிமத்தியாந்த ரஹிதனாயும், அவாப்த சமஸ்த காமனாயும், அநாத ரட்சகனாயும், சுயப் பரப்பிரம்மமாயும் சர்வ சீவதயாபரனாயும், கலியாண குண ரூபனாயும், கலியாண குணங்களுக்கு ஆதாரனாயும், தம்மைப் பார்க்கிலும் இதரமாகிய அறிவுள்ள வஸ்துக்களுக்கும் அறிவில்லாத வஸ்துக்களுக்கும் சுவாமியாகியும், ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி முதலான திவ்விய மகிஷிகளுடனே எப்போதும் பிரகாசித்துக்கொண்டு அனந்த கருடவிஷ்வக்சேனாதி முதலான நித்ய சூரியர்களால் இடை விடாமல் சுருதி சொல்லப்படுகிற கமலங்கள்போல விளங்குகிற திருவடிகளையுடையவராகியும், பிரகிருத சம்பந்தமில்லாமல், ஆகாசம் போல விஸ்தாரமாகிய திவ்விய நகரத்தில் நிலையாகி நின்றும், சிருஷ்டி ஸ்திதி சங்காரமென்றும் சொல்லப்படுகிற லீலை களைத் திருவுளம் பற்றிப் பரம தயாளுவாகையால் வாசுதேவ னென்றும், சங்கர்ஷணனென்றும், பிரத்யும்நனென்றும் அநிருத்த னென்றும் சொல்லப்படுகிற நாலு விதமாகிய திவ்விய மங்கள விக்கிரகங்களாய் அங்கீகரித்திருக்கிற, வாசுதேவன் பிரம்மாவைச் சிருஷ்டித்துப் பிரம்மாவுக்கு நாலு வேதமும் ஆறு சாஸ்திரமும் உபநிடதங்களும் உபதேசித்து, அவற்றைப் பிரம்மாவின் குமாரர் களாகிய சனக சனந்தர் சனத் குமாரர்கள் முதலாகிய மகானு பாவர்களுக்கும், நாரதர் வான்மீகர் சூதர் சவுனகர், வியாசர், சுகப் பிரம்மரிஷி முதலானவர்களுக்கும் ஓரான் வழியாக மகரிஷி களுக்கும், வேத வேதார்த்தங்களையும் அஷ்டாதச புராணங் களையும் வெளியிட்டு யுகங்கள் தோறும் கடைத்தேறும்படி அநேக அவதாரங்கள் செய்ததிலும் இப்போது சேவை சாதிக்கும் படியான விசுவரூபத்தை நாங்கள் பார்க்கிறோம். அப்படியே உலகங்களும் பயன்படுத்தும் என்று இந்தப் பிரகாரம் ரிஷிகளாதி

யந்தமான பேரும் அனேக விதமாய் வேதங்களாலேயும் ச்ருதி ஸ்மிருதி உபநிடத இதிஹாச புராணங்கள் இத்யாதிகளாலே இருகரங்களையும் சிரசில் கைகூப்பிக்கொண்டு அனேகம் விதமாய்த் தோத்திரம் பண்ணினரர்கள். அப்படியே தேவ மக்களும் ஆகாசத்திலிருந்து திருமுகம் திருமார்பு திருவடிகளையும் பார்த்துச் சேவித்தார்கள். சத்திய லோகத்திலிருக்கப்பட்ட பிரம்மாவும் மகமேருவில் கைலாசத்திலிருக்கப்பட்ட ருத்திரனும் "கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்று ஆனந்தப் பாஷ்பத் திவலையுடனே தெண்டம் சமர்ப்பித்தார்கள். பூமியிலே பீஷ்மர், துரோணர், விதுரன், கர்ணன், அசுவத்தாமா, கிருபாசார்யர் மற்றுமுள்ள பெரியோர்களும் நாம் என்ன பாக்கியத்தைப் பண்ணினோம்: அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகரென்று லோகங்களிலே பெரியோர்களாலே தோத்திரம் பண்ணப்பட்ட வாக்கியங்களாலே கேட்டிருப்போமே யொழியக் கண்டறியோம். அப்பேர்ப்பட்ட ஜகதீச்வரன் தானே பாண்டவர்களின் பொருட்டு இந்தத் துஷ்டனான துரியோதன னிடத்தில் தவுத்தியத்துக்கு (தூதுக்கு) வந்தவரை இந்தப் பாபி யான துரியோதனன் நிலவறை செய்து கொல்ல வேணுமென்று என்ன வஞ்சகம் செய்தான்! அந்தோ! நாளை பாரதமென்று வரப்பட்ட யுத்த களத்தில் துரியோதனாதியர் முதற்கொண்டு அவனுடனே கூடின தோஷம் நம்மையும் விடாமல், நாசம் பண்ணப் போகிறது என்று அநேக சாஷ்டாங்க தெண்டம் சமர்ப் பித்தார்கள். அதற்குமேல் ரிஷீச்வரர்களும் பீஷ்மர், துரோணர் கிருபாசாரியர் அசுவத்தாமா முதலான பெரியோர்களும் அநேகமா யிரந்தரம் சாஷ்டாங்கப் பிரணாமம் பண்ணி "விராட் புருஷன் நீயே, அப்பேர்ப்பட்ட விராட் புருஷனை ரோமங்களிலே ஈர முட்டையைப் போலே தரித்துக்கொண்டு விளங்கா நின்ற சுராட் புருஷனும் நீயே. அப்பேர்ப்பட்ட சுராட் புருஷனை ரோம ரோமங் களிலே வைத்துக்கொண்டு விளங்காநின்ற பரமசுராடுவும் நீயே, ஆகையால் ரிஷீஸ்வரர்களும் பெரியோர்களும் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகன் நீயே" என்று தோத்திரஞ் செய்வார்க ளென்று தெண்டன் சமர்ப்பித்து, "தேவர் இப்போது எடுத்திருக்கப் பட்ட விசுவரூபத்தை உபசம்ஹாரம் பண்ணி, எப்போதும் காணப் பட்ட ஸ்ரீ கிருஷ்ணனைப் போலே சேவை சாதிக்கும்படியாய்ப் பிரணாமம் பண்ணுகிறோமென்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்படியே அவர்களெல்லோருக்கும் முன்னிருந்த சேவையைப் போலவே ஸ்ரீ கிருஷ்ணன் சேவை சாதித்தார். அப்போது பீஷ்மரும் துரோணரும் சஞ்சயனும் கிருபாசாரியரும் துரியோதன னைப் பார்த்து "வீணாய்க் கெட்டுப் போக வேண்டாம், பாண்டவர்களின் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணன் தூதாக வந்து,

ஞாயப் பிரகாரம் அவர்களுடைய பாதி ராச்சியத்தைக் கேட்டால் கொடாமல் தடங்கல் பண்ணாமல் உன்னுடைய புத்திரமித்திராதி களத்திராதிகளுடனே கொன்று எங்கேயும் உங்கள் பூண்டில் லாமல் செய்து, பரந்த கடல் சூழ்ந்த புவனத்தை அவர்களே ஆளப் போகிறார்கள். ஆகையால், மனு நூலுக்கு அந்நிதா பண்ணாமல் அவர்களுடைய பிதுரார்ச்சிதமாயிருக்கப்பட்ட பாதி ராச்சியத்தைக் கொடுத்து விடுவென்று சொல்லிவிட்டு, திருதராஷ்டிரனிடத்துக்குப் போய் "உன் துஷ்ட புத்திரனான துரியோதனனுக்கு நீயாவது புத்தி சொல்லலாகாதா" வென்று சொன்னதில், அவனும் துரியோதனனை யழைப்பித்து அநேகம் விதமாய்ப் புத்தி சொல்லியுங் கேளாமல் திரும்பி விட்டான். அப்பால் ஸ்ரீ கிருஷ்ணன் சபையிலிருக்கும்போது, சபையோரைப் பார்த்து, "இந்தக் கிருஷ்ணன் விசுவரூபமெடுத்தது யக்ஷணியாகிய காரட வித்தையாக வேணு"மென்று துரியோதனன் சொன்னான். அதையும் ஒப்புக்கொண்டு துரியோதனனைப் பார்த்து, நல்ல மனதுடனே மடியேந்தி அவர்களுடைய பாதி ராச்சியத்தைக் கொடு என்று கேட்டார். ஒருக்காலும் நான் கொடேன் என்று சுவாமியைப் பார்த்துச் சொன்னான்: இல்லையாகில் ஐந்து கிராம மாவது கொடு என்று கேட்டார். அதுவும் இல்லையாகில் அவர்கள் ஐந்து பேரும் வந்து குடியிருக்க ஐந்து வீடாவது கொடுவென்று வெகுவினயத்துடனே கையேந்தி ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கேட்டார். அதற்குத் துரியோதனன் சொன்னது - இந்தப் பூமியில் பாண்டவர் களுக்கு ஊசி குத்துகிற நிலமும் கொடுக்கிறதில்லை என்று சொல்லி விட்டான். அப்படி அவர்களுக்குப் பூமி வேணுமென்றால், வீராதி வீரராய் வில்லாண்மை படைத்திருந்தால் எங்களுடனே யுத்தம் பண்ணி ஜயித்து ராச்சியத்தைக் கைக்கொள்கிறதே சரியென்று நிர்த்தாட்சிணியமாய்ச் சொல்லிவிட்டுத் துரியோதனன் எழுந்திருந்தான். அப்படியே நாளை யுத்தகளத்தில் பீமன் உங்கள் நூறு பேரையும் அன்று சபதம் பண்ணினது வியர்த்தமாகாமல் கொன்று ரத்தத்தையும் பானம் பண்ணி, இந்தக் கடல் சூழ்ந்த புவனத்தை அவர்களே ஆளப்போகிறார் கள் என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியெழுந்திருந்தார். அப்போது சபையிலிருந்த பீஷ்மர், துரோணர், கிருபாசாரியர் மற்றுமுள்ள பெரியோர்களெல்லாம் பின் தொடர்ந்து வருகையில் அவர்களைக் கையமர்த்தி, கர்ணனை ஏகாந்தமாய் அழைத்து 'வாராய், அங்கராசனே! நீ இதுவரையில் உன்னுடைய பிறப்பு வளர்ப்பு இன்னதென்று அறியாய், நீயோவென்றால். குந்தி தேவி யினுடைய பிரதம புத்திரன். தருமராசா பீமன், அர்ச்சுனன் நகுலன், சகாதேவன் இவர்கள் ஐந்து பேரும் உன்னுடைய சகோதரர்கள். நீங்கள் உற்பவித்த வயுணம் எப்படியென்றால்,

குந்திதேவி கன்னிகையாயிருக்கும்போது ஒரு காரணத்தால் துர்வாச ரிஷிக்குச் சிச்ருஷை செய்துகொண்டு வரும்போது, ஐந்து மந்திரம் உபதேசித்தார். அதை அப்போதே சோதிக்க வேணுமென்று, தெரியாமையாலே, சூரிய மந்திரத்தை மகாபக்தி யுடனே தியானித்தாள். அந்த க்ஷணமே சூரியனுடைய வரப் பிரசாதத்தால் நீ பிறந்தாய்; உடனே தெரியாமல் ஒரு பெட்டியில் உன்னை வைத்துக் கங்கையில் விட்டுவிட்டாள். அந்தப் பெட்டி அஸ்தினாபுரத்தண்டை மிதந்து வருகையில், தேர்ப்பாகன் எடுத்து உன்னைப் பிள்ளையாக வளர்த்தான். அதையறிந்து திருதராஷ்டிர மகாராசா உன்னைக் கொண்டுவரச் சொல்லி மிகவும் செல்லமாய் உன்னைப் பரிபாலித்து வளர்த்துக் கொண்டி டிருந்தார். இப்படியிருக்கும் நாளில் துரியோதனாதியர் நூறு பேரும் பிறந்தார்கள். அவர்களுடனே நீயும் ஒருவனாய்க் கூட விருந்தாய். மேற் சொல்லிய உன் சகோதரர்களாகிய பாண்டவர் கள் உற்பத்தியானது; எமனுடைய மந்திரத்தால் தர்மராசா பிறந்தார். வாயுவினுடைய மந்திரத்தால் வீமன் பிறந்தான். தேவேந்திரனுடைய மந்திரத்தால் அர்ச்சுனன் பிறந்தான். அசுவினிதேவன் மருத்துவதேவன் மந்திரத்தால் நகுல சகாதேவர்கள் பிறந்தார்கள். இவர்கள் ஐந்து பேரும் உன்னு டைய தம்பிமார்களேயொழிய வேறல்லர். ஆகையால் உன் தம்பிமாருடனே நீயுங்கலந்து நெடுநாள் அன்னியோன்னியமாய் வாழ்ந்திருக்கலாம் என்று சொன்ன ஸ்ரீ கிருஷ்ண சுவாமியைப் பார்த்து, "வாராய், மகானுபாவரே! இதுவரையில் அடியேன் குலமில்லாதவனென்று விசனப்பட்டுக் கொண்டிருந்த எனக்குத் தேவரீருடைய கடாக்ஷத்தால் அடியேன் இன்னவனென்று தெரிந்து கொண்டேன். ஆனால் தேர்ப்பாகன் மகன் என்று இருந்த என்னை இன்னவன் இனியான் என்று கேளாமல் துரியோதனன் தன்னுடன் பிறந்தவர்களுக்கும் அதிக ஸ்நேகித வாற்சலியமாய் என்னாலே சம்பவிக்கப்பட்ட பொல்லா வசை யெல்லாம் தன்னதாய் வகித்துத் தன்னுடைய தனத்துக்கெல்லாம் என்னையே தோட்டியனாக்கி (காவலனாக்கிச்) சகல விதத்திலும் போஷித்த துரியோதனராசனை விட்டுப் பாண்டவர்கள் பக்கல் வருகிறது. தர்மமல்லவென்று சொன்னான். அதற்குமேல் கிருஷ்ணசுவாமி செலவு வாங்கிக்கொண்டு "குந்திதேவி உன்னிடத்துக்கு வருவாள்" என்று சொல்லிப் போகும்போது அச்சுவத்தாமாவைக் கண்காட்டி அழைக்க, அவரும் மிகவும் விநயத்துடனே வந்தார். அவருடனே லாலனையாய் வார்த்தை சொல்லிக் கொண்டுபோகும்போது ஸ்ரீ கிருஷ்ணன் திருவாழி மோதிரத்தைப் பூமியில் நழுவவிட்டார். அதை அசுவத்தாமா இறங்கியெடுத்து, ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கையிற் கொடுக்கும்போது

'இதோ பாரும்" என்று சூரியனுடைய பரிவேஷத்தை அசுவத்தாமாவுக்குக் காட்டினார். உடனே திருவாழியைக் கையிற் கொடுத்தபோது, பாண்டவர்களுடனே நீ விரோதிக்கு மது தர்மமல்லவென்று சொல்லி அப்புறம் போய்விட்டார். அப்போது சபையிலிருந்த துரியோதனன் சகலரையும் பார்த்து இந்த அசுவத்தாமா அந்தக் கிருஷ்ணனுடனே கலந்து பேசித் தம்மைச் சரட்சணை பண்ண வேணுமென்று கேட்டுக் கொண்டதாய் அதற்கு அப்படியே ஆகட்டுமென்று உடன்பட்டு நம்பிக்கை பண்ணிக் கொடுத்ததாயிருக்க வேணுமென்று, சபையிலுள்ள அனைவரும் அறியும் படிக்குச் சொன்னான். அனந்தரம் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி விதுரன் திருமாளிகையில் எழுந்தருளி, விதுரனைக் காணும்போது, விதுரன் ஆனந்தத்துடனே தெண்டம் சமர்ப்பித்து நிற்கையில் துஷ்டனாகிய துரியோதனன் உன்னை அவமானப்படுத்தியதனாலே வில்லை முறித்துப்போட்டு ஒருவர் பக்ஷத்திலேயும் யுத்தத்துக்கு ஒப்புக் கொள்ளுகிறதில்லையென்று வந்து விட்டதாய்க் கேள்வியானோம். எப்போது நீர் யுத்ததுக்கு ஒப்புக்கொள்ளவில்லையோ, அப்போதே உன் பிள்ளைகளாகிய பாண்டவர்கள் இந்தக் கடல் சூழ்ந்த புவனத்தை அவர்களே அரசாளுவார்களென்று இன்றைக்கு என் மனதிலே சித்தமாய் நிச்சயப்படுத்திக் கொண்டேனென்று விதுரனை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு பலராமருடனே கலந்து தீர்த்தயாத்திரையாய்ப் போகலாமென்று நியமித்தருளினார். அனந்தரம், விதுரன் திருமாளிகையிலிருந்து நல்ல அத்தையாகிய குந்திதேவியினுடைய அரண்மனைக்கு எழுந்தருள வேணுமென்று போகையில், குந்திதேவி அறிந்து தன் நல்ல மருமகன் வருகிறானென்று அநேகவிதமான ஆலத்திகள் எடுத்து, அதிவினயத்துடனே ஸ்ரீ கிருஷ்ணனை ஏள்ளப்பண்ணிக்கொண்டு தன் அரண்மனையில் திவ்வியமான ஆசனம் சமர்ப்பித்துத் தன் பிள்ளைகளாகிய பாண்டவர்களுக்கு இந்தப் பதின்மூன்று வருஷமும் காட்டிலும் அஞ்ஞாத வாசத்திலும் ஒரு பத்திரவம் இன்றிக் காத்து ரட்சித்தீர்: மேலும் அவர்களை ரட்சிக்கிற தன் பொருட்டுத் தவுத்தியத்துக்குப் பாபியான துரியோதனன் பக்கல் எழுந்தருளினீர். அவனும் உம்மை இன்னவனென்றறியாமல் நிலவறையுண்டாக்கிக் கொல்ல வேணுமென்று நினைத்து அந்தப் பாவியினுடைய எண்ணம் நிறைவேறாமல் அந்த நிலவறையில் பதிவு வைத்த ராட்சதரும் மல்லரும் தேவர் திருவடியில் அகப்பட்டு மாண்டார்கள் என்று அநேகவிதமான தோத்திரங்தள் பண்ணவிடத்தில் குந்திதேவிக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தெண்டம் சமர்ப்பித்து 'வாராய், அத்தை! நான் அநேக விதத்தில் சதுர்வித உபாயத்தைக் கொண்டு பாண்டவர்களுக்குப் பிதுரார்ச்சிதமாயிருக்கப்பட்ட

பாதிராச்சியத்தையும் கொடுக்க வேணுமென்று எத்தனை தூரம் யாசித்துக் கேட்குமிடத்திலும், அந்தத் துஷ்டன் ஊசி குத்தும் நிலமும் கொடுக்கிறதில்லையென்று சொல்லிவிட்டான். ஆகையால், பூதப விஷ்ய வர்த்தமானம் தெரிந்து முன்பாகவே தேவேந்திரனை அழைப்பித்துக் கர்ணனிடத்துக்கு அனுப்பின வயணம் என்னவென்றால் உன்னுடைய குமாரனாகிய அர்ச்சுனன் தேவேந்திரனுடைய அமிசாகுமாரனானபடியினாலே அருச்சுன னுக்குச் சத்துருவாகிய கர்ணன் எந்தமட்டுக்கும் கவசமும் குண்டலமும் அணிந்திருக்கிறானோ அந்த மட்டுக்கும் அவனை ஒருவராலேயும் ஜயிக்க முடியாது; ஆகையால் ''வாராய் உபேந்திரா'' என்று அழைத்து நீ அர்ச்சுனன் பொருட்டுக் கர்ணன் பக்கல் சென்று அவனணிந்திருக்கின்ற கவசமும் குண்டலமும் தானமாய் வாங்கி வருவாய் என்று சொன்ன சுவாமி யினிடத்தில் செலவு வாங்கிக் கொண்டு, விருத்தாப்பிய பிராமணவேஷம் கொண்டு சகலரும் இரங்கும் படியாய்க் கர்ணனுடைய அரண்மனை வாசலிற் சென்று நிற்கும்போது, அங்குள்ள அரிக்காரர் கர்ணனிடத்தில் ஓடித் தெரிவித்தார்கள். கர்ணனும் எதிர்கொண்டு வந்து மகாவேதோத்தமான மகா பிராமணனைக் கண்டு சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து எதாவிதியாக ஆராதனஞ் செய்து, "தேவர் வேண்டுவன கொடுக் கிறேன்; கேளும்'' என்று சொல்லி நிற்கையில், அந்த நடுக்கங் கொண்ட விருத்தாப்பிய பிராமணன் 'நான் வெகுதூரத்திலிருந்து வந்தேன். எனக்கு வேண்டியதைத் தடங்கலில்லாமல் கொடுப்பாயா? என்று கேட்க, "எதைக் கேட்டாலும் கொடுக் கிறேன்'' என்று நிற்கையில், பிராமணனும் கையையேந்திக் கொண்டு "நீ அணிந்திருக்கப்படாநின்ற கவசத்தையும், குண்டலத்தையும் கொடுக்க வேணும்'' என்று பிரார்த்திக்க, 'கர்ணனும்' ஈதென்ன ஆச்சரியமாயிருக்கிறது என்று யோசித்து நிற்க, அப்போது கர்ணனைப் பார்த்துப் பிராமணன் "இல்லை யென்றால் போகிறேன்' என்று கண்டிதமாய்ச் சொல்ல அப்போது கர்ணன் தைரியப்படுத்திக் கொண்டு இதுவரையில் தானம் இல்லை என்னாமல் கொடுத்ததற்குக் குறைவு வருமென்று தன் தேகத்தைத் துச்சமாய் எண்ணி, உதக பூர்வகமாய் கவசத் தையும், குண்டலத்தையும் தானமாகக் கொடுத்து விட்டான். தேவேந்திரனும் சந்துஷ்டனாய்க் கொண்டு தன்னுடைய யதாரூபத்தைக் கர்ணனுக்குக் காட்டி "உனக்கு வேண்டுவது யன்ன'' என்று கேட்டார். சத்துருக்களை ஜயிப்பதற்கு ஒரு ஆயுதம் வேணும் என்று கேட்ட மாத்திரத்தில் ஒரு வேலையெடுத்துக் கொடுத்து, இந்த வேலை யுத்தத்தில் யார் மேல் விடுகிறாயோ அவர்களை ஜயிப்பாய் என்று சொல்லி,

அவ்விடத்திலிருந்து வந்து என்னிடத்தில் தெரியப்படுத்தி விட்டுத் தன் லோகமே போனாரென்று இந்த விருத்தாந்தமெல்லாம் குந்திதேவிக்குச் சொல்லி, 'வாரும், அத்தையே! அந்தக் கர்ணனாவனை நீ இன்னானென்றறிய மாட்டாய். ஆனால் ஏகாந்தமாய்ச் சொல்லுகிறேன், கேள், என்று ஆதியந்தமாக நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லி, கர்ணன் உன்னுடைய பிரதம புத்திரன். இப்போது நீ கர்ணனிடத்துக்குப் போய், அவன் பிறந்த வர்த்தமானத்தைத் தெரியப்படுத்தி 'என் பிள்ளை' யென்று லாலனை பண்ணி, அவனுடைய மனக்குறைவைத் தீர்த்து, உன்னுடைய குமாரன் அர்ச்சுனனைக் கொல்லுகிறே னென்று பிரதிக்கினை பண்ணியிருக்கப்பட்டதைத் தவிர்க்கும் படி வரம் கேட்கிறது என்னவென்றால், அருச்சுனன் மேல் நாக பாசத்தை ஒரு கணைக்கு மேல் மறுகணை தொடாமல் இருக்கும் படிக்கும், மேலும் தனக்குச் சத்துரு அருச்சுனன் ஒருவனேயொழிய மற்ற நாலு பேரும் யுத்த களத்தில் கைப்பிடி யாய் அகப்பட்டால் கொல்லாமல் விடும்படிக்கும் வரங் கேட்டுக் கொள்ளும்படி சொன்ன பிரகாரம் குந்திதேவி அப்படியே கர்ணனிடத்தில் சென்று ஏகாந்தமாய் அழைத்து நிற்கையில், கர்ணன் குந்திதேவியைச் சாஷ்டாங்கப் பிரணாமம் பண்ணி 'அடியேனைத் தேடிவந்த வர்த்தமானம் இன்னதென்று தெரிய வேணும் அம்மா!' என்று கைகூப்பிக் கொண்டு நிற்கையில் குந்திதேவி கர்ணனைப் பார்த்து 'வாராய் பிரதம புத்திரனே! உன்னைத் தேடிவந்தது என் மனக்குறை தீரும்படி, நீ என் புத்திரன் என்றறிந்து தேடி வந்தேன் என்று சொன்ன தன் தாயாராகிய குந்திதேவியைச் சாஷ்டங்கமாகத் தண்டம் சமர்ப் பித்து, எந்தக் காரணத்தினாலே உனக்கு நான் புத்திரனாகப் பிறந்தேன், என் தகப்பன் யார்? யாவற்றையும் தெரியப்படுத்த வேணுமென்று சொன்ன சொல்லைக் கேட்டு, வாராய் குமார கர்ணா! 'ஆதியில் நான் கன்னிகையாய்க் கன்னியாமாடத்தில் இருக்கும்போது என் தகப்பனாரிடத்தில் துர்வாச மஹரிஷி பன்னிரண்டு மாசம் வந்து வாசமாயிருந்தார். அப்போது என் தகப்பனார் என்னை அந்த மஹரிஷியினிடத்தில் சிசுருஷை செய் யும்படி நியமித்தபடியே மகாபயபக்தியுடனே நடந்து வருங்காலங் களில் அவர் என்னிடத்தில் சந்துஷ்டராய்க் கொண்டு எனக்கு ஐந்து மந்திரங்களும் உன்னுடைய பருவ காலங்களில் அந்த மந்திரத்தைச் சுசியுடனே இருந்து தியானித்தால் நல்ல புத்திரர் கள் உண்டாவார்கள் என்று ஆசீர்வாதம் பண்ணிப் போனார். அதை நான் கன்னிகையாயிருக்கும் போது தானே சூரியனுடைய மந்திரத்தை என் மூடபுத்தியினால் அறிவோமென்று தியானம் பண்ணினேன். உடனே சூரியன் பிரதியட்சமாய் என்னைச்

சேர்ந்து போகும்போது என் தெரியாமையால் நான் கன்னிகையா யிருக்கும் போது வந்து பிறந்ததற்கு என் தாய் தகப்பனார் அறிந்தால் மகாகுறையாயிருக்குமென்று பிரார்த்தித்தபோது 'உன் வயிற்றில் பிள்ளை பிறந்தவுடனே யதா கன்னிகையாகக் கடவாய்' என்று வரங் கொடுத்துப் போனார். அப்படியே சூதிகாகிருஹத் தில் நீ பிறந்தவுடனே நான் எப்போதும் போலே கன்னிகை யானேன். உடனே அவ்விடத்தில் ஒரு பெட்டியில் வைத்துக் கவச குண்டலத்துடனேயிருக்கிற உன்னைப் பிரிய மாட்டாமல் விசனப்பட்டுக் கங்கையில் அனுப்பி விட்டேன். அது மிதந்து போகும்போது தேர்ப்பாகனாகிய சூதபுங்கவன் எடுத்துத் தன்னுடைய ஸ்திரீயின் கையில் கொடுத்து, புத்திரஹீனாளாய்க் கிடந்து விசனப்பட்டுக் கொண்டிருக்கிற நமக்கு இந்தக் கங்கா தேவி புத்திரனைக் கடாக்ஷித்தாளென்றும், வளர்த்துக் கொள்வா யென்றும் சொன்ன மாத்திரத்தில், அப்போது உடனே சூரிய பகவானே பிரத்தியட்சமாகி ஒரு பிராமண ரூபமெடுத்து இந்தக் குந்திதான் உன்னைப் பெற்றவளென்றும், நான்தான் உன் தகப்பனென்றும் சூரிய பகவான் சொல்லிப் போனார். உடனே அந்தப் பெட்டியிலிருந்த வஸ்திரத்தைக் கர்ணனை எடுத்து வரச் சொல்லி, தான் மேலே போர்த்துக் கொண்ட மாத்திரத்தில் கர்ணன் பிறக்கும்போது எந்த ரீதியாய்ச் சூதிகா கிருஹத்தில் இருந்தானோ அந்தப் பிரகாரம் கர்ணனைக் குழந்தைப் பருவமாய் வாரியெடுத்துத் தன் முலைப்பாலால் அத்தேகம் ஆத்தியந்தம் கழுவி, ஆனந்தபாஷ்பம் பொழியும்படி உன்னைப் பெற்றதற்கு இன்றைக்கு என் இழப்பாகிய ஏக்கம் நீங்கி ஆனந்தித்தேன் என்று சொல்லவே கர்ணனும் தன் தாயாராகிய குந்திதேவிக்கு அநேகதரம் சாஷ்டாங்க தெண்டம் சமர்ப்பித்து "என்னைப் பெற்ற தாயே", என்றும். குலம் கோத்திரம் ஒன்றுமில்லாது கிடந்த நான் மகாகுலமாகிய சூரியனுக்குப் புத்திரனானேன் என்றும் ஆனந்தித்துத் தாயைப் பார்த்துக் கொண்டு நிற்கையில் 'அப்பா இனிமேல் உன்னுடைய தம்பிமார்களுடனே அவர் களுடைய அரசையும் நீயே ஆண்டு கொண்டு சௌக்கியமா யிருக்கலாமென்று சொன்ன தாயைப் பார்த்து, 'வாராய், என் தாயே! இதுவரையில் அத் துரியோதனனுடைய அன்னத்தைச் சாப்பிட்டுச் சகல போகங்களையும் அநுபவித்து, அவனுடைய திரவியம் ஆத்தியந்தமும் நானே செலவழித்து. அவன் என்னை ஒரு தமையனைப் போலே நம்பியிருக்கப்பட்டவனை அவனைப் பிரிந்துவந்து விடுகிறது, தர்மமல்லவே! அவனுடைய அன்னத்தை இதுவரையில் சாப்பிட்ட கடனைக் கழிக்க வேணுமென்றும் சொல்லி, ஆனால் என்னுடைய பிறப்பு வளர்ப்பை என் தம்பி மாராகிய பாண்டவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டாமென்று

உறுதியாய்ச் சொல்லி; அம்மா உனக்கு இப்போது வேண்டுவ தென்ன! என்று கேட்கும்போது, குந்திதேவி கர்ணனைப் பார்த்து, எனக்கு இரண்டு வரம் வேண்டுமென்று கேட்டாள்: அப்படியே தாயே! நீ கேட்டதைக் கொடுக்கிறேன் என்று சொன்ன மாத்திரத்தில் தன் குமாரானாகிய கர்ணனைப் பார்த்து அருச்சுனனை நாகபாசத்தாலே (நாகாஸ்திரத்தாலே) கொல்லு கியேன் என்று பிரதிக்ஞை பண்ணியிருக்கிறபடியால் உன் பிரதிக்ஞையும் தப்பாமல் அருச்சுனனைக் கொல்லும்படி நாக பாசத்தால் ஒரு கணை தொடுக்கும் போது அந்தக் கணையால் அர்ச்சுனன் மாண்டாஸ் மாளட்டும். அல்லாவிட்டால் மறுகணை தொடுக்க வேண்டாமென்று வரங் கேட்டாள். அப்படியே ஆகட்டு மென்று வரங்கொடுத்தான். மேலும் உன் தம்பிமார் நாலு பேரிடத்திலும் உனக்குச் சத்துருத்துவம் இல்லையாகையால் அவர் கள் ஒருவேளை யுந்தகளத்தில் கைப்பிடியாய் அகப்பட்டால் கொல் லாமல் அவர்களை விடுக என்று வரங்கேட்டாள். அப்படியே ஆகட்டுமென்று சொன்ன பிற்பாடு குமாரனாகிய கர்ணனை உச்சி முகர்ந்து இரண்டு கபோலத்திலும் முத்தமிட்டு, பிள்ளை யென்கிற அபேட்சையால் முகத்தோடே முகம் வைத்துச் சந்துஷ்டியாய்ச் செலவு வாங்கிக் கொள்ளும்போது, தாயைப் பார்த்துக் கர்ணன் ஒரு வரங் கேட்டான். ஒருவேளை ரணகளத் தில் அருச்சுனன் கையம்பால் நான் மாண்டேனேயாகில், அப்போது அந்த ரணகளத்தில் நீ வந்து என்னை அருமையா யெடுத்து மடியில் வைத்துக் கொண்டு நான் உன்னுடைய பிரதம குமாரனென்று லோகமெல்லாம் அறியும்படி உருக்கமாய் இழவு கொண்டாடும்படிக்கு நான் கோருகிற வரத்தைக் கொடு என்று கேட்டான் அப்போதே குந்திதேவி துக்காக்கிரதையாக்கிலேசித்து, அப்படியே வரங் கொடுத்து உடனே செலவு வாங்கிக் கொண்டு குந்திதேவி தன் அரண்மனைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டி மங்களா சாசனஞ் செய்து கர்ணனிடத்தல் போய் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் தெரியப்படுத்தினாள். ஸ்ரீகிருஷ்ண னும் சந்துஷ்டராய்க் கொண்டு குந்திதேவிக்குச் சாஷ்டாங்க தெண்டம் சமர்ப்பித்து, நான் துரியோதனனை மடியேந்திச் சாம, பேத, தான, தண்ட சதுர்வித உபாயத்துடனே பாண்டவர் களுடைய பிதுரார்ச்சிதமாகிய பாகமான ராச்சியம் பாதியும் கொடுக்கச் சொல்லியும் கேட்டும் 'கொடுக்கிறதில்லை' என்று சொல்லி விட்டான். அதற்கு மேல் ஐந்து கிராமமாவது கொடு என்று கேட்டேன். அதுவுமில்லையாகில், ஐந்து வீடாவது கொடு என்று கேட்டும், பாண்டவர்களுக்கு ஊசி குத்துகிற நிலமும் கொடுக்கிறதில்லையென்று நிஷ்கர்ஷையாய்ச் சொல்லி' யுத்தம் பண்ணி ஜயித்து ராச்சியத்தைக் கைக்கொள்ளுவதே

வீரம் என்று சொன்னான் என்று சொல்லி, உபலாவியத்துக்குப் பாண்டவர்களிடத்துக்குப் போகிறேனென்று செலவு வாங்கிக் கொண்டு போகும்போது குந்திதேவி மடியேந்திப் பாண்டவர்கள் ஐந்து பேரையும் யுத்தத்தில் ரட்சிக்கிறோம் என்று வரங்கொடு என்று கேட்டாள். அப்படியே ஆகட்டுமென்று அஸ்தினாபுரத்தை விட்டுப் பாண்டவர்களிருக்கிற உபலாவியத்துக்கு எழுந்தருளும் போது பாண்டவர்களும், திரௌபதியும் எதிர்கொண்டு அழைத்துப்போய் ஆசனத்திலெழுந்தருளப் பண்ணி நன்றாகப் பூசித்தார்கள். ஸ்ரீகிருஷ்ண சுவாமியும் அஸ்தினாபுரத்துக் கெழுந் தருளினதிலிருந்து அவ்விடத்தில் நடந்த விருத்தாந்தங்களெல்லாம் அருளிச் செய்து பாண்டவர்கள் வீராதி வீரர்களாகி க்ஷாத்திரமுண்டானவர்களுமானால் யுத்தஞ் செய்து அந்த யுத்த முகத்திலே ஜயித்து ராச்சியத்தைச் கைக்கொள்ளலாமேயொழிய மற்றப்படி நான் அவர்களுக்கு ஊசிகுத்து நிலங்கூடக் கொடுக்கிறதில்லையென்று துரியோதனன் சொன்னதையும், பாண்டவர்களுக்கருளிச் செய்ய, அதைக் கேட்டு வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் இந்த நால்வரும் எழுந்து ஸ்ரீ கிருஷ்ணனைச் சாஷ்டாங்கதெண்டமாக அடைந்து தேவரீருடைய கடாக்ஷம் பூர்ணமாய் எங்கள் மேலிருக் கும்போது இந்த மூன்று லோகத்தையும் ஜபிக்க எங்களுக்கு என்ன குறைச்சல்: வாரீர், தேவ தேவரே! இதோ எங்கள் தமையனாராகிய தர்ம ராசாவுக்கு நன்றாகத் தெரியப்படுத்தி யுத்தத்துக்குச் சுமுகராய் ஆகும்படி செய்ய வேணுமென்ன அப்படியே தர்மராசாவைப் பார்த்து, உன்னுடைய அபிப்பிராயம் என்ன என்று, கேட்கையில், தருமராசா வாராய், என் ஆண்டவனே! தேவரீர் எங்கள் ஆபத் பந்துவாயிருக்கையில் என்ன குறை வரும்! நாமே யுத்த முகத்தில் ஜயிப்போம், ஆனால் யுத்தம் என்று நேரிடும்போது யார் சாவார்களோ, யார் பிழைப்பார் களோ, இத்தனை பந்துவர்க்கங்களையும் கொல்ல வேணுமே என்று சொன்ன தர்மராசாவினுடைய முகத்தைப் பார்த்து, உம்முடைய பிராணன் உள்ளவரையில் இப்படியே சொல்லி வருகிறீர், உம்மாலே இதுவரையில் இந்த ஆபத்துக்களெல்லாம் அடைந்தோம். அவர்களே யுத்தத்தில் ஜயித்து ராச்சியத்தைக் கைக்கொள்ளுங்கோள் என்று சொன்ன பின்பு இன்னம் என்ன யோசனை யிருக்கிறது? என்று அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் திரௌபதி இவர்களனைவரும் தர்மராசா முகத்தைப் பார்த்துச் சொல்லி, கிருஷ்ணனைச் சரணாகதி பண்ணினார்கள். அப்போது ஆபத்பந்துவாகிய சுவாமிதானே. யுத்தத்துக்குச் சேனைகளை வரவழைக்கச் சொல்லி ஆக்ஞாபித்தார். அப்படியே விராட மகாராசாவைக் கொண்டும் துருபதராசனைக் கொண்டும் தங்கள்

பக்கல் விசுவாசித்திருக்கிற ராசாக்களுக்கு எழுதியனுப்பிச் சேனைகளை வரவழைக்கச் சொன்ன பிரகாரம் ஏழக்கு ரோணி சேனை குருக்ஷேத்திரத்தில் வந்து சேர்ந்தார்கள். துரியோதனனது சேனைகளும் பதினோரு அக்குரோணியுடனே குருக்ஷேத்திரத்தில் வந்து சேர்ந்தார்கள். இப்படி உபைய சேனையும் யுத்தத்துக்கு ஆயத்தப்பட்டு ஒருவரையொருவர் சம்ஹாரம் பண்ணி ஜயிப்போமென்று கர்ச்சிதமாயிருக்கும் வேளையில் புருஷோத்தமனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் மகாவீராதி வீரனாயும் சந்திரகுல சிகாமணியாயும் பாண்டு மகாராசா வினுடைய குமாரனாயும், தர்மராசாவினுடைய தம்பியாயும் மேட்டான மேட்டியாயும் விளங்கா நின்ற கிரீடியாகிய அருச்சுன னுக்கு மகாகிருபையுடனே அவனை ஆதரணை பண்ணி ரட்சிக்கும் பொருட்டாய் ரதத்திலேறிச் சாரத்தியம் பண்ணிக் கொண்டு உபைய சேனையில் ரதத்தைக்கொண்டு நிறுத்தினார். அப்போது அருச்சுனன் உபைய சேனையிலிருக்கப்பட்ட ஆசாரிய ராகிய துரோணர் பாட்டனாராகிய பீஷ்மர், அசுவத்தாமா இவர் களையும் பார்த்து, அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் மற்றும் அநேகம் பந்து ஜனங்களாகிய ராச கூட்டங்களைப் பார்த்து, "இவர்கள் மேல் எப்படிப் பாணம் தொடுக்கிறது" என்று பிரமித்துச் சோகப்பட்டு காண்டீபத்தை நழுவ விட்டுச் சும்மா விருந்த அர்ச்சுனனைப் பார்த்துக் கிருஷ்ண சுவாமியார் கீதார்த் தத்தைப் பதினெட்டு அத்தியாயமாய் சாங்கியமாக அர்ச்சுன னுடைய சோபம் தீர்க்க வேண்டிச் சொல்லத் தொடங்கினார்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

## 12. ஸ்ரீபகவத் கீதார்த்தம் : முதலாவது அர்ச்சுனன் வியாகுல யோக அத்தியாயம்

ஸ்ரீமந் நாராயணன் பகுதாத்பாய கர்ப்பமான கீதா சாஸ்திரத்தைச் சங்கிரஹமாக வெளியிட்டு ஓரான் வழியாக அநுஷ்டிக்கப்பட்ட கீதார்த்தத்தை விஸ்தாரமாகப் பாஷியமாக்கி அருளிச்செய்த லட்சுமணமுனிபுங்கவர்த்தா கருணானுகுணமாக சமஸ்தமான சேதனாளும் உடன் சீவிக்கும்படி மணிப்பிரவாளமாக வெளியிடப்பட்டத்தைச் செந்தமிழால் அவஜனித்தது எப்படியென் றால் ஸ்ரீ பரவாசுதேவன் ஸ்ரீ பூமிதேவியினுடைய பிரார்த்தனை யினாலே கம்சன், தந்தவக்கிரன், சிசுபாலன், சராசந்தன், நரகாசுரன், பாணாசுரன் முதலான ராசவங்கிசத்தில் ஜனித்த அசுரர்களாகிய பாரத்தைப் பரிஹரிக்கிற வியாஜத்தாலே ஸ்ரீதேவகி

தேவிக்கும் வாசுதேவருக்கும் குமாரனாக அவதரித்து - குரு பாண்டவர்களுடைய யுத்த பூமியில் ஆச்ரித வாத்ஸல்யாதிசயத்தாலே பார்த்தனுக்குச் சாரதியாகி அனுசிதமான காலத்திலும் அயோக்கியமான தேசத்திலும் அயோக்கியமான ஜனங்களிடத்திலும் குலத்தில் பிறந்த சினேகத்தினாலேயும் வாத்ஸல்யத்தினாலேயும் யுத்தம் செய்ய மாட்டேன் என்று ஒழிந்திருக்கிற பார்த்தனுக்குச் சாரதியாகி அவ் வியாஜத்தால் சமஸ்தமான முமுக்ஷுசனங்களிடத்தில் அனுக்கிரகஞ் செய்ய வேணுமென்கிற இச்சையால் தர்மார்த்த காமமோக்ஷமென்கிற நாலுவித புருஷார்த்தங்களிலும் உத்கிருஷ்டமான மோக்ஷபுருஷார்த்த சாதனமாகிய சகல வேதாந்தசாரத்தையும் தாமே ஆசாரியனாக நின்று தன் விசுவரூபத்தையும் பிரகாசிப்பித்து விசிதமாக அருளிச் செய்தார். இப்படிச் செய்விக்கிற பகவானுடைய பிரபாவங்களைத் தெரிந்திருந்தாலும் திருதராட்டிரன் தான் முன் செய்த மிகுதியான பாவ வாசனையினால் விவேகமிழந்து துரியோதனனுடைய விஜயத்தைக் கோரி தருமராஜாசேனையும் துரியோதனன் சேனையும் யுத்தத்துக்கு ஆயத்தப்பட்டு இரண்டு தளமும் எதிர்த்திருக்கும்போது திருதராட்டிரன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஸ்ரீவேதவியாச மகாமுனி அவ்விடத்துக்கு வந்து திருதராட்டிரனுடனே ஒரு வார்த்தை சொல்லுகிறார். சர்வலோக சரண்யனாயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணசுவாமி பூபாரந்தீர்க்க அவதரித்தாராய் இந்த யுத்தத்தில் ராஜாக்களுக்கெல்லாம் காலம் சமீபித்து விட்டது; ஆர் வேண்டாமென்றாலும் நில்லாது. நீ ஏன் சிந்திக்கிறாய் அன்றாடம் பண்ணுகிற யுத்தம் உனக்குத் தெரிய வேணுமென்று இச்சிக்கிறபடியினாலே உனக்குத் தெரியத் தக்கதாக நம்முடைய அனுக்கிரகத்தினாலே திரிகால ஞானியான சஞ்சயன் உனக்குச் சொல்லுவான் என்று அனுக்கிரகித்து ஸ்ரீவேத வியாசமகாமுனி அவருடைய ஆசிரமத்துக்குப் போனார். திருதராட்டிரன் சஞ்சயனைக் கேட்கிறான். தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் யுத்தசன்னத்தர்களாயிருக்கிற நம்முடையவர்களும் பாண்டவர்களும் ஏது செய்கிறார்களென்று கேட்க, சஞ்சயன் சொல்லுகிறான்: வியூகாகாரமாய் நிற்கிற பாண்டவர்களை ராசாவான துரியோதனன் பார்த்து, அப்போது ஆசாரியர் சமீபத்திலே வந்து அவருடனே சொல்லுகிறான்; ஆசாரியரே! உம்முடைய சிஷ்யனான துருபத புத்திரனாலே வியூகா நிர்மிதமாய் முன்னே நிற்கப்பட்டிருக்கிற பாண்டுபுத்திரர்களுடைய சேனையைப்பாரும். அவ்விடத்லே பீமார்ச்சுனர்களுக்குச் சமானாளும் சூராளும் சிரேஷ்டமான வில்லாளியாளும் யாரென்றால் - யுதானனும் விராடனும் மகாரதனான துருபதனும், திருஷ்டகேதுவும் சேகிதானனும், வீரியவானான காசிராசாவும்,

புருசித்தும் குந்திபோசனும் நரபுங்கவனான சைப்பியனும், பராக்கிரமமுண்டான யுதாமன்யனும் வீரியவானான உத்தமோசனும், சவுபத்திரனும், துருபதேயருமான இவர்கள் சருவரும் மகாரதிகளே.

திவிஜோத்தமா! நம்முடையவர்களில் நம்முடைய சேனைக்கு நாயகராய் விசேஷமானவர்களாரோ அவர்களைத் தெரிய வேண்டிச் சொல்லுகிறேன், பீஷ்மரும், கர்ணனும், கிருபனும், சமதிஞ்சயனும், அசுவத்தாமாவும், விகர்ணனும், சௌமத்தியனும் (சோமதத்தன்) அப்படியே மற்றும் வெகுபேர் சூரர்கள் நம்முடைய பொருட்டாகச் சீவனை விடுகிற பேராய் நானா சஸ்திர அஸ்திரசம்பன்னர்களாயிருக்கிற இவர்கள் சர்வரும் யுத்தசமர்த்தர்களே யானாலும் பீஷ்மாபி ரட்சிதமான நம்முடைய பலம் அபரியாபதமாயிருக்கிறது. ஆகையினாலே சர்வமார்க்கத்திலும் எதாபாகமாய் நின்று நீங்கள் சர்வரும் பீஷ்மரை அபேக்ஷிக்க வேணுமென்று துரியோதனன் துரோணாசாரியாரைப் பார்த்துச் சொல்ல, அவனுக்கு அஷ்டம சனியாவிருக்கிறவராய் குருவிரத பிரதாபவானான பீஷ்மர் மிகுந்து சிங்கநாதம் பண்ணிச் சங்கம் பூரித்தார். அப்புறம் மற்ற பேர்களும் சங்கம், பேரி, பணவம், ஆனகம், கோடு ஆதியான வாத்தியங்களும் முழக்கினார்கள். அந்தச் சத்தங்களினாலே துமுலம் ஆயிற்று (துமுலம் - குழப்பம்). அதன்பிறகு, சுவேத அச்வம் பூண்டதாய் மிக்க தரமான ரதத்திலேயிருந்து ஸ்ரீகிருஷ்ணனும், அருச்சுனனும் திவ்வியமாய் சங்கநாதம் பண்ணினார்கள். அந்தச் சங்கங்களுக்கும் பேரென்னவென்றால் ரிஷிகேசன், பாஞ்சசன்னியமும், தனஞ்சயன் தேவதத்தமும், பீமசேனனான விருகோதரன் பௌண்டிரமும், தர்மராஜா அனந்தவிஜயமும், நகுல சகதேவர்கள் சுகோஷம் மணிபுஷ்பகமும் பூரித்தார்கள். மற்றும் பரமவில்லாளியான காசிராஜனும் மகாரதனான சிகண்டியும், திருட்டத்துய்மனும், விராடனும், அபராஜிதனான சாத்தகியும், துருபதனும், திரௌபதேயரும் மற்றும் பிருதிவிபதிகள் சர்வரும், மகாபாகுவான சௌபத்திரனும் வேறேவேறே சங்கங்கள் பூரித்தார்கள். அந்தக் கோஷமானது திருதராட்டிராளுடைய இதயங்களைப் போதிக்கிறதாய் ஆகாசத்தையும் பூமியையும் துமுலமாகப் பற்றியது. கபித்துசனான அர்ச்சுனன் அவ்விடத்தில் நிற்கிற திருதராஷ்ட்ராளைப் பார்த்து சத்திரபிர விருத்திக்குஞ் சமயமாய்த் தனுசை உன்னிதமாய் எடுத்துக் கொண்டு ரிஷிகேசனோடே அர்ச்சுனன் ஒரு வசனஞ் சொல்லுகிறான். அச்சுதா! உபைய சேனை மத்தியிலே நம்முடைய ரதத்தை நிறுத்தும்; இந்த ரணத்தில் எவர்கள் யுத்தகாமர்களாய் நிற்கிறார்களோ எவர்களோடே

யுத்தஞ் செய்ய வேணுமோ அவர்களைப் பார்க்கிறேன். இந்த யுத்தத்தில் துர்புத்தியனான திருதராட்டிரனுக்குப் பிரியஞ் செய்ய வேண்டி, கூடிவந்தவர்களோ அவர்களையும் பார்க்கிறேன் என்று சொல்லக் கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் உபைய சேனாமத்தியிலே பீஷ்ம துரோண பிரமுகர்கள் சருவருக்கும் அபிமுகமாய் உத்தம மான ரதத்தை நிறுத்தி ஸ்ரீபகவான் சொல்லுகிறார்; பார்த்தா! இதோ நிற்கிற கௌரவர்களைப்பார்'' என்ன, பார்த்தன் அவ் விடத்திலே நிற்கிறவர்களைப் பார்த்து, அதிலே தகப்பன்மாரும், பாட்டன்மாரும் ஆசாரியர்களும், அம்மான்களும் அண்ணன் தம்பிகளும், பிள்ளைகளும், பேரன்மார்களும் சிநேகிதர்களும் பந்துக்களும் மற்றும் உபயசேனையிலும் இருக்கிற சருவபந்துக் களையும் பார்த்துப் பரமமான கிருபையுடனே கூடி அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணருடனே சொல்லுகிறான்; வாராய் தேவதேவோத்தமா என் ஆண்டவனே! யுத்தஞ்செய்கிறோமென்று நிற்கிற சுஜனங் களைப் பார்த்து என் சரீரம் நடுங்கா நிற்கிறது, வாயுலர்ந்து போகா நிற்கிறது! மயிர் கூச்சிடா நிற்கிறது. காண்டீபமும் கையிலிருந்து நழுவா நிற்கிறது; மனது பிரமை பிடித்தாற் போலிருக்கிறது; நிற்கிறதற்கும் சத்தையில்லாமலிருக்கிறேன். விபரீதமான நிமுத்தங்கள் பார்க்கிறேன். நம்முடையவர்களை யுத்தத்தில் கொன்றதனாலே சிரேயஸ் காணேன். இவர்கள் இத்தனை பேரையும் கொன்று கெலிப்பும் ராச்சியமும் சுகமும் ஆசைப்பட்ட நமக்கு ராச்சியமென்னத்துக்கு, போகமென்னத் துக்கு, சீவனென்னத்துக்கு எந்த பந்துக்களுக்காக ராச்சியமும் போகமும் வாஞ்சிக்கப்படா நிற்குமோ அந்தப் பந்துக்கள் பிராணன்களும் தனங்களும் விட்டு யுத்தத்திலே எதிர்த்து நிற்கிறார்கள். அவர்களோவென்றால் ஆசாரியர், தகப்பன்மார், பாட்டன்மார், மாமன்மார், மாமன்மார், பெண் கொடுத்த மாமன்மார், மச்சினர் மற்ற பந்துக்கள் சகலருந் தெம்பாய் வந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவோரும் என்னைக் கொன்றாலும் நான் அவர்களைக் கொல்ல நிச்சயிக்கிறதே யில்லை. இப்படி திரிலோக ராச்சியம் வந்தாலும் எனக்கு வேண்டாம். பூமி மாத்திரம் என்ன; ஜனார்த்தனா! திருதராஷ்டிர புத்திரர்களைக் கொன்று நமக்கு என்ன சந்தோஷமாகப் போகிறது. பாவமே ஆசரிக்கும். ஆகையால் பந்து சகிதமான இந்தத் திருதராஷ்டிர குமாரர்களைக் கொல்லலாகாது. நம்முடைய வர்களைக் கொன்று எப்படிச் சுகமாகப் போகிறோம் குலக்ஷய கிருதமான தோஷத்தை அறிந்த நம்மாலே இந்தப் பாவம் நிவிர்த்திக்கிறது. எந்த உபாயத்தினாலேயும் அறியப்படாது, குலக்ஷயமானால், பூர்வத்திலிருந்து வருகிற தர்மங்களெல்லாம்

நாசமடையும்: தர்மம் நஷ்டமானால் குலத்தை அதர்மம் வந்து முடிக் கொள்ளும். அதர்மத்தினாலே குலங்கெட்டால் குலஸ்திரீகள் தூஷிக்கப்படுவார்கள். ஸ்திரீகள் துஷ்டைகளானால் வருண சங்கரமாம்: வருணசங்கரமத்தினாலே குலத்தைக் கெடுத்தவர்களுக்கும் குலத்துக்கும் நரகமே உண்டாகும். அவர்களுடைய பிதுருக்கள் பிண்டோதகக் கிரியைகளில்லாமல் அதோகதியடைவார்கள். வருண சங்கரமானது நரகத்திற்கேகுவதன் பொருட்டே பண்ணப்படுகிறதென்று வேத சாஸ்திரத்திலே கேட்டோம். கோரமானகீ ழ்த்தரமான பாபத்தைச் செய்யத் துணிந்தோம். ராஜ்ய சுகலோபத்தினாலே சுஜனங்களைக் கொல்லத் துணிந்தோம். அசக்தனாய் பிரீதிக்ரியாரஹிதனாயிருக்கிற என்னைச் சத்திர பாணிகளான திருதராஷ்ட்ராள் ரணத்தில் ஹதம் பண்ணினாலும் அதுவும் எனக்குச் சம்மதந்தான் என்று அருச்சுனன் இவ்விதமாய்ச் சொல்லிச் சோகாகுலிதமானசனாய்ச் சரசாபங்களை விட்டு உபைய சேனை மத்தியில் ரதத்தில் சும்மாவிருந்து விட்டான். இவை ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்ம பருவத்தில் ஸ்ரீ பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் அர்ச்சுன விஷாத யோகமென்ற முதல் அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ண சகாயம் :
ஸ்ரீமதே ராமாநுஜாயநம :
ஸ்ரீமதே சடகோபாய நம :
ஸ்ரீ பராங்குச தாசாய நம :
ஸ்ரீமதே ஆசார்யாய நம :

ஸ்ரீராம ஜெயம்

## இரண்டாவது—சாங்கிய யோகம் அத்தியாயம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

பின்னையும் சஞ்சயன் சொல்லுகிறான்: இந்த விதம் கிருபையோடே கூடினவனாய் கண்ணீரினாலே பூர்ணலோசனனாய் வியாகுல சித்தனாயிருந்த அர்ச்சுனனைப் பார்த்து மதுசூதனன் சொல்லுகிறார். "அர்ச்சுனா! இந்த விதமாயிருக்கப்பட்ட யுத்தரங்கத்தில் அநாரியசேவிதமும் சொர்க்க விருத்தமும் அபகீர்த்திகரமுமான இந்த மோகம் உன்னை எதன் நிமித்தஞ் சேர்ந்தது. பரந்தப! பயத்தே சேராதே. இது உனக்கு யுக்தமல்ல. க்ஷூத்ரமான இருதய துர்பலத்தைத் தியஜித்து யுத்தஞ் செய்வதற்கு எழுந்திரு என்ன, அர்ச்சுனன் சொல்லுகிறான்:

மதுசூதனா! யுத்தத்தில் பூஜஹர்களான பீஷ்மர் துரோணர்களை நான் எந்தவிதமாய்ப் பாணங்களினாலே யுத்தஞ் செய்யப் போகிறேன்? குருசனங்களும் மகானுபாவர்களுமான பீஷ்ம துரோணர்களை ஹதம் பண்ணுகிறதைப் பார்க்கிலும் பிட்சை யெடுக்கிறது சிரேயஸ்; இவர்களை ஹதம் பண்ணினேயானால் இகத்திலேதானே உதிரசங்கலிதமான அர்த்தகாமங்களைப் புஜிக்கிறவனாவேன். நமக்குள் எதேது இதமோ அதை அறிய மாட்டோம். நாமே ஜயிப்போமோ, அவர்களே நம்மைச் ஜயிப்பார் களோ; எவர்களை ஹதம் பண்ண நாம் சீவிப்போமோ அந்தத் திருதராஷ்டிரர்கள் எதிரே நிற்கிறார்கள். இது ஹிதமென்றும் இது அஹிதமென்றும் தெரியாமல் தர்மஸம்மூடசித்தனாய் உம்மைக் கேட்கிறேன். எது சிரேயஸ்கரமாயிருக்குமோ அப்படிப்பட்ட நிச்சிதா அர்த்தத்தைச் சொல்லும். உமக்கு நான் சிஷ்யன். உம்மைச் சரணமாக அடைந்திருக்கிறேன்; என்னை ரட்சியும் நிஷ்கர்ஷகமும் சமர்த்தியுமான பூராச்சியத்தேயும் சுரர்களுடைய ஆதிபத்தியமும் அடைந்தாலும் பந்து வதோத்தி யோகமான இந்திரியங்களைச் சோஷிக்கிற என் சோகம் எந்த விதத்திலே விலகும். அப்படி உபாயஞ் சொல்லும்'' என்றான் என்று சஞ்சயன் "திருதராஷ்டிரனை யுத்தேசித்து மகிவல்லபா! குடாகேசன் இருஷிகேசனைப் பார்த்து இந்த விதமாய்ச் சொல்லி யுத்தஞ் செய்ய மாட்டேனென்று சும்மாவிருந்தான். அப்போது உபைய சேனா மத்தியிலே விகாரத்தை யடைந்திருக்கிற அர்ச்சுனனைப் பார்த்து இருஷிகேசன் பரியாசவசனஞ் சொல்லுகிறது போலவே சொல்லுகிறார். அர்ச்சுனா! சோகிக்கத் தகாதவர்களைக் குறித்துச் சோகிக்கிறாய். பிரஜ்ஞா வாதங்களையும் பாஷிக்கிறாய். பண்டிதாளான பேர்கள் விழுந்து போகிற சரீரங்களைக் குறித்தும், சாகாமல் இருக்கிற ஆன்மாவைக் குறித்தும் சோகியார்கள் பரமாத்மாவான நான் எப்போதைக்கும் இல்லாமற் போவதுமல்லன் நீயும் எப்போதைக்கும் இருக்கிறவனே. இந்த ராஜாக்களும் எப்போதைக்கும் இருக்காமல் போகிறதில்லை. நீங்கள் எல்லாரும் சாசுவநாதனான என்னுடைய அங்கிசையான படியினாலே முன்னுக்குச் செனிக்கலாமென்று எண்ணப்படாது. நாம் எல்லாரும் எப்போதும் உண்டான பேர்களே. சீவாத்மாவுக்குத் தேகத்தில் பாலியமும் கௌமாரமும் யௌவனமும் ஜரையும் எப்படி யுண்டாமோ அப்படியே தேகாந்தரம் உண்டாகிறது. இந்த அர்த்தத்தில் தீரனானவன் மோகிக்கிறதில்லை. கௌந்தேயா! இந்திரியங்களும் ஸ்பரிசங்களும் சீதோஷ்ண சுகதுக்கங்களைக் கொடுத்துக்கொண்டு கமனாகமனங்களுண்டாய் அநித்தியமா யிருக்கும். அவைகளைச் சகித்துக்கொள். புருஷ சிரேஷ்டனான அர்ச்சுனா! வித்தியானானவன் யுத்தத்திலிருக்கிற சுகதுக்கங்

களைச் சமமாக நினைத்துத் தீரனாயிருந்தால் அவனைச் சீதோஷ்ண சுகதுக்கங்கள் பாதிக்கா. அவனே மோட்சத்துக்கு அருகனாவான். அசத்தான தேகத்துக்கு நித்தியத்துவமில்லை. சத்தான ஆத்மாவுக்கு அநித்தித்யத்துவமில்லையென்று இந்த இரண்டு நிச்சயமும் தத்துவதரிசிகளாலே காணப்பட்டது. எந்த ஆத்மதத்துவத்தினாலே பிறந்த பிறகு இறுதியும் பிறகு இறுதியினாலே பிறந்த தேகமும், சகலமும் பிரகாசிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட ஆத்மாநாசமில்லாததென்றறியவும். நாசமில்லாத ஆத்மாவைப் பிரகிருதியினாலே பிறந்த ஒரு பதார்த்தமும் நாசம் பண்ணமாட்டாது. பாரதா! நித்தியனாய் நாசரஹிதனாய் அப்ரமேயனான சீவனுக்குத் தேகங்கள் நசிக்குமேயல்லாமல் சாச்வதனான ஆத்மாவுக்கு நாசமில்லை. ஆனதால் சம்சயத்தைவிட்டு யுத்தம் பண்ணு. எவனாகிலும் ஒருத்தரைக் கொன்றேன் என்று நினைப்பானாயின் எவன் ஒருத்தனாலே தான் ஹதனானேன் என்று நினைப்பானாயின் இவர்களிருவரும் தத்துவ சுவரூபத்தை அறியாத பேர்கள். அதெப்படியென்றால் நித்யனான ஆத்மா கொன்றவனுமல்ல; கொல்லப்படுகிறவனுமல்ல; பிறந்தவனும் அல்ல, செத்தவனும் அல்ல. ஒருபோது உண்டாய் திரும்பப் பிறக்கப் போகிறதும் இல்லை. அஜனும், நித்தியனும், சாச்வதனும், புராணனுமான ஆத்மா சரீரம் ஹதமானால் தான் ஹதமாகிறதில்லை. பாரதா! எவனாகிலும் ஆத்மா நாசமில்லாதவன் என்றும், நித்தியனென்றும், பிறப்பில்லாதவன் என்றும், அறிகிறானோ அந்தப் புருஷன் ஆரைக் கொல்லுவிப்பன், ஆரைக்கொல்லுவன். மநுஷ்யாள் சீரணமான வஸ்திரங்களைவிட்டு நூதன வஸ்திரங்களை எப்படித் தரிப்பார்களோ அப்படியே சீவனானவன் சீரணங்களான சரீரங்களைவிட்டு நூதனமான சரீரங்களைத் தரிப்பன். இப்படிப்பட்ட ஆத்மாவை ஆயுதங்கள் கண்டிக்கமாட்டா; அக்கினி தகிக்க மாட்டாது. தண்ணீர் நனைக்க மாட்டாது; மாருதம் சோஷிக்கப் பண்ண மாட்டாது. சீவனைப் பேதிக்கவும், மத்திக்கவும், நனைக்கவும், உலர்த்தவும் முடியாது. நித்தியனென்றும், அவிகாரனென்றும் சொல்லப்படுவன். ஆனதால் நீ சிவனைக் குறித்துத் துக்கிக்கலாகாது. ஆனாலும் தினந்தோறும் பிறக்கிறதும், மரிக்கிறதும் தேகமேயென்று அறிந்தாயானால் அதுக்குண்டான சுபாவமென்று நீ துக்கப்படத் தேவையில்லை.

ஆத்மா சர்வகதனென்றும், ஸநாதனனென்றும், அவ்யக்தனென்றும், அசலனென்றும், அசிந்த்யனென்றும் நீ அறிந்தாயானால் அதுக்குண்டான சுபாவமென்று நீ துக்கப்படத் தேவையில்லை. பிறந்தோமென்றவனுக்குச் சாவு தப்பாது; இறந்தவனுக்குப் பிறப்பு தப்பாது. ஆகையால், தள்ளப்படாத அர்த்தத்தில்

நீ சோகிக்கத் தேவையில்லை. சகல பூதங்களும் ஆதியில் பிரகிருதியிலீனமாய் ஒன்றும் அறியார்கள். செத்தபிறகு அப்படியே ஒன்றுமறியார்கள். நடுவே இப்போது தானென்றும் அந்நியனென்றும் பிரமிப்பார்கள். இப்படிப்பட்ட சுபாவமுண்டான சரீரங்களைக் குறித்து சோகிக்கலாகாது. ஒவ்வொருத்தன் புண்ணிய விசேஷத்தினாலே பாபரஹிதனாய் ஆச்சரியம் போலே ஆத்மாவைப் பார்ப்பான். அவன் பின்னே ஒருத்தனுக்குச் சொல்வான். பின்னே ஒருத்தன் கேட்பான்; கேட்டும் கண்டும் சொல்லியும் இந்த ஆத்மாவை ஒருத்தரும் அறியார்கள். ஆத்மா நித்தியமும், வதைப்படாதவனும் சகல தேகங்களிலேயும் இருக்கிறவனே. ஆகையால் நீ சகல பூதங்களையும் குறித்துத் துக்கப்படத் தேவையில்லை. உத்தமமான க்ஷத்திரிய தர்மத்தை எண்ணிப் பயப்படலாகாது. க்ஷத்திரியனுக்குத் தர்ம யுத்தத்தைக் காட்டிலும் சிரேயஸ் வேறேயில்லை. தனக்குத்தானே ப்ராப்தமான அபாவ்ருத சுவர்க்க சுகமான யுத்தத்தைப் புண்ணியரான க்ஷத்திரியர்கள் அடைவார்கள். அப்படியல்லாமல் நீ தருமந்தப்பாத இந்த யுத்தஞ் செய்யாமற் போனாலும் அதனாலே சுவதர்மமும் கீர்த்தியும் விட்டுப் பாபத்தையடைவாய். இது மாத்திரம் அல்ல. லோகத்தார் சாசுவதமாய் உன் அபகீர்த்தியைச் சொல்லிக்கொள்ளுவார்கள். பூஜிக்கப்பட்டவனுக்கு வந்த அபகீர்த்தி மரணத்திலும் அதிகம். மகாரதிகளெல்லாரும் பயத்தினாலே ரணத்தினின்று ஒழிந்தவனாக எண்ணுவார்கள். எந்த மகாரதிகளிடத்தில் நீ வெகுமானனாயிருந்தாயோ அவர்களுக்குள்ளே லாகவத்தையடையப் போகிறாய். உன் சத்துருக்கள் உன்னைப் பராக்கிரம வீனனாய் நிந்தனை பண்ணி அதிகமாய்ச் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லுவார்கள். அதனிலும் துக்கம் வேறேயில்லை. கௌந்தேயா! யுத்தத்தில் ஹதனானால் சுவர்க்கத்தையடைகிறாய். ஜயித்தாயானால் மகீராச்சிய சுகத்தை அனுபவிக்கிறாய். ஆகையால் யுத்தம் அவசியம் கர்த்தவ்யமென்று நிச்சயித்து யுத்தத்துக்கு எழுந்திரு. சுகதுக்கங்கள் லாபாலாபங்கள் ஜயாபஜயங்கள் சமம் செய்து யுத்தம் பண்ணினாயானால் பாபம் அடைகிறதேயில்லை. பார்த்தா! நான் பிரதமமான சாங்கிய சாஸ்திரத்திலுள்ள தத்துவத்தைச் சொன்னேன்.

இனி, கர்மயோகத்தினுடைய புத்தியைக்கேள். யாதொரு புத்தியோடே கூடினவன் கர்மபந்தங்களை விட்டு மஹேச்வராராதனமான கர்மயோகம் ஆரம்பிக்கிறதனாலே கொஞ்சம் சஞ்சலமுண்டானாலும் நாசத்தையடையான். இந்தத் தர்மம் சொற்பமானாலும் மகத்தான் பயத்தினின்று ரட்சிக்கும். குருநந்தனா! ஈச்வர ஆராதனம் ஆசரிக்க வேணுமென்ற

புத்திவொன்று தவிர இதரகர்மம் ஆசரித்தவர்களுடைய புத்தி அதிகமாய் அனந்தமாயிருக்கும். கர்மங்களும் வெகுசாயிருக்கும். பார்த்தா! அர்த்தவாதமான வேதவாக்கியங்களில் அநுராகதர்களாய் இதற்குமேல் வேறொன்றுமில்லை என்று சொல்லி, காமாத்மாவானவர்களாய் சுவர்க்கமே மேலான பல பிரதமென்று எண்ணின அவித்வாம்சாள் போக ஐசுவரியங்களை உத்தேசித்து மேல் ஜன்மகர்ம பல பிரதமாய கிரியாவிசேஷம் வெகுவாய், புஷ்பிதமான கொடிபோலே மனோகரமான இந்த வசனத்தைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட வாக்கியத்தினாலே அபஹ்ருதமான மானசர்களாய் போக ஐசுவரியத்தில் மிகவும் ஆச்ரிதாளானவர்களுக்கு ஈசுவரத்தியானம் பண்ணப்பட்ட புத்தி பிறக்கமாட்டாது. அர்ச்சுனா! அர்த்தவாதமான வேதத்தில் சொல்லுகிறதென்னவென்றால் திரிகுண விஷயத்தைக் குறித்துச் சொல்லும். நீ இந்தத் திரிகுணத்துக்கும் உளப்படாமல் சுத்தசாத்வீகனாய் தொந்தங்களான சுகதுக்காதிகளுக்கு வேறானவனாய் யோக க்ஷேமமென்கிற திரவியராசியில் திரவிய லக்ஷணை செய்யாமல் ஆத்மஞானியாக இரு. அப்படியானால், வேதத்தில் சொன்ன கர்மங்களை விடலாமோவென்றால், நிறைய தண்ணீர் இருக்கிற மடுவிலே மனுஷ்யாளுக்குரித்தான பானத்துக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு கிரஹித்துக் கொள்வார்களே அப்படியே விவேகியான பிராம்மணன் சகலவேதங்களிலேயும் மோக்ஷவிரோதமில்லாத அர்த்தத்தைக் கிரஹிப்பன். அப்படியே மோக்ஷ அதிகாரியான உனக்கு மோக்ஷவிரோதமில்லாத கர்மத்தைச் செய்; கர்ம பலத்தை ஒரு போதும் வேண்டாதே. கர்மபலத்துக்கு ஏதுவாகாதே, அப்படியென்று, கர்மம் பண்ணாமலும் இருக்கலாகாது. தனஞ்சயா! சித்தம் பரமேசுவரனிடத்தில் வைக்கப்பட்டது, யோகம் என்பது. அந்த யோகத்திலிருந்து கர்மங்களைச் செய். கர்மம் பண்ணுகிறதற்குப் பலம் அனுபவிக்கிறதற்கும் நான் காரணம் என்கிற புத்திவேண்டாம். சுவதர்மம் விடலாகாது. யோக நிஷ்டனாய் பல சங்கம் விட்டுப் பலன் சித்தித்தபோதும் பலன் சித்தியாகாத போதும் சமமாய்க் கர்மங்களைப் பண்ணு; யோகமென்றால் சமபுத்தியாயிருக்கிறதே யோகம். தனஞ்சயா! ஞானயோகத்திலும் கர்மயோகம் நிகிருஷ்டம் : ஞானத்தில் புத்தியை வைத்து என்னையே சரணமடை. பலங்களில் ஆசையுண்டான பேர் சொற்ப்புத்தியன். புத்தி சம்பன்னனானவன் இகத்திலே தானே சுகிர்த்துஷ்கிருதங்களை ஜயிப்பான் ஆகையால் யோகத்தின் பொருட்டு உத்தியோகி. கர்மங்களில் யோகம் கௌசலம். புத்தியுக்தாளான வித்துவாங்கிசர்கள் கர்மத்தினால் ஜனித்த பலத்தையுத்தேசித்து ஜன்ம பந்தத்தினின்றும் விமுக்தர்களாய்ச்

சாசுவதமான பலத்தையடைவார்கள். எப்போது தேகமே நான் என்று மோகமாகிற காட்டை அதிக்கிரமிக்கிறாயோ அப்போது முன்னே கேட்ட அர்த்தத்துக்கும் இனிகேட்க வேண்டிய அர்த்தத்துக்கும் வைராக்கியனாகிறாய். நானாவிதமாக என்னாலே கேட்கப்பட்டு எப்படிச் செய்வேனோவென்று சந்தேகித்து உன்னுடைய புத்தி எப்போது பலவிச்சையில்லாத கர்மானுஷ்டானத்திலே நிச்சயமாயிருக்குமோ அப்போது யோகத்தையடைவாய். யோகமாவது ஆத்ம ஞானம் என்ன, அதனைக்கேட்டு அர்ச்சுனன் சொல்லுகிறான். ஸ்ரீ கேசவா! சமாதி நிஷ்டனானவன் லக்ஷணம் எப்படியிருக்கும்? ஸ்திதிப்ரஜ்யன் எந்த விதமாய்ப் பேசுவன். எப்படியிருப்பன். எதிலே சேருவன்? என்ன ஸ்ரீபகவான் சொல்லுகிறார். பார்த்தா! மனோகதங்களான சர்வகாமங்களை எப்போது பரித்தியஜித்து ஆத்ம ஞானத்தினாலே சந்தோஷித்துக் கொண்டிருப்பன். அப்போது ஸ்திதப்ரஜ்ஞன் என்று எண்பித்து (மெய்ப்பித்துக்) கொள்ளுவன். துக்கங்களுக்குப் பயப்படாமல் சுகங்களிலே இச்சையில்லாமல் சந்தோஷம் (விருப்பம்) பயம், குரோதம்விட்டு, விசாரபரனாயிருக்கிற முனீச்வரன் ஸ்திதப்ரஜ்ஞன் என்று எண்பித்துக் கொள்ளுவன், எவன் புத்திரமித்திராதிகளிடத்தில் சிநேகமில்லாமல் கர்மாநுசாரமாய் வந்த சுபா சுபங்களிலே துவேஷமும் சந்தோஷமுமில்லாதவன் ஸ்திதிப்ரஜ்ஞன். யோகீச்வரனானவன் எப்போதும் கூர்மமானது தன்னுடைய அவயவங்களை வெளிக்கு வந்தபோது ஒருவரைக் கண்டால் எப்படி உள்ளடக்கிக்கொள்ளுமோ அப்படியே இந்திரியங்களை விஷயங்களில் சேராமல் உபசங்கரிப்பன். அப்போது அவன் புத்தி ஸ்திரமாயிருக்கும். நிராகாரனான தேகிக்கு விஷயங்கள் நிவிர்த்திக்கும் ஆத்மாவையறியாமல் சகல விஷயங்களையும் அனுபவியாமல் விட்டு விட்டாலும் ஆசை விடாது. ஆத்மாநுபவமுண்டானவனுக்கு ஆசைவிட்டுப்போய் பரமானந்தமடைவன். கௌந்தேயா! ஆத்மஞானமில்லாமல் விஷயங்கள் மேலுள்ள இச்சைபோகாது. விஷய இச்சை போகாமல் மோக்ஷ யத்தனம் பண்ணினாலும் அவனுடைய மனசை இந்திரியங்கள் கெடுக்குமாகையால் அப்படிப்பட்ட இந்திரியங்கள் சர்வத்தையும் சுவசப்படுத்திக் கொண்டு ஸ்ரீ வாசுதேவனான என்னையே பரமமான வஸ்துவென்று நினைத்துக்கொண்டிருப்பன். இந்திரியங்கள் எவனுக்கு வசமோ அவனுக்குப் பிரஜ்ஞை பிரதிஷ்டதமாம். விஷயங்களைத் தியானிக்கிற புருஷனுக்கு அவற்றினிடத்தில் சங்கம் பிறக்கும். சங்கத்தினால் காமமுண்டாம்; காமத்தினால் குரோதமுண்டாம்; குரோதத்தினால் மோகமுண்டாம்; மோகத்தினால் ஸ்மிருதிவிப்பிரமாம்; ஸ்மிருதிவிப்பிரமத்தால் புத்தி நாசமாம். புத்தி நாசத்தால்

தான் நசிப்பன். வசீகர மனசுண்டான யோகீச்வரனுக்குச் சுவாசமான ராகத்வேஷவியுக்தமாயிருக்கிற இந்திரியங்கள் விஷயங்களில் சரித்தாலும் தான் வசியனாகான். அதனால் ஆத்மா பிரசாதத்தை (தெளிவும் சாந்தியும் ஆனந்தமும்) அடையும். பிரசாதத்தினால் சர்வதுக்கங்களும் நசித்து ரசியம் பிறக்கும். பிரசன்னசித்த முண்டானவனுக்கு பரமாத்மாவின்மேல் புத்தி நிலைபெறுதலையடையும். இந்திரியங்கள் சுவாதீனமில்லாத யோகிக்கு ஆத்மஞானம் வேணுமென்கிற புத்தியில்லை. புத்தி யில்லாதவனுக்குத் தியானமில்லை. தியானமில்லாதவனுக்குச் சித்தசாந்தியில்லை. சாந்தி இல்லாதவனுக்குச் சுகமேது? விஷயங்களை வேண்டிச் சரிக்கிற இந்திரியங்களின் பின்னாலே மனதைப் போகவிட்டானானால் அப்படி மனோயுக்தங்களான இந்திரியங்கள் யோகியை வாயுவசத்தினால் சமுத்திரத்தில் சுழலுகிற நாவம்போலப் பிரஜ்ஞையை அரிக்கும். ஆகையால் மகாபாகுவே! எவன் இந்திரியங்களை இந்திரியார்த்தங்களில் சேராமல் நிக்கிரஹிப்பானோ அவனுக்குப் பிரஜ்ஞை பிரதிஷ்டிதமாம். சகல பூதங்களுக்கும் எந்த ஆத்மஞானம் ராத்திரி போலக் காணாமலிருக்குமோ அப்படிப்பட்ட ஆத்மஞானத்தில் இந்திரிய நிக்கிரஹமான யோகி சாக்கிரமாயிருப்பன். தங்கள் விஷயானுபவத்தில் சாக்கிரதர்களாயிருப்பவர்கள் அப்படிப்பட்ட சமுசாரத்தில் விஷயானுபவத்தில் ஆத்மாவையறியாத யோகிக்கு ராத்திரிபோல இருட்டாயிருக்கும். ஜலத்தினாலே பூரிதமாய் அசலமாயிருக்கிற சமுத்திரத்தில் சஞ்சலமான நதிகள்போலச் சேர்ந்து எப்படிச் சலனம் பண்ணமாட்டாதோ அப்படியே யோகியானவன் சருவகாமியங்கள் பிரவேசிக்கிறதினால் சலியான். அவன் மோக்ஷத்தையடைவன். காமியங்களை வேண்டினவன் மோட்சத்தை அடையமாட்டான். எந்தப் புருஷன் சருவமான காமியங்களையும்விட்டு நிர்மமனாய் நிரகங்காரனாய் நிஸ்புருஹனாய் சரிப்பான் அவன் மோக்ஷஞான சாந்தி யடைவன். பார்த்தா! இப்போது சொன்ன அர்த்தம் பிரமநிஷ்டை என்னத் தகும், இதையடைந்து மோகத்தையடையான். அந்திம காலத்திலேயானாலும் இந்த ஞானமுண்டானால் மோக்ஷத்தை யடைவன்.

இவை ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் சாங்கிய யோக நாம இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## மூன்றாம் அத்தியாயம்

## கர்மயோகம்

இந்தப் பிரகாரம் ஸ்ரீ வாசுதேவராலே அர்ச்சுனன் ஞான யோகமும் கர்மயோகமும் கேள்வியான பின்னேயும் கேட்கிறான்! ஜெனார்த்தனா! கர்மத்தைக் காட்டிலும் ஞானமே சிரேஷ்ட மென்று உமக்குச் சம்மதமாயிற்று. ஆனால் அந்தக் கோரமான கர்மத்தில் என்னை எதுக்கு நியமிக்கிறாய்? ஸ்ரீ கேசவா! கர்மஞான மிசிரங்களான வாக்கியங்களினால் என் புத்தியை மோகிக்கப் பண்ணுகிறாப் போலே தோன்றுகிறது. ஆகையினால் கர்மஞானத்திலே எதேது ஆசரித்தால் எனக்குச் சிரேயஸ் உண்டாகும். அந்த உபாயம் நிச்சயித்துச் சொல்லவேணும் என்ன, ஸ்ரீ பகவான் சொல்லுகிறார். அனக! இந்த லோகத்திலே சாங்கியர்களுக்கு ஞானயோகமும் கர்மயோகிகளுக்குக் கர்ம யோகமும் நிஷ்டை இரண்டுவிதமாய் பூர்வ அத்தியாயத்தி லேயே என்னாலே சொல்லப்பட்டது. புருஷன் கர்மங்களை ஆசரித்தமாத்திரத்திலே ஞானமடையான். சந்நியசித்த மாத்திரத்தில் மோக்ஷ சித்தியடைகிறதுமில்லை. ஒருத்த னானாலும் கர்மஞ்செய்யாமலிருக்கப் போகிறதுமில்லை. பிரக்ருதி ஜன்னியமான குணங்களினாலே வசனாய்க் கர்மங்களைச் செய்வன் அவன். வாக்கு, பாணி, பாத, பாயு குய்யங்களான் கர்மேந்திரியங்களைக் கிரஹித்து மனதிலே விஷயங்களை நினைப்பன். அந்த மூடாத்மா மித்யாசாரன் என்னப்படுவன். ச்ரோத்ருத்வ கச்ச சக்ஷுர்சிம்மாக் கிராணங்களான ஞானேந் திரியங்களை மனதிலே நிக்கிரஹித்துப் பலாசத்திரஹிதனாய் கர்மேந்திரியங்களினாலே கர்மங்களை ஆசரிக்கிறவன் விசேஷ்யன். நியதமாய்க் கர்மத்தைச் செய்; கர்மஞ் செய்யாமலிருக்கிறதைப் பார்க்கிலும் கர்மத்துடனே கூடின ஞானம் நல்லது. கர்மத்தை ஆசரியாத உனக்குச் சரீரத்துக்கு நடக்க வேண்டிய கர்மத்தை விட்டுவிடவேண்டும். அர்ச்சுனா! கர்மம் பண்ணினாய் பந்தமேனென்றால், விஷ்ணு ஆராதனார்த்தமாகப் பண்ணுகிற கர்மம் உத்தமம். இதர கர்மங்களோ பந்தங்கள். ஆகையால் ஸ்ரீ விஷ்ணு ஆராதன ரூபமான கர்மத்தைப் பலாபேக்ஷையில்லாமல் செய். பூர்வத்தில் பிரஜாபதி யக்ஞங் களோடே கூட பிரஜைகளைச் சிருஷ்டித்துச் சொன்னார். இந்த யக்ஞங்களினாலே தேவதைகளை ஆராதியுங்கோள். அந்தத் தேவதைகள் உங்களை விருத்தியடையப்பண்ணுவார்கள். அந்தத் தேவதைகளும் நீங்களும் பரஸ்பரம் விருத்தியடையப் பண்ணிக்

கொண்டு பரமமான சிரேயஸ் அடைகிறீர்கள். யக்ஞங்களினால் பூஜிதர்களான தேவதைகள் உங்களுக்கு இஷ்டமான போகங் களைக் கொடுப்பார்கள் அந்தத் தேவதைகள் கொடுத்த பதார்த்தங்களை யக்ஞரூபத்தினால் திரும்ப அவர்களுக்கு ஈயாமல் தானே புசிக்கிறவன் திருடன்: பஞ்சமஹாயக்ஞங்கள் பண்ணி மிஞ்சின சேஷத்தைப் புசித்த சத்துக்கள் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவார்கள்: ஆனால், யாராகிலும் தனக்கென்று யாகம் பண்ணிப் புசித்தானாயின், அவன் பாவியாவன்; அவன் பாபத்தைப் புசிக்கிறவன் ஆவான்.

அன்னத்தினாலே பூதங்களுண்டாகும். மழையினாலே அன்னம் சம்பவிக்கும் யக்ஞத்தினாலே இந்த்ரப்பிரசாதமாய் வர்ஷம் (மழை) உண்டாகும். யக்ஞத்தினாலுண்டானது கர்மம். கர்மம் வேதத்திலுண்டானது. வேதம் பிரமத்தினால் உண்டானது. ஆனதால், ஸர்வகதமான பிரமம் நித்தியம். யக்ஞத்தினாலே பிரதிஷ்டிதமாயிருக்கும். இப்படிப்பட்ட பரமபுருஷனாலே நடத்து விக்கப்பட்ட கர்ம சக்கரத்தில் எவன் அனுவர்த்தியானோ அவன் பாபஆயுள் உண்டானவனாய் இந்திரியாரம்மியனாய் வியர்த்தமாய் சீவிக்கிறவன். எந்த மானவன் ஆன்மாவிலே தானே பிரீதியுள்ளவ னாய் ஆன்மாவில் திருப்தனாய் ஆத்மாவில்தானே சந்துஷ்டனா யிருக்கிறவனுக்கு இதைப்பார்க்க விசேஷித்துச் செய்யவேண்டிய கர்மமொன்றும் இல்லை. அந்த ஆத்மஞானிக்குக் கர்மஞ் செய்கிறதனாலேயும், செய்யாததனாலேயும் பிரயோசன பிரத்தியாயங்களில்லை. ஞானிக்குச் சகல பூதங்களிலேயும் ஆசரிக்கத்தக்கவனொருவனுமில்லை. ஆகையால் பலசங்கர ஹிதனாய் சந்ததமும் செய்யத்தக்க கர்மங்களை ஆசரி. புருஷனானவன் அசங்கனாய் கர்மங்களாசரித்து மோக்ஷத்தை யடைவன். சனகாதிகள் கர்மத்தினாலேதானே ஞானசித்தி யடைந்தார்கள். நீ யோகஸங்க்ஹரனார்த்தமாகவானாகிலும் கர்மஞ்செய்ய அருகன்; சிரேஷ்டனானவன். எந்தக் கர்மம் ஆசரிப்பானோ இதர ஜெனங்களும் அதனையே ஆசரிப்பார்கள். சிரேஷ்டனானவன் எதைப் பிரமாணஞ்செய்வனோ லோகமும் அதனையே அனுவர்த்திக்கும். பாரதா! மூன்று லோகத்திலேயும் எனக்குக் கர்த்தவ்யமானதொன்றுமில்லை. பூர்வத்தில் என்னாலே பிராப்த மாகாததும், இனிமேல் பிரபதமாகிறதும் இல்லை. அப்படி யிருந்தும், கர்மத்தில் பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறேன். பார்த்தா! நான் கர்மத்திலே சாவதானனாய் ஆசரியாமற் போனால் எல்லா மனுஷ்யரும் என் மாற்றத்தை அனுவர்த்திப் பார்கள். ஆகையால் நான் கர்மத்தைப் பண்ணாதிருந்தால் சகல ஜனங்களும் கர்மம் பண்ணாமல் வர்ணசங்கரமாய் நாச

மடைவார்கள். அப்படிப்பட்ட சங்கரத்துக்கும் பிரஜைகளைக் கெடுக்கிறதற்கும் நானே காரணமாவன். பார்த்தா! அவித்வாம்சர்கள் (அறிவில்லாதவர்கள்) எவ்விதமாய் பலங்கள்கோரி சக்தர்களாய் (பற்றுள்ளவர்களாய்) கர்மங்கள் செய்வார்களோ அவ்விதமாய் வித்வாம்ஸிகள் பலாபேக்ஷாதீதர்களாய் ஆர்த்திரஹிதராய் லோகஸங்கிரஹார்த்தமாய் கர்மம் ஆசரிக்கவேணும். அஞ்ஞானிகளாய்க் கர்மஸங்கினர்களான பேரை ஞானியானவன் இவர்களை யுத்தேசித்து பலாபேக்ஷையில்லாமல் கர்மம் ஆசரிக்கச் சொல்லிப் புத்திபேதம் பண்ணலாகாது. வித்வாம்ஸிகள் சர்வகர்மங்களேயும் நிஷ்காமனாய் ஆசரித்து அவர்களையும் கர்மம் ஆசரிப்பிக்கவேணும். பிரகிருதி குணங்களாலே செய்யப்பட்ட சர்வ கர்மங்களையும் அகங்காரத்தினாலே மூடாத்மாவானவன் தான் கர்த்தா என்று எண்ணுவன். குணகர்மவிபாகத்தை அறிந்த தத்துவவித்து இந்திரியங்களே விஷயங்களில் பிரவர்த்திக்கிறதென்று நிச்சயித்துத் தான் கர்த்தனல்லனென்று எண்ணுவன். பிரகிருதி குணங்களாலே மூடனானவர்கள் அந்தக் குணகர்மத்திலே ஆசக்தாளாவார்கள் (பற்றுள்ளவர்களாவார்கள்). மந்த புத்திகளாய் ஒன்றும் அறியாத அஞ்ஞானிகள் என்றும் அஞ்ஞானிகளே யென்று அறிவினர்கள் அவர்கள் புத்திசஞ்சல்யத்தை யடையும்படி பண்ணத்தகாது. சர்வகர்மங்களையும் என்னிடத்தில் சமர்ப்பித்த ஞானவனாய் ஆசையின்றி மமத்துவத்தைப் பரிகரித்து நிர்மலனாய்த் தாபங்களைவிட்டு யுத்தத்தைச்செய். எந்த மானவர்கள் சிரத்தாளுமாய் அசூயாரஹிதர்களுமாய் என்னாலே சொல்லப்பட்ட இந்த மதத்தை அநுஷ்டிப்பார்களோ அவர்கள் கர்மங்களினின்றும் விடுபடுவார்கள். எவர்கள் என் மதத்தை அசூயையினாலே நுண்ணியமான ஆத்மஞானமறிந்தவனானாலும் அனுஷ்டியார்களோ அவர்கள் சர்வஞானஹீனாளாய் விவேகமில்லாமல் நாசமடையும் பேர்களாய் அறி. பிரகிருதிக்கு அன்னியமான ஆத்மஞானம் அறிந்தவனானாலும் பூர்வஜன்ம கர்மானுகுணமாய் தன் பிரகிருதிக்குத் தக்கதாகவே சேஷ்டித்துக்கொண்டு இருப்பன். ஆகையால் சகல பிராணிகளும் பிரகிருதியே அநுவர்த்திப்பார்கள். இந்திரிய நிக்கிரகம் என்ன செய்யவல்லது? பஞ்சேந்திரியங்களுக்கு அந்தந்த விஷயங்கள் கிடைத்தபோது சந்தோஷமும், கிடையாதபோது துவேஷமுமாய் ராகத்வேஷமுண்டாயிருக்கும். அந்த ராகத்வேஷங்களுக்கு வசமடையத்தகாது. மோக்ஷ இச்சை உண்டான பேருக்கு ராகத்வேஷங்கள் சத்துரு. சாகலியமாய் ஆசரிக்கப்பட்ட பரதர்மத்தைப் பார்க்கிலும், குணமில்லாததானாலும் சுவதர்மமே நல்லது. சுவதர்மத்தால் மரணம் சிரேஷ்டம்;

பர்தர்மம் பரலோகத்தில் பயமுண்டாக்கும் என்ன' அர்ச்சுனன் புருஷோத்தமரைப் பார்த்து, புருஷன் ஆசரிக்கிற தற்கு இச்சையில்லாதவனானாலும் பலாத்காரத்தினால் ஏவப் பட்டவனைப் போலே எவனாலே பிரேரிதனாய் பாபத்தை ஆசரிக்கிறான் என்ன, ஸ்ரீவாசுதேவர் சொல்லுகிறார்! புருஷனாலே பாபங்கள் செய்விக்கப்பட்டவனாரென்றால் காமன் (காமம்) காமன் நினைத்த அர்த்தம் லபிக்காமற்போனால் குரோத ரூபத்தில் பரிணமிக்கும். இந்த இச்சை ரஜோ குணத்தில் பிறந்தது. மகாசனன், மஹாபாத்துமன்; மோக்ஷமார்க்கத்திற்குச் சத்துரு வென்றறி. புகையினால் அக்னியும் அழுக்கினால் கண்ணாடியும் எவ்விதம் மூடப்பட்டதோ அவ்விதத்தில் காமமென்கிற இச்சை களாலே ஞானம் ஆவ்ருதமாகும் (மறைக்கப்பட்டிருக்கும்) அர்ச்சுனா! காமரூபங்களால் திருப்தி பிறப்பிக்கவியலாது; அக்னி சமானனான ஞானத்துக்கு அவை நித்திய சத்துருவாகும். இச்சைகளுக்கு அனுகுணமான காம ரூபங்களால் ஞானம் மூடப்பட்டிருக்கும். காமத்துக்கு இந்திரியம் மனோபுத்தி இருப்பிடம். காமம் அந்த இந்திரிய மனோபுத்திகளாலே ஞானத்தை மறைவு படுத்தித் தேகியை மோகம் செய்விக்கும். பரதர்ஷப! ஆகையால், நீ முன்னே இந்திரியங்களை நிக்கிரஹித்து, ஞான விஞ்ஞானத்தை நாசமடையப்பண்ணப் பட்ட இந்தக் காமத்தை ஜயம்பண்ணு. தேகத்திலும் இந்திரியங் கள் பரம்: இந்திரியங்களிலும் மனம் பரம்; மனத்திலும் புத்திபரம்: புத்தியிலும் ஆத்மா அதிகன். அர்ச்சுனா! இவ்விதமாய் ஆத்மாவைப் புத்தியிலும் பரனானவனாக அறிந்து புத்தியாலே மனதை நிறுத்தி துராஸதமாய் காம ரூபமுமாய் உள்ள சத்துருவை நிக்கிரஹி.

இவை ஸ்ரீமகாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தில் பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீகிருணார்ச்சுன சம்வாதத்தில் கர்மோயகம் என்ற மூன்றாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

கிருஷ்ண சகாயம்

## நான்காவது - ஞானயோக அத்தியாயம்
## (ஞான கர்ம ஸந்ந்யாஸ யோகம் எனவும்படும்)

கிருஷ்ணன் வாக்கியம் - அவ்வியக்தமான இந்த யோகம் நான் பூர்வம் விவஸ்வானுக்கு உபதேசித்தேன். விவஸ்வான்தான் மனுவுக்குச் சொன்னார். மனு இக்ஷ்வாகுக்குச் சொன்னார்.

பரந்தப! இப்படி பரம பிராப்தமான இதை ராஜரிஷிகள் அறிவார்கள். அந்த யோகம் வெகுகாலமானதால் இந்த லோகத்தில் விச்சின்னமாயிற்று. என்னிடத்திலே பக்தனும் சகாவுமானதால் புராதனமான இந்த யோகம் உனக்குச் சொன்னேன். இது உத்தமமும் அதிரகசியமாயுமிருக்கும் என்ன, அர்ச்சுனன் கேட்கிறான். நீர் இப்போது ஜனித்தவர்: விவஸ்வான் பூர்வத்தில் ஜனித்தவர். பூர்வத்தில் அவருக்கு எவ் விதத்தில் சொன்னீர். ஆகையால் எனக்குச் சம்சயமாய்த் தோன்றுகிறது என்ன, கிருஷ்ண வாக்கியம்:- அர்ச்சுனா! எனக்கும் உனக்கும் வெகுஜன்மங்கள் அதிக்கிரமித்துள்ளது. நான் சர்வக்ஞனானபடியினாலே அந்த ஜென்மங்களெல்லாம் அறிவன்: அவித்தியாசஹிதனான படியினாலே நீ அந்த ஜன்மங்களை அறியமாட்டாய். ஜனனமில்லாதவனுமாய் நாசரஹிதனுமாய் பூதங்களுக்கு ஈசுவரனுமாய் உள்ள நான் சுத்த சத்துவரூபமான என்னுடைய பிரகிருதியை அனுஷ்டித்துப் பிரியாமலிருக்கிற ஞானபலவீரியங்கள் உள்ள என் சக்தியை அவலம்பித்துச் சம்பவிப்பன். எப்போது தர்மத்துக்கு ஹானி உண்டாய் அதர்மத்துக்கு விருத்தியுண்டாகிறதோ அப்போது நான் அவதரிப்பன். சாதுக்களை ரட்சிக்கும் பொருட்டும் துஷ்கிருதர்களை நாசம் செய்யும் பொருட்டும் தர்மஸம்ஸ்தாபனார்த்தமுமாய் யுகயுகத்துக்குச் சம்பவிப்பேன். அர்ச்சுனா! திவ்வியமான என் ஜன்மங்களும் லோகரக்ஷணார்த்தமாய் நான் செய்கிற கர்மங்களும் யதார்த்தமாய் அறிந்தவன். இந்த ஜன்மம் பரித்யஜித்து என்னையடையவன். வீதராக பயக்குரோதங்களை விட்டு மனதை என்னிடத்தில் நிறுத்தி என்னை உபாசித்தவர்கள் ஞானபசுகளினால் சுத்தர்களாய்ப் பலபேர் என் சாயுச்சியத்தையடைந்தார்கள். யாரார் எந்தப்பலனை அபேக்ஷித்து என்னைப் பிரபத்தி பண்ணுகிறார்களோ அவர்களை நான் அப்படியே பஜியா நிற்பன் (அனுக்கிரஹிக்கிறேன்) அவர்களுக்கு அந்தந்த பலங்களையும் கொடுப்பன். அர்ச்சுனா! இந்திராதிகளை பஜிக்கிற பேர்களுக்கு இந்திராதி ரூபத்திலே அந்தந்த கோரிக்கையைக் கிருபை பண்ணுவேன். மனுஷ்ய லோகத்திலே கர்மபலத்தைக் காண்பித்து இந்திராதிகளைப் பூஜிப்பர்கள். இந்த ஜகத்திலே காமிய கர்மங்களாலே ஆனபலன் சீக்கிரமாய் சித்தியாகும். பிரம க்ஷத்ரிய வைசிய சூத்ரர்களும் அவரவர்கள் வர்ணத்துக்குத் தக்க குணகர்மங்களும் நான் சிருஷ்டித்தேன். அந்தச் சாதுர்வர்ணங்களுக்கும் கர்த்தனான என்னை அகர்த்தாவாய் அவ்வியனாக அறி. கர்மபலத்தில் இச்சையில்லாதவனானதால் என்னைக் கர்மங்கள் அண்டுவதில்லை. இப்படி என்னை எவன் அறிவனோ அவன் கர்மங்

களினால் கட்டுப்படுகிறதில்லை. இப்படியறிந்து பூர்வத்திலுண்டான முமுக்ஷுக்கள் கர்மம் செய்தார்கள். ஆகையால் நீயும் பூர்வகதமான மானவர்கள் செய்த கர்மத்தையே ஆசரி. கர்மம் எது, அகர்மம் எது என்று இந்த அர்த்தத்தில் வித்துவாஸிகரானாலும் மோகத்தையடைவார்கள். எந்தக் கர்மத்தை யறிந்தால் அசுத்தமான சமுசாரத்தினின்றும் விமுக்தனாகிறாயோ அந்தக் கர்மத்தைச் சொல்லுகிறேன். விகிதமான கர்மத்துக்கும் கர்மம் பண்ணாதிருக்கிறதற்கும் கர்மம் ஆகாதென்று அறியத்தக்க அர்த்தமுண்டு. கர்மம் சூட்சுமமாயும் ஆகாசமாயும் இருக்கும். தேகேந்திரிய ஸ்ரீ வியாபார ரூபமான கர்மத்தை ஆத்மாவுக்கு இல்லையென்று எவன் பார்க்கிறானோ ஆத்மகருமங்களை செய்யாதிருந்து தேகேந்திரியங்களே பிரவர்த்திக்கிறதென்று எவன் பார்க்கிறானோ அவன் மனிதர்களில் புத்திமான். அவனே யோகி, அவனே சகலகர்மங்களும் ஆசரித்தவன். எவனுக்குச் சமஸ்த கர்மங்களும் காமஸங்கல்ப வர்ஜிதமாயிருக்குமோ அந்தக் கர்மங்கள் ஞானாக்கினியினாலே தக்தமாய் அவனே! பண்டிதன் என்று வித்வாம்ஸிகள் சொல்லுவார்கள். கர்மபல சங்கத்தைத்தியஜித்து நித்ய திருப்தனாய் நிராச்ரயனாய் கர்மங்களில் பிரவர்த்தித்தாலும் அவன் கொஞ்ச கர்மமுஞ் செய்தவனேயல்ல, ஆசையில்லாதவனும் யதசித்தாத்மாவும் சர்வசங்கிரக பரித்தியாகியும் ஆனவன் கேவலம் சரீர பந்தமான கர்மம் பண்ணினாலும் பாபத்தையடையான். துவந்தாஹிதனாய் தனக்குத்தானே வந்த பதார்த்தத்திலே சந்தோஷித்துக் கொண்டு கர்மங்கள் பண்ணுகிறபோது சீதோஷ்ணாதி துவந்தங்களை ஜயித்து மத்ஸரம் (பொறாமை) இல்லாதவனாய் கர்மபலன் சித்தித்தபோதும் சித்தியாதபோதும் சமனாய் கர்மம் பண்ணினால் கர்மத்திலே கட்டுப்படான். பல சங்கம் விட்டவனுக்கு ராகத்வேஷ விமுக்தனும் ஞானசம்பன்னனானவனுக்கு, பரமேச்வர ஆராதனார்த்தமாய் ஆசரிக்கிற கர்மங்கள் பலாபேக்ஷையில்லாமலிருக்கும். சுருகதசுவங்களும் சுவகதஸ்வங்களும் யஜ்ஞசாதனமும் பிரமமே; அவிசு பிரமமே; அக்னியும் பிரமமே; ஆகுதி கொடுக்கிறதும் பிரமமே; பிரமமே எல்லாமென்று கர்ம சொரூபமான பிரமத்தினிடத்தில் சித்தம் நிறுத்தினவன் பிரமத்தை அடைவான். கர்மயோகிகள் சிலர் இந்திராதிதேவதா பிரதிகரமான யக்ஞம் பண்ணுவார்கள். பின்னையும் சில ஞானிகள் பிரமமான அக்னியிலே ஓமஞ் செய்வார்கள். சிலபேர் சப்தாதி விஷயங்களை இந்திரியமாகிற அக்னியில் ஓமம்பண்ணுவார்கள். சிலபேர் சமஸ்த இந்திரிய கர்மங்களையும் பிராணகர்மங்களையும் ஞானதீபமான ஆத்ம நிக்ரஹமென்கிற யோகாக்னியிலே ஓமம் பண்ணுவார்கள். சிலபேர் பிரயத்தனவந்தர்களாய் சமவித்விரதர்களாயிருப்பர்.

சிலபேர் திரவியதானமே எக்ஞமாகச் செய்வர்; சிலபேர் தவமே எக்ஞமாகச் செய்வர்; சிலபேர் யோகமே எக்ஞமாகவும், வேதபடனமே எக்ஞமாகவும் பின்னையும் சிலபேர் வேதாந்த ஞானமே எக்ஞமாகவும் சிலபேர் பிராணாயாம பராயணாளாய் கும்பகத்திலே பிராணாபானங்களுடைய உள்புறகதியை நிரோதித்து (தடுத்து) அதே விருத்தியான அபானத்திலே ஊர்த்வ பிரவர்த்தமான பிராணனைப் பூரககும்பகத்தாலே ஓமஞ் செய்வார்கள். சிலபேர் ரேசகத்தாலே பிராணனிலே அபானத்தை ஓமம் பண்ணுவார்கள். சிலபேர் மித ஆகாரமாய் பிராண வாயுவை நிரோதித்து அதிலே இந்திரியங்களை ஓமஞ் செய்வார்கள். இவர்களெல்லாரும் எக்ஞவித்துக்களாய் எக்ஞங்களினாலே பாபங்களை நாசம் பண்ணுவிப்பார்கள். குருஸத்தம்! எக்ஞசேஷாம்ருதத்தைப் புசிக்கிற பேர்கள் சனாதனமான பிரமத்தையடைவார்கள். எக்ஞம் செய்யாதவனுக்கு இந்த லோகத்திலேதானே சுகம் துர்லபமென்றால், பரலோகத்தில் சவுக்கியமில்லையென்னச் சம்சயமில்லை, இவ்விதத்தில் வெகுவிதமான எக்ஞங்கள் வேதத்தால் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அந்த எக்ஞங்கள் மனோவாக்காய கர்மங்களாலே ஜனித்தவையேயல்லாமல் அந்த ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை என்று அறிந்தாயானால் முக்தனாவாய். அர்ச்சுனா! கர்ம எக்ஞத்திலும் ஞான எக்ஞமே சிறந்தது. சர்வ கர்மங்களும் அனுஷ்டிதமாய்க் கொண்டு ஞானத்திலே பிரதிஷ்டிதமாயிருக்கும். அப்படிப்பட்ட ஞானம் அறியவேணுமென்றால், சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி சிசுருஷை பண்ணிக்கொண்டு கேட்டியேயானால் தத்துவதரிசிகளான ஞானிகள் அந்த ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள். இதனையறிந்து இவ்விதத்தில் திரும்பவும் மோகத்தை அடையாய் பாண்டவா! அந்த ஞானத்தால் இந்தச் சர்வபூதங்களையும் அசேஷமாக பரமாத்மாவான என்னிடத்திலே தானே பார்க்கிறாய். மகாபாதகங்கள் செய்தவர்களிலும் நீ அதிக பாபங்களைச் செய்தவனானாலும் அப்படிப்பட்ட பாபரூபமான சமுத்திரத்தை ஞானமென்கிற தெப்பத்தினாலே எளிதாய்க் கடக்கிறாய். அர்ச்சுனா! ஜொலிக்கிற அக்னியானது சமித்துக்களை எப்படிப் பஸ்மம் பண்ணுமோ அவ்விதம் ஞானாக்கினியானது சர்வ கர்மங்களையும் பஸ்மவத்தாகப் பண்ணும். ஞானத்துக்குச் சமானமான பவித்திரமாயிருப்பதொன்றுமில்லை. அப்படிப்பட்ட ஞானம் வெகுகாலம் கர்மயோகம் ஆசரிக்கிறதினாலே சித்திக்கும். சிரத்தாவானும் ஸம்யதேந்திரியனும் ததேகநிஷ்டனானவனும் ஞானவானாய் சீக்கிரத்தில் மோக்ஷமடைவான். ஆனாலும்

(கொஞ்சம்கூட) சிரத்தையில்லாதவனும் ஸம்சயாத்மகனும் நாசத்தையடைவார்கள். சம்சயாத்மகனுக்கு இந்த லோகத்திலும் பரலோகத்திலும் சுகமில்லை. விஷ்ணுவாராதன ரூபமான யோகத்தால் அவரிடத்திலே சமர்ப்பிக்கப்பட்டுக் கர்மங்கள் ஒழிந்தவனும் ஞானத்தினாலே விச்சின்னமான சம்சயனும், ஆத்மவந்தனும் ஆகியவர்களைக் கர்மங்கள் பாதிக்கமாட்டா. பாரத! ஆனதால், அஞ்ஞானசம்பவமும் ஹ்ருதயஸ்தமுமான இந்த சம்சயத்தை ஞானமென்கிற கட்கத்தினாலே கண்டித்துக் கர்மயோகத்தை ஆசரித்து யுத்தத்துக்கு எழுந்திரு.

ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் ஞானயோகம் (ஞானகர்ம ஸந்ந்யாஸ யோகம்) என்கிற நாலாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## ஐந்தாவது அத்தியாயம்

## கர்மசந்நியாச யோகம்

அர்ச்சுனன் வாக்கியம்: ஸ்ரீ கிருஷ்ணா! கர்மங்களைச் சந்நியசிக்கச் சொல்லியும் ஆசரிக்கச் சொல்லியும் சொன்னீர். இந்த இரண்டிலேயும் எது சிரேஷ்டமோ அதை நிச்சிதார்த்தமானது என்று அறிவியும் என்ன, ஸ்ரீவாசுதேவர் சொல்லுகிறார் : சந்நியாசமும் கர்மயோகமும் இந்த இரண்டும் மோக்ஷ சாதனமானாலும் கர்ம சந்நியாசத்திலும் கர்மயோகம் விசேஷம். சாதுக்களிடத்தில் துவேஷமில்லாதவன். சுகத்தில் பிரியமில்லாதவன் நித்திய சந்நியாசியென்று அறியத்தக்கது. சீதோஷ்ண துவந்த துக்க ரஹிதன் சம்சாரபந்தத்தினின்றும் சுகமாய் விடுபடுவன். அஞ்ஞானபேர்கள் சாங்கியமும் யோகமும் வெவ்வேறென்று சொல்லுவார்கள். பண்டிதர்கள் அப்படிச் சொல்லார்கள். இந்த இரண்டில் ஒன்று அனுஷ்டித்தாலும் கைவல்யம் அடைவன். ஞானநிஷ்டரான சாங்கியர்கள் எந்த ஸ்தானத்தையடைவார்களோ அந்த ஸ்தானம் கர்மயோகிகள் அடைவார்கள். சாங்கியம் யோகம் இரண்டிலும் பலன் ஒன்றே என்று எவன் பார்ப்பனோ அவன் ஆத்துமஞானியாவன். அர்ச்சுனா! கர்மயோகமில்லாமல் சந்நியாசமாகிறது பிரயாசமாயிருக்கும். யோகயுக்தனான முனீசுவரன் சீக்கிரத்தில்

மோக்ஷத்தையடைவன். யோகயுக்தனாய் சித்தசுத்தனாய் தேக நிக்ரஹமுடையவனாய் ஜிதேந்த்ரியனாய் சர்வபூதாத்மாவையும் தன் ஆத்துமாவாய் எண்ணுகிறவன் கர்மங்களைச் செய்தாலும் பந்தனாகான். தத்துவஞான யோகி நேத்திரேந்திரியங்களாலே பார்த்தாலும் சிரவணேந்திரியத்தாலே கேட்டாலும், துவகீந்திரியத்தாலே பரிசித்தாலும், நாவினாலே ரசங்களைப் புசித்தாலும், பாதத்தால் நடந்தாலும், மனோலீனகத்தில் நித்திரை போனாலும் பிராணவாயுவாலே மூச்சுவிட்டாலும், வாக்கினாலே பேசினாலும் பாயுகுய்யங்களால் மூத்திர புருஷோதசரசம் விட்டாலும் க்ஷுளும மென்னும் வாயுபேதத்தில் கண்களை மூடினாலும் திறந்தாலும், இந்திரியங்கள் விஷயங்களில் பிரவர்த்திக்குதேயல்லாமல் தான் செய்கிறவனல்லவென்று எண்ணி, தான் ஆசரித்த கருமங்கள் பரமேச்வரார்ப்பணம் பண்ணி பலாசக்தரஹிதனாய்க் கர்மங்கள் செய்வானோ அவன் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாதது போலக் கர்மபலத்தில் ஒட்டாமலிருப்பன். காயத்தால் மனதால் புத்தியால் கேவலம் இந்திரியங்களாலும் யோகிகள் சங்கத்தைத் தியஜித்து ஆத்மசுத்தியின் பொருட்டுக் கர்மஞ் செய்வார்கள். நைஷ்டர்களான யோகிகள் கர்மபலத்தைத் தியஜித்து மோட்சத்தையடைவர். அஞ்ஞானன் கர்மபலசக்தனாய்ப் பத்தனாவன் (கட்டுபட்டவனாவன்). வசீகர சித்தனான யோகி சர்வகர்மங்களையும் மனதால் சந்நியசித்து நவத்துவாரசகிதமான தேகமென்கிற புரத்தில் தான் ஒரு கர்மமும் பண்ணினவனல்ல பண்ணிவைத்தவனும் அல்லவென்று சுகமாக வசிப்பன். பிரபுவான ஈசுவரன் ஜீவர்களுக்குக் கர்த்ருத்வமும் கர்மங்களும் கர்மபல ஸம்யோகமும் சிருஷ்டிக்கவில்லை. எந்த விதத்திலுண்டானதென்றால் பிராணிகளுக்குச் சுபாவத்தினாலே அநாதியான வித்யாகர்மமே பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறது. விபுவான பரமேசுவரன் ஒருத்தருக்கும் புண்ணிய பாபங்கள் கொடுக்கிறதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் ஆவ்ருதமாயிருக்கிறதினாலே ஜந்துக்கள் மோகிப்பார்கள். அந்த அஞ்ஞானாந்தகாரமானது எவர்களுக்கும் ஞானத்தினால் நசிக்கும். அவர்களுக்கு ஆதித்தியனைப்போல ஞானம் பரமாத்மா பிரகாசமாயிருக்கும். அப்படிப் பட்டபரமாத்மாவினிடத்தில் புத்தியும் மனமும் நிஷ்டையும் உண்டானவர்களாய் நிரதிசய பத்தியுண்டானவர் ஞானத்தினால் பாவங்களெல்லாம் போக்கடித்தவராய் புனராவிருதரஹிதமான கைவல்யம் அடைவார்கள். பண்டிதர்களான பேர்கள் வித்யாவிநய சம்பன்னாளான பிராமணர்களிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் நாயைத்தின்னுகிற புலையனிடத்திலேயும்

ஆத்மசமானமாய் தரிசிப்பார்கள். எவன் மனது சமத்துவத்தில் ஸ்திரமாயிருக்குமோ அவனாலே இவ்விடத்திலே தானே இந்தச் சிருஷ்டி செய்விக்கப்பட்டது. பிரம்மசமமும் நிர்த்தோஷமென்று அறிந்தபோது பிரமபாவம் அடைவார்கள். பிரம்மவித்தாய் பிரம்ம பாவத்தையடைந்தவர்கள் பிரியம் வந்தால் சந்தோஷத்தை அடையாமல் அப்பிரியம் வந்தால். விசாரத்தையடையாமல் ஸ்திரபுத்தியாய் மோகரஹிதனாயிருப்பன். பாஹ்ய விஷயங்களில் அஸக்த சித்தனாய் மனந்தெளிந்து ஆத்மசுகம் எவன் அடைவனோ அவன் ஸம்ஸித்த சித்தனாய்ப் பரமசுகத்தை யடைவன். அர்ச்சுனா! விஷயங்களினால் பிறந்த போகங்கள் துக்கங்களுக்கு ஏதுவானவை. அந்தப் போகங்களுக்கு ஆதியும் அந்தமும் உண்டாயிருக்கும். புத்திமான் அந்தப் போகங்களிடத் தில் ரமிக்கிறதில்லை. எவன் சரீர அவசான பரியந்தம் இகத்திலே காமக்குரோதத்தால் பிறந்த வேகத்தைச் சகிக்கிறதற்குச் சக்தனாவனோ அவனே யோகியும் சுகியுமாவன். எவன் ஆத்மானுபவத்தாலே சுகமுண்டானவனாய் ஆத்மாராமனாய் ஆத்ம ஞானதேஜஸ் உண்டானவனாயிருப்பனோ அந்த யோகி பிரம்மசாம்யம் அடைந்து பிரம்மத்திலேயே லயமாவான். கல்மிஷம் போனவர்களும் சின்ன சம்ஸயர்களும் சந்தேகம் தவிர்ந்தவர்களும் ஜிதேந்த்ரியாளும் சர்வபூதஹிதர்களுமான பேர்கள் பிரமநிர்வாணத்தை அடைவார்கள். காமகுரோத விமுக்தர்களும், நியதசித்தமுடையவர்களும் விதிதாத்மரான யதீச்வரர்களும் ஆகியுவர்களுக்கு இகத்திலேயும் பரத்திலேயும் பிரம்மானந்தம் உண்டாயிருக்கும். பாஹ்யங்களான விஷயங் களை வெளிப்பண்ணி யோகாசனத்திலிருந்து புருவமத்தி யிலே திருஷ்டியை வைத்து நாஸிகாப்யந்தரத்தில் சரிக்கிற பிராண அபானங்களைக் கும்பகத்தில் சமம் பண்ணி நியதமான இந்திரியமனம் புத்தி உண்டானவனாய் இச்சை பயகுரோதரஹி தனாய் மோட்சபராயணனான முனீச்வரன் சதா முக்தனென்று எண்ணப்படும். தபோஎக்ஞங்களுக்குப் போக்தாவாய் சர்வலோக மஹேச்வரனாய் சர்வ பூதங்களுக்கும் சுகிர்தும் அந்தர்யாமியுமான என்னை அறிந்த பேருக்கு மோக்ஷமுண்டாம்.

இவை ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணார்ச் சுன சம்வாதத்தில் சந்நியாச யோகம் என்ற ஐந்தாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீகிருஷ்ணாய நம:

## ஆறாவது - அப்யாசயோக அத்தியாயம் (என்பது)

பின்னேயும் ஸ்ரீ ஜனார்த்தனசுவாமி சொல்லுகிறார்: எவன் கர்மபலத்தை இச்சியாமல் கர்மஞ்செய்வனோ அவனே சந்நியாசியும் யோகியும் என்று சொல்லப்படும் அக்னிஹோத்ர ரஹிதனும், கிரியாவிஹீனனும் சந்நியாசியாக எண்ணப்படாது. அர்ச்சுனா! எது சந்நியாசமென்று சொல்லுவார்களோ அதை யோகம் என்று அறி. பல சங்கல்பம் விடாதவன் ஒருவனும் யோகியாகமாட்டான். யோகத்தை அபிலாஷிக்கிறவனுக்கு யோகம் காரணமாகச் சொல்லப்பட்டது. யோகம் சித்தித்தவனுக்கு மனோநிக்கிரகங் காரணமெனப்படும். புருஷனானவன் விஷயங்களிலும் கர்மங்களிலும் அகப்படாமல் சர்வசங்கல்பம் எப்போது வர்ஜிக்கிறானோ அப்போது யோகாரூடன் எனச் சொல்லப்படுவன். ஆத்மாவை உத்தரித்துக் கொள்ளவேணும். சம்ஸாரவியாபாரம் என்கிற ஆபாசத்தாலே தன்னைத்தானே நாசப்படுத்திக் கொள்ளத் தகாது. தன் ஆத்மாவுக்குத் தன் ஆத்மாவே பந்து; தன் ஆத்மாவுக்குத் தன் ஆத்மாவே சத்துரு. எந்த ஆத்மா தன் தேஹேந்திரியங்களை ஜயிப்பனோ அவன் தனக்குத் தான் தானே பந்து: தேஹேந்திரியங்களைச் ஜயிக்கமாட்டாதவன் தனக்குத் தான் தானே சத்துரு. சீதோஷ்ணங்களிலேயும் சுகதுக்கங்களிலேயும் மானாவமானங்களிலும் சமசித்தனான பிரசாந்தனுக்குப் பரமாத்மசாக்ஷாத்காரமுண்டாம். ஞான விஞ்ஞானங்களால் திருப்தனாய் நிர்விகாரனாய் ஜிதேந்த்ரியனாய் மண்கட்டியிலும் கல்லிலும் பொன்னிலும் சமனான யோகி யோகியுக்தனென்று சொல்லப்படும். இதஞ்செய்யுமவனிடத்திலும் மித்துரு உதாசீனன் மத்யஸ்தன் துவேஷி பந்து சாது சத்துரு பாபி யிவர்களிடத்திலும் சமபுத்தியுடையவன் விசேஷ்யனாகிறான் (சிறந்தவனாகிறான்) யோகாரூடனான யோகி ரஹஸ்யத்தலத்திலே ஏகாங்கியாய் வசீகிருத சித்தனாய் நிராசீயாய் அபரிக்ரஹனாய் சந்ததம் மனதைச் சமாதானம் பண்ணி ஆத்மாவினிடத்திலே நிறுத்தக் கடவன், சுசியான தலத்திலே ஸ்திரமாய் மிகுதியும் உயரமில்லாமல் தாழ்த்தியுமில்லாமல் தருப்பையைப் பரப்பி அதன்மேலே புலித்தோலாகிலும் மான்தோலாகிலும் போட்டு அதன் மேலே வஸ்திரம் போட்டுச் சுகரமாய் ஆசனம் நிருமித்து அதன்மேலே ஆஸீனனாய் மனதை ஸ்திரம் பண்ணிக்கொண்டு நியதஜிதேந்திரியனாய் ஆத்மசித்தியின் பொருட்டு யோகாப்பியாசம் செய்யக் கடவன். சரீரமும் சிரமும் கழுத்தும் வளைவில்லாமல் அசையாமல் ஸ்திரமாகச் சமம் பண்ணித் திக்குகள் பாராமல் நாசிகாக்ரகத்தைப்

பார்த்துக்கொண்டு சாந்தசித்தனாய் பிரமசாரிவிரதனாய் மனதை நியமித்து என்னிடத்திலே சித்தத்தைச் சேர்த்து நானே பரம புருஷார்த்தமென்றெண்ணி யோகயுக்தனாயிருக்கவேண்டும். இப்படி மனதைச் சமாதானம் பண்ணிக்கொண்டு நியதமானஸனான யோகி சுகாதிக்கமான என்னிடத்திலேயிருக்கிற மோக்ஷமடைவன். அதிகமாய் போஜனம் பண்ணுகிறவனுக்கும் எப்போதும் போஜனமில்லாமலிருக்கிறவனுக்கும் அதிக நித்திரையுண்டானவனுக்கும் நித்திரையை விட்டு விட்டவனுக்கும் யோகம் சித்திக்கமாட்டாது. யுக்தமான ஆகாரனுக்கும், கர்மங்களிலே யுக்தமான சேஷ்டனுக்கும் யுக்தமான நித்திரையும் சாக்கிரதையும் உண்டானவனுக்கும் துக்கம் நாசமாகிற யோகம் சித்திக்கும். எப்போதும் நியதமான சித்தம் ஆத்மாவிலேதானே நிறுத்தித் திடம் பண்ணுவன். சர்வகாமியங்களிலும் நிரபேக்ஷயாகும். அப்போது யோகியென்று சொல்லப்படும். காற்று இல்லாதேயிருக்கிற இடத்திலே தீபமானது இருந்தால் எப்படிச் சலனமில்லாமலிருக்குமோ அப்படியே ஆத்மயோகம் பண்ணுகிறவனுடைய சித்தம் சலனமில்லாமல் இருக்க வேணும். எப்போது யோகாப்பியாசத்தால் நிறுத்தப்பட்ட சித்தம் உபரதியடையுமோ அப்போதே பரிசுத்தமான மனதினாலே ஆத்மாவைப் பார்த்துச் சந்தோஷமடைவன். யோகீச்வரன் எப்போதும் அத்தியாதிசயமும் அதிகப் பிரியமும் பரிசுத்தமான மனதிலே கிராஹியமும் ஆகிய ஆத்ம சுகத்தையறிந்து அந்த ஆத்ம சுகத்திலே அனுபவித்திருக்கும். அந்தயோகி ஆத்மானந்தம் என்னப்பட்ட லாபத்தையடைந்து அதிலும் அதிகமான பரமலாபம் பின்னே என்றுமில்லையென்று நினைப்பான். அந்த யோகியைத் துக்கங்கள் சேரமாட்டா. துக்கங்கள் சேர்ந்தாலும் அவைகளை நிராகரிப்பது யோகமென்று சொல்லப்படும். அந்தயோகம் சாஸ்திர ஆசாரிய உபதேச ஜனிதமான நிச்சயத்தால் பிரயாசைப்படாமல் அப்பியசிக்கத் தக்கது. மனசங்கல்ப ஜனிதங்களான சர்வ கர்மங்களையும் நிச்சேஷமாய்த் தியஜித்து மனதினாலே இந்திரியங்கள் விஷயங்களிலே சேராமற்படிக்கு நிரோதித்து தைரியத்தினாலே புத்திசலியாமல் பண்ணி அந்தப் புத்தியால் மனதை ஆத்மாவினிடத்திலே வைத்து மெள்ள மெள்ள வசம் பண்ணிக் கொள்ளவேணும். மனம் பந்தமானால் எவனாலும் வேறொன்றையும் சிந்திக்கத் தகாது. சஞ்சலமாய் நிலையில்லாத மனம் எந்தெந்த விஷயங்களை நினைத்துப் போகுமோ அந்தந்த விஷயங்களினின்று திருப்பி ஆத்மாவிலே தானே ஸ்திரமாகப் பண்ணத் தக்கது. ரஜோகுணரஹிதனாய் பிரசாந்தமான மனமுடையவனாய் கல்மிஷ ரஹிதனாய் சாக்ஷாத் காரமான பிரம்மத்தை அடைந்திருக்கிற யோகியை உத்தமமான

சுகம் அடையும். இப்படி சதா மனதைச் சுவசம் பண்ணிக் கொண்டு விகதகல்மிஷனான யோகி பிரயாசமில்லாமல் அத்தியந்த சுகமான பிரம்ம சாக்ஷாத்காரமடைந்து சீவன் முக்தியடைவன். யோகயுக்தாத்மாவானவன் சர்வத்ர சமதரிசனனாய் சர்வ பூதங் களிடத்திலே தன்னையும் சர்வ பூதங்கள் தன்னிடத்திலேயும் என்னைச் சர்வத்தினிடத்திலும் பார்க்கிறானோ சர்வமும் என்னிடத்திலே பார்க்கிறோனோ அவனுக்கு நான் பிரிகிற தில்லை; என்னை அவன் பிரிகிறதில்லை; எவன் தாவர சங்கமாத்து மாக்களான சர்வ பூதங்களிடத்தலேயும் நான் ஒருத்தனே இருக்கிறவனென்று அறிந்து பஜிப்பனோ, அந்த யோகி நானாவித கர்மங்கள் ஆசரிக்கிறவனானாலும் என்னிடத்திலே வர்த்திப்பன். அர்ச்சுனா! எவன் சுகமாகட்டும் துக்கமாகட்டும் தனக்கெப்ப டியோ அப்படியே சர்வ பூதங்களுக்கும் சமானமென்று பார்ப்பனோ அந்தயோகி எனக்குப் பரம சம்மதம் என்ன அர்ச்சுனன் கேட் கிறான். மதுசூதனா! மனதைச் சமமாக்கி நிறுத்த வேணுமென்று எந்தயோகத்திலே உம்மாலே சொல்லப்பட்டதோ அந்த யோகத்துக்கு மனம் சஞ்சலமானதால் ஸ்திரமாய் நிறுத்த இயலாது என்று தோன்றப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணா! மனம் சஞ்சலமும் தேஹேந்திரிய க்ஷோபகரமும் பலவந்தமும் அஸ்திர முமானது. அப்படிப்பட்ட மனதை நிக்கிரகம் செய்தல் வாயு நிக்கிரகம் போலே துஷ்கரமென்று நினைக்கிறேன் என்னக் கேட்டு ஸ்ரீபுருஷோத்தமன் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லு கிறார்: விசயா! மனம் சஞ்சல மென்பதற்கும் நிக்கிரகிக்கச் சாத்தியமில்லை யென்பதற்கும் சமுசயமில்லை. ஆனாலும் விஷயங்களிடத்தில் வைராக்கியத்தினாலும் அப்பியா சத்தினாலும் நிக்கிரக்கிக்கப்படும். நியதசித்தனாகாதவன் இப்படிப்பட்ட யோகமடையச் சக்தனல்லன்; வசவிரத தியான சித்தமுண்டாய் விடாமல் பிரயத்தனஞ் செய்தவனுக்கு இந்த உபாயத்தினால் அடையச் சக்யமாம்என்னக் கேட்டு, அர்ச்சுனன் வாக்கியம்: ஸ்ரீ கிருஷ்ணா! ஆதியில் யோகத்தில் சிரத்தையோடே யோகத்தில் ஆசக்தனாய் சிறிது நாள் யோகாப்பியாசம்பண்ணி அனந்தரம் பிரயத்தன விஹீனனாய் யோகத்தில் சித்தம் நிறுத்த மாட்டாமல் விஷயாசக்தனான யோகி யோகசித்தியடையாமல் எந்தக் கதியையடைவன். கிருஷ்ணா! கர்மங்கள் ஆசரித்துச் சொர்க்கமும் அடையாமல் யோகத்தில் பிரவர்த்தித்துச் சித்த நிக்கரகஞ் செய்யவுமாட்டாமல் மோக்ஷ மார்க்கத்தினின்று விமுடனாய்ப் பிரஷ்டனானவன் மேககண்டம் போலே அப்பிரதிஷ்டனாய் நிராச்ரியனாய் நாசமடையானா? ஸ்ரீ கிருஷ்ணா! எனக்கு இந்தச் சமுசயத்தை நிச்சேஷமாகப் போக்குகிறதற்கு நீயே அருகன். உன்னையல்லாமல் அன்னியர்

களால் இந்தச் சமுசயத்தை நிவர்த்திக்க முடியாது என்னக் கேட்டு கிருஷ்ணன் வாக்கியம் : அர்ச்சுனா; யோக பிரமையை யடைந்தவனுக்கு இகத்திலும் பரத்திலும் சுகமேயல்லாமல் கெடுதி யில்லை. கலியாண ரூபமான யோகம் ஆசரித்தவனுக்கு ஒருக்காலும் கெடுதியடைவதில்லை. யோக பிரமையானவனுக்கு அசுவமேதமகாயாகங்கள் பண்ணின பேர் அடையத்தக்க லோகத்தையடைந்து வெகுகாலம் சுகமாய் வசித்துத் திரும்பவும் நல்ல குலத்திலே சதாசார சம்பன்னனாம் ஐசுவரிய வந்தனாம் ஆனவர்கள் கிரகத்தில் ஜனிப்பன் அல்லாமல் புத்திமான்களான யோகிகளுடைய குலத்திலேதானே சம்பவிப்பன். இப்படிப் பட்ட ஜன்மம் உண்டாகிறது லோகத்திலே துர்லபம். அர்ச்சுனா! அந்த சன்மத்திலும் பூர்வசன்மிகமான புத்திஸம் யோகத்தை யடைந்து திரும்பவும் மோக்ஷத்துக்கு யத்தனஞ் செய்து கொண்டிருப்பன். அந்த யோகி அவசனாய் பூர்வாப்பியாசத்தாலே திரும்பவும் யோகத்துக்குப் பலாத்காரமாயிழுக்கப்படுவன். யோகம் ஆசரியாமல் அதை அறிய இச்சித்தானானாலும் காமிய கர்ம பலன்களை அதிக்கிரமிப்பன். யோகீச்வரன் பிரயத்தனத்தினால் விடாமல் பிரயத்தனம் பண்ணினால் கல்மிஷங்கள் போய் சுத்தனாய் அநேக ஜன்மம் யோகாப்பியஞ் செய்ததனால் சித்தனாய் பரமமான மோக்ஷத்தை யடைவன். சாந்திராயணாதி விரதங்களைச் செய்யுமவர்களிலும், தவங்கள் சாஸ்திர ஞானமுண்டானவர்கள் இவர்களிலும் சத்கருமங்கள் ஆசரிக்கிறவர்களிலும் யோகி அதிகனாயிருப்பன். ஆகையால் அர்ச்சுனா! யோகியாய்விடு. எவன் என்னிடத்திலே சேர்ந்த சித்தமுண்டாய் சிரத்தாவானாய் என்னைப் பஜிப்பனோ அவன் இந்தச் சர்வ பேர்களிலும் சிரேஷ்டனாய் எனக்குப் பிரிய னாயிருப்பன்.

ஆறாவது அப்பியாச யோக அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## ஏழாவது அத்தியாயம்

## பரம அங்கிஷ விஞ்ஞான யோகம்

ஸ்ரீ கிருஷ்ணன் வாக்கியம் : அர்ச்சுனா! என்னிடத்திலே வைக்கப்பட்ட மனதையுடையவனாய் என்னிடத்தில் ஆச்ரேய னாய் யோகத்துடனே கூடிக்கொண்டு சமுசயமில்லாமல் பரிபூரண னான என்னை எவ்விதத்தில் அறிவையோ அதைச் சொல்லு கிறோம் கேள் : அனுபவ சகிதமாய் இந்த ஞானத்தை உனக்குச்

சொல்லுகிறேன். இந்த ஞானத்தை அறிந்த பேர் வேறொன்று அறியவேண்டியதில்லை. மானவ ஸகஸ்ரத்திலே ஓரொருத்தன் ஆத்ம ஞான சித்தியின் பொருட்டு யத்தனஞ் செய்வன். அப்படி ஆத்ம ஞானிகளான சித்தர்களில் ஓரொருத்தன் என்னைத் தத்துவமாக அறிவன்: பூமி, அப்பு, அனல், வாயு, ஆகாசம், மனம், புத்தி, அகங்காரம் என்று என் பிரகிருதி எட்டுவிதமாயிருக்கும். இந்தப் பிரகிருதி ஜடமானது. இதிலும் அன்னியமாய் ஜீவரூபமான என் பிரகிருதி வேறொன்று உண்டென்று அறி. இந்த ஜீவஸ்வரூப மான பிரகிருதியாலே சகல ஜகத்தும் தரிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பிரகிருதியினால் சர்வ பூதங்களும் சம்பவிக்கும். இந்த பிரகிருதி இரண்டுக்கும் தாரகமாய் நான் சர்வ ஜகத்தையும் பிறப்பிக்கவும் ரக்ஷிக்கவும் பிரளயங்கள் செய்யவும் ஆகிய விதத் தால் தனஞ்சயா! என்னிலும் வேறாய ஒரு பதார்த்தமும் இல்லை. அது எப்படியென்றால் சூத்திரத்தில் மணிகணங்கள் கோக்கப் பட்டிருக்கிறாப்போலே இந்தச் சமஸ்த பிரபஞ்சமும் என்னுடைய ஆதாரத்திலேயிருக்கிறது. அர்ச்சுனா! ஜலத்திலே ரசகுணமும் நான்: சூரிய சந்திரர்களுக்குள்ள காந்தியும் நான். சகல வேதங் களில் பிரணவம் நான்: ஆகாசத்திலே சப்தகுணமும் நான். மனிதர்களிடத்திலுள்ள புருஷ சக்தி நான்; பூமியினிடத்தில் உள்ள புண்ணிய கந்தகுணமும் நான்; அக்கினியிடத்தில் உள்ள தேஜஸும் நான்; சகல பூதங்களிடத்திலே ஜீவன் நான்; தபசி களிடத்தில் தபசு நான்; சர்வ பூதங்களுக்கும் பீஜபூதனும் நான், புத்திமான்களில் புத்தி நான்; தேஜஸ்வான்களுக்குள்ளே தேஜஸ் நான்; பரதர்ஷபா! பலவான்களுக்குள்ளே காமராகவிவர்ஜிதமான பலம் நான்; பூதங்களிடத்தில் தர்ம விருத்தமாகாத காமம் நான்; சாத்வீக ராஜஸ தாமஸ பாவங்கள் என்னாலே ஜனித்தன. நான் அந்தக் குணங்களிடத்தில் ஜீவனைப் போலே வசனாயிருப்ப தில்லை. அவை என் ஆதீனமாயிருக்கும். திரிகுணடியமான பாவங்களினால் சர்வ ஜகத்துக்களும் மோஹிதமாய் இந்தக் குணங்களிலும் பரமாய் அவ்வியனுமான என்னை அறிய மாட்டார் கள். சத்துவாதி குணமயமாய் அதியத்புதமான என் மாயை இதர யத்தனத்தால் கடக்க அரிதாயிருக்கும். யாரொருத்தன் என்னைச் சரணமடைந்தானோ அவன் இந்த மாயையைக் கடப்பன். மாயை யினால் ஞானம் அபகரிக்கப்பட்ட ஆசுரபாவத்தை ஆச்ரயித்து மூடாத்துமாக்களும் துஷ்கிருதர்களுமான நராதமர்கள் என்னைச் சரணமடைகிறதில்லை. ஆர்த்தனும் அர்த்தமான பலத்தைய பேக்ஷிக்கிறவனும் என்னை யறிய நிச்சயித்து யோகம் ஆரம்பித் தவனும் யோக சித்தியடைந்து என்னை யதார்த்தமாய் அறிந்தவ னும் ஆகிய இந்த நாலுவித ஜனங்களும் என்னை பஜிப்பார்கள். இந்த நாலு பேரிலேயும் நிரந்தரமாய் என்னிடத்தில் மனதை

நிறுத்தி என்னிடத்திலே பக்தியுண்டான ஞானிவிசேஷன். அந்த ஞானிக்கு நான் அதிக பிரியன். அவன் எனக்கு அத்தியந்தம் பிரியனாயிருப்பன். இந்த நாலுவித ஜனங்களும் உத்தமர்களே; விசேஷித்து ஞானியானவன் நானே என்று என்மதம். அந்த ஆத்ம ஞானியானவன் என்னிடத்திலேதானே சித்தம் நிறுத்தி உத்தமோத்தமனான என்னை அடைவன். அநேக ஜன்மாந்தரத்தில் ஞானவானாய் சர்வாத்மகமான பிரபஞ்சமெல்லாம் ஸ்ரீ வாசுதேவமயமென்று எண்ணி என்னைப் பஜிக்கப்பட்ட மகாத்மா அதிதுர்லபன். காமங்களால் அபகிருதமான ஞானாளாய் அவசியம் பூர்வஜன்ம கர்ம வாசனையால் அந்தந்த நியமங்களோடேகூட அந்நிய தேவதைகளைப் பஜிப்பார்கள். எவனெவன் எந்தெந்த தேவதைகளைப் பக்தியாலும் சிரத்தையாலும் அர்ச்சிக்க இச்சிப்பன். அவனவனுக்கு அந்தந்த தேவதைகளிடத்திலே தானே அசலமான சிரத்தை உண்டாகிறதாகப் பண்ணுவன். அந்த சிரத்தாயுக்தனானவனுக்கு அந்த தேவதா ஆராதனமே இச்சியா நிற்கும். எந்தெந்த தேவதைகளைப் பஜிக்கிற பேர்களுக்கு எந்தெந்த பலன்கள் என்னாலே நிர்மிதங்களாயிருக்குமோ அந்தப் பலன்களை அந்தந்த தேவதைகளாலே தானே அவனுக்குப் பலிக்கும்படி நிர்மிப்பன். அல்பபுத்திகளானவர்களுக்கு அந்தத் தேவதைகளிடத்தில் உண்டாகிற பலன் நாசமடையும். தேவதைகளைப் பூஜித்தபேர் அந்தந்தத் தேவதைகளையடைவார்கள். ஆனால் என் பக்தர்களோ என்னையேயடைவார்கள். அவ்வியயத்தனான (அவ்யயத்தனான) என்னை மதஸ்யகூர்மவராகாதி விபவங்களை அடைந்தவனென்றும் தேவதைகளோடே சமானனென்று கொஞ்சபுத்திகாரர் எண்ணுவார்களேயல்லாமல் உத்தமோத்தமும் அவ்வியயமுமான என் பரம பாவமறியமாட்டார்கள். சர்வலோகத்தார்க்கு நான் நிஜஸ்வரூபத்தால் பிரகாசிக்கிறதில்லை. யோகமாயையால் சமாவிருதமாய் மூடமான இந்த லோகத்திலுள்ள பேர் ஜன்ம ரஹிதனும் நாசரஹிதனும் என்று என்னை அறியமாட்டார்கள். அர்ச்சுனா! போன காலத்திலுள்ள பேரையும், இப்போது நடக்கிற காலத்திலுள்ள பேரையும், இனிமேல் உண்டாகிற பேரையும் இந்தப் பூதபவிஷ்யவர்த்தமானங்களில் உண்டாகிற பூதங்களையும் காரியங்களையும் அறிவன். என்னை ஒருத்தரும் அறியார்கள். அர்ச்சுனா! பிறந்த போதே இச் சாதுவேஷங்களால் பிறந்த சீதோஷ்ண சுகதுக்காதி தொந்த மோகங்களினால் சர்வபூதங்களும் மோகத்தையடைவார்கள். புண்ணிய கர்மங்கள் செய்கிற எந்த ஜனங்களின் பாபம் நாசமடையுமோ அப்படிப்பட்ட சுகிர்த்துக்கள் தொந்த மோகநிர்முக்தர்களாய் என்னை பஜிப்பார்கள். ஜராமரண

விமோசனத்துக்காக என்னை ஆச்ரயித்து எவர்கள் யத்தனஞ் செய்வார்களோ அவர்கள் அகில கர்மங்களும் அத்யாத்மமும் பரப்பிரமத்தையும் அறிவார்கள். அதிபூத அதிதெய்வ அதியஜ்ஞாத்தோடு கூடியிருக்கிறவனென்று எவன் அறிவனோ அவன் பிரயாணகாலத்திலாயினும் புத்தியுண்டாய் என்னையடைவார்கள்.

ஏழாவது பரம அங்கிஷ விஞ்ஞானயோக அத்தியாயம் ஏறியருளப்பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## எட்டாவது அத்தியாயம்

## அக்ஷர பிரமயோகம்

அர்ச்சுனன் வாக்கியம் : ஸ்ரீபுருஷோத்தமா! பிரமமென்பது எது? அத்தியாத்மம் எது, கர்மம் என்பது என்ன? அதிபூதமென்று எது சொல்லப்படும்? அதிதெய்வம் என்று எதைச் சொல்லுவார்கள் மதுசூதனா! இந்தத் தேகத்தில் அதியக்ஞம் என்பது எப்படி? பிரயாணகாலத்தில் நியதாத்துமாக்களால் எவ்விதத்தில் அறியத் தக்கவனாவீர்? என்ன, - கிருஷ்ணன் வாக்கியம் : - அக்ஷரமும் ஜகத்காரணனுமான பரமாத்மா பிரமம் என்னப்படும். தேகத்திலிருக்கிற கருதத்துவபோக தத்துவங்களை அடைந்த ஜீவாத்மா அத்தியாத்துமம் என்று சொல்லப்படும். பூதோற்பத்தி விருத்திகரமான திரவியத்தியாகம் கர்மம் என்று சொல்லப்படும். க்ஷரமான தேகம் அதிபூதம். சூரிய மண்டல மத்தியவர்த்தியான புருஷன் அதிதெய்வம். அர்ச்சுனா! இந்தச் சரீரங்களிடத்தில் அந்தர்யாமியான நானே அதியக்ஞம். எவன் அந்தியகாலத்திலும் என்னையே ஸ்மரித்துக்கொண்டு சரீரம் விடுவனோ! அவன் என் சுவரூபமடைவன். இந்த அர்த்தத்தில் சமுசயமில்லை. அந்தியகாலத்தில் தேவதிரியக் மனுஷ்யபாவத்திலே எதை ஸ்மரித்துக்கொண்டு சரீரத்தை விடுவனோ அர்ச்சுனா! கர்மாநுகுணமாய் அந்தச் சரீரத்தையே அடைவன். சதா எதைப் பாவிப்பானோ அந்த பாவமுண்டாம். ஆகையால் சர்வகாலங்களிலும் என்னையே ஸ்மரித்து யுத்தஞ்செய். என்னிடத்திலே சமர்ப்பித்த மனோபுத்திகளையுடையவனானால் என்னையடைகிறதற்குச் சமுசயமில்லை. அப்பியாசயோகயுக்தனாய் அந்நிய சிந்தைகளில்லாமல் மனதிலே பிரகாச ஸ்வரூபனான பரம புருஷனையே நினைத்துக்

கொண்டுஅவனையடைவன். எவன் சர்வக்ஞனும் புராணனாய் சர்வ நியந்தாவும் அணுவைபார்க்கிலும் அதிகனுமாய் ஸ்தூலத்தில் அதிகஸ்தூலமாய் சர்வஜகத்ரக்ஷகனாய் சிந்திக்கவரிய ஸ்வரூபனாய் ஆதித்திய வர்ணனாய் பிரஞ்ஞுத்திலும் பரனான புருஷோத்தமனைத் தியானம் பண்ணிக்கொண்டு பிரயாண காலத்தில் அசஞ்சலமான மனதினாலே பக்தியுக்தனாய் யோக பலத்தினால் புருவத்தினுடைய மத்தியில் பிராணவாயுவை நிரோதித்தவன் பிரமரந்திரம் பேதித்துக்கொண்டு பிரகாசாத்து மீகனான பரமபுருஷனைக் கூடுவன்.

அக்ஷரமான எதை வேத வித்துக்கள் அனுசரிப்பார்கள், ராக மில்லாத யதீச்வரர்கள் எந்தச் சொரூபத்தையடைவார்கள், எதை யடைய நிச்சயித்துப் பிரமசரியம் அனுசரிப்பார்கள், அப்படிக் கொத்த திவ்வியமான பதத்தையடையத்தக்க உபாயம் உனக்குச் சங்கிரகமாகச் சொல்லுகிறேன். சர்வேந்திரிய துவாரங்களை நிரோதித்து, மனதை இருதயத்திலே நிறுத்தித்தன் பிராணவாயுவைப் பிரமரந்திரத்திலே வைத்து, யோகதாரணை ஆச்ரயித்தவனாய் பிரமசுவரூபமான பிரணவத்தை உச்சரித்துக்கொண்டு என்னை ஸ்மரணை பண்ணிக்கொண்டு எவன் தேகம் விடுகிறானோ அவன் பரமமான கதியை அடைவன். அர்ச்சுனா! அநந்நிய சித்தனாய் சந்ததமும் என்னை ஸ்மரிப்பனோ அந்த யோகிக்கு நான் சுலபனாயிருப்பன். மகாத்துமாக்களான என்னுடைய பக்தர்கள் என்னையடைந்து துக்கமாயும் அசாசுவதமுமான புனர்ஜனனமில்லாமல் பரமமான மோட்சத்தையடைவார்கள். அர்ச்சுனா! பிரமலோகமளவான லோகங்கள் புனராவிருத்தியுள்ளதாயிருக்கும். என்னையடைந்தால் புனர்ஜனனம் உண்டாகிறதில்லை. கிருத திரேத துவாபர கலியுகமென்று நாலுயுகங்களும் கூடின ஒரு மகாயுகமென்னப்படும். அப்படிக்கொத்த மகாயுகம் ஆயிரமானால் பிரம்மாவுக்கு ஒருபகல் என்று சொல்லப்படும். ராத்திரியும் மகாயுகம் ஆயிரமாயிருக்கும். இப்படிக் கால நிர்ணயம் யார் அறிவார்களோ அவர்கள் அகோராத்திரி தெரிந்த ஜனங்கள் பிரம்மாவுக்குப் பகல் காலமான போது அவ்யக்தமான பிரகிருதியில் வியக்தமான சராசரங்கள் உற்பவிக்கும். ராத்திரிகாலமானால் அந்த பூதங்களெல்லாம் அவ்யக்த ஸம்ஜ்ஞகமான பிரகிருதியிலே பிரளயமாம். அர்ச்சுனா! அந்தப் பூதகிராமங்கள் (கூட்டங்கள்) கர்மபரவசாளாய்க் கொண்டு பிரமதேவருக்குப் பகலானால் பிறந்து ராத்திரியானால் அவ்யக்தத்தில் அடங்கும். இந்த விதமாய் ஜகத்துபிரவாக ரூபமாய்ப் பிரவர்த்திக்கும். அவ்யக்தத்துக்குக் காரணபூதமாய் சக்ஷுராதிகோசரமாய் (அக்ஷரத்தோடு கூடியதாய்) சனாதனமாயு

பரப்பிரமம் சர்வபூதங்களும் நசித்தாலும் தான் நசியாமலிருப்பன். எவனை அவ்யக்தனும் அக்ஷரமும் என்பார்களோ அவனே பரமபுருஷார்த்தமென்பார்கள். எதைப் பிறப்பித்தால் திரும்பப் பிறக்கமாட்டார்களோ அப்படிப்பட்ட பரந்தாமம் என் ஸ்வரூபம். அர்ச்சுனா! சர்வ பூதங்களும் எவனுக்குள்ளேயிருக்குமோ இந்த சர்வ ஜகத்தும் எவன் வியாபித்திருப்பானோ அப்படிப் பட்ட பரம புருஷனான நான் அநந்நிய பக்தியினாலே லபிக்கத் தக்கவன். பரதர்ஷப எந்தக் காலத்தில் மரித்த யோகிகள் திரும்பப் பிறக்கமாட்டார்களோ எந்தக்காலத்தில் மரித்தவர்கள் திரும்பப் பிறப்பார்களோ அந்தக் காலத்தைச் சொல்லுகிறேன். அக்கினிதேஜோபிமான தேவதை திவாபிமான தேவதை சுக்லபக்ஷாபிமான தேவதை உத்ராயணாபிமான தேவதை எந்த மார்க்கத்தில் இருப்பார்களோ அப்படிப்பட்ட மார்க்கத்தில் போன பிரமவித்துக்கள் பிரம்மத்தையடைவார்கள்: தூமாபிமான தேவதை ராத்திரி அபிமான தேவதை கிருஷ்ணபக்ஷாபிமான தேவதை தக்ஷிணாயனாபிமான தேவதை எந்த மார்க்கத்திலிருப் பார்களோ அப்படிப்பட்ட சந்திர மண்டல மார்க்கத்தில் போன கர்மயோகி சுவர்க்காதிபோகங்கள் அநுபவித்துத் திரும்பிப் பிறப்பார்கள். இந்த அர்ச்சிராதி தூமாதிமார்க்கங்கள் இரண்டும் ஜகத்தில் சாசுவதமாயிருக்கும். அதில் ஞான யோகிகள் அர்ச்சிராதி மார்க்கத்திற் சென்று மோக்ஷமடைவார்கள். கர்மயோகி தூமாதி மார்க்கத்திற் சென்று திரும்பி வருவன். அர்ச்சுனா! இந்த இரண்டு மார்க்கமும் அறிந்த யோகி மோக மடைகிறதில்லை. அர்ச்சுனா! ஆனதால் நீ சர்வகாலமும் பரமேசுவராதீயான யோகயுக்தனாய்விடு. இந்த அத்தியாய அர்த்தம் அறிந்த யோகி வேதங்களிலும் யக்ஞங்களிலும் தபசு களிலும் தானங்களிலும் எந்தப் புண்ணியபலன் உண்டா யிருக்குமோ அப்படிப்பட்ட புண்ணியத்திலும் அதிகமும் ஜகத்துக்கு மூலபூதமும் சர்வோத்கிருஷ்டமுமான ஸ்ரீவிஷ்ணு ஸ்தானம் அடைவன்.

ஸ்ரீமகாபாரதத்தில் ஸ்ரீபகவத்கீதா சாஸ்திரத்தில் அக்ஷரபிரம யோகமென்கிற எட்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீகிருஷ்ணாய நம:

## ஒன்பதாவது அத்தியாயம்

## ராஜகுஹ்ய யோகம் - ஸ்ரீகிருஷ்ணாய நம :

ஸ்ரீ பகவானானவர் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிறார்: அசூயரஹிதமான உனக்கு விஞ்ஞான சகிதமும் அதிரகசிய மானதுமான இந்த ஞானஞ்சொல்லுவேன்: எந்த ஞானம் அறிந்தால் சம்சாரபந்தத்திலிருந்து விடுபடுகிறதாய் வித்தைக் கெல்லாம் ராஜாவாய் ரகசியத்தில் அதிக சிரேஷ்டமும் பவித்திரமு மாய், உத்தமுமான இந்த ஞானம் பிரத்யக்ஷமாய்க் காணப்படும். தர்மயுக்தமாய் அனுஷ்டிக்கும்போது சுகமாய் அவ்யயமாயிருக் கும். அர்ச்சுனா! இந்தத் தர்மத்தில் சிரத்தையில்லாத புருஷர் கள் என்னை அடையாமல் மிருத்யுகிரஸ்தமான சமுசாரத்தில் சுழலுவார்கள். அவ்யக்த மூர்த்தியான என்னாலே இந்தச் சர்வஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கும் சர்வபூதங்கள் என்னிடத் திலிருந்தாலும் அவைகளிடத்தில் நான் நிர்சங்கனாயிருப்பன். நான் பூதங்களை வைத்து ரக்ஷித்தாலும் அந்தப் பூதங்கள் என்னிடத்திலேயிருக்கிறபடியினாலே அகடிதகடனாசாமர்த்திய முள்ள என் யோகமகத்துவம் பாராய். வாயுவும் கந்தரமும் (மேகமும்) சர்வகதமுமானாலும் ஆகாசத்தில் எவ்விதத்திலும் சேராது இருப்பதோ அவ்விதத்தில் சர்வபூதங்களும் என்னிடத் தில் சம்ஸர்க்கமில்லாமலிருக்கும். அர்ச்சுனா! கல்பக்ஷயத்தில் சர்வபூதங்களும் என் பிரகிருதியை அடையும். கல்பாதியில் (கல்ப ஆதியில்) ஆதிபூதங்களைத் திரும்பச் சிருஷ்டிப்பன். "நிர்விகாரனான நீ எந்த விதத்தில் பிறப்பிப்பீர் என்றால், பூர்வசன்ம கர்மங்களால் பரவசங்களான சமஸ்த பூதங்களையும் என்பிரகிருதியில் அவலம்பித்துக் கர்மவசத்தினால் பிறப்பிப்பன். நானாவித கர்மங்கள் ஆசரிக்கிற எனக்குப் பூதங்களைப்போலே பந்தகம் எப்படியில்லையென்றால் தனஞ்சயா; அந்தச் சிருஷ்டியாதி கர்மங்களில் ஆஸக்தனான உதாசீனனைப் போலே யிருக்கிற என்னை அந்தக் கர்மங்கள் பந்திக்கமாட்டாது. என் சந்நிதி பார்வை மாத்திரத்திலே பிரகிருதி சராசரகிதமான ஜகத்தைச் சிருஷ்டிக்கிறது. அர்ச்சுனா! இந்த ஏதுவினாலே ஜகத்து பரிவர்த்தித்துக் கொண்டிருக்கும். சர்வபூத மஹேஸ்வரனான என் பரத்துவந்தெரியாத மூடர்கள் சுத்த சத்துவமயமான மனுஷ சரீரம் பரிக்கிரகித்த என்னை அவமானிப்பார்கள். அந்நிய தேவதா பஜனம் சீக்கிர பலப்பிரத மென்று வியர்த்தமான ஆசையுண்டானவர்களும், வியர்த்தமான கர்மமுடையவர்களும், வியுர்த்த ஞானமுடைய அவிவேகிகளும்

ராக்ஷஸப் பிரகிருதியை ஆச்ரயித்து ஹிம்சையான கர்மங்களை ஆசாரிக்கிறபேரும், அசுரப் பிரகிருதியை ஆச்ரயித்து டம்ப மதர்ப்ப அகங்காரங்கள் உள்ள பேரும், மோகினிப் பிரகிருதியை அச்ரயித்துப் புத்தி பிரமையடைந்தவர்களாய் என்னை அவமானிப்பார்கள். அர்ச்சுனா! மஹாத்துமாக்காளானவர்கள் தெய்வப்பிரகிருதியை ஆச்ரயித்து அநந்நிய மனதுடையவர் களாய் பூதங்களுக்கு ஆதியும் அவ்வியயனுமான என்னை யறிந்து பஜிப்பார்கள். சந்ததம் என்னைக் கீர்த்தித்துக் கொண்டு த்ருடவிரதர்களாய் என் அனுக்கிரகம் இச்சித்து யத்தனம் செய்வார்கள். என்னை உத்தேசித்து நமஸ்கரித்துக் கொண்டு நித்திய பக்தியினால் என்னை உபாசிப்பார்கள். மகத்துக்கள் சிலபேர் ஞானயஜ்ஞத்தினால் என்னைப் பஜிப்பார் கள். சிலபேர் ஏகத்துவத்தில் சிலபேர் விரத கர்த்நத்வத்தில், சிலபேர் வேறுவித ரூபத்தில் விச்வதோமுகனான என்னை உபாசிப்பார்கள். கிரதுவும் நான்; நித்தியமான யக்ஞமும் நான்; பித்ருபிரீதிகரமான சுதையும் நான், ரோக அரமான ஔஷதமும் நான்; மந்திரமும் நான். ஆஜ்யம் நான்; அக்கினி நான்; ஓமமும் நான்; ஜகத்துக்குத் தாதாவும் (தாங்குபவனும்) தாயும் தகப்பனும் பாட்டனும் கர்மபல விதாதா வும் அறிய வேண்டிய பதார்த்தமும் பவித்திரமான பிரணவமும் ருக்குசாமயெசுர்வேதமும் கதியும் பர்த்தாவும் பிரபுவும் சாக்ஷியும் போகத் தானமும் சரணமும் இதகாரியும் கர்த்தாவும் சமர்த்திப் பிரளயத்தானமும், லயஸ்தானமான பிரகிருதிக்கு ஆதாரமும் அவ்யயமான பீசமும் நானே. வெயிலாய் எரிக்கிறவனும் நானே; மழை பெய்விக்கிறதும் நானே; வர்ஷம் பெய்யாமல் பண்ணுவிக் கிறதும் நானே. ஆயவும் மிருத்யுவும் சத்தும் அசத்தும் நானே. ருக்குவேதாதி மூன்று வேதங்களில் சொல்லப்பட்ட காமிய பலத்தையறிந்து அந்த வேதோக்த கர்மங்களை ஆசரிக்கிறபேர் யக்ஞங்களாலே இந்திராதி தேவதாசுவரூபமாய் என்னைப் பூஜித்து, சோமபானம் பண்ணி, பாவங்களை நிவிர்த்தி பண்ணிக் கொண்டு சுவர்க்கலோகம் இச்சித்துப் புண்ணிய ரூபமான சுரேந்திர லோகத்தை அடைந்து திவ்வியங்களான தேவபோகங் களை அனுபவிப்பார்கள். அவர்கள் விசாலமான சுவர்க்கலோக சுகங்களைப் புஜித்துப் புண்ணியம் க்ஷீணமானால் மத்திய லோகத் திலே பிரவேசிப்பார்கள். இவ்விதம் காமியபல பிரதமான வே தோக்த கர்மங்களை அனுவர்த்திக்கிறபேர்களுக்கு வாத்தும் போக்கும் உண்டாயிருக்கும். அநந்நிய சித்தாளாய்க்கொண்டு என்னை எந்த ஜனங்கள் உபாசிப்பர்களோ அந்தப் பிரகாரம் எப்போதும் என்னிடத்திலே சித்தமுண்டான என் பக்தர்களுடைய யோகக்ஷேமத்தை நானே வகிப்பன். எவர்கள் சிரத்தையோடே

கூடிக்கொண்டு அந்நிய தேவதா பக்தர்களாய் அவர்களைப் பூஜிப்பார்களோ அர்ச்சுனா! அவர்களும் அவிதிபூர்வகமாய் (அறியாமையை முன்னிட்டு) என்னையே பூஜிக்கின்றனர். சர்வ யஜ்ஞங்களுக்குப் போக்தாவும் பிரபுவும் நானேயென்று என்னைத் தத்துவமாய் அறிய மாட்டார்கள். அதனால் சம்சாரத்தை அடைகிறார்கள். தேவதைகள் கர்த்தாவென்று அவர்களைப் பூஜித்த பேர் தேவதைகளையடைவார்கள். பித்ருகணங்கள் சிரேஷ்டமென்று அவர்களைச் சேவிக்கிற பேர் பித்ருக்களையடைவார்கள். விநாயகாதிகணங்களே அதிகமென்று பூஜித்த பேர் அவர்களையே அடைவார்கள். பரமானந்த ரூபனும் அவ்யயனுமான என்னைப் பூஜித்த பேர் என்னையே அடைவார்கள். வெகுதன திரவிய சாதனமான பின்னே ஒரு தேவதாராதனையைப் பார்க்கிலும் என் ஆராதனம் வெகு சுலபமாய் இருக்கும். அதெப்படியென்றால், பத்திரமாகிலும் புஷ்பமாகிலும் பலமாகிலும் ஜலமாகிலும் பக்தி பூர்வகமாய் என்னை யுத்தேசித்து எவன் சமர்ப்பிப்பனோ அப்படி நியதாத்மனாய் பக்தியாலே சமர்ப்பித்த வஸ்துகளே நான் அங்கீகரிப்பன். என் நிமித்தம் பத்திரபுஷ்பாதிகள் சம்பாதிக்கப் பிரயாசமானால் அர்ச்சுனா! எந்தக் கர்மபலம் ஆசரிக்கிறாயோ எந்த வஸ்து பூஜிக்கிறாயோ எந்தத் திரவியம் ஓமம் பண்ணுகிறாயே எந்த பதார்த்தம் தானம் கொடுக்கிறாயோ எந்தத்தவம் ஆசரிக்கிறாயோ அத்தனையும் எனக்கு அர்ப்பணம் பண்ணு. இவ்விதமாய் சர்வ கர்மங்களும் எனக்கர்ப்பிதம் செய்தாயேயானால் சுபாசுபங்களிலுள்ள கர்ம பந்தங்களினின்று விடுபட்டு விமுக்தனாய் சந்நியாச யோக யுக்தாத்துமாவாய் என்னை அடைகிறாய். நான் சர்வ பூதங்களுக்குச் சமானனாயிருப்பன். எனக்குப் பிரியப்படுபவனும் இல்லை; நிஷேதிக்கப்படுபவனும் இல்லை. ஆனாலும், என்னைப் பக்தியினாலே பஜனை பண்ணுகிறானோ அவன் எப்போதும் என்னிடத்திலே வசிப்பான். நானும் அவர்களை அனுக்கிரகிப்பன். மிகுதியும் துராசாரனானாலும் அந்யதேவதா பக்தனல்லாமல் பரமேச்வரனான என்னை எவன் பஜிக்கிறானோ அவன் ஸாது (நன்னடக்கையுள்ளவன்) என்று எண்ணத்தக்கவன் என்னிடத்தில் திடமான அத்தியவசாயமுண்டானதால் இனி துராசாரனானாலும் என்னிடத்தில் பக்தி செய்கிறவன் சீக்கிரமாய் பாபவிமுக்தனாய் தர்மபரமாய் சாசுவதமான மோக்ஷம் அடைவன். அர்ச்சுனா! என் பக்தர்களுக்கு நாசமில்லை என்று நீ சமஸ்த தளங்களிலே பிரதிஜ்ஞை பண்ணு, பார்த்தா! பாபயோனி சம்பவாளான சண்டாளாதிகளானாலும் கர்மாதிகளல்லாத ஸ்திரீகளானாலும் கேவலம். கிரிஷிபராளான வைசியர்களானாலும், அத்தியயன ரஹிதர்களான சூத்திரர்களானாலும்

என்னிடத்திலே பக்தி பண்ணினார்களானால் பரமமான மோட்சமடைவார்கள். என் பக்தர்களான பிராம்மணர்களுக்கும் ராஜ ரிஷிகளுக்கும் மோட்சமுண்டாகிறதற்குச் சமுசயமில்லை. ஆகையால், அநித்தியமுமாய் துக்ககரமான இந்த மனுஷ்ய லோகத்தில் பிறந்த நீயும் சீக்கிரமாய் என்னைச் சரணமடை. என்னிடத்திலே மனசுண்டானவனாய் என்னிடத்திலே பக்தனாய், என்னையே பூசை பண்ணி எனக்கே நமஸ்காரம் பண்ணிக்கொண்டு நானே பரமமான ஆச்ரயமென்றெண்ணி, இந்தப் பிரகாரமாக மனசு என்னிடத்திலே வைத்திருந்தாயேயானால் பரமானந்த ரூபனான என்னை அடைவாய்.

ஒன்பதாவது ராஜ குஹ்யயோக அத்தியாயம் ஏறியருளப் பண்ணியது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

பத்தாவது அத்தியாயம்

## விபூதி விஸ்தார யோகம்

ஸ்ரீ பகவான் சொல்லுகிறார் : அர்ச்சுனா! நான் சொல்லுகிற வாக்கியங்களினாலே சந்தோஷமடைகிற உனக்கு இதம் ஆசரிக்கும் நினைப்பினால் சொல்லுகிற என் பரமமான வசனத்தைத் திரும்பவும் கேள். தேவதைகளும் மகரிஷிகளும் என் பிரபாவம் அறியார்கள். அந்தத் தேவதைகளுக்கும் மஹரிஷிகளுக்கும் நானே காரணமும் அஜனாகவும் அநாதியாகவும் லோகத்துக்கு மஹேச்வரனாகவும் இருப்பதை அறிகிறவன் எவனோ அவன் மனுஷ்யர்களில் மோகரஹிதனாய் சர்வ பாபங்களினின்று விமோசனனாவான். புத்தியும் ஞானமும் மோகமும் பொறுமையும் தமமும் சமமும் சுகமும் துக்கமும் பிறக்கிறதும் சலனமில்லாமலிறக்கிறதும், பயமும் பயமில்லாமலிருப்பதும் அஹிம்சையில்லாமலிருப்பதும், சமத்துவமும் சந்தோஷமும் தவமும் தானமும் கீர்த்தியும் அபகீர்த்தியும் இவை முதலான அநேக விதி பாவங்கள் (நிலைகள்) பூதங்களுக்கு என்னாலே உண்டாயிற்று. சப்தமஹரிஷிகளும் அவர்களுக்கும் பூர்வர்களான சனகாதிகள் நாலுபேரும் பதினாலு மனுக்களும் என் அம்சபூதனான பிரம்மாவும் இவர்கள் எல்லாரும் என் மன சங்கற்பத்தினாலே பிறந்தார்கள். அவர்களாலே இந்தப் பிரபஞ்சம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட என் விபூதியையும்

யோக மகத்துவமும் யதார்த்தமாய் எவன் அறிவனோ! அவன் என்னிடத்திலே சலனமில்லாத யோகமடைவன். இதற்குச் சமுசயமில்லை. நான் சகலபிரபஞ் சத்துக்கும் உற்பத்தி காரணம். என்னாலே சர்வமும் பிரவர்த்திக்கிறது என்றெண்ணிப் புத்திமான்கள் பிரீதிபூர்வகமாய் என்னைப் பஜிப்பார்கள். என்பக்தர்கள் என்னிடத்திலே சேர்ந்த சித்தமும், என்னிடத்திலே வியாபித்த பிராமணர்களாய் ஒருத்தருக்கொருத்தர் என்மகத்துவங்களும் என் திவ்விய சரித்திரங்களும் போதித்துக் கொண்டு கீர்த்தனம் பண்ணிக் கொண்டும் நித்தியமும் அவர்களுக்குள்ளே சந்தோஷித்துக் கொண்டும் ஆனந்தமடைந்து கொண்டும் இருப்பார்கள். சந்ததம் தியானபரனாய்க் கொண்டு பிரீதிபூர்வகமாய் என்னைப் பஜிக்கிறவர்கள் எந்தப் புத்தியிலே என்னையடைவார்களோ அப்படிப்பட்ட புத்தியோகத்தைக் கொடுப்பன். நான் பக்தர்களை அனுக்கிரகித்தற்காகவே அவர்கள் புத்தியிலே பிரேரகனாயிருந்து கொண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஞானமென்கிற தீபத்திலே அஞ்ஞானத்திலே ஜனித்த சம்சார அந்தகாரத்தை நாசம் பண்ணுவன். என்னக்கேட்டு அர்ச்சுனன் கேட்கிறான்: பரப்பிரம்மமும் பரந்தாமமும் பாவனமும் பரமும் நீயே. சாசுவதமும் திவ்யபுருஷனும் ஆதிதேவனும் அஜனம் விபுவும் என்று உன்னைச் சமஸ்த ரிஷிகளும் தேவரிஷியான நாரதனும் அஸிதனும் தேவலனும் வியாசமுனீந்திரனும் சொல்லுவார்கள். நீரும் என்னோடே அப்படியே சொல்லுகிறீர். ஸ்ரீ கேசவா! நீர் என்னோடே சொன்ன அர்த்தமெல்லாம் சத்தியமென்றெண்ணுகிறேன். ஷட்ஐசுவரிய சம்பன்னா தேவ தானவர்களானாலும் உன் ஸ்வபாவம் அறியமாட்டார்கள். பூதபாவனா! பூதேசா; தேவதேவ! ஜகத்பதே! புருஷோத்தமா! உம் ஸ்வரூபம் நீரே அறிவீர். வேறொருத்தரால் உம்முடைய விபூதிகளை அறியவியலாது. நீர் எந்த விபூதிவிசேஷத்தால் செகமெல்லாம் வியாபித்திருக்கிறீர். அதியற்புதங்களான உன் விபூதிகள் எல்லாம் நீரே தெரியப்பண்ண அருகர். யோகீச்வரேச்வரா சந்ததமும் உன்னை நான் எவ்விதத்தில் சிந்திக்கவேணும். ஷட்குண பரிபூரணா! எந்தெந்த பாவங்களால் சிந்திக்கத்தக்கதாயிருப்பீர். ஸ்ரீஜனார்த்தனா! உன் யோகமகத்துவமும் விபூதிவிசேஷங்களும் சவிஸ்தாரமாய்த் திரும்பவும் சாதிக்கவும். உம்முடைய வாக்கியாமிர்தம் எவ்வளவு கேட்டாலும் திருப்தியடையாமலிருக்கிறேன் என்ன ஸ்ரீ ஜனார்த்தனர் சொல்லுகிறார்: குருசிரேஷ்டா! உனக்கு என்னுடைய திவ்வியங்களான விபூதிகளை அவ்வியமாம்படி முக்கியங்களை எடுத்துச் சொல்லுகிறேன். என்விபூதி பரப்புக்கு அந்தமில்லை. குடாகேசா! சர்வபூத இதயத்திலுமிருக்கிற பரமாத்மனும் நான் பூதங்களுக்குச் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரங்

களுக்குக் காரணமும நான். துவாதச ஆதித்தியர்களில் விஷ்ணு நான். பிரகாச வந்தாளில் சூரியன் நான்; மருந்துக்களில் மரீசி நான்; நக்ஷத்திரங்களில் சந்திரன் நான். வேதங்களில் சாம வேதம் நான். தேவர்களில் தேவேந்திரன் நான். இந்திரியங்களில் மனசு நான்; சமஸ்த பூதங்களுக்குள்ளேயும் ஞானம் நான்; ஏகாதசருத்திரர்களில் சங்கரன் நான்; யக்ஷர்களுக்குள்ளே குபேரன் நான்; அஷ்டவசுக்களில் பாவகன் (அக்னி) நான்; பர்வதங்களுள் மேருவும் நான்; புரோகிதர்களில் முக்கியமான பிறஹஸ்பதி நான்! சேனாபதிகளில் ஸ்கந்தன் நான்; சரசுகளில் சமுத்திரம் நான்; மகரிஷிகளில் பிருகு நான்; பதாதிகளிலும் வாக்குகளிலும் பிரணவம் நான்; யக்ஞங்களில் ஜபயக்ஞம் நான்; ஸ்தாவரங்களில் (அசையாப் பொருள்களில்) இமவந்தம் (இமயமலை) நான்; விருக்ஷங்களில் அசுவத்தம் நான்; தேவரிஷி களில் நாரதன் நான்; கந்தர்வங்களில் சித்திரரதன் நான்; சித்தர்களில் கபிலமகாமுனி நான்; குதிரைகளில் அமிர்தத்தில் பிறந்த உச்சைசிரவஸ் நான்; யானைகளில் ஐராவதம் நான்; மனுஷ்யாளில் ராஜாவும் நான்; ஆயுதங்களில் வச்சிராயுதம் நான்; தேனுக்களில் காமதேனு நான்; பிரஜைகள் ஜனன ஹேதுவான மன்மதன் நான்; சர்ப்பங்களில் வாசுகி நான்; நாகங் களில் சேஷன் நான்; ஜலசரங்களுக்குக் கர்த்தனான வருணன் நான்; பித்ருக்களில் அர்யமா நான்; தண்டிப்பவர்களில் யமன் நான்; தயித்தியர்களில் பிரகலாதன் நான்; கணிதங்களில் வருஷாத்மகமான காலம் நான்; மிருகங்களில் சிங்கம் நான்; பக்ஷி களில் கருடன் நான்; வேகவந்தாளில் வாயு நான்; வில்லாளியரில் தசரதராமன் நான்; மத்ஸ்யங்களில் மகரம் நான்; நதிநதங்களில் கங்கை நான்; அர்ச்சுனா! சிருஷ்டி ஸ்திதி சங்காரமும் நான். வாதிக்கிறவர்களில் வாதம் நான்; வித்தைகளில் அத்யாத்ம வித்தை நான்; அக்ஷரங்களில் அகாரம் நான்; ஸமாஸங்களில் துவந்துவ ஸமாஸம் நான்; காலங்களில் அக்ஷயம் நான்; விச்வதோமுகன் நான்; கர்மபலப்பிரதன் நான்; சர்வசங்காரக னான மிருத்யு நான்; பிறக்கப்பட்டவர்களுக்குள்ளே பிறப்பு நான்; ஸ்திரீகளில் ஸ்ரீயும் (லக்ஷ்மி) வாக்கும் (சரஸ்வதி) கீர்த்தியும் அறிவும் புத்தியும் தைரியமும் பொறுமையும் (இவற்றிற்கு அதிஷ்டான தேவதைகள்) நான்; சாமங்களில் பிருஹத் ஸாமம் நான்; சந்தசுகங்களில் காயத்திரி நான்; மாதங்களில் மார்கழி நான்; ருதுக்களில் வசந்தருது நான்; வஞ்சனையில் சூதம் (சூதாட்டம்) நான்: தேஜஸ் உண்டானவர்களில் தேஜஸ் நான்; ஜயிக்க நிச்சயித்தவர்களிடத்தில் ஜயம் நான்; வியவசாயமும் நான்; பலவான்களில் பலம் நான்; உத்தியோகம் பண்ணுகிறவர்

களில் உத்தியோகம் நான்; சாத்துவிகர்களிடத்தில் சத்துவகுணம் நான்; விருஷ்ணிவம்சத்தில் வசுதேவபுத்திரனான ஸ்ரீவாசுதேவன் நான்; பாண்டவர்களில் அர்ச்சுனன் நான்; முனிகளில் வியாச முனீந்திரன் நான்; கவிகளில் சுக்கிரன் நான்; தண்டிக்கிறவர் களில் தண்டனை நான்; ஜயிக்கிறவர்களிடத்தில் நீதியும் நான்; குஹ்யங்களில் மௌனமாவன் நான்; ஞானவான்களில் ஞானம் நான்; அர்ச்சுனா! சர்வபூதங்களுக்கும் உற்பத்திகாரணமான பீஜம் நான்; சராசரமாத்மகமான பூதங்கள் என்னிலும் வேறாயிருக்க வில்லை; அர்ச்சுனா! திவ்வியமான என் விபூதிகளுக்கு அந்த மில்லை. இப்போது சொல்லப்பட்ட விபூதி விஸ்தாரத்தைச் சங்கிர மாய் என்னாலே சொல்லப்பட்டது. எந்தெந்த பூதங்கள் ஐசுவரிய மும் காந்தியும் சத்துவமும் ஊர்ச்சிதமுமாயிருக்குமோ அவையத் தனையும் என் தேஜோம்சையில் பிறந்ததென்று அறி. அர்ச்சுனா! வெகு ரூபங்களாய்ச் சொன்ன ஞானத்தால் உனக்கென்ன பிரயோசனம்? நான் இந்த சமஸ்த பிரபஞ்சமும் ஓரங்கத்தாலே வியாபித்திருக்கிறேன்.

இவை ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்ம பர்வதத்தில் பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீகிருஷ்ணார்சுன சம்வாதத்தில் விபூதி விஸ்தார யோகம் என்ற பத்தாம் அத்தியாயம் ஏறியருளப் பண்ணினது.

ஸ்ரீகிருஷ்ணாய நம :

## பதினோராவது விசுவரூபயோக அத்தியாயம்

அர்ச்சுனன் வாக்கியம் : என்னை அனுக்கிரஹித்ததற்காகப் பரமும் ரகசியமும் அத்தியாத்தும ஸம்ஜ்ஞிதமுமான எந்த வசனம் உன்னாலே சொல்லப்பட்டது. அதனாலே என் அஞ்ஞானம் நிவர்த்தியாயிற்று. கமலபத்ராக்ஷா! உம்மாலே பூதோத்பத்தித பிரளயங்களும் அவ்வியயமான உன் மகாத்மியமும் விசதமாய்க் கேட்கப்பட்டது. பரமேசுவரா! உன் சுவரூபமும் நீர் எவ்விதத்தில் சொன்னீரே அது அப்படியே யதார்த்தம். ஆனாலும் ஸ்ரீ புருஷோத்தமா! ஞானைசுவரிய பல சம்பன்னமான உன் சுவரூபம் பார்க்க இச்சிக்கிறேன். யோகீசுவரேசுவரா! உன் ஈசுவர சுவரூபம் பார்க்கிறதற்கு நான் யோக்யமென்றெண்ணினாயேயானால் அவ்வியயமும் வியாபகமுமான உன் சுவரூபத்தைக் காண்பியும் என்ன, ஸ்ரீ வாசுதேவர் சொல்லுகிறார் : பார்த்தா! சதங்களும் ஆயிரங்களுமாக நானாவிதங்களான திவ்வியங்களும் நானாவித

வர்ணங்களும் பார். ஏகாதசருத்திரர்களையும் மருத்கணங்களையும் என்னிடத்திலே பார்; என்னையும் நீ பூர்வங்களிலே எப்போதும் காணாத வெகு ஆச்சரியங்களை என்னிடத்திலே பார்; குடாகேசா! என் தேகத்திலே இருக்கிற சராசராத்மகமான சகல பிரபஞ்சமும் எதெது பார்க்க இச்சிக்கிறாயோ அது என்னிடத்திலே பார்; உன்னுடைய சருமக் கண்களாலே என்னைப் பார்க்கச் சக்தனல்லன், உனக்குத் திவ்விய திருஷ்டி தருகிறேன். அதனாலே ஈசுவர சம்பந்தமான யோகப்பிரபாவத்தைப் பார் என்ன,

சஞ்சயன் திருதராஷ்டிரனைப் பார்த்து "ராஜேந்திரா! மகா யோகீசுவரேசுவரனான ஸ்ரீ ஹரி இவ்விதமாய்ச் சொல்லி அனந்தரம் பார்த்தனுக்கு ஈசுவராகாரமான விசுவரூபம் காண்பித்தார். அந்த ரூபம் எப்படியிருந்ததென்றால் அநேக முகங்களும் அநேகம் கண்களும் அனேக ஆச்சரியங்களும் அநேக திவ்விய ஆயுதங்களும் திவ்வியாம்பர திவ்வியாபரணங்களும் திவ்வியமாலிய திவ்விய சந்தனங்களும் பூசிக்கொண்டு சர்வாச்சரியமயமாய்ப் பிரகாசித்துக்கொண்டு அனந்தமாய் விசுவதோமுகமாய் ஆகாசத்தில் ஆயிரம் சூரிய பிம்பங்கள் காந்திகள் ஏக காலத்தில் பிரகாசித்தாலும் அந்த மகாத்மா காந்திக்குச் சரியென்னப்படாதபடி அப்படிப்பட்ட விசுவரூப சந்தரிசனத்தினால் தனஞ்சயன் ஆச்சரியமடைந்தவனாய் ரோமஹர்ஷனாய் அந்த தேவனுக்குச் சிரசால் பிரணாமம் பண்ணிக் கைகூப்பிக்கொண்டு கேட்கிறான். தேவா! தேவதைகளும் சமஸ்த பூதவிசேஷங்களும் கமலாசன சதனான பிரமாவையும் ருத்திரனையும் வசிஷ்டாதிரிஷிகணங்களையும் உரகங்களையும் ஆயிரஞ்சூரியப்பிரகாசமான உன் தேகத்திலே கண்டு கொண்டிருக்கிறேன். அனேகங் கைகளும் வயிறுகளும் முகங்களும் கண்களும் உண்டாய் அனந்த ரூபங்களுள்ள உம்மை எங்கும் பார்க்கிறேன். விசுவேசுவரா! விசுவரூபா! மற்றும் ஆதியென்றும் மத்தியமென்றும் அந்தமென்றும் காணப்படாமல் இருக்கிறது. கிரீடங்களும் கதைகளும் சக்கரங்களும் உண்டாய், தேஜோராசியாய் எங்கும் நிறைந்த காந்திகளினாலே பார்க்கச் சக்கியமில்லாமல் பிரகாசிக்கிற சூரிய அக்கினிகாந்தியிலும் அதிசயித்த தேஜஸை உண்டாய்; அறிய சக்கியமில்லாமலிருக்கிற உன்னை எந்தத்திக்கிலும் கண்டு கொண்டிருக்கிறேன். அக்ஷரமான பரப்பிரம்மமும் நீரே! அறியத்தக்கவனும் நீரே: இந்த விசலத்துக்குப் பரமமான நிதானமும் நீரே! அவ்வியயனும் நீரே: சாசுவதமான தர்மம் பரிபாலிக்கிறவரும் நீரே. சனாதனமான புருஷோத்தமனும் நீரே என்று நினைக்கிறேன். ஆதிமத்யாந்தரஹி

தனாய் அபரிமித பிரபாவனாய் அனந்த பாகுவனுமாய் சந்திர சூரிய யோசனனுமாய் ஜ்வலிக்கிற அக்கினிபோலே முகமுண்டான வனாய் உன்னுடைய தேஜஸினாலே விசுவமெல்லாம் பரிதபீக்கப் பண்ணிக்கொண்டிருக்கிற உன்னைப் பார்க்கிறேன். ஆகாசத் திலும் பூமியிலும் நடுவிலும் திக்குவிதிக்குகளிலும் நீரே வியாபித் திருக்கிறீர் : மகாத்மா! அதியத்புதமும் உக்கிரமுமான உன் ரூபத்தைப் பார்த்து மூன்று லோகமும் பயத்தையடைகிறது. தேவதா சங்கங்கள் உன்னைச் சரணமடைகிறார்கள். மற்றும் சிலபேர் பயந்தவர்களாய் பிரணாமாஞ்சலிகளாய் ரட்சியும் என்று பிரார்த்திக்கிறார்கள். மகரிஷிகள் சித்தஜனங்கள் உமக்குச் சுபங் களாக வேணுமென்று ஸ்வஸ்தி சொல்லிக்கொண்டு அனேக ஸ்தோத்திரங்களாலே துதிபண்ணுகிறார்கள். ருத்திரர்கள் ஆதித்தியர்கள் வசுக்கள் ஸாத்யர்கள் விசுவதேவதைகள் அசுவினி தேவதைகள் மருத்துக்கள் பித்ருகணங்கள் கந்தருவர்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் சித்த சங்கங்களும் இவர்கள் சர்வரும் அதிசயமாய் உம்மைப் பார்க்கிறார்கள். மற்றும், அநேக முகங் களும் அசங்கியங்களான கணங்களும் அபரிமிதமான நாக்குகளும் அனந்தங்களான தொடைகளும் அனேக பாதங்களும் அனேக வயிறுகளும் அனேக கோரபற்களையுடைய முகங்களும் அதியத் புதமான உன் ரூபத்தைப்பார்த்து லோகங்கள் அத்தியந்தம் பயத்தையடைகின்றன. அப்படியே நானும் பயப்படுகிறேன். ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி ஆகாசத்தைப் பரிசித்துக் கொண்டு பிரகாசமாய் அனேக வர்ணங்களும் வாய்திறந்து கொண்டு ஜ்வலித்துக் கொண் டிருக்கிற விசாலமான கண்களுண்டான உன்னைப்பார்த்துப் பயம் பிறந்ததனால் தைரியமும் சாந்தமும் அடையாமலிருக் கிறேன். கோரப்பற்களால் பயங்கரமாய் காலாக்னி சந்நிபமான உம்முடைய முகங்களைப் பார்த்து திக்குகள் விதிக்குகள் என்று தெரியாமல் சர்மாந்தரம் சுகமில்லாமலிருக்கிறேன். (மனவமைதி யில்லையென்றபடி) ஜகந்நிவாஸ! தேவதேவேசா! எனக்குப் பிரசன்னனாகவேணும் திருதராஷ்டிர புத்திரர்களான துரியோதனாதியரும் பிஷ்ம துரோணகர்ணாதியரும் பின்னேயு முள்ள சமஸ்த ராஜாக்களும் நம்முடையவர்களிலுமுள்ள முக்கிய யோதர்களும் (யுத்தவீரர்களும்) கோரப்பற்களுடனே பயங்கரமான உன் முகங்களிலே த்வரையுடையவர்களாய்ப் பிரவேசிக்கிறார்கள். சில பேர்கள் பற்களின் முனையிலே அகப்பட்டுச் சூர்ணிதாங் காளாய் காணப்படுகிறார்கள். வெகுஜலத்தோடேகூடின நதிகள் சமுத்திரமே அபிமுகமாய் எவ்விதத்தில் பிரவேசிக்குமோ அவ் விதத்தில் வீரர்களான இந்த சமஸ்தராஜலோகமும் ஜ்வாலாபாவக சந்நிபமான உம்முடைய முகங்களிலே பிரவேசிக்கிறார்கள். ஜ்வலித்துக் கொண்டிருக்கிற ஜோதியில் விட்டிற்பூச்சி விழுந்து

மடியும்படிபோல் இந்த யோத (யுத்த) சனங்கள் உன் முகத்தில் பிரவேசித்து மடிகிறார்கள். அதிக உக்கிரமமான உம்முடைய தேஜஸ் சர்வஜகத்தையும் தபிக்கப் பண்ணுகிறது. தேவவர! மஹா உக்கிரரூபனான நீ யார்? எனக்குத் தெரியச் சொல்லும். உமக்கு நமஸ்காரம் பண்ணுகிறேன். பிரசன்னாக வேணும். ஆத்தியனான உம்மை அறிய இச்சிக்கிறேன். உம்முடைய உத்தியோகம் அறியமாட்டேன் என்ன, ஸ்ரீ பகவான் சொல்லு கிறார்: லோகக்ஷயகரனான காலன் நான் இந்த ராஜலோகத்தைச் சங்கரிக்க உத்தியோகித்தவன். இவர்களை நீ சங்கரியாவிட்டாலும் இவர்கள் நாசமடைகிறது நிச்சயம் என்று அறி. ஆகையால், யுத்தத்திற்கு எழுந்திரு. கீர்த்தியையுடைய சத்துருக்களை ஜெயித்து பூர்த்தியான ராச்சியத்தை அனுபவி. இந்த ராஜாக்க ளெல்லாரும் பூர்வத்திலேதானே என்னாலே நிஹதாளான (கொல்லப்பட்ட) பேர்கள் அர்ச்சுனா! நீ நிமித்தமாத்திரமாய் விடு. பீஷ்மதுரோணகர்ணசயத்திரதனும் மற்றுமுள்ள யுத்த வீரர்களும் அவரவர் யுத்தத்துக்குத்தக்க தண்டனை விசாரித்து என்னாலே ஹதமானவர்கள். அப்படிப்பட்டவர்களை நீ சங்கரி. குருக்கள் அண்ணன் தம்பிகளை எப்படிக் கொல்லுவேனென்று விசார மடைய வேண்டாம். யுத்தஞ் செய். ரணத்திலே சத்துருக்களை ஜெயிக்கிறாய் என்றதாகச் சஞ்சயன் திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லுகிறான். இவ்விதத்தில் ஸ்ரீகேசவன் சொன்ன வசனத்தைக் கேட்டுக் கிரீடி நடுநடுங்கிக்கொண்டு கிருதாஞ்சல னாய் நமஸ்காரம் பண்ணி, அத்தியந்தம் பயத்தையடைந்து அடிக்கடி பிரணாமங்கள் பண்ணி விம்மி விம்மி ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான். ஸ்ரீரிஷிகேசா! உம்முடைய மகாத்மியத் தைக் கீர்த்தித்துக்கொண்டு தேவரிஷி சங்கங்கள் சந்தோஷாதி சயத்திலே அடிக்கடி தரிசிக்கிறதற்குப் பிரியத்தை அடைகிறார் கள். ராக்ஷஸர்கள் பயங்களினால் திக்குகளுக்கு ஓடிப்போனார்கள். சித்த சங்கங்கள் நமஸ்காரம் பண்ணுகிறார்கள். இது உனக்குத் தகும். மகாத்மா! அனந்த தேவதேவேசா! ஜகந்நிவாஸ! பிரம்மா வுக்கும் ஆதிகாரணனுமாய் அதிகனான உமக்கு எவரும் ஏன் நமஸ்கரியார்கள்? சுத்சுவபாவனான ஜீவனும் அசுத்சுவரூபனான பிரகிருதியும் இந்த இரண்டுக்கும் பரமமாய் அக்ஷரமுமான பரப்பிரம்மமும் நீரே: ஆதிதேவனும் புராண புருஷனும் இந்த விச்வத்துக்குப் பரமநிதானமும் யாவும் தெரிகிறவனும் தெரியத் தக்கவனும் பரந்தாமமும் நீரே; அனந்தரூபா! விசுவமும் உன்னாலே வியாபிக்கப்பட்டது. வாயுவும் யமனும் அக்கினியும் வருணனும் சூரியனும் சந்திரனும் பிரமாவும் பிரமாவுக்குத் தகப்பனும் நீரே! அசத்தும் நீரே. இந்த இரண்டுக்கும் அந்நியமான வனும் நீரே, இப்படிப்பட்ட உமக்கு நமஸ்காரம். உம்மைச்சேவித்

துச் சந்தோஷமாயிற்றாகையால் உன் முன்புக்கு நமஸ்காரம். உன் பின்புக்கு நமஸ்காரம் எல்லாத் திக்குகளிலும் உமக்கு நமஸ்காரம். அனந்தவீரியன் நீர். அபரிமித பராக்கிரமனாய் சர்வமும் பூரண மாய் வியாபித்திருக்கிறதனால் சர்வதாத்மகமான உம்மைச் சகா வென்கிற சிநேக பலத்தினால் ஏ கிருஷ்ணா! ஏ யாதவா! ஏ சகாவே! என்று உம்முடைய அனந்த மகிமையையும் சுவரூபங் களையும் அறியாத என்னாலே பிரமத்தினாலும் அதிசினேகிதத் தினாலேயும் எதேது சொன்னேனோ அதுவும் பரிகாசார்த்தமும் சஞ்சார வேளையிலும் சயனங்களிலும் இருக்கிறபோதும் போஜனங்களிலும் சபைகளிலும் மனோவாக்காய கர்மங்களி னாலும் என்னென்ன அபராதங்கள் என்னாலே பண்ணப்பட்டதோ ஸ்ரீ அச்சுதா! அவையெல்லாம் அப்பிரமேயனான நீர் க்ஷமிக்க வேணுமென்று பிரார்த்திக்கிறேன். அப்பிரதிமப் ப்ரபாவா! சராசராத்மகமான இந்த லோகத்துக்குத் தகப்பனும் பூஜ்யனும் குருவும் சிரேஷ்டனுமான உனக்கு மூன்று லோகங்களிலேயும் சமானனில்லையென்றால் அதிகன் எப்படியுண்டாம்? ஆகையால் மிகவும் வணங்கப்பட்ட சரீரனாய் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி ஜகதீச்வரனும் ஸ்தோத்திர அருகனுமான உன்னை வேண்டிக் கொள்கிறேன். பிள்ளை அபராதம் பிதா எப்படிச் சகிப்பனோ, சிநேகிதனுடைய அபராதம் சகா எப்படிச் சகிப்பனோ பிரிய ஸ்திரீ அபராதம் பிரிய புருஷன் எப்படிச் சகிப்பனோ அப்படியே நீரும் என் அபராதமெல்லாம் தயாநிதியானதனாலே க்ஷமிக்க வேண்டியது. பூர்வத்திலே எப்போதும் காணாத உம்முடைய ரூபத்தைக் கண்டு கிருதார்த்தனானேன். ஆனாலும் என் மனம் பயத்தினால் மிகவும் வியாகுலம் உண்டாயிருக்கின்றது. முந்தின ரூபத்தைத்தானே எனக்குத் தரிசிப்பிக்கவும். தேவேச! ஜகந்நிவாஸ! என்னிடத்தில் பிரசன்னனாய் விடு. சகஸ்ரபுஜா! விசுவமூர்த்தி! நீர் சங்கம் சக்கரம் கதாதி ஆயுதசகிதனாய் கிரீட குண்டலங்கள் தரித்தவனாய் நாலுகைகளுடனே சௌம்மியமான உன் பூர்வ ரூபத்தைக் காண்பியும் என்ன, ஸ்ரீகேசவன் சொல்லு கிறார்: அர்ச்சுனா! பிரசன்னனான என்னாலே உனக்கு என் யோக மகாத்மியத்தினாலே பரமமான இந்த ரூபம் தரிசிக்கப் பண்ணினேன். தேஜோ மயமும் விசுவாத்மகமும் அனந்தமும் ஆத்தியமுமான என் ரூபம் உன்னையல்லாமல் பூர்வத்தில் ஒருவரும் கண்டதில்லை. குருப்ரவீர! வேதங்களால் யக்ஞங்களால் கானங்களால் தானங்களால் அக்னிஹோத்ராதி கிரியைகளால் உக்கிரங்களான தபசுகளினால் இப்படிப்பட்ட ரூபமுடையனான என்னை மனுஷ்ய லோகத்தில் நீயல்லாமல் அந்நியனால் காணக் சக்கியனல்லன், அர்ச்சுனா! பயங்கரமான என் ரூபத்தைக் கண்டு வேதையும் விமூட பாவமும் பயமும் வேண்டாம். சந்தோஷ

சித்தனாய் சௌம்மியமான என் பூர்வ ரூபத்தை, நீ எப்போதும் சேவிக்கிற ரூபத்தைக் காண்பிக்கிறேன், பார்' - என்றார், என்று சஞ்சயன் திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லுகிறார். இவ்விதத்தில் ஸ்ரீ வாசுதேவர் அர்ச்சுனனோடே சொல்லித் திரும்பவும் சௌம்மியமான பூர்வ ரூபத்தைத் தரிசிக்கப் பண்ணி, பயமடைந்திருந்த அர்ச்சுனனை மிருதுவான வாக்கியத்தால் ஆசுவாசம் பண்ணினார். அப்படிப்பட்ட சௌம்மிய ரூபத்தைப் பார்த்து அர்ச்சுனன் சொல்லுகிறான்; ஸ்ரீ ஜனார்த்தனா! சௌம்மியமான உம்முடைய மானுஷ ரூபத்தைக் கண்டு இப்போது அல்லவோ சோஹ்ருதனாய் (நண்பனாய்) பிரசன்ன சித்தனாய் என் பூர்வ பாவமடைந்தேன் என்ன, ஸ்ரீபகவத் வாக்கியம் : எவருக்கும் காண சக்கியமில்லாத இந்த விசுவரூபம் நீ கண்டவனனாய். தேவதைகள் சகிதம் நிரந்தரமும் இந்த விச்வரூப தரிசனம் காண வேண்டிக் கொண்டிருப்பார்கள். அர்ச்சுனா! நீ இப்போது கண்டு கொண்ட விசுவரூபதரனான என்னை வேதாத்யயனம் செய்கிறதனாலும் தபசுகளினாலும் கானங்களினாலும் யக்ஞங்களினாலும் காணச் சக்யனல்லன் : பரந்தபா! இந்த விதமான நான் அநந்நிய பக்தியினால் தத்துவமாய் அறியவும் தரிசிக்கவும் பிரவேசிக்கவும் சக்யன் (உரியவன்) பாண்டவா! எனக்குப் பிரியமாகக் கருமங்களை ஆசரிக்கிறவனும் நானே பரமபுருஷார்த்தமென்று எண்ணுகிறவனும் என் பக்தனாய் புத்திரமித்திராதிகளிடத்தில் சங்கவர்ஜிதனும் சர்வபூதங்களிடத்திலும் வைரமில்லாதவனும் அவனோ அவன் என்னையடைவன்.

இவை ஸ்ரீமகாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தில் ஸ்ரீபகவத்கீதா உபநிஷத்தில் ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் விசுவ ரூப யோகம் என்னும் அத்தியாயம் (அத்தியாயார்த்தம்) முற்றும்.

ஸ்ரீகிருஷ்ணாய நம :

## பன்னிரண்டாவது - பக்தியோக அத்தியாயம்

அர்ச்சுனன் கேட்கிறான்; இப்படி சந்ததம் பக்தியுக்தாளாய் உன்னிடத்திலே மனதை நிறுத்தினவர்களாய் விசுவ ரூபதரனான சர்வஜ்ஞத்வாதி குணங்களுள்ள உன்னை உபாசிப்பவர்கள் அக்ஷரம் அவ்வியக்தமான பரப்பிரம்மத்தை உபாசிப்பவர்கள் - இவர்களில் எவர்கள் சிரேஷ்டராவர் என்ன, ஸ்ரீஜனார்த்தனன் சொல்லுகிறார். எவர்கள் சர்வஜ்ஞத்வாதி குணங்களுள்ள ஈசுவரனான என்னிடத்தில் மனதை நிறுத்தி நித்திய தியான யுக்தாளாய் என்னை உபாசிப்பார்களோ அவர்கள் சிரேஷ்டர்.

யார் இத்திரியங்களை நிக்கிரகித்து, சத்துரு மித்திரன் மத்யஸ்தன் இவர்களிடத்திலே சமபுத்தியுடையவராய் சர்வபூதஹிதராய் அக்ஷரமும் அநிர்த்தேசியமும் அவ்யக்தமும் சர்வத்ரகமும் அசிந்த்யமும் கூடஸ்தமும் அசஞ்சலமும் திவ்வியமுமான பரப் பிரம்மத்தை உபாசிப்பர்களோ அவர்களும் என்னையடைவார் கள். அவ்யக்தமான பரப்பிரம்மத்தில் ஆசக்தமான சித்தமுள்ள நிர்க்குண உபாசகர்களுக்குக் கிலேசம் அதிக தரமாயிருக்கும். அவ்யக்தமான பரப்பிரம்மத்தினிடத்தில் சித்தம் சேர்க்கிறது. தேகாபிமானமுள்ளவர்களுக்கு வெகு பிரயாசம். யார் சர்வ கர்மங்களையும் என்னிடத்திற் சமர்ப்பித்து நானே பரமபுருஷார்த்த மென்று எண்ணி அநந்நியமான பக்தியோகத்தினாலே என்னைத் தியானித்துக் கொண்டு உபாசிப்பார்களோ அவர்களை மிருத்யு சம்ஸாரமென்கிற கடலிலே விழாமல் சீக்கிரமாய் ரக்ஷிப்பன். அர்ச்சுனா! அப்படியானதால் என்னிடத்தில் சித்தத்தை வைத்து என்னிடத்திலேதானே புத்தியுடைவயனானால் தேகாந்தரத்தில் என் சாயுச்சியத்தை அடைவாய்! சமுசயமில்லை. தனஞ்சயா! சித்தத்தை என்னிடத்தில் ஸ்திரமாக நிறுத்துகிறதற்கு அசக்தனானாயானால் அப்பியாச யோகத்தினாலேனும் என்னை அடைய இச்சிப்பாய். அப்பியாசத்திலும் அசமர்த் தனானால் எனக்குப் பிரீதிகரங்களான கர்மங்களைச் செய்: எனக்குப் பிரியமான கர்மங்களை ஆசரித்து மோட்சம் அடைவாய். அதற்கும் அசக்தனானால் என்னைச் சரண மடைந்து, சர்வகர்மபலத்தியாகஞ் செய்து, என்னிடத்தில் பாரத்தை வைத்தவனாய் விடு. அப்பியாசத்திலும் ஞானம் சிரேஷ்டம். ஞானத்திலும் தியானம் விசேஷம். தியானத்திலும் கர்மபலத்தியாகம் மேன்மை. கர்மபலத்தியாகத்தால் சாந்தி யடைவன். சர்வபூதங்களுக்கும் அத்துவேஷியாய் மித்திரனாய் தயாவந்தனாய். மமத்துவமில்லாமல் நிரகங்காரனாய் சமதுக்க சுகனாய் க்ஷமையுடையவனாய் எப்போதும் சந்துஷ்டனாய் நியதாத்துமாவாய் திடநிச்சயனாய் என்னிடத்தில் சமர்ப்பித்த மனோபுத்தியுமுடையவனாய் எவன் எனக்குப் பக்தனாவனோ அவன் எனக்குப பிரியன். எவனால் லோகங்கள் பயப்படாவோ லோகங்களினால் எவன் பயப்படாதவனோ சந்தோஷமும் கோபமும் பயமும் மனத்தாபமும் எவன் விடுவனோ அவன் எனக்குப் பிரியன். ஒரு வஸ்துவையும் அபேக்ஷியாமல் சுசியாய் சதுரனாய் உதாசீனனாய் பக்ஷபாதங்களில்லாதவனாய் மன வேதை ரஹிதனாய் சர்வகர்ம பரித்தியாகியாய் எவன் எனக்குப் பக்தனோ அவன் எனக்குப் பிரியன். பிரியம் வந்தால் சந்தோஷி யாமல் அப்பிரியமுண்டானால் துவேஷியாமல் பிரியவஸ்து வியோகத்தில் சோகியாமல் வராத வஸ்துக்களில் வாஞ்சியாமல்

சுபாசுப ரூபங்களான புண்ணியபாபங்களைப் பரித்தியஜித்து என்னிடத்திலே பக்தி செய்வனோ அவன் எனக்குப் பிரியன். சத்துருமித்திரர்களிடத்திலும் மானாவமானங்களிலும் சீதோஷ்ண சுகதுக்கங்களிலும் சமனாய் சங்கவர்ஜிதனாய் துல்யநிந்தாஸ்துதி யுள்ளவனாய் மௌனியாய் தெய்வாதீனத்தால் எவ்வளவு மாத்திரம் அகப்பட்டதோ அவ்வளவிலே சந்துஷ்டனாய் அநிகேதனாய் ஸ்திரபுத்தியாய் என்னிடத்தில் பக்தியுள்ளவன் எனக்குப் பிரியன். யார் சிரத்தாவந்தாளாய நானே பரமமென் றெண்ணி இப்போது சொல்லப்பட்ட மோக்ஷசாதனமான தர்மத்தையே நன்கு உபாசிப்பார்களோ அப்படிப்பட்ட பக்தர்கள் எனக்கு அத்தியந்தம் பிரியர்கள்.

பன்னிரண்டாம் பக்தியோக அத்தியாயம் ஏறியருளப் பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

## பதின்மூன்றாம் அத்தியாயம்

## க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்

அர்ச்சுனன் கேட்கிறான் :- ஸ்ரீகேசவா! பிரகிருதி புருஷர் களையும் க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞர்களையும் ஞானத்தையும் ஞேயத்தையும் அறிய இச்சிக்கின்றேன் என்ன, ஸ்ரீபகவான் சொல்லுகிறார்! அர்ச்சுனா! இந்தச் சரீரம் சீவனுக்குப் போக சமஸ்தானமான படியினாலே க்ஷேத்ரம் என்னத்தகும். இந்த தேகம் அதன் சரீரமென்று அறிந்தால், சீவனையும் க்ஷேத்திரஜ்ஞ னென்றும் இந்த க்ஷேத்திர - க்ஷேத்திரஜ்ஞ சுவரூபந் தெரிந்தவர் கள் சொல்லுவார்கள். பாரத! க்ஷேத்திரங்களிலும் க்ஷேத்திரஜ் ஞனவனை என்னையாக அறி. இந்த க்ஷேத்திர - க்ஷேத்திரஜ்ஞ சுவரூபத்தை அறிகிற ஞானம் எதுவோ அதுவே தனக்குச் சம்மதம் (அபிப்பிராயம்) க்ஷேத்திரமானது எப்படிப்பட்டது, எதுகாரணமுள்ளது, எதனாலே பிறந்தது, எப்படிப்பட்ட பேதமுள்ளது. க்ஷேத்திரஜ்ஞன் என்றால் எவன்; எப்படிப்பட்ட பிரபாவமுள்ளவன்; அந்த அர்த்தம் சஞ்சேபமாய் விவரிக் கிறேன், கேள்.

வசிஷ்டாதி ரிஷிகளால் வெகுவிதமாகச் சொல்லப்பட்டிருக் கும் நானாவித கர்மபிரதிபாதங்களான வேதங்களாலே சொல்லப்பட்டது; ஏதுக்களுண்டாய் விசேஷமாய் நிச்சயிக்கப் பட்ட பிரமசூத்திரபதங்களாலேயும் நிச்சயிக்கப்பட்டிருக்கும்.

பிருதிவி ஆதி மஹாபூதங்கள் ஐந்தும் அகங்காரமும் புத்தியும் மூல பிரகிருதியும் ஞானேந்திரியங்களைந்தும், கர்மேந்திரியங் களைந்தும் மனமும் சப்தஸ்பரிசரூபரசகந்தம் ஐந்தும் ஆகிய இருபத்துநாலு தத்துவங்கள் - பின்னேயும் மனோவிரதிகளான இச்சை துவேஷம், சுகதுக்கங்களும் ஞானசக்தியும் தைரியமும் இவைகளெல்லாம் கூடினது சரீரமாகும். அப்படிப்பட்ட சரீரம் க்ஷேத்திரம். இந்த இந்திரியாதிகளார்ச்சிதமான க்ஷேத்திர சுவரூபம் சொன்னேன். இன்னம் ஞானத்துக்குச் சாதனங் களானவை கேள். அபிமானமும் டம்பமும் இல்லாமலிருக்கிறதும், அஹிம்சையும் சாந்தியும் நேர்மையும் ருசு பாவமென்கிற (அத்தாட்சியென்கிற) ஆசாரிய உபாசனமும் சுசித்துவமும் ஸ்த்தைரியமும் (விடாமுயற்சியும்) சரீர நிக்கிரகமும் விஷயங்களில் வைராக்கியமும் அனங்காரமும் ஜன்ம மிருத்யு ஜராவியாதிகளில் துக்கதோஷங்களை விசாரிக்கிறதும், புத்திர தாராகிருஹாதிகளில் ஆஸக்தியும் (பற்றின்மையும்) பிரீதி யும் பிரீதியில்லாமலிருக்கிறதும் பிரியாப்பிரியங்களிடத்தில் சமசித் தத்துவமும் அநந்நிய யோகத்தால் என்னிடத்திலேதானே நிலை யான பக்தியும் ஏகாந்தவாசமும் பிரகிருதஜனங்களிடத்தில் அசம்ஸர்க்கமும் தத்துவஞானத்துக்குப் பிரயோஜனமான மோக்ஷ விசாரமும் இவைகளெல்லாம் ஞானம் என்று சொல்லப்படும். இதற்கு அந்நிதாவான விபரீதமான டம்ப மானங்கள் அஞ்ஞான மென்னத்தகும். அறியத்தக்கதேதோ அதைச் சொல்லுகிறேன். எதையறிந்து மோக்ஷமடைவனோ அந்தத் தத்துவமும் ஆதியில்லாதது. பரப்பிரம்மமானது சத்தும், அசத்தும் இல்லாம லிருக்கும் இந்த ஆத்தும தத்துவம் எங்கும் கையும் எங்கும் காலும் எங்கும் கண்களும் எங்கும் சிரசு எங்கும் முகம் எங்கும் காதுமாய் இந்தச் சர்வலோகங்களை வியாபித்துக் கொண்டிருக்கும். அது சர்வேந்திரியங்களை விளக்குவிக்கிறதானாலும் அந்தக் குணங் களுக்கு வேறாயிருக்கும். ஒன்றிலேயும் தான் ஒட்டாமலிருந்தும் சர்வத்துக்கும் ஆதாரமாய்த் தரித்திருக்கும். குணத்திரயரஹித மானாலும் அந்தக் குணங்களைப் பாலித்துக் கொண்டிருக்கும். பூதங்களுக்கு உள்ளும் வெளியுமாய் சராசரமும் தானாயிருக்கும், அப்படிப்பட்ட ஆத்மதத்துவம் சூக்ஷ்மமானதால் அறியப்படாது. ஞானிகளுக்குச் சமீபமும் அஞ்ஞானிகளுக்குத் தூரமுமாய் சராசர பூதங்களிடத்திலும் காரணரூபத்தில் அபின்னமாய் காரிய ரூபத்தில் பின்னம் போலேயிருக்கும். அந்த ஞேயம் சர்வபூதங்களையும் ஸ்திதிகாலத்தில் சம்ரக்ஷித்துக் கொண்டு பிரளயகாலத்தில் கிரஹித்துக் கொண்டு ஸர்ககாலத்திலே சிருஷ்டித்துக் கொண்டும் ஜோதிர் கணங்களிலும் பிரகாசமாய் அஞ்ஞானத்திலும் பரமாய் ஞானமும் ஞேயமும் ஞானகம்மியமும் தானாய் சர்வபிராணிகளின்

இருதயங்களிலும் இருக்கும். இவ்விதத்தில் இருபத்துநாலு தத்துவாத்மகமான க்ஷேத்திரமும் அமானித்வாதி (தற்பெருமை யின்மை முதலாய) ஞானமும் ஞேயமுமான ஆத்துமசுவரூபத்தை சஞ்க்ஷேபமாய்ச் சொன்னேன். என் பக்தனானவன் இதையறிந்து என் பாவத்தையடைவன். பிரகிருதியையும் புருஷனையும் அநாதி யாக அறி. தேஹேந்திரியாதி விகாரங்களும் சத்துவாதி குணங் களும் பிரகிருதியாலே சம்பவமென்றறி. காரியகாரண கர்த்ருவத் தில் பிரகிருதி ஏதுவென்று சொல்லப்படும். சுகதுக்கானுபவங்களில் புருஷன் ஏதுவென்று சொல்லப்படும். புருஷன் பிரகிருதியிடத்தி லிருந்து பிரகிருதி ஜன்யங்களான சுகதுக்காதி குணங்களை அநுபவித்துக் கொண்டு இருப்பன். இந்த ஜீவனுக்கு அந்தக் குணசங்கம் தேவதிர்யக்மனுஷ்ய ஜன்மங்களுக்குக் காரணம். புருஷன் தேகத்துக்குள்ளிருந்தவனானாலும் தேஹந்திரியங் களைப் பார்க்கிலும் வேறானவன், அது எப்படியென்றால், இந்திரியங்களுக்குச் சாக்ஷியும் அந்தப் பிரவர்த்தனத்துக்குப் பிரேரகனும் பர்த்தாவும், சுகதுக்கங்கள் அனுபவிக்கிறதனாலே போக்தாவும், தேஹேந்திரியங்களுக்கு ஈச்வரனானபடியினாலே மஹேச்வரனும், இருபத்துநாலு தத்துவங்களுக்கும் அந்நியனான படியினாலே பரமாத்மாவென்று சொல்லப்படும். எவன் தேஹேந்திரிய விலக்ஷணனான புருஷனை குணசகிதையான பிரகிருதியை விசதமாய் அறிவனோ அவன் விதிநிஷேதங்களை அதிக்கிரமித்து வர்த்தித்தாலும் மறுபடி ஜனிக்கிறதில்லை. சில பேர் தியானத்தினால் தேகத்திலே மனசினாலே ஆத்துமாவைப் பார்ப்பர். சிலபேர் சாங்கியத்தினால் சிலபேர் யோகத்தினால் சிலபேர் நிஷ்காமகர்மயோகத்தினால் ஆத்துமாவைப் பார்ப்பர். சிலபேர் சாங்கியயோகாதி கிரமங்கள் அறியாமல் குரு உபதேச மாத்திரங்கேட்டு உபாசிப்பார்கள். குருவாக்கியம் கேட்டுப் பராயணாளானவர்களும் மிருத்யுவை அதிக்கிரமிப்பார்கள். பரதர்ஷப! ஸ்தாவரசங்கமாத்மிகமான பிரபஞ்சம் யாவும் க்ஷேத்திர க்ஷேத்ரஜ்ஞ சம்யோகத்தினால் ஜனித்ததென்று அறி. சமஸ்த பூதங்களிலும் சமமாயிருக்கிற பரமேசுவரனைச் சகல பூதங்களும் நாசமடைந்தாலும் அவரை நாசமில்லாதவரென்று எவன் பார்ப்பனோ அவன் ஆத்மஞானி. சர்வபூதங்களிலும் சமமா யிருக்கிற ஈசுவரனை எவன் பார்ப்பனோ அவன் தன்னைத்தான் இழித்துக் கொள்கிறவனல்லன். அதனாலே பரமமான கதியை அடைவன். தேஹேந்திரிய ரூபத்திலே சகல தர்மங்களும் சகல கிரியைகளும் பிரகிருதியால் செய்யப்படுகிறதேயல்லாமல் ஆத்மா கர்த்தனல்லனென்று அறிந்தவன் ஆத்மாவைப் பார்ப்பன். பூதங் களின் வெவ்வேறான பாவங்கள் பிரளயகாலத்தில் பிரகிருதி யிடத்தில் அடங்கியிருக்கும். அப்படியே சிருஷ்டி காலத்தில்

பிரகிருதியினாலே தானே விவிதாகாரங்களும் விஸ்தரிக்கப்பட்ட தென்று எவன் பார்ப்பனோ அவன் பரிபூரணமான பிரம்மத்தை அடைவன். அநாதியும் அவ்வியயனும் நிர்க்குணனும் சகுணனும் ஆனதால் பரமாத்மா சரீரத்திலிருந்தாலும் கர்மங்களை ஆசரிக்க மாட்டான். கர்மபலத்தில் சேருகிறதுமில்லை. ஆகாசம் எங்கும் வியாபித்திருந்தாலும் சூக்ஷமதாகையால் எந்த வஸ்துக்களிலும் எவ்விதத்திலும் ஒட்டாமலிருக்கும். அப்படியே ஆத்மாவும் சகல தேகங்களிலேயிருந்தாலும் தேகவிகாரங்களில் ஒட்டான். சூரியன் ஒருவனானாலும் சர்வலோகத்தையும் எப்படிப் பிரகாசிக்கப் பண்ணுவனோ அப்படியே க்ஷேத்திரஜ்ஞன் ஒருவனானாலும் இந்த சமஸ்த தேகங்களிலிருந்து பிரகாசிக்கப் பண்ணிக் கொண்டிருப்பன். இவ்விதத்தில் க்ஷேத்திர - க்ஷேத்திரஞ்ஞர்களுடைய பேதத்தையும் ஞானமென்கிற கண்களாலே எவர்கள் அறிவார்களோ க்ஷேத்திர ரூபமான பிரகிருதியாலே விமுக்தியும் எவர்கள் அறிவார்களோ அவர்கள் மோக்ஷமடைவார்கள்.

பதின்மூன்றாவது க்ஷேத்ர - க்ஷேத்ரஜ்ஞ விபாக யோக அத்தியாயம் (பிரகிருதி - புருஷ விபாகயோக அத்தியாயம்) ஏறியருளப் பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## பதினான்காவது
## குணத் திரயவிபாகயோக அத்தியாயம்

ஸ்ரீ வாசுதேவர் சொல்லுகிறார் : ஞானங்களில் உத்தமமான பிரமஞானம் திரும்பவும் சொல்லுகிறேன். எந்த ஞானத்தையறிந்த சகலமுனீந்திரர்களும் இந்த தேகத்தாலே விமுக்தாளாய் பரமகதியடைந்தார்களோ அந்த ஞானத்தை ஆச்ரயித்தபேர் என் சுவரூபம் அடைந்து ஸர்க காலத்தில் ஜனியார்கள், பிரளய காலத்தில், கிலேசியார்கள், அர்ச்சுனா! மகத்தரமான சகல பிரபஞ்சத்துக்கும் விருத்திகாரணமான பிரகிருதியான யோனி எனக்குக் கர்ப்பாதானம். அந்தப் பிரகிருதியில் என் அங்கிச சம்பவமான சீவசைதன்யங்களை நிறுத்துவன். அதனாலே பிரமமாதி சர்வபூதோற்பத்தியாம். கௌந்தேய! திரியக்மநுஷ்யாதி சரீரங்களில் எந்தெந்த சரீரம் பிறக்குமோ அந்த சரீரங்களுக்கும் மகத்தரமான பிரகிருதியென்னப்பட்ட யோனித் தாய் நானே: பீஜப்பிரதன் நான்; தகப்பன் நான்: மகாபாகுவே! பிரகிருதியினாலே பிறந்த சாத்துவிக ராஜஸதாமச

குணங்கள் பிரகிருதிகாரியமான தேகத்தில் அவ்வியயனாய தேகியைப் பந்தப்படுத்துவிக்கிறது. அனக! இந்த மூன்று குணங்களிலேயும் சத்துவகுணம் நிர்மலமானதால் பிரகாசகமும் அனாமயமுமாய் ஜீவனைச் சுகசங்கத்திலும் ஞான சங்கத்திலும் பந்திப்பிக்கும். கௌந்தேயா! ஆசை சங்கத்திலே உத்பவமான ரஜோகுணம் ராகாத்துமகம் என்னப்பட்ட ஆசையென்றறி. அந்த ரஜோகுணம் ராகாத்துமகம் என்னப்பட்ட ஆசையென்றறி. தேகியைக் கர்ம சங்கத்தோடே பந்திப்பிக்கும். தமோகுணம் அஞ்ஞானமென்றறி. அது சர்வதேகிகளையும் மோகம் பிரமாதம் (மதிமயக்கம்) ஆலசியம் (சோம்பல்) நித்திரையிவைகளிலே பந்திப்பிக்கும் பாரத! சத்துவகுணம் தேகியைச் சுகத்தைப் பிறப்பிக்கும். ரஜோகுணம் கர்மத்தைப் பிறப்பிக்கும். தமோகுணம் ஞானத்துக்கு ஆவ்ருதமான (மறைக்கின்ற) பிரமத்தைப் பிறப்பிக்கும். சத்துவம் ரஜோதாமசத்தை நிராகரித்து விருத்தியாகும்; சத்துவ தாமசத்தை நிராகரித்து ராஜஸம் விருத்தியாகும்; சத்துவ ராஜஸத்தை நிராகரித்துத் தாமஸம் பிரபலமாம் ஸ்ரோத்ர துவாரங்களில் பகவத்கதை கேட்கப்படுகிற ஞானம் எப்போதும் பிரகாசமாயிருக்கும். அப்படியே ஏனைய துவாரங்களில் ஞானமாகிய ஒளிதோன்றிப் பிரகாசிக்கும். அப்போது சத்துவ குணம் விருத்தியடைந்ததென்று அறி. பரதர்ஷபா! லோபமும் பிரவிருத்தியும் (இந்திரியங்களின் சேஷ்டையும்) கர்மாரம்பமும் பொறுமையில்லாமலிருக்கிறதும் இச்சையும் இந்தக் குணங்கள் ரஜோகுணம் விருத்தியாம்போது ஜனிக்கும். குருநந்தனா! விவேகமின்மையும் உத்தியோகரஹிதமும் பிரமாதமும் (மதிமயக்கமும்) மோகமும் இவைகள் தமோகுணம் விருத்தியாம்போது ஜெனிக்கும். சத்துவகுணம் விருத்தியடைந்தபோது சரீரத்தியாகம் பண்ணிவன் ஆத்மா ஞானிகளுள்ள விமலமான லோகத்தையடைவன். ரஜோகுணம் விருத்தியடைந்தபோது பிரளயமடைந்த தேகி கர்ம ஆசக்தாளான மனிஷ்யரிடத்தில் பிறப்பன். தமோ குணம் விருத்தியடைந்தபோது சரீரம் விட்ட பிராணி பசுவாதி மூடயோனிகளிலே பிறப்பன். சுகிர்த கர்மங்கள் நிர்மலமான சாத்துவிகத்துக்குப் பலமென்றும், ராஜஸத்துக்குத் துக்கம் பலமென்றும், தமோகுணத்துக்கு அஞ்ஞானம் பலமென்றும் சுகிர்தகர்மிகளானவர்கள் சொல்லுவார்கள். சத்துவகுணத்தால் ஞானம் ஜெனிக்கும்; ரஜோகுணத்தால் லோபம் (பேராசை) பிறக்கும்; தமோகுணத்தால் பிரமாதமும் மோகமும் அஞ்ஞானமும் பிறக்கும். சத்துவகுணத்திலிருக்கிறவர்கள் ஊர்த்வ லோகங்களான புண்ணியலோகங்களையடைவார்கள். ரஜோ குணப் பிரதானர்கள் மத்தியமான மனுஷ்ய லோகத்திலே ஜெனிப்பார்கள். நிஷித்தமான தமோ குணத்திலிருக்கிறவர்கள் அதோகதியான

நரககதியடைவார்கள். கர்த்தனாவன் குணங்களிலும் அன்னியமான கர்த்தனைப் பார்க்கிறதில்லை. எப்போது குணங்களுக்கு வேறாய் சாக்ஷியான நிஜரூபத்தையறிவனோ அப்போது என் சுவரூபம் அடைவன். தேகி தேகத்திலே பிறந்த இந்த மூன்று குணங்களையும் நிக்கிரஹித்து ஜன்மமிருத்யுஜராதுக்கங்களினின்று விமுக்தனாய் மோக்ஷமடைவன் என்ன, அர்ச்சுனன் கேட்கிறான்.

சர்வலோகேச்வரா! தேகியானவன் இந்த மூன்று குணங்களும் கடந்தவனுடைய லட்சணமென்ன? அவன் ஆசாரம் எப்படிப்பட்டது? அவன் எவ்விதத்தில் மூன்று குணங்களையும் அதிக்கிரமித்து வர்த்திப்பன்? என்ன, ஸ்ரீ ஜனார்த்தனர் சொல்லுகிறார் :- அர்ச்சுனா! குணாதீதனானவன் சத்துவ குணத்தாலே உண்டான சுகமும், ரஜோ குணகாரியமான பிரவிருத்தியும், தமோ குணத்தில் பிறந்த மோகமும் சம்பிரவிருத்தமானால் துவேஷியான்; நிவிருத்தமானபோது வாஞ்சியான். எவன் உதாசீனனைப் போலே யிருக்கிறவனாய் குணகாரியங்களிலே சலனமில்லாமல் குணங்களே வர்த்திக்கிறதென்றெண்ணிச் சாஞ்சலியம் அடையாமலிருப்பவனாய் கல்லும் பொன்னும் ஓடும் சரிசமமாய்ப் பார்க்கிறவனாய், பிரியாப்பிரியங்களும் நிந்தை துதியும் சமமாய்ப் பார்க்கிறவன் தீரன். மானாவமானங்களும் சத்துரு மித்துருகளில் சமனும், சகல உத்தியோகங்களும் தியாகம் பண்ணினவனுமானவன் குணாதீதன் என்னப்படுவன். எவன் என்னிடத்திலே அநந்நிய பக்தியினாலே பஜிப்பனோ அவன் குணத்திந்திரியங்களைக் கடந்து மோக்ஷமடைகிறதற்கு யோக்கியனாவான் ஆத்மாவுக்கு நானே ஆதாரம். அவ்வியயமான மோக்ஷத்துக்கும் சாசுவதமான தர்மத்துக்கும் அகண்டிதமான சுகத்துக்கும் நானே இருப்பிடம்.

பதினாலாவது குணத்திரய விபாகயோக அத்தியாயம் ஏறியருளப்பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

பதினைந்தாவது

## புருஷோத்தமயோக அத்தியாயம்

ஸ்ரீ கிருஷ்ண வாக்கியம் - வேர் மேலும் கீழே கிளைகளுமான இந்த சம்சாரமென்கிற விருக்ஷம் அசுவரமானதால் அசுவத்தம் என்று சொல்லுவார்கள். பிரவாக ரூபமாகையாலே அவ்வியயமென்றும் சொல்லுவார்கள். எந்த சமுசார விருக்ஷத்துக்கு

வேதங்கள் கிளைகளோ அந்த அசுவத்தை எவன் அறிவனோ அவன் வேதாந்தங்கள் அறிந்தவன். அந்த விருக்ஷத்திலுள்ள கிளைகள் கீழும் மேலும் வியாபித்திருக்கிறது. சத்துவாதி குணங்களாலே விருத்தியடைந்து விஷயங்களென்கிற கொழுந்துண்டாய் மனுஷ்ய லோகத்திலே கர்மாநுபந்தகமென்கிற விழுதுகளிறங்கி கீழும் மேலும் வியாபித்து இந்த லோகத்தில் இந்த விருக்ஷ ஸ்வரூபம் தெரியப்படுவதில்லை. அப்படியே இதன் ஆதியும் அந்தமும் இருப்பும் தெரியப்படுகிறதில்லை. அத்தியந்தம் கூட மூலமான இந்த அசுவத்தை அசங்கமென்கிற (பற்றின்மை என்கிற) சஸ்திரத்தால் சேதித்து, எந்த பதத்தையடைந்தால் திரும்ப ஜெனியார்களோ அப்படிப்பட்ட பதத்தை எவனால் அனாதியான இந்த ஜகத் பிரவிருத்தி விஸ்தரித்ததோ அந்த ஆத்தியனான புருஷனையே சரணமடைகிறேனென்று தேடத்தக்கது. அபிமான மோஹரஹிதாளும், வினிரஹித சங்கதோஷாளும், இச்சைகளைவிட்டு சீதோஷ்ணாதி துவந்ததுக்களினின்று விடுபட்டு அஞ்ஞானரஹிதாளும் ஆன ஆத்மஞானி நிஷ்டாள் அந்த பதம் அடைவார்கள். அப்படிப்பட்ட பதம் சூரியனும் சந்திரனும் அக்கினியும் பிரகாசிக்கப் பண்ணமாட்டார்கள். எந்த பதமடைந்து மறுபடியும் ஜெனியார்களோ அதுவே பரமமான என்னுடைய தானம். என் அங்கிசமான ஜீவலோகத்தில் அனாதியான ஜீவபூதன், சுஷுப்தியான நித்திரை மரணங்களில் லயங்களான மனசு முதலான ஆறு இந்திரியங்களால் திரும்ப சம்சாரத்தில் இழுக்கப்படுவன். தேஹேந்திரியங்களுக்கு ஈசுவரனான தேசியானவன் ஒரு சரீரத்திற் பிரவேசிக்கிறபோதும் அந்தச் சரீரத்தை விடுகிறபோதும் வாயுகேந்திரங்களைக் கிரஹித்துக் கொண்டு போகிற விதமாய் இந்திரியங்களைக் கூடக் கொண்டு போவன். அந்த இந்திரியங்கள் எவையென்றால் - கண்கள், காதுகள், சருமம், நாக்கு, மூக்கு, மனது இவைகளைப் பிடித்துக்கொண்டு விஷயங்களை அநுபவித்துக் கொண்டிருப்பன். அவன் தேகம் விட்டுப் போகிறபோதும் தேகத்திலிருந்து இந்திரிய சஹிதனாய் விஷயங்களை அநுபவிக்கிறபோது ஆத்மாவும் தேகமும் வேறென்று மூடஜனங்கள் அறியார்கள். ஞான திருஷ்டியுண்டான பேர் பார்ப்பார்கள். யத்தனவந்தாளான யோகீச்வரர்கள் யோக திருஷ்டியினாலே தன் தேகத்திலே வசிக்கிற ஆத்மாவைச் சரீரத்துக்கு அந்நியமாகப் பார்ப்பார்கள். யத்தனஞ் செய்கிறவர்களானாலும் சித்த சுத்தியில்லாத மந்த புத்தியுள்ள பேர் ஆத்மாவைக் காண மாட்டார்கள். மூன்று லோகமும் பிரகாசம் பண்ணப்பட்ட சூரியனுடைய தேஜசும் சந்திரனுடைய தேஜசும் அக்கினியினுடைய தேஜசும் அகில ஜெகப் பிரகாசமாயிருக்கும். அப்படிப்பட்டது என் தேஜசு என்று அறியவும்.

பூமியிலேயும் பிரவேசித்து என் சக்தியினாலே சகல பூதங்களைத் தரிக்கிறேன் ரஸாத்மகனான சந்திரனிலேயும் பிரவேசித்து சகல ஓஷதிகளையும் விருத்தியடைவிப்பன் நான். அக்னியாய் பிராணிகளுடைய தேகத்தை ஆச்ரயித்து, பிராண அபானசகிதனாய் அவர்கள் புசிக்கிற சதுர்வித அன்னமும் பாகம் பண்ணுவிப்பன். சகல பிராணிகளுடைய இருதயத்திலும் நான் அந்தர்யாமியாயிருக்கிறபடியினாலே அந்தப் பிராணிகளுக்கும் அறிவும் ஞானமும் மோகமும் உண்டாயிருக்கும். சர்வ வேதங்களினாலும் அறியத் தக்கவன். வேதாந்தம் செய்கிறவனும் வேதாந்தம் அறிந்தவனும் நானே. லோகத்திலே க்ஷரன் அக்ஷரன் என்றுபுருஷர்கள் இருவர். சர்வபூத சரீரங்களும் க்ஷரனென்று சொல்லப்படும். கூடஸ்தனான ஆத்மா அக்ஷரனென்று சொல்லப்படும். அவ்வியயனான எந்த ஈசுவரன் மூன்று லோகத்திலும் பிரவேசித்து அந்தர்யாமியாக இவையெல்லாம் தரித்துக் கொண்டேயிருப்பாரோ அவர் க்ஷராக்ஷரத்திலும் உத்தமரானதால் யோகத்திலேயும் வேதங்களிலேயும் நான் புருஷோத்தமன் என்று பிரசித்தனானேன்.எவன் அஞ்ஞானவிகினனாய் புருஷோத்தமனான என்னை அறிவனோ அவன் சர்வமும் அறிந்தவன். சர்வ பாவங்களில் என்னையே பஜித்துக் கொண்டிருப்பன். அனக! இந்த விதமாய் அதிரகசியமான இந்த சாஸ்திரம் நான் உனக்குச் சொன்னேன். பாரத! இதை அறிந்தவன் நல்ல புத்தியுண்டானவன். அவனே கிருதகிருத்யனாவான்.

பதினைந்தாவது - புருஷோத்தமயோக அத்தியாயம் ஏறியருளப் பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

## பதினாறாவது அத்தியாயம்

## தேவாசிர சம்பத்து விபாக யோகம்

ஸ்ரீ கிருஷ்ணர் வாக்கியம் : பயமில்லாமையும், சித்த சித்தியும் ஞானயோகமும் தானமும் தமமும் யக்ஞமும் வேதாத்யயனமும் தபமும் மிருதுதனமும் அஹிம்சையும் சத்தியமும் கோபமில்லாமையும் தியாகமும் சாந்தியும் பரதோஷங்களை எண்ணாமலிருக்கிறதும், பிராணிகளிடத்தில் தயையும் எந்த வஸ்துக்களிலேயும் அபேக்ஷயில்லாமையும், சாதுத்துவமும், லச்சையும் சபலத்துவமில்லாமையும் தேஜசும், க்ஷமையும் திருதியும் (தளராமையும்)

சுசித்துவமும் அந்நியருக்குத் துரோகம் பண்ணாமையும், அபிமான மில்லாமையும் பார்த்தா! இவ்வளவும் தெய்வ சம்பத்தை அடைந் தவனுக்கு உண்டாம்.

டம்பமும் கர்வமும் அதிக அபிமானமும் குரோதமும் சாதுக் களைத் தூஷிக்கிறதும் அஞ்ஞானமும் பார்த்தா! இந்தக் குணங்கள் அசுரசம்பத்து அடைந்தவனுக்கு உண்டாம். அர்ச்சுனா! மோக்ஷ மடைகிறதற்கு தெய்வசம்பத்தும் பந்தத்துக்கு அசுர சம்பத்தும் நியதமாயிருக்கும். நீ தெய்வ சம்பத்து அடைந்தவனாதலால் சோகியாதே. இந்த லோகத்தில் தெய்வமென்றும் அசுரமென்றும் பூதோத்பத்தி இரண்டு விதமாயிருக்கும். தெய்வமென்கிறது விஸ்தாரமாகச் சொன்னேன். அசுரம் விஸ்தாரமாகச் சொல்லு கிறேன். கேள். அசுரசம்பத்து அடைந்தவர்கள் தர்மாதர்மங் களிடத்தில் பிரவிருத்தியும் நிவிருத்தியும் தெரியமாட்டார்கள். சுசித்துவமும் ஆசாரமும் சத்தியமும் அவர்களிடத்தில் இல்லை. இந்த ஜகத்தில் வேதசாஸ்திரம் அசத்தியமென்றும் தர்மாதர்மங் கள் இல்லையென்றும் இந்த ஜகத்துக்கு ஈசுவரனில்லையென்றும் காமத்தினால் ஸ்திரீபுருஷர்களுடைய அன்னியோன்னிய சம்பந்தமே சிருஷ்டிக்கு ஏதுவென்றும் வேறொன்றுமில்லை யென்றும் சொல்லுவார்கள். இப்படிப்பட்ட திருஷ்டியை அவலம் பித்து நஷ்டாத்துமாக்களாய் புத்தியீனாளாய் ஜகத்துக்கு ஹிதமில்லாத உக்கிரமான ஈன சாதிகர்மங்களை ஆசரித்துக் கொண்டு "இன்றைக்கு எனக்கு இவ்வளவு தனம் லபத்தம் ஆச்சுது" என்று எத்தனை வந்தாலும் ஆசையடங்காமல் நிரம்பாத கர்மத்தை ஆச்ரயித்து டம்பமான மதானுவித்தாளாய் தனக்கு அகப்படாத வஸ்துக்களில் ஆசைப்பட்டுக்கொண்டு மோகத்தையும் கோபத்தையும் கிரஹித்துக்கொண்டு அசுசிவிர தாளாயப் பிரவர்த்திப்பார்கள். தங்கள் சாவு எந்நேரமென்று நிச்சயமில்லாமலிருக்க கற்பாந்த பரியந்தம் இருப்போம் என்று சிந்தையுண்டானவராய் காம போகமே பரம புருஷார்த்தமென்று நிஜமுண்டானவனாய் ஆசையென்கிற பாசங்களினாலே கட்டுப் பட்டுக் காமகுரோத பராயணர்களாய் அந்தக் காமபோகத்துக்காக அநியாயத்திலே தம்மை ஆச்ரயிப்பார்கள். "அதிர்ஷ்டமென்றும் வேறேயுண்டோ? என் புஜ பலத்தினாலே வேண்டியது தேடுகிறேன். இன்னம் மனோரதங்களை அடை கிறேன். இம்மாத்திரம் தனம் எனக்கு இருக்கிறது. திரும்ப வும் தனம் எனக்கு உண்டாகிறது. இந்தச் சத்துரு என்னாலே ஹதனானான். மற்ற சுத்துருக்களையும் சங்கரிக்கிறேன். எல்லாருக்கும் நானே ஈச்வரன். என் புஜபலத்தினாலே நானே போகங்களை அநுபவித்தேன். நானே சித்தம்: நானே பலவான்;

நானே சுகி; தனத்தினாலும் குலத்தினாலும் எவனும் எனக்குச் சரிசமானவன் அந்நியமாய் யார் இருக்கிறார்கள்? என்னுடைய வல்லமையினாலே சகலயக்ஞங்களும் பண்ணுவேன்; சகல தானங்களும் பண்ணிச்சந்தோஷப்படுவேன்" என்று அஞ்ஞான நினைப்புகளே நினைத்துக் கொண்டு சித்தத்தில் அநேக பிராந்தி பிறந்து அஞ்ஞானமென்கிற மோக வலையிலே அகப் பட்டுக் காமபோகங்களிலே இச்சையுண்டாய் அசுசியான நரகத்திலே விழுவார்கள். தன்னைத்தானே வெகுமானம் பண்ணிக்கொண்டு ஒருத்தரிடத்திலும் வணக்கமில்லாமல் தனத்தினாலே மதமும் மானமும் மோகமும் உண்டாகி, டம்பத்தி னால் அவிதிபூர்வகமாய் சோமயாஜியென்று பிரக்கியாதியடைய வேண்டுமென்று நாமமாத்திரங்களான யக்ஞங்கள் பண்ணிக் கொண்டிருப்பார்கள். அகங்காரம் பலம் கர்வம் காமம் குரோதம் இவைகளை ஆச்ரயித்துக்கொண்டு சுதேக பரதேகங்களில் அந்தரியாமியாயிருக்கிற என்னை அசூயையோடே கூட துவேஷிப்பார்கள். குரூரர்களாய் பாபகர்ம சகிதர்களாய் என்னைத் துவேஷிக்கிற நராதமர்களைச் சனன மரண சகிதமான சம்சாரத்தில் அசுரயோனிகளில் பிறக்கும்படி பண்ணுவிப்பன். அர்ச்சுனா! அவ்விதத்தில் அசுரயோனிகளையடைந்த மூடர்கள் அந்தச் சன்மத்திலும் என்னைப் பஜியாமல் இருப்பின் அதமமான கிருமிகீடாதி சன்மங்களையடைவார்கள். ஆத்துமநாசகரங் களாய் நரகதுவாரங்களானவை திரிவிதம். அவை ஏதென்றால் - காமகுரோதலோபங்கள். ஆனதால் இந்த மூன்றையும் தியஜித்து விடு. அர்ச்சுனா! நரகங்களுக்குத் துவாரங்களான தாமச குணங்களுக்கு வாசமான காமகுரோத லோபங்களிலே விடு பட்டவன் என்னிடத்தில் ஞானமுண்டாகிற சிரேயஸ் சம்பாதித்துக் கொண்டு அதனாலே பரமமான மோக்ஷமடைவன். எவன் சாஸ்திரவிதியை விட்டுத் தனக்கு வேண்டியபடியே காமிய கர்மங்களிலே வர்த்திக்கிறானோ அவன் ஞானமும் சுகமும் மோக்ஷமும் அடையமாட்டான். ஆனதால் உனக்குத் தர்மா தர்மங்களையறிதற்குச் சுருதியிஸ்மிருதி புராணங்களே பிரமாணங்கள். சாஸ்திர ஹிதமான கர்மங்களறிந்து கர்மங்களை ஆசரி.

இவை ஸ்ரீமகாபாரதத்தில் ஸ்ரீ பகவத்கீதாசாஸ்திரத்தில் பதினாறாவது தெய்வாசுரசம்பத்துவிபாகயோக அத்தியாயம் ஏறியருளப்பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

## பதினேழாவது அத்தியாயம்

## சிரத்தாத்ரய விபாகயோகம்

அர்ச்சுனன் கேட்கிறான்: கிருஷ்ணா! யாதொருவர் சாஸ்திர விதியைக் கடந்து சிரத்தையோடேகூடி தேவதைகளை அர்ச்சிப்பார்களோ அவர்கள் நிஷ்டை சாத்துவிகமோ, ராஜஸமோ தாமஸமோ என்ன ஸ்ரீ ஜனார்த்தனர் வாக்கியம்: தேகிகளுக்குச் சுபாவ ஜன்னியமான சிரத்தை சாத்துவிக ராஜஸ தாமஸ என மூன்று விதமாயிருக்கும். அதைக் கேளும் அர்ச்சுனா! சர்வ பிராணிகளுக்கும் பூர்வ ஜன்மசம்ஸ்காரமாய் சத்துவாதிகுணா நுசாரணியான சிரத்தையுண்டாயிருக்கும். யாதொரு புருஷனுக்குப் பூர்வஜன்மத்தில் எந்த சிரத்தையுண்டோ அந்தச் சிரத்தையே இந்த ஜன்மத்திலும் உண்டாம். சாத்துவீகர்கள் தேவதைகளைப் பூஜிப்பார்கள், ராஜஸர்கள் யக்ஷராக்ஷதர்களை ஆராதிப்பார்கள். தாமஸர்கள் பூதபிரேதகணங்களையே அர்ச்சிப்பார்கள். எந்த ஜனங்கள் டம்ப அகங்கார சமாயுக்தர்களாய் காமராகபலான் விதர்களாய் அசாஸ்திரவிகிதமான கோரதாபங்கள் ஆசரித்து, சரீரத்திலேயிருக்கிற பஞ்ச பூதங்களையும் வியர்த்தமான உபவாசங்களால் கிருசிக்கச்செய்து (இளைக்கச் செய்து வருத்தி) சரீரத்துக்குள் அந்தர்யாமியாயிருக்கிற என்னையும் என்னுடைய ஆஜ்ஞா பங்கம் என்னப்பட்ட அபராதத்தால் கிலேசமடையப் பண்ணுவார்கள். அவர்களை அசுரப்பிரகிருதியென்று நிச்சயமாய் அறி. ஜனங்களுக்கு ஆகாரமும் யஜ்ஞமும் தபசும் தானமும் மூன்று விதமாயிருக்கும் அதனுடைய பேதங்களைக் கேள். ஆயுசும் சத்துவமும் பலமும் ஆரோக்கியமும் சுகமும் பிரீதியும் இவைகளை விருத்திபண்ணுகிறதாய் ரசவத்தங்களாய் மதுரகங்களாய் மிருதுக்களாய் ஸ்திரங்களாய் (உரமுடையனவாய்) மனோகரங் களான ஆகாரங்கள் சாத்துவீகர்களுக்குப் பிரியமாயிருக்கும். அதிகமான கசப்பும் அதிகமான புளிப்பும் அதிகமான உப்பும் அதிக காரமும் அதி உஷ்ணமும் அதிருக்ஷாரதமும் அதிக உவர்ப்பும் அதிவிதாகரமும் (அதிக எரிப்பும்) ஆன ஆகாரங்கள் ராஜஸிகர் களுக்கு இஷ்டமாயிருக்கும். அதிதாபமும் சோகமும் ரோகமும் உண்டாக்கும் யாதயாமம் என்கிற குளிர்ந்துபோன சாதமும் ரசம் போனதும் துர்க்கந்தமுடைய ஊசிப்போன சாதமும் ஒருத்தர் எச்சிலும் பரிசுத்தமில்லாததும் இவைகள் தாமஸிகர்களுக்குப் பிரியமாயிருக்கும். எந்த யஜ்ஞம் அவசியத்தவ்யமென்று மனசு சமாதானத்தால் பல வாஞ்சையில்லாதவர்களாய் விதிப்படி பார்த்துச் செய்யப்படுமோ அது சாத்துவீகம் என்னத்தகும். சற்காரம் (உபசாரம்) எண்ணாமல் பலம் வேண்டிய வெகுமான

டம்பார்த்தமாகவும் எந்த யஜ்ஞம் செய்வார்களோ - தனஞ்சயா! - அந்த யஜ்ஞம் ராஜஸம் என்று அறி. விதிஹீனமும் அன்னதான மில்லாமலும் மந்த்ரகிரியாஹீனமும் தட்சிணையில்லாமலும் சிரத்தையில்லாமலுமான யக்ஞம் தாமஸம் என்று சொல்லுவார்கள். தெய்வ பூஜையும் பிராம்மண ஆராதனமும் குருசுச்ருஷையும் பிராஜ்ஞ (அறிவின் மிக்கோர்) சன்மானமும் சுசித்துவமும் ருசுபாவமும் (நேர்மையும்) பிரமசரியமும் அஹிம்சையும் இவைகள் சரீர தவம் என்னப்படும். பயங்கரமில்லாமல் சத்தியமும் பிரியமும் இதங்களான வாக்கியங்களே பேசிக்கொண்டு வேதாப்பியாசம் பண்ணுகிறதும் ஆன இவைகள் வாக்காற் செய்யப்படும் தவம் என்னப்படும். மனப்பிரசாதமும் சௌம்மியத்துவமும் மௌனமும் ஆத்ம நிக்ரஹமும் பாவசுத்தியும் என்கிற இவைகளால் ஆனது - மானசீகமான தவம் என்னப்படும். அதிக சிரத்தையோடே ஆசரிக்கிற தபசு குணபேதங்களாலே மூன்று விதமாய் இருக்கும்.

அது எப்படியென்றால் பலவாறு ஆசைரகிதர்களும் ஏகாக்கிர சித்தர்களுமான மானிடர் செய்கிற தபசு சாத்துவீகம் என்னப் படும். சத்காரம் இச்சியாமல் வெகுமானார்த்தமாய் தன்னை ஒருத்தர் பூஜை பண்ணவேணுமென்றும் டம்பார்த்தமாய் செய்யப் படுகிற தபசு ராஜஸமுமாய் சலமும் (நிலையற்றதும்) த்ருவ மில்லாமலும் (நீடித்து நில்லாமலும்) இருக்கும் என்று சொல்லப் படும். மூடனாய் சலனம் பிடித்துப் பிறர்களைக் கெடுக்கும் பொருட்டும் பீடிக்கும் பொருட்டும் எந்த தபசு செய்யப்படுகிறதோ அது தாமசமென்று சொல்லப்படும். புண்ணிய காலத்தில் பிரதியுபகாரம் பண்ணமாட்டாத தரித்திரனான சத்பாத்திரங்களில் கொடுக்கிற தாதவியம் என்று நிச்சயம் பண்ணிச் செய்கிற தானம் சாத்துவீகம். பிரதியுபகாரார்த்தமாய் பலனபேக்ஷித்து மனக் கிலேசத்தோடே எந்த தானம் செய்வார்களோ அது ராஜஸம் எனப்படும். அசுத்ததேசத்திலேயும் அசுசிகாலத்திலேயும் அபாத்திரத்தில் அவமான பூர்வகமாய் எந்தத்தானம் கொடுக்கப் படுமோ அது தாமசம் என்று சொல்லப்படும். பிரணவ மென்றும் (ஓம்) 'தத்' என்றும் 'சத்' என்றும் (ஓம்தத்ஸத்) பிரம்மத்துக்கு மூன்று நாமதேயங்களுண்டு. அவைகளினாலே பிராம்மணர்களும் வேதங்களும் யக்ஞங்களும் பூர்வத்திலே சதுர்முகனாலே உண்டாயிற்று. ஆனதால் பிரமவாதிகள் செய்கிற சாஸ்திரோக்தங்களான யக்ஞதானதபக்கிரியைகள் பிரணவோச் சாரணபூர்வகமாய் செய்யப்பட்டிருக்கிறது. மோக்ஷகாங்க்ஷை யானவர்கள் 'தத்' சப்தம் உச்சரித்துப் பலம் அபேக்ஷியாமல் யக்ஞதானதபங்கள் ஆசரிப்பார்கள். உள்ளதென்னப்பட்ட

சத்பாவத்திலும், இந்தவஸ்து சிரேட்டமென்னப்பட்ட சாதுபாவத்திலும் 'தத்' என்கிறதைப் பிரயோகிப்பார்கள். பார்த்தா! அவ்விதத்தில் விவாகாதி சுபகர்மங்களிலும் 'சத்' சப்தம் பிரயோகிப்பார்கள். யக்ஞுதானதபங்களில் எந்த நிலைக்கடை (நிலைபெறுதல்) உண்டோ அதுவும் 'ஸத்' சப்தம். நாமத்திரய வாச்சியனான பரப்பிரம்மத்தை உத்தேசித்துச் செய்கிற பூஜாதி கர்மங்களும் "ஸத்" என்றே சொல்லப்படும். சிரத்தையில்லாமல் செய்கிற ஓமமும் தானமும் தபசும் மற்றுமுண்டான கர்மங்கள் ஏதேதுண்டோ அது அத்தனையும் "அஸத்" என்று சொல்லப்படும். அந்த "அஸத்" கர்மங்கள் இகலோக பரலோகங்களில் பலப்ரதங்களல்ல.

இது ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தில் பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் சிரத்தாத்ரய விபாகயோகம் என்கிற பதினேழாவது அத்தியாயம் ஏறியருளப் பண்ணினது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ கிருஷ்ணசுவாமியார் இந்தப் பதினேழு அத்தியாயஞ் சொல்லி, அர்ச்சுனனைப் பார்த்து இதுதான் சேதனர்கள் கடைத்தேறுகின்ற மார்க்கமென்று சாதித்ததில், அர்ச்சுனன் இப்போது தேவரீர் சாதித்த பல அத்தியாயங்களில் ஒன்றை அனுஷ்டித்தாலும் மோக்ஷம் சித்திக்கச் சந்தேகமில்லை. ஆனால் இப்பேர்ப்பட்ட கடினமான அனுஷ்டானம் அனுஷ்டித்து வரும்போதும் கிரியா ஞானமானது அல்லது நித்திய நைமித்திய பிராயச்சித்த உபாசனாதி கர்மங்களைப்பண்ணி வருகிறபோதும் யோகாப்பியாசம் பண்ணி வரும்போதும் மந்திரஹீனம் வந்தாலும் யக்ஞாதி கிரியைகளில் லோபம் வந்தாலும் அதோகதியும் பிரமமனு சத்வந்தத்துவமும் உண்டாகா நிற்கும். ஆகையால், இப்போது சாதித்த அர்த்தப் பிரகாரம் அடியேன் அநுஷ்டித்து அந்த மார்க்கப் பிரகாரம் நடந்துகொண்டால் ஒரு அத்தியாயமே சித்தியைக் கொடுக்கும். மோட்சம் அடைவிக்கும் இப்படிப்பட்ட கடின தபசும் யோகமும் கர்மமும இந்தக் காலத்திலே என்னாலே செய்துமுடியாது. மேலும் துவாபரயுகம் கடைசியாய் இப்போது கலிசம்பவித்துச் சேதனர்கள் பலவீனமாயிருக்கிறார்கள். அடியேன் பலவானாயிருந்தும் இப்படி கடினமான மார்க்கத்தில் நடக்கப்பட்ட வல்லமையில்லாத அசக்தனென்றும் மறுபடியும் தேர்த்தட்டில் சோகித்து விழுந்துவிட்ட அர்ச்சுனனை எடுத்து மார்போடு அணைத்துத் தேற்றி "அர்ச்சுனா! பயப்படவேண்டாம்.

மேலே சொல்லிய பதினேழு அத்தியாயமாகிய கீதையென்னாலே சொல்லப்பட்டது. இந்தக் காலத்தில் இந்த அனுஷ்டானப்படி நடக்கிறது மகா பிரயாசைதான். இப்போது யோகாப்பியாசத்தி லிருந்து அனுஷ்டிக்கச் சக்தனல்லன் ஆனபடியினாலே உனக்குச் சரமசுலோகமென்று அதன் பூர்வார்த்தமும் உத்தரார்த்தமும் சுளுவாய் ஒரு சுலோகம் உபதேசிக்கிறேனென்று மகாகிருபை யுடனே "வாராய் அர்ச்சுனா"! என்று அழைத்து "இப்போது நான் உபதேசிக்கப் போகிற யாதொரு சரமசுலோகம் பரமபுருஷார்த்த மானது. சொல்லுகிறோம், கேளும். அர்ச்சுனா! செவியால் பதினெட்டாவது அத்தியாயம் மோட்ச பதமான நினைப்புக்கூடிய யுக்தத்துக்கு எள்ளளவும் சந்தேமில்லை. இது நிர்ப்பரனாய் என்னையே உபாயமாகப் பற்றுகிற விவரம் மேலே சொல்லப் போகிறது என்று கிருஷ்ணர் சொல்ல, அர்ச்சுனன் ஆனந்தத்தை யடைந்தவனாய் மேலே கேட்கிறான். அதனை அடுத்த அத்தியாயத்தில் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## பதினெட்டாவது அத்தியாயம்

## சகல உபநிஷதார்த்த பிரதிபாதக மோக்ஷயோகம்

அர்ச்சுனன் சொல்லுகிறான் : இருஷீகேசா! கேசிநிஷூதன! மகாபாகுவே! சந்நியாசத்துக்கும் தியாகத்துக்கும் யதார்த்தமான தத்துவம் வேறே வேறே விதமாய் நான் அறிய இச்சிக்கிறேன் என்ன, ஸ்ரீ ஜனார்த்தனர் வாக்கியம் : காமிய கர்மங்களை விடுகிறது சந்நியாசமென்றும் சர்வ கர்மங்களில் பலன் யோசிக் காமல் இருக்கிறது தியாகமென்றும் வித்வாங்கிசர்கள் சொல்வார் கள். சில வித்வான்கள் ஹிம்ஸாத்மகமான யக்ஞங்கள் பண்ணக் கூடாதென்றும், சில வித்வாங்கிசர்கள் யக்ஞங்கள் அவசியம் பண்ணவேணும் என்றுஞ் சொல்லுவார்கள். பரதர்ஷபா! அந்தத் தியாகத்தில் என் நிச்சயத்தைக் கேளாய். புருஷவியாக்ர! தியாக மாவது குணபேதங்களால் மூன்று விதங்களாயிருக்கும். யக்ஞ தான தபோ ரூபங்களான கர்மங்கள் விடக்கூடாது. யக்ஞமும் தானமும் தபசும் வித்துவாங்கிசர்களுக்குச் சித்த சுத்திகர்மமாய் இருக்கும். பார்த்தா! கர்மங்களை நான் செய்கிறேனென்கிற கர்த்துருவத்தமும் அந்தக் கர்மங்களாலே உண்டாகிற பலமும் பரித்யஜித்துச் செய்ய வேணுமென்று உத்தமமான என் மதம். நித்தியமான கர்மத்துக்குப் பரித்தியாகம் கூடாது. அஞ்ஞானத்

தால் அந்தக் கர்மங்களைப் பரித்தியஜித்தால் அந்தத் தியாகம் தாமசம் என்று சொல்லப்படும். எவன் காயகிலேகபயத்தினால் கர்மங்களைத்துக்ககரமென்றுவிடுகிறானோ அவன்ராஜஸதியாகம் செய்தவனாகையால் மோக்ஷமடையமாட்டான். அர்ச்சுனா! நியதமான கர்மத்தை அவசியம் கர்த்தவ்யமென்று சங்கடத்தை யும் பலத்தையும் பரித்யஜித்துக் கர்மத்தை எவன் ஆசரிப்பனோ அந்தத் தியாகம் சாத்துவீகம் என்னப்படும். பலத்தியாகியானவன் சத்வஸமாவிஷ்டனும் மேதாவியும் சின்ன ஸம்சயனுமாய் [சந்தேகம் தெளிந்தவர்] கிலேசகரமான கர்மங்களில் துவேஷ மடையான். சுகரங்களான கர்மங்களில் அகப்படான். தேக முண்டான போதே கர்மங்கள் செய்யாமலிருக்கிறது அசாத்திய மாகையால் கர்மங்கள் ஆசரித்துப் பலத்தியாகஞ் செய் கிறவனே தியாகி என்னப்படுவன். கர்மங்கள் ஆசரித்துப் பலாபேட்சை உண்டானவனுக்குத் தேகாந்தரத்தில் சுவர்க்க மத்திய நரகலோக முண்டாகுமாகையால் பலத்தியாகம் பண்ணப் பட்டவன் கிருதார்த்தனாவான். மகாபாகுவே! சர்வ கர்மங்களும் சித்திக்கிறதற்குச் சாங்கியசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஐந்து காரணமும் போதிக்கிறேன். கேள். அவை எவையென்றால் (1) அதிஷ்டான மென்னப்பட்ட சரீரமும் (2) கர்த்தனான ஜீவனும் (3) கரணமென்னப்பட்ட கர்மேந்திரிய ஞானேந்திரியமும் மனசும் முதலான பதினாலு இந்திரியங்களும் (4) சேஷ்டை என்னப்பட்ட சரீரத்தை நடத்துவிக்கிற பிராண அபானாதி வாயுக்களுடன் நானாவித சேஷ்டையும் (5) இந்த நாலுக்கும் அந்தர்யாமியான தெய்வமும் ஐந்தாவது நரர்களால் தர்மமாகிலும் அதர்மமாகிலும் எந்தக் கர்மங்கள் சரீரம் வாக்கு மனசினால் ஆரம்பிக்கப்பட்டதோ அக்கர்மத்துக்கு இந்த ஐந்தும் ஏதுவாம். ஜீவனுக்குப் பரமாத்மா கர்த்தாவாயிருக்க, கேவலம் ஜீவனே கர்த்தாவென்று எவன் நினைக்கிறானோ அவன் யதார்த்த ஞானமில்லாத துன்மதி யாகையால் யதார்த்தமான பரமாத்துமாவை யறியமாட்டான். எவன் புத்தியிலே பரமபுருஷனே கர்த்தாவென்று நினைத்து, தான் கர்த்தாவென்கிற ஆங்காரத்தைவிட்டு, இந்தக் கர்மபலன் தன்னுடையதில்லையென்று எவன் கர்மபலத்திலே கூடாமலிருக் கிறனோ அவன் சகல லோகத்தாரையும் கொன்றாலும் அவன் கொன்றவனுமல்லன். அந்தப் பாவங்கள் அவனைத் தொடா. ஞானம் ஞேயம் பரிஜ்ஞானம் என்னப்பட்ட அறிகிறதும், அறியப் படுகிறதும் அறிகிறவனும் என்று கர்மபிரவிருத்தி மூன்று விதமாய் இருக்கும். கரணம் கர்மம் கர்த்தா என்றும் கர்ம சங்கிரஹம் மூன்று விதமாயிருக்கும். ஞானமும் கர்மமும் கர்த்தா வும் 'குணபேதங்களினால் மூன்று குணமென்று சாங்கிய

சாஸ்திரத்திற் சொல்லப்படும். அதை யதார்த்தமாகக் கேள். விபக்தங்களான ஸ்தாவர சங்க மாத்துமகமான சகல பூஜல பூதங்களிலும் பூர்ணமாய் அவ்வியயமாய் ஏகரூபமான பரமாத்தும தத்துவத்தை எந்த ஞானத்தால் பார்க்கிறானோ அது சாத்துவிக ஞானம், எந்த ஞானத்தால் சகல பூதங்களிலேயும் இருக்கிற ப்ருதக் (தனித்தனி) விதங்களான க்ஷேத்திரஞானம் ப்ருதக் (வேறுபட்ட) பாவத்திலே தெரியப்படுகிற ஞானம் ராஜஸம் என்னப்படும். ஈசுவரின் ஓரிடத்திலேயல்லாமல் சமஸ்தத்திலே யும் வியாபித்திருக்கவில்லை என்கிற ஞானம் தாமஸம் என்னப் படும். நியதமும் சங்கரஹிதமும் ராகத்வேஷஹீனமாய் பொருளில் பல இச்சையில்லாதவனாலே ஆசரிக்கும் கர்மம் சாத்வீகம் என்னப்படும். கர்மங்களிலுள்ள சுபாசுப பலங்களைக் கோரி அகங்கார சஹிதமாய் பஹுகிலேசத்துடனே ஆசரிக்கப்படும் கர்மம் ராஜஸம் என்னப்படும். விரயமும் பிராணிகளின் ஹிம்சை யும் தன் புருஷசக்தியும் விசாரியாமல் கேவலம் அஞ்ஞானத் தாலே ஆசரிக்கிற கர்மம் தாமசம் என்னப்படும். ஆச்ரிதரஹி தனாய் நான் செய்கிறேன் என்கிற கர்த்தத்துவமில்லாதவனாய் தைரிய - உற்சாக சமன்விதமாய் கர்மங்களுக்குப் பலன் உண்டானாலும் இல்லாவிட்டாலும் நிரவிகாரனான கர்த்தா சாத்துவீகன். ராகாநிவிதனும் பலத்தை அபேக்ஷிக்கிறவனும் லுப்தனுமாய் ஹிம்சனுமாய் அசுசியனுமாய் லாபாலாபங்களிலே சந்தோஷமும் விசனத்தையும் அடைந்துகொண்டு கர்மங்களை ஆசரிக்கிற கர்த்தா ராஜஸன். சபலசித்தனுமாய் விவேகஹீநனாய் ஒருத்தரிடத்திலும் வணக்கமில்லாமல் ரகசியமாய் அப்பிரிய மாயம் பண்ணப்பட்டவனாய் பிறர்களுக்கு அவமானம் பண்ணு கிறவனாய் உத்தியோகர் ஹிதனாய் எவ்வேளையும் சிந்தா பரனாய் தீர்க்க வயிரியமாய் கர்மம் ஆசரிக்கிற கர்த்தா தாமசன் என்னப்படும். தனஞ்சயா! சாத்துவிகாதி குணத்திலே திரிவித மாய் வேறான புத்திபேதமும் தைரிய பேதமும் விவரிக்கிறேன். கேள். பார்த்தா! பிரவிருத்தி நிவிருத்திகளும் காரியா காரியங் களும் சுபாசுபங்களும், "இந்த கர்மம் பண்ணலாம் பண்ணலாகாது" என்று சாஸ்திரயுக்தமாகையால் பயமில்லை; சாஸ்திரயுக்தமாகாதாகையால் பயமுண்டு என்றும், பந்த மோக்ஷமும், விசாரிக்கிற புத்தி சாத்துவீகபுத்தி. தர்மாதர்மமும் காரியாகாரியங்களிலும் சம்சயாத்துமகமான புத்தி ராஜஸம் என்னப்படும். பார்த்தா! எந்த புத்தி அஞ்ஞான விரதமாய்க் கொண்டு தர்மம் அதர்மமாகவும், காரியத்தை அகாரியமென்றும் சகலார்த்தமும் விபரீதமாக எண்ணப்பட்ட புத்தி தாமஸி என்னப் படும். பார்த்தா! விஷயாந்த ரஹிதமான யோகத்தினாலே, மனசு பிராணேந்திரியங்களை எந்த தைரியத்தினாலே நிறுத்தப்

படுமோ அது சாத்துவீக தைரியம். அர்ச்சுனா! பிரஸங்கத்தாலே (ஆழ்ந்த பற்றினாலே) பலத்தை அபேக்ஷித்து, எந்தத் தைரியங்களால் தர்மகாமார்த்தத்தைத் தரிக்குமோ அந்தத் தைரியம் ராஜஸி என்னத்தகும். பார்த்தா! துர்புத்தியானவன் எந்தத் தைரியத்தால் விடாத நித்திரையும் பயமும் சோகமும் விவாதமும் மதமும் விடான். அந்தத் தைரியம் தாமஸி என்னப்படும். பார்த்தா! சுகமும் மூன்றுவிதம். அதை விசதமாக்குகிறேன் கேள். யாராகிலும் அத்தியாந்த அப்பியாசத்தினாலே பிரம சுகத்தில் ரமித்துக் கொண்டிருப்பனோ அவன் துக்காந்தத்தை (துன்பத்தின் முடிவை)யடைவன். எந்தச் சுகம் ஆரம்ப காலத்தில் விஷம்போலவும் யோகாப்பியாச முடிந்த பிறகு அமிர்தோபமானமால் ஆத்மஞானம் நிர்மலமாய் பிரகாசிக்கிற புத்தியாலே பிறந்த சுகம் சாத்துவீகம். எந்த சுகம் ஆரம்ப காலத்தில் விஷயேந்திரிய சம்போகத்தால் அமிர்தோபமானமாய் பரிணாமத்தில் விஷம் போலிருக்குமோ அந்த சுகம்ராஜஸம். எது ஆதி அந்தங்களிலும் தனக்கு மோககரமாய், நித்திரை, ஆலசியம் (சோம்பல்) பிரமாதம் (மதீயீனம்) இவைகளினால் உண்டான சுகமே சுகம் என்று இருக்கிறதோ அந்த சுகம் தாமசஸம், சுவர்க்கத்திலேயாகட்டும், பூமியிலேயாகட்டும், பிரகிருதி சம்புவங்களான மூன்று குணங்களுடனே கூடாத பிராணிகளில்லை. பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திராளுக்குத் தங்கள் தங்கள் சுபாவத்திலுண்டான சத்துவாதிகுணங்களினாலே கர்மங்கள் விபக்தங்களாயிருக்கும். அதெப்படியென்றால், வாக்கிய சமமும், இந்திரிய நிக்கிரஹமென்கிற தமமும், போகங்களை விட்ட தபசும், சாஸ்திர யுக்தாசாரமான சசித்துவமும் விகாரமில்லாத சாந்தியும், குடில புத்தியில்லாத மனோநிர்மலமும், பரதத்துவத்தையறிகிற ஞானமும், பரலோகம் உண்டென்கிற ஆஸ்திக்யமும், வேதார்த்தமே சத்தியம் என்கிற நிச்சயமும் பிராமணனுக்கு உண்டான சுபாவ கர்மம். யுத்தத்திலே பயமில்லாத சவுரியமும், சத்துருக்களுக்கு உட்படாத தேஜசும், யுத்தம் விடாத தைரியமும், யுத்தம் நிர்வகிக்கிற உபாயமும், யுத்தத்தில் ஓடிப் போகாமல் இருக்கிறதும், உசிதமான தானமும், ஜனங்களுக்கு ஈசுவரபாவமும், க்ஷத்திரியனுக்கு உண்டான சுபாவ கர்மம். பயிரிடுகிறதும் பசுக்களை ரக்ஷிக்கிறதும் வியாபாரம் பண்ணுகிறதும் வைசியனுக்குண்டான சுபாவ கர்மம். பரிசர்யாத்மகம் (பிறருக்குச் சேவை வடிவான கர்மம்) சூத்திரனுக்குண்டான சுபாவ கர்மம். தங்கள் தங்கள் கர்மங்களில் நிலை பெறுத்தலையுண்டான ஜனங்கள் கிருதார்த்தராவார்கள். அது எப்படியெனில் கேள்; எவனாலே சர்வபூதங்களும்

பிரவிருத்தித்திருக்கும், எந்த மகாபுருஷன் இந்த சகல பிரபஞ்சமும் வியாபிக்கப்பட்டிருக்கும், அந்த ஈசுவரனைச் சுவகர்மத்தினால் ஆராதிக்கிறவர்கள் மோக்ஷம் அடைவார்கள். அதிகமான பரதர்மம் ஆசரிக்கிரத்தினும் விகுணமானாலும் சுவத தர்மமே சிரேஷ்டம். வர்ணானு குணமான கர்மம் ஆசரிக்கிறவன் பாபமடையமாட்டான். அர்ச்சுனா! தன் சாதிக்குச் சகஜமான கர்மம் தோஷமுண்டாயிருந்தாலும் விடலாகாது. அக்கினியானவன் புகையோடு கூடினாற்போல சர்வதர்மங்களிலும் கொஞ்சம் தோஷமுண்டாயிருக்கும். புத்திரமித்திராதிகளிடத்தில் ஆசக்தியில்லாமல் ஜிதேந்திரியனாய் இச்சாரஹிதனுமாய் சந்நியாசத்தாலே பரமமான தியானநிஷ்டை அடைவன். அர்ச்சுனா! இப்படி ஞானசித்தனான யோகி எவ்விதத்தில் பிரமத்தையடைவனோ அவ்விதத்தைப் போதிக்கிறேன் கேள்: ஞானத்துக்குப் பரம நிஷ்டை ஏதுண்டு அதையும் கேள். பவித்திரமான புத்தியுடனே கூடித் தயாரித்ததினாலே மனசை நிறுத்தி சப்தாதி விஷயங்களைப் பரித்யஜித்து ராகதுவேஷங்களை நிராகரித்து தியானத்துக்கு விரோதமில்லாத ஏகாந்த ஸ்தலத்திலேயிருந்து கொஞ்சம் போஜனம் பண்ணி வாக்கு சரீரம் மனம் தியானத்திலே நிறுத்தி வைராக்கியமடைந்து அகங்காரமும் பலமும் தானேயெல்லாமென்கிற கர்வமும் அதர்மமும் காமகுரோதமும் திரவிய சங்க்ரகமும் தியஜித்து எந்த வஸ்துக்களிலேயும் மமத்துவமில்லாமல் சாந்தனான யோகி பிரமசாயுச்சியத்தை அடைவன். ஆத்ம ஸ்வரூப நிஷ்டனாய் தைரியத்தினாலே பிரசன்னமான மனசுண்டானவனாய் போன வஸ்துக்களைக் குறித்துச் சோகியாமல் வராத வஸ்த்துக்களைக் குறித்து வாஞ்சியாமல் சகல பூதங்களிலும் சமனாய் பரமமான என் பக்தியை அடைவன். அந்த பக்தியாலே நான் எந்த சுவரூபனோ எந்த சச்சிதானந்தரூபனோ அப்படிப்பட்ட என்னை யதார்த்தமாய் அறிந்து, அதன்பிறகு என்னையடைவன். நித்தியமும் என்னை ஆச்ரயித்துக் கொண்டு சர்வகர்மங்களும் செய்தால் என் பிரசாதத்தினால் சாசுவதமும் அவ்வியயமுமான மோக்ஷத்தையடைவன். ஆகையால் நீயும் மனதினாலே சகல கர்மங்களும் பண்ணினவனும் பண்ணி வைக்கிறவனும் அந்தப் பலத்தையடைகிறவனும் நானே என்று சகல கர்மங்களையும் எனக்கு அர்ப்பிதம் பண்ணி நானே பரம புருஷார்த்தமென்று நிச்சயித்தவனாய் என்னையே தியானரூபமான புத்தியோகத்தை ஆசரித்து எப்போதும் என்னிடத்தில் சித்தமுண்டானவனாய் விடு - இந்தப்படி என்னிடத்தில் சித்தம் நிறுத்தினாயேயானால் என்னுடைய அனுக்கிரகத்தினாலே சதுர்த்தரமான (எல்லா தடைகளையும் உடைய) சம்சார துக்கத்தி

லிருந்து விடுபடுகிறாய். அப்படியல்லாமல் நீ அகங்காரத்தால் கேளாயானால் நாசத்தையடைவாய். நீ அகங்காரத்தால் யுத்தம் செய்கிறதில்லையென்று எண்ணினாயேயானால் ராஜஸகுண ரூபத்தில் பரிணமித்த பிரகிருதியே உன்னை யுத்தம் பண்ணுகிற தாக நியமிக்கும். யுத்தம் செய்கிறதில்லையென்கிற உன் நிச்சயம் நிறைவேறமாட்டாது. அர்ச்சுனா! க்ஷத்திரிய பந்தனான நீ இந்த யுத்தகர்மம் அஞ்ஞானத்தாலே செய்யாதிருந்தாலும் பரவசத்துவம் அடைந்தாகிலும் யுத்தம் செய்யக்கடவாய். அர்ச்சுனா! ஈசுவரனானவன் சர்வபூதங்களினிருதயத்திலிருந்து தேகங்க ளென்கிற எந்திரத்தில் ஏறிக்கொண்டு பிராணிகளைத் தன் மாயையினாலே பரிப்பிராமிக்கச் செய்வான் (ஆட்டிவைப்பான்) பார்த்தா! அந்த ஈசுவரனைச் சகல பாவத்திலும் சரணமாக அடை: அவன் பிரசாதத்தினால் பரமமான சாந்தியும் சாசுவத மான ஸ்தானத்தையும் அடைகிறாய். இந்த ரகசியத்திலும் அதி ரகசியமான இந்த ஞானமானது என்னாலே உனக்குச் சொன்ன அர்த்தத்தை எல்லாம் விசாரித்து உனக்கு எப்படி இச்சையோ அப்படியேசெய். சகல ரகசியங்களிலும் அதிக ரகசியமாய் சிரேஷ்ட மான என் வாக்கியத்தைப் பின்னையும் கேள். எனக்கு நீ அத்தியந்த பிரியனுமாய், திடபக்தியுண்டானவனாகையாலும் இதஞ் சொல்கிறேன். என்னிடத்தில் சித்தத்தைச் சேர்த்து எனக்குப் பக்தனாய்விடு. என்னையே பூஜை பண்ணு. எனக்கே நமஸ்காரம் பண்ணிக்கொண்டு இருந்தாயேயானால் என்னையே நீ அடைவாய். சந்தேகமில்லை. எனக்குப் பிரியனானபடியினாலே சத்தியமாய் பிரதிஜ்ஞை பண்ணுகிறேன். சர்வதர்மங்களையும் இப்போது நான் சொன்னபடி அனுஷ்டித்துக் கொண்டு அதிலே கர்த்ருத்வம் விட்டுச் சகலத்துக்கும் நானே கர்த்தாவென்று என்னை ஒருத்தனையே சரணமாகப் பற்று. நான் உன்னைச் சகல பாவங்களினின்றும் விமுக்தனாகப்பண்ணி மோக்ஷம் கொடுக்கிறேன். விசாரமடையாதே. நான் உனக்கு உபதேசித்த கீதாசாஸ்திரத்தைத் தபோரஹிதனுக்கும் என்னிடத்தில் பக்தி யில்லாதவனுக்கும் குரு சிச்ருஷையில்லாதவனுக்கும் என்னிடத் தில் அசூயையை அடைந்தவனுக்கும் வசனிக்கத்தகாது. எவன் இந்தப் பரமரகசியமான கீதாசாஸ்திரத்தை என் பக்தர்களுக்கு உபதேசிக்கிறானோ அவன் என்னிடத்தில் பரமமான பக்தி செய்து என்னையே அடைவன். இதற்குச் சமுசயமில்லை. ஆகையால் இந்தக் கீதாசாஸ்திரம் என் பக்தனுக்கு உபதேசிக்கிற வனைப் பார்க்கிலும் எனக்கு அதிகப் பிரியனில்லை. பூதபவிஷ்யத் வர்த்தமான காலங்களிலும் அவனிலும் பிறனொருத்தன் உண்டாகப் போவதுமில்லை. ஆனதால் தர்மயுக்தமான நம் இருவர் சம்வாதத்தை எவன் அதிகரிப்பனோ அவனாலே நான்

சகல எக்ஞங்களிலும் சிரேஷ்டமான ஞானஎக்ஞத்தால் பூஜிக்கப் பட்டவனானேன் என்று நினைப்பன். அன்னியர்கள் படிக்கிற சமயத்திலே விசுவாசயுக்தனும் அசூயாரஹிதனுமாய் எவன் கேட்பனோ அவன் சகலபாப விநிர்முக்தனாய் புண்ணிய கர்மாக்களுக்குள்ள சுபலோகங்களை அடைவன். அர்ச்சுனா! இப்போது நான் உபதேசித்த அர்த்தமெல்லாம் ஏகாக்கிர மனதோடே கேட்டாயே அதனாலே உன் அஞ்ஞானஸம்மோஹம் எல்லாம் விட்டுப்போயிற்றோ. அர்ச்சுனா என்று பெருமாள் சாதிக்க, அப்போது அர்ச்சுனன் ஸ்ரீய:பதியான பகவானைப் பிரதக்ஷணம் வந்து அநேக சாஷ்டாங்க தண்டன் சமர்ப்பித்து, 'சுவாமி; அடியேன் தன்யனானேன், கிருதார்த்தனானேன். சகல சேதனர்களும் கடைத்தேறும் பொருட்டு மேல் சொல்லி வந்த இந்த அத்தியாயத்தில் விஸ்தாரமாய் சொல்லப்பட்ட அந்த அர்த்தத்தைத்தானே சுவாமீ அடியேனுக்குப் பூர்வார்த்தம் இதுவென்றும் உத்தரார்த்தம் இதுவென்றும் பஜனை பண்ணமாத்திரத்திலே கடைத்தேறும்பொருட்டு சரமசுலோகமாய் சாதிக்க வேண்டுமென்று ஆதிமத்யாந்த ரஹிதனாயும், அநாதரக்ஷகனாயும், அகில கல்யாண குண முடையவனாயும் பக்தவத்சலனாயும் விளங்கா நின்று ஸ்ரீயபதியை சாஷ்டாங்கமாக அனந்த தெண்டன் சமர்ப்பித்துக் கைகூப்பிக் கொண்டு வாய் மூடிக்கொண்டு அர்ச்சுனன் நிற்க, அப்போது ஸ்ரீ ஜனார்த்தனனுக்குக் கிருபை பிறந்து, 'வாராய்' அர்ச்சுனா! என்று அருகே அழைத்து, மகாகுஹ்யமாயும் ரகசியமாயும் பச்சைத்தர்ப்பையை அர்ச்சுனன் சிரசில் தமது அபயஹஸ்தத் துடனே வைத்து - இது சத்தியம் சத்தியம் சத்தியம் என்று வலது செவியில் உபதேசித்து - "சர்வதர்மான் பரித்யஜ்யமாமேகம் சரணம் வ்ரஜ" இதுவரையில் பூர்வார்த்தம். அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச : இதுவரையில் உத்தரார்த்தம் இதற்குத் தாற்பரியம். சரமசுலோகம் இரண்டர்த்த மாய் பதினொருபதமாய் முப்பத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும். அது எங்ஙனேயென்னில் சர்வதர்மான் என்றும், பரித்யஜ்ய என்றும் மாம் என்றும், ஏகம் என்றும் சரணம் என்றும் வ்ரஜ என்றும் அஹம் என்றும் த்வா என்றும், சர்வபாபேப்யோ என்றும், மோக்ஷயிஷ்யாமி என்றும், மாசுச: என்றும் பதினொருபதமா யிருக்கும். சர்வதர்மான் என் கையாலே இதர உபாயங்களைச் சொல்லி, பரித்யஜ்ய என்கையாலே - இதர உபாயநிவிருத்தியைச் சொல்லி, மாம் என்கையாலே-சமயக் ஆன உபாயத்தைச் சொல்லி ஏகம் என் கையாலே உபாய நைரபேக்ஷையும் சொல்லி சரணம் என்கையாலே - உபாயமென்னும் இடம் சொல்லி, வ்ரஜ என்கையாலே - உபாயஸ்வீகாரம் சொல்லி, அகம் என்கையாலே

- உபாயந்த பூர்த்தியினுடைய சர்வ சக்தித்துவஞ் சொல்லி, த்வா என்கையாலே - உபாயஸ்வீகாரம் பண்ணின அதிகாரிஸ்வரூபம் சொல்லி, சர்வபாபேப்யோ என்கையாலே பிராப்ய பிரதி பந்தங் களைச் சொல்லி, மோக்ஷயிஷ்யாமி என்கையாலே பிராப்ய பிரதிபந்தக நிவிருத்தியைச் சொல்லி, மாசுச : என்கையாலே - நிர்ப்பரத்வ அனுசந்தானம் சொல்லித் தலைக்கட்டுகிறது. இது வல்லாமல் - பூர்வாசார்யர்கள் இந்தச் சரமசுலோகத்திற்குச் சாதித்தது. அங்கங்களான நித்திய நைமித்திக கர்மங்களுடனே கூடின கர்ம ஞான பக்திகளை வாசனையோடேவிட்டு - அது வரையில் பூர்வார்த்தத்தின் பொருள். என்னையே உபாயமாகப் பற்றினாயாகில் சர்வசக்தியுடனே கூடின யான் அப்படி அசக்தனா யிருக்கிற உன்னை நீ என்னைப் பற்றுதற்கு முன்னும் பின்னும் புத்தி பூர்வகமாகவும் அபுத்தி பூர்வகமாகவும் செய்த பாவங் களினின்றும் விடுவிப்போம். நீ விடுவிப்பாயோ விடுவிக்க மாட்டாயோ என்று சோகிக்கவேண்டாம். இப்படி அனுஷ்டிக்கப் பட்ட அனுஷ்டான பரதந்திரனவனே என்னை அடைவான் என்று கெட்டியான நிலையைச் சாதித்த பின்பு அர்ச்சுனன் சொல்லு கிறான் :- ஸ்ரீ அச்சுதா! உன் பிரசாத லப்தத்தினாலே என் மோகஸ்மிருதி நிவிருத்தியாயிற்று. என் சந்தேகமெல்லாம் தீர்ந்து பிரசன்னசித்தனானேன். தேவரீர் வசனத்தின்படியே யுத்தாதி கர்மம் பண்ணுவேன் என்றான்; என்று சஞ்சயன் திருதராட்டிர னுடனே சொல்லுகிறான் :- இப்படி மகாத்மாக்களான ஸ்ரீ வாசுதேவார்ச்சுனருக்கு நடந்த இந்த சம்வாதம் நான் கேட்டு அதியற்புதமும் ரோமஹர்ஷமும் உண்டாயிற்று. சாக்ஷாத்காரமாய் ஸ்வயமே சொல்லப்பட்ட யோகீச்வரேச்வரனான ஸ்ரீ கிருஷ்ண னாலே பரமும் குஹ்யதரமுமான இந்த யோகம் வியாசபிரசாதத் தினாலே கேட்கப்பட்டேன். ராஜேந்த்ரா! ஸ்ரீ கேசவார்ச்சுனருக்கு நடந்த அற்புதமான இந்தப் புண்ணிய சம்வாதத்தை ஸ்மரித்து ஸ்மரித்து மேலும் மேலும் சந்தோஷிக்கிறேன். ராஜோத்தமா! அதியற்புதமான அரிவிசுவரூபத்தை ஸ்மரித்து ஸ்மரித்து அத்தியந்த ஆச்சரியமாய் மேலும் மேலும் ஆனந்தம் அடைகிறேன். யோகீச்வரேச்வரரான ஸ்ரீ கிருஷ்ணனும் தனுர்த்தரவீரியனான அர்ச்சுனனும் எவ்விடத்திலிருப்பார்கள் அவ்விடத்தில் ஐசுவரியமும் ஜயமும் திக்குகளெல்லாம் நிறைந்த கீர்த்தியும் நீதியும் சாசுவத மாய் இருக்கும் என்று என் நிச்சயம். இது வேத வியாசராலே சொல்லப்பட்ட பரம அங்கிசமான சதசஹஸ்ர சங்கிதையான ஸ்ரீ மகாபாரதத்தில் பீஷ்ம பருவத்தில் ஸ்ரீ பகவத் கீதா சாஸ்திரத் தில் பரப்பிரம்ம வித்தையான யோக சாஸ்திரத்திலே ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்தில் சகல உபநிஷதார்த்த பிரதிபாதக மோக்ஷயோகம் என்கிற பதினெட்டாம் அத்தியாயம் முற்றியது.

ஸ்ரீ கிருஷ்ணாய நம :

## 13. ஸ்ரீ கிருஷ்ணதேவராலே கீதாசாஸ்திரம் கேட்டுத் தெளிந்து யுத்தத்துக்கு அர்ச்சுனன் ஆரம்பித்தது.

### பாரதயுத்தம் - பாண்டவர் வெற்றி

குடாகேசனான அர்ச்சுனன் பகவானாய் எழுந்தருளியிரா நின்ற ஸ்ரீ கிருஷ்ணதேவராலே பதினெட்டு அத்தியாயமாயிரா நின்ற கீதாசாஸ்திரசாரத்தைக் கேட்டுத் தேர்ந்து தெளிந்து யுத்த சன்னத்தனாய் பாரதம் பதினெட்டு நாளும் யுத்தம் பண்ண உத்தேசித்து, பாண்டவாளில் பாஞ்சலனாகிய துருபதமகாராஜ குமாரனாகிய திருஷ்டத்யும்நனுக்குச் சேனாதிபத்தியம் கட்டி உத்தியோகிக்கும்போது துரியோதனன் ஏவலாலே கௌரவ சேனைக்குப் பிதாமகனாகிய பீஷ்மருக்குச் சேனாதிபத்தியங் கட்டிப் பத்துநாள் யுத்தஞ்செய்து சிகண்டியை முன்னிட்டுப் பீஷ்மரைக் குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனன் சரக்களத்தில் சயனிக்கும்படி செய்தான். துரோணர், அர்ச்சுனன் யுத்தம் பண்ணி வரும்போது அர்ச்சுனன் திருஷ்டத்யும்நனை முன்னிட்டு, வீரசுவர்க்கத்தையடைந்தார். கர்ணன் அர்ச்சுனனுடனே இரண்டு நாள் யுத்தம் பண்ணி வீரசுவர்க்கத்தையடைந்தான். சல்லியன் ஒரு பகல் யுத்தம் பண்ணி மடிந்தான். யுத்தம் நேரிட்ட பதினெட்டு நாளிலேயும் துரியோதனன் தம்பியராகிய துச்சாதனன் முதலாகிய தொண்ணூற்றொன்பது பேரையும் வீமசேனன் கதையினால் சம்ஹாரம் பண்ணிக் கொண்டு வந்து பதினெட்டாம் நாள் சாயந்திரம் துரியோதனனும் வீமனும் குருக்ஷேத்திரத்தில் ஸ்யமந்த பஞ்சகத்தின் மடுவில் பிரவேசித்து அபிமந்திரித்துக் கொண்டிருக்கப்பட்டவனை உதாசீனம் பேசி வெளியிலே இழுத்து, வீமனும் துரியோதனனும் கதையினாலே யுத்தஞ் செய்து தொடையொடிந்து ரணகளத்தில் துரியோதனன் விழுந்தான். அப் படுகளத்தில் விழுந்து கிடக்கா நின்ற துரியோதனனிடத்தில் அசுவத்தாமா வந்து இப்போதாவது எனக்குச் சேனாதிபத்தியம் கொடுத்தால் பாண்டவர்களைக் கொன்று அவர்களுடைய சிரசைக் கொண்டு வருகிறேனென்று சபதம் பண்ணாநின்ற அசுவத்தாமாவுக்குச் சேனாதிபத்தியம் கொடுத்து அனுப்பினான். அந்தப் பதினெட்டாம் நாள் சாயந்தரம் வரையில் யுத்தம் செய்து "இனி சத்துருக்கள் இல்லை" என்று நிர்ப்பயமுள்ளவர்களாய்க்கொண்டு நித்திரை பண்ணப்படா நின்ற இளம் பஞ்சபாண்டவர்களையும் பாஞ்சால ராஜனாகிய திருஷ்டத்யும்நன் முதல சகல சேனையும், நித்திரை மப்பிலேயிருக்கப் பட்டவர்களையும் அசுவத்தாமா கொன்று இளம்பாண்டவர்களுடைய ஐந்து தலையையும் பாண்டவர்களுடைய சிரசென்று

அறுத்து எடுத்துக்கொண்டு போய் துரியோதனன் முன்னே வைத்து இது பாண்டவர்களுடைய சிரசு" என்று சொன்ன அசுவத்தாமனைப் பார்த்து ஓ பாபாத்மனே! ஐயோ, இவர்கள் இளம் பாண்டவர்களாயிற்றே : இவர்கள் சத்துருவல்லவே. இவர்களைக் கொன்றதனாலே என்ன பலன்? இவர்களால் எங்கள் குருவமிசத்துக்குத் திலோதக தர்ப்பணாதி உத்தரக்கிரியைகள் வாசோதகபிண்டோதகங்களாகிய கிருதுக்கள் நடக்குமே. அவர்களால் நாங்களும் நல்ல கதியடைவோமே என்று சொல்லி, கரைந்து கரைந்து ஆத்மாவை விடுவித்துக் கொண்டான். அப்பால் பாண்டவர்கள் பாசறைக் கூடாரத்திலிருந்த இளம் பாண்டவர்களையும் மற்ற சேனைகளையும் அசுவத்தாமா நித்திரை மப்பிலேயிருக்கப்பட்டவர்களைக்கொன்று இளம் பாண்டவர்கள் தலையைத் துரியோதனன் முன்னே வைத்தானென்று பாண்டவர்கள் கேட்டு மூர்ச்சையாய் ஐயோ, இந்த இளம் பாண்டவர்கள் இந்த மகா துரோகியான குருபுத்திரனாகிய அசுவத்தாமாவை என்ன செய்தார்கள் என்று துக்காக்கிரந்தராய் இருக்கிறபோது அர்ச்சுனன் நான் இப்படிப்பட்ட மகாதுரோகியை இந்த க்ஷணமே போய் யுத்தம் பண்ணி அவனைக் கைப்பிடியாகக் கொண்டுவருகிறேன் என்று திரௌபதியைத் தேற்றி ரதமேறிப் புறப்பட்டு அசுவத்தாமாவோடு வெகுசாய் யுத்தம் பண்ணிப் பிடித்துத் தேரிற் கட்டிக்கொண்டு பாண்டவர்களும் திரௌபதியும் கிருஷ்ணனும் இறங்கியிருக்கப்பட்ட இடத்தில்கொண்டு வந்து விட்டான். அப்போதே வீமன் அசுவத்தாமாவின் சிரசைக் கண்டிக்கிறேனென்று வந்தான். அப்படிக் கோபப்பட்ட வீமார்ச்சுனர்களைப் பார்த்துத் திரௌபதி சொல்லுகிறாள் : வாருங்கோள் மகாபுருஷர்களே! என் பிள்ளைகள் இளம்பாண்டவர்களை நித்திரைமப்பிலேயிருந்தவர்களையும், என் தமையனாராகிய திருஷ்டத்யும்நனையும் கொன்ற இந்தத் துரோகியாகிய மகாபாவி வீரனா சூரனா, இவன் குருபுத்திரனா, இவன் பிராமண ஜன்மமா? இவன் ஜன்மத்தைச் சுடவேண்டாமா? இந்தத் துரோகியைக் கொன்றதனால் என்ன பலன்? பிராமண ஜன்மம் எடுத்தான் அப்பிரயோசகன் என்று சொன்ன திரௌபதியைப் பார்த்து இவன் சிரசுக்குச் சமானமாயிருக்கப்பட்ட சிரோரத்தினத்தைப் பறித்து வாங்கினால் அவன் சிரசு போனதற்குச் சமானமென்று சிரோரத்தினத்தைப் பறித்து வாங்கி அவமானப்படுத்தித் துரத்திவிட்டார்கள். இப்படியிருந்த அசுவத்தாமா தொடுத்த பாணாக்கினியானது பாண்டவர்களுடைய கருவையறுக்க அபிமந்திரித்துவிட்ட பாணம் அபிமன்யுதேவியாகிய உத்தரை கர்ப்பத்தில் புகுந்து கருவையறுக்க யத்தனிக்கையில் உத்தரை

அழுது புரண்டு, அவாப்த சமஸ்தகாமனாய் ஆபத்பந்துவாய் அநாதரக்ஷகனாய் எழுந்தருளியிராநின்ற ஸ்ரீ கிருஷ்ணனைச் சரணாகதியடைந்த மாத்திரத்தில் உத்தரை கர்ப்பத்தில் புகுந்த பாணத்தை பரீட்சித்தபடியால் அவள் கர்ப்பத்தில் பரீட்சித்து மகாராஜா பிறந்தார். இப்படியிருக்க, படுகளத்தில் விழுந்து கிடக்கிற கர்ணன் முதல் துரியோதனன் மற்ற தொண்ணூற்றொன்பது தம்பிமார்களும் மற்ற சந்திரகுல ராஜாக்களும் சூரியகுல வர்க்கங்களும் அக்கினி குல வர்க்கங்களும் பந்துவர்க்கங்களும் படுகளத்தில் விழுந்து கிடக்கிறவர்களைப் பார்த்து தர்மராஜா முதலான பேரும் சோகித்து விழுந்து "இத்தனைப் பேரையும் கொன்று போட்டு இந்த ராஜ்யத்தை ஆளுகிறதில் என்ன பலன்? என்று மூர்ச்சையாகித் தெளிந்து ஸ்ரீகிருஷ்ணனாலே கர்ணனைத் தங்கள் தமையனென்று பூர்வவரலாற்றைத் தெரிவித்ததன் பிறகு திலோதக தர்ப்பணாதி வாசோதக பிண்டோதக உத்தரக்கிரியை முதலாய் யாவற்றையும் முடித்து, அப்புறம் துரியோதனாதி மற்ற தம்பிகள் சகலபந்துக்களுக்கும் செய்யும் கிரியைகளை எதா சாஸ்திரவிதி மார்க்கங்களாய் செய்து பின்பு உத்தராயணம் பரியந்தம் காத்திராநின்ற தங்கள் பிதாமகனாகிய பீஷ்மரிடத்திற் போய் பாபியாகிய நாங்கள் தேவரீரைச் சரக்களத்திலே படுக்க வைத்த மகாதுரோகிகள் வந்தோம் என்று பிரலாபித்து விழுந்து புரண்டு அழுது கொண்டிருக்கப்பட்ட தர்மராஜாவையும் மற்ற அவர் தம்பிமாரையும் பார்த்துப் பீஷ்மர் சொல்லுகிறார் :- இது பூர்வாகிருதமாய் வராநின்ற வினையில் முடிந்தது : நீங்கள் என்ன செய்வீர்களென்று பலபலவிதமாய்ச் சொல்லித் தெளிவித்து, தர்மார்த்த காமமோக்ஷமாகிய சதுர்வித தர்மமும் மனுநூலையும் அநுசாஸனமாய்ச் சொல்லி, பீஷ்மரும் தர்மராஜாவைப் பார்த்து, "நீங்கள் மனுநீதி வழுவாமல் ராஜ்ய பரிபாலனம் செய்யக் கடவீர்கள்" என்று ஆசீர்வதித்து அனந்தரம் உத்தராயணத்தில் சுக்லபக்ஷத்தில் ஏகாதசியில் சகல தேவர்களும் எதிர்கொள்ள சாக்ஷாத்காரலோக நாயகனாகிய ஸ்ரீமந் நாராயணர் சங்கு சக்கரபாணியாய் எழுந்தருளி சேவை சாதிக்க, ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமை பூரணகும்பமெடுக்க, அப்ஸராள் நாரதர் பாட சகலரும் புடைசூழ சுவர்க்கத்துக்கு எழுந்தருளினார்.

அவருக்குத் தர்மராஜா முதலாகிய தம்பிமாரும் உத்திரக்கிரியை முதலான திலோதக தாப்பணாதிகளும் முடித்து அனந்தரம் அஸ்தினாபுரத்தைச் சேர்ந்து திருதராஷ்டிரனாகிய பெரிய தாதையைக் கண்டு, அவருடைய விசனங்களையெல்லாம் நீக்கித் தங்களுடைய புத்திர சோகம் தீரும்படியாய் "எங்கள் தந்தை பாண்டுமகாராஜாவை எப்படிப் பரிபாலித்தோமோ

அப்பிரகாரம் தங்களுடைய புத்திரர்களாய் நாங்கள் நடந்து கொள்ளுகிறோம் என்றும், பெரிய தாயாராகிய காந்தாரியிடத்தில் போய், தாயே! எங்களால் வந்த வினையல்லவே; ஈசுவர சங்கற்பத்தால் வந்த ஊழ்வினையை யாராலே தடுக்கப்படும் என்று அநேகம் தேறுதல் சொல்லி, திரௌபதியும் காந்தாரியைப் பார்த்து, "என் மாமியாராகிய குந்திதேவி எப்படியோ அப்படியே நீரும் என்னை ரக்ஷிக்கக்கடவீர் என்று சொல்லித் தொழுது பின்பு தருமராஜாவுக்கு கடல் சூழ்ந்த புவனமெல்லாம் ஒரு குடை நிழலிலே அரசு செய்யும்படி பட்டாபிஷேகம் செய்துகொண்டு ராஜ்யபரிபாலனம் செய்து கொண்டிருந்தார்கள். இப்படி சந்துஷ்டராய் 'சிலநாள் கிருஷ்ணனுடனே கலந்திருந்து பூபாரத்தையும் திருத்திவர, கிருஷ்ணன் தருமரிடத்திலே செலவு வாங்கிக்கொண்டு தம்முடைய துவாரகையை வந்தடைந்தார். சிலகாலத்துக்குப் பின்பு ஒருநாள் ஒரு வைதிகப் பிராமணன் மரித்துப்போன ஐந்து வயது குழந்தையை எடுத்துக்கொண்டு ராஜத்துவாரத்திலே போட்டுக்கொண்டு மிகவும் அழாநின்று கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரைக் குறித்து வெகு குரூரமான வசனங் களைச் சொன்னான். ஸ்ரீகிருஷ்ணரும் அதைக் கேட்டு வெறுமனே இருந்தார். "முன்னே ஐந்து புத்திரர்கள் மரித்துப் போனார்கள் இது ஆறாம்பிள்ளை. இந்தப் பிள்ளையை ஸ்ரீகிருஷ்ணர் பிழைக்க மூட்டாமல் போனாரேயானால் நானும் இந்த ராஜ துவாரத்திலே பிராணனை விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்திலே அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணனைக் பார்க்கத் துவாரகைக்கு வந்து, அப்படி அழுது கொண்டிருக்கிற அந்தப் பிராமணனையும் பார்த்து மரித்துப் போன பிராமண சிசுவையும் பார்த்து, கிருபையுடனே கூடினவனாய் 'உம்முடைய புத்திரனை நான் பிழைக்க மூட்டு கிறேன்' என்று அபயப்பிரதானம் பண்ணி, பிரதிஜ்ஞையைப் பண்ணாநின்ற அந்த அர்ச்சுனனாலே சமாதானம் பண்ணப் பட்டவனாய் அந்தப் பிராமணரானவர் சந்துஷ்டராயிருந்தார். பின்பு அந்தப் பிராமணபுத்திரனை அநேகங்களான சஞ்சீவனா ஸ்திரங்களாலே மந்திரித்தாலும் பிழையாமலிருந்த அந்தச் சிசுவைப் பார்த்து, வியர்த்தமான பிரதிஜ்ஞையை அடைந்து மிகவும் சோகத்துடனே கூடினவனாய் அந்தச் சிசுவுடனே கூட தன் பிராணனையும் விட்டுவிட இச்சித்தான். ஸ்ரீகிருஷ்ணரும் அதையறிந்து அந்தப்புரத்தினின்றும் வெளியிலே வந்து அந்தப் பிராமணரைக் குறித்து 'உம்முடைய புத்திரர்களை நான் அழைப்பிக்கிறேன்' என்று சமாதானம் பண்ணிக் கருடாரூடராய் அர்ச்சுனனைக் கூட்டிக்கொண்டு ஸ்ரீவைகுண்ட லோகத்துக்கு

வந்தார். அந்த லோகத்திலே திவ்வியமான நவரத்தின மண்டபத்திலே ஸ்ரீமகாலக்ஷ்மியுடனே கூட எழுந்தருளியிரா நின்ற பகவானான ஸ்ரீமந் நாராயணரைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுனர் இருவரும் பிரணாமம் பண்ணினார்கள். பகவானும் அவர்களிருவரையும் பாருக்களிலேல ஆலிங்கனம் பண்ணிக் கொண்டு 'என்ன நிமித்தமாக வந்தீர்கள் என்று கேட்டார். கிருஷ்ணரும் 'வாரீர் பகவானே! அந்த வைதீக பிராமணருடைய புத்திரர்களை எனக்குக் கொடுக்க வேணும்' என்று கேட்டார். ஸ்ரீமந் நாராயணரும் ஸ்ரீவைகுண்டத்திலேயிராநின்ற அந்தப் பிராமண புத்திரர்களை ஸ்ரீ கிருஷ்ணரின் பொருட்டுக் கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணரும் அந்தப் புத்திரர்களைக் கருடன் மேலே வைத்துக் கொண்டு அர்ச்சுனனுடனே கூட ஆகாசத்தில் தேவகணங் களாலே ஸ்துதி பண்ணப்பட்டவராய்த் துவாரகையிலே வந்து அந்தப் பிராமணன் பொருட்டு ஐந்து வயதுடையவர்களான அந்த ஆறு புத்திரர்களையும் கொடுத்தார். அந்தப் பிராமணரும் சந்துஷ்டமான இருதயத்தையுடையவராய் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அநேகமான ஆசீர்வசனங்களைப் பண்ணினார். அர்ச்சுனனும் தன் பூர்ண பிரதிஜ்ஞையையடைந்து, ஸ்ரீகிருஷ்ணரைப் பிரணாமம் பண்ணி, தர்மபுத்திரராலே ரக்ஷிக்கப்பட்ட அஸ்தினா புரம் வந்து சேர்ந்தான். ஸ்ரீ கிருஷ்ணருக்குப் பதினாறாயிரம் ஸ்திரீகளிடத்தில் பதினெண்ணாயிரம் புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களுடைய புத்திர பௌத்திரர்களுடைய சங்கியையானது சொல்லுகைக்குச் சக்கியமன்று. அநேக லட்சமான அந்தப் புத்திரர்களுக்கெல்லாம் ஜேஷ்டனானவன் பிரத்யும்நன். எண்ணிக்கையில்லாமலிருக்கிற அந்த யாதவர்களாலே இந்தப் பூமி சம்பூர்ணமாயிற்று. பிறகு கிருஷ்ணரானவர் பூமிக்குப் பாரமென்கிற எண்ணிக்கையாலே அந்தச் சகலமான யாதவ குமாரர்களையும் ரிஷிசாபம் என்கிற வியாஜத்தினாலே சங்காரம் பண்ணுகைக்கு இச்சித்தார்.

## கண்ணுவ மகரிஷி சாபமிடல்

ஒருகால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சகல்மான குமாரர்களும் நர்மதையென்கிற நதியிலே விளையாடுகிறதற்குப் போனார்கள். அந்த நதிக்கரையிலே தபசு பண்ணிக்கொண்டிராநின்ற கண்ணுவரிஷியைப் பார்த்து, ஜாம்பவதியினுடைய குமாரனுக்கு ஸ்திரீயினுடைய வேஷத்தைத் தரிப்பித்து, அவனுடைய வயிற்றிலே கண்ணுவரிஷிக்குக் காண்பிக்கிறதன் பொருட்டு வஸ்திரத்தினாலே கர்ப்பிணிபோலே கட்டி ரிஷியினுடைய

சமீபத்திலேபோய் தண்டன் சமர்ப்பித்து, கர்ப்பிணி ஸ்திரீ ரூபத்தைத் தரித்தவனான ஜாம்பன் என்கிறவனை அந்த ரிஷிமுன்னே விட்டு 'இவளுடைய கர்ப்பத்திலேயிருக்கிறது ஸ்திரீ பிரஜையா? புருஷ பிரஜையா? வாரீர் ஷாட்குண்ய பரிபூர்ணரான மஹரிஷியே எங்களுக்குச் சொல்லக் கடவீர் என்று சொன்னார்கள். அந்தக் கண்ணுவமகர்ஷியானவர் ஸ்திரீ புமா என்கிற இரண்டுவிதமாகிய வார்த்தையையறிந்து மகத்தாகிய கோபமடைந்தவராய் சமஸ்தமான யாதவ குமாரர்களும் இந்தக் கர்ப்பத்திலேயிருக்கிற முசலத்தினாலே சகலமான பேர்களும் ஹதமாய் போகக் கடவீர்கள் என்று கெட்டியாய்ச் சொன்னார். அந்த சமஸ்தமான யாதவ குமாரர்களும் மகத்தான விசனத்தையடைந்தவர்களாய் ஸ்ரீகிருஷ்ணருடைய சமீபத்திலே போய் யாதொன்று மகரிஷியாலே சொல்லப்பட்டதோ அந்தப் பிரகாரம் ஸ்ரீகிருஷ்ணன் முன் வியாக்கியானம் பண்ணிக் கொண்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணரும் அந்த இருப்புலக்கையைச் சூர்ணமாகப் பண்ணிச் சமுத்திரத்திலே போடுவித்தார். சமுத்திரத்திலே இருப்புலக்கைத் தூளானவை கோரைகளாக உண்டாயிற்று. அந்த இருப்புலக்கை மிகுதி சுண்டுவிரல் பரிமாணம் மாத்திரம் மடுவிலே போடப்பட்டது. அதை மத்ஸ்யமானது விழுங்கிற்று. அந்த மத்ஸயத்தைச் சாலகனென்கிற பெயரையுடைய வேடனானவன் பிடித்து அதன் வயிற்றிலேயிராநின்ற இருப்புத் துணுக்கையெடுத்து, பாணத்தினுடைய முனைகளுக்குக் கூராகப் பண்ணினான். ஒருகால் சகல யாதவர்களிலே ஸ்ரீராமகிருஷ்ண பிரத்யும்ந அநிருத்தர் முதலான மூன்று கோடி யாதவர்கள் அத்யந்த அதிசய சந்தோஷத்தை யடைந்தார்களாய் மகோற்சவ யாத்திரை பண்ணுகைக்கு மகத்தாகிய அந்த மடுவினுடைய சமீபத்தையடைந்தார்கள், அவ்விடத்திலே அநேகமாகிய மத்ஸயமாமிசங்களைப் புசித்த உன்மத்தர்களாய்க் கொண்டு கண்ணுவரிஷி சாபத்தால் யாதவர்களுக்குள்ளே அன்னியோன்ய கர்வமுண்டாக - பின் சகலமான பேர்களும் விளையாடுகின்றதன் பொருட்டு மகத்தாகிய மடுவிலே உண்டாயிருக்கிற மகாஅற்புதமாகிய கோரைகளைப் பிடுங்கிக் கொண்டு வச்சிராயுதத்தினுடைய கூர்மைக்குச் சமானங்களாகிய அந்தக் கோரைகளாலே ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டார்கள். அந்தக் கோரையினுடைய ஒவ்வொரு அடியினால்தானே சகலமான பலபத்திரா பிரத்யும்நன் இவர்கள் முதலான ஒருவரும் பிழையாமல் பிராணனை விடப்பட்டவர்களாய் தங்கள் தங்கள் தேகங்களைவிட்டு தெய்வத்துவத்தை யடைந்தார்கள். இப்படித் தம்முடைய வமிசத்தைச் சங்கரித்துத் தாம் ஒருவராகிய ஸ்ரீ வாசுதேவரானவர் அநேகம் கோடி

களினாலே சூழப்படா நின்ற புதர்களுடனேகூடின விருக்ஷத் தினுடைய நிழலிலே சகலசராசரங்களிலேயும் அந்தர்யாமியாக இராநின்ற தம்முடைய சுவரூபத்தையே சிந்தியா நின்றுகொண்டு இடது தொடையின்மேலே வலது திருவடியை வைத்துக்கொண்டு சார்ந்து கொண்டவராய் யோகாப்பியாசத்தினாலே தம்முடைய திவ்விய மங்கள விக்கிரகமாகிய சரீரத்தை விடுகைக்கு அவ் விடத்திலே எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ பரவாசுதேவரான ஸ்ரீ கிருஷ்ணரானவர் இப்படி எழுந்தருளி யிராநின்ற சமயத்திலே சாலகன் என்கிற பெயரையுடைய வேடனானவன் வேட்டை யாடுகிறதன்பொருட்டு அந்த வனத்திலே சஞ்சரியா நின்று கொண்டிருந்தவன் அப்படி எழுந்தருளியிரா நின்று ஸ்ரீகிருஷ்ண ருடைய சமீபத்திலே வந்து சரத் காலத்திலே சூரிய உதயத்திலே விகசியா நின்ற தாமரைப் புஷ்பம்போலப் பிரகாசியா நின்றும் சக்கரரேகை வச்சிரரேகை சங்கரேகை துவசரேகை அங்குச ரேகை இவைகள் முதலாகிய திவ்விய லட்சண பரிபூரணரேகை களான சின்னங்களையுடையதாயும் அத்யந்த சிவப்புடனே கூடா நின்றுமிருக்கிற ஸ்ரீ அரியினுடைய பாதாரவிந்தத்தைப் பார்த்து அந்தத் திருவடியை மான்குட்டி என்று நினைத்துச் சமஸ்தமான யாதவ வம்சங்களைச் சங்கரியா நின்ற இருப்புலக்கையினுடைய துணுக்கையினாலே கூர் செய்யப்பட்டிருக்கிற அம்பினாலே அடித்தான். பிறகு மானுட சரீரத்துடனே கூடிக்கொண்டிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து இந்த வேடனானவன் அத்யந்த பயத்தினாலே பீடிக்கப்பட்டவனாயும் - நடுக்கத்தையுடைய சரீரத்தையுடையவனாயும் அஞ்சலிஹஸ்தனாயும் "மகத்தாகிய அபராதமானது என்னாலே பண்ணப்பட்டது" என்று சொல்லா நின்று சாஷ்டாங்கமாகத் தெண்டன் சமர்ப்பித்தான். ஸ்ரீ கிருஷ்ண ரானவர் அடியா நின்றும் அப்படி நடுக்கத்துடனே சேவியா நின்று மிருக்கிற அந்த வேடனைப் பரிபூரணமான கிருபையினாலே அமிர்தமாகிய கரார விந்தங்களினாலே எடுத்து ஆதரவோடே ஒரு வார்த்தை சொன்னார் :- உன்னாலே யாதொரு அபராதமும் பண்ணப்படவில்லை என்று சொல்லி மகத்தாகிய பயத்தினாலே பீடிக்கப்படா நின்றிருக்கிற அந்த வேடனைப் பார்த்து ஆதர வுடனே அவனுக்கு யோகிகளினாலே அடையத்தக்கதாயும் புனர்ஜன்மமில்லாததாயும் சாசுவதமாயும் நாசரஹிதமாயும் பஞ்சோபநிஷன்மயமாயும் விஷ்ணுபக்தர்களாகிய பாகவதர் களாலே நிறைந்திருக்கப்பட்டதாயும் இருக்கிற பரமபதத்தைக் கொடுத்தார். இந்த ஸ்ரீ கிருஷ்ணரானவர் அப்போது மனுஷ்ய சரீரத்தைவிட்டுப் பஞ்சோபநிக்ஷன்மாயும் அப்ராக்ருதமாயும் சர்வோத்தமமாயும் இருக்கிற திவ்விய சரீரத்தைத் தரியா நின்று

சகலமான பாரியாபுத்திராதிகளுடனே கூடினவராய் திவ்வியமான வியானத்திலே எழுந்தருளி அநேகமான சூரிய காந்திகளுக்குச் சமானமாயும் திவ்வியமான அப்ஸரஸ்திரீகளாலே சம்பூர்ணமாயும் விளங்கா நின்றுமிருக்கிற தம்மதான பரமபதத்தை அடைவதற்கு இச்சித்தவராய் தாருகனைப் பார்த்து இந்த விருத்தாந்தம் சமஸ்தத்தையும் அருச்சுனனிடம் சொல்லும் என்று ஆஜ்ஞாபித்தார். அந்தக்ஷணமே தாருகனும் அநேகமாயிரம் சூரியர்களுடைய காந்திக்குச் சமானமாகிய ரதத்தின் மேலே ஏறிக்கொண்டு அர்ச்சுனனிடத்திலே போய் ஸ்ரீ பகவானுடைய விருத்தாந்தங்கள் சகலமும் விஞ்ஞாபனம் பண்ணித் திரும்பவும் பெருமாளுடைய சந்நிதானத்துக்கு வந்து சேர்ந்தான். அர்ச்சுனனும் ரதத்தின் மேலேறிக்கொண்டு அதி துவரையாய் ஸ்ரீ பகவானுடைய சந்நிதானத்தில் வந்து ரதத்தினின்று கீழே இறங்கி வணக்கத் துடனே சாஷ்டாங்கதண்டம் பிரணாமம் பண்ணிக் கையைக் கட்டிக்கொண்டு 'என்ன செய்யக்கடவேன்' என்று பிரார்த்தித் தான். அப்படிப் பிரார்த்தித்தியா நின்ற அர்ச்சுனனைப்பார்த்து ஸ்ரீ பகவான் வாக்கியம்: - வாராய், அர்ச்சுனா! நீ துவாரகா பட்டணத்துக்குச் சீக்கிரமாகப் போய் ஸ்ரீருக்மிணி முதலாகிய என்னுடைய பாரியைகள் எட்டுப்பேரையும் அழைப்பித்து "நான் பரமபதத்துக்குப் போகிறேன் என்றும், என்னுடைய சரீரத்துடனே கூட அக்கினிப் பிரவேசம் பண்ணுங்கோள் என்றும் சொல்" என்று ஆஜ்ஞாபித்தார். அந்த அருச்சுனனும் தாருகனுடனேகூட துவாரகாபட்டணத்துக்குப் போனான். அந்தக்காலத்திலே ஆகாச வீதியிலே சகலதேவதாகணங்களும் விமானாரூடர்களாய் பரமபதத்துக்கு எழுந்தருளா நின்ற ஸ்ரீ கிருஷ்ணதேவரைப் பார்த்து, பிரமரிஷி தேவரிஷிகளோடேகூட திவ்வியமாகிய ஸ்தோத்திரங்களினாலே துதிபண்ணி, புஷ்பவர்ஷங்களை வருஷித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணரும் லீலா மனுஷ்ய சரீரத்தைவிட்டு சகலசராசர சிருஷ்டிஸ்திதிசங்கார ஹேதுவாயும், சகல சராசரங் களுக்கும் அந்தர்யாமியாகிய சுவரூபத்துடனே கூடினதாயும் யோகீச்வரர்களாலே தியானம் பண்ணத்தக்கதாயும் நாசரஹிதமா யும், ஸ்ரீ பரவாசுதேவ சுவரூபமாயும் இருக்கிற ஸ்ரீ பகவானானவர் - கருத்மான் மேலே எழுந்தருளி ரிஷிகளினாலே தோத்திரம் பண்ணப்பட்டவராய் தம்மதான பரமபதத்துக்கு எழுந்தருளினார். அர்ச்சுனனும் துவாரகா பட்டணத்துக்குப்போய் வசுதேவர், உக்கிரசேனர், ஸ்ரீ ருக்மிணி முதலாகிய அஷ்டமகிஷிகளுக்கும் ஸ்ரீ கிருஷ்ணராலே சொல்லப்பட்ட பலபத்ரா பிரத்யும்ன அநிருத்தர் முதலான சகல யாதவர்களுடைய மரணத்தையும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் பரமபதத்துக்கு எழுந்தருளுகிறேனென்று சொன்ன சமஸ்த விருத்தாந்தத்தையும் சொன்னான். அந்த வசனத்தைக்

கேளா நின்ற துவாரகாபுர ஜனங்கள் சமஸ்தமான பேர்களும் அந்தப் புரவாசிகளாகிய ஸ்ரீ ருக்மிணி முதலாகிய ஸதிரீகளும் பட்டணத்தைவிட்டு வெளியிலே புறப்பட்டு அந்தச் சகலமான புரஜனங்களும் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஸ்திரீகளும் வசுதேவர் உக்கிரசேனர் அர்ச்சுனன் இவர்களுடனே கூடினவர்களாய் அதிசீக்கிரமாய்த் தானே ஸ்ரீ கிருஷ்ணருடைய சமீபத்துக்கு வந்தார்கள். அப்படி வராநின்ற வசுதேவர், உக்கிரசேனர் ஆதி சகலயாதவ விருத்தர்களும் பரமபதத்தையடைந்திராநின்ற ஸ்ரீராமகிருஷ்ணபிரத்யும்ன அநிருத்தர் முதலான சகலயாதவ சிரேஷ்டர்களையும் பார்த்து, சோகத்தினாலே பீடிக்கப்பட்டவர்களாய் தங்கள் தங்கள் ஸ்திரீகளோடே கூடினவர்களாய் சகலமான புரஜனங்களும் மகத்தாகிய அக்கினியைச் சொலிப்பித்து அந்த அக்கினியிலே பிரவேசித்துத் தகிக்கப்பட்டுத் தேகத்தை விட்டுவிட்டார்கள். பிறகு ஸ்ரீ கிருஷ்ணருடைய திவ்விய மங்களசரீரத்தைத் தேவதாயோக்கியமான அகிற்கட்டை திவ்விய பரிமளமான சந்தனக்கட்டை இவைகளினாலே வைதிகாக்னியை ஜொலிப்பித்து திவ்விய சந்தனக் கட்டைகளினாலே அடுக்கப்பட்ட சிதையின் மேலே அந்தத் திருமேனியை வைத்து வேதோக்தவிதியினாலே அர்ச்சுனன் சம்ஸ்காரம் பண்ணினான். ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய ஸ்திரீகளான ருக்மிணி சத்தியபாமை காளிந்தி, மித்திரவிநதை, ஜாம்பவதி, யஜ்ஞசித்து சுசிலா சுலக்ஷ்மி என்னப்பட்ட இந்த எட்டு ஸ்திரீகளும் அந்த அக்கினியிலே பிரவேசித்து ஸ்ரீ கிருஷ்ணருடைய சரீரத்தை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு அந்த அக்கினியினாலே தகிக்கப்பட்டபோகர்களாய் தேகத்தை விட்டவர்களாய் அவரவர்களுடைய அம்சங்களையடைந்து திவ்விய விமானாரூடர்களாய் சமஸ்த தேவதா சமூகத்தினாலே ஆராதிக்கப்பட்டவர்களாய் பரமபதத்தையடைந்தார்கள். அப்படியே பிரத்யும்நனோடேகூட ருக்குமனுடைய பெண்ணும் அநிருத்தனோடேகூட அவன் பத்தினியும் ஸ்ரீகிருஷ்ணருடைய சுக்ரீவ வலீகம் என்னும்பெயரையுடைய குதிரையும் சகல யாதவ ஸ்திரீகளும் தங்கள் தங்கள் புருஷர்களுடைய சரீரங்களைக் கட்டிக்கொண்டு அக்கினியிலே பிரவேசித்தார்கள். அப்படிப் பிரவேசியா நின்ற சகல யாதவர்களுக்கும் அர்ச்சுனனானவன் சரமகைங்கரியத்தைப் பண்ணினான். அந்தச் சமயத்திலே துவாரகாபுரி பட்டணமானது சமுத்திரத்தினாலே முழுகிப் போய் விட்டது. பிறகு அர்ச்சுனனானவன் அந்தப் பட்டணத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ணருடைய ஸ்திரீகளாகிய பதினாறாயிரம் ஸ்திரீகளையும் அழைத்துக் கொண்டு தன் பட்டணத்துக்குப் போனான். அப்படிப் போகப்படாநின்ற மார்க்கம் மத்தியிலே ஒருவனாகிய அர்ச்சுனனாலே கொண்டுவரப்பட்ட யௌவனஸ்திரீகளாகிய தளத்தைச்

சோரர்களானவர்கள் பதினாறாயிரம் ஸ்திரீகளையும் கிரஹித்துக் கொண்டுபோய் ஒரு மண்டபத்தில் அடைத்துவைத்து மறுநாள் திறக்கும்போது தண்டுகமண்டலமும் சடைமுடிகளுடனே ரிஷிகளாய் வெளிப்பட்டுப் போய்விட்டார்கள். பின்பு அர்ச்சுனனானவன் சோரர்களாலே அபஜயத்தையடைந்தவனாய் மகத்தான சோகத்தோடேகூட "என்னுடைய பலமானது ஸ்ரீ கிருஷ்ணனோடுகூடத்தானே போய்விட்டது" என்று எண்ணினவனாய் "என்னுடைய பாக்கியமானது இப்படி நசித்துப் போய்விட்டது" என்று சொல்லிக்கொண்டு சாயங்கால வேளையிலேயிராநின்ற சூரியனைப்போல நஷ்டமான தேஜோபலபராக்கிரமத்துடனே கூடினவனாய் தன்னுடைய பட்டணத்துக்குப் போனான். இப்படி சகல ஜகத்சம்ரக்ஷணார்த்தத்தின் பொருட்டுத் தேவாதி தேவனான ஸ்ரீ கிருஷ்ணபகவானானவர் சமஸ்தமான பூபாரத்தைத் தீர்க்கும்பொருட்டு யாதவ குலத்திலே அவதரித்து, சகலமான ராக்ஷஸர்களையும் நாசம் பண்ணி இன்னும் மகத்தான பூபாரத்தையும் தீர்த்து, நந்தகோகுலத்தினரையும் யோகிகளினாலே அடையத்தக்கதாயும் தேவதாயோக்யமான சுவர்ண காந்தியோடே கூடினதாகியும் முக்கியஸ்தானமாயுமிரா நின்ற பரமபதத்திலே வைத்து, நித்தியர்களான ஸ்ரீதேவி, பூதேவி நீளாதேவியர்களாலே சேவிக்கப்பட்டவராய் ஸ்ரீபரமபதமாகிய வைகுண்டத்திலே சந்துஷ்டராய் எழுந்தருளியிருந்தார்.

அதியற்புதமாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய மகத்தாகிய இந்தச் சரித்திரமானது சன்மசாபல்ய பலப்ரதமாகச் சொல்லப்பட்டது. ஸ்ரீ பரவாசுதேவருடைய சரித்திரமாகிய இந்தப் புண்ணிய சரித்திரத்தை ஸ்ரீபகவானுடைய சந்நிதானத்திலே பாராயணம் பண்ணவன் பரமமான பத்தியோடே கேட்டவன் ஸ்ரீபரமபதத்தை அடைகுவன்.

மகாபாதகங்களோடே கூடியிருந்தாலும், மகாபாபிகளுடைய சகவாசம் இருந்தாலும் புருஷனானவன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய மகத்தாகிய இந்தச் சரித்திரத்தைக் கேட்ட மாத்திரத்திலே சகல பாபத்தினின்றும் விடுபடுவன். துவாரகையிலே ஸ்ரீ ருக்மிணி சமேதராய் எழுந்தருளியிரா நின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானை ஒருகால் ஸ்மரித்தானேயாகில் சமுசயமில்லாமல் மிக்க பெருஞ் செல்வத்தையடைவன். யுத்தத்தினாலே சங்கடமான வேளையிலே தீபாந்தரங்களிலே சத்துருக்களாலே சூழப்பட்ட விடத்திலே சகல ராக்ஷஸ சங்காரகரான ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தியானம் பண்ணானேயாகில் சகல ஆபத்தினின்றும் விடுபட்டவனாய் சர்வாபீஷ்டத்தையும் அடைகுவன். மங்களகரமான கோகுலத்

திலே கோபிகா ஸ்திரீகளோடே கிரீடாவிநோதராய் எழுந்தருளி யிராநின்ற ஸ்ரீ கிருஷ்ணபகவானை யாரொருவன் தியானம் பண்ணுகிறானோ அவன் சகலமான மனோபீஷ்டங்களையும் சகலமான சௌபாக்கியங்களையும் அடைகுவன். யாரொருவன் மகத்தாகிய பிரதிபந்தகாதி ரோகசரீரங்களாலே பீடிக்கப்பட்ட வனாய் - சர்வ சத்துரு சங்காரகராயும் அநாதியாயும் இருக்கிற ஸ்ரீபகவானை ஸ்மரித்தானேயாகில் சத்துருவையும் காடாந்தகார மாகிய ராத்திரியையும் முன்னேவராநின்ற மிருத்யுவையும் ஜயிப்பன். வெகு பிரகாசமாய் (பலபடி) சொல்லவேண்டுவதென்ன! சகலாபீஷ்டங்களையும் அடைய வேணுமென்கிற பேர்களுக் குள்ளே சமர்த்தரானவர்கள் "ஸ்ரீ கிருஷ்ணாய நம: என்கிற மந்திரத்தை ஜபிக்கக்கடவர்கள்."

"கிருஷ்ணாய வாசுதேவாய ஹரயே பரமாத்மனே!
பிரணதார்த்திஹராய ஸ்ரீ கோவிந்தாய நமோநம:'

நாமதேயங்களோடு கூடின மங்களமாகிய மந்திரத்தைப் புருஷனானவன் பிரதிதினம் ஒருகால் உச்சரித்துச் சகலபாபங் களினின்றும் விடுபட்டு ஸ்ரீ விஷ்ணு லோகத்தை யடையக் கடவன்.

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

பின்னால் திரிபாத விபூதி மகாத்மியமும் மற்ற யுகங்களும் சொல்லப்படும்.

## 14. விஷ்ணு லோகத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் ஸ்ரீ மகாலக்ஷமிக்குப் பரமபத மகத்துவமாகிய திரிபாத்விபூதி மகாத்மியமும் மற்ற வியூகங்களும் சொல்லுதல்

ஸ்ரீய:பதியாகிய ஸ்ரீமந் நாராயணன் சுவயம் கலியாண ஸ்வரூபமாகியும் கலியாண குணங்களுக்கு ஆதாரமாகியும் தம்மைப் பார்க்கிலும் இதரமாகிய அறிவுள்ள வஸ்துக்களுக்கும் அறிவில்லாத வஸ்துக்களுக்கும் சுவாமியாயும் ஸ்ரீதேவி, பூதேவி நீளாதேவி முதலான திவ்ய மகிஷிகளுடனே எப்போதும் பிரகாசித்துக் கொண்டு அனந்த கருட விஷ்வக்ஸேனாதி முதலான நித்திய சூரிகளால் இடைவிடாமல் சுருதி சொல்லப்படுகிற கமலங்கள் போலே விளங்காநின்ற திருவடியையுடைத்தாயும், பிராகிருத

சம்பந்தமில்லாமல் ஆகாசம்போலே விஸ்தாரமாகிய திவ்விய நகரத்தில் நிலையாய் நின்றும், சிருஷ்டிஸ்திஸம்ஹாரம் என்றும் சொல்லப்படுகிற லீலைகளைத் திருவுளம்பற்றிப் பரமதயாளு வாகையால் வாசுதேவனென்றும் சங்கர்ஷணனென்றும் பிரத்யும்ந னென்றும் அநிருத்தனென்றும் சொல்லப்படுகிற லீலைகளைத் திருவுளம் பற்றி நாலுவிதமாகிய திவ்விய மங்கள விக்கிரகங்களாயும் ஸ்ரீ பரவாசுதேவராயும் சர்வலோக நாயக னாகியும், சர்வஜீவ தயாபரனாகியும் சர்வலோகரட்சகனாகி சர்வசேதனாசேதனங்களுக்கும் அந்தர்யாமியாயும் அவாப்தசமஸ்த காமனாயும், சர்வாபீஷ்டப் பலப்பிரதராயும் பக்தவாத்ஸல்யராயும், விராட்டு சுவராட்டு பரமசுவராட்டுவாயும், ஆதிமத்தியாந்தரஹிதரு மாயும் புருஷோத்தமராயும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகருமாய் விளங்கியிராநின்ற சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமந் நாராயணன் விஷ்ணுலோகத்தில் வியூகமாகிய வைகுண்டத்தால் எழுந்தருளியிருக்கிறது எப்படியென்றால் அந்த விஷ்ணுலோக மானது நிர்மலமாயும், புண்ணியகரமாயும், சுத்ததத்துவமயமாயும் நடுமத்தியானத்தில் விளங்காநின்ற அநேகமாயிரம் சூரியர்கள் போலப் பிரகாசித்து விளங்கா நின்றுமிருக்கும். அந்த லோகமானது கல்பாந்த காலத்திலேயும் லயிக்கிறதில்லை. பிரமருத்ராதி தேவர் களுக்கும், தரிசனம் பண்ணுகைக்குச் சக்கியமன்று. நாலுபக்கமும் அநேக கற்பக விருக்ஷங்களுடைய வனங்களாலே பரிபூர்ணமா யிருக்கும். அமிர்தம்போலே கோத்த ஜலங்களையுடையனவாகி யும், வயிடூரிய மணிமயங்களாகிய பிரகாசத்தையுடையனவாகி யும், சொர்ணமயங்களாயும், ரத்தினமயங்களாயும், திவ்வியமாயும் இருக்கிற கமலங்களாலே விளங்கா நின்றும்; சமர்த்தியா நின்றும் மதிச்சும் இருக்கிற பக்ஷிகள் கூவிக்கொண்டிருக்கிற அநேக நதி களாலே விளங்காநின்றும் இருக்கிறது. நித்தியங்களான அந்த நதிகளிலேயும் ஸ்திரீகளோடே நித்தியாளான தேவகணங்கள் கிரீடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜொலித்துக் கொண்டிருக்கிற அக்கினிக்குச் சமானங்களாயும் திவ்வியங்களாயும் இருக்கிற அநேகம் கோடி விமானங்களாலே சூழப்பட்டிருக்கிறது. சர்வ காலமும் சாமகானத்தைப் பண்ணாநின்ற கோகிலம் முதலான வைகளாலே விளங்காநின்று புஷ்பபூர்ணங்களாயும் இருக்கிற அநேக மனோக்கியங்களாயும் இருக்கிற விருக்ஷங்களாலே மிகவும் விளங்கா நின்ற அந்த லோகமத்தியத்திலே ரத்தினமய மான பிரகாரத்தோடே கூடிக்கொண்டும் ரமணீயமாயும் கோடி யோசனை விஸ்தீரணமாயும் துவாரகையென்று நாமத்தையுடைத் தானபட்டணம் இருக்கிறது. அநேககோடி சந்திரசமானங்களா யும் நானாரத்தின ஸ்தம்பங்களாலேயும் விளங்கா நின்றுமிருக்கிற உபரிகைகளாலே மிகவும் விளங்காநின்றும் பதினாறுவயதுக்குக்

குறைந்த வயதுடையவர்களாகியும், திவ்வியாளாயும் சர்வ லட்சணசம்பன்னாளாயும், திவ்யபூஷணபூஷிதாளாயும், இருக்கிற மனோக்கியங்களான ஸ்திரீகள் அந்தப்பட்டணத்திலே ரமணீயங் களான பிரதேசங்களிலே நித்ய சந்துஷ்டாளான பதிகளோடே கூட ஸ்ரீலக்ஷ்மிபதியான ஸ்ரீஹரியை ஆராதிக்கிறார்கள். அந்தப் பகவானுடைய பிரசாதத்தாலே அடையப்பட்ட மகத் ஐசுவரியத்தை அனுபவியா நின்றுகொண்டு பதிகளோடே கூட ஸ்ரீ பகவானுடைய அற்புதமான சரித்திரத்தை வியாக்கி யானம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பத்மம் போல கோத்த தோத்திரங்களையுடையவர்களாயும் பத்மம் போல ஹஸ்தங் களையுடையவர்களாயும் ஸ்ரீ மகாலக்ஷ்மிக்குச் சமானமாகிய ரூபங்களையுடையவர்களாயும் திவ்வியங்களான வஸ்திரா பரணங்களோடே கூடிக்கொண்டும் இருக்கிற ஸ்திரீகள் அந்த லோகத்திலே ஆனந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த லோகத்திலே சமஸ்தமான புருஷர்களும் சங்குசக்கரகதா தராளாய் சர்வாபரணபூஷிதாளாய் பீதாம்பரதாரிகளாயிருக் கிறார்கள். அந்த லோகத்திலே சஞ்சரித்துக் கொண்டிரா நின்ற ஸ்திரீ, புருஷாளுக்கு ஒருவருக்கொருவர் ஸ்பரிசத்தினாலே ஸ்ரீ ஹரியினிடத்திலே பக்தி சுககரமானது, மிகவும் விருத்தி யடைகிறது. அந்த லோகமத்தியிலே ரமணீயமான ஸ்ரீ வாசுதேவ மூர்த்தியினுடைய அந்தப்புரமானது விளங்கா நிற்கிறது. நாலு வாசலோடே கூடிக்கொண்டும் சொர்ணமயமான பிராகார தோரணங்களையுடையதாயும் நவரத்தின மயங்களாயும் திவ்வியங்களாயுமிருக்கிற அநேகம் உபரிகைகளுடனே கூடிக் கொண்டிருக்கிற அந்தப்புர மத்தியிலே நானாரத்தினபூஷிதமாயும் சந்தனகர்ப்பூர அகில் குங்குமம் முதலான கந்தத்தோடே கூடிக்கொண்டும் புஷ்பம் முதலான மேற்கட்டு வஸ்திரங் களினாலே அலங்கரிக்கப்பட்டும் இருக்கிற மண்டபத்தினுடைய மத்தியிலே கற்பக விருக்ஷத்தினுடைய சாயையிலே மனோக்கிய மான பஞ்சணை மெத்தையோடே கூடிக் கொண்டும் திவ்விய கந்தங்களையுடையதாயும் நானாவித புஷ்பங்களினாலே விளங்கா நின்றும் மனோக்கியமாயும் இருக்கிற சேஷபரியங்க மாகிற பத்மாசனத்திலே ஜனார்த்தனரான வாசுதேவராயிரா நின்ற விஷ்ணுவானவர் மகாலக்ஷ்மியோடுகூட எழுந்தருளியிருக் கிறார். அநேக சூர்யசந்த்ராளுக்குச் சமானமான காந்தியை யுடையவராகியும் திவ்யாபரணபூஷிதராயும், மிகவும் வக்கிரங் களாயும், நீலங்களாயுமிருக்கிற இரண்டு புருவங்களாலே மனோக்கியமான நாசியினாலே விளங்காநின்ற திருமுக மண்டலத்தையுடையவராயும் மிகவும் மனோக்கியமாயும் சுந்தரமாயும் இருக்கிற கபோலங்களாலே விளங்காநின்றும்

மார்பிலே யிராநின்ற மகாலக்ஷ்மியை ஆலிங்கனம் பண்ணிக் கொண்டிரா நின்றும் அமூலவியமான (காரணமில்லாத இயற்கையாக) முத்தாரங்களாலே விளங்கா நின்றும் விசாலமாயு மிருக்கிற திருமார்பையுடையவராயும் மிகவும் காந்தியுடையவ ராயும் முத்துமயங்களாயும் இருக்கிற திவ்யாபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் பாலசூரியனுக்குச் சமானமான பீதாம்பரத்தி னாலே சூழப்பட்டும் மாணிக்கமயமான நூபுரங்களையுடைய திருவடித்தாமரைகளிலே நிஷ்களங்கனாய் விளங்காநின்று சந்திரனைப் போலே கோத்த நகபந்தியினாலே விளங்கா நின்றும்: உருக்கப்பட்ட தங்கம் போலே கோத்த காந்தி யையுடையவளாயிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியுடனே கூடிக் கொண்டு அந்த விஷ்ணுலோகத்திலே யிருக்கிற தேவேச்வர ரான ஸ்ரீவாசுதேவர் அந்த லோகத்திலே கிரீடித்துக் கொண்டிருக் கிறார். உருக்கப்பட்ட தங்கம் போலே சிகத்த காந்தியையுடைய வளாயும் சர்வாபரணபூஷிதையாயும் பத்மம்போலே கோத்த நேத்திரங்களையுடையவளாயும், பத்மம் போலே கோத்த அஸ்தங்களையுடைவளாயும், பத்மமாலையினாலே அலங்கரிக் கப்பட்டும் திவ்விய சந்தனத்தினாலே பூசப்பட்ட திருமேனியை யுடையவளாயும், மிகவும் மனோக்கியமாயுமிருக்கிற ஜகத்தினாலே விளங்காநின்றும் மந்தார பாரிஜாத புஷ்பங்களாலே விளங்கா நின்றும் மனிரத்தினமயங்களான ஆபரணங்களாலே மிகவும் பிரகாசியா நின்றும் வண்டுபோலவுமிருக்கிற முன்நெற்றி மயிர் களையுடையவளாயும், பருத்தும் உன்னிதமாயும் இருக்கிற ஸ்தனங்களாலே ஸ்ரீ ஹரியினுடைய மார்பிலே நெருங்கியிரா நின்றும் கேயூரம் அங்கதம், ஆரம் முதலான ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் நித்தியமான யௌவனத்தையுடையவளாயும் சர்வலோகத்துக்கும் தாயாய் ரட்சிக்கிறவளாயும் இருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியாகியவள் ஸ்ரீ ஹரியினுடனே கூட அந்த விஷ்ணுலோகத்திலே சர்வகாலமும் ஆனந்தித்துக் கொண் டிருக்கிறாள். அப்படிப்பட்ட விஷ்ணுலோகத்தில் ஸ்ரீவாசுதேவரோடே எழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியாருக்குத் தன்னுடைய புத்திரர்களாகிய சேதனர் களிடத்துக் கிருபை பிறந்து தேசாந்தரத்தானாயிரா நின்ற புத்திரன் பக்கலில் மாதாபிதாக்களுடைய இருதயம் கிடக்குமாபோலே சேதனாள் மேல் இஷ்டம் பிறந்து எந்த உபாயங்களால் தன் புத்திரர்கள் தன்னடிச்சோதியை வந்தடை வார்களோ அந்த அந்த இச்சையைக் கொண்டு பெரிய பெருமாளை பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணி, சர்வவித கைங்கர்யத்துக்கும் படுக்கப் பாயும் நின்றால் மரவடியும் வீற்றிருந்தால் சிம்மாசனமுமாய் உதவும் அனந்தாழ்வானை

யுடையவராய் இருக்கச் செய்தேயும் பிராட்டியார் ஸ்ரீமந் நாராயணனாகிய தன்னுடைய பதிக்குச் சில கைங்கரியவதியாய் இருந்து கொண்டிருக்கையால் பெரிய பெருமாளுக்குக் கிருபை பிறந்து "வாரீர், சுபமங்கலவதியான பிராட்டியே! எந்த இச்சையினாலே என்னை அடைந்தாய்" என்று திருவாய் மலர்ந்தருளும்போது பிராட்டியார் எழுந்திருந்து இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு மகா விசனாக்ரதையாய் 'வாரீர், பகவானே! சேதனாளாகிய நம்முடைய புத்திரர்கள் நம்மையடைகிற விதி எதுவோ அதை அனுக்கிரகம் பண்ணவேணுமென்று பிரார்த்தியாநின்ற பிராட்டியைப் பார்த்து 'வாரீர், பிராட்டி', ஆதிகாலத்திலே தானே என்னையடையும் படியான பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்துக்கு ஸ்ரீமத் அஷ்டாக்ஷரியும் துவயரத்தினமும் ருத்திரனுக்கும் பிரம்மாவுக்கும் உபதேசித்தேன். பிரம்மாவும் நாரதாதி மகரிஷிகளுக்கு உபதேசித்தார். அந்தத் திருமந்திரத்தை ருத்திரன் பார்வதிக்கு உபதேசித்தார். அதற்கு மேலும் சேதன சம்ரக்ஷணார்த்தத்தின் பொருட்டு பதரிகாச்ரமத்தில் தானே நரனும் நாராயணனுமாய் அவதரித்து நரனுக்கு ஸ்ரீமத் அஷ்டாக்ஷரத்தை உபதேசித்தேன். அந்த நரன் நாரதன் மார்க்கண்டேயன் முதலான சில மகரிஷிகளுக்கும் உபதேசித்தார். இப்படி அஷ்டாக்ஷரத்து வரப்படாநின்ற திருமந்திரத்தை ரிஷிகள் ஆச்ரயித்தார்களே தவிர மற்றவர்கள் ஓரான்வழியாய் அனுஷ்டியாமல் போனார்கள். இப்பால் சேதனாள் தம்மையடையும் பொருட்டு பரம புருஷார்த்தமாகிய துவய மந்திரத்தை உன்பொருட்டு உபதேசிக்கிறேன். என்று சொல்ல பிராட்டியார் எழுந்திருந்து பிரதக்ஷண நமஸ்காரம் செய்து, திருப்பவளத்தை அஸ்தத்தால் மூடிக்கொண்டு "தேவர் ஆசாரியராயும் அடியேன் சிஷ்யையுமாக நிற்கிறேன்; தேவர் யுகங்கள் தோறும் சேதனசம்ரக்ஷணார்த்தத்தின் பொருட்டு அநேக அவதாரங்கள் செய்ததில் கிருதயுகத்தில் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் பண்ண நரசிம்மாவதாரமும் எடுத்து ஹிரண்யகசிபுவைச் சம்ஹரித்து பிரஹலாதனுடைய பக்திக்கு ரக்ஷித்தீர். திரேதாயுகத்தில் ஸ்ரீ ராம லக்ஷ்மண பரதசத்துருக்கனராய் அவதரித்துச் சாமபேததான தண்டமென்கிற சதுர்வித உபாயத்தை அனுஷ்டித்துக் காட்டினீர், துவாபரயுகத்தில் ராம கிருஷ்ணாவதாரமாய் அவதரித்து துஷ்டனான துரியோதனனுக்கும் மகரிஷிகளுக்கும் விசுவரூபமாகிய பரத்துவத்தைக் காட்டினீர். உபயசேனைமத்தியில் அர்ச்சுனனுக்குக் கீதார்த்தம். சாதித்தீர். அதை அனுஷ்டித்துக் கடைத்தேற அல்லோம் என்று சோகித்து விழுந்த அருச்சுனனைத் தேற்றிப் பதினெட்டாம் அத்தியாயத்தில் சரமார்த்தத்தை அருச்சுனன் பொருட்டுச்

சாதித்தீர். அதிலேயும் சேதனாள் ருசிபிறவாமல் போய் விட்டார்கள். துவாபரயுக அந்தியமட்டுக்கும் தேவரீர் லீலா விபூதியில் தேவரீர் நினைத்தபடியே பூபாரத்தையும் தீர்த்து, கிருஷ்ணாவதாரமும் முடிந்து ஸ்ரீவைகுண்டத்துக்கு விஜயம் பண்ணினீர். இப்போது சுவர்க்கமத்தியபாதாள லோகங்களில் இருக்குஞ் சேதனாளை அடியேன் பார்க்கும்போது சைத்திர - வைகாச மாதத்தில் காயப்பட்ட சூரிய கிரணத்தில் மணலிலக்கப் பட்ட கிருமிகளைப் போலப் பதைத்துத் தபிக்கப்பட்ட சேதனா ளாகிய என் பிள்ளைகள் தன்னடிச் சோதியை எவ்விதத்தில் அடையப் போகிறார்கள் என்று சிந்தித்துக் கொண்டு பெரிய பெருமாளை ஆச்ரயிக்கும்போது பிராட்டியைக் கிருபையுடனே மிகவும் கடாக்ஷித்துச் "சிந்திக்க வேண்டாம்; உன்னுடைய நினைவை நிறைவேற்றி வைக்கிறேன்" என்று பதரிகாச்ரமத்தில் நரனுக்குச் சாதித்த ஸ்ரீமத் அஷ்டாக்ஷரியாகிய திருமந்திரத்தை யும் இந்த விஷ்ணுலோகத்தில் உன் குமாரர்களாகிய சேதன சம்ரக்ஷணார்த்தத்தின் பொருட்டு என்னை நீ ஆசாரியனாய் ஆச்ரயித்தமையால் துவய ரத்தினத்தையும் உபதேசிக்கிறேன். துவாபர யுகாந்தத்தில் உபய சேனைமத்தியில் தேர்த்தட்டில் அர்ச்சுனனுக்குச் சாதித்த சரமசுலோகத்தையும் உபதேசிக் கிறேன். சுவேதத்தீவாகிய வியூகத்தில் எழுந்தருளியிருக்கிற வராகநயினார் பூமிப் பிராட்டியாருக்குச் சாதித்த சுலோகத்துவய மும் உனக்கு உபதேசிக்கிறேன். என்று பெரிய பிராட்டியாருக்குச் சாதிக்கப் பிராட்டியார் வாக்கியம்: - "வாரீர், பகவானே! இந்தப் பிரகாரம் அந்த ஓரான்வழியாகப் பாராகிய பூமியிலே எவ்விதத்தில் அனுபவிப்பார்கள் என்று பெரிய பிராட்டியார் பெருமாளைத் திருவடிதொழுது நிற்கும்போது, பிராட்டியாரைப் பார்த்துப் பெருமாள் வாக்கியம் - வாரீர், பிராட்டி! நான் உன்பொருட்டுச் சாதித்த திருமந்திரத் துவயம் சரமசுலோகம் வராக சரமம் இவை களைச் சேனைமுதலியாரைச் சிஷ்யனாக்கிக் கொண்டு உபதேசிக்கக் கடவீர். அதற்குமேல் மானைக்காட்டி மானைப் பிடிக்குமாபோலே என்னுடைய வைகுந்த முக்தாளுக்கு ஊனாகிய சரீரத்தைக் கொடாதவன் உலகங்களிலுள்ள ஆத்துமாக் களை சம்ரட்சணை பண்ணும்படியாய் நித்திய சூரிகளுக்கு இஷ்டமாகிய சரீரத்தைக் கொடுத்து வேதங்களையும் கொடுத்து அதன் பொருளைத் தெரிவிக்கும் படி தானே லீலாவிபூதியில் ஞான தேசிகனாயும் சடகோபனாயும் காரிமாறனென்றும் நம்மாழ்வார் என்றும் பேருடையவராய் அவதரித்து, என் அங்கங்களே ஆழ்வாராதிகளாய் அவதரித்து, நித்திய முக்தாளே பூர்வாசாரியர் களாய் அவதரிக்கும்படி சேதன சம்ரக்ஷணார்த்தத்தின் பொருட்டு ஆசார்ய - சிஷ்யக் கிரமத்தை நடத்திக் காட்டுகிறோம் என்று

பிராட்டிக்கு அபயப் பிரதானம் பண்ணி மேலும் நான் அவதரிக்கும் முன்பே திருவனந்தாழ்வானை லீலா விபூதியில் தென்திசையில் திருவழுதிநாட்டில் குருகாபுரியில் திந்திரிணி விருக்ஷமாய் அவதரிக்கும்படி நியமித்தேன் என்றும் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்த சேதனாள் ஓரான்வழியாகக் கடைத்தேறும் பொருட்டு என்னுடைய திரிபாத் விபூதி மகத்துவமும் மகதாதி பூதசிருஷ்டி யிலும் வியூக பேதவர்ணத்திலும் சூரியனை அகலாமல் இராநின்ற பிரபையைப்போலே என்னை அகலாமல் அப்படிச் சகலமும் தெரிந்தவளாயிருந்தாலும் சேதனசம்ரட்சணத்தின் பொருட்டு என்னை ஆசாரியனாய் வரித்தபடியால் என்னுடைய பரமபத மாகிய திரிபாத்விபூதி மாஹாத்மியமும் வியூகபேதவர்ண தத்துவ மும் சுதர்சன மகத்துவமும் ஊர்த்துவ புண்ட்ர விதியும் ஸ்ரீவிஷ்ணு வாகிய என்னை ஆராதிக்கிற கிரமும் ஸ்ரீமத் அஷ்டாக்ஷரமும் துவயரத்தினமும் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருளாகிய சரமசுலோகார்த்தமும் வராக சரம சுலோகமும் உன் பேரில் இருக்கிற கிருபையால் சாதிக்கிறேன்; அதை நீ லீலாவிபூதி யில் தென்திசையில் திருவழுதிநாட்டில் அவதரிக்கப்போகிற என் அம்சமான சடகோபனாகிய நம்மாழ்வாருக்கு வெளியிடும்படி அருளிச்செய்யவும்: அவராலே மதுரகவியாழ்வார் முதலாகத் தொடங்கி ஸ்ரீமந் நாதமுனிகளாலே ஓரான்வழியாக ஆசாரியா ளாலே வெளியிடலாம் என்று கூறி அதற்குமேல் என்னுடைய திரிபாத் விபூதியாகிய பரமபதத்தின் மகத்துவமும் அதில் வசித்துக் கொண்டிருக்கிற தேஜோமயத்தையும் சொல்லுகிறேன்; கேள் என்றருளிச் செய்தார்.

ஹிரி : ஓம்

## (1) திரிபாத் விபூதி மகத்துவம்

விஷ்ணுலோகத்திலே எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் பெரிய பிராட்டியாரைப் பார்த்து, திரிபாத் விபூதியாகிய என்னுடைய பரமபத மகிமையைச் சொல்லுகிறேன் : கேள் : வாராய், பிராட்டி! பரமாத்மாவான ஸ்ரீ அரியாகிய என்னுடைய சுவரூபத்தையும் என்னுடைய ஸ்தான சுவரூபமான திவ்விய குணசம்பத்தையும் சொல்லுகிறேன் : கேட்கக் கடவாய் : புருஷோத்தமனாகிய நான்தானே ஸ்ரீமந் நாராயணரென்று சொல்லப்படுகிறேன். 'ஜனார்த்தனரான பரமாத்மாவாகிய நான் சமஸ்த ஜெகத்துக்கும் ஈசுவரராயும் பதுமபாணி பாதங்களை யுடையவராயும் எங்கும் நேத்திரங்களையுடையவராயும் பரிபூரண

ராயும் இருக்கிறேன். பகவானாகிய என்னிடத்திலேயே சமஸ்தலோகங்களும் இருக்கின்றன. நானே சமஸ்தலோகங்களையும் தரியாநின்று கொண்டு தியானிகளுடைய மனங்களையும் பற்றினவனாயிருக்கிறேன். இந்தப் பரிபூரணரான நான் பிரமசுவரூபியாய்க் கொண்டு பரமபுருஷரான ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னோடேகூட போகார்த்தமாக திவ்விய மங்கள ரூபத்தையுடையவராய் பிரமாணமில்லாத சரீரத்தையுடையவராயிருந்தாலும் ஒரு ரூபத்தையுடையவராய் யுவாவாயும் குமார ரூபத்தையுடையவராயுமாய்க்கொண்டு சமஸ்த ஜெகத்துக்கும் மாதாவாயிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னோடே கூட நிலாவுடனென்றும் அமிர்தகிரணனான சந்திரனானவன் போல ரமித்துக்கொண்டிருக்கிறேன். குமாரராயும் மகத்தாகிய யௌவனத்தையுடையவராயும் கோடி மன்மதாள் போலச் சவுந்தரியத்தையுடையவருமாய் ஜெகதீச்வரியான ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னேடோ கூட பரமபதத்திலே ரமித்துக்கொண்டிருக்கிறேன். எனக்குப் போகார்த்தமான பரமபதமே லீலார்த்தமான சமஸ்த ஜெகத்துக்கும் போக ரூபமாயும் லீலாருபமாயும் இரண்டுபிரகாரமாக இருக்கிறது. என்னுடைய போக ரூபமான விபூதியானது ஒருகாலும் லயமில்லாமல் நித்தியமாய் இருக்கும். லீலாவிபூதியானது ஒருகால் சங்கரிக்கப்படும். போகலீலா ரூபங்களான இரண்டு விபூதிகளும் என்னுடைய சக்தியினால் தரிக்கப்படுகிறவை, என்னுடைய பரிபூரணமான போக விபூதியானது பரமபதமாக நிற்கிறது. ஒரு அம்சமானது லீலாவிபூதியாயிருக்கிறது. திரிபாத்விபூதியானது நித்தியமாயிருக்கும்; என்னுடைய லீலாவிபூதியானது அநித்தியமாயிருக்கும். என்னுடைய நித்தியமான பரமபதத்திலே மங்களகரமாயும் சாசுவதமாயும் நாசரஹிதமாயும் நித்தியவிபமாயும், சர்வகாலமும் யௌவனத்தையுடையதாயும் ஜெகதீச்வரியாகிய ஸ்ரீ மகாலக்ஷ்மியான உன்னோடே கூட ஸ்ரீ தேவி பூதேவி நீளாதேவியோடும் கூடிக்கொண்டு நித்திய போகத்தையுடையதாயும் கொண்டிருக்கிறது. ஜெகன்மாதாவான ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய நீ என்னைவிட்டு ஒரு காலும் பிரியாமலிருக்கிறாய். வாராய்பிராட்டி! நான் எப்படி சர்வபரிபூர்ணராய் இருக்கிறேனோ அப்படியே என்னுடைய பத்தினியான ஸ்ரீ கமலையாகிய நீயும் அந்தப் பரமபதத்தில் சர்வத்ர பரிபூரணியாயிருக்கிறாய்! சமஸ்த லோகங்களுக்கும் ஈசுவரியாயும் சர்வகாலமும் மங்களேச்வரியாயும், எங்கும் பாணிபாதங்களையுடையவளாயும் எங்கும் நேத்திரம் சிரசு திருமுகம் இவைகளையுடையவளாயும் ஸ்ரீமந் நாராயணராகிய என்னுடைய பிரியையாயும் ஜகன் மாதாவாயும் சகல ஜகத்துக்களுக்கும் ஆச்ரயையாயும் இருக்கிறாய். தாவரசங்கமரூபமான இந்த ஜெகத்தானது ஸ்ரீ

மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய கடாக்ஷத்தை ஆச்ரயிக்கிறது. ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய நிமிஷோந் நிமிஷங்களாலே ஜெகத்தினுடைய ஸ்திதிலயங்களுண்டாகின்றன. சமஸ்தத்துக்கும் காரணபூதையாயும் சத்துவாதி குணங்களையுடையவளாயும் பரமேச்வரியாயும் ஸ்தூல சூக்ஷ்ம ஸ்வரூபத்தையுடையவளாயும் இருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியான நீ பூதேவியாயும் நீளாதேவியாயும் சொல்லப்படுகிறாய். சமஸ்த ஜெகத்துக்கும் ஆதாரபூதையாய்க் கொண்டு பிருதிவிரூபமாக (பூதேவியாக) விருக்கிறாய். ஜலம் முதலான தாலே ரசரூபமாய் இருந்துகொண்டு நீ தானே நீளா தேவியாயும் இருக்கிறாய். நீ தானே தனம் வாக்கு இவைகள் ரூபமாய்க் கொண்டு ஸ்ரீ மகாலக்ஷ்மி ரூபமாக விருக்கிறாய். இந்தப் பிரகாரம் சமஸ்தத்திலும் மூன்று ரூபமாகவிராநின்ற ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய நீ ஸ்ரீ ஹரியாகிய என்னை ஆச்ரயிக்கிறாய். வாராய், கமலாசனீ: சமஸ்த வித்யாபேதங்களும் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய ரூபங்களே. சமஸ்தமும் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய ரூபமே. சமஸ்த ஜெகத்தும் ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய சரீரமாகச் சொல்லப்படுகிறது. வாராய் பிராட்டி! உன்னுடைய ரூபமானது ஸ்திரீகளிடத்திலே சவுந்தரிய மாகவும் சீல விருதமாகவும் சௌபாக்கியமாகவும் ரதிபோகமாக வும் இருக்கிறது மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய கடாக்ஷத்தில் பதினாயிரத்திலொருபாகத்தினாலே பார்க்கப்பட்டவர்களாய் பிரமா சிவன் தேவலோகபதியான இந்திரன், சந்திரசூரியர், குபேரன் யமன் அக்கினி உள்ளிட்ட சமஸ்தமான பேர்களும் மகத்தான ஐசுவரியத்தை அடைந்தார்கள். லக்ஷ்மி, கமலை, வித்யா, மாதா, விஷ்ணுபிரியா, நித்யா, சந்தியா, விஷ்ணுபத்னீ, மகாதேவீ, க்ஷீரோத்தனயா, ரமா, ஆனந்தா, லோகமாதா, பூமி, நீளா, சர்வசுகப்பிரதா, ருக்மிணி, சீதா, சர்வவேதவதி, சுபாஷினி, சரஸ்வதி, கவுரி, சக்தி, சுவாஹா, சுதாநிதி, நாராயணி, நித்யான பாயினி என்று இந்தப் பிரகாரம் புண்ணியங்களான இந்த நாமங் களைப் பிராத:காலத்திலே எழுந்திருந்து யாரொருவன் படிக்கிறானோ அவன் தனதானிய முதலானமகத்தான சம்பத்தை அடைவன்; யாரொருவன் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னை வேத மந்திரங்களாலே தோத்திரம் பண்ணப்பட்டவ ராய்க் கொண்டு சிவன் முதலான சமஸ்த தேவதாளுக்கும் சமஸ்த ஐசுவரிய சம்பத்தையும் கொடுத்தாயோ தாவர சங்கம ரூபமான சமஸ்தஜகத்தும், யாதொரு ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய கடைக்கண்ணை ஆச்ரயித்துக் கொண்டிருக்கிறதோ அப்படியிரா நின்ற ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய நீ, யாதொருபகவானான என்னுடைய மார்பிலே அக்கினியிலே பிரபையானது போலே நித்தியமாயிருக் கிறாய். சர்வேச்வரராயும் ஸ்ரீமானாயும் புருஷோத்தமராயும்

இருக்கிற நானே ரக்ஷகன். அந்த பரமபதத்திலே ஸ்ரீமந் நாராயண னான நான் வாற்சலிய குணநிதியாயும் சுவாமியாயும் சுசீலராயும் சுலபராயும் சர்வஜ்ஞராயும் சர்வசக்தியை யுடையவராயும் நித்திய ராயும் பூர்ண காமராயும் சர்வசுக்ருதாயும் சுகஸ்வரூபியாயும் அமிர்தநிதியாயும் சமஸ்த பிராணிகளுக்கும் சரண்யராயும் பக்தர் களுக்குச் சொர்க்க மோக்ஷப்பிரதராயும், நித்தியசூரிகளுக்கு நிதியா யும் கிருபாநிதியாயும் இருக்கிறேன். இந்தப் பிரகாரம் திருமந்திரத்தை அறிந்து நன்றாக அப்படியே ஆசரிக்கக்கடவாய். ஸ்தாவர சங்கம ரூபமான இந்த சமஸ்த பிரபஞ்சமும் அந்தப் பரம பதத்திலே பகவானாயிருக்கிற எனக்கு ஆதாரபூதமாயிருக்கிறது. ஸ்ரீமந் நாராயணரான நான் சுவாமியாயும், சமஸ்த ஜகத்துக்கும் ஈசுவரராயும் பிரபுவாயும் மாதாபிதாவாயும் பரிபூரணராயும் பரமாத் மாவாயும் பந்துவாயும் ஆச்ரயராயும் சரணாகதவற்சலராயும் அனந்தகல்யாண குணபரிபூர்ணராயும் ஸ்ரீய:பதியாயும் சர்வா பீஷ்டப்பிரதராயும் இருக்கிறேன். சாஸ்திரங்களினால் எவர் ஜெகதீச்வரராய் நிர்க்குணரென்று சொல்லப்படுகிறாரோ பிராகிருத மான ஹேயகுணங்களாலே காணப்படாநின்ற சமஸ்த பிரபஞ்ச மும் அநித்தியமென்று சொல்லப்படுகிறதோ அந்தச் சாஸ்திரத்திலே யும், பிரம்மாண்டத்தினுடைய பிராகிருதமான ரூபமே நசிக்கிறது. பிராகிருத ரூபமே அநித்தியம் என்று சொல்லப்படுகிறது. வாராய், பிராட்டி! இந்தப் பிரம்மாண்டமானது தேவதேவரான ஸ்ரீஹரியாகிய என் லீலார்த்தமாகப் பிரகிருதியினின்றும் உண்டாயிற்று. ஸ்ரீஹரி யாகிய என்னுடைய லீலையானது நானாவிதமாக இருக்கிறது. பதினாலு லோகங்களிலேயும் அநேக நதிகளோடே கூடிக் கொண் டிருக்கிற சமுத்திரங்களாலேயும் தேவாதி நாலுவிதப் பிராணிகளா லேயும் மகா உன்னதமான பர்வதங்களாலேயும் பரிபூரணமான இந்தப்பிரமாண்டமான பிரகிருதியினின்றும் உண்டாயிற்று ஒன்றுக் கொன்று பத்தத்தனை அதிகங்களான ஏழு ஆவரணங்களாலே சூழப்பட்டிருக்கிறவைகளாக க்ஷடாதி ரூபமாய் யாதொரு கால மானது சுழன்று கொண்டிருக்கிறவைகளோ அந்தக் காலத்தினாலே தானே ஜெகத்தினுடைய சிருஷ்டிஸ்திதிசம் ஹாரங்கள் உண்டாகிற வைகளோ, காலமாகிற அக்கினியினாலே இந்தப் பிரம்மாண்டமும் அண்டத்துக்குட்பட்ட லோகங்களும் தகிக்கப்படுகிறவைகளோ தேவரூபியான ஸ்ரீஹரியாகிய என்னுடைய பிரகிருதியிலே லயத்தை அடையா நிற்கிறவைகளோ, அண்டத்துக்கு ஆவரணங் களான பிருதிவி ஆதி மகாபூதங்களும் பிரகிருதியிலே லயத்தை அடைகிறவைகளோ சமஸ்த ஜகத்துக்கும் ஆதாரமாயிருக்கிற அந்தப்பிரகிருதியானது ஸ்ரீ ஹரியாகிய என்னை ஆச்ரயித்திருக் கிறது. பகவானான நான் சர்வகாலமும் அந்தப் பிரகிருதியி னாலே ஜகத்தினுடைய சிருஷ்டிஸ்திதி லயங்களைப் பண்ணு

கிறேன். தேவதேவரான என்னாலே லீலார்த்தமாக அந்தப் பிரகிருதியானது ஜகத்துருபமாகச் சிருஷ்டிக்கப்பட்டது. விகார சூனியரான என்னுடைய லீலையானது அவித்தையென்றும் பிரகிருதி என்றும் மாயை என்றும் குணத்திரயமயமென்றும் சொல்லப்படுகிறது. ஜகத்தினுடைய சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணமான அந்த லீலையானது யோக நித்திரையென்றும் மாயையென்றும் பிரகிருதியென்றும் சத்துவாதி குணத்தையுடையதென்றும் அவ்வியக்தம் என்றும் பிரதானமென்றும் சொல்லப் படுகிறது. ஜகத்தினுடைய சிருஷ்டிலயங்கள் சர்வகாலமும் பிரகிருதியினின்றுமே உண்டாகின்றன. பிரகிருதியினுடைய ஸ்தானமானது எண்ணிக்கையில்லாமலும் காடமான அந்தகார ஸ்வரூபமாயும் இருக்கும். ஸ்தூல சூக்ஷ்மரூபமான அந்தப் பிரகிருதியினாலே சமஸ்த ஜகத்தும் சூழப்பட்டிருக்கிறது. அந்தப் பிரகிருதியினாலே ஜகத்தினுடைய சிருஷ்டிலயங்களானவை விகாரரூபமாயும் சங்கோச ரூபமாயும் இருக்கின்றன. இந்தப் பிரகாரம் சமஸ்தபூதங்களும் பிரகிருதிக் குளப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே பிரகிருதிக்குளப்பட்டிருக்கிற இந்த சர்வஜகத்தும் முடமாகவேயிருக்கிறது. இந்தப் பிரகாரம் பிராக்ருதரூபமான பிரகிருதியினுடைய ரூபமானது சொல்லப்பட்டது வாராய், பிராட்டி! பரமபதத்தினுடைய ரூபத்தையோவென்றால் சொல்லுகிறேன், கேட்கக்கடவாய். பிரகிருதிக்கும் பரமபதத்துக்கும் மத்தியிலே வேதபுருஷனுடைய சரீரத்திலுண்டான வேர்வை ஜலங்களிலே உண்டாகாநின்றும் ஜலங்களினாலே பூரிதமாயும் நவனியமாயும் சுபகரமாயும் இருக்கிற விரஜாநதி இருக்கிறது. அந்த விரஜாநதிக்கு அக்கரையில் திரிபாத் விபூதியென்றும் சாசுவதமாயும் மோக்ஷ சுவரூபமாயும் சத்தியமாயும் அளவில்லாததாயும் இருக்கிற பரமபதம் இருக்கிறது. சுத்தசத்துவகுணமாயும் திவ்வியமாயும் நாசரஹிதமாயும் பிரம்மத்துக்கு ஸ்தானமாயும் அநேககோடி சூரியாக்கினிக்களுக்குச் சமானமான தேஜஸையுடையதாயும் சர்வவேதமாயும் நிர்மலமாயும் சிருஷ்டி பிரளயமில்லாததாயும் அனந்தமாயும் ஜரையில்லாததாயும் நித்தியமாயும் ஜாக்ரத சொப்பன ஸுஷுப்தி யென்னப்பட்ட அவஸ்தைகளில்லாததாயும் சுவர்ணமாயும் மோக்ஷரூபமாயும் பிரம்மானந்த சுகமென்ற பெயரையுடையதாயும் சமானமும் அதிகமும் (மிக்கதும்) இல்லாததாயும் ஆதியந்தமில்லாததாயும் சுபகரமாயும் தேஜோமயமாயும் மிகவும் ரம்மியமாயும் ஆனந்த சாகரமாயும் நித்திய சூரிகளோடேயும் முக்தாளோடேயும் அமானவ ஸ்பரிசம் பட்டு இவை முதலான குணங்களுடனே கூடிக்கொண்டிருக்கிறது அந்தப் பரமபதம். ஸ்ரீஹரியாகிய என்னுடைய அந்தப் பரமபதத்தைச் சூரியனும் பிரகாசிக்கிறதில்லை, சந்திரனும் பிரகாசிக்கிற

தில்லை. அக்கினியும் பிரகாசிக்கிறதில்லையாதொரு பரமபதத்தை யடைந்த பேர்கள் திரும்பவும் சன்மத்தையடைகிறதில்லையோ அந்தப் பரமபதமானது ஸ்ரீஹரியாகிய என்னுடைய பரமபதம். எனக்குச் சாசுவதமாயும் மங்களகரமாயும் நாசரகிதமாயும் இருக்கிற அந்தப் பரமபதமானது அநேகம் கோடி கல்பகாலங்களாலேயும் வர்ணிக்கச் சக்கியமன்று. வாராய், பிராட்டி! என்னுடைய பரமபதமானது பிரம்மாவினாலேயும், ருத்திரனாலேயும் முனிசிரேஷ்டர்களாலேயும் வர்ணிக்கைக்குச் சக்கியமன்று. யாதொரு பரமபதத்திலே ஈசுவரனாயும் அச்சுதனாயும் இருக்கிறேனோ அந்த அச்சுதனான நானும் அந்தப் பரமபதத்தினுடைய மகிமானந்தத்தை அறிவனோ! அறியேனோ; யாதொரு பரமபதமானது வேதாந்தங்களினாலே அறியப்படுகிறதோ யாதொரு பரமபதத்திலே நித்யசூரிகள் வாசம் பண்ணுகிறார்களோ என்னுடைய அந்தப் பரமபதத்தை ஞானிகளான பேர்கள் சர்வகாலமும் பார்க்கிறார்கள். நித்தியமாயும் சாசுவதமாயும் இருக்கிற அந்தப் பரமபதமானது பிரமருத்திரதேவர்களாலே பிரவேசிக்கச் சக்கியமன்று. யோகீச்வரர்களாலே சாஸ்திர மார்க்கத்தினாலே தியானத்தினாலே பார்க்கப்படுகிறது. வாராய்! தீபரேகா! பிரமாவும் ருத்திரனும் தேவர்களும் மற்ற பேர்களும் அந்தப் பரமபதத்தையறிவார்கள். சமஸ்த உபநிஷத்துக்களுடைய அர்த்தத்தைப் பார்த்துச் சொல்லுவார்கள் - யாதொரு பரமபதத்திலே சுபமென்று பேரையுடையதான மதுசரசான புஷ்கரணி பெருகிக் கொண்டிருக்கிறதோ யாதொரு பரமபதத்திலே அநேக சிருங்கங்களை உடையனவாயும் மிகவும் சுகப்பிரதங்களாயும் இருக்கிற காமதேனுக்கள் இருக்கின்றனவோ அந்தக் காமதேனுக்களாலே ஸ்தோத்திரம் பண்ணப்படாநின்ற என்னுடைய ஸ்தானமான அந்தப் பரமபதமானது சிலாக்கியங்களாயும் சுபமென்று பெயரையுடையவைகளாயும் இருக்கிற அந்தக் காமதேனுக்களாலே விளங்குகிறது. பிரகிருதியைக் காட்டிலும் பரமமாயும் அநேகங்கோடி சூரியன் போலே சுவயம்பிரகாசமாயும் பரப்பிரமத்தினுடைய லோகமாயும் இருக்கிற அந்தப் பரமபதத்திலே நித்திய யுவாக்களான ஸ்ரீஹரியாகிய நானும் ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய உன்னேடேகூட அந்தப் பரமபதத்திலே விளங்காநின்றுகொண்டு வாசம் பண்ணுகிறோம். யாதொரு பரமபதத்திலே உடன்பிறந்தவர்களாயிருக்கிற பூதேவி நீளாதேவி யிவர்கள் இருவரும் ஸ்ரீஹரியாகிய எனக்குப் பத்தினிகளாய் இருக்கிறார்களோ அந்தப்பரமபதத்தைப் பரமாத்மதத்துவ ஞானத்தையுடைய ஞானிகள் பார்க்கிறார்கள். எனக்கு ஸ்தானமான அந்தப் பரமபதமானது மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது. யாதொரு பரமபதத்திலே கர்மபந்தத்தினாலே விடப்பட்ட பேர்கள்

மிகவும் பரமமான சுகத்தை அடைகிறார்களோ யாதொரு பரம பதத்தையடைந்து திரும்பாமலிருக்கிறபடியினாலே மோக்ஷமென்று சொல்லப்படுகிறதோ அந்தப் பரமபதத்துக்கு அக்ஷரமென்றும் பரந்தாமாவென்றும் ஸ்ரீவைகுண்டமென்றும் சாசுவதமென்றும் நித்தியமென்றும் பரமவியோமமென்றும் சர்வோத்க்ருஷ்ணம் என்றும் சனாதம் என்றும் பரியாயநாமங்கள் சொல்லப்பட்டது.

இப்பால் மகதாதி பூதசிருஷ்டி மகாத்மியம் சொல்லப்படும், பகவான் வாக்கியம் :- வாராய், பிராட்டி! திரிபாத்விபூதி களானவை என்னுடைய லோகங்களானவை. கணக்கில்லாதன வாகச் சொல்லப்படுகிறது. சமஸ்த லோகங்களும் சுத்ததத்துவங் களாயும் பிரம்மானந்தம் என்னும் பெயரையுடையனவாயும் நித்தியங்களாயும் நிர்விகாரங்களாயும் ஹேயங்களான ராகாதி களாலே வர்ஜிக்கப்பட்டதாயும் கோடி சூரியர்களுக்குச் சமானங் களான காந்தியை யுடையனவாயும் இருக்கின்றன. சமஸ்த லோகங்களும் வேத மயங்களாயும் திவ்வியங்களாயும் காம குரோதாதிகளாலேவர்ஜிக்கப்பட்டதாயும்ஸ்ரீமந்.நாராயணருடைய திருவடித்தாமரைகளிலே அசஞ்சல பக்தியையுடையவர்களாலே சேவிக்கப்படுகின்றனவாயும் சர்வகாலமும் சாமகானத்தாலே பரிபூர்ணங்களாயும் சுகாச்ரயங்களாயும் பஞ்சோபநிஷன் ரூபங் களாயும் வேத சுவரூபங்களாயும் இருக்கின்றன. சமஸ்த வேதஸ்வரூபங்களாயும் திவ்வியாளாயும் இருக்கிற புருஷர்களாலே யும் ஸ்திரீகளாலேயும் சூழப்பட்டிருக்கின்றன. வேதரசமாகிற தீர்த்தங்களையுடையவைகளான நதிகளாலே மிகவும் விளங்கா நின்றும் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணம் முதலானவைகளுடைய சுவரூபவைபவம் கதா வைபவங்களாலே சூழப்பட்டிருக்கின்றன. பிரசித்தமான அந்த லோகமானது சமஸ்தமும் என்னாலே வர்ணிக்கச் சக்கியமன்று. விரஜா நதிக்கு அப்பாலேயிருக்கப்பட்ட அந்தப் பரமபதஸ்தானத்திலே ஞானிகளாலே பரப்பிரம்மமானது அனுபவிக்கப்படுகிறது. ஆத்துமானுபவத்தினாலே உண்டாகா நின்ற ஆனந்த சுகபரமான நிர்விசேஷமாய் இருக்கிற அந்த நிர்வாணபதமானது மோக்ஷம் கைவல்யம் என்று சொல்லப்படு கிறது. ஸ்ரீய : பதியினுடைய திருவடிகளிலே பக்திசேவை யில்லாமல் உண்டாகாநின்ற ஆனந்தானுபவம் இல்லாததாயும் சுகமில்லாததாயும் இருக்கிற அந்தக் கைவல்யமோக்ஷத்தில் அற்ப புத்தியையுடைய பேர்கள் இருக்கிறார்கள். மகாத்துமாக்களாயும் பகவானுடைய திருவடிகளையே சேவித்துக் கொண்டுமிரா நின்ற மகாபக்தாளாயும் உள்ள பேர்கள் பரமாத்மானுபவஞானப்பிரதமான ஸ்ரீ ஹரியினுடைய அந்தப் பரமபதத்தை அடைகிறார்கள். அநேக தேசங்களாலே சூழப்பட்டும் அநேக பிராகாரங்கள், விமானங்கள்

ரத்தினங்களான கிருஹங்கள் இவைகளாலே சூழப்பட்டும் இருக்கிற ஸ்ரீ ஹரியினுடைய ஸ்தானமான ஸ்ரீ வைகுண்டத்தைப் பாகவதர்கள் அடைகிறார்கள். அந்தப் பரமபதத்திலே திவ்விய ஒரு பட்டணம் இருக்கிறது. அந்தப் பட்டணமானது அயோத்தி யென்று சொல்லப்படும். நவரத்தினங்கள் சொர்ணங்கள் இவை களினாலே நிர்மிக்கப்பட்ட பிராகாரங்களாலேயும் கோபுரத்துவாரங் களாலேயும் சூழப்படாநின்றும் நாலுவாசல்களுடனே கூடிக் கொண்டும் சண்டன் முதலான துவாரபாலகர்களாலேயும் குமுதன் முதலான பேராலேயும் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு வாசலிலே சண்டப் பிரசண்டாளும், தெற்கு வாசலிலே பத்திர சுபத்திராளும், மேற்கு வாசலிலே ஜயவிஜயாளும், வடக்கு வாசலிலே தாதா விதாதாக்களும் ரக்ஷித்துக்கொண்டிருக்கிறார்கள். குமதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமனன், சங்கர்ணன், சர்வதேந் திரன், சுமுகன், சுப்பிரதிஷ்டன் - வாராய் பிராட்டி - அந்தப் பட்டணத்திலே இவர்கள் திக்குப் பதிகளாகச் சொல்லப்படுகிறார் கள். அந்தப் பட்டணமானது கோடி சூரியர்களுக்குச் சமானங் களான கிருகபந்திகளாலே சூழப்பட்டும் நித்திலவர்ணத்தை யுடையவர்களான திவ்விய ஸ்திரீ புருஷர்களாலே சூழப்பட்டும் இருக்கும். அந்தப் பட்டணத்தினுடைய மத்தியிலே தேவ தேவரான ஸ்ரீய: பதியினுடைய மனோக்கியமான அந்தப்புரம் இருக்கிறது. நவரத்தினமயமான பிராகாரத்தோடே கூடிக் கொண்டும் ரத்தினதோரணங்களாலே விளங்காநின்றும் அநேகம் உபரிகைகளாலே சூழப்பட்டும் திவ்விய அப்ஸ்ரஸ் ஸ்திரீகணங் களாலே நாலு பக்கத்திலேயும் அலங்கரிக்கப்பட்டும் இருக்கிறது. அந்த அந்தப்புர மத்தியிலே மகோன்னதமாயும் ராஜஸ்தானமாயும் இருக்கிற திவ்வியமான மண்டபம் இருக்கிறது. மாணிக்கமயமான அநேக ஸ்தம்பங்களுடனே கூடிக்கொண்டும் ரத்தினமயமாயும் நித்தியமுக்தர்களாலே சூழப்பட்டும் மகா வினோதத்தினாலே விளங்காநின்றும் இருக்கிறது. அந்த மண்டப மத்தியிலே சர்வவேதமாயும் சுப்பிரமாயும் இருக்கிற திவ்வியமான சிம்மாசனம் இருக்கிறது. யாதசுவரூபங்களாயும் மகாமங்களமாயும் இருக்கிற தர்மாதிதேவதைகளாலே தரிக்கப்பட்டும் இருக்கிறது. தர்மம், ஞானம், ஐசுவரியம். வைராக்கியம் என்ற பாதசுவரூபங்களான இவைகளாலே தரிக்கப்பட்டிருக்கிறது. ருக்வேத எசுர்வேத சாமவேத அதர்வணவேதம் நித்தியங்களான இவைகளாலே சூழப் பட்டிருக்கிறது. சத்தியென்றும் ஆதாரசத்தியென்றும் சிற்சத்தி யென்றும் சதாசிவசத்தியென்றும் தர்மாதிதேவதைகளுடைய சத்திகளானவை சொல்லப்படுகின்றன. அந்தச் சிம்மாசன மத்தியிலே அக்கினி சூரியன் சந்திரன் இவர்கள் இருக்கிறார்கள். கூர்மமும் நாகராசனும் வேதரூபியான வைநதேயனும் சமஸ்த

சந்தசுகளும் சமஸ்த மந்திரங்களும் அந்தப் பீடருபமாக இருக்கின்றனர். சர்வரத்தினமயமாயும் திவ்வியமாயும் இருக்கிற அந்தச் சிம்மாசனமானது யோக பீடமென்று சொல்லப்படுகிறது. அந்தச் சிம்மாசன மத்தியிலே உதியாநின்ற சூரியனுக்குச் சமானமான காந்தியையுடையதாயும் எட்டுத் தளத்தையுடையதாயும் இருக்கிற பத்மம் இருக்கிறது அந்தப் பத்ம மத்தியிலேயிருக்கிற சாவித்ரி ரூபமான கர்ணிகையிலே ஸ்ரீ மகாலக்ஷ்மியோடேகூட தேவேசரான பரம புருஷர் எழுந்தருளியிருக்கிறார். கருநெய்தல் புஷ்பதளம்போல் சியாமளவர்ணராயும் கோடிசூரியன்போலப் பிரகாசத்தையுடையவராயும் யுவாவாயும் குமாரராயும் மனோக்கியமான அங்கங்களையுடையவராயும் மலர்ந்த செந்தாமரைப் புஷ்பம் போல சோபனமான திருவடிகளையும் திருக்கைகளையும் உடையவராயும் விகசித்திருக்கிற புண்டரீகம்போலவே ஒத்த நேத்திரங்களையுடையவராயும் சோபனங்களான இரண்டு புருவங்களுடனே கூடிக்கொண்டும் சோபனமான நாசிகையை உடையவராயும் சுந்தரமான கபோலங்களையுடையவராயும் சுந்தரமான திருமுகமண்டலத்தையுடையவராயும் முத்துப்போலே கோத்த தந்தங்களையுடையவராயும் மனோக்கியமான புன்சிரிப்புடனே கூடிக்கொண்டிருக்கிற பவழம் போலே கோத்த அதரத்தையுடையவராயும் பூர்ண சந்திரனுக்குச் சமானமாயும் புன்சிரிப்பையுடையதாயும் இருக்கிற முகாரவிந்தத்தையுடையவராயும் பாலசூரியன்போலே பிரகாசியாநின்ற குண்டலங்களாலே விளங்கா நின்றும் மனோக்கியங்களாயும் நீலங்களாயும் வக்கிரங்களாயும் இருக்கிற முன் நெற்றி மயிர்களாலே விளங்கா நின்றும் மந்தாரபாரிஜாத முதலான புஷ்பங்களாலே அலங்கரிக்கப்பட்ட கேசங்களை யுடையவராயும் பிராத: காலத்திலே உதியா நின்ற சூரியனுக்குச் சமானமான பத்ம மாலைகளாலே விளங்காநின்றும் ஆரம் முதலான ஆபரணங்களுடனே கூடிக்கொண்டிருக்கிற சக்கரசங்கம்போலே கோத்த கண்டத்தினாலே விளங்கா நின்றும் கோடிபால சூரியர்களுக்குச் சமானமான கௌஸ்துபம் முதலான ஆபரணங்களாலே விளங்கா நின்ற விசாலமான திருமார்பையுடையவராயும் வனமாலையினாலே விளங்காநின்றும் பிரம்மாவுக்கு உற்பத்தி ஸ்தானமான நாபிகமலத்தினாலே விளங்கா நின்றும் இளவெயில்போல மகா மனோக்கியமாயிருக்கிற பீதாம்பரத்தினாலே சூழப்பட்டும் நானாவிதங்களான ரத்தினங்களாலே விசித்திரங்களான நூபுரங்களாலே விளங்காநின்ற திருவடிகளை யுடையவராயும் வரதாபய ஹஸ்தங்களினாலே விளங்கா நின்றும் பகவானானவர் எழுந்தருளியிருக்கிறார். அந்தப் பகவானுடைய இடது தொடையிலே யிராநின்றும் மஹேச்வரியாயும் சுவர்ணம்போலே கோத்த வர்ணத்தையுடையவ

ளாயும் சுவர்ணரசத பூஷணங்களையுடையவளாயும் தேவலக்ஷண சம்பன்னையாயும் நித்தியயௌவனத்தையுடையவளாயும் ரத்தின மயமான குண்டலங்களையுடையவளாயும் நீலங்களாயும் வக்கிரங் களாயும் இருக்கிற கேசங்களையுடையவளாயும் திவ்விய சந்தனங் களாலே பூசப்பட்ட தேகத்தையுடைவளாயும் திவ்விய புஷ்பங் களினாலே அலங்கரிக்கப்பட்டவளாயும் மந்தாரம், கேதகை, ஜாஜி முதலான புஷ்பங்களாலே அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடைய வளாயும் சோபனங்களான புருவங்களை யுடையவளாயும் சோபன மான நாசிகையை யுடையவளாயும் சோபனமான கடிபச்சா பாகத் தையுடையவளாயும் பருத்தும் உன்னதமாயுமிருக்கிற தனங்களை யுடையுவளாயும் உருக்கிவிட்ட தங்கம்போலே கோத்த காந்தியை யுடையவளாயும் சுவர்ணாபரண பூஷிதையாயும் நாலு ஹஸ்தங் களுடனே கூடினவளாயும் ஸ்வர்ணமயமான வஸ்திரத்தினாலே அலங்கரிக்கப்பட்டும் ஆரம், கேயூரம், கடகம், அங்குலியம் இவை களாலே அலங்கரிக்கப்பட்டும் இரண்டு கரங்களாலே தரிக்கப்பட்ட அமூலியமான இரண்டு பத்மத்தை யுடைவளாயும், சுவர்ணமயமான மாதுலங்கத்தினாலே அலங்கரிச்கப்பட்ட அஸ்தங்களை யுடையவ ளாயும் இருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியானவள் அந்தப் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கிறாள். இந்தப் பிரகாரம் நித்தியமாக இணை பிரியாமலிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியுடனேகூட பகவானானவர் சாசுவதமான பரமபதத்திலே சந்துஷ்டராய் எழுந்தருளியிருக் கிறார். இரண்டு பாரிசங்களிலேயும் பூதேவி நீளாதேவியரும் எழுந்தருளியிருக்கிறார்கள். எட்டுத் திக்கிலேயும் விமலை முதலான சக்திகள் இருக்கிறார்கள். விமலையென்றும் உத்கர்ஷணி யென்றும் ஞானாவென்றும் கிரியாவென்றும் யோகாவென்றும் பிரபுவென்றும் சந்தியாவென்றும் ஈசானாவென்றும் இந்தப் பிரகாரம் பத்மாசத்தினுடைய சக்தி ரூபங்களான ஸ்திரீகள் சந்திரனுக்குச் சமமான காந்தியையுடையவர்களாயும் திவ்வியங் களுமாயும் இருக்கிற சாமரங்களைச் சிரித்துக்கொண்டு வீசிக் கொண்டிருக்கிறார்கள். சர்வ லக்ஷண சம்பன்னாளயும் சந்திரன்போலக் கோத்த முகத்தை யுடையவர்களாயும் அந்த ஸ்திரீகளாலே சூழப்பட்டவராய் அச்சுதரானவர் சந்துஷ்டராய் எழுந்தருளியிருக்கிறார். திவ்விய அப்ஸர ஸ்திரீகளுடைய ஐந்நூறு கணங்களும் பகவானைச் சேவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்புரத்திலே வாசம் பண்ணாநின்றும் சர்வாபரணபூஷிதர்களாயும் பத்மஹஸ்தாளாயும் கோடி சூரிய சமகாந்தியையுடையவர்களாயும் இருக்கிற அந்த ஸ்திரீகளாலே சூழப்பட்டவராய் அச்சுதரானவர் சந்துஷ்டராய் எழுந்தருளியிருக்கிறார். திவ்விய அப்சரஸ்திரீகளுடைய ஐந்நூறு கணங்களும் பகவானைச் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப்புரத்திலே வாசம்பண்ணாநின்றும் சர்வாபரண பூஷிதர் களாயும் பத்மஹஸ்தாளாயும் கோடி சூரிய சமகாந்தியையுடை யவர்களாயும் சர்வலக்ஷண சம்பன்னாளாயும் சந்திரனுக்குச் சமான மான முகத்தையுடையவர்களாயும் இருக்கிற அந்த ஸ்திரீகளாலே சூழப்பட்டவராய் பரமபுருஷரான பகவானானவர் விளங்குகிறார். அனந்த கருடாழ்வார் விஷ்வக்ஸேநர் முதலான தேவசிரேஷ்டர் களாலேயும் பின்னையும் நித்தியர்களாயும் முக்தர்களாயும் இருக்கிற பரிசனங்களாலேயும் சூழப்பட்டவராய் பரமபுருஷரானவர் போக ஐசுவரியார்த்தமான பரமபதத்திலே ஸ்ரீமகாலக்ஷ்மியுடனே கூட சந்துஷ்டராய் எழுந்தருளியிருக்கிறார். இந்தப் பிரகாரம் வைகுண்டநாதரான பகவானானவர் பரமபதத்திலே விளங்கு கிறார். வாராய், பிராட்டி! அந்தப் பகவானுடைய வியூகபேதங் களையும் சுலோகங்களையும் சொல்லுகிறேன். கேட்கக்கடவாய்: ஸ்ரீ வைகுண்டலோகத்துக்குக் கிழக்குத் திக்கிலே வாசுதேவ மூர்த்தியுடைய கர்ப்பக்கிரக்ஷம் இருக்கிறது. அக்கினி திக்கிலே ஸ்ரீமகாலக்ஷ்மியினுடைய லோகமும் தெற்குத் திக்கிலே சங்கர்ஷண மூர்த்தியினுடைய லோகமும் நிருதி திக்கிலே சரசுவதி லோகமும் மேற்குத் திக்கிலே பிரத்யும்ந மூர்த்தியினுடைய லோகமும் வாயு திக்கிலே ரதி லோகமும் வடக்குத் திக்கிலே அநிருத்தமூர்த்தி யினுடைய லோகமும் ஈசானிய திக்கிலே சாந்தி லோகமும் இந்தப்பிரகாரம் ஸ்ரீ வைகுண்டத்துக்கு முதல் ஆவரணமானது சொல்லப்படுகிறது. அதற்கு மேலே கேசவாதி இருபத்துநாலு லோகங்கள் கிரமமாக ஸ்ரீ வைகுண்டத்துக்கு இரண்டாம் ஆவரணம் என்று சொல்லப்படும். மத்ஸ்யகூர்மாதி லோகங்கள் மூன்றாம் ஆவரணமாகச் சொல்லப்படும். சத்தியா அச்சுதா அனந்தா துர்க்கை விஷ்வக்சேனர் கஜானனர் சங்கபதுமநிதிகள் - இவர்களின் லோகங்கள் நாலாம் ஆவரணமாகச் சொல்லப்படு கிறது. ருக்வேதம் எசுர்வேதம் சாமவேதம் அதர்வணவேதம் இந்த நாலு வேதமயமான லோகங்களும் நாலு திக்குகளிலேயும் இருக்கின்றன. சாவித்திரி கருடாழ்வார் தர்மம் தபம் இவர் களுடைய லோகங்களும் மந்த்ரா ஸ்திரமயமான ஐந்தாம் ஆவரணமாகச் சொல்லப்படுகிறது. இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் ஆறாம் ஆவரணமாயும் ரிஷிகள் ஏழாம் ஆவரணமாயும் சொல்லப்படு கிறது. இந்திரன், அக்கினி, எமன், நிருதிவருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்கள் திசாத்யாள்; மருத்கணங் கள் விசுவதேவாள் முதலான எந்த தேவாள் பரமபதத்திலே இருக்கிறார்களோ அவர்கள் சமஸ்தமான பேர்களும் நித்தியராய் இருப்பார்கள். பிராகிருதமான சொர்க்கத் திலே இருக்கிற சாத்தியாள் முதலான தேவாள் அநித்தியராய்

இருப்பார்கள். இந்தப் பிரகாரம் பரமபதத்திலே நித்தியர்களாயும் முக்தர்களாயும் போக பாராயணர்களாயும் இருக்கிற பாகவதாளுடனேயும் திவ்வியாளாயும் இருக்கிற ஸ்திரீகளுடனேயும் ஈசுவரரான ஸ்ரீய: பதியாகிய சர்வேச்வரனான ஸ்ரீ ஹரியானவர் விளங்குகிறார். அந்தப் பரமபதத்தைச் சூரியன் சந்திரன் அக்கினி இவர்களும் பிரகாசிக்கப் பண்ணமாட்டார்கள். யோகீசுவரமான யாதொரு பரம பதத்தையடைந்து திரும்பாமலிருக்கிறார்களோ நித்தியமான அந்தப் பரமபதத்தை துவயமந்திர நிஷ்டர்களான பாகவதாள் அடைவார்கள். யக்ஞம், அத்தியயனம், தானம், விரதம், தபசு, உபவாசம் மற்றுமுள்ள சாதனகர்மங்கள் இளவகளாலே அந்தப் பரம்பதமானது அடையத்தக்கது. என்றும் சாசுவதமாயும் மாயும் திவ்வியமாயுப் இருக்கிற அந்தப் பரமபதமானது துவய மந்திரத்தினாலேயும் ஏகாந்தபக்தியினாலேயும் அடையத்தக்கது என்று இந்தப் பிரகாரம் சொல்லாநின்ற ஈசுவரனைப் பார்த்து, பிராட்டி வாக்கியம்:

வாரீர் நாதனே! பிரபுவே! உம்மாலே பரமபதசுவரூபமானது சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட பரமபதத்தில் எழுந்தருளியிரா நின்ற பகவானானவர் பிராகிருதமான இந்த ஜகன் மண்டலத்திலே என்ன நிமித்தமாக இருக்கிறார்? லீலையினாலே என்ன பிரயோஜனம்! சுத்தசத்துவமயமான அந்தப் பரமபதத்திலே எழுந்தருளியிராநின்ற அந்தப் பரமேசுரரானவர் என்ன நிமித்தமாக ராஜஸ தாமஸ குணங்களுடனே கூடின லீலாவிபூதியிலே இருக்கிறார். அவைகளை எனக்குச் சொல்லவேணும் என்று பிரார்த்தியாநின்ற பிராட்டியைப் பார்த்துப் பகவான் வாக்கியம்:

வாராய், பிராட்டி! திரிபாத்விபூதியான அந்தப் பரமபதத்திலே ஸ்ரீ மகாலக்ஷ்மியுடனேகூட பரமேசுரரான பகவானானவர் நித்தியர் முக்தர்களாலே சேவிக்கப்பட்டவராய் கோடிசூரியப் பிரகாசராய் அனந்த கோடிகளுடனே பிரகாசியாநின்ற அந்த மாகத்திலே ஏழுஊர்கள் அமிசமாய் விஷ்ணுலோகத்திலும் சுவேதத் தீவிலும், க்ஷீராப்தியிலும், விபவ அவதாரங்களிலும் பூலோகத்துக்கு வைகுண்டமாகிய ஸ்ரீ ரங்காதி திவ்விய தேசங்களிலும் அக்ஷர ரூபமாய் சர்வகாலமும் சந்துஷ்டராய் எழுந்தருளியிருக்கிறார். அந்த ஈசுவரர் ஜகத்துக்கு ஆச்ரயமாயும் மகாமாயா ரூபமாயும் இருக்கிற பிரகிருதியானது அஞ்சலிபத்தம் பண்ணிக் கொண்டு ஸ்தோத்திரம் பண்ணிற்று.

மகாமாயா ஸ்தோத்திரம்: சேஷாச்ரயராயும் விசுவரூபியாயும் புருஷோத்தமராயும் ஜகத் உற்பத்தி ஏதுவாயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். ஸ்ரீ தேவி, பூதேவி, நீளாதேவிகளுக்குப் பதியாயும், ஸ்ரீமந்நாராயணராயும்

ஷாட்குண்ய பரிபூர்ணராயும் வாசுதேவராயும் சார்ங்க பாணியாயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். சர்வவேதஸ்வரூபியாயும் சர்வபரிபூர்ணராயும் சகஸ்ரமூர்த்தியாயும் அனந்தராயும் அச்சுதராயும் விகாரசூனியராயும் சுத்தசத்துவஸ்வ ரூபியாயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். ஆதிமத்தியாந்த மில்லாத சுவரூபத்தையுடையவராயும் இரண்யகர்ப்பராயும் யஜ்ஞமூர்த்தியாயும் பரமாத்துமாவாயும் சர்வபூதாந்தர்யாமியாயும் சர்வபூதாச்ரயராயும் பரப்பிரமமாயும் சுவயம்பிரகாசராயும் விசுவரூபியாயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். நிர்மலராயும் ஹம்ஸரூபியாயும் சங்கர்ஷணராயும் ருத்திரராயும் சர்வபூதசங்காரகராயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். அயக்ரீவராயும் காலரூபியாயும் ஸ்ரீஹரியாயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். அவ்விய கவ்விய சுவரூபராயும் யஜ்ஞபுருஷராயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம் பிரமரூபியாயும் மங்களகரமான தேஜஸையுடைய ஸ்வரூபியாயும் அவ்விய போக்தாவான அக்கினிரூபியாயும் யஜ்ஞரூபியாயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். சிருஷ்டிஸ்திதி சம்ஹார ஏதுவாயும் ஜகத்கர்த்தாவாயும் நிர்க்குணராயும் சர்வாந்தர்யாமியாயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். வேதாந்தங்களாலே அறியத்தக்கவராயும் நாலு வியூகஸ்வரூபியாயும் பிரம்மாவாயும் விஷ்ணுவாயும் சங்கரராயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். சத்துவாதி குணங்களையுடையவராயும் சூக்ஷ்மரூபியாயும் சர்வபரிபூர்ணராயும் லோகசாக்ஷியாயும் ஸ்ரீமந்நாராயணராயும் ஷாட்குண்யபரிபூர்ண மூர்த்தியாயும் ஸ்ரீய: பதியாயும் அனந்த கல்யாண குணபரிபூர்ணராயும் சர்வாபீஷ்டப்பிரதராயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். வாசுதேவராயும் அநேக வியூகரூபங்களையுடையவராயும் யஜ்ஞரூபியாயும் விகாரசூனியராயும் கோவிந்தராயும் அச்சுதராயும் ஹேயகுணவர்ஜிதராயும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம். ஸ்ரீராமராயும் ஸ்ரீகிருஷ்ணராயும் நரசிம்மராயும் கேசவராயும் சமஸ்த ஜகத்துக்களுடைய கிலேசங்களை நாசம்பண்ணா நின்றும் இருக்கிற தேவரீருக்குப் பிரணாமம்.

வாரீர், புருஷோத்தமரே! தேவரீரே சமஸ்த லோகங்களுக்கும் ஆச்ரயராவீர். தேவதேவேசனே! சமஸ்த லோகங்களுக்கும் இதத்தின் பொருட்டுக் கடாக்ஷிக்கக்கடவீர். என்னிடத்திலே இராநின்ற சமஸ்த சேதனாளும் ஆதாரமில்லாதவர்களாயும் ஆச்ரயமில்லாதவர்களாயும் தேகமில்லாதவர்களாயும் சமஸ்த இந்திரியங்களினாலே வர்ஜிக்கப்பட்டவராயும் சமஸ்த கர்மாஜஷ்டானத்தினாலே வர்ஜிக்கப்பட்டவர்களாயும் சர்வகாலமும் ஏக்கத்தை

யுடையவர்களாயிருக்கிறார்கள். வாரீர் கேசவரே! அவர்களுக்குத் தேகங்களையும் லோகங்களையும் கொடுக்கக்கடவீர். வாரீர், சர்வஜ்ஞரே! லீலாவிபூதியை முன்போலவே கல்பித்துச் சேதனா சேதனரூபமாயும் ஸ்தாவரசங்கம ரூபராயும் தேவரீருடைய மாயை யினாலே மோஹிக்கப்பட்டும் இருக்கிற சமஸ்த ஜகத்தையும் லீலார்த்தமாகக் கடாக்ஷிக்கக்கடவீர். வாரீர், புருஷோத்தமரே! என்னுடனேகூட பிராகிருதமான பிரம்மாண்டத்தைச் சிருஷ்டித்து அந்தப் பிரம்மாண்டத்திலே வெகுவிதத்திலே தர்மாதர்மங்களை யும் சுகதுக்கங்களையும் உண்டுபண்ணி என்னைப் பற்றிக் கொண்டு லீலையைப் பண்ணக் கடவீர்.

## (11) மகதாநிபூத சிருஷ்டி மகாத்மியம்

பகவான் வாக்கியம்: வாராய், பிராட்டி! இந்தப் பிரகாரம் அந்த மகாதேவியினாலே சொல்லப்பட்டவராய் ஜகதீச்வரரானவர் அந்த மாயையிலே பிரவேசித்து, தேகத்தைச் சிருஷ்டி பண்ணுகைக்குத் தொடங்கினார். யாதொரு அச்சுதர் பிரகிருதி புருஷன் என்று சொல்லப்படுகிறாரோ அந்தப் பகவான்தானே பிரகிருதியிலே பிரவேசித்து, அந்தப் பிரகிருதியினின்றும் மகத்துவம் என்னும் பெயரையுடைய பூதாதியைச் சிருஷ்டித்தார். அதந்ப் பரமபுருஷரானவர் அந்த மகத்தத்துவத்தினின்றும் அகங்காரத்தையும் அந்த அகங்காரத்தினின்றும் சத்துவாதி மூன்று குணங்களையும் அந்த மூன்று குணங்களினின்றும் ரூபர சகந்தஸ்பர்ச சப்தங்களையும் சிருஷ்டித்தார். அந்த ரூபாதிகளி னின்றும் பிருதிவி ஆதியானவை உண்டாயின; திரிகுணரூபியான அந்தப் பிரம்மத்தினிடத்தினின்றும் முந்தி ஆகாசம் உண்டாயிற்று ஆகாசத்தினின்று வாயுவும் வாயுவினின்று அக்கினியும் அக்கினி யினின்று ஜலமும் ஜலத்தினின்று பிருதுவியும் உண்டாயின. ஆகாசம் முதலாகப் பிருதுவிவரை சிருஷ்டிக்கப்பட்ட பூதங்கள் முந்தின பூத சம்பந்தத்தையுடையனவாகச் சிருஷ்டிக்கப் பட்டன. சப்தஸ்பர்ச ரசரூபகந்தம் இவைகள் அந்தப் பூதங்களுடைய குணங்கள். இந்தக் குணங்களை ஒன்றுக்கொன்று முந்தின குணசம்பந்தத்தை உடையவை களாகச் சிருஷ்டிக்க அந்தப் பகவானானவர் பஞ்சமகாபூதங் களைச் சிருஷ்டித்து ஏகமாகச் சேர்த்து, பிரம்மாண்டத்தைச் சிருஷ்டிபண்ணி, அந்தப் பிரம்மாண்டத்திலே பதினாலு லோகங் களையும் சிருஷ்டித்தார். அந்தப் பிரம்மாண்டத்திலே புருஷோத் தமரானவர் பிரம்மாதி சமஸ்த தேவாளையும் சிருஷ்டித்தார். தேவாள் திர்யக் மனுஷ்யாள், ஸ்தாவரமென்று நாலுவித சாதியும் அந்தப் பகவானாலே சிருஷ்டிக்கப்பட்டன. பூர்வத்திலே

பிருகிருதியிலே அடங்கியிருந்த சேதனங்கள் பகவானுடைய சிருஷ்டிகாலத்திலே அதனதன் கர்மானுரூபமாகத் தேவாதி சன்மங்களிலே உண்டாயின என்று சொல்லப்படும்.

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம :

பின்னால் வியூகபேதவர்ண மகத்துவம்.

உலகினையுளந்தவருடைய பாதமே கதி.

## வியூக பேதவர்ண மகத்துவம்

பிராட்டியார் வாக்கியம் :- வாராய், பிராணேச்வரரே: உத்தமமான தேவசிருஷ்டியை விஸ்தாரமாக எனக்குச் சொல்லக் கடவீர். நித்தியாளான பிரம்மாதிதேவாள் எப்படி உண்டானார்கள்? அதனையும் உம்முடைய அவதாரங்களையும் விஸ்தாரமாக எனக்குச் சொல்லக்கடவீர் என்று பிரார்த்தியா நின்ற பிராட்டியைப் பார்த்து ஸ்ரீ ஹரியினுடைய வாக்கியம் :- வாராய், பிராட்டி; பகவானான நான் ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பூமி இவைகளைக் கிரமமாகச் சிருஷ்டித்து இவைகளுடைய மத்தியிலே அகாத ஜலமான சமுத்திரத்தைச் சிருஷ்டித்தேன். ஸ்ரீமந் நாராயணரான நான் ஏகார்ணவமான அந்த ஜலத்திலே மாயையாகிற வடபத்திரத்திலே சமஸ்த பிராணிகளையும் சிருஷ்டித்துக்கொண்டு யோக நித்திரையை அடைந்திருந்தேன். ஜெகத்தைச் சிருஷ்டி பண்ண இச்சையுடையவராய் யோக நித்திரையை அடைந்திரா நின்ற நான் அந்த மாயையினாலேயே வெகுகாலம் ரமித்துக்கொண்டிருந்தேன். அந்த மாயையிலே கலை காஷ்டம் முகூர்த்தம் தினம் பக்ஷம் மாசம் இவை முதலான ரூபமாகவுடையதான உத்தமமான காலத்தைச் சிருஷ்டித்தேன். அந்தக் காலத்திலே, சமஸ்த ஜகத்துக்கும் காரணமாயும் பிரகிருதமாயும் இருக்கிற ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய நாபிகமலமானது விகாசத்தையடைந்தது. அந்த நாபிகமலத்திலே பிரத்யும்நனுடைய அமிசமாயும் மகாமதியாயும் இருக்கிற பிரம்மாவானவர் உண்டானார். சொர்ணப் பிரகாசத்தையுடைய அந்தப் பிரம்மாவானவர் ஜகத்தைச் சிருஷ்டிக்க இச்சையுடையவராய் யோக நித்திரையிலே சயனித்துக் கொண்டிருக்கிற பகவானான என்னைத் தோத்திரம் பண்ணினார்.

## பிரம்மஸ்துதி :

பரிபூர்ணராயும் ஸ்ருஷ்டிஸ்திதி லயங்களுக்குக் காரணராயும் ஜகத்ரக்ஷகராயும் ஸ்ரீயः பதியாயும் விச்வரூபியாயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். பிரம்மண்ய தேவராயும் கோப் பிராம்மண ஹிதகரராயும் ஜகத்துக்கு ஹிதகரராயும் கோவிந்தராயும் ஸ்ரீ கிருஷ்ணராயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். பிரதான காலபுருஷ ரூபியாயும் சர்வேச்வரராயும் பிரபஞ்சரூபியாயும் பிரபஞ்சசூனியராயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரமாணம். ஸ்ரீமந் நாராயணராயும் விசுவரூபியாயும் விசுவேச்வரராயும் ஸ்ரீ தேவிபூதேவி நீளாதேவியருக்குப் பதியாயும் பரப்பிரம்மமாயும் பரமாத்மாவாயும் இருக்கிற தேவரீர் பொருட்டுப் பிரணாமம். வாசுதேவராயும் தேவஸ்வரூபியாயும் சார்ங்கபாணியாயும் வேத வேத்யராயும் ஜகத்ரூபியாயும் அந்தர்யாமியாயும் இருக்கிற ஸ்ரீ ஹரியின்பொருட்டுப் பிரணாமம். என்றும் அனந்த கல்யாணகுண பரிபூர்ணரான தேவரீர் பொருட்டுப் பிரணாமம் என்றும் வாரீர், ஜெகத்பதியே! தேவரீர் நித்திரை பண்ணுகையில் சமஸ்த ஜெகத்தும் நித்திரை பண்ணுகிறது. வாரீர், ஜகந்நாதரே! ஸ்தாவர சங்கமரூபமான சமஸ்த பிரபஞ்சமும் தேவரீரிடத்தினின்றும் உண்டாகா நிற்கிறது. தேவரீரே காரணராயும் கர்த்தாவாயும் காரியமாயும் இருக்கிறீர் என்றும். வாரீர், பரமேசுவரரே! சத்துவாதி குணங்களையுடையவரான தேவரீர் சிருஷ்டிகர்த்தாவாயும் ரக்ஷக கர்த்தாவாயும் சங்காரகர்த்தாவாயும் நிற்கிறீர் என்றும், சுத்த சத்துவகுணமயமான தேவரீர் சர்வகாலமும் சதா கவனம் பண்ணிக்கொண்டிருக்கிறீர் என்றும், வாரீர், பிரபுவே தேவரீர் நித்திரை ஏது! வாரீர், ஜனார்த்தனரே! தேவரீரிடத்திலே லயத்தை அடைந்திராநின்ற லோகங்களை எனக்குக் கொடுக்கக் கடவீர் என்றும் சொல்ல, பெருமாள் வாக்கியம்: - வாராய். பிராட்டி! இந்தப் பிரகாரம் பிரம்மாவினாலே நான் தோத்திரம் பண்ணப்பட்டவராய் அந்த சயனத்தினின்றும் எழுந்திருந்தேன்: ஜகத்பிரபுவான அச்சுதரான நான் அந்த யோகநித்திரையை விட்டுவிட்டு ஜகத்தைச் சிருஷ்டிபண்ண யத்தனத்தையுடையவராய் ஒருக்ஷணகாலம் யோசனை பண்ணி, அந்த ஜகத்தினின்றும் சமஸ்த ஜகத்தையும் சிருஷ்டிப்பதற்காகப் பதினாலுலோகங்களுடனே கூடிக்கொண்டும் சுவர்ணமயங்களாயும் இருக்கிற பிரம்மாண்டத்தையும் அதில் தீவுகள் சமுத்திரங்கள் பர்வதங்கள் இவைகளோடே கூடிக்கொண்டிருக்கிற பூமியையும் அண்ட கடாகத்தோடே கூட என்நாபிகமலத்திலே சிருஷ்டித்தேன். பகவானான நான் பிரம்மாண்ட மத்தியிலே பிரம்மாவைக் கர்த்தாவாக ஸ்தாபித்தேன். அவருக்கு இதிகாசபுராணங்களோடேகூட

சமஸ்த வேதங்களையும் கொடுத்தேன். பிரத்யும்ந மூர்த்தியினுடைய அம்சமாயும் என்னுடைய நாபி கமலத்தினின்றும் உண்டாகாநின்றுமிருக்கிற அந்தப் பிரம்மாவானவர் ஜகத்தினுடைய சிருஷ்டி ஸ்திதிகளைப் பண்ணிக்கொண்டு தேஜோமயனான என்னுடைய பிரசாதத்தினாலே மூன்று லோகத்துக்கும் பிரபுவாக விருக்கிறார். பிற்பாடு ஸ்ரீமந் நாராயணரான நான் மனசினாலே பின்னையும் ஒரு இச்சையைச் சிந்தித்தேன். இப்படி தியானம் பண்ணிக் கொண்டிராநின்ற என்னுடைய நெற்றியிலே வேர்வை பிந்துவானது உண்டாயிற்று. அந்தக் குமிழிபோலேமிருக்கிற வேர்வை பிந்துவானது அந்தக்ஷணத்திலே பூமியிலே விழுந்தது. வாராய், கமலலோசனி! அந்த வேர்வைக்குமிழியினின்றும் திரிநேத்திரதாரியாய் சூலபாணியாயும் ஜடாமண்டல மண்டிதராயுமிராநின்ற ருத்திரர் பிறந்தார். பிறந்தவுடனே மிகவும் வணக்கத்தையுடையவராய் தேவேசரான பகவானாகிய என்னைக் குறித்து "என்ன செய்வேன்" என்று சொன்னார். பின்பு ஸ்ரீமந் நாராயண நான நான் மிகவும் சந்தோஷத்துடனே வாராய், பயங்கர ரூபத்தையுடையவனே! ருத்திரா! ஜகத்துக்களுடைய சங்காரத்தைப் பண்ணக்கடவாய் என்று ஆஜ்ஞாபித்தேன். வாராய் பிராட்டி! சங்கார நிமித்தியமாகிய என்னிடத்தினின்றும் சங்கர்ஷண மூர்த்தியினுடைய அம்சத்தினாலே பயங்கரரான ருத்திரர் உண்டானார். ஜனார்த்தனரான நான் இந்தப் பிரகாரம் சங்காரகாரியமாய் ருத்திரரையாக்கி ஆஜ்ஞாபித்து, திரும்பவும் நேத்திரங்களினாலே சமஸ்த அந்தகாரங்களை நாசம் பண்ணாநின்ற சந்திர சூரியர்களைச் சிருஷ்டித்தேன். கமலலோசனான நான் சுரோத்ரங்களினின்றும் திக்குகளையும் வாயுக்களையும் திருமுகமண்டலத்தினின்றும் இந்திரர் அக்கினி இவர்களையும் நாசிகளினின்றும் வருணனையும் மித்திரனையும் பாதங்களினின்றும் அசுவினி தேவர்களையும் சாத்தியாளையும் தேவகணங்களையும் சமஸ்தரோமங்களினின்றும் ஓஷதிகளையும், தொக்கினின்றும் பர்வதங்கள் சமுத்திரங்கள் கோமுதலான மிருகச் சாதிகளையும் சிருஷ்டித்தேன். என்னுடைய திருமுகமண்டலத்தினின்றும் பிராம்மணர்களும், பாகுகளினின்றும் க்ஷத்திரியர்களும் ஊருவினின்றும் வைசியர்களும், திருவடிகளினின்றும் வேளாளர்களும் உண்டானார்கள். நான் இந்தப் பிரகாரம் ஜகத்தைச் சிருஷ்டி பண்ணி, அசேதநமாக இராநின்ற அந்த ஜகத்தை விசுவரூபத்தினாலே உள்ளும்வெளியும் வியாபித்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய சக்தியினாலன்றி ஜனமானது இமை கொட்டுகிறதுக்கும் சக்கியமன்று. ஆகையினால் ஜனார்த்தனரான நானே சகல ஜகத்துக்கும் ரக்ஷகர். நானே சூக்ஷ்ம ரூபமாய் சமஸ்த ஜகத்திலேயும் வியாபித்துக்கொண்டு சர்வாத்மாக்களிலேயும் இருக்கிறேன்.

பிரமாதிருபியாய் சிருஷ்டி ஸ்திதிலயங்களிலே சுவயமாகப் பிரவர்த்திக்கிறேன். ஷாட்குண்ய பரிபூர்ண்ராயும் ஜனார்த்தனரா யும் இருக்கிற அந்த வாசுதேவரான நான் என்னுடைய ரூபத்தை மூன்று விதமாகப் பண்ணி ஜகத்தை தேவாதி நாலு விதமாகச் சிருஷ்டி பண்ணுகிறேன். பிரத்யும்ந மூர்த்தியாயும் நித்திய ஐசுவரிய சம்பன்னராயுமிருக்கிற அந்தப் பகவானான நான் பிரம்மா, நவப்பிரஜாபதிகள், காலம், ஜனங்கள் இவ்வாறாக அந்தர்யாமியாயிருந்துகொண்டு பரிபாலனத்தைப் பண்ணுகிறேன். சங்கர்ஷணமூர்த்தியாயும் ஞான ஐசுவரிய சம்பன்னராயுமிருக்கிற அந்தப் பகவானான நான் காலத்துக்கும் சமஸ்த பிராணிகளுக்கும் ருத்திரனுக்கும் எமனுக்கும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஜகத்தி னுடைய சங்காரத்தைப் பண்ணுகிறேன். இந்தப் பிரகாரம் பரமாத்மாவினுடைய அந்தர்யாமி ஸ்வரூபமானது அறியவியலாது, மத்ஸ்யம், கூர்மம், வராகம், நாரசிம்மம், வாமனம், பார்க்கவராமர், ஸ்ரீராமர், பலராமர், ஸ்ரீ கிருஷ்ணர், கல்கி இந்த அவதாரங் களானவை பரப்பிரம்மமான பரமாத்மாவாகிய என்னுடைய விபவங்கள். நரசிம்மர், ஸ்ரீ ராமர், கிருஷ்ணர் இந்த அவதாரங் களிலே என்னுடைய ஷாட்குணமானது பரிபூர்ணமாக இருக் கிறது. தீபத்தினின்றும் உண்டான தீபமானதுபோல என்னுடைய பரமஜசுவரியமானது இந்த மூன்று அவதாரங்களிலே பரிபூர்ணமாயிருக்கிறது. வாராய், பிராட்டி; என்னுடைய வியூக மகிமையைச் சொல்லுகிறேன்; கேட்கக் கடவாய் பரமபதமான ஸ்ரீவைகுண்டமும் சர்வோத்தமுமான ஸ்ரீ விஷ்ணுலோகமும் மிகவும் மனோக்கியமுமான சுவேதத்தீபமும் க்ஷீரசமுத்திரமும் இந்தப் பிரகாரம் நாலு பிரகாரமாக இருக்கிற வியூகமானது சொல்லப்படுகிறது. ஜலார்ணவ மத்தியத்திலே சமஸ்த லோகங் களுக்கும் காரணமாயும் சுபகரமாயும் ஸ்ரீ வைகுண்டம் இருக்கிறது. கோடி சூரியப் பிரகாசமாயும் எனக்கே பரமபதஸ்தானமாயும் சாசுவதமாயும் அமூலய ஸ்தான முதலான அநேக லோகங் களாலே சூழப்பட்டும், நித்தியயௌனளாயும் திவ்வியாளாயும் இருக்கிற ஸ்திரீயுருஷாளாலே பிரகாசிக்கப்பட்டும் பரமபதத்தி லுள்ள லக்ஷணங்கள் உடையதாயுமிருக்கிற ஸ்ரீ வைகுண்டநகரத் திலே மத்தியத்திலே நானாரத்தினமயமாயும் மிகவும் பிரகாசமா யும் இருக்கிற வேதவதியென்னப்பட்ட உத்தமமான புஷ்கரணியும் நாலு துவாரங்களாலே கூடிக்கொண்டும் சொர்ணப்பிராகாரங் களோடே கூடிக்கொண்டும் சண்டன் முதலான துவாரபாலகரா லேயும் குமுதன் முதலான திக்குப் பதிகளாலேயும் மிகவும் ரக்ஷிக்கப்பட்டும் நானாரத்தினமயங்களாயும் திவ்விய மயங்களா யும் இருக்கிற கிருக பந்திகளாலே சூழப்பட்டும் அனேக

யோசனை தூரம் உயர்ந்திக்கிற அனேகங் கோடி உபரிகை களாலே சூழப்பட்டும் விசாலங்களான வீதிகளோடே கூடிக் கொண்டும் இருக்கிறது. அந்தப் பட்டணத்திலே ஸ்திரீகளும் புருஷர்களும் சர்வலக்ஷண சம்பன்னராயும் எனக்குச் சமான பேர்களாயும் சர்வாலங்கார பூஷிதர்களாயும் திவ்வியங்களான வஸ்திரம், சந்தனம், புஷ்பங்கள் இவைகளைத் தரித்தவர் களாயும் இருக்கிறார்கள். தேவேசரான ஸ்ரீ ஹரியாகிய என்னிடத் திலே பக்தியினாலே அந்த ஸ்ரீ வைகுண்டத்திலே என்னைச் சேவித்துக்கொண்டு சகல சந்துஷ்டாளாயிருக்கிறார்கள். எந்த பேர்கள் அஷ்டாக்ஷர ஜபபரர்களாகி இருக்கிறார்களோ அவர்கள் பதினாறு வித மான பக்தியினாலே சூழப்பட்டவர்களாய் மனதினாலே கோரப்பட்ட அதே ஸ்ரீ வைகுண்டத்தையடைந்து என்னோடேகூட வாசம் பண்ணாநின்று கொண்டு சந்துஷ்டா ளாய்த் திரும்பவும் இந்த லோகத்திற்குத் திரும்பாமல் இருக்கிறார் கள். அவர்களுக்கு ஸ்ரீஹரியாகிய என்னுடைய சங்கமானது சர்வகாலமும் பிரியாமல் உண்டாயிருக்கிறது. ஞானிகளான அந்த மகானுபாவர்கள் அவ்விடத்திலே என்னுடனே சமான சுகத்தையடைகிறார்கள். சுபமான மனசையுடைய பாகவதர்கள் எவ்விடத்தேயாகிலும் என்னுடைய லோகத்தையடைந்து பூமி யிலேயிருக்கிற ஜந்துக்கள் போலே திரும்பவும் சிருஷ்டியை யடைகிறதில்லை. என்னுடைய இச்சையினாலே பண்ணப்பட்ட அவதாரங்களிலே பரதலக்ஷ்மணர் போலவும் சங்கர்ஷணர் முதலான பேர்போலவும் என்னுடைய கூடத்தானே மனுஷ்ய லோகத்திலே ஸ்வஇச்சையினாலே அவதரித்துத் திரும்பவும் என்னுடனே கூடத்தானே சாசுவதமான பரமபதத்தை அடை வார்கள். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குக் கர்மமூலமான ஜன்மமில்லை. ஞானிகளான பேர்கள் என்னை அநுவர்த்தித்துச் சேவித்துக் கொண்டிருக்கையே மோக்ஷமென்று சொல்லுவார்கள். பரமேச்வர ரான அந்தப் பகவானுடைய தாஸ்யமானது பந்தஹேதுவாகச் சொல்லப்படுகிறதில்லை. புண்ணியவான்களான என்னுடைய தாஸர்களான பேர்கள் சகலபந்தத்தினின்றும் விடுபட்டவர்களா யிருக்கிறார்கள். பிரமலோகபரியந்தமான சமஸ்தலோகங்களும் திரும்பவும் ஜன்மத்தையுடையவைகளாயும் கர்மபந்த மூலங்களா யும் துக்கத்தோடேகூடின சுகப்பிரதங்களாயும் வெகு ஆயாசத் தினாலே சாதிக்கத்தக்கவைகளாயும் துக்கம், ஜென்மம், நரகம் இவைகளுக்கு ஏதுக்களாயும் இருக்கின்றன. மனுஷ்யாளுக்குச் சொர்க்க போகங்களும் விஷத்தோடே கூடின போஜனம் போலவே ஆகாநிற்கின்றன. தேவதைகளான பேர்கள் புண்ணிய கர்மம் க்ஷயித்துப்போகையில் மிகவும் கோபத்தையுடையவர்

களாய் 'சொர்க்கத்திலேயிருக்கிற மனுஷ்யாளைக் கர்ம மூலமாகச் சங்காரத்திலே தள்ளிவிடுவார்கள், வாராய், பிராட்டி! ஆகையினாலே வெகுபிரயாசத்தினாலே சாதிக்கத்தக்கதாயும் அநித்தியமாயும் துக்ககரமாயும் சொல்பமாயும் இருக்கிற சொர்க்க சுகத்தை யோகியானவன் விங்டுவிடக்கடவன். வெகு கிலேசகரமான யஜ்ஞதானதபகர்மங்களை விட்டுவிட்டுச் சர்வ காலமும் என்னுடைய சம்பிரமங்களையும் என்னையுமே ஸ்மரிக்கக்கடவன் நாமோச்சரணமாத்திரத்தினாலே பரமபதத்தை அடைவார்கள். ஆகையினாலே விவேகியானவன் உத்தம கதியான ஸ்ரீவைகுண்டத்தையே பிரார்த்திக்கக்கடவன். அசஞ்சலமான பக்தியினாலே கிருபாநிதியான ஸ்ரீஹரியாகிய என்னைப் பஜிக்கக் கடவன். ஞான ஐசுவரியாதி குணங்களையுடைய நான் அவனை ரக்ஷிப்பேன். சந்தேகமில்லை. ஆகையினாலே மிகவும் சுக்கரமாயும் சர்வாபீஷ்டப்பிரதமாயும் நிர்மலமாயும் இருக்கிற ஸ்ரீமத் அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபிக்கிறவன். ஸ்ரீவைகுண்டத்தை அடைவன். அந்த ஸ்ரீவைகுண்டத்திலே நவரத்தினமயமான அநேகமாயிரம் ஸ்தம்பங்களையுடையதாயும் கோடிசூரியப் பிரகாசமாயும் திவ்வியமாயும் இருக்கிற விமானத்திலே பகவானான ஸ்ரீஹரியாகிய நான் எழுந்தருளியிருக்கிறேன். அந்த விமானத்திலே ஆதாரங்களாலே தரிக்கப்பட்டும் சுவர்ணமயமாயும் நவரத்தின மயமாயும் நானாவித மத்திரங்களோடேகூடிக் கொண்டுமிருக்கிற திவ்வியமான ஆசனத்திலே அஷ்டதளத்தையுடையதாயும் திருமந்திராக்ஷர சுவரூபமாயுமிருக்கிற பரமபதத்திலே மிகவும் மனோக்கியமான கர்ணிகையிலே சுபகரமான லக்ஷ்மி பீஜாக்ஷரத்திலே அநேகங்கோடி சூரியர்களுக்குச் சமானங்களான தேஜஸையுடையவராயும் ஸ்ரீய:பதியாயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனான நான் பத்மாசனத்திலே எழுந்தருளியிருக்கிறேன். அந்தப் பகவானான என்னுடைய வலது பாரிசத்திலே தேவ லக்ஷணசம்பன்னையாயும் சுவர்ணகாந்தியை யுடையவளாயும் ஜகன்மாதாவாயும் சர்வாபரணபூஷிதையாயும் விசுபாத்திரம் மாதுலங்கம் சுவர்ணபத்மம் இவைகளை அஸ்தங்களிலே தரித்துக் கொண்டுமிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய நீ தானே அப்படி எழுந்தருளியிருக்கிறாய். இடது பாரிசத்திலே கருநெய்தல் புஷ்பம் போலே காந்தியையுடையவளாயும் அநேகவித ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் திவ்வியங்களான வஸ்திர புஷ்பாதிகளாலே அலங்கரிக்கப்பட்டும் ஊர்த்துவங்களான இரண்டு கைகளிலே ரத்தினமயமான இரண்டு கருநெய்தல் புஷ்பங்களைத் தரித்துக் கொண்டும் மற்ற இரண்டு கைகளிலே தர்சனீய பாத்திரத்தையும் கிளியையும் தரித்துக் கொண்டிருக்கிற பூதேவியானவள் எழுந்தருளியிருக்கிறார். நித்தியாள் தங்களுடைய

கிருஹங்களிலேயிரா நின்றும்; சர்வ லக்ஷணசம்பன்னராயிருக்கிற விமலை முதலான சக்திகள் திவ்வியமாக வந்து பத்மங்களைக் கிரஹித்துக் கொண்டும் பகவானாய் விளங்கியிராநின்ற என்னைச் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய மத்தியிலே சங்குசக்கரகதாபத்மம் முதலாயும் கேயூரம் அங்கதம் ஆரம் முதலான திவ்வியாபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் பிராத: காலத்திலே உதியாநின்ற சூரியனுக்குச் சமானங்களான குண்டலங்களாலே விளங்கா நின்றும் முன்சொல்லப்பட்ட நித்தியாளான தேவர்களாலே சேவிக்கப்படா நின்றும் நித்தியர் முக்தர்களாலே சேவிக்கப்படா நின்றும் இருக்கிற பரமேசுவரரான நான் ஸ்ரீ வைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கிறேன். ஸ்ரீமத் அஷ்டாக்ஷர சித்தியையுடையவர்களான மகாநுபாவர்களுக்கு அந்த ஸ்ரீ வைகுண்டமானது அடையத்தக்கது. மற்ற பேருக்கு ஒரு காலத்திலேயும் அடையத்தக்கதன்று. வாராய் பிராட்டி, இந்தப் பிரகாரம் பிரதமவியூகம் உனக்குச் சொன்னேன். இரண்டாவதான ஸ்ரீ விஷ்ணுலோகத்தைச் சொல்லுகிறேன். கேட்கக்கடவாய். யாதொரு சத்தியலோகமுண்டோ பிரசித்த மான அந்த லோகமானது ஸ்ரீ விஷ்ணுலோகமென்று சொல்லப் படும். அந்த லோகமானது கல்பாந்த காலத்திலேயும் லயிக்கிற தில்லை. ருத்திரனுக்கும் பிரமாதி தேவர்களுக்கும் தரிசனம் பண்ணுகைக்கும் சக்கியமன்று. நாலுபக்கமும் அநேகம் கற்பக விருக்ஷங்களுடைய வனங்களாலே பரிபூரணமாயிருக்கும். அமிர்தம்போலே கோத்த ஜலங்களையுடையவைகளாயும் வைடூரிய மணிமயங்களான வேதிகளையுடையனவாயும் சுவர்ண மயங்களாயும் ரத்தின மயங்களாயும் திவ்வியங்களாயும் இருக்கிற கமலங்களாலே விளங்காநின்றும் சப்தியாநின்றும் மதித்தும் இருக்கிற பக்ஷிகளோடே கூடிக்கொண்டுமிருக்கிற அநேகம் நதிகளாலே விளங்கா நின்றுமிருக்கிறது. நித்தியங்களான அந்த நதிகளிலேயும் திவ்வியமான விமானங்களிலேயும் ஸ்திரீகளோடே கூட நித்தியர்களான தேவகணங்கள் கிரீடித்துக் கொண்டிருக் கிறார்கள் ஜொலித்துக் கொண்டிருக்கிற அக்கினிக்குச் சமானங் களாயும் திவ்வியங்களாயும் இருக்கிற அநேக கோடி விமானங் களாலே சூழப்பட்டிருக்கிறது. சர்வகாலமும் சாமகானத்தைப் பண்ணாநின்ற கோகிலம் முதலானவைகளாலே விளங்கா நின்று புஷ்பபூரணங்களாயும் இருக்கிற அநேக மனோக்கியங் களாயும் இருக்கிற விருக்ஷங்களாலேயும் மிகவும் விளங்கா நின்ற அந்த லோகமத்தியிலே ரத்தினமயமான பிராகாரத்தோடு கூடிக்கொண்டும் ரமணீயமாயும் கோடி யோசனை விஸ்தீர்ணமாயும் துவாரகையென்று பெயரையுடைய தான பட்டணம் இருக்கிறது. அநேக கோடி சந்திரசமானங்களா

யும் நானாரத்தினமயமான ஸ்தம்பங்களாலேயும் தோரணங்களாலேயும் விளங்கா நின்றுமிருக்கிற உபரிகைகளாலே மிகவும் விளங்கா நின்றும் பதினாறு வயதுக்குக் குறைந்த வயதையுடையவாளாயும் திவ்வியாளாயும் சர்வலக்ஷண சம்பன்னாளாயும் திவ்விய பூஷண பூஷிதாளாயும் இருக்கிற ஸ்திரீபுருஷாளோடு கூடிக்கொண்டுமிருக்கிற அந்தப் பட்டணத்திலே ரமணீயமான ஸ்தானத்தில் சரசங்களிலே மனோக்கியங்களான ஸ்திரீகள் நித்திய சந்துஷ்டாளான பதிகளோடே கூட ஸ்ரீலக்ஷ்மீபதியான ஸ்ரீஹரியை ஆராதிக்கிறார்கள். அந்தப் பட்டணத்தில் சகலபிரசாதத்தினாலே அடையப்பட்ட மகத் ஐசுவரியத்தை அநுபவியா நின்றுகொண்டு பதிகளோடே கூட ஸ்ரீ கிருஷ்ணருடைய அற்புதமான லீலா உபாக்கியானம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பத்மம்போலே கோத்த நேத்திரங்களையுடையவர்களாயும்பத்மம்போலே ஹஸ்தங்களையுடையவர்களாயும் ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய உனக்குச் சமானம் போலே கோத்த ரூபத்தையுடையவர்களாயும் திவ்வியங்களான வஸ்திராபரணங்களோடே கூடிக்கொண்டும் இருக்கிற ஸ்திரீகள் அந்த லோகத்திலே கிரீடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த லோகத்திலே சமஸ்தமான புருஷர்களும் சங்குசக்கர கதாதராளாய்க்கொண்டு சர்வாபரணபூஷிதாளாய் பீதாம்பரதாரிகளாய் இருக்கிறார்கள். அந்த லோகத்திலே கிரீடித்துக் கொண்டிரா நின்ற ஸ்திரீ புருஷர்களுக்கு ஒருவர்க்கொருவர் ஸ்பரிசத்தினாலே ஸ்ரீ ஹரியினிடத்திலே பக்தி சுகரசமானது மிகவும் விருத்தியடைகிறது. அந்த லோகமத்தியிலே ரமணீயமான வாசுதேவமூர்த்தியினுடைய அந்தப்புரமானது விளங்காநிற்கிறது. நாலுவாசலோடே கூடிக்கொண்டும் சுவர்ணமயமான பிராகாரதோரணங்களையுடையவைகளாயும் நவரத்தினமயங்களாயும் திவ்வியங்களாயும் இருக்கிற அநேக உபரிகைகளோடே கூடிக்கொண்டும் சுவர்ணமயமான அந்தப்புர மத்தியிலே நானாரத்தினபூஷிதமாயும் சந்தனம் கர்ப்பூரம், அகில், குங்குமம் இவைகளுடைய கந்தத்தோடே கூடிக்கொண்டும் புஷ்ப முதலான மேற்கட்டு வஸ்திரம் முதலானவைகளினாலே நாலு பக்கமும் அலங்கரிக்கப்பட்டும் இருக்கிற மண்டபத்தினுடைய மத்தியிலே கற்பகவிருக்ஷத்தினுடைய சாயையிலே மனோக்கியமான பஞ்சணை மெத்தையோடே கூடிக்கொண்டும் திவ்விய கந்தங்களையுடையதாயும் நானாவித புஷ்பங்களினாலே விளங்காநின்றும் மனோக்கியமாயுமிருக்கிற சேஷபரியங்கமாகிற பரமாசனத்திலே ஜனார்த்தனரான ஸ்ரீ வாசுதேவராயிரா நின்ற நான் சகலலோகேசுவரியான உன்னோடேகூட எழுந்தருளியிரா நிற்கிறேன். அநேகங்கோடி சந்திரர்களுக்குச் சமமான காந்தியையுடையவராயும் திவ்வியாபரணபூஷிதராயும் மிகவும் வக்கிரங்களாயும் நீலங்களாயுமிருக்கிற

இரண்டு புருவங்களாலே மனோக்கியமான நாசிகையினாலே விளங்காநின்ற திருமுகமண்டலத்தையுடையவராயும் மிகவும் மனோக்கியமாயும் விசாலமாயும் சுந்தரமாயும் இருக்கிற கபோலங்களாலே விளங்காநின்றும் மார்பிலேயிராநின்ற ஸ்ரீமகாலக்ஷ்மியை ஆலிங்கனம் பண்ணிக்கொண்டிராநின்றும் அமூல்யமான முத்தாரங்களினாலே விளங்காநின்றும் அரிசந்தனம் பூசப்பட்ட திருமேனியையுடையவராயும் கஸ்தூரி திலகாங்கிதராயும் மிகவும் உன்னதங்களான தோள்களையுடையவராயும் தீர்க்கங்களாயிருக்கிற நாலு புஜங்களாலே விளங்காநின்றும் மிகவும் பிரகாசியாநின்ற தோள்வளைகள் கடகங்கள் மோதிரங்கள் இவைகளாலே விளங்காநின்ற ஸ்ரீவத்ஸகௌஸ்துபங்களாலே விளங்காநின்றும் விசாலமாயுமிருக்கிற திருமார்பையுடையவராயும் மிகவும் காந்திகளையுடையவைகளாயுமிருக்கிற முத்து மயங்களாயும் இருக்கிற திவ்வியாபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் பாலசூரியனுக்குச் சமானமான பீதாம்பரத்தினாலே சூழப்பட்டும் மாணிக்கமயமான நூபுரங்களையுடைய திருவடித்தாமரைகளாலே விளங்காநின்றும் நிஷ்களங்கனாயிருக்கிற சந்திரன்போலே கோத்த நகபந்திகளாலே விளங்காநின்றும் செந்தாமரைப்புஷ்பம்போலே கோத்த இரண்டு திருவடியையுடையவராயும் மின்னல் கொடிபோலே விளங்காநின்றும் உருக்கப்பட்ட தங்கம்போலே கோத்தகாந்தியையுடையவளாயும் இருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய உன்னோடே கூடிக்கொண்டு அந்த விஷ்ணுலோகத்திலேயிருக்கிற தேவேசுரரான ஸ்ரீவாசுதேவரான நான் அந்த லோகத்திலே கிரீடித்துக்கொண்டிருக்கிறேன். உருக்கப்பட்ட தங்கம்போலே கோத்த காந்தியையுடையவளாயும் சர்வாபரணபூஷிதையாயும் பத்மம்போலே கோத்த நேத்திரங்களையுடையவளாயும் பத்மம்போலே கோத்த அஸ்தங்களையுடையவளாயும் பத்மமாலையினாலே அலங்கரிக்கப்பட்டும் திவ்விய சந்தனத்தினாலே பூசப்பட்ட திருமேனியையுடையவளாயும் மிகவும் மனோக்கியமாயும் நீலமாமாயும் வக்கிரமாயும் இருக்கிற கேசபாரத்தினாலே விளங்காநின்றும் மந்தாரபாரிஜாத முதலான திவ்விய புஷ்பங்களாலே விளங்காநின்றும் மணிரத்தினங்களினாலே அலங்கரிக்கப்பட்ட சுட்டிக்கு ஸ்தானமாகிய வகுடினையுடையவளாயும் கஸ்தூரி திலகபூஷிதையாயும் ரத்தினமயங்களான ஆபரணங்களாலே மிகவும் பிரகாசியாநின்றும் வண்டுபோலவும் இருக்கிற முன்நெற்றி மயிர்களையுடையவளாயும் பருத்தும் உன்னதங்களாயும் இருக்கிற ஸ்தனங்களாலே ஸ்ரீஹரியாகிய என்னுடைய மார்பிலே நெருங்கியிராநின்றும் கேயூரம் அங்கதம் ஆரம் முதலான ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்டும் நித்தியமான யௌவனத்தையுடையவளாயும் சர்வலோகரக்ஷகியாயும் இருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய

உன்னுடைய பதியாகிய என்னோடேகூட அந்தலோகத்திலே சர்வகாலமும் கிரீடித்துக் கொண்டிருக்கிறாய். சகலலோகசரண்ய ரான ஸ்ரீவாசுதேவரான நான் அந்த லோகத்திலே கிரீடித்துக் கொண்டிருக்கிறேன். மனுஷ்யாளுக்குச் சர்வாபீஷ்டப்பிரதமான பகவானாகிய என்னுடைய அந்த லோகத்திலே ஸ்ரீமகாலக்ஷ்மி யாகிய உன்னுடைய சக்திகள் லக்ஷ்மியென்றும் ருக்குமிணியென் றும் சீதையென்றும், பத்மையென்றும், பத்மாலயை என்றும், சிவா வென்றும், சுலக்ஷணையென்றும், ரதிகாமப்பிரதையான சீலை யென்றும் இந்தப் பிரகாரம் எட்டு மூர்த்திகள் சொல்லப்படுகிறது. புருஷரூபிகளான சங்கம், சக்கரம், கதா, சார்ங்கம் கட்கம் முதலான ஆயுதங்களினாலே அந்த லோகமானது நாலுபக்கமும் ரக்ஷிக்கப்படுகிறது. வாராய் பிராட்டி! இந்தப் பிரகாரம் இரண்டாம் வியூகமானது சம்க்ஷேபமாக என்னாலே உனக்குச் சொல்லப் பட்டது. விஸ்தாரமாகச் சொல்லுகைக்குச் சக்கியமன்று. சுபகர மானது. துவாதசாக்ஷர மந்திரத்தை எந்த பேர்கள் ஜபிக்கிறார் களோ அவர்கள் சாசுவதமாயும் சுபகரமாயும் இருக்கிற அந்த லோகத்தையடைவார்கள். தாஸ்யத்தையன்றி, வேதம், யக்ஞம், அத்தியயனம், விரதம், உபவாசம் இவைகளாலே அந்த லோக மானது. ஒரு காலத்திலேயும் அடையப்படுகின்றதன்று. ஆகையினாலேயே தாஸ்யரூபமான ஸ்ரீஹரியாகிய என்னுடைய பத்தியையடைந்து அவரிடத்திலேயே அசஞ்சலமான மனசை யுடையவனுக்குக் கர்மபந்த நாசகரமான பரமமான சித்தியானது உண்டாகும்.

வாராய், பிராட்டி! இரண்டாம் வியூகமானது இந்தப் பிரகாரம் சொல்லப்பட்டது. ஸ்ரீஹரியாகிய என்னுடைய மூன்றாவது வியூகத்தைச் சொல்லுகிறேன். கேட்கக்கடவாய்: சுத்தோதக சமுத்திரத்துக்கு வடக்குக் கரையான இந்தத் தீபம் (தீவு) சுவேதத்தீபம் என்று சொல்லப்படுகிறது. சனகாதி யோகீச்வரா ளுக்குத் தரிசனார்த்தமாக நாம் இங்கே எழுந்தருளியிருக்கிறோம். சனகர், சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் வயிஷாவேஷு பஞ்சகர் இந்த ஏழுபேர்களும் பிரமபுத்திராளாயும் மகாதேஜஸை யுடையவர்களாயும் சமஸ்தபேர்களிலேயும் விரக்தாளாயும் சுத்த சத்துவகுணசம்பன்னாளாயும் பகவத் தரிசனத்தினாலே உண்டாகாநின்ற சுகரசானுபவத்தையுடையாளாயும் இருக்கிற யோகிகள் இந்தச் சுவேதத்தீபத்திலே நரநாராயணா ளோடேகூட வாசம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த யோகிகளுக்குத் தரிசனார்த்தமாக ஸ்ரீஹரியாகிய நான் கோடி சந்திரனுக்குச் சமானமாயும் நானா ரத்தினங்களாலே விளங்காநின்றும் மகாயோகிகளாலே சேவிக்கப்

பட்டும் ஹேயகுணவர்ஜிதமாயும் இருக்கிற இந்தச் சுவேதத்தீபத்திலே நித்தியமாய் பிரசன்னராய் இருக்கிறேன். இந்தச் சுவேதத் தீபத்திலே பாரிஜாத முதலான ரம்மியங்களான உத்தியான வனங்கள் அநேகங்களாக இருக்கும். சந்தானம், கற்பகம், சந்தனம் இவை முதலான விருக்ஷங்களாலே அலங்கரிக்கப்படும் விகசித்திருக்கிற பத்மம் முதலான புஷ்பங்களோடே கூடிக் கொண்டும் மனோக்கியங்களான சரசுகளாலே விளங்காநின்றும் இருக்கிற இந்தச் சுவேதத்தீவின் மத்தியிலே அயிராவதி என்னப் பட்ட ரம்மியமான பட்டணம் இருக்கிறது. நானாரத்தினமயங் களான பிராகாரம் தோரணங்களையுடையவைகளாயும் நானா ரத்தினமயங்களாயும் திவ்வியங்களாயும் இருக்கிற விமானங் களாலே பிரகாசியாநின்றும் திவ்விய ஸ்திரீ புருஷர்களாலே வாசம் பண்ணப்பட்ட அநேக உபரிகைகளோடே கூடிக்கொண்டும் இருக்கிற திவ்வியமான இந்தப் பட்டணமத்தியிலே ரத்தினமயங் களான உபரிகைகளோடே திவ்வியமான அந்தப்புரம் இருக்கிறது. பாலசூரியன்போல விளங்காநின்றும் மிகவும் மனோக்கியங் களாயும் இருக்கிற அநேகம் உபரிகைகளாலே சூழப்பட்ட இந்த அந்தப்புர மத்தியிலே இதோ சுவர்ணமய நவரத்தினமயமாய் விளங்கா நின்று திவ்வியமான மண்டபம் இருக் கிறது. சந்தனம் அகிற்சக்கை கர்ப்பூரம் குங்குமம் இவைகளுடைய பரிமளத்தினாலே மிகவும் மனோக்கியமாயும் நானாவிதங்களான புஷ்பமாலைகளாலே நாலு பக்கமும் அலங்கரிக்கப்பட்டும் திவ்வியாளான ஸ்திரீபுருஷர்களாலே சூழப்பட்டும் சாமகானத் தினாலே மிகவும் விளங்காநின்றும் இருக்கிற இந்த மண்டப மத்தி யிலே சூரியன் அக்கினி இவர்களுக்குச் சமான காந்தியையுடைய சிம்மாசனம் இதோ இருக்கிறது, பார்த்தாயா! இந்த மத்தியிலே கர்ணிகையிலே ஸ்ரீஹரியான நான் எழுந்தருளியிருக்கிறேன். நிர்மலமான தங்கம் போலே காந்தியையுடையவராயும் முத்தாரங் களாலே அலங்கரிக்கப்பட்டும் சங்கம் சக்கரம் கதை பத்மம் இவை களைத் தரியா நின்ற நாலு புஜங்களையுடையவராயும் ஆரம் கேயூரம் கடகம் அங்குலிகம் இவைகளாலே அலங்கரிக்கப்பட்டும் சுவர்ணபத்மம்போலே இரண்டு திருவடிகளாலே விளங்காநின்றும் சந்திரமண்டலத்துக்குச் சமானங்களான நகபந்திகளாலே விளங்கா நின்றும் பதினாறு வயது குமாரராய் நித்ய யௌவனராக விளங்கா நின்றும் விசாலமான நெற்றியிலே திவ்விய கந்தத்தை யுடையதான சூர்ணத்தினாலே பண்ணப்பட்ட ஊர்த்துவபுண்டரத் தினாலே மிகவும் விளங்காநின்றும் கடையப்பட்ட அமிர்த்தத் தினுடைய நுரைபோலே கோத்த வெள்ளிவஸ்திரத்தினாலே சூழப்பட்டவராயும் முத்துக்களாலே மனோக்கியமான இரண்டு குண்டலங்களாலே விளங்காநின்றும் திவ்விய சந்தனத்தினாலே

பூசப்பட்ட திருமேனியையுடையவராயும் திவ்விய புஷ்பங்களாலே அலங்கரிக்கப்பட்டும் சுந்தரமாயும் உன்னதமாயும் இருக்கிற நாசிகையினாலே விளங்கா நின்றும் புன்சிரிப்போடேகூடிக் கொண்டிருக்கிற பவழம்போல சிவத்த அதரத்தை யுடையவராயும் மிகவும் மனோக்கியங்களான கருமுழிகளாலே விளங்காநின்றும் மிகவும் நீலங்களாயும் வக்கிரங்களாயும் இருக்கிற புருவங்களாலே விளங்காநின்றும் சந்திரனுக்குச் சமானங்களான நகபந்திகளாலே விளங்காநின்றும், ஜகன்மோஹன விக்ரஹராயும் இருக்கிற நான் பத்மாசனத்திலே இந்த வியூகத்திலே எழுந்தருளியிருக்கிறேன். பகவானாகிய என்னுடைய இடது தொடையிலே என்னுடைய ரூபத்துக்குச் சமானமான ரூபத்தையுடையவளாயும் சீலரூப குணாதிகளாலே எனக்கு யோக்கியையாயும் இருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய நீ எழுந்தருளியிருக்கிறாய். பத்மதளம்போலே கோத்த காந்தியையுடையவளாயும் யௌவனத்திலே விளங்கா நின்றும் சர்வலக்ஷணசம்பன்னையாயும் திவ்வியங்களான ஆபரணங்கள் வஸ்திரங்கள் ஆரங்கள் இவைகளோடேகூடிக் கொண்டும் நீலங்களாயும் வக்கிரங்களாயும் இருக்கிற கேசங்களை யுடையவளாயும் நாலு புஜங்களாலே விளங்காநின்றும் மந்தாரம் குசுமம் முதலான புஷ்பங்களாலே அலங்கரிக்கப்பட்டும் மிகவும் சுந்தரமான நாசிகையினாலே விளங்காநின்ற கபோலங்களிலே பிரதிபலியா நின்ற குண்டலங்களாலே விளங்காநின்றும் கஸ்தூரி திலகத்துடனே கூடியிருக்கிற நாசாக்கிரத்திலே சமர்ப்பிக்கப்பட்ட முத்து மூக்குத்தியையுடையவளாயும் சுவர்ணகலசம் போலவும் பருத்தும் உன்னதங்களாயும் இருக்கிற ஸ்தனங்களையுடையவளாயும் திவ்வியமான குங்குமத்தினாலே பூசப்பட்ட திருமேனியை யுடையவளாயும் பத்மமாலையினாலே விளங்காநின்றும் வசுபாத்திரத்தையும் மாதுலங்கத்தையும் கண்ணாடியையும் சுவர்ணபத்மத்தையும் நாலு கைகளிலே தரியாநின்றும் சர்வ பிராணிகளுக்கும் சர்வாபீஷ்டத்தையும் கொடாநின்றும் இருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியாகிய நீ எழுந்தருளியிருக்கிறாய். உன்னுடைய சக்திகளானவை இவ்விடத்திலே எனக்கு நாலு பக்கத்திலும் மூர்த்தி கரித்து இருக்கின்றன. ஈசாவாச்சியா, மகாதேவி, சாம்பவி, கமலாலயா, சாவித்திரி, சர்வகாமப்ரதா என்று இவர்கள் சக்திகளாகச் சொல்லப்படுகிறார்கள். சிந்திதா, மேதா, திருதி. பிரக்யாதா, அனுச்ருதி, ஸ்மிருதி, இதிகாசம், தானியம், விசஷ்டா, மலக்ஷிணி இவர்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உனக்குச் சர்வகாலமும் சமஸ்த கைங்கர்யமும் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப்புரத்துக்கு வெளியிலே கருடாழ்வார் முதலான தேவர்கள் நித்திய கிங்கராளாய் இருக்கிறார்கள். அந்த லோகத்திலே நித்திய தேவதைகளான ராத்தியாளும் தேவகணங்களும் பகவானாகிய

என்னுடையபிரசாதத்தினாலே அடைப்பட்டலோகங்களினாலே மிகவும் பிரீதியையுடையவளாய் திவ்வியங்களான உப்பரிகைகள் விமானங்கள் உத்தியானவனங்கள் பட்டணங்கள் இவைகளிலே நித்தியாளாய் வேர்வை முதலான ஹேயகுணர்வர்ஜிதாளாய் சர்வ காலமும் கிரீடித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பேர்கள் சர்வ காலமும் சிரத்தையுடையவர்களாய் ஸ்ரீவிஷ்ணு மந்திரத்தை ஜபிக் கிறார்களோ, எந்த பேர்கள் துவாதசி விரதத்தை அனுஷ்டிக் கிறார்களோ, அவர்கள் இந்த லோகத்தையடைவார்கள். வாராய், பிராட்டி! சாசுவதமான இந்த விஷ்ணுலோகமானது வேதம் தானம் யக்ஞம் இவைகளாலே அடைகிறதற்குச் சக்கியமன்று. இந்த விஷ்ணுலோகமானது மனுஷ்யாளுக்கு ஏகாந்த பக்தி யினாலே அடைகிறதற்குச் சக்கியம். ஆகையினாலே ஏகாந்த பக்தியினாலே தேவதேவரான என்னை நித்தியமாக ஆராதிக்கக் கடவன். என்னுடைய சகஸ்ர நாமத்தைச் சிந்திக்கக் கடவன். என்னையே சர்வ காலமும் தியானம் பண்ணா நின்றுகொண்டு திருமந்திரத்தையே ஜபிக்கக் கடவன். சர்வபரிபூர்ணராயும் சர்வா பீஷ்டப்பிரதராயும் இருக்கிற ஸ்ரீ ஹரியாகிய என்னைக் குறித்துப் பக்தியினாலே ஓமம் பண்ணக் கடவன். சர்வ கர்மங்களாலேயும் திருப்தி பண்ணுவிக்கக்கடவன். வாராய், பிராட்டி! பூர்விகர்களான ஞானிகளாலே இந்த விஷ்ணு லோகத்தினுடைய ஸ்வரூபமானது எப்படிச் சொல்லப்பட்டதோ அந்தப் படிக்குப் பரமாத்மாவாகிய என்னுடைய மூன்றாம் வியூகமானது நம்மாலே சொல்லப்பட்டது. இதற்கு மேல் உத்தமமான நாலாம் வியூகத்தைச் சொல்லு கிறேன், கேட்கக் கடவாய். வாராய், பிராட்டி! கோடி சந்திரர் களுக்குச் சமானமாயும் சகஸ்ர பணங்களுடைய ரத்தின கிரணங் களாலே வியாபிக்கப்பட்டும் இருக்கிற க்ஷீரசமுத்திரத்திலே சகஸ்ர பணங்களாலே விளங்கா நின்றும் நிர்மலமாயும் மிகவும் விஸ்தார மாயும் உன்னதமாயும் இருக்கிற சேஷதல்பத்திலே தேவாளுக்குத் தரிசனார்த்தமாகப் பரமேசுரராயும் பத்மநாபராயும் இருக்கிற ஸ்ரீ ஹரியாகிய நான் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னோடே கூட எழுந்தருளியிருக்கிறேன். நீலமேகசியாமளராயும் பத்ம பத்ரம் போலே தீர்க்கமான நேத்திரங்களையுடையவராயும் கோடி சூரியப் பிரகாசமான கிரீடத்தினாலே விளங்கா நின்றும் நானாவித ரத்தினங்களினாலே பிரகாசியா நின்ற திவ்விய குண்டலங்களாலே விளங்கா நின்றும் விகஸித்த செந்தாமரைப் புஷ்பம்போல கோத்த பாணிபாதங்களாலே விளங்கா நின்றும் ஆரம் கேயூரம் கடகம் அங்குலிகம் இவை முதலான ஆபரணங்களாலே விளங்கா நின்றும் சங்கம் சக்கரம் கதை சார்ங்கம் இவைகளினாலே பிரகாசியா நின்ற சதுர் புஜங்களை யுடையவராயும் பலபுஷ்டங்களினாலே பரிபூர்ணமான கற்பக விருக்ஷங்களினாலே

விளங்கா நின்றும் பாலசூரியனுக்குச் சமான காந்தியையுடைய பீதாம்பரத்தினாலே சூழப்பட்டவராயும் விசுவகர்த்தாவான பிரம்மாவுக்கு ஜன்மஸ்தானமான நாபிகமலத்தினாலே விளங்கா நின்றும் அரிசந்தனத்தினாலே பூசப்பட்ட திருமேனியையுடையவ ராயும் சர்வாபரண பூஷிதராயும் மந்தார பாரிஜாத திவ்விய புஷ்பங்களினாலே அலங்கரிக்கப்பட்டு நீலங்களாயும் வக்கிரங் களாயும் சேர்க்கப்பட்டும் இருக்கிற கேசங்களையுடையவராயும் நவரத்தினகாந்திகளாலே பிரகாசியா நின்ற நூபுரங்களையுடைய திருவடித்தாமரைகளாலே விளங்கா நின்றும் பூர்ணசந்திரனுக்குச் சமானமான புன்சிரிப்புடனே கூடின திருமுக மண்டலத்தினாலே பிரகாசியா நின்றும் நித்தியயௌவனராயும் ஸ்ரீய: பதியாயும் திவ்விய மங்கள விக்கிரகத்தையுடையவராயும் லோக சரண்யரா யும், தேவாபீஷ்டப் பிரதராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணரான நான் எழுந்தருளியிருக்கிறேன். ரூபம் சீலம் குணம் இவைகளி னாலே எனக்குச் சமானளாயும் உருக்கப்பட்ட தங்கம்போலே திவ்விய காந்தியையுடையவளாயும் சர்வாபரண பூஷிதையாயும் ரூபமாயும் தைரியம், சாந்தி, சீலம் கல்யாண குணங்கள் இவை களோடே கூடினவளாயும் க்ஷீரசமுத்திரத்தினுடைய நுரைக்குச் சமானமான வெண்பட்டினாலே அலங்கரிக்கப்பட்டவளாயும் மந்தாரம் கேதகை, ஜாதி இவை முதலான புஷ்பங்களாலே அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடையவளாயும் கஸ்தூரி திலகத் தோடே கூடிக்கொண்டும் தேககாந்தியையுடையதான வகிட்டை யுடையவளாயும் நவரத்தினங்களுடைய காந்தியினாலே பிரகாசியாநின்ற கர்ணாபரணங்களினாலே அலங்கரிக்கப்பட்டும் பவழத்துக்குச் சமானமான காந்தியையுடைய சிவந்த அதரத்தை யுடையவளாயும் மனோக்கியமான புன்சிரிப்பையுடையவளாயும் மதித்திருக்கிற பிரமரங்களுக்குச் சமானங்களாயும், மெதுவாயும் மனோக்கியங்களாயும் இருக்கிற முன்நெற்றிமயிர்களாலே விளங்கா நின்றும் சூக்ஷ்மமான இடையையுடையவளாயும் தீர்க்கங்களான நேத்திரங்களையுடையவளாயும் பருத்தும் உன்னதமுமாயும் இருக்கிற ஸ்தனங்களையுடையவளாயும் சர்வா பரண பூஷிதங்களான நாலு புஜங்களிலே இரண்டு புஜங்களாலே சுவர்ண பத்மங்களைத் தரியா நின்றும், இரண்டு புஜங்களாலே சர்வகாலமும் ஸ்ரீ ஹரியாகிய என்னை ஆலிங்கனம் பண்ணிக் கொண்டிரா நின்றும் சேவியா நின்ற தேவாளைக் கடாக்ஷத்தி னாலே கடாக்ஷியா நின்று கொண்டு ஸ்ரீ மகாலக்ஷ்மியான நீ எழுந்தருளியிருக்கிறாய். ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னாலே கடாக்ஷிக்கப்பட்டவாள்ாய் தன்யாளாயும் மங்களத்தையுடைய வாளாயும் இருக்கிற சித்தாள், தேவாள், சாரணாள், கின்னராள் சமஸ்தமான பேர்களும் விமானாரூடராய்க் கொண்டு அவ்விடத்

திலே சர்வகாலமும் ஆனந்த பாஷ்பத்தினாலே நனைக்கப்பட்ட வாளாய் ஸ்ரீ ஹரியைக் கானம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அசுரர்களாலே பாதிக்கபபடாநின்ற பிரம ருந்திர தேவர்களாலே அவ்விடத்திலே ஸ்தோத்திரம் பண்ணப்படா நின்றுகொண்டு ஜகந்நாதரான ஸ்ரீ ஹரியான நான் தேவர்களுக்கு அபயப் பிரதானம் பண்ணி ராக்ஷஸர்களைச் சங்கரிக்கும் பொருட்டும் ஜகத்தை ரக்ஷிக்கிறதின் பொருட்டும் பிரசன்னராய் எழுந்தருளி யிருக்கிறேன்.

வாராய், பிராட்டி! இந்தப் பிரகாரம் ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய நாலு வியூகமானது என்னாலே சொல்லப்பட்டது. இன்னும் யாதொரு மகிமையைக் கேட்க வேணுமென்று இச்சிக் கிறாயோ அதைச் சொல்லுகிறேன்.

இப்பால் சுதரிசன மகாத்மியம்.

ஸ்ரீ லக்ஷ்மி நாராயண சமேத வல்ல நாராயணருடைய பாதமேகதி.

## 15. சுதரிசன மகாத்மியம்

பிராட்டியாருடைய வாக்கியம்: வாரீர் பகவானே ஸ்ரீ ஹரி யாகிய உம்முடைய பக்தியாகிற அமிர்தரூபமான சமஸ்த ரகசியத் தையும் சொல்லக்கடவீர். மிகவும் சுகிர்தமான உம்முடைய பக்தியைக்கேளா நின்ற எனக்குப் பூர்ண திருப்தியில்லை. மிகவும் பயங்கரமான சம்சாரமான ஆரண்யத்திலே தாபத்திரய மான மகாஅக்கினிச் சுவாலைகளாலே சர்வகாலமும் மிகவும் தபிக்கப்படா நின்ற மனுஷ்யாளுக்கு ஸ்ரீ ஹரியாகிய தேவரீருடைய பக்தியாகிற அமிர்த சாகரத்தை விட்டால் வேறே சரணமென்ன விருக்கிறது. ஆகையினாலே வாரீர் பகவானே! சர்வகாலமும் ரிஷிகளாலே அனுஷ்டிக்கப் படா நின்ற பரமாத்மாவாகிய தேவரீருடைய பக்திமார்க்க பேதங்களை இப்போது விஸ்தார மாகச் சொல்லக்கடவீர் என்று பிரார்த்தியா நின்ற பிராட்டியாரைப் பார்த்துப் பகவானுடைய வாக்கியம்: வாராய், பிராட்டி! மனுஷ்யாளுக்குச் சம்சார நிவர்த்தகமாயும் நித்தியமாய் மிகவும் சுகிர்தமாயுமிருக்கிற பரமேசுரரான ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய பக்திமார்க்கத்தை நன்றாகக் கேட்டாய். என்னுடைய மந்திரங் களுடைய் விதியையும் என்னுடைய சுவரூபத்தையும் சொல்லு கிறேன். கேட்கக்கடவாய். சனாதனராயும் பரிபூர்ணராயும் தேவ பிராணிகளுக்கு அந்தர்யாமியாயும் ஸ்ரீ வாசுதேவராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணராகிய நானே பரமதத்துவமாயும்

பரமாத்மாவாயும் பரப்பிரம்மமாயும் பரஞ்சோதியாயும் பரமகாரண ராயும் ஆக நிற்கிறேன். என்னுடைய உபாசனா பேதங்களையும் தனித்தனியே சொல்லுகிறேன். கேட்கக் கடவாய்.

ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய சங்கு சக்ராங்கனமானது வைஷ்ணவ தர்மங்களிலே முந்தினதாகச்சொல்லப்படும் ஊர்த்துவ புண்ட்ரதாரணமும் என்னுடைய மந்திரங்களுடைய பரிக்கிரஹமும் ஸ்ரீ ஹரியினுடைய ஆராதனமும் ஜபமும் தியானமும் பகவந்நாம ஸ்மரணமும் கீர்த்தனமும் சிரவணமும் ஸ்தோத்திரமும் திருவடி சேவையும் பகவானுடைய ஸ்ரீ பாததீர்த்த சேவையும் பகவானுக்கு நிவேதனம் பண்ணப்பட்ட பிரசாத பரிக்கிரஹமும் ஸ்ரீ ஹரியாகிய என்னைத் தவிர இதரதேவதா சேவை பண்ணாமலிருக்கிறதும் துவாதசி விரத நிஷ்டையும் துளசிகளை வைத்து விருத்தி பண்ணி வைக்கிறதும் இந்தப் பிரகாரம் சம்சார நிவிருத்தியின் பொருட்டு என்னுடைய பக்தியானது பதினாறு விதமாகச் சொல்லப்படுகிறது. சமஸ்த தேவர்களுக்கும் புருஷோத்தமரான நான் ஆராதிக்கத் தக்கவராக நிற்கிறேன். விசேஷமாய் பிராமணர்களுக்கு, நித்திய மாக ஆராதிக்கக் கடவர் நான் ஆகையினாலே பிராமணனானவன் என்னை யதா சாஸ்திரமாய் நித்தியமாய் ஆராதிக்கக்கடவன். என்னுடைய சின்னங்களான சங்க சக்கரங்களாலே அங்கிதனாய்க் கொண்டு இருக்கிறவன் எனக்கு நித்ய வாசஸ்தான மான பரமபதத்தையே அடைவன்: சந்தேகமில்லை. பிராமணனானவன் சகலபாப நாசத்தின் பொருட்டு ஓமம் பண்ணப்பட்ட அக்கினியிலே தப்தம் பண்ணிச் சங்கு சக்கராங் கனங்களை இரண்டு தோள்களிலேயும் தரிக்கக் கடவன். சங்கு சக்கரத்தையாவது பஞ்சாயுதங்களையாவது யதாசாஸ்திரமாகத் தரித்துக்கொண்டு பகவத் பிரீதியர்த்தமாகக் கர்மங்களையா சரிக்கக் கடவன். அக்கினியினாலே தபிக்கப்பட்டும்பவித்திரமாயும் இருக்கிற சங்கு சக்கரங்களை இரண்டு தோள்களிலேயும் தரித்த மாத்திரத்திலேயே கோரமான எமபுரத்தை விட்டுப் பரமபதத்தை யடைவன். சக்கராங்கனமில்லாமலிருக்கிற யாரொருவன் ஸ்ரீ ஹரி யாகிய என்னை ஆராதிக்கிறானோ அவனாலே பண்ணப்படா நின்ற ஆராதன மந்திரம் ஜெபம் முதலானவை சகலமும் நிஷ்பல மாய்விடும். பிராமணனானவன் அக்கினியிலே தப்தமான சக்கரத் தினாலே இரண்டு தோள்களிலேயும் அங்கனம் பண்ணிக்கொண்டு திருமந்திரத்தைச் செபித்துக் கொண்டு சம்சாரத்தினின்றும் விடு பட்டு மோக்ஷத்தையடைவன். பிராமணனானவன் அக்கினி யினாலே தபிக்கப் பட்ட சுதரிசனத்தைத் தரித்துக்கொண்டு பிற்பாடு யதாசாஸ்திரமாக உபநயனம் பண்ணிக்கொண்டு கிரமங்களை யாசரிக்கக்கடவன். யாதொருவன் சக்கராங்கனம்

இல்லாமலிருக்கிறவனைச் சிரார்த்தத்திலே போஜனம் பண்ணுவிக் கிறானே அந்தச் சிரார்த்தமெல்லாம் வியர்த்தமாய் விடும். பிதுர்க்களும் நிராசையாய்ப் போய்விடுவார்கள். என்னுடைய சக்கராங்கனத்தையுடைய பிராமணனைச் சிரார்த்த கர்மத்திலே பூஜிக்கக்கடவன். என்னுடைய சக்கராங்கனம் இல்லாதவனைத் தேவபிரயத்தனத்தினாலும் (எவ்வகையிலும் என்றபடி) வர்ஜிக்கக்கடவன். கோதான பூதான இரணியதானம் முதலானவைகளைச் சக்கராங்கனமான புஜங்களை யுடையவனுக்குக் கொடுக்கக் கடவன். சக்கராங்கன மில்லாதவனுக்கு யாதொன்று கொடுக்கப்படுகிறதோ அதெல்லாம் அசுரர்களுக்குப் பிரீதிகரமாய் விடும். யாரொருவர் அக்கினியினாலே தப்தமான சக்கரத்தினாலே பாகுமூலத்திலே அங்கனம் பண்ணப் பட்டிருக்கிறாரோ அவர் சகலபாபத்தினின்றும் விடுபட்டவராய்ப் பரமபதத்தையே யடைவர். ஓமம் பண்ணப்பட்ட அக்கினியினாலே தகிக்கப்பட்ட சக்கரமானது யாதொருவன் சரீரத்திலே அங்கனம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவனாலே சகல தீர்த்தங்களும் சேவிக்கப்பட்டவைகள், சகலயக்ஞங்களும் பண்ணப்பட்டவைகள். அதிலே சந்தேகமில்லை. யதாசாஸ்திரமாகச் சக்கரத்தைத் தரியாமலும் ஞான ஹீனனாயுமிருக்கிற பிராம்மணனானவன் சமஸ்தலோகங்களிலும் தூஷிக்கப்பட்டவனாய் பிராமண நியமத் தினின்றும் நழுவினவனாய் விடுவன். சங்கு சக்கராதரராயும் தேவதேவோத்தமராயும் இருக்கிற ஸ்ரீ ஹரியான நான் சமஸ்த பிராணிகளினாலேயும் எப்படி ஆராதிக்கப் படுகிறேனோ அப்படியே சங்கு சக்கராங்கனத்தையுடைய பிராமணனும் சமஸ்த ஆத்துமாக்களாலேயும் பூஜிக்கப்படுவன். யதாசாஸ்திரமாகச் சக்கரத்தைத் தரியாமலிருக்கிற பிராமணனானவன் பிராக்ரு தனாய் விடுவன். ஆயிரம் கிருது பண்ணினவனாயிருந்தாலும் அவனுடைய ஒரு கர்மமும் எனக்குப் பிரீதிகரமாக மாட்டாது. சகல வேதங்களையும் அறிந்தவனாயும் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவனாயும் இருக்கிற பிராமணனானவன் யதா சாஸ்திர மாகச் சக்கரத்தைத் தரியாமலிருந்தால் அபக்தனாய் விடுவன். எப்படியென்றால் ஜனார்த்தனரான வாசுதேவரான நான் பிரகிருதி சம்பந்தமில்லாமல் இருக்கிறேனோ அப்படி ஸ்ரீஹரியாகிய என்னுடைய சக்கராங்கனத்தையுடைய பிராமணனும் பிரகிருதி சம்பந்தமில்லாமலிருப்பன். ஆகையினாலே பிரகிருதிசம்பந்தத்தை யும் பாபசமுகத்தையும் தகித்துப் போடாநின்றும் அக்கினியிலே தப்தமாயும் இருக்கிற என்னுடைய சங்கு சக்கராங்கனங்களைப் புஜமூலங்களிலே தரிக்கக் கடவன். ஸ்திரிசூத்திராளுக்கு மிகவும் உத்தமகந்தத்தையுடைய சந்தனத்தினாலே சங்கு சக்கரமானது பாகு மூலங்களிலே சர்வ காலமும் தரிக்கத்தக்கது. பிராமண

னுக்கே சங்கு சக்கரமானது தரிக்கத்தக்கது. பிராமணனுக்குத் தப்தமாயிருக்கிற சங்கு சக்கரங்களினாலே தானே சாஸ்திரமாக அங்கனத்தைப் பண்ணக் கடவன். வேதங்களிலேயும் ஸ்மிருதி களிலேயும் சொல்லப்பட்ட கர்மங்களிலே அதிகார சித்திக்காகவும் மந்திரசித்தியின் பொருட்டும் என்னுடைய ஆராதனத்திலே அதிகாரமாகத் தரிக்கத்தக்க, வைஷ்ணவ பிரசித்தியின் பொருட்டுங் ஞான சித்தியின் பொருட்டும், சங்கு சக்கரமானவை யதா சாஸ்திரமாகத் தரிக்கத்தக்கது. யதாப்பிரகாரமாக ஓமம் பண்ணி அவைகளிலே தப்தம் பண்ணப்பட்ட சங்கு சக்கரங் களாலே முத்திரையைத் தரிக்கக்கடவன். என்னுடைய சங்கு, சக்கரம், கதை சார்ங்கம் இவைகளைத் தவிர மற்றொரு சின்னங் களாலேயும் தேகத்தை அங்கனம் பண்ணாமல் இருக்கக் கடவன். மற்றொன்றாலே முத்திரை பண்ணப்பட்டவன் சிரார்த்தத்துக்கு அயோக்கியனாய் விடுவன். சக்கராங்கனம் இல்லாத பிராமணன் தூரத்திலே வர்ஜிக்கக்கடவன்; லோகத்திலே அவைஷ்ணவனான பிராமணனைப் போலே பாராமலேயிருக்கக் கடவன். விஷ்ணு பக்தனாயிருக்கிறவன் ஈனவர்ணனாயிருந்தாலும் மூன்று லோகத் தையும் பாவனமாக்கப் பண்ணுவன். ஆகையினாலே வாராய் பிராட்டி! பிராம்மணர்களாலே சக்கரமானது யதாசாஸ்திரமாகப் பிராம்மண்ய சித்தியின் பொருட்டும் திருமந்திர சித்தியின் பொருட்டும் ஞான சித்தியின் பொருட்டும் மோக்ஷத்தின் பொருட்டும் தரிக்கத்தக்கது. என்னுடைய சக்கராங்கனதரரா யிருக்கிற பேர்கள் அப்பிராகிருதாளான மகானுபாவாளாகிறார்கள். என்னுடைய சக்கராங்கனமில்லாத பேர்களோவென்றால் பிராகிருதாளாயும் பதிதராயும் சொல்லப்படுவார்கள். பிரமசர்யாதி சமஸ்த ஆச்ரமங்களிலே யிராநின்ற பிராமணர்களுக்கு விசேஷ மாக என்னுடைய சக்கரமானது யதாசாஸ்திரமாக வேதத்திலே சொல்லியிருக்கிறபடியினாலே தரிக்கத் தக்கதே. பிராமண னானவன் வலது தோளிலே சுதரிசனத்தையும் இடது தோளிலே சங்கத்தையும் தரிக்கக்கடவன், என்று இந்தப் பிரகாரம் வேதாந்தத்தையறிந்த மகானுபாவர்கள் சொல்லுவார்கள். இந்தப்படிக்குச் சங்கு சக்கரதாரணமானது மகோப நிஷத் திலே சொல்லப்பட்டிருக்கிறது. வாராய், பிராட்டி! அப்படித் தானே சாமவேதத்திலேயும் ருக்வேதத்திலேயும் சொல்லப் பட்டிருக்கிறது. எந்த பேர்கள் பவித்திரமான என்னுடைய சக்கரத்தினாலே அங்கனம் பண்ணப்படுகிறார்களோ அவர்கள் பாபமாகிற சமுத்திரத்தைத் தாண்டினவர்கள், எந்த பேர்களுடைய சரீரமானது என்னுடைய சக்கரத்தினாலே அங்கனம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்கள் அதனாலே பரம பதத்தையடைவர்கள். பவித்திரமென்றும் சரணமென்றும்

சகஸ்ராரமென்றும், சுதரிசனமென்றும் எதிராசன் என்றும் இவைகள் என்னுடைய சக்கரத்துக்கு இருக்கிற மகாநாமங்கள் என்று அறியக்கடவாய். வாராய், பிராட்டி! சகலமான வேதங்களும் இந்த நாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அப்படியே இதிகாச புராணங்களும் சொல்லுகின்றன. ஆகையினாலே ஸ்ரீஹரியாகிய என்னுடைய சங்கு சக்கர முதலான சின்னங்களானவை பிராமணனுக்கு விசேஷமாகத் தரிக்கத் தக்கவை. அதிலும் வைணவர்களுக்குப் பின்னும் விசேஷமாக யதாசாஸ்திரமாகத் தரிக்கத் தக்கவை. யாதொரு மகானுபாவன் ஊர்த்துவ புண்ட்ரதாரியாயும் சங்கு சக்கரதாரியாயும் இருந்துகொண்டு சர்வகாலமும் இருதயத்திலே யிராநின்றும் சர்வகாரணராயும் இருக்கிற என்னைத் தியானம் பண்ணுகிறானோ நிர்மலமான சித்தத்தையுடைய அந்த மகானுபாவன் பரமபதத்தையே யடைவன். எந்த பேர்கள் கழுத்திலே தரிக்கப்பட்ட துளசி மாலை தாமரை மணிமாலை இவைகளையுடையவர்களாய் இருக்கிறார்களோ எந்தபேர்கள் பாகுமூலங்களிலே அங்னனம் பண்ணப்பட்ட சங்கு சக்கரங்களை யுடையவர்களாயிருக்கிறார்களோ எந்தபேர்கள் நெற்றியிலே பிரகாசியா நின்ற ஊர்த்துவ புண்டரத்தையுடையவர்களாய் இருக்கிறார்களோ அந்த வைணவர்கள் லோகத்தைச் சீக்கிரமாகப் பாவனம் பண்ணுகிறார்கள். எந்தப் புருஷனுடைய புஜமூலங்களிலே சங்கு சக்கராங்கனங்களை எதா சாஸ்திரமாகத் தரிக்கிறார்களோ அவர்கள் பரமபதத்திலேயிருந்துகொண்டு சர்வகாலமும் ஜகத்தை ரக்ஷிக்கிறார்கள். பரமாத்மாவான என்னுடைய சின்னமாயும் ஓமாக்கினியிலே தபிக்கப்பட்டும் இருக்கிற சக்கரத்தினாலே பாகு மூலங்களிலே அங்கனம் பண்ணப்பட்ட பேர்கள் மிகவும் கோரமான சம்சார சமுத்திரத்தைத் தாண்டிப் பகவானாகிய என்னுடைய லோகமான பரம்பதத்தையே அடைவார்கள். வைஷ்ணவமானது பரசியம் என்றும், ஆப்பியந்தரம் என்றும் இரண்டு விதமாகச் சொல்லப்படும். இதிலே சங்கு சக்கரங்களாலே அங்கனம் பண்ணிக் கொள்ளுகிறது பரசியம் என்றும் காமகுரோதாதிகளில்லாமலிருக்கை ஆப்பியந்தரமென்றும் அறியத்தக்கது. ஆகையினாலே சங்குசக்கராதி அங்கனமான முந்தின வைணவமாகச் சொல்லப்படுகிறது. ஆப்பியந்தரமோவென்றால் காமக்குரோதாதிகளில்லாமலிருக்கையும் பரமாத்தும தரிசனமும் சமஸ்த பிராணிகளிடத்திலே இதத்தைக் கோருகையும் சாந்தனாயிருக்கையும் விஷயங்களிலே ஆசையில்லாமலிருக்கையும் புத்திரன் பாரியை முதலான பேர்களிலே ஆசக்தியில்லாமலிருக்கையும் யோகாப்பியாசத்திலே ஆசக்தியும் அசஞ்சலமான பக்தியோகத்தினாலே பரமாத்ம சேவையும், இவை ஆப்பியத்தர

வைணவமென்று சொல்லப்பட்டது. ஆகையினாலே சக்கரம் முதலான பகவத் சின்னங்களுடைய அங்கனமானது பிரதம வைணவமாகச் சொல்லப்படுகிறது. சக்கராதி சின்னங் களில்லாமற் போனால் அதனாலே வைஷ்ணவத்துவம் லபிக்க மாட்டாது.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இப்பால் ஊர்த்வ புண்ட்ரமகாத்மியம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அலர்மேல் மங்கை மணவாளருடைய பாதமே கதி.

## 16. ஊர்த்வ புண்டர மகாத்மியம்

எம்பெருமான் வாக்கியம்; வாராய், பிராட்டி ஊர்த்துவ புண்டர மகாத்மியத்தைச் சொல்லுகிறேன்: கேட்கக்கடவாய். பிராமணோத்தமனானவன் ஊர்த்வ புண்டர தாரணி மாத்திரத்தி னாலே சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவன். ஊர்த்துவ புண்டரம் விசாலமாயும் மிகவும் மனோக்கியமாயும் இருக்கிறதே னெனில் தேவதேவரான ஜனார்த்தனராகிய நான் ஸ்ரீமகாலக்ஷ்மி யோடேகூட சதாவாசம் பண்ணுகிறேன். ஆகையினாலே யாதொருவனுடைய சரீரத்திலே ஊர்த்துவ புண்டரமானது தரிக்கப்படுகிறதோ அவனுடைய தேகமானது பகவானுக்கு விமலமாயும் மங்களகரமாயுமிருக்கிறது. யாதொரு வைணவ னானவன் சுவேதமிருத்திகையினாலே ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்கிறானோ அவன் சர்வ தீர்த்தங்களிலேயும் ஸ்நானம் பண்ணினவனாயும் சர்வ யஜ்ஞம் பண்ணினவனாயும் நிற்கிறான். ஊர்த்துவ புண்டரத்தைத் தரிக்கிற பிராமணனானவன் சமஸ்த லோகங்களிலேயும் பூஜிக்கக் கடவன். அவன் திவ்வியமான விமானத்திலே ஏறிக்கொண்டு என்னுடைய பரமபதத்தை யடைவன். ஸ்ரீஹரியாகிய என்னுடைய சக்கரத்தினாலே அங்ஙனம் பண்ணப்பட்ட புருஷனானவன் மாதாவினுடைய ஏழு வமிசத்தையும் பாரியையினுடைய ஏழு வமிசத்தையும் பாவன மாகப் பண்ணுவன். பிதாவினுடைய ஏழு வமிசத்தையும் பாவன மாகப் பண்ணுவன். பிராம்மணோத்தமனானவன் சர்வ பாபசுத்தி யர்த்தமாகவும் இஷ்டியென்னப்பட்ட யாகங்களுடையவும் பூர்த்த மென்னப்பட்ட தடாக ஆராமம் முதலான தர்மத்தினுடையவும் பலத்தை அடைகிறதன் பொருட்டுத் திரிசந்தியிலேயும் ஊர்த்வ

புண்டரத்தைத் தரிக்கக் கடவன். ஊர்த்வபுண்டரதாரியான பிராமணனைத் தரிசனம் பண்ணுகிறவனும் சகல பாபங்களி னின்றும் விடுபடுவன். பக்தியுடனே நமஸ்கரித்தவன் சகலதான பலத்தையும் அடைவன். யாதொருவன் ஊர்த்வ புண்டரதாரி யான பிராமணனைக் கிருஹத்திலே புஜிப்பிக்கிறானோ அவனு டைய பித்ருக்கள் கல்பகோடி காலபரியந்தம் திருப்தர்களாய் விடுவார்கள் சந்தேகமில்லை. வாராய், பிராட்டி! ஊர்த்வ புண்டரதாரியான யாதொருவன் சிரார்த்தம் பண்ணுகிறானோ அவன் அநேகமாயிரம் கல்பகோடி காலம் பண்ணப்பட்ட கயாசிரார்த்த பலத்தையடைவன். ஊர்த்வ புண்டரதாரியானவன் யக்ஞம் தானம் தபசு ஜபம் ஹோமம் முதலானவையுள் யாதொன்றைச் செய்கிறானோ அவனுடைய புண்ணியம் அனந்தமாம். ஊர்த்வ புண்டரமில்லாதவனான யாதொருவன் எந்த தர்மத்தைப் பண்ணுகிறானோ அவனுடைய இஷ்டி பூர்த்தி முதலான சமஸ்த தர்மமும் வியர்த்தமாய் விடும், சந்தேகமில்லை. மனுஷ்யாளுடைய யாதொரு சரீரம் ஊர்த்வ புண்டரத்தினாலே வர்ஜிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தச் சரீரமானது பார்க்கத் தக்கதன்று; மசானத்துக்குச் சமானமாயிருக்கிறது. ஊர்த்வ புண்டரமில்லாதவன் சந்தியாவந்தனம் முதலான யாதொரு கர்மத்தைச் செய்கிறானோ அவையெல்லாம் ராக்ஷஸர்களாலே அடையப்படும் நரகத்தையடைவன். ஊர்த்வ புண்டரதாரியாயும் வைதிகனாயும் வித்துவானாயும் இருக்கிற பிராமணனானவன் சுப்பிரமான மிருத்துவினாலே ஆபத்திலேயும் ஒருகாலும் குறுக் காகத் தரியாமலிருக்கக் கடவன். பிராமணர்களுக்கு ஊர்த்வ புண்டரமும் க்ஷத்திரியர்களுக்குத் திலகமும் வைசியர்களுக்குப் பட்டவர்த்தனமும் வேளாளர்களுக்குத் திரிபுண்டரமும் தரிக்கத் தக்கது. மிருத்துவினாலே ஊர்த்வ புண்டரமும் கஸ்தூரியினாலே திலகமும் சந்தனத்தினாலே பட்டவர்த்தனமும் சுவேத மிருத்துவி னாலே திரிபுண்டரமும் தரிக்கத்தக்கது. சமஸ்த வைணவர் களுக்கும் ஊர்த்வ புண்டரம் ஒருகாலும் நிஷித்தமன்று. விஷ்ணு பக்தனாயிருந்தானானால் க்ஷத்திரியன் முதலான பேரும் ஊர்த்வ புண்டரத்தையே தரிக்கக்கடவன். பிராமணர்கள் குறுக்கும் பட்டவர்த்தனமும் தரித்தாலும் ஸ்ரீமந் நாராயணராகிய என்னைக் காட்டிலும் அந்நிய தேவதையினுடைய ஆராதனமானது கூடாது. சகலப் பிரகுதனாயும் வித்துவானாயும் இருக்கிற பிராமண னானவன் பஸ்மதாரியாயிருந்தானானால் அவனை மத்திய கடத்தைப்போல வர்ஜிக்கக்கடவன். திரிபுண்டரமானது வேளாளர்களுக்குச் சமானமாயிருக்கிற பேர் களுக்கும் வேளாளர்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிராமணனானவன் திரிபுண்டரதாரணத்தினாலே பதிதனாய்

விடுவன். அதிலே சந்தேகமில்லை. ஏகாந்த பக்தாளாயும் மகானுபாவாளாயும் சகல பிராணிகளிலே கிருபாசாலிகளாயும் இருக்கிற பேர்கள் மத்தியிலே இடைவெளியுடையதாயும் என்னுடைய திருவடிகள் போலேயும் இருக்கிற ஊர்த்வ புண்டரத்தைத் தரிக்கக் கடவன். ஸ்ரீ ஹரியினுடைய திருவடி போலவும் மத்தியிலே இடைவெளியோடே கூடிக்கொண்டும் இருக்கிற ஊர்த்வ புண்டரமானது ஸதாசாஸ்திரமாகத் தரிக்கத் தக்கது. அந்த ஊர்த்வ புண்டரமானது ஸ்ரீ ஹரிக்குக் கிருஹமாகா நிற்கிறது. மிருதுவாயும் சுந்தரமாயும் சோபனமான பாரிசங்களை யுடையதாயும் மிகவும் மனோக்கியமாயும் தண்டாகாரமாயும் மிகவும் பிரகாசியா நின்றும் இடைவெளியோடும் கூடிக்கொண்டு மிருக்கிற ஊர்த்வ புண்டரமானதைத் தரிக்கக்கடவன். ஆகை யினாலே பிராமணர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இடைவெளியோடே கூடிக்கொண்டிருக்கிற தண்டாகாரமாயும் மிகவும் மனோக்கிய மாயுமிருக்கிற ஊர்த்வ புண்டரமானது சர்வகாலமும் தரிக்கத் தக்கது. ஊர்த்வ புண்டரத்தினுடைய விசாலமாயும் மிகவும் மனோக்கியமாயும் இடைவெளியை யுடையதாயும் இருக்கிற மத்தியிலே ஸ்ரீ ஹரியாகிய நான் ஸ்ரீ மகாலக்ஷ்மியுடனேகூட நித்தியமாய் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். யாதொரு பிராம்மணோத்தமனானவன் ஊர்த்வ புண்டரத்தை மத்தியிலே இடைவெளியில்லாததாகத் தரிக்கிறானோ அவனானவன் அந்த ஊர்த்வ புண்டரத்திலே யிருக்கிற ஸ்ரீ ஹரியாகிய என்னை யும் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னையும் தள்ளிப் போடா நின்றிருக் கிறான். எந்த பிராம்மாணோத்தமர்கள் ஊர்த்வ புண்டரத்தை இடைவெளியில்லாமல் தரிக்கிறார்களோ அவர்களுடைய நெற்றி யிலே சர்வகாலமும்சுவானத்தினுடைய பாதமானது இருக்கிறது. சந்தேகமில்லை. ஆகையினாலே இடைவெளியோடே கூடிக் கொண்டும் ஸ்ரீ சூர்ணத்தோடே கூடிக்கொண்டும் மங்களகரமாயும் இருக்கிற ஊர்த்வ புண்டரத்தைப் பிராம்மணனானவன் ஸ்ரீ ஹரி யாகிய என்னுடைய சாலோக்கியத்தின் பொருட்டு நித்தியமாய் தரிக்கக் கடவன். பரமமான பக்தியினாலே ஸ்ரீ வேங்கடாசலத்திலே சுவாமி புஷ்கரணியிலே இரா நின்ற மிருத்தைக் கொண்டு வந்து என்னுடைய சாயுஜ்ய சித்தியின் பொருட்டு ஊர்த்வபுண்டரங் களைத் தரிக்கக் கடவன். மிகவும் பக்தியையுடையவனானவன் ஸ்ரீ கிருஷ்ண துளசி மூலத்திலே யிரா நின்ற மிருத்திகையை யெடுத்து வந்து ஊர்த்வ புண்டரங்களைத் தரிக்கக் கடவன். நான் அவனுக்குப் பிரசன்னனாய் விடுவன். துவாரகையிலே சுபகரமாயும் மேனாக்கியமாயும் இருக்கிற ஸ்ரீ வாசுதேவதீர்த்தத்திலே யுண்டான சுப்பிரமான மிருத்திகையை யெடுத்து வந்து பிராம்மணோத்தமனானவன் சகல புருஷார்த்த சித்தியின்

பொருட்டு ஊர்த்வபுண்டரங்களைத் தரிக்கக் கடவன். பரமமான பக்தியினாலே கங்காதீரத்திலே யுண்டான மிருத்திகையை யெடுத்து ஊர்த்வ புண்டரங்களைத் தரிக்கிற புருஷன் சகலயக்ஞ பலன்களையும் அடைவன். சந்தனமும் மஞ்சளும் அக்கினி ஹோத்திரத்திலே யுண்டான பஸ்மமும் ஊர்த்வ புண்டர முதலானவற்றைத் தரித்தமாத்திரத்தினாலே சமஸ்த ஜனங்களை யும் அனுகூலாளாகப் பண்ணுமென்று சொல்லப்படுகிறது. ஸ்ரீ ஹரி யினுடைய திவ்விய க்ஷேத்திரம் எவ்விடத்திலே யிருக்கிறதோ அவ்விடத்திலே மிருத்திகையைக் கிரஹிக்கக்கடவன். சிரேயஸை கோராநின்ற பேர்களாலே ஊர்த்வ புண்டரதாரணார்த்தமாக அந்த மிருத்திகையைத் தானே கிரஹிக்கத்தக்கது. பர்வத சிகரத்திலே மந்திர தீர்த்தத்திலேயும் வில்வமூலத்திலேயும் புண்ணிய தீர்த்தத்திலேயும் கங்கா தீர்த்தத்திலேயும் புற்றிலேயும் விசேஷமாக என்னுடைய க்ஷேத்திரங்களிலேயும் என்னுடைய திருமஞ்சன தீர்த்தமானது நித்தியமாக எங்கே பிரவகிக்கிறதோ அவ்விடத்திலேயும் ஊர்த்வபுண்டர தாரணார்த்தமாக மிருத்திகை யைக் கிரஹிக்கக் கடவன். ஸ்ரீ ரங்கத்திலேயும் ஸ்ரீ வேங்கடா சலத்திலேயும் ஸ்ரீ கூர்மத்திலேயும் துவாரகையிலேயும் பிரயாகையிலேயும் நாரசிம்மாத்ரியிலேயும் வராக க்ஷேத்திரத்தி லேயும் துளசி வனத்திலேயும் மிருத்திகையை கிரஹித்து, பக்தியினாலே என்னுடைய ஸ்ரீ பாததீர்த்தங்களோடே கூட ஊர்த்வ புண்டரங்களைச் சரீரத்திலே தரியா நின்ற புருஷனானவன் என்னுடைய சாயுஜ்யத்தையடைவன். மகானுபாவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் எந்தவிடத்திலே மிருத்திகையை யெடுத்துத் தரிக்கிறார்களோ அந்தவிடத்திலே ஊர்த்வபுண்டர தாராணர்த்தமாக மிருத்திகையானது கிரஹிக்கத் தக்கது. சியாமள வர்ணமாயிருக்கிறது. சாந்திகரமென்றும் சிவந்த வர்ணமாயிருக்கிறது. ஜனவசிகரமென்றும் பொன்வர்ணமா யிருக்கிறது. சம்பத்துகரமென்றும் வெள்ளை வர்ணமாயிருக்கிறது. மோட்சப் பிரதமமென்றும் சொல்லப்படும். குண்டாயும் குறுக்காயும் இடைவெளியில்லாமலும் மிகவும் கொஞ்சமாயும் மிகவும் தீர்க்கமாயும் மிகவும் அகண்டதாயும் அற்பமாயும் வக்கிர மாயும் விருபமாயும் பருத்தகுளை (Thickness)யை உடைய தாயும் மூலந்தெரியாமலும் பாதமில்லாமலும் அசுபகரமாயும் ஒன்றோடொன்று கூடிக்கொண்டும் குரூரமாயும் அங்குலியினாலே யிடாப்படாமலும் துர்க்கந்தமாயும் அபசவ்வியமாயும் (மாறுபாடாயும்) இருக்கிற ஊர்த்வ புண்டரத்தை அனர்த்தமாகச் சொல்லுவார்கள். நாசிகரமூலத்தில் ஆரம்பித்து நெற்றிநுனி பரியந்தம் புருவங்களுடைய மத்தியத்தைப்பற்றி மிருத்திகையி னாலே ஊர்த்வ புண்டரத்தைக் தரிக்கக்கடவன். இடைவெளியும்

கற்பிக்கக்கடவன். இரண்டு விரல் அகலம் மத்தியிலே இடை வெளியும் பக்கங்களிலே ஒவ்வொரு விரல் அகலமும் சுவேத மிருத்திகையினாலே ருசுவாக சுபகரமான ஊர்த்வ புண்டரமானது தரிக்கத்தக்கது. நெற்றியிலே கேசவரையும் உதரத்திலே ஸ்ரீமந் நாராயணரையும் மார்பிலே மாதவரையும் கண்டத்திலே கோவிந்தரையும் வலது குக்ஷியிலே விஷ்ணுவையும் வலது பாகுவிலே மதுசூதனரையும் வலது கழுத்திலே திரிவிக்கிரமரையும் இடது குக்ஷியிலே வாமனரையும் இடது பாகுவிலே ஸ்ரீதரரையும் இடது கழுத்திலே ரிஷிகேசரையும் முதுகிலே, பத்மநாபரையும் பிடரியிலே தாமோதரரையும் தியானம் பண்ணித் திருமண் தரிக்கக் கடவன். அதனுடைய பிரக்ஷாளான தீர்த்தத்தினாலேயும் சிரசிலே வாசுதேவரைத் தியானம் பண்ணித் தரிக்கக்கடவன். குக்ஷியிலேயும் அதன் பக்கங்களிலேயும் பத்து விரற்கிடைப் பிரமாணம் ஊர்த்வ புண்டரம் தரிக்கக்கடவன். இரண்டு தோள் களிலேயும் மார்பிலேயும் எட்டு விரற்கிடைப்பிரமாணம் ஊர்த்வ புண்டரங்களைத் தரிக்கக்கடவன். இந்தப் பிரகாரம் துவாதச ஊர்த்வ புண்டரங்களைப் பிராம்மணர்களும் பிரபந்நர்களும் தரிக்கக்கடவர். அந்தந்த ஊர்த்வ புண்டரங்களினாலே அந்தந்த பகவன் மூர்த்திகளைத் தியானம் பண்ணித் திருமந்திரத் தினாலே துண்டஞ் சமர்ப்பித்துத் தரிக்கக் கடவன். சமஸ்த மத்திய பிரதேசங்களிலேயும் ஸ்ரீ சூர்ணங்களைத் தரிக்கக் கடவன். க்ஷத்திரியர்களுக்கு நாலு ஊர்த்வபுண்டரங்களும் வைசியர்களுக்கு இரண்டு ஊர்த்வ புண்டரங்களும் ஸ்திரீ வேளாளர்களுக்கு ஒரு ஊர்த்வ புண்டரமும் விதிக்கப்பட்டிருக் கிறது. க்ஷத்திரியனானவன் நெற்றியிலேயும் மார்பிலேயும் இரண்டு புஜங்களிலேயும் நான்கு ஊர்த்வபுண்டரங்களையும் தரிக்கக் கடவன். வைசியனானவன் நெற்றியிலேயும் மார்பிலேயும் இரண்டு ஊர்த்வபுண்டரங்களையும் தரிக்கக்கடவன். ஸ்திரீ வேளாளர்கள் நெற்றியிலே ஒரு ஊர்த்வ புண்டரத்தைத் தரிக்கக்கடவர். சமஸ்த மான பேர்களுக்கும் ஊர்த்வபுண்டரமானது நெற்றியிலே முந்தித் தரிக்கத்தக்கது. நெற்றி முதலாயக் கிரமமாகத் தாரணமானது விதிக்கப்பட்டது. க்ஷத்திரியனானவன் நாலு ஊர்த்வபுண்டரங் களிலேயும் வாசு தேவாதி நாலு மூர்த்திகளையும் தியானம் பண்ணக் கடவன். வைசியனானவன் கோவிந்தா கிருஷ்ணா என்று இரண்டு மூர்த்திகளையும் தியானம் பண்ணக்கடவன். ஸ்திரீ வேளாளர்கள் ஸ்ரீ நாராயணாவென்று ஏகமூர்த்தியையும் தரிக்கக் கடவர்கள். வாராய் பிராட்டி! இது பிரதம நிஷ்டர் களுடைய பிரகாரம். சரமநிஷ்டர்களுக்குத் துவாதச ஊர்த்வ புணடரவிதியேயாம். முன் சொல்லிய பிரகாரம் சமஸ்தவர்ணங் களுக்கும் இந்தப் பிரகாரம் ஊர்த்வ புண்டரவிதியானது

என்னாலே சொல்லப்பட்டது. அசுவத்த பத்திரம் போலவும், வேணுபத்திரம் போலவும், தாமரை மொக்கு போலவும் இந்த ஊர்த்வ புண்டரமும் உபமானமாகச் சொல்லப்படுகிறது. மகாபாகவதனாயும் சுத்தனாயும் இருக்கிறவன் தண்டாகாரமாயாவது ஸ்ரீ ஹரியினுடைய திருவடி போலேயாவது ஊர்த்வபுண்டரத்லைதத் தரிக்கக் கடவன். சக்கர சங்கிதமான பாகு மூலங்களையுடையவர்களாயும் ஊர்த்வபுண்டரங்களுடனேகூடிக்கொண்டிருக்கிற சமஸ்த அவயவங்களையுடையவர்களாயும் பிரம மணிமாலையைத் தரித்துக் கொண்டுமிருக்கிற பரிசுத்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் சகல பாப சமூகத்தினின்றும் லோகங்களை ரக்ஷிக்கிறார்கள் என்று பெரிய பெருமாள் பிராட்டியாருக்குச் சாதித்தருளினார்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

இப்பால், விஷ்ணு ஆராதனம் சொல்லப்படுகிறது.

## 17. விஷ்ணு ஆராதனம்

பிராட்டியார் வாக்கியம் : வாரீர் பகவானே! ஸ்ரீமந் நாராயணராகிய தேவரீருடைய மாகாத்மியத்தைக் கேட்கிறதற்கு இச்சித்திருக்கிறேன்; தேவரீருடைய ஆராதன விதியைக் கேட்க வேணுமென்று அபேக்ஷியா நின்ற பிராட்டியாரைப் பார்த்து எம்பெருமான் வாக்கியம் : வாராய் பிராட்டி! என்னுடைய ஆராதன யோக்கியமான ஸ்தானங்களைச் சொல்லுகிறேன், கேள். ஸ்தாபனமென்றும் ஸ்வயம் வியக்தம் என்றும் இரண்டு விதமாயிருக்கும். வாராய், பிராட்டி! ஸ்வயம் வியக்தமாவது என்னவென்றால், மனுஷ்யாளுக்குப் பூமியிலே எந்த க்ஷேத்திரத்திலே பாஷாணதாரு முதலான பிம்பங்களிலே ஸ்ரீ பகவானான நான்தானே ஆவிர்ப் பவிப்பேனோ அதுவானது - ஸ்வயம் வ்யக்தம் என்று சொல்லப்படுகிறது. ஸ்வயம் வியக்கத்திலேயும் ஸ்தாபனத்திலேயும் என்னை ஆராதிக்கத் தக்கது. தேவதைகளுக்கும் ரிஷிகளுக்கும் சனாதனராயும் சகல ஜகந்நாதராயும் இருக்கிற ஸ்ரீ கேசவரான நான்தானே சாந்நித்யமாகா நிற்கிறேன். பூமியிலே எவனுக்கு எந்த அவதார விக்கிரஹத்திலே இச்சையோ அந்த விக்கிரஹத்திலே ஸ்ரீ பகவானான நான் ஆவிர்ப்பவியா நிற்கிறேன். ஆகையால் ஏறியருளப் பண்ணி அந்தத் திவ்விய மங்கள விக்கிரஹத்தைத் தானே ஆராதிக்கக் கடவன். அந்தத் திவ்விய மங்கள விக்கிரஹத்திலே தானே சர்வ காலமும் சந்தோஷத்தை அடையக்கடவன். வாராய் மங்களகரமான பிராட்டி! ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்திலே கண்வளர்ந்தருளா

நின்ற தேவாதி தேவனான ஸ்ரீ பகவானாகிய நான் முன்பே பிரம்மாவினாலே ஆராதிக்கப்பட்டவர். அந்தப் பகவானான நான் இக்ஷ்வாகு முதலான ராஜாக்களுக்குத் தபசினாலே பூமியிலே் ஆவிர்ப்பவித்தேன். எல்லாருக்கும் சகலபாப நிவர்த்தகரான ஸ்ரீய: பதியான மாதவனான நான் காசிக்ஷேத்திரத்திலே பூஜை பண்ணத்தக்கவராயுமிருக்கிறேன். வாராய் மங்களகரமான முகத்தையுடைய பிராட்டி! எந்தெந்த க்ஷேத்திரத்திலே என்னுடைய ஸ்வயம் வயக்தமான அர்ச்சாவதாரமோ அந்தந்த க்ஷேத்திரத்திலே ருத்திரன் பிரமா இவர்கள் வந்திருந்து கொண்டு சந்தோஷத்தையடையா நிற்கிறார்கள். பூமியிலே மனுஷ்யாளுக்குச் சாங்கியாதி யோகங்களினாலே சிரமமில்லாமல் தானே அர்ச்சாவதாரரூபமான திவ்விய மங்கள விக்கிரகத்திலே சாந்நித்யராய் அவர்களுடைய நேத்திரங்களினாலே பார்க்கப் பட்டவராய் சமஸ்தமான அபீஷ்டத்தையும் கொடா நிற்கிறேன். என்னுடைய சமஸ்தமான அவதாரங்களிலேயும் அர்ச்சாவதார விக்கிரகத்திலே மனுஷ்யாளாலே அதிசுலபமாகச் சகலா பீஷ்டங் களையும் அடையப்படுகிறது. இந்தப் பூமியிலே மகா புண்ணிய கரமான சம்பூத்வீபத்திலே மகத்தாகிய மங்களகரமாகிய பாரத வர்ஷத்திலே அஞ்ஞானியான பேர்களுக்கும் அர்ச்சாவதார விக்கிரகத்திலே சாந்நித்யராய் எழுந்தருளியிரா நின்ற ஸ்ரீ ஹரி யான நான் சேவை சாதித்துச் சகலமான அபீஷ்டங்களையும் கொடா நிற்கிறேன். இதரமான தேசங்களிலே இந்தப் பிரகாரம் அதிசுலபமாக அம்சாவதார ரூபமாகச் சேவை சாதித்தருளு கிறேன். ஒரு காலும் இல்லவே யில்லையென்று கூறமுடியாத படியினாலே இந்தப் பாரத வர்ஷத்திலே ரிஷிகளினாலேயும் தேவதைகளினாலேயும் என்னுடைய அர்ச்சாவதார திவ்விய மங்கள விக்கிரக சேவையானது சர்வகாலமும் தபசினாலேயும் யாகாதி கிருத்தியங்களினாலேயும் தேவதைகளினாலேயும் சேவிக்கப்படுகிறது. மகாசிரேஷ்டமான இந்தப் பாரதவர்ஷத்திலே சர்வகாலமும் நான் பிரத்தியக்ஷமாகா நிற்கிறேன். இந்திர தீர்த்தம் (திருப்பேர் நகர்) என்கிற க்ஷேத்திரத்தலேயும் கூர்மமென்கிற க்ஷேத்திரத்திலேயும் பதரிவனம் என்கிற க்ஷேத்திரத்திலேயும் காசியென்கிற க்ஷேத்திரத்திலேயும் பிரயாகையிலேயும் சேஷாத்ரி யிலேயும் சாளக்கிராம பர்வதத்திலேயும் துவாரகையிலேயும் நைமிசாரணியத்திலேயும் பதரிகாசிரமத்திலேயும் தோதாத்திரி யிலேயும் புஷ்கரத்திலேயும் ஸ்ரீ முஷ்ணத்திலேயும் யாதவகிரியிலே யும், கிருதசூசத்திலேயும் புண்டரீகததிலேயும், தண்டகத்திலேயும் சிம்மாத்திரியிலேயும் வேங்கடாத்திரியிலேயும் கருடாசலத்திலேயும் (திருவயிந்திரபுரம் - திருவஹீந்திரபுரம்) (கடிகாசலம் - சோள சிங்கபுரம்) அனந்த சயனத்திலேயும் ஸ்ரீ ரங்கத்திலேயும் இந்திர

பர்வதத்திலேயும் நாராயணகிரியிலேயும் வராகத்திலேயும் வாமனாத்திரியிலேயும் சர்வா பீஷ்ட பலப்பிரதராகிய ஸ்ரீ பகவானான நான் ஸ்வயம் வ்யக்தராய் எழுந்தருளியிருக்கிறேன். இவைகள் ஆதியந்தம் ஸ்வயம் வ்யக்தஸ்தலங்கள். எந்த க்ஷேத்திரத்திலே ஜனார்த்தனராகிய ஸ்ரீபகவானான நான்தானே பிரசன்னராகிறேனோ அந்த க்ஷேத்திரத்தை மங்களகரரான ரிஷிகளான பேர்கள் ஸ்வயம் வயக்தமென்று சொல்லுகிறார்கள். எந்த க்ஷேத்திரத்திலே மகானுபாவனான பரம பாகவத சிரேஷ்டனானவன் வேதோக்த விதியினாலே திவ்விய மங்களா விக்கிரகமாகிய என்னை ஏறியருளப் பண்ணி ஆராதிக்கிறானோ அதுவானது ஸ்தாபனம் என்று சொல்லப்படுகிறது கிருஹங்கள் தோறும் ஸ்தாபனம் என்று சொல்லப்பட்ட திவ்விய மங்கள விக்கிரகத்திலே ஸ்ரீ பகவானான என்னை ஆராதிக்கக் கடவன். சாளக்கிரம சிலையிலே ஆராதிக்கிறதானது மகா முக்கியமான ஆராதனமென்று மகானுபாவாளாலே சொல்லப்படுகிறது. வாராய் மங்களகரமான பிராட்டி! என்னை அர்ச்சிக்கிறது - வேதாத்ய யனம் பண்ணுகிறது, யாகாதி கிருதுகள் பண்ணுகிறது, யோகாப்பியாசம் பண்ணுகிறது, மகானுபாவனானவன் என்னுடைய குணாநுபவங்களைத் தியானம் பண்ணுகிறது, கீர்த்தனம் பண்ணுகிறது எனக்குப் பிரணாமம் பண்ணுகிறது, என்னுடைய சின்னங்களைத் தரியா நிற்கிறது, பாகவதாளை ஆராதனம் பண்ணுகிறது, என்னை உபாயமாகப் பற்றுகிறது, இவைகளானவை என்னுடைய ஆராதனக் கிரமம் இவைகளை விட வேறொன்றும் இல்லை. இந்த ஒன்பது கர்மமும் பிராம்மணனுக்குச் சர்வகாலமும் அவசியம் செய்யத் தக்கது. மகாபாகவத சிரேஷ்டனான பிராம்மணனானவன் சகலமான ஜனங்களுக்கும் ஆசாரியனான படியினாலே சகலமான ஜனங் களுக்கும் நான் எப்படிப் பூஜ்யனோ அப்படிபோல இந்தப் பிராம்மணனானவன் பூஜிக்கத் தக்கவன். திருவாழி திருச்சங்கினாலே அங்கனம் பண்ணப்படுகிறது, முன் சொன்ன ஒன்பது கர்மங்களையும் செய்கிறது, ஐந்து விதமாகிய தேவ யக்ஞம், மனுஷ்ய யக்ஞம் பித்ரு யக்ஞம், பூத யக்ஞம், பிரமயக்ஞம் இவைகளைச் செய்கிறது - இவை முதலான நித்திய கர்மங்களைச் செய்கிறவன் பரம பாகவதாளாலே பிராம்மணன் என்று சொல்லப் படுகிறான். அந்தப் பிராம்மணனுக்குச் சர்வ காலமும் அந்த ஒன்பது வித கர்மங்களும் அவசியம் பிரதி தினமும் செய்யத்தக்கது. ஸ்ரீ பகவத் ஆராதனமாகிற என்னை ஆராதனம் பண்ணுகை, திருமந்திர ஜபம் பண்ணுகை, - வேதாத்யயனம் பண்ணுகை, பாகவதாராதனம் பண்ணுகை, என்னுடைய முத்திரையைத் தரிக்கை, எனக்கு வந்தனம் செய்கை, என்னுடைய நாம

கீர்த்தனம் பண்ணுகை - இந்த ஏழு காமமும் க்ஷத்திரியனுக்கு அவசியம் செய்யத்தக்கது. என்னுடைய முத்திரையைத் தரிக்கை, என்னுடைய சந்நிதியிலே கைங்கரியம் முதலானவைகளைச் செய்கை, பாகவத ஆராதனம் பண்ணுகை, சிரேஷ்டமான திருமந்திரத்தைச் ஜெபிக்கை; ஸ்ரீ ஹரியாகிய என்னுடைய நாம கீர்த்தனம் பண்ணுகை, என்னைச் சேவிக்கை இந்த ஆறு கர்மங்களும் வைசியர்களுக்குப் பிரதி தினமும் அவசியம் செய்யத்தக்கது. என்னுடைய முத்திரையைத் தரிக்கை என்னுடைய கைங்கரியம் முதலானவைகளைச் செய்கை, எனக்கு வந்தனம் செய்கை, பகவத் ஆராதனம் பண்ணுகை, பகவானுடைய நாமகீர்த்தனம் பண்ணுகை இந்த ஐந்துவித கர்மமும் வேளாளனுக்கு அவசியம் செய்யத் தக்கது வாராய், சுபகரமான பிராட்டி! சகலமான ஜனங்களுக்கும் என்னைச் சாதாரணமாக மானசீக ஆராதனஞ் செய்யத் தக்கது. என்னுடைய ஆராதனமானது அவனவனுடையவர்ணா சிரமதர்மாதிகார அனுகூணமாகச் செய்யத்தக்கது. இதரதேவதா பக்தியில்லாதவர்களாகியும் கர்மபல இச்சையில்லாதவர்களாகியும், சித்து, அசித்து, பிரமம் இவைகளுடைய தத்துவத்தை அறிந்தவர்களாயும், ராகத் துவேஷாதி முதலான துஷ்ட குணமில்லாதவர்களாயும் மோக்ஷ இச்சையுடைத்தானவர்களாயும் ஆசாரியபிரபத்தியுடைத்தானவர்களாயும் யோகாதிகளில் நின்று நழுவாத பேர்களாயும் இருக்கிற பிராம்மணர்களாலேயும் இதரவர்ணங்களினாலேயும் நான் சர்வகாலமும் பூஜிக்கத் தக்கவன். சுருதி ஸ்மிருதி இவைகளாலே சொல்லப்பட்ட ஆசாரங்கள் என்னுடைய நியமனமாகையினாலே என்னுடைய ஆக்ஞையைத் துரோகம் செய்வதென்பது, ஞானாதிகரான புருஷர்களாலே செய்யத் தக்கதன்று, ஆனபடியினாலே சுருதிஸ் மிருதிகளாலே சொல்லப்பட்ட ஆசாரங்களைப் புத்திமானானவன் தள்ளலாகாது. சுருதி ஸ்மிருதிகளாலே சொல்லப்பட்ட ஆசாரங்களை ஸ்ரீவிஷ்ணு பக்தனான யாரொருவன் ஆசரிக்கவில்லையோ அவன் பாஷாண்டத்தை யடைந்து ரௌரவாதி நரகங்களிலே சர்வ காலமும் வாசம் பண்ணுவன். ஆகையினாலே என்னாலே சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மானு குணமாகிய கர்மமானது அந்தந்த வர்ணாச்ரம தர்மானு குணமாகச் செய்யத் தக்கது. வாராய், சுபகரமான பிராட்டி! சகலமான மனுஷ்யாளுக்கும் மானசீக ஆராதனமானது சாதாரணமானது. சாவதானனாய்க் கொண்டு தன்னுடைய வர்ணாச்ரம தர்மானு குணமான கர்மத்தைப் பார்த்து நித்திய கர்மானுஷ்டானமானது செய்யத்தக்கது. பொறுமை, இந்திரிய நிக்கிரஹம், தபசு, ஆசாரம், சத்தியம், பரசொத்து அபேக்ஷையில்லாமை, சபல சித்தமில்லாமை, சகல பிராணிகளையும் இம்சியாமை, தனத்தைச் சம்பாத்தியம் பண்ணுகை - இப்படிப்பட்ட குணங்கள் சர்வ புருஷாளுக்கும்

வேண்டியது. ஆனபடியினாலே அந்தந்த வர்ணானு குணா சாரத்தினாலே பகவானை ஆராதிக்கக்கடவன். உஷத் காலத் திலே எழுந்திருந்து யதா விதியாய் கைகால் அலம்பிக்கொண்டு தன்னுடைய ஆசாரியனை மானசீகமாகச் சேவித்து, இருதயத் திலே பகவானான என்னைத் தியானம் பண்ணக்கடவன். சகஸ்ர நாமங்களினாலேயும் சுசிரபூதனாய் நித்தியம் கீர்த்தனம் பண்ணக் கடவன். வாராய், சுபகரமான பிராட்டி! கிராமத்துக்கு வெளியிலே போய் மலமூத்ராதிகளை விசர்ஜனம் பண்ணி யதாபிரகாரமாய் சௌசம் பண்ணிக்கொண்டு சுசிர பூதனாய் நியமத்துடனே ஆசமனம் பண்ணி தந்தாவனஞ் செய்து விதிப்படி ஸ்நானம் பண்ணி, துளசியினுடைய மூலத்திலே யிருக்கிற மிருத்திகையை அந்தத் துளசி தளத்துடனே கூடினதாய் எடுத்துக்கொண்டு, மூலமந்திரத்தினாலேயும் காயத்திரியினாலேயும் அபிமந்திரித்து, அந்த மிருத்திகையினாலே சரீரத்திலே பூசிக்கொண்டு பரிசுத்த னாய் ஸ்நானம் பண்ணக்கடவன். என்னுடைய திருவடிகளிலே உண்டாகா நின்ற பரிசுத்தமான கங்கையை ஸ்நானம் பண்ணுகிற ஜலத்திலே ஆவாகனம் பண்ணி ஸ்நானம் பண்ணி ஜலத்துக் குள்ளே முழுகிக் கொண்டு அகமருஷண சூக்தத்தை ஜபிக்கக் கடவன். பின்பு ஆசமனம் பண்ணி, புருஷ சூக்தத்தினாலே ருக்கினாலே ஜபித்து ஸ்நானம் பண்ணி ஆசமனம் பண்ணிச் சரீரத்தைத் துடைத்துக்கொள்ளக் கடவன். பிற்பாடு மூல மந்திரத்தை ஜபிக்கக் கடவன். இருபத்தெட்டு தரமாவது பத்தெட்டு தரமாவது ஜலத்திலே விஷ்ணு பக்தனானவன் மூல மந்திரத்தை அபிமந்திரிக்கக் கடவன். ஆசமனம் பண்ணி, தேவதர்ப்பணம் பண்ணி, ரிஷிதர்ப்பணம் பிதுர்தர்ப்பணங்களைப் பண்ணி, தேவரிஷி பித்ருக்களைத் திருப்தி பண்ணிவைக்கக் கடவன். வஸ்திரத்தைப் பிழிஞ்சிப் போட்டு ஆசமனம் பண்ணி உலர்ந்த வஸ்திரத்தையும் உடுத்துக்கொண்டு பரிசுத்தமாயும் மனோக்கிய மாயும் வெளுப்பாயும் இருக்கிற திருமண்ணை வைஷ்ணவனானவன் சாவதானனாய்க்கொண்டு கையிலே சேர்த்து, மூலமந்திரத்தினாலே அபிமந்திரித்து, மூலமந்திரத் தினாலே ஊர்த்வ புண்டரங்களைச் சக்தியானு குணமாகத் தரிக்கக்கடவன். யதாசாஸ்திர விதியாய்ச் சந்தியாவந்தனத் தைப் பண்ணி, காயத்திரி ஜபத்தாலான உபஸ்தான மான வந்தனங்களைச் செய்யக்கடவன். பரிசுத்தாத்துமாவாய்க் கொண்டு தன் கிருஹத்துக்குப் போய், பாதப் பிரக்ஷாளனம் பண்ணி, ஆசமனம் பண்ணி, திருவாராதன கிருஹத்திலே போய் மனோக்கியமாயும் அதிமங்களகரமாயும் மகாபரிசுத்தமாயும் இருக்கிற ஆசனத்திலே ஸ்ரீ மகாலக்ஷ்மி சமேதராயும் சகல ஜகந்நாதராயும் தேவதேவராயும் இருக்கிற ஸ்ரீமந் நாராயணராகிய

என்னை எழுந்தருளப்பண்ணி, மனசிலே நன்றாகத் தியானம் பண்ணிக்கொண்டு புஷ்பகந்தாக்ஷதைகளாலே திருவாராதனம் பண்ணக்கடவன். ஸ்தாபனத்திலே யானாலும், ஸ்வயம் வ்யக் தத்திலேயானாலும் இவைகளுடைய மகா ஆராதனமானது யதாவி திப்பிரகாரம் செய்யத்தக்கது. ஸ்ரீ விஷ்ணு பக்தனானவன் ஆசாரி யனாலே எந்தப் பிரகாரம் உபதேசம் பண்ணப்பட்டதோ அந்தப் பிரகாரம் சந்துஷ்டமான மனதுடனே கூடினவனாய்க் கொண்டு சுருதிஸ்மிருதி பாஞ்சராத்ரம் இவைகளினாலே சொல்லப்படா நின்ற ஸ்ரீ விஷ்ணுவினுடைய ஆராதனத்தையே யதாவிதிப் பிரகாரம் யதாயோக்கியமாகப் பக்தியினாலே ஸ்ரீ பகவத் ஆராதனமாகிய என்னுடைய ஆராதனம் பண்ணக்கடவன். வேதங்களினாலே சொல்லப்பட்ட ஆராதனமானது வைகானசம் என்று சொல்லப்படுகிறது வாதிஷ்டாதி புராணங்களினாலே சொல்லப்படாநின்ற ஆராதனமானது ஸ்மிருதிகளாலே சொல்லப் பட்டதென்று சொல்லப்படுகிறது. பாஞ்சராத்ர விதியினாலே சொல்லப்பட்டது திவ்வியாகமமென்று சொல்லப்படுகிறது. வாராய் சோபனமான பிராட்டி! என்னுடைய ஆராதனமானது, கிரியா லோபமில்லாமல் செய்யத்தக்கது. பிரதிஷ்டை பண்ணி, ஆசமனம் தூபதீபம் முதலானவைகளைச் சமர்ப்பித்து, கந்தபுஷ்பாசனம் சமர்ப்பித்து பஞ்சாமிர்தம் சமர்ப்பித்து, பின்பு தூபதீபம் சமர்ப் பித்து, மகா நைவேத்யம் சமர்ப்பித்து, தாம்பூலம் சமர்ப்பித்து, நீராஞ்சனம் சமர்ப்பித்து, சாஷ்டாங்க தண்டப் பிரணாமம் பண்ணிச் சந்துஷ்டமான மனசையுடையவனாய் சக்தியானு குணமாக ஸ்ரீ பகவதாராதனம் பண்ணக்கடவன். பிராம்மண னானவன் பிரதி தினம் புருஷசூக்த மந்திரத்தினாலே மூல மந்திரத்தினாலே துவயத்தினாலே சோடச உபசாரங்களையும் பண்ணக்கடவன். இந்தப் பதினாறு வித உபசாரங்களான ஆராதனங்களிலேயும் உபசாரத்துக்குபசாரம் அர்க்கிய பாத்யாதி ஆசமனங்கள் சமர்ப்பித்து திருத்துழாய் சமர்ப்பித்து, மற்றொரு உபசாரம் செய்யக்கடவன். வாராய், மங்களகரமான பிராட்டி! ஸ்ரீ விஷ்ணுபக்தனானவன் சர்வ ஜகந்நாயகனாகிய என்னை சந்தோஷத்தினாலே சர்வ உபசாரங்களினாலேயும் ஆவாகனம் பண்ணி ஆசனம் சமர்ப்பித்து, திருத்துழாயைக் கையிலெடுத்துக் கொண்டு ஆங்கன முத்திரையினாலே ஆவிர்ப்பவித்ததாகப் பாவித்துத் தியானித்துச் சாந்நித்தியமானதாகத் தியானம் பண்ணிச் சேவித்து அர்க்கிய பாத்ய ஆசமனஸ்தானீய பாத்திரங் களினாலே பரிமள திரவியங்களோடே கூடினதாயும் திருத்துழாய்த் தளத்துடனே கூடின தாயுமிராநின்ற சுத்தோதகங்களாலேவேதரிக் கினாலேயும் மந்திரத்துவயத்தினாலேயும் உபசாரங்கள் தோறும் அர்க்கிய பாத்யாதி ஆசமனங்கள் சமர்ப்பித்து, திவ்விய பரிமளங்

களோடே கூடின தைலத்தினாலே எண்ணெய்க் காப்பு சமர்ப் பித்து, பின்பு கஸ்தூரி, சந்தனம் இவைகளினாலே அரைப்பு சமர்ப்பித்து, சுகந்த பரிமளங்களோடே கூடினதாயும் அபிமந்திரிக் கப்பட்டதாயும் மகாமங்களகரமாயும் இராநின்ற தீர்த்தத்திலே திருமஞ்சனம் சமர்ப்பித்து, ருசியான திருப்பரிவட்டம் சர்வா பரணம் இவைகளினாலே அலங்காரஞ் சமர்ப்பித்து பஞ்சா மிர்தத்தை நிவேதனம் சமர்ப்பித்து திவ்வியமான கந்த புஷ்பஞ் சமர்ப்பித்து பக்தியினாலே நன்றாக பல நைவேதனம் சமர்ப் பித்து தூபதீபம் சமர்ப்பித்து நானாவித பக்ஷ்ய பாயஸாதிகளி னாலே அலங்கிருதமான மகா நைவேதனஞ் சமர்ப்பித்து, ஏலம், லவங்கம், சாதிக்காய், சாபத்திரி கற்பூரம் முதலான பரிமள திரவியங்களினாலே சேர்க்கப்பட்ட அடைக்காயமுது சமர்ப்பித்து, பக்தியினாலே இதர உபசாரங்கள் சமர்ப்பித்து,கற்பூர நீராஞ்சனம் சமர்ப்பித்து, திவ்விய புஷ்பமாலைகள் சமர்ப்பித்து, சாஷ்டாங்க மாகத் தண்டம் பிரணாமங்கள் பண்ணி, உத்தமமான ஸ்தோத் திரங்களினாலே ஸ்துதி பண்ணி, திவ்வியமான ஹம்ச தூளிகா தல்பத்திலே எழுந்தருளப் பண்ணி, மங்கள அர்க்கியம் சமர்ப்பித்து மங்கள நைவேதனம் சமர்ப்பித்து நாம கீர்த்தனம் பண்ணி, பின்பு ஹோமம் பண்ணி, அந்த வைதிகாக்கினியிலே பகவானுக்கு நிவேதனமான பிரசாத சேஷத்தினாலே ஆகுதி பண்ணக்கடவன். ஆகுதிகள் தோறும் மங்களகரமான புருஷசூக்தம், ஸ்ரீ சூக்தம் இவைகளைச் சொல்லி நெய்யோடேகூட அவிசினாலே ஆகுதி பண்ணக்கடவன். யக்ஞ சொருபனான ஸ்ரீ மகாவிஷ்ணுவான ஸ்ரீ ஹரியைத் தியானம் பண்ணிக்கொண்டு மூலமந்திரமாகிய மந்திரத்தினாலே பக்தி யோடேகூட நூற்றெட்டு ஆவர்த்தியாவது இருபத்தெட்டு ஆவர்த்தியாவது ஆகுதி பண்ணக்கடவன். அளவற்ற காந்தி யோடேகூடின சுவர்ண சாயலுக்குச் சமானனாயும், சங்குச் சக்கர கதாதரனாயும், வேதவேதங்களாயும், சகல யாகாதிகிருது சுவருபனாயும் சர்வலோக நாயகனாயும், ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னுடைய சமேதமாய் என்னைத் தியானம் பண்ணின ஆகுதி பண்ணக் கடவன். மகா பாகவத சிரேஷ்டனானவன் நித்யாள் முக்தாள் இவர்களையும் பூதேவி நீளாதேவி விமலாதேவி முதலான சக்திகளையும், அனந்தன், கருடன் முதலான தேவதைகளையும் குறித்துக் கிரமமாக அந்த அக்னியிலே ஆராதித்து, இந்த ஸ்ரீ வைகுண்ட ஹோமத்தைச் செய்யக்கடவன். நித்ய ஆராதன விதியிலே சாவதானனாய்க் கொண்டு சகல பூதங்களுக்கும் சகலதிக்கிலேயும் பலி சமர்ப்பிக்கக்கடவன். கிருஹ ஆராதனத்தி னாலே பஞ்சயக்ஞ விதியினாலே கிருஹத் துவாரத்திலே யதா சாஸ்திரமாகப் பலி சமர்ப்பித்து, பின்பு ஆசமனம் பண்ணக்

கடவன். வைஷ்ணவோத்தமனானவன் சவர்ணையாய் பத்மாசனமாக இருந்து கொண்டு பூதசுத்தி பண்ணக்கடவன். ஜிதேந்திரியனாய் மந்திரத்தினாலே மூன்று பிராணாயாமம் பண்ணி, உத்தமமான இருதய கமலத்தை உயரவெழும்பினதாகப் பண்ணி, ஞானமாகிற சூரியனாலே அந்த இருதய கமலத்தை மலரச்செய்து அந்தக் கமலத்தினுடைய மொட்டிலே அக்கினி, சூரியன், சந்திரன் இவர்களுடைய தேஜஸுகளை யதாக்கிரமமாகத் தியானம் பண்ணி, ருக்கு, எசுசு, சாம வேதசாரங்களைத் தியானம் பண்ணி அவைகளுக்கு மேல் நானாவித ரத்தின மயமாகிய பீடத்தைத் தியானம் பண்ணி, மிருதுவாயும் அதிமனோக்கியமாயும் இருக்கிற அந்தப் பீடத்திலே பாலசூரியனுக்குச் சமானமான காந்திகளோடே கூடின அஷ்ட ஐசுவரியமாகிய எட்டுத்தளங்களுடனே கூடின திருமந்திராக்ஷரமயமான பத்மத்தை ஸ்மரிக்கக்கடவன். அந்தப் பத்ம மத்தியிலே ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னோடே எழுந்தருளியிரா நின்ற கோடி சந்திரனுக்குச் சமானராயும் சதுர்புஜராயும் மகாசுந்தரமான திருமேனியை யுடைத்தானவராயும் சங்கு சக்கர கதாதரராயும் தாமரைப் புஷ்ப தளம்போலே விசாலமான கண்களை யுடைத்தானவராயும் சர்வலக்ஷணசம்பன்னராயும், ஸ்ரீ வற்சம் கௌஸ்துபம் இவைகளுடனே கூடின வக்ஷஸ்தலத்தையுடையவராயும், பீதாம்பரதரராயும், சர்வாபரண பூஷிதராயும் திவ்வியமான மகரகுண்டலங்களினாலே அலங்கிருதராயும் திவ்வியமான சந்தனத்தினாலே பூசப்பட்ட திருமார்பை யுடைத்தானவராயும், திவ்விய புஷ்பங்களினாலே சோபிதராயும், மனோக்கியமான தளத்தோடே கூடின துளசிமாலையினாலே அலங்கிருதராயும் கோடி பாலசூரியகாந்திக்குச் சமானமான காந்தியையுடையவளாயும், சர்வலக்ஷண சம்பந்நையாயும் இருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னாலே ஆலிங்கனம் பண்ணப்பட்ட திருமேனியை யுடைத்தானவராயும், மகாமங்களகரராயும் இருக்கிற என்னை இந்தப் பிரகாரம் இருதயத்திலே தியானம் பண்ணி சுசிரபூதனாய் அசஞ்சல சித்தனாய்க் கொண்டு மனுமந்திரமாகிற திருவஷ்டாக்ஷர மந்திரத்தை ஆயிரம் தரமோ நூற்றெட்டுத் தரமோ ஜபிக்கக் கடவன். சக்தியானு குணமாக இருதயத்திலே அந்தப் பகவானுக்த மானசீகமாய்தானே பக்தியினாலே ஆராதனம் பண்ணிச் சந்தோஷத்தை யடையக் கடவன். அந்த காலத்திலேவரா நின்ற பகவத் பக்தர்களைப் பக்தியினாலேயும் சிரத்தையினாலேயும் அன்னபலாதிகளாலே திருப்தி பண்ணி வைத்து வருவிட்டு அனுப்பிவைக்கக் கடவன். பிதுர்க்களையும் தேவதைகளையும் யதாவிதியாக அர்ச்சித்துத் தர்ப்பணத்தினாலே திருப்தி பண்ணி வைக்கக் கடவன். அதிதிகளையும்

பால விருத்தர்களையும் புஜிப்பித்து பின்புதான் சாப்பிடக்கடவன். அதன் பின்பு அவன் பத்தினி சாப்பிடக்கடவள் பிராம்மண னென்று பெயரையுடைத்தானவன் எவனாகிலும் மோகத்தினாலே யக்ஷராக்ஷஸ பூதங்களுக்குச் சர்வகாலமும் பூஜை பண்ணு கிறானோ அவன் நித்திய சண்டாளனாகி விடுவன். யக்ஷாதி தேவதைகள், பிசாசங்கள், மத்ஸ்ய மாமிச பக்ஷணையான தேவதைகள் இவைகளைச் சேவிக்கிறது ஸ்தோத்திரம் பண்ணுகிறது இவைகள் மத்திய பானத்துக்குச் சமானங்களென்று ஸ்மிருதிகளாலே சொல்லப்பட்டா நிற்கிறது. மனுஷ்யாளுக்குப் பிரம்மராக்ஷஸ வேதாளம் யக்ஷணி மகாபூதங்கள் இவைகளைப் பூஜிக்கிறதானது - மகா கோரமாகிய கும்பீபாகம் என்கிற நரகத்தையடைவிப்பிக்கும். கோடி ஜன்மங்களினாலே சம்பாதிக்கப்பட்ட யக்ஞம் தானம் தபசு இவை முதலான புண்ணியமானது யக்ஷபூதாதி பூஜையினாலே அந்த க்ஷணத்திலேதானே நாசத்தையடையும். ஸ்திரீயானாலும் புருஷர்களானாலும் பூதங்களை யர்ச்சிப்பார்களேயாகில் அவர்கள் நூறாயிரம் கற்பகோடி காலம் அமேத்தியத்திலே புழுவாய்ப் பிறந்து தங்கள் பித்ருக்களுடனேகூட அமேத்தியத்திலே வாசம் பண்ணு வார்கள். யக்ஷணி பிசாசங்கள் தாமஸ தேவதைகள் இவைகளுக்கு நைவேத்தியம் பண்ண அன்னத்தை எவன் புஜிக்கிறானோ அவன் ரத்த பானம் பண்ணினவனாக ஆய்விடுவன். யக்ஷணி, சக்தி பூதகணங்கள், இதரமான குரூரங்களான பிரம்மரக்ஷஸுு - இவை களை யுத்தேசித்து எந்தப் பிராம்மணன் போஜனம் பண்ணு கிறானோ அந்தப் பிராம்மணனானவன் அந்த க்ஷணத்திலேயே சண்டாளத்துவத்தையடைவன். எந்த ஸ்திரீயானவள் யக்ஷஸு கள், பிசாசுகள், உரகர்கள், ராக்ஷஸர்கள் - இவைகளைப் பூஜிக் கிறார்களோ அந்த ஸ்திரீயானவள் அதோ முகியாய்த் தலைகீழாக நின்றுகொண்டு கால சூக்தம் என்கிற நரகத்தைப் புருஷனோடே கூட கற்பகால பரியந்தம் அனுபவித்து, அந்த நரகத்திலே அதிபயங்கரமாகிய கறுப்பாயும் தீக்ஷணமாயும் இருக்கிற ஊசி முனையிலே வேளாள புருஷாதிகளோடேகூட விருந்துகொண்டு கிருமிகளாலே சரீர மாத்தியந்தம் கொந்தப்பட்டவளாய் வெகு காலம் அனுபவித்துப் பின்பு அந்த ஸ்திரீயானவள் நூறு ஜன்மம் பன்றியாய்ப் பிறப்பள். ஆனபடியினாலே அவைதிகங்களான தாமஸ தேவதா பூஜைகளை விட்டுவிடக் கடவன். சகல ஜகத் காரணராயும், சகல ஜகத்தினாலேயும் சேவிக்கப்பட்டா நின்ற சரணாரவிந்தத்தை யுடையவராயும், தேவதேவனாயும் இராநின்ற ஸ்ரீமந் நாராயணனாகிய ஸ்ரீ ஹரியாகிய என்னை ஆராதித்து என்னுடைய திருவடி வாரத்திலே இராநின்ற பளவார தேவதை களான அனந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்திய சூரியர்களை

நன்றாக ஆராதித்து எனக்குக் கண்டருளப் பண்ணின பிரசாதத்தினாலே அவர்களுக்கெல்லாம் பலி சமர்ப்பிக்கக் கடவன். வைகுண்ட ஹோமத்தைப் பண்ணி, நித்திய நைமித்திகக் கிரியைகளைச் செய்யக் கடவன். வாராய், பிராட்டி! பரம பதமான மோக்ஷத்தை அடைய வேணுமென்று இச்சையை யுடைத்தான பேர்களாலே யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், கூஷ்பாண்டர்கள் பைரவன் முதலான தாமஸ தேவதைகள் அர்ச்சிக்கத் தக்கதன்று. மகத்தான ஆபத்தையடைகிறவனா யிருந்தாலும் மோக்ஷத்தை அடைய வேணுமென்று இச்சையுடைத்தான யோக்கியனான புருஷனானவன் யக்ஷராக்ஷஸ பூதங்களுடைய பூஜையைப் பண்ணலாகாது. யக்ஷராக்ஷஸ அர்ச்சனையினாலே மனுஷ்யனானவன் முந்நூறு கோடி கற்பகால பரியந்தம் பிசாசாகத் திரிகுவன். ஆனபடியினாலே யக்ஷராக்ஷஸ பூதங்களுடைய அர்ச்சனையானது நிந்தனையாகச் சொல்லப்பட்டது. யக்ஷராக்ஷஸர்களை ஆராதனம் பண்ணுகிறதினாலே அனேகங்கோடி கற்பகால பரியந்தம் ரௌரவாதி நரகத்தையடைகிறான்.

வாராய், இஷ்டையான கமலாசனி! ஸ்ரீ விஷ்ணுவான என்னுடைய அதிமனோக்கியங்களான சங்கு சக்கர ஊர்த்துவ புண்டரத்தின் சின்னங்கள் இல்லாதவனான புருஷனானவன் யாதொரு கர்மத்தைச் செய்கிறானோ அந்தக் கர்மத்தினின்றும் நழுவினவனாய் நரகத்தையடைகுவன். தன்னாலே பூஜிக்கத் தக்க ஸ்திரீயை இச்சித்தவன், பிறருடைய திரவியத்தை அபகரித்தவன், யோக்யமில்லாத பதார்த்தத்தைச் சாப்பிட்டவன் அந்த க்ஷணத்திலேயே நரகத்தையடைகுவன். எந்த புருஷனானவன் தன்னாலே கலியாணம் பண்ணப்பட்ட சொந்த ஸ்திரீயை விட்டு விட்டு அந்நிய ஸ்திரீயை யடைகிறானோ அவனானவன் அந்தப் பாபத்தினாலே நரகத்தையடைகுவன். யக்ஞங்கள் மதுவர்க்கங்கள் இவைகள் மனுஷ்யாளாலே ஜீவஹிம்ஸையில்லாமல் செய்யத் தக்கதான காரியம். ஒரு வேளை அந்தக் காரியத்தில் வராப்படாநின்ற ஹிம்ஸையானது நரகத்தை அடையப் பண்ணும்.

வாராய், பிராட்டி! புருஷனாலே எவ்வளவாகிலும் சத்தியானுகுணமாகத் தானம் பண்ணப்படவில்லையோ பிறருடைய சொத்து அபகரிக்கப்படுகிறதோ இந்தக் காரியமானது நரகத்தையடையப் பண்ணுமென்று அறியக் கடவாய். கள், சாராயம், மாமிசம் முதலானவை, முள்ளங்கி, முருங்கைக்காய், எள்ளுப் புண்ணாக்கு, பீர்க்கங்காய், சுரைக்காய், வெள்ளைக் கத்திரிக்காய், வெள்ளைக் கண்டங் கத்திரிக்காய் முதலானவைகளும் கோழிமுட்டை முதலானதும் சாஸ்திரத்திலே சொல்லப்பட்ட நிஷித்த பதார்த்தம்.

இவைகளை எவர்கள் சாப்பிடுகிறார்களோ அவர்கள் சர்வகால மும் மலமூத்திரத்தையே சாப்பிடுகிறவர்கள்தான். மலமூத்திர மென்னப்பட்ட நரகத்தை யடைவார்கள். ஸ்ரீ விஷ்ணு பக்தி யில்லாதவனுடைய அன்னம், பதிதாளுடைய அன்னம் ஸ்ரீ விஷ்ணுவுக்கு நிவேதனம் இல்லாத அன்னம் இவைகள் நாயினுடைய மாமிசத்துக்குச் சமானமாய் விடும் யக்ஷாள், ராக்ஷஸர்கள், பூதங்கள் இவைகளாகிற யக்ஷணி, காட்டேரி, நயினார், அம்மை பிடாரியென்று சொல்லப்பட்டவைகளை மதுமாமிசங்களினாலே பூஜித்து எவன் சாப்பிடுகிறானோ அவன் ரத்தத்தைச் சாப்பிடா நின்ற நரகத்தையே வெகுகாலம் அடைகுவன் இவர்களோடே பேசுதல், தொடுதல், இவர்கள் வீட்டிலே வாசம் பண்ணுதல் - இவை முதலானவைகளாலே மனுஷ்யாள் மலமூத்திரமென்னப்பட்ட நரகத்தை அடைகிறார்கள் பதிதாளுடனே சகவாசம் பண்ணப்பட்டவனுடனே - அவனுடனே சகவாசம் பண்ணப்பட்டவன் - அவனுடனே சகவாசம் பண்ணப் பட்டவனுடைய சகவாசமும் புருஷனானவன் விட்டுவிடக்கடவன் ஸ்ரீ விஷ்ணு பக்தனானவன் பாபிஷ்டாளுடனே கூடி யிரா நின்ற குலத்தை விட்டுவிடக்கடவன். ஏகாந்தியான ஸ்ரீ விஷ்ணு பக்தனானவன் மகாபாபிகளாலே சூழப்பட்ட கிராமத்தை விட்டு விடக்கடவன். அப்படியே பரமை காந்தியான ஸ்ரீ விஷ்ணு பக்தனானவன் அந்தத் தேசத்தை விட்டுவிடக்கடவன். தன்னுடைய கர்மம், ஞானம், பக்தி முதலானவைகளுக்குச் சாதகமான காரியத்தைச் செய்கிறவன் எவனோ அவன் ஸ்ரீ விஷ்ணுபக்தன் என்று சொல்லப்படுகிறான். எந்தப் பிராம்மணனானவன் தன்னுடைய ஆத்மாவுக்கு அனுகுணமாக, ஸ்ரீ ஹரிபக்தி ஞானம் கர்மம் இவைகளைச் செய்கிறானோ அந்தப் பிராம்மணனானவன் ஏகாந்தியென்றும் மகாபாகவதனென்றும் சொல்லப்படுவன். எந்தப் பிராம்மணனானவன் கர்மஞான பக்தி களினாலே செய்யப்பட்ட சர்வகாரியங்களும் ஸ்ரீ வாசுதேவனுக்குப் பிரீதியர்த்தமாகச் செய்கிறானோ அந்தப் பிராம்மணனானவன் பரமை காந்தியென்றும் மகா பரமபாகவதோத்தமனென்றும் சொல்லப்படுவன். பிராம்மணனானவன் சர்வகாலமும் ஸ்ரீ வாசுதேவ பக்தனாய் தன்னுடைய யோக்கியானுகுணமாய் பக்தியினாலே கர்மஞானாதிகளைச் செய்யக்கடவன். ஸ்ரீ விஷ்ணு பக்தனானவன் அகிருத்தியமாகிய பாபங்களைப் புத்தியினாலே நன்றாகப் பரித்தியாகம் பண்ணக் கடவன். ஏகாந்தியானவன் மனசினாலேயும் சாஸ்திர தூஷணத்தை விட்டுவிடக் கடவன். அப்படியே பரமைகாந்தியானவன் சாஸ்திர தூஷணையைவிட்டு விடக் கடவன். கர்மமானது நித்தியம், நைமித்திகம், காமியம் என்று மூன்று விதமாகச் சொல்லப்படா நிற்கிறது. இந்த

லோகத்திலே ரிஷிகளினாலே ஞானமும் அப்படிதானே ஒன்பது விதமாகச் சொல்லப்படுகிறது. எப்படியென்றால் கிருத்தியம், அகிருத்தியம், விவேகம், அவிவேகம், பரலோக சிந்தனம், பரலோக சித்திக்குச் சாதனகாரியம், ஸ்ரீ விஷ்ணுவினுடைய ஸ்வரூபம் அறிகிறது, தியானம், பஜனம் பக்தி இந்தப்படிக்கு ஒன்பது விதமாகச் சொல்லப்படுகிறது. எப்படியென்றால், வாராய், சுபகரையான பிராட்டி! திருவாழி, திருச்சங்கு ஊர்த்வ புண்டரம் முதலான ஸ்ரீ பகவத் சின்னங்களினாலே அடையாளமாக இருக்கிறது. சதாசாரியனாலே உபதேசம் பண்ணப்பட்ட திருமந்திரத்தை ஜபிக்கிறது. யதாவிதியாக ஸ்ரீ ஹரியை ஆராதனம் பண்ணுகிறது. ஸ்ரீ விஷ்ணுவைத் தியானிக்கிறது, பகவந்நாம கீர்த்தனம் பண்ணுகிறது, பரமாத்மாவான பகவானுக்குச் சிச்ருஷை பண்ணுகிறது, பகவானைச் சேவிக்கிறது, பாகவதாளை ஆராதனம் பண்ணுகிறது, பகவானுடைய தீர்த்தத்தை அங்கீகரிக்கிறது-இந்தப் பிரகாரம் ஒன்பது விதமாகப் பகவத் பக்தியானது சொல்லப்படா நிற்கிறது. ஆதித்தியன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மகேசுவரன் இந்தப் பஞ்ச கர்த்தாக்களுடைய பூஜையானது சாமான்னியளான சமஸ்தமான பேர்களுக்கும் செய்யத்தக்கது. இந்தப் பஞ்சகர்த்தாக்களிலே என்றைக்கும் அழிவில்லாததான மோக்ஷ வீடாகிய பரமபதத்தைக் கொடுக்கவல்லவர் ஸ்ரீவிஷ்ணுவாகிய நானாகையால் மோக்ஷத்தை யிச்சித்திரா நின்ற பக்தனானவன் இந்தப் பிரகாரம் சொல்லப் பட்ட பஞ்சகர்த்தாக்களிலே நாலு பேரை விட்டுவிட்டுப் புருஷோத்தமனாகிய ஸ்ரீ விஷ்ணுவான என்னைத்தானே பக்தியினாலே திரிகாலமும் ஆராதிக்கக் கடவன்.

வாராய், சுபகரையே! நைமித்தியத்திலே விசேஷமாக ஸ்ரீ பகவானாகிய என்னை யதாவிதியாக ஆராதிக்கக் கடவன். திடவிரக்தனாய்க்கொண்டு கார்த்திகை மாதத்திலே சாதி புஷ்பத்தினாலே பிரதிதினமும் ஸ்ரீ பகவானாகிய என்னை ஆராதிக்கக் கடவன். அகண்ட தீபமும் சமர்ப்பித்து யதாசக்தியாகப் பிராம்மணர்களையும் அமுதுசெய்யப் பண்ணி வைத்தானேயாகில் பரமபதத்தையடைவன். மார்கழி மாதத்திலே முப்பது நாளும் உதயமாக ஐந்து நாழிகைக்கு முன்னமே தேவதேவனான என்னைக் கருநெய்தல் புஷ்பத்தினாலேயும் செங்கழுநீர் புஷ்பத்தினாலேயும் தூபதீபாதி நைவேதனங்களினாலேயும் யதாசக்தியாக ஆராதித்து மகா பாகவதோத்தமர்களான பிராம்மணர்களை அமுது செய்யப் பண்ணிவைத்தானேயாகில் சம்சயமில்லாமல் ஆயிரம் அசுவமேதயாக பலனையடைகுவன். வாராய் பிராட்டி! தைமாதத்திலே கருநெய்தல் புஷ்பத்தினாலே ஸ்ரீ மதுசூதனனைப்

பக்தியினாலே ஆராதித்து நெய் சேர்த்த க்ஷீரான்னத்தை நைவேதனம் பண்ணினானேயானால் தன்னுடைய பந்துக் களோடே கூட நூறாயிரங்கோடி கற்பகால பரியந்தம் சந்துஷ்டனாய் ஸ்ரீ வைகுண்டத்தையடைவன். மாசி மாதத் திலே யதாவிதியாக நதியிலே ஸ்நானம் பண்ணி மல்லிகை புஷ்பம் கருநெய்தல் புஷ்பம் இவைகளினாலே ஸ்ரீ கிருஷ்ண பகவானாகிய என்னை ஆராதித்து திவ்வியமான பாயசத்தை நிவேதனம் பண்ணி வைக்கக்கடவன். பங்குனி மாதத்திலே மங்களகரங்களான மல்லிகை புஷ்பங்களினாலே என்னை ஆராதித்து, சர்க்கரை, நெய், பருப்பு இவைகளினாலே சேர்க்கப்பட்ட சர்க்கரைப் பொங்கலை அமுது செய்யப் பண்ணி வைக்கக் கடவன். மாதாந்தத்திலே சக்தியானு குணமாகப் பிராம்மணர்களை அமுது பண்ணி வைக்கக் கடவன். சித்திரை மாதத்திலே குடமல்லிகை புஷ்பத்தினாலேயும், சண்பக புஷ்பத்தினாலேயும் ஜகத்பதியாகிய என்னை ஆராதித்து சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் பண்ணி, மாதாந்தத்திலே பிராம்மணர்களைச் சக்தியானு குணமாக அமுது செய்யப்பண்ணி வைத்தானேயாகில் ஆயிரம் வருஷம், தினங்கள் தோறும் ஆராதனம் பண்ணின பலனையடைவன். வைகாசி மாதத்திலே தேவாதி தேவனான என்னைத் தாமரைப் புஷ்பத்தினாலேயும் கருநெய்தல் புஷ்பங்களினாலேயும் யதாவிதியாகப் பூஜித்து, நானாவித பலங்களோடேகூட ததியோதனத்தையும் பரிமள திரவியங்களோடே கூடின சுத்தோதகத்தையும் நிவேதனம் பண்ணினானேயாகில் ஸ்ரீ மகாலக்ஷ்மி சமேதரான சர்வஜகத்பதி யான நான் சந்தோஷத்தை யடைகுவன். வாராய், பிராட்டி, ஆனி மாதத்திலே வெண்டாமரை புஷ்பத்தினாலேயும் பாதிரி புஷ்பத்தினாலேயும் குருக்கத்தி புஷ்பத்தினாலேயும் கருநெய்தல் புஷ்பத்தினாலேயும் யதாவிதியாக ரிஷிகேசனான ஸ்ரீ பகவானைப் பூஜித்துப் பழங்களோடே கூட ததியோதனத்தை நிவேதனம் பண்ணி அதி மனோக்கியமான பலாதிகளையும் நிவேதனம் பண்ணினானேயாகில் கோடி கோதானம் பண்ணின பலத்தை யடைகுவன். இந்தப் பிரகாரம் பக்தியினாலே ஸ்ரீ பகவானாகிய என்னை நிவேதனப் பிரசாதத்தினாலே ஸ்ரீ விஷ்ணுபக்தர்களை அமுது செய்யப் பண்ணி வைத்தானேயாகில் அனந்தமான பலத்தையடைகுவன். ஆடி மாதத்திலே தேவாதி பதியாயும் ஸ்ரீ மகாலக்ஷ்மி பதியாயும் அச்சுதனாயும் இராநின்ற ஸ்ரீய: பதி யாகிய என்னை ஜாஜி புஷ்பத்தினாலே ஆராதித்து பாயச அன்னத்தை நிவேதனம் பண்ணி, மாதாந்தத்திலே பாகவதோத் தமர்களான பிராம்மணர்களை அமுது செய்யப் பண்ணி

வைத்தானேயாகில் சமுசயமில்லாமல் அறுபதினாறாயிரம் வருஷம் ஆராதனம் பண்ணின பலத்தையடைகுவன். ஆவணி மாதத்திலே புன்னை புஷ்பத்தினாலேயும் தாழம் புஷ்பங்களினாலேயும் அச்சுதனாகிய என்னை ஆராதித்தானேயாகில் திரும்பவும் ஜன்மமில்லாமல் இருக்கிற முக்தியை யடைகுவன். பக்தியினாலே புரட்டாசி மாதத்திலே ஸ்ரீ பகவானாகிய என்னை குந்த புஷ்பத்தினாலேயும் மகிழ புஷ்பத்தினாலேயும் ஆராதித்து, சர்க்கரையும் பாலும் சேர்ந்த க்ஷீரான்னத்தை நிவேதனம் பண்ணினானேயாகில், பிரதி தினம் கோடி கோதானம் பண்ணின பலத்தை யடைவன். ஐப்பசி மாதம், கார்த்திகை மாதம், மார்கழி மாதம் இந்த மூன்று மாதத்திலேயும் மனோக்கியமான துளசி தளத்தினாலே என்னை ஆராதித்தானேயாகில் ஸ்ரீ வைகுண்ட லோகத்தையடைவன். பால், நெய், சர்க்கரை இவைகளோடே கூடின சித்திரான்னம், பாயசம், அதிரசம் இவைகளைக் கிரமமாக அந்த மாதங்களிலே நிவேதனம் பண்ணக்கடவன். வாராய், பிராட்டி! தன்னுடைய கிருஹத்திலே யதேச்சையாக வாரா நின்ற மகாபாகவதோத்தமர்களை யதா சக்தியாகப் பிராம்மணோத்தமனானவன் மதுவர்க்காதியினாலே ஆராதிக்கக் கடவன். பரிசுத்தமாயிரா நின்ற பாத்திர மத்தியிலே பாகவ தோத்தமர்களுடைய திருவடிகளை எழுந்தருளப் பண்ணி பக்தியினாலே விளக்கி, கந்தம், புஷ்பம். வஸ்திரம் ஆபரணம் இவைகளினாலே பூஜித்து, தாம்பூலத்தினாலேயாகிலும் பலங்களினாலேயாகிலும், ஆராதித்து, அடிக்கடி சாஷ்டாங்க தண்டம் பிரணாமம் பண்ணி, அன்னபானாதிகளினாலே அமுது செய்யப் பண்ணி வைத்து, பின்பும் சேவித்து எழுந்திருந்து வழி விட்டுப் பக்தியினாலே உபசாரங்களைச் சொல்லித் திரும்பவும் சேவித்து, அவர் போன பிற்பாடு கிருஹத்துக்கு வந்து, சந்நிதியிலேபோய் தேவதேவனான ஸ்ரீ ஹரியைச் சேவித்து ஆராதிக்கக்கடவன். இந்தப் பிரகாரம் சாவதான சித்தனாய்க்கொண்டு தன் தேகம் இருக்கிற பரியந்தம் ஸ்ரீ விஷ்ணுவாகிய என்னை ஆராதிக்கக் கடவன். சகலமான ஆராதனங்களுக்குள்ளேயும் ஸ்ரீ விஷ்ணுவாகிய என்னுடைய ஆராதனமே முக்கியம். அதனைக் காட்டிலும் பாகவதாரதனமானது மிகவும் முக்கியம். எவனொருவன் என்னை ஆராதித்து, என்னுடைய பக்தாளையும் பாகவதர்ளையும் ஆராதியாமல் போகிறானோ அவன் பகவத் பக்தனன்று. கேவலம் வேஷதாரியென்று சொல்லப்படுகிறான். ஆனபடியினாலே சர்வ யத்தினத்தினாலேயும் பாகவதாளையே பூஜிக்கக் கடவன் இது பாஞ்சராத்ர விதியிற் காணலாம்; வராக புராணத்திலும் காணலாம். இப்பால் சுவேதத் தீவில் பெரிய பெருமாள் பிராட்டியாருக்குத் துவய ரத்தினத்தை உபதேசஞ் செய்தது.

## 18. பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குத் துவய ரத்தினத்தை உபதேசஞ் செய்தது

வாரீர் அவாப்த சமஸ்த காமனாகிய பகவானே! தேவரீராலே திரிபாத் விபூதியினுடைய மகாத்மியமும், மகதாதி பூத சிருஷ்டி மகாத்மியமும், வியூகபேதவர்ண மகாத்மியமும், சுதரிசன மகாத்மியமும், ஊர்த்வ புண்டர மகாத்மியமும், விஷ்ணு ஆராதனக் கிரமமும் கேட்டுத் திருப்தியானேன். இனி, நித்திய விபூதியை அடைந்து சேதனாள் தேவருக்கு நிரந்தர பகவதனுபவ மாகிற நித்தியானந்தத்தையடையும்படியான துவய ரத்தினத்தை யும் ஆதிகாலத்தில் தேவரீர் நரநாராயணராய் அவதரித்துப் பதரிகாச்ரமத்தில் ஓரான் வழியாக உபதேசித்த ஸ்ரீமந் அஷ்டா க்ஷரியாகிய திருமந்த்ரார்த்தத்தையும், பாரதத்தில் உபயசேனை மத்தியில் தேரினில் செப்பிய கீதையின் சரமப் பொருளாகிய சரமார்த்தத்தைப் பாரினில் சேதனாள் கடைத்தேறும் பொருட்டுப் பூர்வார்த்தம் உத்தரார்த்தமாகச் சாதித்த சரம சுலோகத்தையும் அடியேனுக்குச் சாதித்தருள வேணுமென்று விண்ணப்பம் செய்த பிராட்டியைப் பார்த்துப் பெரிய பெருமாள் திருமந்திரம், துவயம், சரம சுலோகம் உபதேசித்துப் பின்பு திருமந்த்ரார்த்தத்துக்குத் தாற்பரியார்த்தமும் அருளிச் செய் கிறார்.

வாராய், பிராட்டி! திருமந்திரமாவது எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமாயிருக்கும். மூன்று பதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது. பின்னும் சகல சாஸ்திரங்களாலும் பிறக்கும் ஞானம் ஸ்வய மார்ச்சிதம் போலே, திருமந்திரத்தால் பிறக்கும் ஞானம். பிதிரார்ச்சிதம் போலே பகவானுடைய மந்திரங்கள்தான் அநேகம் உண்டு. அது தான் வியாபகங்களென்றும் அவ்வியாபகங்களென்றும் இரண்டு வர்க்கம். அந்த வியாபகங்களில் வியாபகங்கள் மூன்று சிரேஷ்டங்கள். இந்த மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்திரமாகிய திருவஷ்டாக்ஷரம் பிரதானம். மற்றவை யிரண்டுக்கும் அசிஷ்ட பரிக்கிரகமும் அபூர்த்தியும் உண்டு. இதனை வேதங்களும் ரிஷிகளும் மகாத்மாக்களும் ஆசாரியர்களும் விரும்பினார்கள். அப்படிப்பட்ட திருமந்திரத்தை ஞானமும் விரக்தியும் சாந்தியும் பக்தியும் முடையனான வைஷ்ணவனிடத்தினின்றும் உபதேசம் பெறக்கடவன். அவைஷ்ணவனாலே உபதேசிக்கப்படா நின்ற மந்திரத்தினாலே பரமகதியில்லை. முன்பு அவைஷ்ணவனிடத் தில் உபதேசிக்கப்பட்டிருந்தாலும் பிற்பாடு யதாசாஸ்திரமாக வைஷ்ணவனிடத்தினின்றும் உபதேசம் பெற்றுக்கொள்ளக்

கடவன். ஆயிரம் சாகைகளையுடைய வேதங்களை அத்தியயனம் பண்ணினவனாயிருந்தாலும் சமஸ்த யக்ஞங்களையும் பண்ணினவனாயிருந்தாலும் உத்தமகுலப்பிரசூதனாயிருந்தாலும் அவைஷ்ணவனானவன் ஆசாரியனாகமாட்டான். எந்த வைஷ்ணவன் சம்சார பந்தத்தினின்றும் விடுவியா நின்ற திருமந்திரத்தை நன்றாக உபதேசம் பண்ணுகிறானோ அவனே ஆசாரியனாகத் தக்கவன். பிராம்மணனானவன் ஆசாரியனை ஆச்ரயித்து ஒரு சம்வற்சரம் சேவித்துக் கொண்டிருக்கக் கடவன் அந்த ஆசாரியனும் அவனுடைய சீல விருத்தங்களையறிந்து மந்திரத்தை யுபதேசிக்கக் கடவன். ஆசாரியனானவன் ஊர்த்வ புண்டரம் முதலாக சங்க சக்கராங்கனங்களை யதாசாஸ்திரமாகப் பண்ணிப் பின்பு நிர்மலமான மனதையுடைய சிஷ்யனுக்குத் திருமந்திரத்தை யுபதேசித்து தாஸ்ய நாமமும் சாதிக்கக் கடவன். வாராய், பிராட்டி! திருமந்திரம், துவயம், சரமசுலோகம் இந்த மூன்றில் துவயமே உத்தமமாகா நிற்கிறது. ஆகையினாலே யாதொரு பிரபன்னன் துவயாதிகாரியாக இருக்கிறானோ அந்தப் பிரபன்னன் சிரேஷ்டனாகச் சொல்லப்படுகிறான். வாராய், பிராட்டி! திருமந்திரமானது அஷ்டாக்ஷரம். அதாவது முதலில் "ஓம்" என்கிற அக்ஷரம் ஒன்று. "நம" என்று அக்ஷரம் இரண்டு. "நாராயணாய என்று அக்ஷரங்கள் ஐந்து. இந்தத் திருமந்திரார்த்த மாகிய அஷ்டாக்ஷரமானது பிரணவத்தினுடைய சங்கிரகம் என்றே சொல்லப்படும். சர்வதுக்கத்தையும் நாசம் பண்ணுகிறவனாயும், சர்வ மதத்தின் ஸ்வரூபனாயும் ஸ்ரீமானாயும், ஸ்ரீய: பதியாயும் நாராயணனாயும் இருக்கிற நான்தானே அந்த மந்திரத்துக்குத் தேவதை காயத்திரி தேவி சந்தசாகவும் பிரணவம் பீஜமாகவும் சொல்லப்படும். பகவானாகிய என்னை விட்டு ஒரு காலும் பிரியாமலிருக்கிற ஸ்ரீ மகாலக்ஷ்மியான நீ அந்த மந்திரத்துக்குச் சக்தியென்று சொல்லப்படும். பிரணவம் முந்தின பதம்; 'நம' என்பது இரண்டாம் பதம்; "நாராயணாய" என்பது மூன்றாம் பதம்; இந்த மூன்று பதத்தில் முதல் பதமாகிய பிரணவத்தால் ஆத்ம சொரூபத்தைச் சொல்லும்; "நம" - விரோதி உபாயம் இரண்டை யும் சொல்லும். நாராயண பதத்தால் பரசொரூபனான என்னைச் சொல்லும். 'ஆய' பதத்தால் பல சொரூபத் தைச் சொல்லும். ஆக, திருவஷ்டாக்ஷரத்துக்குள்ள அஞ்சர்த்தமும் (ஐந்து அர்த்தமும் - அர்த்தபஞ்சகமும்) சொல்லிற்று. அகார உகார மகாரமாகிய இம்மூன்றும் வேதசுவ ரூபமாயுனம் பரப்பிரம்மத்துக்கு ஸ்தானமாயும் இருக்கிற பிரணவ மாகச் சொல்லப்படுகிறது. அகாரத்தினாலே விஷ்ணுவாகிய என்னையும் உகாரத்தினாலே சேதனாள் எனக்கே சேஷமன்று என்கிறதையும் பிறர்க்குச் சேஷமன்று என்கிறதையும் சொல்லும்

பெரிய பிராட்டியாராகிய உனக்குச் சேஷமென்கிறதென்றும் சொல்லுவார்கள். அதிலும் அந்நிய சேஷத்வம் கழிகையே பிரதானம். மகாரத்தினாலே தாசபூதனான இருபத்தைந்தாம் தத்துவமான சேதனனைச் சொல்லுகிறது. என்னை அகாரவாச்சியனென்று வேதங்களாலே சொல்லப்படுகிறது.

வாராய், பிராட்டி! இருபத்தைந்தாம் அக்ஷரமான மகாரத்தினாலே சேதனனைச் சொல்லுகிறது.

க முதலிய கவர்க்கத்தினாலே பஞ்சபூதங்களையும்

ச முதலிய சவர்க்கத்தினாலே இந்திரியங்களையும்

ட முதலிய டவர்க்கத்தினாலே ஞானங்களையும்

த முதலிய தவர்க்கத்தினாலே கந்தம் முதலானவிஷயங்களையும்

வ அக்ஷரத்தினாலே மனசையும்

உம அக்ஷரத்தினாலே அகங்காரத்தையும்

ந அக்ஷரத்தினாலே மகத்தத்துவத்தையும்

ஹ அக்ஷரத்தினாலே பிரகிருதியையும்

சொல்லப்படுகிறது. ஜீவாத்மாவானவன் இருபத்தைந்தாவது அக்ஷரமாக (மகாரமாக)ச் சொல்லப்படுகிறான்.

தேகம், இந்திரியம், மனசு, பிராணன், புத்தி இவைகளைக் காட்டிலும் வேறுபட்டவனாயும், மற்றொரு சாதனமில்லாதவனாயும் ஈசுவரசேஷ பூதனாயும் இருக்கிற இந்த ஜீவனானவன் மகாரவாச்சியனாகச் சொல்லப்படா நிற்கிறான். உகாரத்தினாலே சிலபேர்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னைச் சொல்லுவார்கள். அவர்கள் பக்ஷம் நிரஸ்தம். அகாரத்தினாலே என்னைச் சொன்னபோதே ஸ்ரீ மகாலக்ஷ்மியாகிய உன்னையும் சொன்னதாயிற்று. அஃதெப்படியென்றால், சூரியனுக்குப் பிரபை போலவும் புஷ்பத்துக்கு மணம் போலவும் ஒருகாலும் என்னைவிட்டு உன்னைப் பிரிக்கக்கூடாது. ஆகையால் அதுவே உபதேசியமாகவிருக்கிறது. மகாரத்தினாலே ஞானசீலனாயும், ஞானகுணகனாயும், சேதனனாயும், பிரகிருதியைக் காட்டிலும் பரனாயும் விகார சூனியனாயும் ஏகஸ்வரூபனாயும் அணுவாயும் நித்தியனாயும் விபாபனசீலனாயும்

சதானந்த ஸ்வரூபனாயும் நாசமில்லாதவனாயும் அனாதியாயும் தகிக்கப்படாதவனாயும் சேதிக்கப்படாதவனாயும் நனைக்கப் படாதவனாயும் உயர்த்தப் படாதவனாயும் இளைத்துப் போகாதவ னாயும் இவைமுதலான குணங்களாலே கூடிக்கொண்டிருக்கிற ஜீவனானவன் சொல்லப்படுகிறான். இந்த ஜீவனானவன் சர்வேச்வரனாகிய எனக்கே தாசபூதனென்று உகாரத்தினாலே சொல்லப்படுகிறது.

வாராய் பிராட்டி! இந்தத் திருமந்திரத்தினுடைய முதற்பத மாகிய பிரணவத்தினுடைய அர்த்தமானது சொல்லப்பட்டது. இரண்டாம் பதமான "நம:" பதத்தைச் சொல்லுகிறேன். கேட்கக் கடவாய்.

நம: என்ற இந்த இரண்டு அக்ஷரத்தினாலே 'ம:' என் கிறது - தனக்கு உரியனென்று அகங்காரத்தைச் சொல்லுகிறது. 'ந' என்றது அத்தை (அதனை) நிஷேதிக்கிறது. ஆக நம: என்கிற பதத்தால் - இந்த ஜீவனுக்குச் சுவாதந்திரியமானது நிஷேதிக்கப் படுகிறது. ஆகையினாலே இந்த ஜீவனுடைய அகங்கார விமோசனமானது நம: சப்தத்தினாலேயே உண்டாகா நிற்கிறது. இதனாலேயே சர்வசித்தியும் உண்டாகிறது. எவனொருத்தன் இந்த நம: சப்தம் சொல்லாநின்ற அகங்கார சூனியத்தை யறியாமலிருக்கிறானோ அந்தப் புருஷனானவன் நசித்துப் போவன். அகங்காரம் மகாரங்களுடனே கூடிக்கொண் டிருக்கிறவன் மூடாத்துமாவாய் அமேத்தியத்தில் நரகத்தின் நரகத்தையடைவன். இந்த ஜீவனானவன் பகவத் பரதந்த்ர னாயும் அத்தப் பகவானாகிய என்னுடைய கிருபையையே ஜீவன மாகவுடையவனாயும் ஆகாநிற்கிறான். இந்த ஜீவனானவன் பிரமருத்திராதிகளுக்குச் சேஷப்பட்டிருந்தானேயானால் இவ னிடத்தில் சேஷத்துவம் உண்டாயிருக்கையாலே பிரமருத்திராதி களைக் காட்டிலும் எம்பெருமானுக்குண்டான சர்வகாரணத்துவ சர்வரக்ஷகத்துவ சர்வசேஷித்துவாதியான வைலக்ஷண்யத்தைக் காட்டி அவாளுக்குச் சேஷமாயிருக்கிற அந்நிலையினின்றும் மீட்கலாம். தனக்குரியன் என்று அகங்கரிக்கும்போது சேஷத் துவத்துக்கு இசையாமையாலே மீட்கைக்கு யோக்கியமில்லாமல் மகாஅந்தகாரமான சம்சாரத்திலே முழுகிப் போய்விடுவன். ஆகையாலே இந்தச் சேதனானவன் கர்த்ருத்வம் முதலான ஸ்வ சாமர்த்தியத்தைச் சமஸ்தத்தையும் விட்டுவிட்டு ஸ்ரீய: பதியான என்னிடத்திலே சகலபாரத்தையும் வைத்தவனாய் கைங்கரியத்தை ஆச்ரயிக்கக்கடவன் என்று இந்தப் பிரகாரம் நம: சப்தத்தினாலே சேஷபூதனானவன் சேஷிக்கே உரியன், தனக்கு உரியனல்லன் என்றும் சொல்லப்பட்டது. வாராய், பிராட்டி!

நாராயண பதார்த்தத்தைக் கேட்கக்கடவாய். நாராயணனென்றது நாரங்களுக்கு அயநம் என்றபடி. நாரங்களாவன - நித்திய வஸ்துக்களினுடைய திரள். அவைகளாவன - நித்திய விபூதியிலுள்ள பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும் நித்திய சூரிகள் தொடக்கமாக முக்தாளும் அவ்வடிமைக்கு வர்த்திதமான பிரம்மத்தையும் நாரசப்தம் என்கிறது. மகதாதி விகாரங்களும் அண்டங்களும் அண்டத்துக்குட்பட்ட தேவர்கள் மனுஷ்யர்கள் திர்யக்குகள் தாவரங்கள் இவைகளெல்லாம் நாரபதார்த்தம் என்று சொல்லப்படுகின்றன. வாராய், பிராட்டி! சமஸ்த ஜீவன்களுடைய சமுகங்களும் நாரமென்று சொல்லப்படுகிறது. மேல் அயன பதார்த்தத்தை அருளிச் செய்கிறார். அயனமென்றது இவை யிற்றுக்கு ஆச்ரயம் என்றபடியென்று: அதாவது அந்த ஜீவன் களுக்கு ஆதாரமாயும் கதியாயும் இருக்கிறேனாகையால் நாராயணனென்று சொல்லப்படுகிறேன். தத்துவங்களானவை பரமபுருஷரான என்னிடத்தினின்றும் உண்டாயின. ஆகையி னாலே 'நாரங்கள்' என்று சொல்லப்படுகின்றன. அந்த நாரங்க ளான சமஸ்த ஜகத்தும் பரமபுருஷரான எனக்குச்சரீரமானபடியி னாலே நாராயணன் என்று சொல்லப்படுகிறேன். சராசரரூபமான சமஸ்த ஜகத்தும் நாரமென்று சொல்லப்படுகிறது. யாதொரு காரணத்திலே அந்த ஜகத்துக்கு ஆச்ரயமாயும், கதியாயும் இருக்கிறேனோ அதுபற்றி நாராயணனென்று சொல்லப்படுகிறேன். சமுத்திரத்திலே நுரைபோல சமஸ்த லோகங்களும் யாதொரு பகவானான என்னிடத்தினின்றும் உண்டாயினவோ திரும்பவும் என்னிடத்தில் லயிக்கின்றனவோ அக்காரணத்தினாலே நாராயணனென்று சொல்லப்படுகிறேன். வாராய், பிராட்டி! நாராயணனே பரப்பிரம்மம்; நாராயணனே பரதத்துவமென்று வேதங்கள் ஸ்தோத்திரம் செய்தன. இந்தப் பிரபஞ்சத்திலே யாதொரு வஸ்துவானது காணப்பட்டும் கேட்கப்பட்டும் இருக் கிறதோ நாராயணரான நான் அந்த சமஸ்த வஸ்துக்களையும் உள்ளும் புறமும் வியாபித்துக் கொண்டிருக்கிறேன். ஹேயகுண வர்ஜிதராயும் சர்வபூதாந்தர்யாமியாயும் ஏகராயும் நித்தியராயும் அச்சுதராயும் இருக்கிற ஸ்ரீஹரியான நானே நாராயணனாக நிற்கிறேன். வாராய், பிராட்டி! சர்வேசுவரனான நானே இவ் வாத்துமாக்களுக்குச் சர்வவித பந்துவுமென்று இப்பதத்திலே சொல்லுகிறது. அதாவது என்னையொழிந்த சமஸ்த வஸ்துக் களுக்கும் நான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்துவமும் இப்படி பெரியனான நான் சகல சேதனா சேதனங்களிலும் அந்தர்யாமி யாக விருந்து ரக்ஷிக்கையாகிற சௌலப்யமும் என்கை. இப்படி நாராயண பதார்த்தத்தை அருளிச்செய்தார். இனி 'ஆய'பதத்தை அருளிச் செய்கிறார். 'ஆய' என்கிற இதனால், "சென்றால்

குடையாம்" என்கிறபடியே திருவனந்தாழ்வானைப் போலே சர்வ வித கைங்கரியங்களும் செய்யவேணும். சேஷிக்கு அதிசயத்தை விளைத்தாலல்லது தரியாதபடியான தன் சுவரூபத்தைப் பற்றி வந்ததென்கை. அதாவது நித்யசூரிகளுடைய திரளானது நிரந்தரானுபவம் பண்ணுகிறது. ஈசுவரனாகிய என்னைக் கண்கள் நிறையும்படி கண்டொழியக் கழியாதபடியான காதலிலே நிலை நின்றவர்களுக்கும் கண்களுறங்குதலுண்டோ என்னுமாப்போலே இவ்விஷயத்தைக் காண்பதற்கு முன்பு ஞானசங்கோச ரூபமான உறக்கமில்லை. கண்ட காலத்தில் "ஸதா பச்யந்தி" யென்கிற படியே சதானுபவம் பண்ணுகையாலே உறக்கமில்லை, வாராய், பிராட்டி! இப்படி இவ்விஷயத்தைக் கண்டனுபவித்தவாறே இப்படியனுபவிக்கைக் குடலான அநேக காலமெல்லாம் வியர்த்தமே போய்விட்டதே என இழந்தநாளை நினைத்துக் கிலேசித்துக் கூப்பிடுகிறவனுக்கு மேலுள்ள நாளில் உறக்கமே வர வழியில்லையென்கை. இந்தக் கைங்கரியம் இடைவிடாமல் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்கிறபடியே ஒழிவில்லாத காலமெல்லாம் சர்வதேசத்திலும் சர்வகாலத்திலும் சர்வாவஸ்தையிலும் நடந்து செல்ல வேணுமென்கை. பாரியைக்கு மங்கலிய சூத்திரதாரணம் பர்த்தாவுக்கு அநந்நியராகை என்று காட்டுமாபோலே, திருமந்திரதாரணம் சேதனர்க்குப் பகவானுக்கே சேஷம் என்கிறதைச் சூசிப்பிக்கிறது. அதாவது - பதினாறு இழை யாய் இரண்டு சரடாயிருக்கும். லக்ஷ்மீகரமான மங்கல சூத்திரம் போல அன்றிக்கே எட்டிழையாய் மூன்று சரடாய் இருப்பதொரு மங்கல சூத்திரம் போலே எட்டுத் திருவக்ஷரமாய் மூன்று பதமா யிருக்கிறது இத்திருமந்திரம் என்கை.

வாராய், பிராட்டி! ஈசுவரனாகிய நான் இந்தத் திருமந்திரத் தோடு அன்வயமுடைய ஆத்மாக்களுக்குப் பதியாய்க்கொண்டு ரக்ஷிப்பேனென்கை. வாராய், பிராட்டி! இந்தப் பிரகாரம் திருமந்திரத்தினுடைய அர்த்தத்தை ஆசாரியாளாலே அருளிச் செய்யக்கேட்டு ஞானமும் விரக்தியும் சாந்தியும் உடையனா யிருக்கக் கடவன் என்று இந்தப் பிரகாரம் பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்குச் சாதித்தவுடனே பெரிய பிராட்டியார் எழுந் திருந்து பெருமாளை வலமாக வந்து தண்டம் சமர்ப்பித்து விடை பெற்றெழுந்தருளியிருந்து, பின் பெரிய பெருமாளைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள். பெரிய பிராட்டியார் வாக்கியம்:

வாரீர், சர்வலோகேசுவரரே! அடியேன் திருமந்திரத்தி னுடைய அர்த்தத்தைக் கேட்டுக் கிருதார்த்தையானேன். துவயத் தினுடைய அர்த்தத்தை அடியேனுக்கு உபதேசிக்க வேணு

மென்று பிரார்த்திக்க, சுவாமியும் பிராட்டியைக் குறித்து அருளிச் செய்கிறார். வாராய், பிராட்டி! சமஸ்த லோகங்களுக்கும் இதத்தைக் கோரா நின்ற உன்னாலே நன்றாகக் கேட்கப்பட்டது. சமஸ்த மந்திரங்களுக்குள்ளே உத்தமமாயும் சுபகரமாயும் இருக்கிற இந்தத் துவயரத்தினமானது சேதனனுக்குப் பரமபதத்தைக் கொடுக்கிறது. இந்த ரகசியத்திரயமான திருமந்திர துவய சரம சுலோகத்தை அனுசந்திக்கிற அதிகாரி லக்ஷணம் சொல்லுகிறது. சம்சாரிகளோடே உண்டான பந்துக்களையெல்லாம் சவாஞ்சனமாக விடுகையும் வேறொன்று தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி நிருபாதிக ரக்ஷகனான சர்வேச்வரனையே தனக்குத் தஞ்சமாகச் சுவீகரிக்கையும் தன்னைப் பரமபதம் தப்பாமல் சித்திக்கும் என்று விசுவசித்திருக்கையும் இப்படி விசுவசித்து பேறு சித்தித்தபோது காண்கிறோமென்றிருக்கை யன்றிக்கே "மாக வைகுந்தம் காண்பதற்கென மனமேக வெண்ணும்," "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங் காலம் இன்னம் குறுகாதோ" என்கிறபடியே கிரமபிராப்தி மறாமல் பதறுகை; பரமபதத்திலே போய் பகவதனுபவகைங்கரியங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் த்வரை நடவாநிற்கச் செய்தேயும் இந்தச் சரீரத்தோடேலீலா விபூதியிலிருக்கும்நாள் சர்வேசுவரன் உகந்து வர்த்திக்கிற திவ்விய தேசங்களில்வாசம் பண்ணிக் கொண்டு அந்த எம்பெருமானுடைய கலியாண குணானுபவமடியாகக் கரணத்திரயத்தாலும் அவன் விஷயத்திற் பண்ணும் கைங்கரியமுமே காலக்ஷேபமாம்படி யிருக்கை; இப்படி இந்த அனுஷ்டானங்களெல்லாம் உடையவர்களாயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால் இந்ததளத்திலே தாமரை பூத்தாப் போலே இந்த லீலாவிபூதியிலே இப்படியும் சிலருண்டாமவதேயென்று அவர்கள் வைபவத்தையறிந்து, அவர்களளவில் பிரீதியுண்டானவனா யிருக்கை; கீழ்ச் சொன்னவையெல்லாம் உண்டானாலும் உண்டாம். இது உண்டாகிறது மகாதுர்லபம். இதுவே அவசியம் உண்டாக வேணும் ஸ்ரீ வைஷ்ணவாதிகாரிக்கு. பின்னையும் இதர மந்திரங்களை மறந்தும் அனுஷ்டியாதொழிய வேணும். கீழ்ச் சொன்ன அனுஷ்டானங்களையெல்லாம் உபதேசத்தாலே தனக்குண்டாக்கின ஆசாரியன் விஷயத்தில் மிகுந்த பக்தி யுண்டாயிருக்கையாவது- நித்திய சம்சாரியான தன்னை நித்ய சூரிகள் பேற்றுக்கு யோக்கியனாம்படி இரும்பைப் பொன்னாக்குவார்போல திருத்தின ஆசாரியன் விஷ்யத்திலும் அந்த ஆசாரிய விஷயத்தோடே சேர்த்த சர்வேசுவரன் விஷயத்திலும் உபகார ஸ்மிருதி யுண்டாயிருக்கையும், தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குகைக் குறுப்பாகவும் கீழ்ச் சொன்ன ஆகாரங்கள் தனக்கு

வர்த்திக்கைக் குறுப்பாகவும் ஈசுவரனே பரத்துவமென்று யதார்த்த ஞானமும் சுப்ராப்த விஷய விரக்தியும் இவை தானிரண்டும் நமக்குண்டென்றிறுமாப் பற்றிருக்கையாகிற, சாந்தியுமுடையனா யிருக்கும். பரமசாத்துவிகனாயிருக்கும் பாகவதனோடேகூட வசித்துப்போருகை- இவையித்தனையும் வைஷ்ணவனென்றிருப் பானொரு அதிகாரிக்கு அவசியமுண்டாக வேணுமென்கை. கீழ்ச் சொன்ன அனுஷ்டானங்களை யுடையராயிருக்கும் அதிகாரிக்கு அந்த ஞானானுஷ்டானங்களுக்கு வர்த்தகமான ரகசியத்திரயமே அனுசந்தானமாக வேணுமென்கை. வாராய், பிராட்டி! இந்தத் துவயத்தில் பூர்வார்த்தத்தாலே "ஸ்ரீமன்" என்று பெரிய பிராட்டியா ராகிய உன்னை முன்னிட்டுக்கொண்டு "நாராயண சரணௌ" என்று ஈசுவரனாகிய என் திருவடிகளைச் "சரணம் பிரபத்யே" என்று உபாயமாகப் பற்றுகிறது. உத்தரார்த்தத்தாலே "ஸ்ரீமதே என்று பிராட்டியும் அவனுமான அச்சேர்த்தியிலே "நாராயணாய" என்று கைங்கரியத்தை அர்த்திக்கிறது. "நம:" என்கிறது கைங்கரிய விரோதி நிவிருத்தியைச் சொல்லுகையாலே அடிமையை இரக்கிறதென்கை. இப்படியிருக்கிற இந்தத் துவய ரத்தினமானது இரண்டு வாக்கியமாய் ஆறுபதமாய் பத்தர்த்தமாய் இருபத்தைந்து திருவக்ஷரமாயிருக்கும். இதில் பூர்வார்த்தம் பதினைந்து திருவக்ஷரமாய் உத்தரவாக்கியம் பத்து திருவக்ஷரமாயிருக்கும். அது எங்ஙனே யென்னில்- "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்றும், "ஸ்ரீமதே நாராயாண நம:" என்றும் இரண்டு வாக்கிய மாய் "ஸ்ரீமந்" என்றும் "நாராயண சரணௌ" என்றும் சரணம் ப்ரபத்யே" என்றும் "ஸ்ரீமதே" என்றும் "நாராயணாய" என்றும் "நம:" "என்றும் ஆறுபதமாயிருக்கும். "ஸ்ரீ" என்றும், "மந்" என்றும், "நாராயண" என்றும் "சரணௌ" என்றும், "சரணம்" என்றும், "ப்ரபத்யே" என்றும், "ஸ்ரீமதே" என்றும் நாராயணா" என்றும், "ஆய" என்றும் "நம:" என்றும் பத்தர்த்தமாயிருக்கும். "ஸ்ரீ" என்கையாலே பெரிய பிராட்டியாராகிய உன்னுடைய புருஷாகாரம் சொல்லி, "மந்" என் கையாலே அப்புருஷாகாரத் தினுடைய நித்திய போகம் சொல்லி, "நாராயண" என் கையாலே புருஷாகார பூதையான பெரிய பிராட்டியாராகிய நீதானே குறை சொன்னாலும், "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படியான வாற்சலியாதி குணயோகஞ் சொல்லி, "சரணௌ" என் கையாலே அக் குணங்களுக்கும் பெரிய பிராட்டி யாராகிய உனக்கும் ஆச்ரய நீயமான விலக்ஷண விக்கிரக யோகஞ் சொல்லி, "சரணம்" என்கையாலே அவ்விக்கிரகம் தானே உபாயமென்னுமிடம் சொல்லி, "ப்ரபத்யே" என்கையாலே உபாய சுவீகாரம் பண்ணின அதிகாரியினுடைய அத்தியவசாயம்

சொல்லுகிறது. "ஸ்ரீமதே" என்கையாலே மிதுனமே ப்ராப்யம் என்னுமிடம் சொல்லி, மிதுனமென்று- நம்மிருவர் சேர்த்தியும் சொல்லி, "நாராயண" என்கையாலே எம்பெருமானாகிய என்னுடைய சர்வ ஸ்வாமித்வம் சொல்லி, "ஆய" என்கையாலே என் திருவடிகளில் பண்ணும் விருத்தி விசேஷம் சொல்லி, "நம :" என்கையாலே அந்தக் கைங்கரியத்துக்கு விரோதியான அகங்கார மமகார நிவிருத்தியைச் சொல்லித் தலைக்கட்டுகிறது. இப்படி சூரியனுக்குப் பிரபை போலவும் புஷ்பத்துக்குப் பரிமளத்தைப் போலவும் இறையும் 'அகலகில்லேன்' என்றிருக்கிற உனக்கு இந்தத் துவயத்தை உபதேசித்தேன் என்று பெரிய பெருமாள் அருளிச் செய்ய, பெரிய பிராட்டியாரும் பெருமாளை மறுபடியும் தண்டன் சமர்ப்பித்து, அடியேனுக்குத் தேவர் லீலா விபூதியில் அவதரித்து, அர்ச்சுனனுக்குத் தேர்த் தட்டில் உபதேசித்தருளின சரம சுலோகத்தை அருளிச் செய்ய வேணுமென்று விண்ணபம் செய்ய, பெரிய பெருமாள் வாக்கியம் :

வாராய், பிராட்டி! அந்தச் சரம சுலோகத்தையும் உனக்கு உபதேசிக்கிறேன், கேள், இந்தச் சரம சுலோகம் பூர்வார்த்தம் என்றும், உத்தரவார்த்தம் என்றும் இரண்டு விதமாயிருக்கும். அதில் பூர்வார்த்தத்தாலே அதிகாரி கிருத்யமும், உத்தரார்த்தத்தாலே உபாய கிருத்யமும் சொல்லும். அதாவது "ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" இதுவரையில் பூர்வார்த்தம் "அஹம் த்வா ஸர்வபாபேப்ப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" இதுவரையில் உத்தரார்த்தம். இந்தச் சரமசுலோகம் இரண்டர்த்தமாய் பதினொரு பதமாய் இருபத்திரண்டு திருவக்ஷரமாயிருக்கும். அது எங்ஙனேயென்னில் 'சர்வதர்மான்' என்றும், 'பரித்யஜ்ய' என்றும், 'மாம்' என்றும், 'ஏகம்' என்றும், 'சரணம்' என்றும், 'வ்ரஜ' என்றும், 'அஹம்' என்றும், 'த்வா' என்றும், 'ஸர்வபாபேப்ப்யோ' என்றும், "மோக்ஷயிஷ்யாமி" என்றும் "மாசுச:" என்றும் பதினொரு பதமாயிருக்கும். (குறிப்பு : - "மாமேகம்" என்றும் 'மா' என்றும் 'சுச: ' என்றும் பிரிப்பதுண்டு)

'சர்வதர்மான்' என்கையாலே - இதர உபாயங்களைச் சொல்லி, 'பரித்யஜ்ய' என்கையாலே - இதர உபாய நிவிருத்தியைச் சொல்லி 'மாம்' என்கையாலே சம்மியக்கியான (சம்யக் ஆன) உபாயஞ்சொல்லி, 'ஏகம்' என்கையாலே - உபாயநைரபேக்ஷ்யம் சொல்லி 'சரணம்' என்கையாலே- உபாயத்துவம் சொல்லி, 'விரஜ' என்கையாலே - உபாயசுவீகாரம் சொல்லி 'அஹம்' என்கையாலே - உபாயபூர்த்தியினுடைய சர்வசக்தித்வம் சொல்லி, 'த்வா' என்கையாலே உபாயஸ்வீகாரம் பண்ணின அதிகாரி ஸ்வரூபம் சொல்லி, "சர்வ பாபேப் ப்யோ"

என்கையாலே-ப்ராப்யப் பிரதி பந்தகங்களைச் சொல்லி, "மோக்ஷயிஷ்யாமி" என்கையாலே - ப்ராப்ய பிரதி பந்தக நிவிர்த்தியைச் சொல்லி, "மாசுச : - என்கையாலே - நிர்ப் பரத்வானு சந்தானம் சொல்லித் தலைக்கட்டுகிறது. வாராய், பிராட்டி! இந்தச் சரமசுலோகத்தினுடைய அர்த்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் : கேள். அங்கங்களான நித்திய நைமித்திக கர்மங்களுடனே கூடின கர்மஞான பக்திகளை வாசனையோடேவிட்டு என்னையே உபாயமாகப் பற்றினாயாகில் சர்வ சக்தியுடனே கூடின நான் அப்படி அசக்தனாயிருக்கப்பட்ட உன்னை, நீ என்னைப் பற்றுகைக்கு முன்னும் பின்னும் புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் செய்த பாவங்களினின்றும் விடுவிப்போம். 'நீ விடுவிப்பாயோ விடுவிக்கமாட்டாயோ' என்று சோகிக்க வேண்டாம். வாராய், பிராட்டி! இப்போது உனக்கு உபதேசம் பண்ணின இந்த மந்திரதிரயத்தையும் அனுசந்திக்கும் அதிகாரி லக்ஷணம் சொல்லுகிறேன் : கேட்கக் கடவாய் என்னையே உபாய உபேயமாக அத்தியவசித்திருக்கும் புருஷனானவன் எனக்கு வாச்சியமான இந்த மந்திரத்தைப் பெறுகிறதற்கு ஆசாரியனை ஆச்ரயிக்கக்கடவன். அந்த ஆசாரியன் எப்படியிருக்க வேணுமென்றால் வேதசம் பன்னனாயும், விஷ்ணு பக்தனாயும், மாற்சரியமில்லாதவனாயும், மந்திரத்தை அறிந்தவனாயும், மந்திரத்திலே பக்தியையுடையவனாயும், சர்வகாலமும் மந்திரத்தையே ஆசரித்தவனாயும், சுசியாயும், சத்சம்பிரதாயத்தோடே கூடினவனாயும் வேதாந்த ஞானமுடையவனாயும், மற்றொரு சாதனத்தை அபேக்ஷியாதவனாயும், மற்றொரு பிரயோசனத்தை விரும்பாதவனாயும், காம குரோத லோபமோகமில்லாதவனாயும், நல்ல ஆசாரத்தையுடையவனாயும் மோக்ஷத்திலே வாஞ்சையுடையவனாயும், பரமதத்துவத்தை யறிந்தவனாயும் இவை முதலான குணங்களுடனே கூடியிருக்கிறவன் ஆசாரியன் என்று சொல்லப்படுவன். யாரொருவன் சதாசாரத்தை விருத்தி பண்ணுவிக்கிறானோ அவன் ஆசாரியனென்று சொல்லப்படுகிறான். யாரொருவன் ஆசாரிய பரதந்திரனாயிருந்து கொண்டு எம்பெருமான் திருவடிகளே உபாயம் உபேயமென்கிறதாய ஸ்திரமான நிஷ்டையை யுடையவனாய் சதாசாரத்தை ஆசரிக்கிறானோ அவன் சிஷ்யன் என்று சொல்லப்படுகிறான். இப்படிப் பட்ட லக்ஷணத்தோடே கூடிக்கொண்டும் சத்துவகுணத்தை யுடையவனாயுமிருக்கிற சிஷ்யனுக்கு ஆசாரியனானவன் யதாசாஸ்திரமாகச் சங்கு சக்கராங்கனம் செய்வித்து, இந்த மந்திரங்களை உபதேசிக்கக் கடவன். சொர்ணத்தினாலேயாவது வெள்ளியினாலேயாவது வெண்கலத்தினாலேயாவது சுதரிசனத்தையும் சங்கத்தையும் எழுந்தருளப் பண்ணுவித்தும் பரிசுத்தமான

பஞ்சாமிருதங்களாலே திருமஞ்சனம் பண்ணி என்னுடைய எதிரே ஸ்தாபித்து, கந்தபுஷ்பாதிகளாலே அந்த சுதரிசனத்தைச் சுதிரிசன மந்திரங்களாலே யதாசாஸ்திரமாக அர்ச்சிக்கக் கடவன். அவ்விடத்திலே தன் சூத்திர விதியினாலே அக்கினியை ஸ்தாபித்து, மந்திர ரத்தினத்தினாலேயும் புருஷ சூக்தம் முதலான வைஷ்ணவ மந்திரங்களினாலேயும். ஆஜ்யம் பாயசம் இவைகளை ஆயிரத்தெட்டாவர்த்தியாவது நூற்றெட்டாவர்த்தியாவது அந்த அக்கினியிலே ஓமம் பண்ணி, அந்த அக்கினியிலே திருவாழி திருச்சங்குகளை ஸ்தாபித்துப் பின்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தினாலே இருபதாவர்த்தி ஆஜ்யத்தை ஓமம் பண்ணி; இந்தப் பிரகாரம் நன்றாகத் தாபிக்கப்பட்ட அந்தத் திருவாழி திருச்சங்குகளை யெடுத்து, சிஷ்யனுடைய வலது தோளிலே திருவாழியும் இடது தோளிலே திருச்சங்கும் யதாவிதியாய் இந்த மந்திர ரத்தினத்தினாலே தானே அங்கனம் பண்ணக் கடவன். பின்பு ஓமசேஷத்தைச் சமபூர்ணம் பண்ணித் திருவாழி திருச்சங்குகளைப் பின்னையும் பின்னையும் ஆராதிக்கக்கடவன். பிற்பாடு பவித்திரமான தீர்த்தங்களாலே நிறைக்கப்பட்ட கடத்தை மந்திரங்களாலே நன்றாக மந்திரித்து, அந்தத் தீர்த்தத்தினாலே சிஷ்யன் சிரசிலே அபிஷேகம் பண்ணுவிக்கக் கடவன். பவித்திரமான வெள்ளை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டவனாயும் நன்றாக ஆசமனம் பண்ணினவனாயும் வணக்கத்தையுடையவனாயும் ஊர்த்வ புண்டரத்தைத் தரித்துக் கொண்டும் நின்றும் இருக்கிற அந்தச் சிஷ்யனுக்குத் திருமந்திரத்தை யுபதேசித்து, திருமந்திரத்தினுடைய அர்த்தத்தையும் சம்பிரதாயத்யையுதம் ஆசாரியன் திருக்கைகளினாலே சிஷ்யன் முடியிலே உத்தர வாக்கியத்தினால் அபயஹஸ்தம் கடாக்ஷித்துப் பின்பு உபதேசிக்கக் கடவன். தாஸ்ய நாமமும் சாதிக்கக் கடவன். பின்பு அந்தச் சிஷ்யனும் அந்த ஆசாரியனைப் பூஷணம் முதலானவைகளாலே பூஜிக்கக் கடவன். வாராய் பிராட்டி! யாரொருவன் இந்தக் கிரமமாக வைஷ்ணவோத்தமரான ஆசாரியனிடத்தினின்றும் இந்த மந்திரங்களை உபதேசம் பண்ணிக் கொள்ளுகிறானோ அவன் என்னுடைய கடாக்ஷத்தினாலே தேகாந்தியத்திலே பரமபதத்தையடைவன் என்று பெரிய பெருமாள் பெரிய பிராட்டியாருக்கு உபதேசித்தருளினார்.

பின்பு பெரிய பிராட்டியார் பெரிய பெருமாளைத் தண்டம் சமர்ப்பித்து, தேவர் நியமனப்படிக்கு அடியேனுக்குச் சாதித்த துவயரத்தினத்தைச் சேனை முதலியாருக்கு உபதேசித்தேன். இந்த நித்ய விபூதியில் ஆயிற்று. இனி இந்த மந்திரத்தை லீலா விபூதியில் சேதனாள் அனுஷ்டித்துக் கடைத்தேறும் வகைக்குச்

சாதித்தருளவேணுமென்று பிரபத்தி பண்ணா நின்ற பிராட்டியாரைப் போரக்கடாக்ஷித்துப் பெரிய பெருமாள் ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

வாராய்! பிராட்டி! பூர்வத்திலே நடந்த சங்கதியொன்றுண்டு. அது என்னவென்றால் - கைலாசத்தில் ருத்திரன் அத்திரி கன்னிகையைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும்போது சகலமான தேவர்களும் ரிஷிகளும் அந்தத் திருக்கலியாண மகோற்சவத்திற்குப் போனார்கள். அவர்களிலே குறுமுனிவராகிய அகஸ்தியரும் அவர்களுடனே கூடிக் கலந்திருந்தார். அந்தக் காலத்தில் கைலாசம் உத்தரபாகமான படியினாலே வந்த தேவர்கள், ரிஷிகள், ஜனங்கள் பளுவு பொறுக்க மாட்டாமல் வடக்குத் திசை தாழ்ந்து தெற்குத் திசை உயர்ந்ததைக் கண்டு தேவர்களும் ரிஷிகளும் பிரம்மாவினிடத்தில் முறையிட, பிரம்மா விசுவகர்மாவை அழைப்பித்து, 'இது என்ன அதிசயம்' என்று பிரம்மா விசுவகர்மாவைக் கேட்கும்போது அவர் ஆலோசித்துணர்ந்து பார்த்ததில் இவ்விடத்தில் வந்திருக்கிற அகஸ்தியரொருவரே மாத்திரம் பொதிய மாமலையில் போயிருந்தால் இந்த விபூதி கவிழ்ந்து போகாமல் சமமாக விருக்குமென்று விசுவகர்மா சொன்னார். அப்படியே விசுவகர்மாவைப் பார்த்து அகஸ்தியரைப் பொதிய மலையில் போயிருக்கும்படி விசுவகர்மாவை நியமித்தார். அப்போது அகஸ்தியர் இப்பேர்ப்பட்ட கலியாண மகோற்சவத்தை விட்டு என்னையொருவனையே அவ்விடத்தில் போகச் சொல்லுகிறது தர்மமல்லவென்று சொன்னார். அந்த வாக்கியத்துக்கு அகஸ்தியர் தடங்கல் பண்ண படியினாலே உன்னாலே செய்வித்த தமிழ்வேதம் பிராம்மணோத்தமர்களுக்கு அதிகரிக்கக் கூடாமற் போகக்கடவது என்று விசுவகர்மா சாபம் வைத்தார். அதை அகஸ்தியர் கேட்டுக் கோபித்து, 'உனக்கு உத்தரவு பண்ண பிரம்மாவுக்கும் விசுவகர்மாவாகிய உனக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் எவர்களும் பூஜை ஆராதனம் பண்ணும்படியான கோவில்லாமல் போகக் கடவது' என்று சபித்துப்போட்டு, உடனே தெற்கு நோக்கிப் புறப்பட்டுப் பொதியமாமலைக்கு வந்தார். உடனே பூமி சமமாய்ப்போய் நின்றது. அந்த அகஸ்தியர் மகாதபஸ்வியான படியினாலே பூமி கவிழ்ந்து போகிறதை இவருடைய தபோ மகிமையினாலே நிலை நிறுத்தினார். இப்படி சிலகாலமிருந்து அதற்குமேல் தமிழுக்கு வியாகரண கர்த்தாவாகிய அகஸ்தியர் தான் செய்த தமிழ் பிராம்மணாளுக்கு உதவாமல் போகும்படி விசுவகர்மாவினுடைய சாபம் வந்த படியினாலே அதைக் குறித்து என்னை நோக்கி, மகாகோரமான தபசு பண்ணினார். அப்போது அவருக்கு நான் பிரத்தியக்ஷமாகி

'உனக்கு என்ன வரம் வேணும்' என்று கேட்கும்போது அந்த அகஸ்தியரானவர் தான் தமிழுக்கு வியாகரண கர்த்தாவான படியினாலே தான் செய்த தமிழுக்கு விசுவகர்மாவினாலே வந்த சாபத்தை நிவிர்த்தி பண்ணும் படியாயும் பின்னையும் அந்தத் தமிழ்ப் பாஷையைப் பிராம்மணாள் முதல் சகல வருணத்தாரும் அதிகரிக்க வேணுமென்றும் விண்ணப்பம் செய்தார். அப்படியே அகஸ்தியருக்குக் கலியுகத்தில் லீலா விபூதியில் நானே அவதரித்து அகஸ்தியராலே உண்டான தமிழ்ப் பாஷையைப் பாலனம் பண்ணுகிறேனென்று நான் வரங்கொடுத்திருக்கிற படியால் அதனைப் பாலனஞ் செய்யவும், நீ என்னைச் சேதனாள் கடைத் தோறும் பொருட்டு ஆசாரியனாய் ஆச்ரயித்த படியாலும் லீலா விபூதியில் அவதரித்து, சேதனாள் கடைத்தேறும்படி பண்ணு கிறேனென்று பெரிய பிராட்டியாருக்குப் பெரிய பெருமாள் அபய ஹஸ்தம் கொடுத்து, பின்னனயும் அருளிச் செய்கிறார். வாராய் பிராட்டி! ஆதிசேஷன் என்னுடைய நியமனத்தினாலே லீலா விபூதியில் தென்திசையில் திருவழுதி நாட்டில் திருக்குருகூரில் திந்த்ரிணி விருக்ஷமாய் அவதரிக்கும்படி நியமித்திருக்கிறேன். என்னுடைய அநேகமாயிரம் கலையில் ஒரு அம்சமாய் அந்தக் குருகூரில் காரியார் தேவி உடைய நங்கை காப்பத்தில் சடகோபன் என அவதரித்து ஆதிசேஷாம்சமாயிரா நின்ற திந்த்ரிணி விருக்ஷக்குடகில் தயிலதாரவது அவிச்சின்ன சுருதி அனுசந்தானத்துடனே யோகத்திலிருக்கும்போது சேனை முதலியாரைக் கொண்டு அந்தத் திந்த்ரிணி விருக்ஷக் குடகில் பத்மாசனத்துடனே யோகத்திலிருக்கிற என்னுடைய கிஞ்சித் அம்சமாகிய சடகோபனுக்குத் தாபபுண்டரம் முதலாகத் திருமந்திரம் துவயம் சரமசுலோகமாகிய திருமந்திரத்திரயத்தை உபதேசித்து, லோகமெல்லாம் உஜ்ஜீவித்துத் தன்னடிச் சோதி யில் சேரும்படி செய்விக்கிறேனென்று பெரிய பிராட்டியாருக்குப் பெரிய பெருமாள் கிருபை செய்தருளினார்.

வாராய், பிராட்டி! ஆதியில் யான் பிரம்மாவுக்கு உபதேசித்த வேதத்தைச் சனக சனந்தன சனாதன சனத்சுசாதாளாகிய பிரம குமாராளுக்குப் பிரமா நாலு வேதங்களையும் ஆறுசாஸ்திரங் களையும் முப்பத்திரண்டு உபநிஷத்துக்களையும் புரணாதி இதிஹாசங்களையும் உபதேசித்தார். அந்த ரிஷிகளாலே பரம்பரையாய் வரப்பட்ட வேதம் சிக்குப் பட்டிருந்த படியால் துவாபரயுகத்தில் நானே வியாசராய் அவதரித்து சிக்குப்பட்டிருந்த வேதத்தைச் சிக்கறுத்து சாகோப சாகையாய் விபாகம் பண்ணப் பட்டது. அப்படி வராநின்ற வேதத்தை வாராய், பிராட்டி! கலியுகத்தில் என் அம்சமாய் அவதரித்த சடகோபனென்றும்

நம்மாழ்வாரென்றும், வகுளாபரணனென்றும், ஞான தேசிக னென்றும், காரி மாறனென்றும் அவதரியா நின்ற நம்மாழ்வாராலே நாலு வேதத்தையும் ஆறு சாஸ்திரத்தையும் உபநிஷத்துக்களை யும் தமிழ்ப் பிரபந்தமாகப் பண்ணி, பிராம்மணாள் முதல் சகல வருணத்தாரையும் உன் இஷ்டப்படி உன் குமாரர்களை ரக்ஷிக் கிறேன் என்று பெரிய பிராட்டியாருக்கு அபயஹஸ்தம் கொடுத் தருளினார். பின்பு பெரிய பிராட்டியார் சேனை முதலியாரைக் கடாக்ஷித்து, திருமந்திரம் துவயம் சரமசுலோகம் உபதேசித்து இவைகளை நம்மாழ்வாருக்கு உபதேசிக்கும்படி நியமித் தருளினார்.

ஸ்ரீய : பதி திருவடிகளே சரணம்

பூர்வார்த்தம் முற்றும்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :